D
1211.32 N73
N73.106.2
308

[Issued 11—7—1973]

NO. 49

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY, 3rd MARCH 1973

**Volume CVI—No. 1**

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Madras-9

*Price* 35 *Paise*

# Index to
# Tamil Nadu Legislative Council Debates

FORTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

3RD, 5TH, 6TH, 7TH AND 8TH MARCH 1973.

*VOLUME CVI* (*Nos.* 1 *to* 5.)

PAGES

## A


ABDUL WAHAB, THIRU K. S.—

Budget for 1973-74, general discussion on .. 308—313

Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. **23**

ACCIDENTS—

Question *re* car—in 1970, number of vehicles involved, and persons injured and dead in .. 184—191

ADJOURNMENT MOTION *Re*—

Graduate Teachers' agitation before Secretariat and consequent distress caused .. .. .. 191—199, **374**

Stoppage of supply of diesel oil and consequent distress to consumers .. .. .. .. .. 371—374

AGRICULTURAL LANDS RECORD OF TENANCY RIGHTS ACT, 1969—

Amendments to Revenue Department Notification II-1 No. 3987 (b) of 1971, dated 7th September 1971, notification laid on the table .. .. .. **161**

63088

PAGES

*Monday, 5th March* 1973.


I. Questions and Answers .. .. .. 83—94

II. Statement under rule 82 of the Council Rules *re*—

(i) Government's action on representations from B. Pharmacy students .. .. .. .. 94—98

(ii) Concessions sanctioned to ryots of Parambikulam-Aliyar Project and Lower Bhavani Project 98—104

III. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. 104—160

IV. Papers laid on the table of the House .. 160—162


*Tuesday, 6th March* 1973.


I. Questions and Answers .. .. . 163—191

II. Adjournment motion *re* agitation of Graduate Teachers .. .. .. .. .. 191—199

III. Announcement *re* decision of the Business Advisory Committee .. .. .. .. 200

IV. Government Motion *re* suspension of rule 42 (5) of the Council Rules .. .. .. .. 201

V. Statement under rule 82 of the Council Rules *re*—Assignment of lands in Kanyakumari district and Shencottah Taluk in Tirunelveli district .. 201—203

VI. Calling attention to matters of urgent public importance—

(1) Agitation of Polytechnic students .. 203—208

(2) Request to Central Government for relief of industrial workers affected by power cut from out of their Provident Fund .. .. .. 208—209

(3) Hardship to consumers due to shortage of kerosene .. .. .. .. 209—213

VII. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. .. 213—271




PAGES

*Wednesday, 7th March* 1973.


I. Questions and Answers .. .. .. 273—290

II. Announcement *re* answers to Starred Questions as Unstarred Questions .. .. .. .. 290

III. Calling attention to matters of urgent public importance—

(1) Withdrawal of recognition to the Hindu Nadar Primary School, Agappaikulam .. .. 290—291

(2) Difficulties experienced by the public on account of non-availability of cooking gas for domestic consumption .. .. .. 291—292

(3) Distress caused to the poor due to rise in prices of essential food articles .. .. .. 292—295

IV. Statement under rule 82 of the Council Rules *re*—

Correction of information regarding scales of pay of Graduate Teachers of Pondicherry .. .. 295

V. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. .. 295—351

VI. Papers laid on the table of the House .. 351


*Thursday, 8th March* 1973.


I. Questions and Answers .. .. .. .. 355—370

II. Adjournment motions—

(1) Stoppage of supply of diesel oil and consequent distress to consumers .. .. .. 370—374

(2) Problem of Teachers .. .. .. 374

III. Calling attention to a matter of urgent public importance—Non-availability of high speed diesel oil and petrol in Coimbatore, the Nilgiris, Salem, Tiruchirappalli and Madurai districts and consequent hardship to agriculturists, transport and other consumers .. .. .. .. .. 374—376

IV. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. .. 376—430

Index .. .. .. .. .. 433—459

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning General Administration Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations; Cinematograph Act, Newsprint Control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggar's Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors, Commercial Taxes and Prohibition.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports, and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMI, Minister in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சிரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம்,

இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் தலை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறு நிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைக்கு பொறுப்பு வகிப்பார் :— வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.



12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக் கட்டளைகள், பால் வழங்குத் துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், பால்பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

## தமிழ்நாடு சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலர்கள்.

### சட்ட மன்றத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

### சட்ட மன்றத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அறிவழகன்.
2. திரு. என். சுந்தரேசத் தேவர்.
3. திரு. அய்யணன் அம்பலம்.
4. திரு. எஸ். நாராயணசாமி.

### சட்ட மன்றச் செயலாளர்.

திரு. இ. மூ. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., [illegible]

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 அறிவழகன், கே., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராணி அண்ணாதுரை .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமன உறுப்பினர். |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 16 இராஜூ, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 18 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| 19 கணேசன், சா. .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 காட்டூர் கோபால் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 22 கிருஷ்ணசாமி நாயுடு, ரா. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 23 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |
| 24 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 25 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 26 சங்கரலிங்கம், எம். .. .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 27 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல்... | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 28 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 30 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 31 சுந்தரேச தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 33 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 35 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 36 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 38 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 39 நடராசன், என் வி. (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 40 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நாராயணசாமி, பி. (வேளாண்மை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 43 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 44 நீல நாராயணன் .. .. | நியமனம். |
| 45 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 46 பகவதி, டி.கே. .. .. .. | நியமனம். |
| 47 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 48 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 54 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 55 முத்துசாமி, எஸ். .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர்கள். |
| 56 வசந்த பாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 57 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெள்ளப்பாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 ஜனார்த்தனம், ஏ.பி. .. .. | நியமனம். |
| 62 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 ஜெயராம் ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்ட மன்றம்.

---

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்றத்தின் நாற்பத்தி நான்காவது கூட்டத்தொடர்.

### சனிக்கிழமை, 1973 மார்ச் 3.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. கெ. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Printing of Counterfeit Notes and Manufacture of Counterfeit Coins.*

*170 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of cases registered by the Police for printing Counterfeit Currency Notes and manufacture of Coins in Tamil Nadu from 1967 year-war; and

(b) the steps proposed to be taken by the Government to avert such illegal activities in future?

### கள்ள நோட்டுக்களை அச்சிடுதலும், கள்ள நாணயங்களைத் தயாரித்தலும்.

திரு. ஜீ. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தமிழ் நாட்டில் கள்ள ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டதற்காகவும், கள்ள நாணயங்களைத் தயாரித்ததற்காகவும் 1967 முதல், ஆண்டு வாரியாக காவல் துறையினர் பதிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை யாது ?

(இ) இத்தகைய சட்ட விரோதச் செயல்கள் இனிமேல் நடைபெறாமல் தடுப்பதற்கு அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கள்ள நோட்டுகள் அச்சடிப்பது சம்பந்தமாக 1967-லிருந்து 1972 வரை வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் பார்த்தால், குறைந்த எண்ணிக்கை காணப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதைப் பார்க்கும்போது, வழக்குகள் பதிவு செய்வதற்கும், வருகிற செய்திகளுக்கும் மிகவும் வேறுபாடு இருக்கிறது. அதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த விவரங்கள் பத்திரிகைகளிலே வருவது உண்மைதான். ஏனென்றால் ஒரு வழக்கு கண்டுபிடிக்கப்பட்டாலும், அதன் தொடர்பாக பல வழக்குகளும் தொடர்ந்து கண்டுபிடிக்க வேண்டிய சூழ்நிலையுள்ளது. 1967-ல் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள குறிப்பின்படி, இந்தக் கள்ள நோட்டு, கள்ள நாணய வழக்கில், நாணய வழக்குகள் இரண்டும், கள்ள நோட்டு வழக்குகள் நான்கும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இந்திய அரசினால், 'இந்தியாவிலே குற்றம்' என்ற நூலில் தமிழ் நாட்டில் கள்ள நாணய வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, 1967-ல் 477 வழக்குகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 477 வழக்குகள் எப்படி வருகின்றனவென்றால், ஒரு நோட்டு அடிக்கிற நேரத்தில், அதே மாதிரியான நோட்டுகள் பலவற்றை அந்தப் பட்டியலில் அடிப்பார்கள். ஒரு நோட்டை மாத்திரம் அடித்து அத்துடன் விட்டு விட மாட்டார்கள். பல நோட்டுகள் அடிப்பார்கள், அது புழக்கத்தில் வரும்போது, அடித்த இடத்திலிருந்து வங்கிகள், பிற இடங்கள், ஆங்காங்கு அதை வாங்குகிறவர்கள் இதில் சேர்க்கப்படுகிறார்கள். அப்படிச் சேரும்போது, வழக்குப் பதிவுகள் அதிகம் ஆகிவிடுகின்றன. ஆகவேதான் வழக்குகள் 2 அல்லது 4 ஆகயிருந்தாலும், அதிலே பல பேர் குற்றவாளிகளாக ஆக்கப்படுகிற காரணத்தால், வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது.

---

@ 81 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு எல், பலராமன் :** தலைவரவர்களே, இந்தக் கள்ள நோட்டு அடிப்பவர்களால் நாட்டின் பொருளாதாரம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறதென்றும், அதனால் நியாயமாக இருப்பவர்கள் பலர் பெருவாரியாகப் பாதிக்கப்படுகிறார்களென்றும் அரசு உணருகிறதா? மேலும் அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு இன்றையச் சட்டத்தில் இடம் இருப்பதால், அவர்கள் தைரியமாக இந்தத் தவறுகளைச் செய்கிறார்கள். எனவே இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு மாநில அரசாவது அல்லது மத்திய அரசாவது ஏற்ற நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இதனால் பொருளாதாரம் பெருமளவுக்கு பாதிக்கப்படுவதாகக் கூற முடியாது. ஆனால் இப்போது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும், இந்தக் கள்ள நோட்டு, கள்ள நாணயங்கள் தயாரிப்பது குறைந்து வருகிறதென்று சொல்லலாம். தண்டனையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆயுள் தண்டனை கொடுக்கலாம் அல்லது 7 ஆண்டுக் காலம் வரையிலும் தண்டனை கொடுக்கலாமென்று இருக்கிறது. அதைக் குறைந்தபட்சம் 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் என்று மாற்றுவதாக இருந்தால், இன்னும் கூடக் கொஞ்சம் அச்சம் ஏற்படும். அதற்கு இண்டியன் பினல் கோடைத் திருத்த வேண்டியதாகயிருக்கும்.

**திரு. டி. சந்தோஷம் :** தலைவரவர்களே, இப்போது கொடுத்த விவரங்களில் நோட்டுகள் அச்சடித்ததுபற்றி இருக்கிறது. ஆனால் வெளி மாநிலங்களில் மாத்திரமல்லாமல், வெளி நாடுகளிலிருந்தும் நோட்டுகள் அச்சடிக்கப்பட்டு, அப்படிப்பட்ட கள்ள நோட்டுகள் நம்முடைய தமிழ் நாட்டில் வினியோகிக்கப்பட்டதாகத் தகவல் உள்ளதா? வெளி நாடுகளில் அச்சடிக்கப்பட்ட நோட்டுகள் இங்கே வினியோகிக்கப்பட்டது குறித்து ஏதாவது வழக்குகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வெளி நாடுகளில் அச்சடிக்கப்பட்டு, இங்கே வினியோகிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வழக்குகளைப் பற்றிய விவரமில்லை. கள்ள நோட்டு, கள்ள நாணயங்கள் மட்டுமில்லாமல், இந்த நோட்டுக்களை இரட்டிப்பு செய்துகொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றுகிற வழக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இந்தக் கள்ள நோட்டு அடிப்பது, பிற மாநிலங்களை விட நமது மாநிலத்தில் குறைந்திருக்கிறதா? அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டவர்களில் ஏதாவது அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்பு கொண்டுள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ் நாட்டிலே குறைவு என்று சொல்லலாம். இதில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்குத் தொடர்பு இருக்கிறதா என்பதைப்பற்றி என்றால் விவரம் தெரிவிக்க இயலாது. ஏனென்றால் தெரியாமல் ஒரு 100 ரூபாய் அல்லது 10 ரூபாய் நோட்டை வாங்கி, அவர்கள் பிடி பட்டிருக்கலாம். அவர்கள் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். தெரியாமல் வாங்கியிருக்கலாம். அவர்கள் கைது செய்யப்படும்போது அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படலாம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, சென்ற வாரம் இராமநாதபுரம் மாவட்டத்தில் கள்ள நூறு ரூபாய் நோட்டு ஒரு இல்லத்திலிருந்து பிடிபட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. அதுபற்றிய முழு விவரம் அரசுக்கு வந்திருக்கிறதா? அது சபைக்குத் தெரிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அண்மையில் பரமக்குடிக்கு அருகாமையில், அக்ரமேசி என்ற கிராமத்தில் 100 ரூபாய் கள்ள நோட்டு தயாரிப்பதாக இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். முத்துராக்கு என்பவர் அதிலே தலைமறைவாகியிருக்கிறார். அவருடைய ராஜ வியாகுல பாண்டியன் என்கின்ற அவருடைய மகனும் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட கள்ள நோட்டுகள் கேரளாவிலிருந்து, 2 ரூபாய் நோட்டுகளாகத்தான் தமிழ் நாட்டிற்கு வருவதாக என்னுடைய அனுபவத்தில் தெரிகிறது. (சிரிப்பு)





மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தகவல் என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : சாதாரணமாக இப்படிப் பட்ட நோட்டுகள் 'காப்பி கிளப்'-களிலும், மற்றும் கூலி ஆட்களுக்கு வசதியுள்ளவர்கள் கொண்டு வந்து கொடுத்தும், புழக்கத்திற்கு விடுகிறார்களென்பது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கேரளாவிலிருந்து எல்லாம் வருகிறது. வரவேண்டிய அளவுக்கு 'கரன்ட்'தான் வரவில்லை.

திரு. கே. எஸ். மணி : தலைவரவர்களே, அண்மையில் நூறு ரூபாய் அச்சடிப்பதாக கைது செய்யப்பட்ட வழக்கில், 3 பேர்கள் எதிரிகளாகவும், அவர்களில் ஒருவர் தலைமறைவாகிவிட்டாரென்றும், இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களென்றும் தெரிய வருகிறது. இந்த 3 பேரில் யாராவது அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களா என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதில் ஒருவர், ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவரென்று பத்திரிகையில் செய்தியைப் பார்த்தேன்.

### *Attack on the Temple staff of Tiruchendur*

171 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that Policemen attacked the Temple Staff in Tiruchendur about 30th May 1972 ;

(b) if so, the details thereof; and

(c) the reasons therefor?

## திருச்செந்தூர் கோவில் பணியாளர்கள் மீது தாக்குதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 30—5—1972 அன்று திருச்செந்தூரிலுள்ள கோவில் பணியாளர்களைக் காவலர்கள் தாக்கினரா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) & (உ) : திருச்செந்தூர் கோவிலில் "உச்சிக்கால பூஜை" நேரத்தில் சுவாமி தரிசனம் வேண்டி, சாதாரண உடையிலிருந்த காவலர் ஒருவர் 'மணியடி மண்டபத்திற்குள்' நுழைய முயன்றபோது, அங்கிருந்த காவலாளி (Watchman) அந்தக் காவலர் நுழைவதை அனுமதிக்கவில்லை. காவலாளரும் சாரணர்களும் அவரை வலுக்கட்டாயமாக வெளிக்கொணர்ந்தனர். அந்தக் காவலருக்கு ஆதரவாக வேறு சில காவலர்கள் தடிகள், பிரம்புகளுடன் கோவிலை நோக்கி விரைந்து, அந்தக் கோவிலின் காவலாளியையும் பிற பணியாளர்களையும் தாக்கினார்கள். காவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *M. A. Degree Course in the Muthurangam Arts College, North Arcot District*

*172 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have taken any step to introduce M.A. Degree Course in the Muthurangam Arts College, North Arcot District; and

(b) if so, the year in which it will be introduced?



## வட ஆற்காடு மாவட்டம் முத்துரங்கம் கலைக்கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம் முத்துரங்கம் கலைக் கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பு (எம்.ஏ.) படிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டில் துவக்க இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பல்கலைக் கழகத்தின் இணைப்பு கிடைக்கப்பெற்றால் 1973-74-ம் ஆண்டு துவக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 12 கல்லூரிகள் இருந்தும், இதுபோன்ற மேல் படிப்புக்கான வசதிகள் இல்லாமையால், அடுத்த கல்வி ஆண்டிலாவது கண்டிப்பாக வசதி ஏற்படுத்துவதற்கு, அமைச்சரவர்கள் இந்த அவையின் மூலம் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த முதுகலைப் பட்டப்படிப்பு துவங்க வேண்டுமென்றும், வரலாற்றுத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் துவங்க வேண்டுமென்றும் சென்ற ஆண்டு கேட்கப்பட்டது. ஆனால் அதற்கு பல்கலைக்கழகம் இணைப்புக் கொடுக்கவில்லை. மறுபடியும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 1973-74-வது ஆண்டிலாவது கொடுக்க வேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநரால் வற்புறுத்தப் பட்டுள்ளது.

### *Separate Junior Engineer to look after the Maintenance of the School Buildings.*

*173 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a resolution has been passed by the Kanyakumari District Development Council and sent to Govern-

ment that a Junior Engineer should be appointed exclusively to look aftar the maintenance of tht Government (B) High School buildings in the district; and

(b) if so, the decision taken thereon by the Government?

**பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்க தனி இளம் பொறியாளர்**

**திரு. வே. தங்கப்பாண்டியன்** (திரு. எம் சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட அரசுப் பள்ளிகளில் கட்டிடங்களைப் பராமரிக்க தனி ஒரு இளம் பொறியாளர் நியமிக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில் அதுபற்றி அரசு எடுத்த முடிவு என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) ஆம்.

(இ) இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

**திரு. அய்யணன் அம்பலம்** : தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், இந்த வளர்ச்சித் துறைகளைத் தனியாகக் கவனிக்க வேண்டுமென்று, ஒரு இளம் பொறியாளரை நியமிப்பதற்கு கொள்கையளவில் அரசிடம் திட்டமிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இதுபற்றிப் பொறியியல் துறையோடு முன்பே பேசப்பட்டது. தனியாக ஒரு இளம் பொறியாளரைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் அவர்களே இதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறார்களென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மறுபடியும் இந்தக் கருத்து தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பள்ளிக் கூடங்கள் கட்டுவதற்கு, 10 லட்சம், 15 லட்சம் ரூபாய் செலவிடப்படும்போது, அதைத் தனியாகக் கவனிப்பதற்கு ஒரு தனி இளம் பொறியாளர் நியமிக்கப்படலாம். அப்படி நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வேலையை மட்டும் கவனிப்பார். அப்படி கவனித்தால்



விரைவில் நடைபெறும் என்ற நோக்கத்தை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். அதுபற்றித் தலைமைப் பொறியாளர் பரிசீலித்து, அவரிடமிருந்து அறிக்கை வந்ததற்குப் பிறகுதான் அரசாங்கம் தக்க முடிவு எடுக்கும்.

**திரு. அய்யணன் அம்பலம்** : தலைவரவர்களே, வளர்ச்சித் துறை எல்லா வேலைகளையுமே கவனிப்பதற்காக, நெடுஞ்சாலைத் துறையினுடைய நிர்வாகத்திலேயே தனியாக ஒரு இலாகாவை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இது கல்வியைப் பற்றியிருக்கிற காரணத்தால் அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் திரட்டித் தரப்படும்.

*Revised scales of pay for Grade I Tamil Pandits*

*174 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether Grade I Tamil Pandits are eligible for the revised scales of salary to Graduate Assistants in High Schools recommended by the One-man Commission; and

(b) if not, the reasons therefor?

**முதல் நிலை தமிழ்ப் பண்டிதர்களின் திருத்தச் சம்பள விதங்கள்**

**திரு. எம். ராஜா அய்யர்** : மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஒரு நபர் ஆணைக்குழு, உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பரிவுரை செய்துள்ள திருத்தச் சம்பள விதங்களைப் பெற தரம் I தமிழ் பண்டிதர்கள் தகுதியுடையவர்களா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த தமிழாசிரியர்கள் தேர்வுநிலை சம்பள விகிதத்திற்கு தகுதியுள்ளவர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தேர்வுநிலை சம்பள விகிதத்திற்கு முதலமைச்சர் கோட் தமிழாசிரியர்கள் தகுதி உள்ளவர்களா என்றும் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். இவர்களை ஹைஸ்கூல் தலைமையாசிரியர்களாக நியமிப்பதற்கு தகுதி உள்ளவர்களாக அரசு கருதுகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் தேர்வுநிலையோடு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தலைமையாசிரியராக இருப்பதற்கு என்று சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகள் எப்படி இருக்க வேண்டுமென்று பல்கலைக் கழகத்தோடு கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம். அந்த விதிகளினுடைய அடிப்படையில் குறிப்பிட்ட தகுதி அமைந்ததற்குப் பிறகு அந்த நிலைமையை உண்டாக்கலாம் என்று கருதுகிறேன்.

## Grant to Y.M.C.A.

*175 Q.—Thiru K. S. Mani (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are sanctioning grant to (Y.M.C.A.) Young Men's Christian Association; and

(b) if so, the amount of grant sanctioned, last year?

## கிருஸ்துவ இளைஞர் சங்க (Y.M.C.A.) அமைப்புக்கு அரசு மான்யம்

திரு. கோ. சி. மணி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கிருஸ்துவ இளைஞர் சங்க (Y.M.C.A.) அமைப்புக்கு அரசு மான்யம் வழங்குகிறதா ?



(இ) ஆமெனில், சென்ற ஆண்டு எவ்வளவு வழங்கியிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தமிழ் நாடு மாநிலத்திலுள்ள கிருஸ்துவ இளைஞர் சங்க அமைப்பிற்கு (Y.M.C.A.) யாதொரு விதமான மான்யம் வழங்கவில்லை. ஆனால் லண்டனிலுள்ள கிருஸ்தவ இளைஞர் சங்க அமைப்பு மாணவர்கள் விடுதிக்கு வருடாந்திர மான்யமாக ரூ. 2,000 மட்டும் வழங்கப்படுகிறது.

Thiru D. Santosham: Mr. Chairman, Sir, the Central Government have a list of Recognised Social Service Organisations and (Y.M.C.A.) Young Men's Christian Association is one among them. Do we have such a list o frecognised Social Service Organisations in our State, and if so, is Y.M.C.A. one among them?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக இருக்கிறதா அல்லவா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. 1970-ல் லண்டனில் இந்த ஒய்.எம்.சி.ஏ. ஏற்படுத்தப்பட்டபோது, 120 பவுன் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் வழங்கி வந்தார்கள். ஆகவே அதைத் தொடர்ந்து லண்டனில் உள்ள ஒய்.எம்.ஸி.ஏ. வுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

## Refixation of Pay of the Employees of the Kancheepuram Municipality

*176 Q.—Thiru C. V. Rajagopal: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that certain employees of the Kancheepuram Municipality have made representations to the Government in March, 1971 for the refixation of their pay in the new scales; and

(b) if so, the action taken by the Government thereon?

[1973 மார்ச் 3

## காஞ்சிபுரம் நகராட்சியில் பணி புரியும் பணியாளர்களுக்கு சம்பளத்தை மாற்றியமைத்தல்.

திரு. சி. வி. ராஜகோபால் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காஞ்சிபுரம் நகராட்சியில் பணிபுரியும் ஒரு சில பணியாளர்கள், தங்களது சம்பள விகிதங்களை புதிய சம்பள விகிதத்தில் மாற்றியமைக்குமாறு கோரி, 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசுக்கு முறையீடுகள் கொடுத்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை கேள்வி நேரம் குறித்து.

THIRU G. SWAMINATHAN : Sir, I rise on a point of order under rule 35 of the Tamil Nadu Legislative Council Rules. I find there are only 7 questions in the List of Questions for the day. Even after the 7 questions are answered, we have got another 45 minutes. We used to have 25 questions in the List. But to-day only 7 questions have been listed. I do not know the reason for not having enough questions. We must have enough questions so that we may have the questions for the whole hour. I request that the Hon. Chairman may kindly add more questions in the List, so that members may discharge their duties better in the Council by getting answers to the questions.

MR. CHAIRMAN : The Ministry is expecting to get more elaborate answers to the questions. Previously I used to put 25 to 30 questions in the Question List.



1973 மார்ச் 3]

THIRU G. SWAMINATHAN : Recently, we have amended the rules and according to the amended rule, question shall ordinarily be admitted and forwarded to the Departments within 15 days from the date of receipt of notice. After admission, it has to be listed irrespective of the fact whether the answer has been received or not. I have got my own file in which there are questions which have not been answered for more than 6 months. The rule has not been adheared to. I do not know what effect this amended rule 35 has. According to the rule, we ought to have listed those questions. Whether answers have been received or not is immaterial to the Council Dapartment. There are questions pending for more than one or two years. If the question is answered after one or two years, it does not serve the purpose.

MR. CHAIRMAN : I am aware that the rule has been amended and also that questions should be admitted within two weeks.

THIRU G. SWAMINATHAN : I have got a list of my own questions which are pending for more than 6 months.

MR. CHAIRMAN : As I have already informed the Member, the Ministry is waiting for elaborate answers from the Departments. Otherwise, I would have added more questions. I too want to dispose of the questions as early as possible.

THIRU G. SWAMINATHAN : The other day, I put a question with regard to posting of Health Officers in Municipalities. It was pending for a long time. The Head of the Department should have such information on his table.

MR. CHAIRMAN : I can give you a guarantee that we will try to get the answers to the questions as early as possible.

நமது அவையின் 35-வது விதியின்படி, கேள்விகள் அனுமதிக்கப்பட்ட பின்பு 42 நாட்கள் கழித்து அவைப் பட்டியலில் வர வேண்டும். இந்தக் கால வரம்புக்குள் விடைகளைக் காரியாலயத்திலிருந்து அனுப்ப இயலாவிட்டால், அதற்குப் பின் 15 நாட்கள் தலைவர் அனுமதியில் நீட்டிக்கப்படும். இந்த விதி போன வருடம் 1972 ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாள் அமலுக்கு வந்தது. அலுவலகத்தில் தலைமைச் செயலகத் துறைகளிலிருந்து விடைகள் வரப்பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுக்கப் பட்டுள்ளன. ஆயினும், உறுப்பினர்களுக்கு முழுத் திருப்தி

[Mr. Chairman] [1973 மார்ச் 3

அளிக்கும் வகையில் வினாக்களுக்கு விடைகள் அமைய வேண்டுமென்ற அவாவிருந்தும் காலதாமதமேற்படுகின்றது என நம்புகிறேன். கூடிய வரையில் நமது விதி முறைகளில் வகுக்கப் பட்ட கால வரைக்குள் விடைகள் அனுப்பப்பட்டால், மிகவும் நலமாக இருக்கும். அதுவும் தற்பொழுது உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குப் பிறகாவது தலைமைச் செயலகத் துறைகள் விடைகளைச் சீக்கிரம் அனுப்பி வைக்குமென்று எண்ணுகிறேன். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### 3. சட்ட மன்ற விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரைகள்.

### (1) கூடலூரில் ஆக்ரமிப்பாளர்களை ஒழுங்குபடுத்தல் குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்ற விதி 82-ன் கீழ் அறிக்கை ஒன்றினை வெளியிடுவார்கள்.

THE HON. DR. M. KARUNANIDHI: Mr. Chairman, Sir, a total extent of 11,352 acres has been under encroachment in Gudalur taluk, Nilgiris district. Owing to its proximity to Kerala, there has been a tendency for Keralites to encroach on Government lands in Gudalur taluk, which was noticed as early as 1952. The Government of Tamil Nadu have treated this problem with great sympathy and have been liberal in dealing with the encroachers in this area. The result of this policy will be reflected in the following figures :—

| Total extent of encroachments and families involved. | | Pattas issued so far. | Pattas under issue. | Evicted. |
|---|---|---|---|---|
| Area in acres .. | 11352 | 9060 | 737 | 1555 |
| Number of families | 7902 | 5573 | 806 | 1523 |

This matter was considered in great detail by me in September 1971, a sympathetic view was taken and it was decided that all encroachments in existence as on 30th June 1971 would be regularised subject to the usual conditions and further encroachments on



1973 மார்ச் 3] [Dr. M. Karunanidhi]

Government land prevented. In implementing this policy, we have issued pattas for 90 per cent of the extent under encroachments as would be seen from the figures read out just now. The definition of family was liberalised in December 1972 so that the remaining extent of 737 acres could also be assigned to the encroachers. In effect, we have only evicted 1,523 families from an extent of 1,555 acres.

An unexpected development took place with the formation of Gudalur Karshaka Samrakshana Sangham by the first week of December 1972. The active membership of this Sangam was confined to two border villages, Moonnad and Erumad. It as reported that another association called Gudalur Samara Sahaya Samithi was formed in Sultan's Battery of Kerala State with the object of extending support to the Gudalur Karshaka Samrakshana Sangam. They held a series of meetings in which inflammatory speeches were made. Their object was to reoccupy not only the lands from which the encroachers were evicted but also to occupy revenue lands on which the Forest Department had raised plantations at a cost of Rs. 4,000 per acre. On 14th February 1973, the Gudalur Sangham organised a meeting at Ambalamoola in our State which is close to the State border. After the meeting, when Police and the Forest officials returned under the impression that the crowd had dispersed peacefully, the agitators numbering 5,000 became violent and set fire to plantations covering an extent of 1,685 acres causing loss of Rs. 5.29 lakhs. Ninety-three separate plantation blocks have been destroyed. Out of 1,685 acres planted by the Forest Department, only 118.47 acres would represent the evicted area. As a consequence of this incident, the Police had necessarily to take action to arrest the persons responsible for such destruction and national waste of Government property in Gudalur taluk. Some 300 men fearing arrest for what they did seem to have gone across the border of Ambalayayal. As a result of the prompt action by the local authorities, large scale destruction and insecurity in the minds of the people have been prevented and normalcy restored.

It is a great pity that while these are the facts, it is seen as reported from the newspapers, the Government of Kerala have given the impression that whatever action has been taken in Gudalur taluk has been discriminatory on the ground that they

were Malayalees. I would like to assure that in Tamil Nadu no discrimination is made on the mere ground of language. Whatever laws and rules are applicable to the people of Tamil Nadu would apply equally to those from other States who seek to reside here.

### (2) பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைகள்பற்றி அரசினர் முடிவுகள் குறித்து

பி.ப. 4-20 **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் பற்றி அரசின் நிலைமையை தெளிவுபடுத்தி நான் சில நாட்களுக்கு முன்பு இந்த அவையில் ஒரு அறிக்கை வைத்தேன். அக்கோரிக்கைகளை மேலும் பரிசீலனை செய்து அரசு எடுத்துள்ள முடிவுகளை இங்கே அறிவிக்க, இப்பொழுது 82-வது விதியின் கீழ் அவையின் அனுமதியைக் கோருகின்றேன்.

1—4—70 க்குப் பின் 'பி' பிரிவுப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள பி.டி. ஆசிரியர்கள் அனைவரையும் வரன் முறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணையும் இன்று பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஆணையின் வாசகம் வருமாறு:—

The District Board High Schools have been taken over by Government with effect from 1st April 1966. The teaching and non-teaching staff of these schools have, however, been taken over into Government service with effect from 1st April 1970 and they have been constituted into a separate wing known as the 'B' wing in the Tamil Nadu Educational Subordinate Service and the Ministerial Service. Pending issue of service rules governing the 'B' wing, the rules applicable to the former District Board Schools have been followed in making appointments and several hundreds of B.T. Assistants have been appointed by the Chief Educational Officers in a temporary capacity. Representations have been received by Government that the services of these teachers should be regularised in view of the service they have already put in and in view of the special circumstances under which they have been appointed by the Chief Educational Officers.



The Government, as a special case, order that all B.T. teachers appointed in the 'B' wing from 1st April 1970 up to the date of these orders will be regularised.

தேர்வு நிலைப் பதவிகளை பணிக்கால அடிப்படையில் நிறைவு செய்வதை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும், எத்தனை ஆண்டுகள் பணிக்குப் பின்பு இப்பதவிகள் கிட்டும் என்று பின்னால் நிர்ணயிக்கப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன். இக்கோரிக்கையை மேலும் பரிசீலனை செய்ததன் பலனாக 10 ஆண்டு பணி நிறைவு பெற்றுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் தேர்வு நிலைப் பதவிகள் வழங்கப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் இம்மன்றத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

Thiru M. Rajah Iyer rose . . .

MR. CHAIRMAN: If the hon. Member is only going to thank the Government on behalf of the teachers, then he may do so.

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, though the Rules do not permit, I only seek your special permission to thank the Government for the very generous orders they have just announced. The first order benefits more than 3,000 teachers appointed after 1st April 1970 and they are automatically confirmed without their having to come through the Public Service Commission. The second order benefits thousands of B.T. Assistants who will be automatically promoted to the Selection Grade by virtue of their service for a period of 10 years without any reference to the number of posts or other restrictions thereon. It is extremely gracious of the Government to have announced these orders and on behalf of the Members of this House, I have great pleasure in conveying to the Government our most heart-felt thanks in this respect, Sir.

### 4. அரசினர் தீர்மானம்

### சட்ட மன்ற விதியை நிறுத்திவைத்தல் குறித்து

THE HON. THIRU S. MADHAVAN: Mr. Chairman, Sir, I move—

"That under rule 205 of the Tamil Nadu Legislative Council Rules, the relevant rules of procedure of the Council be suspended and the House do now proceed with the discussion on the resolution

to be moved by the Hon. the Minister for Industries on the ' Yarn Situation ' before the General Discussion on the Budget is resumed."

MR. CHAIRMAN : The question is—

" That under rule 205 of the Tamil Nadu Legislative Council Rules, the relevant rules of procedure of the Council be suspended and the House do now proceed with the discussion on the resolution to be moved by the Hon. the Minister for Industries on the " Yarn Situation " before the General Discussion on the Budget is resumed."

The motion was put and carried.

### 5. அரசினர் தனித் தீர்மானம்.

### நெசவாளர்களுக்கான நூலை மத்திய அரசு வழங்குவது குறித்து.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, " தமிழகத்தில் 5 லட்சம் தறிகளும், அந்தத் தறிகளை நம்பி 20 லட்சம் பேர்களும் வாழ்கிறார்கள். நமது மாநிலத்துக்குத் தேவையான 20 ஆயிரம் பேல்ஸ் சிட்ட நூல் ' ஹாங் யான்'ம், 35 ஆயிரம் பேல்ஸ் ' கோன் யான்'ம் மத்திய அரசு உடனடியாக தமிழக அரசுக்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறு இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது." என்று நான் முன்மொழிகிறேன்.

இது போன்ற தீர்மானம் சட்டப் பேரவையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திற்கும் இது பற்றித் தகவல்களைத் தந்து அது போல ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் இதைக் கொண்டு வந்துள்ளேன்.

தமிழகத்தில் நெசவாளர்களின் பிரச்சினை பல ஆண்டுகளாகத் தீர்க்கப்பட முடியாததாக இருந்து வருகிறது. இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை காரணமாக நூல் பற்றாக்குறை அதிகமாக வந்திருப்பதை நான் இங்கே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். 11–8–72-ல் நம்முடைய முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். நீண்ட நாட்களாகத் தீர்க்கப்பட முடியாத நெசவாளர்களுடைய பிரச்சினையை உடனடியாகத்





தீர்க்க வேண்டும்; அதற்கு இரண்டு பரிகாரம் உண்டு. ஒன்று, தமிழகத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூல் நம்முடைய மாநிலத்திலேயே, இந்த மாநிலத்திலுள்ள ஆலைகளிலிருந்து, நியாயமான விலையில் வாங்கி அதை நெசவாளர்களுக்கு, தறிக்குச் சொந்தக்காரர்களுக்கு விநியோகிக்க வேண்டும்; அதற்கு உள்ள அதிகாரத்தை மத்திய அரசு வழங்க வேண்டும்; அடுத்த பரிகாரமாக, நிரந்தரமாகக் கைத்தறித் துணிகள் விற்பனையாகாது இருக்கிற நிலைமையை மாற்ற, சில ரகங்களை மட்டும் வேஷ்டி, துண்டுகள், பெட்ஷீட், சேலை என்ற ரகங்களை கைத்தறிக்கே சட்டபூர்வமாக ஒதுக்க வேண்டும் என்ற இரண்டு கருத்துக்களையும் அக்கடிதத்தில் நம்முடைய பிரதம அமைச்சருக்குத் தெரிவித்திருந்தார்கள். இதுவரையில் இது பற்றி எந்தத் தகவலும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. இதற்கிடையே மின்சார வெட்டின் காரணமாக நூல் பற்றாக்குறை அதிகமாக ஆகியது. உடனடியாக நம்முடைய முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு இந்த நிலைமையை எடுத்துக்கூறி ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் நமக்குத் தேவையான, கைத்தறிக்குத் தேவையான 20 ஆயிரம் பேல்ஸ் ' ஹாங் யான் ' இங்கே உற்பத்தி செய்யப்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது, சுமார் 8 ஆயிரம் பேல்ஸ் தான் உற்பத்தியாகிறது. ஆகவே தமிழகத்தில் உற்பத்தியாகிற இந்த 8 ஆயிரம் பேல்ஸும், இந்த மாநிலத்துக்காக ஒதுக்கப்பட்டு, மீதி பற்றாக்குறை 12 ஆயிரம் பேல்ஸும் மத்திய அரசாங்கத்தால் தமிழகத்துக்கு வழங்கப்பட்டு 20 ஆயிரம் பேல்ஸும் இந்த மாநிலத்திலுள்ள 5 லட்சம் தறிகளுக்கும் வழங்கப்படவேண்டுமென்று நம்முடைய அரசு சார்பிலே எழுதியிருந்தோம். அதற்கும் இதுவரை பதிலில்லை. இதற்கிடையே சென்ற மாதம் 26-ந் தேதி டெல்லியில் நடைபெற்ற மகாநாட்டில் நம்முடைய கருத்து அங்கே வலியுறுத்தப்பட்டது. அப்போது அந்தத் துறையில் அமைச்சராக இருக்கிற சட்டோபாத்யாயா அவர்கள் இந்த மகாநாட்டில் பேசுகிறபோது அகில இந்திய அளவிலே நூற்றுக்கு இருபது தட்டுப்பாடு நூலுக்கு ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்தினார். அதனுடைய அடிப்படையில் 80 சதவிகிதம் நம்முடைய தேவைக்குக் கிடைக்கும் போல ஒரு செய்தி தரப்பட்டது. இந்த அடிப்படையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மறுபடியும் ஒரு கடிதம் எழுதினார்கள். " எங்களுக்குத் தேவை 20 ஆயிரம் பேல்ஸ். உங்களுடைய அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள் 20

சதவிகிதம் தான் தட்டுப்பாடு என்று. ஆக 80 சதவிகிதம் 16 ஆயிரம் பேல்ஸ். அதிலே 3 ஆயிரம் பேல்ஸ் தமிழகத்திலே உற்பத்தியாவது போக, மீதி கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேல்ஸ் மத்திய அரசாங்கம் எங்களுக்குத் தர வேண்டும், மாநில அரசாங்கம் அதைச் சரியான முறையில் விநியோகிக்கும்" என்ற கருத்தையும் வலியுறுத்தியிருந்தோம். இதற்கிடையே நேற்று பாராளுமன்றத்தில் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டதாக இன்றைக்குப் பத்திரிகையில் வந்தது. நான் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களோடு தொடர்பு கொண்டு கேட்டேன். அவர்கள் தான் அந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். பத்திரிகையில் வந்த செய்தி உண்மை தான் என்று அவர்கள் என்னிடத்தில் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் செய்திப்படி, இந்த மாநிலத்திற்குத் தேவையான நூலை மாநிலத்திற்குக் கொடுத்திருப்பதாகவும், ஆனால் மாநில அரசு அதை எடுத்து விநியோகிக்காத காரணத்தால், நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதாகவும் அங்கே கூறப்பட்டது. இது எப்படிக் கூறப்பட்டது என்பது புரியவில்லை, விசித்திரமாகவும் இருக்கிறது. நான் இப்போது எடுத்துக் காட்டியது போல, தொடர்ந்து இரண்டு, மூன்று கடிதங்கள் பிரதம அமைச்சருக்கு எழுதி, அதனுடைய நகல்களும் இந்த அமைச்சருக்கும் திரு. சட்டோபாத்தியாயா அவர்களுக்கும் அனுப்பியிருந்தும் அவர்கள் இந்தத் தகவல்களைக் கொடுத்திருப்பது முற்றிலும் தவறு என்பதை இங்கே எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்திற்கு ஏதாவது நூல் கொடுக்கிறார்கள் என்றால், அவர்களின் ஸ்டேட்மெண்டில், இந்த மாநிலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிய நூல் என்று சொல்கின்றார்கள். அது வெளியே தவறான கருத்து பரவ வாய்ப்பு இருப்பதால் அதை விளக்க ஆசைப்படுகிறேன். மத்திய அரசு மாநில அரசுக்கு எந்த நூலும் கொடுப்பதில்லை. மத்திய அரசினுடைய அதிகாரி டெக்ஸ்டைல் கமிஷனர் பம்பாயில் இருக்கிறார். அவர்கள் நமது மில்காரர்களுக்கு நூல் கொடுக்கிறார்கள். அதுகூட சட்டப்படி கொடுப்பதில்லை. 'வாலண்டரி ஸ்கீம்' என்ற திட்டத்தின் அடிப்படையிலே, அதாவது ஆலை அதிபர்கள் தாங்களாகவே முன்வந்து தியாகம் செய்வதைப் போல தங்களுடைய ஆலைகளிலே உற்பத்தியாகும் நூலில் ஒரு பகுதியை டெக்ஸ்டைல் கமிஷனரிடத்திலே கொடுத்து, அவர்கள்



மாநிலத்திலே உள்ள இயக்குனரிடத்திலே கொடுத்து, அவர்கள் மாநிலத்திலே உள்ள நெசவாளர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். இதைத்தான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நான் ஊகிக்கிறேன். அதன்படி உண்மை என்னவென்றால், நான் எடுத்துக்காட்டியது போல, நமக்குத் தேவையானது 20,000 பேல். அவர்களுடைய அறிக்கைப்படி வர வேண்டுமென்று சொன்னால், நமக்கு 80 சத விகிதம் இருந்தாலும், 16,000 பேல் வர வேண்டும். அதிலே நமக்கு ஒதுக்கியிருப்பது—ஒரு சில மாதங்களுக்கு மட்டும் சொல்கிறேன்—சென்ற பிப்ரவரி மாதத்தில் 1,928 பேல். அதற்கு முதல் மாதம் ஆயிரத்து எண்ணூற்றுச் சொச்சம் பேல். ஆக நம்முடைய தேவைக்கும் அந்த டெக்ஸ்டைல் கமிஷனர் கொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லாத சூழ்நிலையை, இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட நிலையிலே அப்படிப்பட்ட ஒரு அறிக்கை தரப்பட்டிருப்பது வருத்தப்படக் கூடியதாகும். அதைக் கொடுப்பதிலே கூட அவர்கள் 'வாலண்டரி ஸ்கீம்' என்று கொடுத்து நாம் உடனடியாக 'அலாட்' செய்கிறோம். 1,928 பேலையும் சென்ற மாதம் 'அலாட்' செய்தோம். அந்த நூல் கூட அவர்களுக்குக் கிடைக்கிறதா என்றால், இல்லை. காரணம் அவர்களாக 'வாலண்டரி ஸ்கீம்'-படி அந்த ஆலை முதலாளிகள் கொடுத்தால் தான் உண்டு, கொடுக்கா விட்டால், அதைக் கேட்பதற்கு வாய்ப்பே கிடையாது. இதுதான் தமிழகத்தில் நெசவாளர்களின் நிலைமை. அரசியல் கலப்பில்லாத அந்தக் கருத்து வெளியே வரவேண்டும் என்ற காரணத்தாலே, விபரங்களை இந்த மன்றத்திலே வைக்கிறேன். நமக்கு இன்றிருக்கிற பிரச்சினை நூல் பற்றாக்குறை பிரச்சினை. இதிலே நம்முடைய கூட்டுறவு ஆலைகளிலே, சர்க்கார் எடுத்திருக்கிற ஆலைகளிலே 8,000 பேல் உற்பத்தியாவதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்த பவர் கட் காரணமாக அதுவும் உற்பத்தியாகவில்லை. அது நமக்கு நன்றாகத் தெரியும். ஆக 200 ஆலைகள் இருக்கிற தமிழகத்திலே, நம்முடைய ஆலைகள் உற்பத்தி செய்யும் நூலைத்தான் 5 லட்சம் தறிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றால், கொஞ்சம் கூட பயனை கிடைக்காது. நம்முடைய ஆலைகளும் நஷ்டத்திலே ஓடுகின்ற நிலைமைதான் ஏற்படும். ஆகவே நாம் மத்திய அரசைக் கேட்பதெல்லாம். தமிழகத்திலே இருக்கிற நெசவாளர்களுக்குத் தேவையான நூலை வாங்கி அதை நியாய விலையில் கொடுப்பதற்கு அதிகாரம், நமக்கு ஒரு உத்தரவாதம் கொடுக்கவேண்டும் என்பது

தான். அதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஆலை அதிபர்களுடன் பேசியபோது, அவர்கள் நேற்று ஒத்துக்கொண்டார்கள். இந்த மாநிலத்திலுள்ள ஆலைகளில் உற்பத்தியாகிற அத்தனை நூலையும் மாநில அரசிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்; உற்பத்திச் செலவை அடிப்படையாக வைத்து நியாயமான விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; மத்திய அரசு உத்தரவிட்டால், அது எங்களைக் கட்டுப்படுத்தும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதை மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துக்கூறியிருக்கிறது. ஆக இந்த அடிப்படையிலே இந்த மன்றத்தின் சார்பிலே எல்லாத் தரப்பு கட்சித் தலைவர்களின் சார்பிலே இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டு நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான இந்த நூலை மத்திய அரசு நம்மிடத்திலே ஒப்படைக்குமானால், 3 ஆண்டுகளாக பற்றாக்குறை இருப்பதை நாம் தவிர்த்துவிட முடியும், ஒரு சீரான விநியோகத்தை ஏற்படுத்த முடியும்.

நூல் விநியோகத்தைப் பொறுத்த வரைக்கும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்ட வாரியாக நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற இடங்கள் வாரியாக அனைத்துக் கட்சிகளின் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் சார்பிலே இந்த நூல் விநியோகிக்கப்பட வேண்டும். தறிகளின் அடிப்படையிலே விநியோகம் செய்யப்படவேண்டும் என்ற முறையிலே இந்த அரசாங்கம் இப்போது ஏற்பாடு செய்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அட்டை கொடுப்பது, கார்டு சிஸ்டம் கொண்டுவருவது என்று முடிவு எடுத்திருக்கிறோம். அதற்காக சென்சஸ் இந்த ஏப்ரல் மாதத்திற்குள்ளாக நடைபெற இருக்கின்றது. நூல் விநியோகத்தைச் சீரான முறையில் நாம் செய்ய முடியும் என்ற வாய்ப்பிருக்கிறது என்ற அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தனித் தீர்மானம்:—

" தமிழகத்தில் 5 லட்சம் தறிகளும், அதை நம்பி 20 லட்சம் பேர்கள் வாழ்கிறார்கள். ஆகவே நமது மாநிலத்திற்குத் தேவையான 20 ஆயிரம் பேல் சிட்டநூல் 'ஹாங் யான்'-ம், 35 ஆயிரம்





பேல் 'கோன் யான்'-ம் மத்திய அரசு உடனடியாக தமிழகத்திற்குத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது".

ஒவ்வொரு கட்சியின் தலைவர் மட்டும் பேசினால் போதும் என்று கருதுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** நம்முடைய தொழில் அமைச்சர் முன்மொழிந்த இந்த தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

**திரு. ஆர். சக்தி மோகன்:** தொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த அறிக்கையை எங்களுடைய கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தொழில் அமைச்சர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையோடு ஒன்றிரண்டு கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். உண்மையிலேயே காலையில் நான் அந்தச் செய்தியைப் பத்திரிகையில் படித்தபோது எனக்கே ஒரு திடுக்கிட்ட நிலைமை ஏற்பட்டது. எந்த ஒரு சூழ்நிலையில் பொறுப்பு வாய்ந்த ஒரு அமைச்சர் பதவியில் இருக்கிறவர் இவ்வளவு பெரிய—வார்த்தையிலே தவறு இருக்காது என்று நினைக்கிறேன்—புரளியைக் கிளப்பிவிட்டார் என்று நினைக்கும்படி இருக்கிறது. கேள்வி கேட்டிருக்கிறவர் நாடாளுமன்ற உறுப்பினர். இந்த மாநிலத்திலே ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர். மிகுந்த அக்கறையோடு அரசிடமிருந்து ஆதரவான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கேட்டிருக்கிறார். சேலத்தில் மறியல் நடக்கிறது. நூற்றுக்கணக்கான பேர்கள் கைதாகியிருக்கிறார்கள். கேள்வி கேட்டவரும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதில்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1973 மார்ச் 3

இந்த மாநில அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அந்த அளவு அக்கறை மத்திய அரசுக்கும் இருக்க வேண்டும். இந்த ஒரு சூழ்நிலையில் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நூலை மாநில அரசு எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னதோடுகூட நிற்கவில்லை. நெசவாளர்கள் தொல்லைக்கு அதுதான் காரணம் என்ற முடிவையும் கூறியிருக்கிறார். இவ்வளவு பயங்கரமான நிலையில் மாநில அரசை மத்திய அரசு ஏன் வைக்கிறது என்பது புரியவில்லை. நல்ல வேளையாக, காலத்தில் இந்த நிலைமையை விளக்கி தமிழகத்தினுடைய அரசின் நிலைமையை விளக்கிய முதலமைச்சரையும் தொழிலமைச்சரையும் பாராட்டுகிறேன். இன்று காலையில் பத்திரிகைகள் மத்திய மந்திரி சொன்னதைப் பெரிய தலைப்பிலே போட்டதைப் படித்தேன். அதே பத்திரிகைகள் மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டும், நெசவாளர்கள் தொல்லைப் படுகிறவர்களிடம் நாம் அரசியல் விளையாடக்கூடாது என்ற கருத்தோடு, இந்த மன்றத்தில் கொடுத்த மறுப்பையும் தீர்மானத்தையும் கூட நல்ல முறையில் வெளியிட்டு அமைதிக்கு உதவி புரியும் என்று நம்புகிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, கைத்தறியாளர்களுடைய பிரச்சினை இப்போது, ஆங்கிலத்தில் சொன்ன மாதிரி, ஒரு 'பர்னிங் பிராப்ளம்' ஆகவிருக்கிறது. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், விவசாயத்துக்கு அடுத்தபடியாக அதிகமான பேர் நம்பியிருக்கும்படியான தொழில், கைத்தறித் தொழில். 5 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன என்றால், குறைந்தது 20 லட்சம் பேர் இந்தக் கைத்தறியை நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வீட்டுக்கு 4 பேர், சென்சஸ் கணக்குப்படி 5 பேர், 25 லட்சம் பேர் கைத்தறியை நம்பி வாழ்கிறார்கள் என்பது கணக்கு. இப்பேர்ப்பட்ட ஒரு தொழில் நசித்துக்கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

கடந்த 2 தினங்களாக சேலத்தில் நடந்துவரும் போராட்டத்தை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சிறைக்குச் செல்லும் அளவுக்கு கைத்தறித் தொழிலாளர்கள் வெளியே வந்து ஊர்வலம் போய் சிறைக்குக்கூடப் போகிறோம், பட்டினியாகக் கிடப்பதை விட உள்ளே போய் இருக்கிறோம் என்ற நிலைமைக்கு வந்திருப்பதைப் பார்க்கும்போது, அவர்களுக்கு எவ்வளவு கஷ்டமான



1973 மார்ச் 3] [திரு. கே. ராஜாராம்]

நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர முடியும். பொதுவாக நம்மைப் பொறுத்த வரை மக்கள் கஷ்டம் நீங்கி அவர்களுடைய தொழில் நன்றாக இருக்க வேண்டும். உடனடியாக கண்ணுக்கு எதிரே தெரியக்கூடியது மாநில அரசாங்கமும் மாநில அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்களும் தான். இதிலே சட்டப்படி எல்லா விஷயங்களும் தெரிந்தவர்களுக்குத்தான் மத்திய சர்க்கார் தான் நூலை ஒதுக்குகிறார்கள் என்ற விபரம் தெரியும். ஊரிலே இருக்கிற கைத்தறி நெசவுத் தொழிலாளி மாநில சர்க்கார் தனக்கு நூல் கொடுக்கவில்லை என்றுதான் நினைப்பான். எங்களைப் பொறுத்த வரையில்—சொக்கனுக்கு சட்டி அளவு—தொழிலாளியின் பட்டினி தீர வேண்டும். அதற்கு எந்தவிதமான 'பிரஷர்' மத்திய சர்க்காருக்குக் கொடுத்தாலும் அதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். இரண்டு சர்க்கார்களும் சேர்ந்து நமக்கு நூல் கொடுக்க வேண்டும். தொழிலாளிகளுக்குக் கஞ்சி வார்க்க வேண்டும். அவர்களைப் பட்டினி கிடந்து சாகவிடக் கூடாது. இந்த நிலையில் எந்த விதமான ஒரு முயற்சி எடுத்தாவது அவர்களுக்கு நூல் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். தொழிலாளர்கள் சிறைக்குச் செல்லும் அளவுக்குப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்கு ஒதுக்கப் பட்டிருக்கும் நூலை எடுக்காமல் இருக்கிறார்களென்றால், அதை நம்ப முடியவில்லை. தொழிலாளர்களைப் பட்டினி போட்டுக் கொல்ல வேண்டுமென்று விரும்பும் மோசமான அரசாங்கமாக இருந்தாலும், இப்படி இருக்க முடியாது. இந்த மாதிரி அமைச்சர் அறிக்கை விட்டிருக்கிறாரே என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டுமென்று வந்தேன். நான் கேட்டவுடனேயே அசெம்பிளியில் தீர்மானம் போட்டிருக்கிறதே, தெரியாதா என்று கேட்டார்கள். தினமும் நான் காலையில் வந்து அசெம்பிளி நடவடிக்கைகளைப் பார்ப்பது வழக்கம். இன்று வரவில்லை. முதலமைச்சர் அவர்களைப் பார்த்த உடனே இதைத்தான் கேட்டேன். எனக்கு இது பெரிய அதிர்ச்சியாக இருந்தது. நம்மைப் பொறுத்தவரையில், இந்த நூலை எவ்வளவு சீக்கிரமாக தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கு வாங்கித் தர முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக வாங்கித் தர வேண்டும். இந்த மாதிரிக் கஷ்டம் வராமல் தடுப்பதற்கு, முன்பே தக்கபடி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இன்னொரு பத்திரிகையில் பார்த்தேன், மற்ற மாநிலங்களிலிருந்து கைத்தறித் தொழில் அமைச்சர்கள்

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 3

வந்து கைத்தறி நலனுக்குப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள், நம்முடைய மாநிலத்திலிருந்து டைரக்டர் மட்டும் சென்றார், மந்திரி செல்லவில்லை என்ற ஒரு குற்றம் சாட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். ஒரு அமைச்சருக்கு வேறு முக்கிய வேலை இருந்தாலும், வேறு எந்த அமைச்சராவது சென்றிருக்கலாம். தொழிலமைச்சருக்கு வேலை இருந்தால், மற்றொரு அமைச்சர் சென்றிருக்க வேண்டும். ஒரு அமைச்சர் வெளியே போயிருந்தால், இன்னொரு அமைச்சர் செல்வதில் தவறு இல்லை. கூட்டுப் பொறுப்பில்தான ஆட்சி நடக்கிறது. அமைச்சர் ஒருவர் வராததால், ஒரு மாநிலத்திற்கு நூல் ஒதுக்கப்படுவது நிறுத்தப்படுகிறது என்றால், அதையும் நம்பவே முடியவில்லை. எப்படியாவது நூல் வேண்டும். அந்த நூலை எவ்வளவு சீக்கிரம் பெற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பெற வேண்டும்.

இது நீண்ட நாளையப் பிரச்சினை. எனக்குத் தெரியும். 1952-லிருந்து கைத்தறிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சபையிலும் பேரவையிலும் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. கைத்தறிக்குக் கலர் சேலைகளையும், கரை போட்ட வேட்டிகளையும் ஒதுக்க வேண்டுமென்ற தீர்மானம் ராஜாஜி அவர்கள் இருந்தபோது போட்டோம். ராஜாஜி அவர்களே அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அதே மாதிரியான தீர்மானம்தான் இப்பொழுது போடப்பட்டு, ஜமக்காளமும் துண்டுகளும் அதிலே சேர்க்கப்பட வேண்டுமென்று நாம் கூறி வருகிறோம். இதிலே அதிக சிரத்தை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் நாங்கள் முழு ஒத்துழைப்புக் கொடுக்கின்றோம் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுப்பதில், அவர்களுக்கு நூல் வாங்கிக் கொடுப்பதில் அமைச்சரவைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சியினுடைய தலைவர்களும், தங்கள் கட்சிகளின் சார்பிலும், தமிழ்நாட்டில் அவதிக்குள்ளாகியிருக்



1973 மார்ச் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

கின்ற 20 லட்சம் கைத்தறி நெசவாளர்களின் சார்பிலும் ஆதரித்தமைக்கு நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் நான், பேரவையில் இந்தத் தீர்மானம் வந்தபோது குறிப்பிட்டது போல், இது 20 லட்சம் மக்களுடைய வாழ்வைப் பின்னணியாகக் கொண்டிருக்கிற தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் மாநில அரசு தன்னுடைய பொறுப்பை மத்திய அரசின் தலையில் சுமத்தப் பார்க்கிறது என்று பொருளல்ல. மாநில அரசு எடுக்க வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்திருக்கிறது என்பதை இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், சங்கடங்கள் வருகின்ற நேரத்தில், தமிழகத்திலிருக்கின்ற அந்தச் சங்கடங்களுக்கு ஆளாகின்ற மக்களுக்கு முதலில் தெரிவது மாநில அரசுதான். ஆனால் மாநில அரசு பெருவாரியான அதிகாரங்களை மத்திய அரசிடம் ஒப்படைத்து விட்டிருக்கிற சூழ்நிலையில், விளக்கங்கள் தருகின்றபோது, அந்த விளக்கங்களை ஏற்று மாநில அரசு மத்திய அரசோடு வாதாடுவதற்கும், தேவையானவற்றைப் பெறுவதற்கும் தகுந்த அதிகாரத்தை மாநில அரசுக்கு அளிக்கின்ற வகையில் பிரச்சினைக்குரியவர்களாக நாம் ஆகிக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். அவ்வாறு நடக்காமல் வேறு வகையில் கிளர்ச்சிகள், போராட்டங்கள் வருமானால், மாநில அரசுக்கு மத்திய அரசோடு இது போன்ற விவகாரங்களில் தலையிட்டு நன்மைகள் பெற எடுத்துக்கொள்கின்ற முயற்சிகளுக்கிடையே சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்க வேண்டிய வேறு பல பிரச்சினைகள் தோன்றிவிடுகின்றன. ஆகவே பிரச்சினையின் திசை வேறு பக்கத்திற்குத் திருப்பப்படுகிறது. அந்தக் காரணத்தாலே விளக்கங்களை எடுத்து வைக்கின்ற நேரத்தில் இதிலே இருக்கின்ற உண்மையைச் சொல்ல வேறு கட்சியினுடைய தலைவர்களும் மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது போன்ற பிரச்சினைகளை வெறும் அரசியல் நோக்கத்தோடு கருதாமல், அனைவரும் இது ஒரு பொதுப் பிரச்சினை என்பதை மனதில் கொண்டு, எனது வேண்டுகோளுக்கேற்ப, இந்த மாமன்றத்தில் எல்லாத் தலைவர்களும் இந்தத் தீர்மானத்தை வரவேற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 3

மத்திய அரசினுடைய அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் நெசவாளர்கள் இப்பொழுது துயரத்திற்கு ஆளாகியிருக்கின்ற நேரத்தில், வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காகத் தமிழக அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், தமிழக அரசின் மீது குற்றஞ்சாட்டி, பெரிய குற்றத்தைச் சாட்டி, பெரிய பழியைச் சுமத்தி, ஒதுக்கப்பட்ட நூலை தமிழக அரசு எடுத்துக்கொள்ளவில்லையென்று நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பது நம்முடைய துர்பாக்கியம் என்று நான் கூறுவேன். உண்மையிலேயே வருந்தத்தக்க ஒரு செய்தியை, உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை மத்திய அரசினுடைய பொறுப்புள்ள ஒரு அமைச்சர், அதிலும் நாடாளுமன்ற அவையில் தெரிவித்திருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். இன்றைக்குக் காலையிலும், இப்பொழுது மேலவையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு தமிழரசுக் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், நம்முடைய தொழிலமைச்சர் அவர்களும், நானும் எடுத்துக் கூறியதை மனதில் கொண்டாவது இந்தத் தவறை மத்திய அமைச்சர் திருத்திக் கொள்வார் என்று நம்புகிறேன். இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டதற்கு மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் தேவை. நம்முடைய மாநிலம் சம்பந்தப்பட்ட வரையில் 13 கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவு ஆலைகள் நெசவாளர்களுக்கு வேண்டிய அளவிலும் நியாய விலையிலும் நூல் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற கொள்கையோடு ஆரம்பிக்கப் பட்டன. அந்த 13 ஆலைகள் உற்பத்தி செய்யும் நூலை மாதந்தோறும்—சென்னையிலே அந்த மில்களின் தலைவர்கள் அல்லது மேனேஜிங் டைரக்டர்கள், அல்லது நிர்வாகிகள், மாநில கைத்தறி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள், இவ்வளவு பேரும் கூடி—எப்படி விநியோகிப்பது என்று விவாதித்து ஒரு ஏற்பாடு செய்து வந்தார்கள். நான் இதை அனுபவத்திலே தான் கூறுகிறேன். நூலுக்கு விலை நிர்ணயிப்பது மட்டுமல்ல, எவ்வளவு நூல் உற்பத்தியாகியிருக்கிறது. எந்தெந்த மில்லிலிருந்து எந்தெந்த நம்பர் நூல் வந்திருக்கிறது என்று பார்த்து, மாநிலக் கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு



1973 மார்ச் 3] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

விநியோகிப்பதற்கு எத்தனை பேல்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் பாக்கியிருக்கிற பேல்களை வெளியே மார்க்கெட்டிலே விற்றுவிடலாம் என்றும் தீர்மானிக்கப்படுவது உண்டு. சில சந்தர்ப்பங்களில் மாநிலக் கைத்தறி நெசவாளர்கள் சங்கம் அதிக பேல்களைக் கேட்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் குறைந்த அளவு நூல் கேட்பதுண்டு. பாக்கியிருப்பதை எல்லாம் கூட்டுறவு மில்கள் வெளியே விற்று விடுவதுண்டு. இப்பொழுது டெக்ஸ்டைல் கமிஷனர்தான் கைத்தறிகளுக்கு நூல் ஒதுக்குகிறார் என்றால், கூட்டுறவு மில்கள் சம்பந்தப்பட்ட வரை—இந்த 13 மில்களும் உற்பத்தி செய்கின்ற பேல்களையும் அவர் மொத்தமாக வைத்துக் கொண்டு, அதிலிருந்து இத்தனை சதவிகிதம் நம்முடைய மாகாணக் கைத்தறிகளுக்கு என்று ஒதுக்குகிறார்களா? கூட்டுறவு மில்கள் உற்பத்தி செய்யக்கூடிய பேல்கள் அந்தக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லையானால், கூட்டுறவு மில்கள் உற்பத்தி செய்யும் பேல்களை நாமே எடுத்துக்கொள்ள முடியுமே? அதுபற்றிய நிலைமை என்ன, நடைமுறையில் இருக்கக்கூடிய நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நூல் விநியோகத்தைப் பற்றிச் சட்டபூர்வமாக எந்த விதமான திட்டமும் கிடையாது. இங்கே தான் தகராறு ஏற்படுகிறது. 'வாலன்டரி ஸ்கீம்', ஆலைகளாகப் பார்த்து, டெக்ஸ்டைல் கமிஷனரிடத்தில் ஒப்படைப்பதிலே நமக்கு வருகின்ற பங்கு. இந்த முறையைப் பின்பற்றுகிறார்கள்; ஆகவே நமக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. நம்முடைய கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்த அளவுக்கு, அரசாங்கம் எடுத்து நடத்துகின்ற ஆலைகளிலேயிருந்து 4,000 பேல்ஸ் மாதம் ஒன்றுக்கு, மின் வெட்டுக்கு முன்னாலே கிடைத்தது. அதற்குப் பின்னாலே 800, 800 ஆகக் குறைந்திருக்கிறது. இதை நாம், நம்முடைய கையிலே இருக்கின்ற காரணத்தால், நம்முடைய விருப்பம் போல் கொடுக்கலாம். ஆகவே இந்த ஆலைகளிலேயிருந்து கூட்டுறவு நெசவாளர்களுக்கு நாம் நியாயமான விலைக்குக் கொடுத்து வருகிறோம். இந்த முறையிலே சிக்கல் இல்லை. உற்பத்தி குறைந்த காரணத்தால் அவர்களுக்குச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டுறவுக்கு அப்பாற்பட்டவர்களுக்குத் தான் சிரமம், இந்தக் கஷ்டம் நீடித்துக்கொண்டு வருகிறது. அவர்களுக்கு நாம் தனியார் ஆலையிலிருந்து முழுவதும் வாங்கிக் கொடுப்பதற்கு

நமக்கு அதிகாரம் கிடையாது. இதுதான் அவர்கள் 'வாலண்டரி ஸ்கீம்' ஆகக் கொடுப்பது என்று சொன்னேன். சென்ற மாதம் 1,928 பேல்ஸ் ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய தேவை 20 ஆயிரம் பேல்ஸ். இந்த 1,928 பேல்ஸ், இதை எழுத்திலே காகிதத்திலே ஒதுக்கிவிடுகிறார்கள். அதை நாமும் காகிதத்திலே இன்னா இன்னாருக்கு இவ்வளவு என்று எழுதிக் கொடுக்கிறோம். அவர்கள் ஆலைக்குச் செல்லும்போது, இல்லையென்று சொல்லி விட்டால், அதைத் தட்டிக் கேட்பதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது. மத்திய சர்க்காருக்கு இருக்கிற அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தமாட்டேன் என்கிறார்கள். அது தான் இப்போதுள்ள குறை. ஆகவே தான், நம்முடைய அரசாங்கத்தின் சார்பில், இப்போது அல்ல, மின் தட்டுப்பாட்டை அடுத்து உற்பத்திக் குறைவு ஏற்படுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னாலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், திட்டவட்டமான ஒரு கருத்தை நம்முடைய பிரதமருக்குத் தெரிவித்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. வருத்தப்படுகிறோம். மேலும் எங்கள் தலையிலேயே குட்டுவதுபோல், நாங்கள் கொடுத்ததைச் சரியாக விநியோகிக்கவில்லை என்ற ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நாம் வருத்தப்படுகிறோம். என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும்; அவர்கள் சொன்னது போல், நமக்கு வேண்டியது நூல். நமக்கு மாதத்திற்கு அவர்கள் 10 ஆயிரம் பேல்ஸ் கொடுத்து விட்டால், இந்த 3 மாதத்திற்கும் நம்முடைய கைத்தறியாளர்களுக்கு சுமுகமான நூல் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கலாம் என்பது தான் நம்முடைய அரசின் கருத்து. அந்த அடிப்படையில் தான் இந்தத் தீர்மானம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"தமிழகத்தில் 5 லட்சம் தறிகளும், அதை நம்பி 20 லட்சம் பேர்கள் வாழ்கிறார்கள். ஆகவே நமது மாநிலத்திற்குத் தேவையான 20 ஆயிரம் பேல் சிட் நூல் 'ஹாங்யான்'-ம் 35 ஆயிரம் பேல் 'கோன்யான்'-ம் மத்திய அரசு உடனடியாக தமிழகத்திற்குத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



## 6. 1973–74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. காட்டூர் கோபால்:** தலைவர் அவர்களே, தொழிற் துறையில், மத்திய அரசினர் 1972–73 ஆம் ஆண்டுக்கு 686 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த நடப்பு ஆண்டுக்காக தமிழ் நாட்டில் ஒதுக்கியிருப்பது 20 கோடி ரூபாய் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழகத்தை மத்திய அரசினர் வஞ்சிக்கிற வகையில் காட்டுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும், மணலியில் பெட்ரோ கெமிக்கல் ஆலையும், பாலீஸ்டர் சுருள் தொழிற்சாலையும், 20 ஆண்டுக் காலமாகக் கேட்டு வருகின்ற சேது சமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசினர் உடனே ஒப்புதல் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற் துறையைப்பற்றிச் சொல்லுகிறபோது, கோவை மாவட்டத்தில் 170 இஞ்சினியரிங் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மோட்டார் பம்ப்செட்கள் தயாரிக்கும் அந்தத் தொழிற்சாலைகளில் இஞ்சினியரிங் தொழிலில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக அரசின் நிர்வாகப் பொறுப்பும் கலந்திருக்கின்ற டெக்ஸ்டூல் தொழிற் சாலையிலும் பல்லாயிரக்கணக்கான பேர் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பாதுகாப்புக்கான சாதனங்கள் செய்கின்ற வசதிகளும் இருக்கின்றன, வாய்ப்பும் இருக்கிறது. எனவே மத்திய அரசினர் தொழில் துறைகளைத் துவக்குவதற்கும் தமிழ் நாடு தான் ஏற்றது, உகந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இருக்கிற வெடி மருந்துத் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, அதே போல் ஆவடியில் இருக்கிற இராணுவ உடை தயாரிப்புத் தொழிற்சாலை, டாங்கித் தொழிற்சாலை இவைகளில், மற்ற மாநிலங்களில் இருக்கிற நிலைமைகளை விட பரவாயில்லை என்று பாராட்டுகிற வகையில் நல்ல முறையிலே தொழில் அமைதியும் இருக்கிற காரணத்தாலே, மத்திய அரசினர் இந்த ஆண்டிலேயாவது புதிய தொழிற்சாலைகளை, அதிலும் பாதுகாப்புச் சாதனங்கள் உருவாக்குகிற தொழிற்சாலையை, இந்த மாநிலத்திற்கு நிறைய ஒதுக்க ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, கோயம்புத்தூரில் இருக்கிற டெக்ஸ்டைல் தொழிலாளர்கள் தேர்ச்சி பெற்றவர்கள், ஜீப் கார்கள் தயாரிக்கின்ற தகுதி பெற்றவர்கள். ஆகவே அத்தகைய தொழிற்சாலைகளையெல்லாம் இந்தப் பகுதிக்கு ஒதுக்குவதே சரி என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று முன்பெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வந்ததைக் குறிப்பிட்டு, அவர்கள் இப்போதும் அப்படியே இருக்கிறது, அதற்கு மாற்றுப் பரிகாரம் தேவை என்கிற வகையில் தெரிவித்தார்கள். வடக்கு வாழ்வதையும், தெற்கு தேய்வதையும், இப்போதிருக்கின்ற தொழிற் துறையில் மத்திய அரசு காட்டுகிற கவனத்தை மட்டுமல்ல, முன்னாலே பல்வேறு வகைகளிலே குறிப்பிட்டுக் காட்டியபடி இங்கே ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டைப் பார்க்கும்போது, தராத அதிகாரங்களைப் பார்க்கும்போது, இதற்கு எல்லாம் ஒரே வழி இந்த மாநிலம் அதிகமான அதிகாரங்களைப் பெறுவதுதான். மாநில சுயாட்சி அடைந்தே தீர வேண்டும், இது தான் ஒரே மார்க்கம் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்தும் நாம் நன்றாக அறிகிறோம். மாநில அரசுத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதற்கு பணமே இல்லையென்றாலும், 6 கோடி ரூபாய் தருகின்ற திட்டத்தை கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? பணம் இல்லாவிட்டாலும், நல்ல மனம் இருக்கிறது. பணம் ஏன் இல்லாமல் போகிறது? ஒதுக்க வேண்டியவர்கள் ஒதுக்குவதில்லை. கவர்னர் உரையில் கூட நான் பேசும்போது தெரிவித்தேன். மத்திய அரசுத் தொழிலாளர்களுக்கும் மாநில அரசுத் தொழிலாளர்களுக்கும் ஊதிய வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசத்தை நிவர்த்தி செய்ய வேண்டும், இதற்கு மத்திய அரசினர் மானியம் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஊதியக் குழு வருகின்ற சந்தர்ப்பம் ஆகிவிட்ட காரணத்தால் தான், நான் இதை வலியுறுத்துகிறேன். இந்த மானியத்தை மத்திய அரசு தந்தாக வேண்டும். இந்த அரசுக்கு இருக்கிற அணுகு முறை, தொழிலாளர்களுக்கு அள்ளித் தருகிற நல்ல முறை, அதைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசினர் தேவையான ஒதுக்கீடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது தன்னுடைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்கிற குழு அமைக்க வேண்டுமென்று டில்லியில் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். அங்கேயிருக்கிற மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு. ரகுநாத ரெட்டி அவர்கள் பதில் சொல்லும்போது, இவைகள் எல்லாம் மாநில அரசு செய்ய வேண்டிய காரியங்கள், மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு யோசனைகள் சொல்ல முடியுமே தவிர, வேறு என்ன செய்ய முடியும் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், பல்வேறு காரியங்களை மத்திய அரசு தான் செய்ய முடியும் என்று நாம் சொல்லுகிறபோது, நம்முடைய பொறுப்புக்களை ஏதோ தட்டிக் கழிப்பது போல் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சில நேரங்களில் குறிப்பிடுகிறார்கள்; அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். பணம் குவிகிறது அங்கே, அவர்கள் நமக்குத் தர வேண்டும். அவர்களிடமிருந்து வாங்கிச் செலவு செய்கிற மாநில அரசு வேண்டுமானால், இவைகள் எல்லாம் மத்திய அரசின் அதிகாரம், அங்கே இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் டில்லியில் இருக்கின்ற மாநில தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அந்தப் பதிலைச் சொல்கிறபோது, நன்றாக இன்னொரு மாதிரி பதில் சொல்லியிருக்கலாம். என்ன சொல்லியிருக்கலாம்? இது மாநில அரசுப் பணி தான். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சிக்கல் இருந்தாலும் கூட, இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒரு வரி சேர்த்துக் கூடச் சொல்லியிருக்கலாம். தமிழ் நாட்டில் இருக்கிற கலைஞர் அரசு, கழக அரசு, இதைச் செய்திருக்கிறது என்று சேர்த்துக் சொல்லியிருக்கலாம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, I must congratulate the Government on two things, the first on having a no-tax Budget this year, and the second on the wise decision they have arrived at on the teachers' issue. Sir, it was only the day before yesterday, after the announcement was made in this House, that the office-bearers of the Teachers' Union came to my house and met me in this connection and listed out their demands, which, they said, were engaging the attention of the Government. It appeared to me, Sir, that they were a lot who would never wish to

embarrass the Government in any manner but who were legitimately concerned with their demands which, they thought, the Government would amicably settle to their satisfaction. In this context, Sir, I thought I could address this House mainly on their demands. But, today, I was happy to know when I came to the House that the Hon. the Education Minister himself had gone through the matter very carefully and had decided to absorb all teachers who had been taken in service temporarily from 1st April 1970. He has also announced on the floor of this House his decision to the above effect and also that the teachers would automatically be getting the Selection Grade after 10 years of service. Though my hon. Friend Thiru Rajah Iyer has thanked the Government on behalf of the Members of this House, I take this opportunity to thank the Government wholeheartedly on behalf of my constituency which consists of teachers also.

Sir, there is also one other matter pertaining to teachers which has been engaging the attention of the Government and which I raised in the form of a question and for which the Hon. the Education Minister has also given a satisfactory reply. That is about the integration of 'A' Wing and 'B' Wing. The Hon. the Education Minister, in reply to the supplementary question I put to him yesterday, said that the Government were seriously considering the integration of the two wings into one Educational Service and that the Government, in close association with the Members of this House as well as the teachers' representatives outside, would evolve a satisfactory solution to this problem as well. I do hope, Sir, that this would also be solved in a satisfactory manner and I can assure the Government that the teachers who are instilling discipline in the minds of the students will not venture or embark on any agitation if the Government considered their demands in the spirit in which the Hon. the Chief Minister expressed himself in his Budget Speech to the other House.

Sir, I was thinking of this passage in paragraph 30: "Anyone can easily make promises, rare is he who matches his deeds to his words". This the Chief Minister has quoted from the Kural. He has also quoted another passage from the Kural which says, "the whole world gathers under the umbrella of that Ruler who bears patiently when words bitter to his ear are flung at him." I am very happy that this Government have lived up to the reputation of matching their deeds with words. I heartily congratulate





the Government on behalf of the teachers as well as the Members of this House on the wise step they have embarked on in solving this problem over which the teachers are very much worried about.

Sir, the next thing I have to say is about the no-tax Budget. No doubt, the removal of prohibition and the nationalisation of bus services have thrown into the hands of the Government large revenues and probably this is the reason why we are enjoying a no-tax Budget. I hope that the Government will get adequate revenue from the new nationalised bus transport and that they will have enough money not only to run those buses efficiently but also to run the Government efficiently in other aspects using the funds from the nationalised bus services for maintaining and keeping up the roads in a better condition than before in this State.

Sir, in this connection, I would like to say that the bus transport which has become a part of the Government work now will have to get the serious attention of the Minister—I do not see the Transport Minister here—but I hope he will give his serious attention to the problem of improving the efficiency of the bus transport, introducing a bus service which is not overcrowded but which is available in large numbers during the peak hours, so that no citizen is put to the undue hardship of having to wait endlessly at the bus stops.

MR. CHAIRMAN: There is no question of over-crowding in the City buses which can have only 25 standing passengers.

THIRU G. VASANTHA PAI: Sir, I am referring to this because I see people travelling in the foot-boards of buses.

Sir, the next thing I have to refer to is the power-cut. There is a lot of correspondence which appears in the Press that even at the time of the Regional Conference electricity and other allied matters had been engaging the attention of the State Governments, and the development of Thermal Stations as against the Hydro Electric Schemes had been emphasised. I find from the Budget speech that this Government have taken up the matter with the Central Government, and I think the attention of the Government will be engaged in the development of the thermal stations. I request the Government to see that at least 75 per cent of the power needs of the industries in the State are met by the thermal stations, so that the vagaries of monsoon do not affect them. It is heartening to note that the Government are taking over the private Electricity

[Thiru G. Vasantha Pai] [1973 மார்ச் 3

undertakings, and I hope that with the nationalisation of these undertakings as well as the getting of additional power from Neyveli and from the Atomic Power centres in Tuticorin as well as Kalpakkam and also from Ennore, we would be able to solve this problem.

But, Sir, what worries me is this. The Government have now directed their attention to the Moyar River project which threatens the wild life sanctuary at the foot thereof, by trying to take away the forests which are harbouring the wild animals in the sanctuary. Sir, we should not kill the goose that lays the golden egg. The Mudumalai Wild Life Sanctuary is a centre of attraction for all tourists and we get a fair amount of foreign exchange from such tourists coming to this part of the State. We should not embark on a scheme by which the forests near the Moyar River will be destroyed and the Wild Life Sanctuary will be blotted out of existence. Therefore, I earnestly request the Government to give up the Moyar River scheme, because it is a hydro-electric scheme and after all, it is going to meet only the fractional needs of electric power in this State.

Then, the other matter which I wish to refer to is that I find in the newspapers everyday requests made by the Tamil Nadu Electricity Board asking us to consume less and less of electricity. I myself have put an embargo on my use of electricity. I have confined myself now to the use of only two fans out of seven. I have only one air-conditioner even which I am not using except during the hottest part of the day. I have given up using one Frigidaire. I am trying to live up to the demand of the Government and I can assure the House that from my usual consumption of 245 units per month I have reduced the same to about 120 to 150 units. In this context, I would like to say one thing. During the last month when I was going back from this House, I found the house of a Minister flood-lit with lights and the symbol of " Udhava Sooriyan ", for which religiously I have got a great regard and respect, decorated in a blaze of electric lights. Sir, I immediately thought that the electricity cut was off the road and I congratulated myself. But, later, I heard that the Minister was just celebrating a birthday. In these circumstances, I think, anounce of practice is worth more than a ton of precept. I think the Ministers should infuse confidence in the public by not celebrating birthdays in the night so that the consumption of electricity on that account could be avoided. They could as well celebrate such things during the day rather than in the evenings.



1973 மார்ச் 3] [Thiru G. Vasantha Pai]

MR. CHAIRMAN : I shall celebrate my next birthday only during the day-time.

THIRU G. VASANTHA PAI : Thank you, Sir.

Then, the other matter which I wish to refer to is the acquisition of 93 acres of land of the Theosophical Society. Sir, I feel that the Theosophical Society is an international organisation and this international organisation has attracted great persons, educationists and scholars right from the days of Dr. Annie Besant down to this day and has been virtually a store-house of wisdom, inasmuch as the ancient manuscripts are found there. Sir, I found in the recent book by Howard Murphat on 'Sai Baba', the Miracle Man, that the author had expressed gratitude, and his indebtedness to the Theosophical Society and the Library housed in that building. I would like to say that the Government's move to requisition any portion of that Estate should not really be implemented and if any land is requisitioned, that should be handed over to the Theosophical Society, because it is an International Organisation which has contributed a lot to world peace, as well as peace-loving countries in the world. In this connection, I would like to say that besides the Theosophical Society holding international reputation, its shady groves are also a lung in the heart of the City of Madras. Many people are allowed to visit the Theosophical Society between 8-30 a.m. and 10-30 a.m. and from 2 p.m. to 4 p.m. and it is open to the public. Many people go there to enjoy the shade of the biggest banyan tree that had ever grown in this country and also relax under the shades of the trees. Closely allied to this are the number of encroachments that have been made in the Government Estate at Guindy. It should also be stopped. I think the Hon. Ministers who have gone abroad will know that in the heart of Washington, there is a big forest called the Rock Creek with an extent of 40 miles of roads in it and similarly in Dallas, where Kennedy was assassinated, there exists a big forest called the turth creek and a white rock later which is twice the size of Kodaikanal with a road encircling it. These are in the hearts of the cities with teeming population and big buildings. There are more open spaces to give relaxation and afford recreation to the inhabitants. The gradual acquisition of the Theosophical Society Estate and the gradual encroachment on our Government

Estate at Guindy will deprive us of these lungs which are in the heart of the City. The Hon. the Minister for Tourism, the Hon. the Chief Minister as well as the Hon. the Minister for Education and the Industries Minister may put all their heads together and see that the City expands lengthwise and breadthwise rather than by eating up our lung space in the City while resorting to schemes of urbanisation. With these words, I would like to conclude my speech with the hope that this Government, which has many in its fold with aesthetic tastes will take my suggestions and try to implement as much as they could.

*திரு. எ. எம். நாகூர் அனிபா : மரியாதைக்குரிய தலைவர் அவர்களே, 1973-74 ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை ஏழைகளின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் ஒரு சமதர்ம பட்ஜெட்டாகும். கடுமையான பொருளாதாரச் சிக்கல் நாட்டில் நிலவினாலும் புதிய வரிகள் எதுவும் இல்லாமல், புனிதமான சோஷலிஸத் திட்டங்களை நிறைவேற்ற புரட்சிகரமான அறிவிப்புகளைத் தாங்கி வந்துள்ளது.

இந்த மாநிலத்தில் வறட்சியும் அடுத்து வெள்ளச் சேதமும் ஏற்பட்டாலும், அந்த இயற்கை சோதனைகளைக் கடந்து பொலிவு மிக்க நாடாகவும், வலிமை மிக்க சமுதாயமாகவும் தமிழகம் கலைஞரால் உருவாக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக விவசாயத் துறையில் நம்முடைய அரசு எடுத்துள்ள தீவிர நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக உள்ளன. உணவுத் தானிய விளைச்சலில் நாம் தன்னிறைவு பெற்ற வெற்றிச் செய்தியால் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கிறது.

[மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை]

பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைத்துத் தந்த இந்த அரசைக் கட்டிக் காப்பதிலும் அவர் வழி நடந்து செல்வதிலும் கலைஞர் காட்டும் ஆர்வமும் திறமையும் நம்மை மெய் சிலிர்க்கச் செய்கிறது. சாதாரணமானவர்கள், சாமான்யமானவர்கள் என்று கருதப்படும் நாம் எவ்வளவு மகத்தான காரியத்தைச் செய்து முடிக்கிறோம் என்ற மனநிறைவுதான் இந்த நிதி நிலை அறிக்கையைப் படித்தவுடன் நமக்கு உண்டாகிறது. இந்தச் சாதனைகளை விளக்கும் முறையிலே ஒரு கவிதையைப் பாடி என் உரையை முடிக்கலாமென்று கருதுகின்றேன். பேசுவதற்கு அதிக





மாக இருக்கிறார்கள். இசை பாடுவதற்கு இருவர் இருந்தோம். ஒருவரை (டி. கே. ஷண்முகத்தை) இழந்து விட்டோம் இப்போது. பாடும் நான் மட்டும் இருக்கின்றேன். எனவே அவருடைய ஞாபகார்த்தமாக இப்போது நான் பாடுகின்றேன்.

(அங்கத்தினர் இராகத்தோடு கீழ்க்கண்ட கவிதையைப் பாடினார்.)

"மாட்சிக்கு தமிழரசு மலர்ந்த பின்னே,
மாநிலத்தில் சாதனைகள் மிகுந்த தம்மா!

ஆட்சிமொழி தமிழ், அனைத்தும் தமிழே ஆக
அரியதொரு வரலாறு காணு கின்றோம்:

அரிசிவகை பெருகிடவே குவியும் வண்ணம்
அரும்பசுமைப் புரட்சியினை நாமே செய்தோம்!

பரிசெனவே புன்செய்க்கும், நன்செய்க்கும் என்னில்
பதினாறு மாவுக்கும் வரிவி லக்காம்!

வரிசையுடன் விவசாயத் தொழிலா ளர்க்கு
வாகான வீட்டுமனை நிலப்பட் டாக்கள்

சரிசமமாய் வழங்கியவை ஆறு லட்சம்;
சரித்திரத்தில் ஐந்தாண்டில் இவைப்போல் உண்டோ?

காடான மேடான நிலப்ப ரப்பைக்
கணக்கின்றிப் பிணைத்தஉச்ச வரம்பு தன்னைக்

கோடாமல் ஆராய்ந்த இந்த ஆட்சி;
கொடுமைதனை விலக்கியதே பெரும்புரட்சி;

மூடாமல் ஆலைகளை இயக்கு தற்கு
முனைகின்ற முயற்சியெலாம் கொஞ்சந் தானோ?

வாடாமல் தொழிலாளி மக்கள் வாழ
வாரியள்ளிக் கொடுத்தோமே எட்டு லட்சம்;

[திரு. ஈ. எம். நாகூர் அனிபா] [1973 மார்ச் 3

தாய்ப்பாச உணர்வோடும் மாநிலத்தைத்
 தமிழ்நாடென் றழைக்கின்றோம்; தியாகி கட்கும்
காப்பாக நிதிவசதி உதவு கின்றோம்;
 களைத்திருந்த ஊழியர்க்குச் செவியைச் சாய்த்தே
மூப்பான இரகசியக் குறிப்பொ ழித்தோம்.
 முகிழ்த்திட்ட மகிழ்ச்சிவெள்ளம் அடங்கு முன்னே
கோப்பாக முப்பத்து நான்கு கோடி
 கூடுதலாய் ஊதியத்திற் கொடுத்தோம் அன்றோ?

அறங்காவல் பொறுப்பினிலே அரிச னங்கள்
 அர்ச்சகராய்ப் பதவிபெறச் சட்டம் செய்தோம்,
உறங்காதெத் தடைந்தோரும் பொருளொ டாக்கி
 உள்நுழையாத் துறையினிலும் இவர்முன் னேறப்
புறங்காணும் குறியீட்டை உயர்த்த லானோம்;
 புதுப்புதிதாய்த் தொழிற்பயிற்சி நிலையம் வைத்தோம்;
திறங்காணும் தேர்வுதனை எழுது தற்கே
 தேவையுள்ள தனிப்பயிற்சி வகுப்புத் தந்தோம்!

மாணவர்கள் விடுதிபல ஏற்ப டுத்தி
 வான்புகழுக் 'காந்திஜி' வழங்கு கின்றோம்,
மோனையெனப் புகுமுகத்தில் முன்நிற் போர்க்கு
 முழுநூறு [illegible] தருகின் றோமே
கேணிதனைத் தோண்ட, உழும் மாடு வாங்கக்
 கிடைக்கின்ற தொகை, உதவி யாவும் யாரால்?
ஏணியென நிமிர்ந்துநிற்கும் மாடி வீட்டில்
 இடங்கிடைக்கும் என்றவரே நினைத்த துண்டா?

பிற்பட்டோர் நலங்காணத் தனியமைச்சும்
 பிறபயனும் விரைந்தெய்தக் குழுவ மைத்தோம்.
முன்பட்டே தொழில் துறையின் மேன்மை ஓங்க
 முனைப்புடனே வட்டியிலாக் கடன ளித்தோம்;



1973 மார்ச் 3] [திரு. ஈ. எம். நாகூர் அனிபா]

அற்புதமாய் முடிதிருத்து வோரும், ஆடை
 அழுக்கெடுப்போர் தாமும்கைக் கருவி பெற்றார்!
சொற்பமெனக் கருதாமல் மாணவர்தாம்
 சுழற்கடலில் படகோட்ட வழிவ குத்தோம்.

வருவாயில் மூன்றிலொரு பாகம் கல்வி
 வளர்வதற்கே செலவழிக்கும் நிலைமை இன்று;
பெருவாரி யானவர்கள் கற்கு மாறு
 பெருகிவளர் புகுமுகமும் இலவ சந்தான்!
திருவாழும் கோவில்கள் ஏழு கோடி
 திரட்டுகின்ற சூழலுடன் வழிபாட் டிற்கோ
உருவான நறுந்தமிழாம்; பிணிய கற்றும்
 உயர்வான மருந்தகமாம் அருமை அன்றோ?

குடிசைகளைக் கோபுரம் போல் மாற்று கின்றோம்
குடிநீரும் வடிகாலும் கொண்டு வந்தோம்
படிப்பதற்கே இருமொழிகள் போதும் என்றோம்
பார்வை தரும் கண்முகாம்கள் நடாத்துகின்றோம்
துடிக்கின்ற தொழுநோயர் மறுவாழ் வில்லம்
சுவையான சத்துணவுத் திட்டம் கண்டோம்
படித்தவர்க்காம் இளைஞரணி யோடுஇ மெத்தப்
பயனுள்ள சேரணியும் சிறக்கச் செய்தோம்.

கோச்சோழன் கண்டமனு நீதித் திட்டம்
குக்கிராமம் வரையிந்நாள் குடியே றிற்றே:
ஆச்சரியப் படுமாறு சிற்றூர் எல்லாம்
அண்மை வரும் பேரிணைப்புச் சாலை யாலே
மூச்சடக்கி மூழ்கியருஞ் சங்கெ டுப்போர்
முதன் முதலாய் முழுவுரிமை பெற்ற தெங்கே?
சீச்சியென் றொதுக்காமல் தோளி ணைக்கும்
சீர்திருத்த மணச்சட்டம் வந்த திங்கே

[திரு. ஈ. எம். நாகூர் அனிபா] [1973 மார்ச் 3

பெருந்தை நாட்டுடைமை ஆக்குகின்றோம்,
பேணிடுமா நிலத்திட்டக் குழுவமைத்தோம்,
சிறுந்து விடாதவட்டிக் கடனால் தேய்ந்து
தென்பிழந்தோர் வலிவுறவே உரமுந் தந்தோம்,
யாருந்தம் பண்ணையாளை வெளியேற்றாமல்
ஏற்பாடு, கூலிக்குச் சட்டம் போட்டோம்.
ஊரெங்கும் சுற்றுலாவை நாடுவோர்க்கும்
உதவுமொரு வாரியமும் புதிதாய்க் கண்டோம்.

ஆசிரியர், பொறியாளர் வேலை வாய்ப்பும்
அரக்கோணம் சேலமிரும் பாலையோடு
பேசுந்தூத் துக்குடியில் பெரிய திட்டம்
பிணியகற்றக் கூவஞ்சீரமைப்பும், அன்று
விசுபுகழ்ச் சதுக்கமங்கே நீச்சல் வாவி,
வெற்றி பெற்ற குடும்பநல முனைப்பியக்கம்,
நாசியின் மேல் விரல்வைத்து வியக்குமாறு
நாடுவாழ நல்லனவே தொடர்வோம், வாழ்வோம்.

மாட்சிமிகு தமிழரசு மலர்ந்த பின்னே
மாநிலத்தில் சாதனைகள் மிகுந்ததம்மா,
ஆட்சிமொழி தமிழ் அனைத்தும் தமிழே ஆக
அரியதொரு வரலாறு காணுகின்றோம்.

இத்தோடு டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கிய இந்த உபரி பட்ஜெட்டை வரவேற்று அமர்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இப்படி மதிப்பிற்குரிய மேலவை அங்கத்தினர் அவர்கள் இப்படி பாடி மேலவையையே உறங்க வைக்கக் கூடிய நிலையை உருவாக்குவதற்கு இந்த அவையின் சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நாடாளுமன்றத்தில் கமலா சட்டோபாத்யாயா அவர்கள் இருக்கும்போது இப்படிப்பட்ட கவிதைகளை ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் பாடி எங்களையெல்லாம்



1973 மார்ச் 3] [திரு. க. இராசாராம்]

மகிழ்வித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு புதிய சமுதாயத்தை இங்கே உருவாக்கியதற்காக சபை அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : பேசலாம் என்று தான் விதி இருக்கிறது. சபையில் கொஞ்சம் சுவையாக இருக்கட்டுமே என்பதற்காக பாட அனுமதித்தேன். ஆனால் சொன்ன வார்த்தைகளையே திருப்பித்திருப்பிச் சொல்லி நேரத்தை எடுக்கவேண்டாம். ஒரு முறை சொன்னால் போதும்.

* திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் : மதிப்புக்
குரிய துணைத் தலைவர் அவர்களே 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-
செலவுத் திட்டத்தின் பேரில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். முதலாவதாக விவசாயத்தைப்பற்றி என்னுடைய
கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு
நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறை காரணமாக
விவசாயத்துக்குப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை
எல்லோரும் உணர்வார்கள். வேறு சில தொழில்களைப் போன்று
விவசாயத்தையும் செய்ய முடியாது என்பதையும் எல்லோரும்
உணர்வார்கள். வேறு ஏதாவது தொழிற்சாலையோ, வேறு இதர
அலுவல்களோ மின்சாரத்தால் பாதிக்கப்பட்டால், ஒரு மாதம்
இரண்டு மாதம் கழித்துக் கூட அவைகளைச் சரி செய்து
கொள்ளலாம். ஆனால் விவசாயம் அப்படியில்லை, விவசாயத்தில்
தன்னுடைய நிலத்தில் விதைகளை விதைத்து, களை எடுத்து பயிர்
சிறந்து வருகிற நேரத்தில் மின்சாரத்தால் தண்ணீர் இல்லை என்று
சொன்னால் எல்லாமே அழிந்துவிடுகிற நிலையிருக்கிறது.
இன்றைக்கு இப்படி மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுவதற்கு
என்ன காரணம் என்பதை இங்கேயுள்ள பெரியவர்களெல்லாம்
சொன்னார்கள். அதிலே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். இன்றைக்கு நாட்டில் மின்சாரத்திற்காக எல்லோருமே
போராட்டம் நடத்துகிறார்கள். நம்முடைய மாநில அரசு இந்த
மின்சாரப் பற்றாக்குறைக்கு ஒரு அளவு மத்திய அரசு காரண
மென்று சொல்கிறது. ஆனால் மத்தியில் ஆளுகிறவர்கள் இங்கே
மின்சாரத் தட்டுப்பாட்டைப்பற்றி மாநில அரசைக் குறை
சொல்கிறார்கள். இதிலே நான் சொல்வதெல்லாம், யார் காரணமோ
மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு ; ஆனால் அதிலே அவதிப்
படுகிறவர்கள் மக்கள் என்பதை நினைத்துச் செயல்பட வேண்டும்

என்று சொல்லிக் கொள்கிறேன். இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன், மேட்டூரிலே மின்சார உற்பத்தி குறைவு என்று. ஆனால், நேற்றைய தினம் என்று கருதுகிறேன் பேப்பரிலே பார்த்தேன், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக ஊர் ஊராகச் சுற்றி மக்களின் ஆதரவைத் திரட்ட வேண்டுமென்றிருக்கிறார்கள் என்று. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், நாட்டில் இப்படி எந்த விஷயம் வந்தாலும், மக்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி இருந்தாலும் சரி, ஏதோ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதை வைத்து அரசியல் லாபம் தேட வேண்டாமென்று சொல்லிக் கொள்கிறேன். எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் கூட நூல் பற்றாக்குறை பற்றிச் சொன்னார்கள். எது எப்படி இருந்தாலும் சரி, தொழிலாளிக்கு வேலை இருக்க வேண்டும், மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும், ஒன்றுபட வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத்தைப்பற்றி மற்றொரு வார்த்தை நம் முதல்வர் அவர்கள் நமக்குத் தேவையான உரம் 1972-73-ல் 2.74 லட்சம் டன், ஆனால் மத்திய அரசு நமக்கு ஒதுக்கீடு செய்தது 1.30 லட்சம் டன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சார உற்பத்திக்குத் தேவையானதைத் தருவதில்லை, விவசாயத்துக்கு உரம் தேவையென்று சொன்னால், கொடுப்பதில்லை. இப்படியே நடந்துகொண்டு போனால், நம்முடைய தமிழ் நாட்டுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை யோசிக்கவேண்டும்.

உரத் தட்டுப்பாடு ஏன் என்பதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். உரத் தட்டுப்பாடு என்பது வறுமையாக இருப்பதாக எங்கள் பகுதியில் எல்லாம் தோன்றவில்லை. 56, 57 ரூபாய்க்குக் கிடைக்கக் கூடியதெல்லாம் 80, 82 ரூபாய்க்கு எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டுமென்றும், இந்த விநியோகத்தில் என்ன கோளாறு இருக்கிறது என்பதைப் பார்த்து, இந்த விநியோகம் சரியாக நடக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.





வேளாண்மைக்கு இருக்கிற மின்சாரப் பற்றாக்குறையை 'இழப்பு' என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து வருத்தப்படுகிறேன். எத்தனையோ திட்டத்துக்காக செலவு செய்கிறோம். ஆனால் முதலமைச்சர் அவர்கள் படிக்கிறபோது, அந்த ஒரு வார்த்தை மாத்திரம் 'இழப்பு' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன காரணமாக அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மின்சாரத்தைக் கொடுக்கிறபோது, அதில் நஷ்டம் வரலாம், லாபம் வரலாம். ஆனால் அரசு என்பது லாபத்துக்காகச் செயல்படுகிற ஒரு அமைப்பல்ல. மக்களுக்காக இருக்கிற ஒரு அமைப்பு. லாபம் பெற வேண்டுமென்று இருப்பதல்ல. ஆகவே இப்படி 'இழப்பு' என்ற வார்த்தையை உபயோகிக்காமலிருந்தால், நலமாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நெசவாளர் பிரச்சினையைப்பற்றி தொழிலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் ஓரளவுக்குத் தொடர்பு கொண்டவன் என்பதால், அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்காக நூல் ஒதுக்கப்படுகிறது. இதர பகுதியில் எப்படி இருக்கிறதோ, அது எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் பகுதியில் நெசவாளர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற்பு ஆலையில் உற்பத்தியாகும் நூல் அனைத்தையுமே நெசவாளர் சங்கத்துக்காக விநியோகிப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையிலே வாங்குகிறவர்களுக்குக் கூட இப்போது எங்கள் பகுதியில் இருக்கிற சங்கங்களுக்கு இந்த நூல் போதுமானதாக இல்லை. தற்போது கிட்டத்தட்ட எல்லா சங்கங்களுமே விசைத் தறிகளை ஏற்படுத்தியிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் 15, 20 விசைத் தறிகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவ்வாறு விசைத் தறிகளை ஏற்படுத்தியதால் அதிகமான நூல் தேவைப்படுகிறது. அந்த நூலை அவர்கள் சரியான முறையில் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆகவே இப்போது போட்ட தீர்மானங்களின்படியோ அல்லது வேறு எந்தவிதமாகவோ, நீண்ட நாள் காலம் கடத்தாமல், மாநிலத்திலே சென்று பெற வேண்டியோ, அமைச்சர் அவர்கள் நேரடியாக கூட்டுறவுத் துறையின் முயற்சியிலே நெசவாளர்கள் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதிலே அரசு அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டுகோள்

[திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர்] [1973 மார்ச் 3

விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய கோரிக்கையை உடனடியாகப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், நெச வாளர்கள் போராட்டங்களிலே ஈடுபட்டு, இன்று சிறையில் இருக்கும் நண்பர்களை எல்லாம் விடுவிக்க அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி வளர்ச்சியைப்பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டிலேயும் அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கிராமப்புறங்களிலே பஞ்சாயத்து யூனியனோ அல்லது பஞ்சாயத்துகளோ அமைத்த ரோடுகள் சரியான முறையிலே இல்லை. ஒரு தடவை அதற்கு மெட்டல் ரோடு போட்டுவிட்டால் இரண்டாவது தடவை அதற்கு பஞ்சாயத்து யூனியனிலே மானியம் கொடுக்க முடியாது என்று சொல்லப்பட்டு வருகிறது. ஒரு தடவை போட்ட ரோடுகள் எத்தனை ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த நிலையில் பார்க்கும்போது, பல பஞ்சாயத்து யூனியன்களிலே போட்ட ரோடுகள் மிகவும் பழுதான நிலையில் இருக்கின்றன. அவைகளைப் பழுது பார்ப்பதற்கான ஏற்பாடுகள் எதையும் காணோம். பஞ்சாயத்துகளே அதைச் செப்பனிடலாம் என்று சொன்னால், பஞ்சாயத்துகளிலே ஓரளவு வருமானமுள்ள பஞ்சாயத்துகள் எல்லாம் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டுவிட்டன. அந்தக் காரணத்தால் அரசு அவைகளுக்கு அளித்து வந்த மானியம் நிறுத்தப்பட்டுவிடுகிறது. அதைத் தவிர அங்கே இருக்கிற ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரித்துக் கொண்டு போகின்றன. இவைகளையெல்லாம் பார்த்தால், பெரும் பாலான பஞ்சாயத்துகளிலே நிதி வசதியே இல்லை என்றுகூடச் சொல்லலாம். அந்த வகையிலே பார்க்கும்போது, கிராமப்புற சாலைகளெல்லாம் மிகப் பழுதடைந்து உள்ளன. அவைகளுக்கு நிதி ஒதுக்குவதிலே உடனடியாக அரசு போதிய கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், கிராம இணைப்புச் சாலைகள் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்த சாலைகள் புதிதாக கிராமங்களை இணைக்கும் சாலைகள் என்று நான் கருதுகிறேன். இருக்கிற சாலைகளை சரியான முறையில் பழுது பார்க்காத நிலையில்—இணைப்பு சாலைகளே வேண்டாம் என்று சொல்லவில்லை—முதலில் பழைய சாலைகளைப் பழுது பார்த்தால்



1973 மார்ச் 3] [திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர்]

பிறகு புது சாலைகளை ஏற்படுத்தலாம் என்றுதான் சொல்கிறேன். புதிய காரியங்களைத் தொடங்குவது நல்லது. ஆனால் ஏற்கெனவே செய்யப்பட்ட காரியங்களைச் சீரமைப்பதிலே அரசு ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது. நான் கவர்னர் பெருமான் உரையின்மீது பேசும்போதுகூட அவைகள் போது மானதாக இல்லையென்று குறிப்பிட்டேன். ஏழைகளுக்கும், அரிஜன மக்களுக்கும், விவசாயத் தொழிலாளிகளுக்கும் வீடு கட்டிக் கொள்வதற்கு என்று 250 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் நடுத்தரக் குடும்பங்கள், இந்த வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்கள், தங்களுடைய நிலையைக் கொஞ்சம்கூட இன்னும் சீர்படுத்திக்கொள்ள முடியவில்லை. அதற்காக வீடு இல்லாதவர் களுக்கு வீடு கட்டிக்கொள்ளும் வகையிலே தக்காவிக் கடனாக 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஆனால் அதற்குரிய நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப்படவில்லை. அதற்கும் அரசு ஏதாவது வழிவகை செய்ய வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

அதோடுகூட மற்றொன்றைச் சொல்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆற்றங்கரையிலிருந்து 1, 2 மைல் களுக்குத்தான் ரோடுகளை எல்லாம் செப்பனிடும் வேலை நடந்து வருகிறது. ஆனால் ஆற்றிலே வெள்ளம் வந்தது மட்டுமல்லாமல், மழை பெய்ததால் ஏற்பட்ட சேதங்கள் எங்கள் பகுதியிலே ஏராளமாக இருக்கின்றன. மதிப்புக்குரிய நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட ஈரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே ஒரு கூட்டத்தைக் கூட்டியபோது, நான் அவர் களிடத்திலே சொன்னேன். வெள்ளத்தினால் பவானி ஆற்றிலே வந்த வெள்ளத்தால் மாத்திரமல்லாமல், மழை பெய்வதால் ஏற்பட்ட பாதிப்புக்கும் வெள்ள நிவாரணம் அளிக்க வேண்டு மென்று எடுத்துச் சொன்னேன். அவர்களும் அந்தக் கூட்டத்திலே ஒத்துக்கொண்டார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை பூராவும் அரசாங்கம் சீர் செய்வதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த ஆண்டுகூட கணக்கெடுக்கப்பட்டு வேலைகளைத் துவங்கியிருக்கிறோம். ஆற்றிலே வந்த வெள்ளத்தால் மாத்திரமல்லாமல், மழை பெய்வதால் பாதிக்கப்பட்ட சாலைகளையும் பராமரிப்பதற்கு அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் இதர பகுதிகளில் அந்தப் பணி இன்னும் தொடங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பணி ரொம்ப அதிகமான பணி உடனடியாகச் செய்ய முடியாது. மத்திய அரசாங்கத்திடமிருந்து வந்த பணத்தைக் கொண்டு அடுத்து வேலைகளைத் தொடங்க வேண்டும். ஈரோடிலே கூட ஒரு ஸ்பெஷல் டிவிஷன் இதற்காக ஏற்படுத்தி அதற்கு ஒரு டி.இ. போட்டிருக்கிறோம். எனவே கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்பட்டிருக்கிற பாதிப்பைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அச்சப்பட வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** இந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் உறுதியளித்ததற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :** இன்னும் நிறைய பேர் பேசவேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடிக்கவும்.

**திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் :** ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். கல்லூரிகளைப் பொறுத்த வரையிலே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு, புகுமுக வகுப்பிலே படிக்கும் மாணவ மாணவிகளுக்கு, ஏற்கெனவே ஒரு காலாண்டுக்கு 50 ரூபாய் மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. 1972-73க்கு மட்டும் அது 90 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, 2, 3 ஆண்டுகள் 50 ரூபாய் அந்த மான்யம் பெற்ற கல்லூரிகளிலே தொல்லைகள்





இருக்கின்றன. இந்த ஆண்டுக்குக் கொடுப்பதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், ஏற்கெனவே அது எத்தனை ஆண்டுகளுக்கு வராமல் இருக்கிறதோ அதற்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் மின்சாரப் பற்றுக்குறையினால் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மின்சாரப் பற்றுக் குறை ஒரு பக்கம் இருந்தாலும், அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நான் இந்தச் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நான் இந்தச் சட்டமன்றத்துக்கு வரும் வரையில்கூட அவர்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவில்லை. அவர்களுக்கு சாதாரண அரிக்கேன் லைட் எரிப்பதற்குக்கூட மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்றால், அது மிகவும் கஷ்டமாக இருக்கும். வெளியிலே சென்று வாங்கினால் ஒரு லிட்டர் 1½ ரூபாய் விற்கிறது. கிராமப்புறங்களிலே, நான் நினைக்கிறேன், அங்காடிக்கு கார்டு கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கார்டின் மூலமாகவாவது விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு இந்தத் தொல்லையைக் குறைத்திட முன்வர வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. டி. வி. நாராயணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்துள்ள 1973-74-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து நன்றி கூறிக் கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களை நிதிநிலை அறிக்கையின்மீது கூறுவதற்கு முன்னால் இந்த மன்றத்திலே சிறப்பு வாய்ந்த நிலையிலே கடந்த நான்காண்டு காலமாக, நான்காண்டுகளுக்கும் மேலாக, உறுப்பினராக இருந்து சிறந்த பணிகளை ஆற்றிய கலை உலக மேதை, என்னையும் என்னை போன்ற நூற்றுக்கணக்கான கலைஞர்களையும் உருவாக்கி தமிழகத்துக்கு அளித்த ஒப்பற்ற முத்தமிழ் கலா வித்வ ரத்னம் அவ்வை சண்முகம், அவர்களுடைய மறைவு குறித்து என்னுடைய இரங்கலைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். அவ்வை டி. கே. சண்முகம் அவர்கள் தமிழகத்தில் ஒரு தனிப்பெரும் கலைஞர் ஆவார். தனிச் சிறப்பு பெற்ற கலைஞராவார். அவர் பால்குடி நிலைமை மறந்ததிலிருந்து கலைக்குத் தன்னை

அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். 61 வயது வாழ்ந்து மறைந்தாலும், அவர் வாழ்ந்த காலத்தில் 55 ஆண்டுகளை கலைக்காக, தமிழுக்காக, தமிழ் நாட்டுக்காகப் பாடுபட்டு மறைந்திருக்கிறார் என்று எண்ணும்போது அவருடைய நினைவுக்காக தமிழகத்தில் நிலையான ஏவைற்றைச் செய்யவேண்டுமென்று கூற ஆசைப் படுகிறேன். அதற்கு முன்கூறியாக நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு கட்டிடத்தில் கட்டப்பட்டு வருகின்ற கலை அரங்கத்திற்கு அவ்வை சண்முகம் அரங்கம் என்று பெயர் வைக்கப்படுமென்று 27—2—1973 அன்று இரங்கல் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். அதற்காக நான் எனது நன்றியை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. இந்த மன்றத்தில் தாகூர் கலை அரங்கம் கட்டப்பட வேண்டுமென்று முத்தமிழ் கலா வித்வ ரத்தினம் டி. கே. எஸ். அவர்கள் தனது இனிய செந்தமிழ்ப் பேச்சால் நமது உள்ளம் எல்லாம் உவகையுறும் வகையில் எடுத்துரைத்திருக்கிறார். அந்த அரங்கம் கட்டப்படுவதற்கு அந்த நிலம், பாரதி சங்கத்தாருக்கு இனாமாகவே அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியினையும் பாரதியார் பெயரையும், தாகூர் கலை அரங்கோடு இணைத்துவிட ஏற்பாடு செய்துள்ளதாகவும் முதலமைச்சர் மனமுவந்து வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்காகவும் நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பல்வேறான சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகவிருக்கிறது. நிதி ஆணைக்குழு எப்படி செயல்பட வேண்டும், மத்திய அரசாங்கத்தால் மாநிலங்களுக்குத் தரப்படும் நிதி, அதற்கான அதிகாரம் இந்த ஆணைக்குழுவிடம் இருந்தல் வேண்டுமென்று எடுத்துக் காட்டியிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். மற்றும் இந்த அறிக்கையில் செந்தமிழ் மணமும், சமதர்ம மணமும் சேர்ந்து கமழ்கிறது. இந்த ஆண்டில் பத்தாயிரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, மிக, மிக உயரிய தன்மையில் இவ்வறிக்கை அமைந்திருக்கிறது என்று சொல்ல வேண்டும். இந்த அரசு ஏற்பட்ட நாளிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தனை நன்மைகள் செய்திருக்கின்றது, எவ்வளவு கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கி திட்டமிட்ட அடிப்படையில் செய்து வருகிறது என்பதனையும் நாம் எல்லாம் நன்கு அறிவோம். அது மட்டுமல்ல, பிற்பட்ட நலத் துறைக்கும்





இந்த அரசு எந்த அளவுக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக் கிறது என்பதனை எல்லாம் நாம் செயல் பூர்வமாக உணர்ந்திருக் கிறோம். இந்த அரசு ஏனைய மக்களுக்கும், வாழ்க்கையினுடைய அடித்தளத்திலிருக்கின்ற எளியவர்களுக்கும் வாழ்வு கொடுப் பதற்கான பல திட்டங்களை கடந்த ஐந்தாண்டுகளில் உருவாக்கி, அதிலே வெற்றி கண்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்றபோது நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதையெல்லாம் மனதுக்குள் பாராட்டினாலும், நம்முடைய எதிர்க் கட்சி நண்பர்கள் தாங்கள் எதிர்கட்சியிலிருக்கின்றோம் என்பதற்காக ஒப்புக்காக உதட் டளவில் நம்மை குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள், இந்தத் திட்டங்களை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குறை கூறுவதில் நல்ல ஒரு பொருள் இருக்குமேயானால், அதை நாம் வரவேற்போம். ஆனால் வான் மழை பொய்த்துவிட்டது, வான் மழை பொய்த்து விட்டதன் காரணமாக மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. அத்தகைய இடர்பாடு என்பது எல்லோருக்கும் பொதுவானது. என்றைக்குப் பருவ மழை பெய்யுமோ, அன்றைய தினம்தான் இந்த நிலைமையிலிருந்து விடுபட முடியும் என்பது தான் உண்மை. ஆனால் அதை அரசியல் நோக்கத்திற்குப் பயன் படுத்துவது தவறு, மக்களைக் கிளர்ச்சியில் ஈடுபடுத்தி, சட்ட மன்றத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் என்ற அளவுக்கு இந்த நாட்டில் மிகப் பெரிய பாரம்பரியத்தை இன்றையதினம் கொண்டுள்ள கட்சி ஈடுபடுவது ஜனநாயகமாகாது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய, பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. செங்கோட்டு வேலப்பன் அவர்கள் ஒரு கருத்தை மிக அழகாகச் சொன்னார்கள். வான் மழை பொய்த்து மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகின்ற இந்த நிலைமைகளை அரசியல் நோக்கத் திற்காக, அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது விரும்பத்தக்கதல்ல என்று கூறினார். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களானாலும், கருத்துக்களை வெளியிடுகின்ற நேரத்தில் அதிலே உண்மை இருக்க வேண்டும், ஆதாரம் இருக்க வேண்டும், புள்ளி விவரங்கள் இருக்க வேண்டும் என்பதனை அவர்கள் எண்ணிப் பார்த்துப் பேச வேண்டும். மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டி ருக்கிறது என்பது உண்மை. நம்முடைய அரசு அதற்காக வெகுவாகப் பாடுபட்டு, அந்தந்த நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்து, மத்திய அரசுக்குத் தெரிவித்தும், அவைகளையெல்லாம்

[திரு. டி. வி. நாராயணசாமி] [1973 மார்ச் 3

சமாளிப்பதற்குப் பாடுபட்டு வருகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வர வேண்டிய நிலக்கரி முழுவதும் வரவில்லை. இதற்குத் தனியாகவே நம்முடைய பொறியாளர்களை அனுப்பியும், கடிதங்கள் எழுதியும், படிப்படியாக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார். ஆனால் மத்தியிலிருந்து வருகின்ற சில அமைச்சர்கள் அரசியல் நோக்கத்தோடு இங்கே மக்களைக் குழப்பத்தில் ஈடுபடுத்துகின்ற பணியில் ஈடுபடுகின்றார்கள். ஆனால் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் சொல்லியிருக்கின்ற ஒரு கருத்து நம்முடைய சிந்தனைக்குரியதாகும். அகில இந்தியாவில் இன்றையதினம் ஏற்பட்டிருக்கின்ற மின்சாரத் தட்டுப்பாடு திட்டத்தில் ஏற்பட்ட கோளாறு என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டுமென்று அவர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் எனக்கு அளிக்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறுகியதாக இருப்பதால், இங்கே பல விஷயங்களை எடுத்துப் பேசுவதற்கு ஆசையிருந்தாலும், நான் சார்ந்துள்ள கலை உலகத்தைப்பற்றிப் பேசுவது இப்பொழுது சாலப் பொருந்தும் என்று கருதுகிறேன். மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு ஆற்றல் மிகுந்த பல உறுப்பினர்கள் இந்த அவையிலிருக்கிறார்கள் என்பதனை அறிவேன். இந்த அரசு தொழிலாளர்களானாலும், ஆசிரியர்களானாலும், சமுதாயத்தில் எந்தப் பகுதியைச் சார்ந்தவர்களானாலும், குறைகளை உடனுக்குடன் கவனித்தில் இந்த அரசுக்கு நிகராக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு அரசு இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு இங்கே பட்டதாரி ஆசிரியர்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்கியதைக் கண்டோம். அதைப்போல் நமது அரசு பலவற்றைச் செய்திருக்கிறது. இன்றையதினம் காலை செய்தித்தாளில் படித்தேன். குஜராத் மாநிலத்தில் ஒரு பகுதியில் தாமரைக் கிழங்கைச் சாப்பிட்டு வாழும் மக்கள் இருக்கிறார்கள். இன்றையதினம் தினமணி செய்தித் தாளில் நான் படித்தேன். ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், வெள்ளாமையை பல்வகையில் பெருக்கி பஞ்சத்தைத் தவிர்த்திருக்கிறோம். எல்லா விதமான உணவு தானியத்தின் உற்பத்தி பெருகி இங்கே நல்ல ஒரு உற்பத்தியைக் கண்டிருக்கிறோம். ஒரு அரிய சாதனையைக் கண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது தவறாகாது



1973 மார்ச் 3] [திரு. டி. வி. நாராயணசாமி]

எல்லோருக்கும் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் எந்த விதமான அரிசியும், எந்தவிதமான உணவும் கிடைக்கும் அளவுக்கு தமிழகத்தின் நிலை இருந்து வருகிறது. 1965-66-ல் மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் இந்த நிலைமை இல்லை அத்தகையதொரு பசுமைப் புரட்சியைக் கண்டிருக்கிறோம். இது வரலாற்றிலேயே ஒரு சிறப்பு மிக்க உண்மையாகும். இந்த அரசு மேலும், மேலும் நமது ஜனநாயக வாழ்வில் சமதர்மம் காண்பதற்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அலுமினியம் தொழிற்சாலை நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்றையதினம் இங்கே பேசிய பழைய காங்கிரஸைச் சேர்ந்த திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் இது சமதர்மமா என்று கேட்டிருக்கிறார்கள். அவருடைய பாஷையில் சமதர்மம் என்பது வேறாகத் தோன்றலாம். நாட்டுடைமையாக்கியிருக்கும் பல திட்டங்களின் பலன்களை அனைவரும் அறிவர். சம தர்மத்தைக் காணுவதற்கு இவையெல்லாம் முன்னோடித் திட்டங்கள். ஜனநாயக வழியில் சமதர்மத்தைக் காண்பதற்கு இதைத் தவிர வேறு என்ன சிறந்த திட்டங்களை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படியிருந்தால் அவர்கள் கூறட்டும். ஆகவே சமதர்மக் கருத்துக்களை எதிரொலிக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனதார வரவேற்கிறேன். அதை வரவேற்கிற முகத்தான் ஒரு சில கருத்துக்களைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

நான் வாழ்கின்ற அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர் பகுதியில் நல்ல சாலைகள் அமைத்திட வேண்டும். அந்தப் பணியும் துவங்கப்பட்டிருக்கிறது. வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னபோது, மழை காலங்களில் இந்தப் பகுதியில் நீர் தேங்கிக் கிடக்கிறது என்று சொன்னபோது உடனுக்குடன் கவனித்து தற்காலிக நிவாரணம் அளித்தார்கள் என்றாலும், நிரந்தரமாக அங்கே சாலை வசதி வேண்டும். நான் இருக்கின்ற பகுதியில் ஒரு பெரிய தோப்பு இருக்கிறது. அதை ஆர்ஜிதம் செய்து, அதைப் பெரிய சாலை ஆக்க வேண்டும். அதை விரைவு நடவடிக்கையாக எடுத்து, அந்தச் சாலையை இணைப்பதன் மூலம் அங்கே மழை நீர் தங்குவது நின்று அங்கேயுள்ள மக்கள் நலம் அடைவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். அதோடு அப்பகுதி விரிவான பகுதியாக வளர்ந்து வருகிறது. விரிவு அடைந்து

கொண்டிருக்கிற சென்னை நகரில் பல மருத்துவ மனைகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக சில பெரிய மருத்துவ மனைகள் தான் இருக்கின்றன. அரசினர் மருத்துவ மனை, வட சென்னையில் ஸ்டான்லி மருத்துவ மனை, தென் சென்னையில் ராயப்பேட்டை மருத்துவ மனை தான் இருக்கிறது. ஆனால் விரிவு அடைந்து வருகின்ற அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர் பகுதியில் ஒரு பெரிய மருத்துவ மனை வரவேண்டும். அதற்கு வேண்டிய நிலத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த நிலம் [illegible] மனைகளையும் பிரித்துக் கொடுக்கப்படும் என்ற நிலைமை இருக்கிறது. அப்படியிருக்குமானால், அருள் கூர்ந்து அந்த எண்ணத்தை விட்டு விட்டு, அங்கு ஒரு பெரிய மருத்துவ மனை நல்ல முறையில், விஞ்ஞான ரீதியாக, நல்ல புதுமையான முறையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வது தான் சாலச் சிறந்தது என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த மன்றத்தில் பல தடவைகள் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன் கலைத் துறைபற்றி. கலைத் துறையில், கலைத் துறை பண்பாட்டைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தமிழகக் கலை, தமிழகப் பண்பாட்டை வளர்க்கின்ற கலையாக இருக்க வேண்டும். அந்தக் கலை நம் கையை விட்டுப் போய்விடக் கூடாது. மேல் நாட்டுக் கலைக்கும், வட நாட்டுக் கலைக்கும் நாம் அடிமையாகின்ற விதத்தில் இந்தக் கலைத் துறையை விட்டுவிட்டால், எதிர் காலத்தில் என்ன நிலைமை உருவாகும்? இந்தக் கலைத் துறையில் நல்லதொரு நிலைமை உண்டாவதற்கும், கலைத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற நடிகர்கள், அதிலே இருக்கின்ற தொழில் நுணுக்க வல்லுநர்கள், மற்றவர்கள் எல்லோரும் நல்வாழ்வு வாழ்வதற்கும் நல்லதொரு நிலைமை ஏற்படுவதற்கு முதல் படியாக ஒரு ஆய்வுக் குழுவை, அதிலே உள்ள நிலைமைகளை ஆராய்வதற்கு அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய குழு ஒன்று அமைத்து, கலைத் துறையை நல்ல முறையில் செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சமதர்ம மணம் கமழும் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். சக்தி மோகன் : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, சுதந்திரத்துக்குப் பிறகு, சரித்திரம் கண்டறியாத முறையில் வரி விதிக்காமல், ஏறத்தாழ [illegible] கோடி ரூபாய் மிச்சப்படுத்துகின்ற பட்ஜெட்டை முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை என்னுடைய கட்சியின் சார்பாக வரவேற்று வாழ்த்துகிறேன்.



இந்தப் பட்ஜெட்டைத் தயாரித்த கலைஞர் அவர்கள், பட்டயம் போட்டுக்கொள்ளாத பொதுவுடைமை வாதியாகவும், விளம்பரப் படுத்திக்கொள்ளாத தேசிய வாதியாகவும், பட்டா வழங்கிய ஜனநாயக வாதியாகவும் நின்று, இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருப்பதாக நான் மதிக்கிறேன். அந்த அளவுக்கு இந்த பட்ஜெட்டில் சோஷலிஸத்தின் சுரப்பைப் பார்க்கிறேன், கம்யூனிஸத்தின் கனகனப்பைப் பார்க்கிறேன், ஜனநாயகத்தின் முகிழ்ப்பைப் பார்க்கிறேன், தேசியத்தின் பரவலைப் பார்க்கிறேன். இப்படி ஒரு சோஷலிச பட்ஜெட்டைத் தயாரிக்கிறதற்கு பதவியைத் துச்சம் என்று மதிக்கும் தியாகசீலமும், பலரின் வாழ்வுக்கு சிலரின் பகையை ஏற்க வேண்டும் என்றாலும் ஏற்றே தீருவேன் என்ற தனித்துணிவும், நினைத்ததைச் செய்ய வேண்டுமென்ற செயற் திறனும், எல்லாவற்றுக்கும் மேலாக நிலைமாறாத கட்டுப்பாட்டு உணர்ச்சியும் வேண்டும். இவைகள் எல்லாம் பெற்றிருப்பதால் தான், இப்படி ஒரு விமர்சனத்திற்கு ஆட்படாத, முதலாளித்துவத்தை முறிக்கும் பட்ஜெட்டை, முதல்வர் அவர்களால் தர முடிந்திருக்கிறது.

சோஷலிஸம் தான் வேண்டும், அதை இன்னார் தான் கொண்டு வரவேண்டும் என்பதற்கு ஒரு வரையறை கிடையாது. யார் வேண்டுமானாலும் சோஷலிசத்தைக் கொண்டுவரலாம் என்று லெனின் சொல்லியிருக்கிறார். அந்த வகையில் சோஷலிஸம் என்றால் அதற்கு நாங்கள்தான் இருக்கிறோம் என்று சொல்லுபவர்களை எல்லாம் கடந்து, இப்படி ஒரு பட்ஜெட்டைக் கலைஞர் சமர்ப்பித்துள்ளார். மக்களுக்கு நல்வாழ்வை நல்க வேண்டுமென்பதையே குறியாகக் கொண்டு இந்த பட்ஜெட்டைத் தயாரித்த கலைஞர் அவர்களை என்னுடைய கட்சியின் சார்பில் பாராட்டுகிறேன்.

சோஷலிஸத்தைக் கொண்டுவரும்போது, அதிலே எத்தனை இடர்பாடுகள் ஏற்படும், எத்தகைய பகைகள் எல்லாம் எதிர்ப்படும், அவைகளை எந்த வகையில் சமாளிக்க முடியும் என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்தோமானால், இப்படி ஒரு பட்ஜெட்டை அவையின் முன் வைப்பதற்கு, குறிப்பாக பதவியைச் துச்சமாக மதிக்கின்ற துணிவுக்கு, தன்னைத் தானே தயாரித்துக்கொள்ள வேண்டும். டாக்டர் அவர்களின் எண்ண ஓட்டத்தையும், செயல் வேகத்தையும் பார்க்கின்றபோது, எதிர்காலத்தில் கம்யூனிஸ்டு

[திரு. ஆர். சக்தி மோகன்] [1973 மார்ச் 3

களுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் வேலையே இல்லாமல் போய் விடும். சோஷலிஸத்தை எண்ண நிலைமையிலிருந்து, எழுத்து நிலைமையிலிருந்து, பேச்சு நிலைமையிலிருந்து செயல் முறைக்குக் கொண்டுவருகிறபோது, எந்த அளவிற்கு எதிர்ப்பு வரும், எத்தனை பேர் ஒப்புக்கொள்வார்கள், உடன் பிறந்தவர்கள், மனைவி மக்கள் கூட அதை ஒப்புக்கொள்வார்களா என்பதைப் பற்றி நமது பாரதப் பெருமகன் நேதாஜி அவர்கள் தமது வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவத்தை ஒருமுறை சிங்கப்பூரில் சொன்னார்கள். அதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

நேதாஜி அவர்களுக்கு மிக நெருக்கமான நண்பர் ஒருவர் பாரிஸில் இருந்தாராம், அவர் பெரும் பணக்காரர், அவரிடம் ஒரு சமையல்காரன் இருந்தான். நீண்ட காலத்திற்குப் பிறகு அவன் ஒரு கம்யூனிஸ வாதியாக மாறிவிட்டான். ஒவ்வொரு நாளும் அவன் மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்திற்குப் போய்விட்டு வருவது வழக்கம். அந்த முதலாளியும், கம்யூனிஸ்ட் ஆகிவிட்டானோ என்பதற்காக தன்னுடைய உணவை வழக்கம்போன்ற 7 மணிக்குப் பதிலாக 9 மணிக்கு மாற்றிக் கொண்டார். பிறகு 6 மாதம் கழித்து ஒரு நாள் அந்த சமையல் காரன் 7 மணிக்கே உணவு அருந்தக்கூப்பிட்டான், மறுநாளும் கூப்பிட்டான். 3-வது நாளும் அதே மாதிரிக் கூப்பிட்டான். முதலாளி என்ன நீ கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டத்திற்கு போவாயே, 2, 3 நாளாக ஏன் போகவில்லை என்று கேட்டபோது, அவன் அவர்களுடைய கொள்கை பிடிக்கிறது, ஆனால் போக்கு பிடிக்கவில்லை என்று சொன்னானாம். கொள்கை பிடிக்கும்போது, போக்கு எப்படிப் பிடிக்காமல் போகும் என்று கேட்டபோது, அதற்கு விளக்கம் சொன்னார்கள். பிரான்ஸ் தேசத்தில் இருக்கிற மக்கள் தொகையைக் கணக்கிட்டு, எல்லோரிடமும் உள்ள பணத்தையெல்லாம் திரட்டி, சரி பங்காக பிரித்துக் கொடுப் பதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள், அதனால் பிடிக்கவில்லை என்று சொன்னான். இது நல்ல கொள்கையாயிற்றே, இது ஏன் உனக்குப் பிடிக்கவில்லை என்று கேட்டபோது, அப்படிப் பகிர்ந்து கொடுக்கும்போது, ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாய் தான் வருகிறது, ஆகவே அந்தக் கொள்கை பிடிக்கவில்லை என்று சொன்னான். ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்றால், ஆண்டான் அடிமை என்ற நிலைமையெல்லாம் மாறிவிடும். அப்படி இருக்கும்போது உனக்கு



1973 மார்ச் 3] [திரு. ஆர். சக்தி மோகன்]

ஏன் பிடிக்கவில்லை என்று கேட்டபோது, அவன் சொன்னான், நான் காலில் நகம் முளைத்த நாளாய் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி, பாங்கில் 10 ஆயிரம் ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன். இவன் சொல்லுகின்ற கம்யூனிஸம் என்னுடைய 10 ஆயிரம் ரூபாயை 5 ஆயிரம் ரூபாயாகக் குறைத்துவிடும் என்பதால், அந்தக் கொள்கையை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்றானாம். அதுபோல கம்யூனிஸம், சோஷலிஸம் என்று பேசுகின்றபோது, நன்றாகத்தான் இருக்கும், சிந்திக்கும்போது ஆனந்தமாகத்தான் இருக்கும். ஆனால் அதை நடைமுறைப்படுத்தும்போது பல பேரின் எதிர்ப்பு வரும், அதை சமாளிக்க தனித் துணிச்சல் வேண்டும், சோஷலிஸ பாணமை வேண்டும். இந்த பட்ஜெட்டை இவ்வளவு இக்கட்டான நேரத்தில் துணிச்சலாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் கலைஞர் அவர்கள். இதற்கு முன்னுதாரண மாக முதல்வரவர்கள் பஸ்களைத் தேசிய மயம் ஆக்கிய உடனே, பெரிய எதிர்ப்புக் கிளம்பியிருப்பதைப் பார்க்கிறோம். நம் மதிப்பிற் குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சோஷலிஸத்தை நடை முறைப்படுத்தித் தீர வேண்டுமென்று கச்சை கட்டிக்கொண்டு வேலை செய்து வருகின்ற நேரத்தில், அவர் கட்சியைச் சேர்ந்த வர்களே, பஸ்களை தமிழ்நாடு அரசாங்கம் தேசிய மயம் ஆக்கி யிருக்கிறது, அதை ஏற்க மறுக்க வேண்டும் என்று பிரதமரிடமே ஓடி செல்லும் நிலையைப் பார்க்கிறோம்.

இதைக்கூட சட்டமன்றத்தில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. கந்தசாமி அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இப்படிப் பல எதிர்ப்புகளை ஏற்படுத்தும் பெரும்பாலான மக்களின் நல்வாழ்வுக்கான சோஷலிசத்தை அமுல்படுத்துவதற்கு முயன்றிருக்கிற தமிழக அரசை நான் மிகமிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பட்ஜெட்டிலே பாராட்டப்பட வேண்டாத, ஒதுக்கப்பட வேண்டிய அம்சங்கள் எதுவும் இல்லை. இப்போது அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கை ஒரு சுருக்கம்தான். இதற்கு விரிவான விளக்கங்கள் அடுத்த கூட்டங் களில் வருமென்று கருதி, இதை முழுமையாக ஆதரிக்கிறேன். இந்த நேரத்தில் ஒரு சில கோரிக்கைகளை மட்டும் மேலவையின் மூலம் நான் வைக்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, குறிப்பாக ஐ.என்.ஏ. வீரர்களுக்கு இந்த அரசு வேண்டிய உதவிகளைச் செய்ய

கொண்டு வருகிறது. அவர்களுக்கு 75 ரூபாய் பென்ஷனைக் கொடுக்கப்படுகிறது. காங்கிரஸ்காரர்களாக இருந்தால், அவர்கள் 3 மாதம் சிறை சென்ற சான்றிதழ் வேண்டுமென்றும், ஐ.என்.ஏ. வீரர்களாக இருந்தால், டெல்லி அளித்துள்ள சர்ட்டிபிகேட்டை வைத்துக் கொடுத்துவிடலாமென்றும் நடைமுறை இருக்கிறது. இதில் மாதமொன்றுக்கு 100 ரூபாய்க்குள் வருமானம் இருப்பவர்களுக்குத்தான் 75 ரூபாய் வீர மானியம் என்று இருப்பதை நமது அரசு கருணை கூர்ந்து மாற்ற வேண்டும். அந்த உச்ச வரம்பை நமது அரசு நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது மத்திய அரசாங்கம் வைத்திருப்பது போல, ஆண்டொன்றுக்கு 5,000 ரூபாய் வருமானத்துக்குள் என்று வைத்தால் அதிலுள்ள இடர்ப்பாடுகள் நீங்க வழியிருக்கிறது. மாதமொன்றுக்கு நூறு ரூபாயென்று உச்சவரம்பு வைக்கும்போது, கிராமங்களிலுள்ள இந்தத் தியாகிகளின் அண்டைவீட்டுக்காரர்கள், பொறாமை உணர்ச்சியுடன், நூறு ரூபாய்க்கு மேல் இவருக்கு மாதமொன்றுக்கு வருமானம் வருவதாக மொட்டை மனுக்களை எழுதிவிடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு வருகிற பென்ஷன் நிறுத்தப்பட்டுவிடுகிறது. மறுபடியும் அவர்கள் அந்தப் பென்ஷனை வாங்க அரும்பாடுபட வேண்டியதாக உள்ளது. நாம் இந்தப் பென்ஷனை நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்களுக்குத்தான் கொடுக்கிறோம். அவர்களுள், வசதியுள்ளவர்கள், வசதியில்லாதவர்கள், வருமானம் அதிகம் உள்ளவர்கள், வருமானம் இல்லாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல், மாதமொன்றுக்கு 100 ரூபாய் வருமானம் என்றிருப்பதை, ஆண்டொன்றுக்கு 5,000 ரூபாய்க்குள் என்று மாற்றி, அதன்படி இருப்பவர்களுக்கே அந்த மானியம் என்று அறிவித்து, எல்லாத் தியாகிகளுக்கும் வீர மானியம் வழங்க வேண்டும். அதுதான் உண்மையில் நன்மை பயக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாதவர்கள் பிரச்சினை. நமது அரசு வேலையில் இருப்பவர்களுக்கு வேண்டிய அளவுக்கு வசதி செய்து கொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக சர்க்கார் சிப்பந்திகளுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் இந்த அரசாங்கம் நன்மை செய்திருப்பது போன்று, சுதந்திரம் பெற்ற பிறகு இந்திய நாட்டிலே வேறு எந்த அரசாங்கமாவது நன்மை புரிந்திருக்குமா என்பது சந்தேகம்தான். அவர்களுக்குக் கொடுப்பதை நாம் பாராட்டுகிறோம். ஏனென்றால் ஆசிரியர்கள்





நமக்கு குரு பீடம். அவர்கள் மூலம் நாம் மேம்பாடு அடைந்திருப்பதால், அவர்களை வாழ வைக்க வேண்டும். அவர்களை வாழ வைக்க வேண்டும். அவர்களை வாழ வைப்பதற்காகக் கொடுப்பது உண்மையில் பாராட்ட வேண்டியதுதான். ஒரு காலத்தில் பார்த்தால் ஆசிரியர் வேலைக்கு ஆள்கூடக் கிடைக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு விருப்பமற்ற நிலையிருந்தது. காவிரி ஆற்றில் ஒரு சிறிய உதாரணம்கூடச் சொல்வார்கள். வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறபோது, யாரோ ஒருவன் அதில் மிதந்துகொண்டு போனான். அந்த ஆற்றங்கரையிலிருந்து இருவர் பார்த்தார்களாம். அதில் ஒருவன் மற்றொருவனிடம், "ஒருவன் வெள்ளத்தில் மிதந்துகொண்டு போகிறான், அவனைக் காப்பாற்றிக் கரையேற்றினால், நொண்டி வாத்தியார் பள்ளிக்கூடத்தில் காலியாக இருக்கிற ஆசிரியர் பதவியில் அவனை அமர்த்திவிடலாம்" என்று கூறினான். அது மிதந்துகொண்டு சென்றவனுடைய காதில்விழ, அவன் "நான் ஆற்றோடு போனாலும் போகிறேன். வாத்தியார் வேலை வேண்டாம்" என்று சொன்னானாம். அப்படியிருந்த ஒரு நிலை இன்றைக்கு அதிஉயர்வாக மாறியிருக்கிறது. நமது மாண்புமிகு அமைச்சர், நாவலர் அவர்கள் கூட 'அமைச்சர் வேலையை விட்டுவிட்டு, ஆசிரியர் வேலைக்குப் போகலாமென்று ஆசைப்படுவதாகச் சொல்லியிருக்கிற அளவுக்கு ஆசிரியர்களுடைய நிலை இன்று உயர்ந்திருக்கிறது. அதற்காக நமது அரசைப் பாராட்ட வேண்டும். அதேசமயத்தில் அவர்களுக்கு சுயநலம் என்ற நோக்கு இருக்கக் கூடாது. சுயநலத்தையே கருதி, எப்படி பணக்காரர்கள் அவர்களுடைய வாழ்வு மேலோங்க வேண்டுமென்று எண்ணிச் செயல்படுவதன் மூலம், அவர்களுக்கு எதிர்ப்பு ஒன்று உருவாகி, சோஷலிசத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டதோ, அதுமாதிரி அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்களுக்கும் ஏற்படக் கூடாது. வேலை பார்ப்பவர்களுக்குப் பின்னால் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வெளியில் வேலையின்றிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். "எங்களுக்கு வருகிற வருமானம் போதும். அவர்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று அவர்கள் சொல்லாத வரை, இந்தச் சமுதாயத்தை மேம்படுத்த முடியாது. சுயநல நோக்கோடு அவர்கள்மட்டும் வேண்டியவற்றைச் சாதித்துக் கொண்டிருந்தால், இந்த அரசாங்கத்திலே வேலை பார்க்கிற சிப்பந்திகளையும், ஆசிரியர்களையும்தான் இந்த அரசு காப்பாற்று

[திரு. ஆர். சக்தி மோகன்] [1973 மார்ச் 3

பிறகு, வேலையில்லாதவர்களைக் காப்பாற்றவில்லையென்ற புகார் பொதுவாக ஏற்பட்டுவிடும். இப்போதே அப்படிப் புகார் இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஒரு நிலைமை மேலும் வளர இடம் கொடுக்காமல், வெளியிலே வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க அல்லது வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த அல்லது அவர்களுக்கு வேலை கொடுக்கிற வரையில் ஒரு சிறிய உதவியைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் மறவர்களுக்காக 'ரெக்ளமேஷன்'---அதாவது 'மறவர் மறுவாழ்வுத் திட்டம்' என்ற முறையில் நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் 'பேக்வேர்ட் கிளாஸ் கமிஷன்' கூட்டத்தில், ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானம் கொண்டுவந்த பிறகு, அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசாங்கம் செய்தது. மேலும் அதற்கு தாசில்தார் மட்டத்தில் அறிக்கைகள் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவிக்கப்பட்டு பல மாதங்களாகியும்கூட, அதற்கொரு சரியான அறிக்கை வரவில்லை. முதுகுளத்தூர் மறவர்களின் மறுவாழ்வுக்காக அதைக் கட்டாயம் உடனடியாகச் செய்ய வேண்டும். முதுகுளத்தூர் மறவர்கள் என்றால், குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு ஆட்பட்டு அவதிப்பட்டவர்கள். நாட்டுப்பற்று மிக்கவர்கள் இந்திய நாட்டின் விடுதலைக்காக அனைத்தையும் தியாகம் செய்தவர்கள். "மார்ஷல்ஸ் ஆப் தி சௌத்" என்று அன்றைக்கு இருந்த ஆங்கிலேயா கர்னல் ஸ்மித் எழுதி வைத்து, அவர்களைச் சிறப்பப்படுத்தியிருக்கிறான். அவர்கள் இன்றைக்கு வாழ்வு இழந்திருக்கிறார்கள். வானம் பொய்த்துவிட்டால், எதுவும் செய்ய முடியாத நிலையில், அவர்கள் பிழைப்பதற்காக தஞ்சை மாவட்டத்திற்குத் தஞ்சம் போகிற காட்சியைப் பார்க்கிறோம். அவர்களுக்கு இந்த அரசு நல்லதொரு திட்டத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறது. கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் அது குறித்து துரிதமான நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள். பழைய குற்ற பரம்பரைச் சட்டத்தில் சிக்கிச் சீரழிந்த, முதுகுளத்தூர் மறவர்களின் மறுவாழ்விற்கான ஏற்பாட்டினை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலம் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 3] [திரு. ஆர். சக்தி மோகன்]

அடுத்து, மதுவிலக்கைப்பற்றிச் சொன்னார்கள். மதுவிலக்கு என்பது யாரும் அங்கீகரிக்க முடியாததாக இருந்தாலும்கூட அது நாடு முழுவதற்கும் பொதுவாக இருக்க வேண்டுமென்ற கருத்தில் அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட ஒரு மாநிலத்தில் மட்டும் மதுவிலக்கை அமுலில் வைத்துக்கொண்டால், அந்தச் சட்டத்தை சரிவர நிறைவேற்ற முடியவில்லையென்று, அதைத் தற்காலிகமாக, 'போஸ்ட்போன்மென்ட்' என்று வைத்திருக்கிறார்களே தவிர, நிரந்தரமாக மதுவிலக்கை நீக்கிவிடவில்லை. இதில் ஜனநாயகத்தையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இப்போது நடைமுறையைப் பார்க்கும்போது, சோஷலிசத்திற்கு ஒரு 'சீலிங்' இருக்கிறது; கம்யூனிசத்திற்கு ஒரு 'சீலிங்' இருக்கிறது. ஆனால் ஜனநாயகத்திற்கு மட்டும் 'சீலிங்' இல்லை. ஜனநாயகத்திற்கு எவ்விதமான 'சீலிங்' இல்லாமல், வரையறையில்லாமல் வளர விட்டுக்கொண்டு போகும் போது, இந்த மதுவிலக்குச் சட்டம்கூட நமது ஜனநாயகத்தைப் பாதிக்கத்தான் செய்யும். அமெரிக்காவில் முழுமையான ஒரு ஜனநாயக அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. அங்கே சிகரெட் பிடித்தால், புற்றுநோய் வருகிறதென்று டாக்டர்கள் எல்லோரும் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதை சிகரெட் கம்பெனிக்காரர்கள் அத்தனை பேரும் எதிர்த்தார்கள். அங்கே அரசாங்கம் ஜனநாயக முறைப்படி சிகரெட் குடிப்பதைச் சட்ட விரோதமாக்கினால், அது தனிப்பட்ட மனிதனுடைய உரிமையைப் பறிப்பதாக இருக்கும். அது ஜனநாயகத்திற்கு விரோதம். ஆனால் அதே சமயத்தில், சிகரெட் குடிப்பதால் வருகிற விளைவை மக்களுக்குச் சொல்ல வேண்டும். அது சர்க்காருடைய கடமை. அந்த இரண்டையும் மெய்ப்படுத்தி அந்த சர்க்கார் ஒரு புதுவித ஏற்பாட்டைச் செய்தது. அதாவது அமெரிக்காவிலிருந்து வருகிற—சிகரெட்டுகளிலெல்லாம் 'சிகரெட் குடிப்பதன் மூலம் புற்று நோய் வரும்' என்று அச்சடித்திருப்பார்கள். அதுமாதிரி நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள், ஜனநாயக முறைப்படி குடிக்கக்கூடாதென்று தடுத்தால், அது தனி மனிதனுடைய உரிமையைப் பறிப்பதாகும். அது ஜனநாயகத்திற்கும் விரோதம்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** அமெரிக்காவிலிருந்து சிகரெட் இங்கே வராது. இங்கேயிருக்கிற சிகரெட்டுகளே போதும்.

**திரு. ஆர். சக்தி மோகன்:** ஜனநாயக முறைப்படி குடிப்பதை அனுமதித்து, அந்த நேரத்தில் குடிப்பதன் மூலம் ஏற்படுகிற கேடுகளைச் சொல்வதற்கு ஒரு இலாகாவையும் வைத்திருக்கிறார்கள். இந்த இலாகாமூலம், 'குடிக்காதீர்கள், குடித்தால் கேடு வரும்' என்று அறிவுறுத்துகிறார்கள். ஜனநாயகத்தை முழு அளவுக்கு அனுசரிப்பது நமது சர்க்கார்தான் என்ற முறையில் போற்றி, வேலையில்லாதவர்களை பற்றிய அல்லது வேலை கொடுக்க அல்லது வேலை கிடைக்காதவர்களை அவர்களுக்கு ஏதாவது சிறிய உதவியையாவது செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தெரிவித்த மாதிரி, தொழிலுக்கென்று ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த வேண்டும். கலைக்கென்று பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. தொழிலுக்கென்று ஒரு பல்கலைக் கழகம் கிடையாது. அதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று வேண்டி, இந்த நிதி நிலை அறிக்கையை எனது கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக ஆதரித்து அமைகிறேன், வணக்கம்.

(திரு. சி. வி. ராஜகோபால் எழுந்தார்)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆங்கிலத்தில் பேசலாமே.

**திரு. சி. வி. ராஜகோபால்:** இல்லை. தமிழில்தான் பேசப் போகிறேன். தலைவரவர்களே

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும்மாண்டது அமைச்சு"

செயலுக்குரிய கருவியும் ஏற்றகாலமும் செய்யும் வகையும் செய்யப்படும் அரிய செயலும் சிறப்புடை செய்பவர்கள் அவர்கள்தான் அமைச்சர் என்று வள்ளுவப்பெருந்தகை அன்றே கூறியிருக்கின்றார்கள். அதற்கு ஒப்ப . . .

**திரு. கே. ராஜாராம்:** எழுதிப் படிக்கலாமா ?

**திரு. சி. வி. ராஜகோபால்:** குறளாக இருக்கின்ற காரணத்தால் படிக்கின்றேன். தலைவரவர்களே, 1972-73-ஆம் ஆண்டு . . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: 1972-73 அல்ல, 1973-74 ஆம் ஆண்டு அறிக்கை.**





**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கு வந்து அவையிலே சமர்ப்பித்ததற்கு, வள்ளுவனுடைய அருமையான குறளை, எல்லோரும் எண்ணி எண்ணி, அவ்வளவு பெரும் எடுத்துக்கொள்கின்ற கருத்தினை, மிக வன்மையாகவும், திண்மையோடும் இங்கு நடத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக, இந்த வரியே இல்லாத, வரியே போடாத வரவு செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்ததற்காக நான் பாராட்டுகிறேன். இத்திட்டம், எட்டு திக்கும் கர்த்தாவாக இருந்த நம்முடைய இயக்கத்தின் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிவழியாக அவர்கள் எண்ணிய எண்ணம்போல் தீட்டப்பட்டிருக்கிறது. அவர் எண்ணிய எண்ணமெல்லாம் இந்த நாட்டிலே ஏழை மக்களுக்கு வாழ்வளிக்கவேண்டுமென்பதுதான். அதற்கென்று அவர்கள் பல கொள்கைகளை எடுத்துக்கொண்டு அதற்கென்று தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, அந்த லட்சியங்களுக்காகவே அவர் வாழ்ந்தார். ஏழை மக்களை வாழ்விக்க வேண்டுமென்ற அடிப்படை எண்ணங்களை, கொள்கைகளை உருவாக்கவேண்டிய வழி வகுத்தார்கள். எந்த எந்த மக்களை அவர் எண்ணிப்பார்த்தார்? உருக்குலைந்து போன மக்களை, வாழ்க்கையில் தேய்ந்துபோன மக்களை, நொந்துபோன மக்களை, வாழ வழியற்றுப் போன மக்களை மனதிற்குள்ளே கொண்டு, அந்த ஏழை மக்களை வாழ்விக்க, இந்த சமதர்மம் என்ற கோட்பாட்டினை உருவாக்கினர். சமதர்மம், சமதர்மம் என்று எனக்கு முன்னாலே பல அங்கத்தினர்கள் பேசினார்கள். சமதர்மம் என்பது அவரவர்கள் வாயளவுக்கு மட்டும் இருந்துவிட்டால் போதாது. பற்பல கட்சிக்காரர்களுக்கு, அவரவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப இருப்பது சமதர்மம். எங்களுடைய சமதர்மம், இந்த நாட்டு மக்களுக்கு எல்லா சொத்துக்களையும் சொந்தமாக்க வேண்டுமென்பது. எல்லா மக்களும் பரிபூர்ணமான வாழ்க்கை வாழ வேண்டும், ஆகவே சமதர்ம சமுதாயம் உருவாக வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் எண்ணுகிறது. அதையே கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் சமதர்மம், சமதர்மம் என்று சொல்லுகின்றார்கள். அவர்களுடைய சமதர்மம் என்னவென்றால், பஸ் தேசியமயமாக்கப்பட்டால், அதை உடைத்து, உடைத்து, மூலைக்கொன்று, ஆணி ஒன்று, சக்கரம் ஒன்றாகக் கொடுப்பது. இதுதான் அவர்களுடைய கொள்கை. சுதந்திராக்கட்சி மெம்பர்கள்,

[திரு. சி. வி. ராஜகோபால்] [1973 மார்ச் 3

நமது நண்பர் திரு. சந்தோஷம் அவர்கள் இப்படி தனியார் உடைமையை பொதுவுடைமையாக்கலாமா என்றும் அது எங்கே அடுக்கும் என்றும் கேட்பதுதான் அவர்கள் தத்துவம். அது மாதிரியாக நம்முடைய படித்த பழைய காங்கிரஸ் மெம்பர்கள் கூட சில நேரங்களில் சில பெரிய முதலாளிகள் கையாளுவதைத் தேசிய மயம் ஆக்கிவிட்டால், அதனால் ஏதாவது கோளாறு வந்து விடும் என்று சொல்லுகின்றார்கள். அதற்கு அவர்கள் கூறு கின்ற காரணம், பெரிய முதலாளிகளுடைய தொழிற்சாலைகளை, மேட்டூர் தொழிற்சாலை போன்றவைகளை எடுத்துக்கொள்கின் றோம், தேசிய உடைமையாக்கிவிடுகிறோம் என்றால், அதிலே இன் சென்டிவ் போய்விடுமே, மூலதனம் போட்டு நடத்த யாருமே முன் வரமாட்டார்களே என்பதுதான். இதற்கு பெரிய பணக் காரர்கள், அந்நிய நாட்டுக் கோடீஸ்வரர்கள், கோமான்கள் வர முடியாது என்று ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தத்துவம் வைத்திருக்கின்றார்கள். எங்களுடைய தத்துவம் என்ன? ஏற்கெனவே பேரறிஞர் அவர்கள் கூறி வந்ததைத்தான் கலைஞர் அவர்கள் கருத்திலே கொண்டு, இந்த நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை மெல்ல மெல்ல மிகத் திண்மையோடு, உறுதி யோடு யாருக்கும் அஞ்சாமல், யாருக்கும் பணியாமல், செய்து கொண்டு வருகின்ற தன்மையினைப் பார்த்துக் கொண்டிருக்கின் றோம். குடிசை வாழ்வோருக்கு, ஏழை எளியோர்க்கு, வீட்டு மனை இல்லாதவர்களுக்கு, குருடாகிவிட்டவர்க்கு, விவசாயத் தொழிலாளருக்கு, மெய் வருந்தி வருந்தி வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம் நம்மால் முடிந்த அளவுக்குச் செய்திருக்கின்றோம். விவசாயிகளுக்கு 100 ஏக்கரா கொடுத்துவிட்டோம் என்று சொல்ல வில்லை. மெல்ல மெல்ல பல காரியங்களை நாம் செய்திருக் கின்றோம் என்பதைத்தான் இந்த வரவு செலவுத் திட்டம் சுட்டிக் காட்டுகிறது. வேறு யாரிடமோ பகையில்லாமல், போருக்குப் போகாமல், சண்டைக்குப் போகாமல் இந்த பொதுவுடைமைத் தத்துவத்தைக் கூறியிருக்கின்றார்கள். இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். காங்கிரஸ் கூட 20 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கின்றது. இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் ஆளுகின்றபோதும், சமதர்மம் பேசியிருக்கின்றார்கள். அவர்கள் வாயளவுக்குத்தான் பேசி யிருக்கின்றார்கள். அவர்கள் சமதர்மத்தைச் செய்து காட்ட



1973 மார்ச் 3] [திரு. சி. வி. ராஜகோபால்]

வில்லை. பஸ்ஸைத் தேசிய உடைமையாக்கியிருந்தால், இந்தச் சொல்லை நான் சொல்லமாட்டேன். மேட்டூர் அலுமினியம், தொழிற்சாலையை—மால்கோ இண்டஸ்ட்ரீஸை—நாம் தேசிய உடைமையாக்குகிறோம். நாட்டுடைமையாக்குகின்றோம். அவர்களை யெல்லாம் காப்பாற்றுவதற்குத்தான் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கின்றார்கள் என்று நான் நம்பு கிறேன். பெரிய கோடீஸ்வரர்களெல்லாம் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கீழே இருக்கிறார்களே, தொழி லாளர்கள், அவர்கள் "முதலாளி ஒழிக, ஒழிக" என்கிறார்களே, அதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற இதைக் கொண்டுவந்திருக் கிறார்கள். முதலாளிகள் தயவுசெய்து கலைஞர் மீது வருத்தப் படக்கூடாது. காரணம் அவர்கள் உங்களைக் காப்பாற்றுகின் றார்கள். உங்களையும் காப்பாற்றி, அந்த ஏழை மக்களையும் காப்பாற்றி, வாழ்விக்க இது ஒரு நல்ல வழி என்பதுதான் இந்தத் திட்டம். முதலாளி ஒழிக ஒழிக என்று கடுமையாகச் சொல்லு கின்ற நிலைமை வளர்ந்து, முதலாளிகள் ஒழிக்கப்பட்டுவிடுவார் களோ என்ற ஆபத்தால், ஆபத்தான நிலையிலிருந்து பலபேர் தப்ப வேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திட்டம். பஸ்களைப் பொதுவுடைமையாக்கி, தேசிய உடைமையாக்கி விட்டால், எவ்வளவு பெரிய ஆபத்து வந்துவிடும்? அங்கே 4, இங்கே 3 பஸ்கள் நின்றுவிட்டது என்றால், அதெல்லாம் குறை, அதை நிவர்த்தி செய்து கொள்ளலாம். எந்த நிமிஷமும், எந்த நேரமும் நாம் அவைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். ஓடுகின்ற பஸ்கள், நாலரைகோடி மக்களுக்கு அதிலே உரிமை யிருக்கிறது என்று சொல்லுகின்ற அளவுக்கு தேசிய மயமாக்கப் பட்டிருக்கின்றன என்றால், அதற்காகப் பாராட்ட வேண்டாமா? தமிழ் நாட்டு மக்கள், நாலரை கோடி பேர்களும் பாராட்டித்தானே இருக்க வேண்டும். (சிரிப்பு.) மற்றவர்களையெல்லாம் சிரிக்க வைக்கின்ற காரணத்தாலே, எனக்கும் கொஞ்சம் சிரிப்பு வருகின்றது. அதற்காக நீங்கள் சிரிக்கிறீர்களே என்று நான் அழவா முடியும்?

நமக்கு இருக்கின்ற சங்கடங்களைப்பற்றியெல்லாம் சொல்லி வந்தார்கள். மின்சார வெட்டு. உள்ளபடியாக மழை ஓரளவுக்குச் சதி செய்துவிட்டது என்பது தமிழ் நாட்டு நாலரை கோடி மக்களுக்கும் தெரிந்த ஒன்றாகும். அவர்கள் உணர்ந் திருக்கின்றார்கள். இப்போது இருக்கின்ற நிலைமையிலே நாம்

எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து நாம் அதற்கு என்ன ஆவன செய்ய வேண்டும் என்பதை இப்போது எண்ணிப்பார்க்க வேண்டும். நம்மிடையே இருக்கும் வித்தியாசங்களை மறந்து ஆவன செய்ய வேண்டும். மின்சாரம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கோட்டைக்கு வந்து கூக்குரலிடுகிறார்கள். மின் சாரம் என்ன கோட்டையிலா இருக்கின்றது? நெய்வேலியில் போராட்டம் செய்தாலும் பரவாயில்லை. இங்கே பேசின் பிரிட்ஜ், என்னூர் இருக்கின்றன. ஒரே கூக்குரலிட்டுக்கொண்டு கொடியைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள். எல்லா விஷயமும் தங்களுக்கு நன்றாகத் தெரியும் என்றும், தெளிவாக உள்ளவர்கள் என்றும் பேசிக்கொள்ளுகின்றார்கள். அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, அது எனக்குத் தெரியாது. அப்படிப் பேசிக் கொள்கின்றவர்கள் அத்தனை பேரும் எதிர்க்கட்சிக்காரர்கள். இவர்களெல்லாம் ஒன்றாகக் கூட்டுச் சேர்கின்றார்களே. எதற்குச் சேர வேண்டும்? கலைஞர் அவர்கள் ஏதோ பெரிய காவியம் எழுதுகின்றவர், ஓவியம் எழுதுகின்றவர், எல்லாம் தெரிந்தவர் என்ற காரணங்களுக்காக, அவரோடு மக்கள் இல்லை. அவர் கொண்டிருக்கின்ற இலட்சியம், கொள்கை அவைகளுக்காக எல்லா மக்களும் அவரை முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்களே தவிர,
6–20 பி.ப. வேறு அல்ல. மற்றவைகளுக்கு என்று இருந்தால், கொஞ்சப் பேர்தான் இருந்து கொண்டிருப்பார்கள். அவருக்கு ஏதோ ஒரு லட்சியம். அந்த பொதுவான லட்சியம் அவருக்குச் சொந்தம். இவருக்கும் அந்த லட்சியம் தெரியும். நாவலர் அவர்களுக்கு அகம் தெரியும், புறம் தெரியும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு தெரியும். அதற்காக அவரிடம் மக்கள் இல்லை. அவருடைய லட்சியத்திற்காக அவரிடம் மக்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றேன். அப்படித்தான் அமைச்சர்கள் இருக் கின்றார்கள். அமைச்சர்கள் எல்லாம்கூட கொள்கைகளுக்காக நாட்டிலே வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கொள்கைகள் அவர்களிடத்திலே இல்லையென்றால், அவர்களே இறங்கிப் போய்விடுவார்கள். அப்படி முன்னேற்றக் கழகத்திற்கு அண்ணா அவர்கள் உருவாக்கியிருக்கின்ற லட்சியத்துக்காக, கொள்கைக்காகத்தான், அதை நிறைவேற்றத்தான் இவர்கள் இருக்கிறார்களே தவிர அவர்களுக்காக ஒரு தனி எண்ணம் இருந்து அதை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அவர்களில்லை. பார்க்கிறீர்களே, ஏழைகளுக்காக எத்தனையோ நன்மைகள் இதிலே





இருக்கின்றனவே. அண்ணா அவர்கள் சொல்வார்கள்: "நந்தன் நல்ல உழைப்பாளி. 40 ஏக்கர் நிலத்தில் நல்ல பயிரிட்டு உழைத்து வந்தான். உள்ளங்காலில் வெள்ளெலும்பு முளைத்த நாளிலிருந்து நான் நிலத்தில் பாடுபடுகிறேனே, ஐயனே, ஆண்டே, எனக்கு ஒரு நாள் லீவு கொடு, சிதம்பரத்தில் இருக்கிற நடராஜனை தரிசிப்பதற்கு என்று கேட்டான். கொடுக்கவே இல்லை. இவ்வளவு நிலத்தில் வேலை செய்து பயிரிட்டு, 40 வேலி நஞ்சை நிலத்தில் நெல்லைப் பயிரிட்டு உழைக்கிறேன். ஆண்டே, ஐயனே, இந்த அடிமைக்கு ஒரு நாளைக்கு லீவு தரவேண்டும், ஐயனைப் போய் தரிசிப்பதற்கு, நடராஜனை தரிசிக்க, என்று கேட்டான். ஆனால் லீவு கிடைக்கவில்லை". இப்படி நடராஜனைக் கூட தரிசிப்பதற்கு லீவு கொடுக்காத அந்த மிட்டாதார்கள், மிராசுதார்கள் திருக்காட்டுப்பள்ளியில் அன்றைக்கு இருந்தார்கள். ஆனால் இனிமேல் அந்தக் குறை இருக்கக் கூடாது என்பதற்காக உழுகிறவர்களுக்கே நிலம் சொந்தம் என்று திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அன்றைக்கு அண்ணா, "அவர் அந்த ஊர் ஜமீன்தார். அவருக்கு அந்த ஊரில் இருக்கிற அவரின் நிலத்தைப் பற்றியே தெரியாது. வெள்ளிப் பெட்டி ஜமீன்தார்" என்று சொல்வார்கள். "அவருக்கு வெள்ளிப் பெட்டிதான் தெரியும். அவருக்கு நிலத்தைப்பற்றித் தெரியாது. அங்கே என்ன விளைந் திருக்கிறதென்று தெரியாது" என்று சொல்வார். அதை மாற்றத் தான் இன்றைக்கு ஒரு அருமையான திட்டம் வந்திருக் கிறது. நல்ல திட்டம். 3 ஏக்கராவோ, 5 ஏக்கராவோ, 15 ஏக்கராவோ அந்தக் குத்தகை நிலத்திலே விழுந்து, அந்த நிலத் திலேயே கிடந்து உற்பத்தி செய்து தருகின்ற, 360 நாளும் சேற்றில் உழுகின்ற, பாடுபடுகின்ற அந்த உழுகிறவர்களும் அந்த நிலத்தை வாங்கி அனுபவிக்க வேண்டும் என்பதற்காக நிரந்தர மாக ஒரு பாங்கை உண்டாக்கியிருக்கிறார்கள். அந்த பாங்கை கன்ட்ரோல் செய்வதற்கு, அகத்திலிருந்து ஒரு செயலாளர் போல, அந்தக் கடனைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக . . . (மணி அடிக்கப்பட்டது.) இப்படிப்பட்ட நிலையெல்லாம் இருக்கிறது. தலைவர் அவர்களே, உங்களின் உத்தரவின்மீது 5 நிமிடத்தில் முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

5 ஆண்டுத் திட்டங்கள் போடப்பட்டன. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய 4-ம் ஆண்டு முடிந்து, 5-ம் ஆண்டும் முடிந்திருக்கிறது. 4-ம் ஆண்டு முடிவடைய இருக்கிறது.

இதற்கு நமக்கு மத்தியிலிருந்து கிடைத்த உதவி எங்களுக்கு நன்கு தெரியும். நீங்கள் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். முதலில் 10 சதவிகிதம் உதவி வந்து, இப்போது அது 4 சதவிகிதம் ஆகத் தேய்ந்திருக்கிறதென்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அது அல்ல முக்கியம். ஆனால் அவர்கள் கோடி கோடியாகச் செலவு செய்கிறார்கள். 3 ஆயிரம் கோடி என்கிறார்கள், 7 ஆயிரம் கோடி என்கிறார்கள், 12 ஆயிரம் கோடி என்கிறார்கள், ஐந்தாண்டுத் திட்டங்களுக்குச் செலவு செய்கிறபோது. ஆனால் இவ்வளவு செலவு செய்வதற்கு வருவாய் வரவேண்டும் அல்லவா ? அது இருக்கிறதா, இல்லையா ? நேரு காலத்தில் மத்தாய் என்பவர் இருந்தார். அவர் சொன்னார், நாம் இவ்வளவு கோடி கோடியாகப் போட்டு திட்டம் உருவாக்கியிருக்கிறோமே, அதனால் ஏதாவது முன்னேற்றம் வந்திருக்கிறதா, அந்தத் திட்டங்களால் பலன் வருகிறதா என்று பார்த்து, பிறகு செலவு செய்யலாம், அதற்கு ஒரு 'கேப்' (gap) தர வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆனால் நேரு அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது தொடர்ந்து நடக்கட்டும் என்று சொன்னார். கடைசியில் அவரின் கருத்தைப் பிடிக்காததாலோ என்னவோ, அந்த மத்தாய் அன்றைக்கு ராஜினாமா செய்துவிட்டுப் போய் விட்டார். எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், நேரு அவர்கள் 3 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பிறகும், "நான் திட்டங்களையெல்லாம் போட்டேன். அதனுடைய பலனெல்லாம் இந்த நாட்டு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும் என்று பார்த்தேன். கிடைக்கவில்லை. ஆனால் அது யார் யாருக்கோ போய்விட்டது" என்று வேதனைப்பட்டார். இப்படித் தெரிவித்த பிறகாவது, ஏதாவது பலன் இருக்கிறதா என்று பார்த்தால், இன்றைக்கு மத்திய சர்க்காருக்குப் பணம் போதவில்லை என்று சொன்னால், 'நாசிக்கில்' நோட்டுக்களை அச்சடித்துக் கொள்ள முடிகிறது. உலக பாங்கில் பணம் வாங்கிக்கொள்ள முடிகிறது. இப்படி நோட்டுக்களை ஏராளமாக அடித்து, மூட்டை மூட்டையாகத் தள்ளிக்கொண்டிருந்தால், நாம் எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும், இன்றைக்கு நாட்டில் 'இன்ஃப்ளேஷன்' உண்டாகி, ஒரு ரூபாயின் மதிப்பு 10 பைசா, 20 பைசா என்ற அளவிற்குக் கணக்குப் போகிறதே தவிர ஒழுக்க முறைக்க இந்த நோட்டுக்கு மதிப்பே இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கு





ஒரு சவரன் 205 ரூபாய் விற்கிறது. 218 ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் மத்திய சர்க்காரை நாங்கள் கேட்கிறபோது, மத்திய சர்க்காரைக் குறை சொல்வதாகச் சொல்கிறார்கள். மின்சாரத்திற்கு வரி போட்டிருக்கிறார்களே. கேட்டோமா ? ஆனால் இங்கே கேட்கிறோம். இன்றைக்கு நமக்கு மின்சாரச் சாமான்கள் தேவைப்படுகின்றன. இன்றைக்கு இந்தச் சாமான்களின் விலை வரி போட்டதால் ஏறிப்போயிருப்பதால், மின்சார உற்பத்தியை அதிகமாக்கலாம் என்று பார்த்தால், முடியவில்லை. இதைக் கேட்பதற்கு ஆளில்லை. நூலைப் பற்றிப் பேசினார்கள். அதற்கு விலையை ஏற்றிவிட்டார்கள். இன்றைக்கு நூல் விலை ஏறியிருக்கிறது. 80-லிருந்து, 90-லிருந்து 150 ஆகியிருக்கிறது என்று கூக்குரலிடுகிறோம். ஆனால் இந்த விலையை யார் நிர்ணயம் செய்வது ? அதைப் பற்றி யோசித்தோமா ?

இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நாடு பூராவும் தலைவிரித்தாடுகிறது. மத்திய சர்க்கார் 100 கோடி ரூபாய், செலவில் வேலை வாய்ப்பைப் பெருக்குகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் என்ன பிரயோஜனம் ? எங்களுடைய கையில் கொஞ்சம் அந்தப் பணத்தைக் கொடேன். அந்தப் பிரச்சினையை எப்படி சமாளிக்கிறோம் பார். நாங்கள் எவ்வளவு செய்திருக்கிறோம் ? அது தெரியாதா ? 1967-க்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிறபோது, விவசாய உற்பத்தி 40, 42 லட்சம் டன்தான். ஆனால் எங்களுடைய முயற்சியால் இன்றைக்கு 72 லட்சம் டன் உற்பத்தியாகிறது. அதனால் இன்றைக்கு அரிசி விலை எ[illegible]ருக்கிறது. அதை மறந்துவிட்டோமா ? நாங்கள் இப்படி உற்பத்தியைப் பெருக்கவில்லையென்றால், நிச்சயமாக ஒரு படி அரிசி 5 ரூபாய் விற்றிருக்கும். ஆனால் நாங்கள் இப்படி உற்பத்தியைப் பெருக்கியதால் இன்றைக்கு ஒரு படி அரிசி 1¾ ரூபாய், 2 ரூபாய்க்கு விற்கிறது- யார் வேண்டுமானாலும் போய் வாங்கிக்கொள்ளக் கூடிய நிலையிலிருக்கிறது. ஆனால் மற்றப் பொருள்களின் விலையேற்றத்திற்குக் காரணம் அவர்கள் அல்லவா ? இன்றைக்கு மற்றவர்கள் மூட்டை மூட்டையாக நோட்டை வைத்துக்கொண்டு பொருள்களை வாங்குகிறார்கள். அதைத் தடுக்கிற உரிமை முதலமைச்சருக்கு இல்லை. இன்றைக்கு மணிலாக் கொட்டையை இங்கேயிருந்து பம்பாய்க்காரர்களும், குஜராத்காரர்களும்

வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இங்கே நமக்கு மணிலாக் கொட்டை கிடைக்காததால், அந்த எண்ணெயின் விலை ஏறிப் போயிருக்கிறது. ஆனால் அவர்களைத் தடுத்து நிறுத்த நமக்கு அதிகாரமில்லை. இன்றைக்கு நம்மிடம் 'காண்ட்' இல்லை. ஆதலால் அதை வாங்குவதற்கு இன்றைக்குக் கோளாவுக்கு அரிசி கொடுக்கிறோம், சிமெண்ட் கொடுக்கிறோம். இப்படி ஆலாய்ப் பறக்கிறோம். இப்படிக் கஷ்டப்படாமல், பாய் போட்டுக் கொண்டு தூங்குகிற அளவிலே முன்னேற்றக் கழக அரசோ, அமைச்சர்களோ இல்லை.

அடுத்து, ஆசிரியர்களின் பிரச்சினை. அருமை நண்பர் திரு. முத்துசாமிக்குத் தெரியும். அவர்கள் எல்லாம் ஆசிரியர் பெரு மக்கள். இன்று காலை அவர்களை பார்த்திருப்பார்கள். அது எவ்வளவு சந்தோஷமான நிகழ்ச்சி. சொல்வார்கள் மாதா, பிதா, குரு என்று. ஆசிரியர்கள் தான் முக்கியமானவர்கள். மாதா, பிதாவை விட முக்கியமானவர்கள், உயர்ந்தவர்கள். அவர்கள் அல்லவா காப்பாற்ற வேண்டியவர்கள். ஆசிரியப் பெருமக்களே, நீங்கள் எல்லாம் பி.ஏ. படித்த பட்டதாரிகள். உங்களை மனம் உருகிக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு அரசு செய்கிறதை நீங்கள் அல்லவா நாட்டுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்களா சொல்வது? ஆகவே உங்களுக்கு எவ்வளவோ அவர்களால் முடிந்தவரையில் செய்திருக்கிறார்கள். அதை என்னுடைய அருமை நண்பர், என் வயதுக்கு ஒத்தவர் திரு. ராஜா அய்யர் அவர்கள் எவ்வளவு
பி.ப. 6–30 பாராட்டினார்கள். அது எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது.

திரு. செ. முத்துசாமி : தெருவில் கொடி தூக்குவதற்கு முன்பாக, அரசாங்கம் உதவி செய்ய முன்வரும்போதெல்லாம், நிச்சயம் போராட்டம் வராது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, கொடி தூக்குவது இவர்கள் பழக்கமாக இருக்கக்கூடாது. ஏனென்றால் இவர்கள் படித்தவர்கள். படிக்காதவர்கள், என் போன்ற பாமரர்களாக இருந்தால், அதைச் செய்யலாம்.



திரு செ. முத்துசாமி : கொடி தூக்கும்படி விடக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : விடக்கூடாது என்பதல்ல. அரசு காப்பாற்றவேண்டிய நாட்டு மக்கள் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள். 10 ரூபாய்-டியர்னஸ் அலவன்ஸ் யாருக்கு? அவர்கள் கேட்கக்கூட இல்லை. பரிதாபத்துக்குரியவர்கள். 300 ரூபாய், 400 ரூபாய் வாங்குகிறார்கள். பாவம். அவர்களும் தம் மாதிரித்தானே என்று வாரித் தந்திருக்கிறார்களே, வாரித் தராமல் இல்லை. இவ்வளவெல்லாம் செய்கிறபோது, நீங்கள் அல்லவா நன்றி விசுவாசம் காட்ட வேண்டும். இப்படிச் சுமார் 50 லட்சம் பேருக்கு—தலைமைச் செயலகத்திலே இருக்கிறவர்களுக்கும் மற்ற டவுன் மன்றங்களில் இருக்கிறவர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 1½ லட்சம் பேர் கஷ்டத்தை அனுபவிக்கும்போது, கொஞ்சம் சாதாரண சுகவாசியாக நம் மதிப்புக்குரிய திரு கிருஷ்ணசாமி நாயுடு மாதிரியாகச் சிலர் இருக்கிறார்கள். பரவாயில்லை, எப்படியோ பிழைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறார்கள். மூன்று கோடி மக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காப்பாற்ற வேண்டுமே. கேட்கிறீர்கள். நல்ல கேள்வி. 10 ரூபாய் கொடு, 20 ரூபாய் கொடு இல்லாவிட்டால் கொடி தூக்குவோம் என்று சொல்கிறீர்களே. முதலமைச்சரின் பொறுப்பு 3 கோடி மக்களைக் காப்பாற்ற வேண்டியது. இரண்டு வேளை கூட சாப்பிட முடியாமல் ஒரு வேளை மட்டும் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறானே, அவனை அல்லவா காப்பாற்ற வேண்டும். அந்தக் கொள்கை உறுதிக்காகத்தானே இங்கே அவர் இருக்கிறார். இந்த நாட்டுக் குடிமகனை, கடைசியில் இருப்பவனை, கந்தல் கூட இல்லாதவனை அல்லவா அவர் பார்க்க வேண்டும்? அதற்கு நீங்கள் ஒத்துழைக்கத் தானே வேண்டும். 10 ரூபாய் வாரித் தந்ததை நான் ஏதோ பொறாமையால் கூறுகிறேன் என்று நினைக்காதீர்கள். முதலமைச்சர் அவர்கள் இன்னுமுள்ள 3 கோடி மக்களைக் காப்பாற்ற வேண்டும். ஆகவே கஷ்டங்களை எல்லோரும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும். கிராமத்தில் ஒரு கொடிய புலி வந்து புகுந்து விட்டால், எல்லோரும் சேர்ந்துதான் அந்தப் பொல்லாத புலியை அடித்து விரட்ட வேண்டும். அதற்குப் பிறகு உங்கள் கொடியை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். புலியை விரட்டியடிப்பதற்குப் பதிலாக நெருக்கடியான காலத்தில் ஓவென்று கூச்சல் போட்டு,

[திரு. சி. வி. ராஜகோபால்] [1973 மார்ச் 3

புலி தானே, விடு, கடிக்கட்டும் என்று அந்த ஈன புத்தி மற்றவர்களுக்கு இருக்கக்கூடாது என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நாம் எவ்வளவோ செய்திருக்கிறோம். ஆகவே எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு எம். எம். பக்கர்** : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ள உபரி பட்ஜெட்டை வரவேற்று, முதலிலே அவர்களுக்கு வாழ்த்தைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாடு முழுவதும், மத்திய அரசிலிருந்து மாநில அரசுகள் வரையிலே, பற்றுக்குறை பட்ஜெட்டுகளும் வரி விதிப்புகளும் போடுவதாக தினசரி பத்திரிகைகள் அலறிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழகத்திலே கலைஞர் அவர்கள் தொடர்ந்து உபரி பட்ஜெட்டை வைக்கக் கூடிய நிலைமையில் இந்த அரசை வைத்திருக்கிறார்கள் என்பதற்காகத்தான் என்னுடைய வாழ்த்தினை நான் முதலிலே தெரிவித்தேன்.

மற்றொன்றுக்காகவும் முதலமைச்சர் அவர்களுக்கு என் வாழ்த்து உரித்தாக வேண்டும். 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே பட்ஜெட் வருகிறது என்று சொன்னாலே, நாட்டிலே ஒரு பயம். டிரான்சிஸ்டர் ரேடியோவை வைத்துக்கொண்டு பட்ஜெட் சமாசாரத்தைக் கிராமத்திலே கேட்பவர்கள், அது தெளிவாகக் கேட்க வேண்டும் என்பதற்காக, டிரான்சிஸ்டரைக் கையிலே பிடித்து காதுக்குப் பக்கத்தில் வைத்துக்கொள்வார்கள். மற்றொரு கையை நெஞ்சிலே வைத்திருப்பார்கள். எந்த வரி ஏறுமோ, எந்தப் புதிய வரி வருமோ என்ற பயம். பட்ஜெட்டைக் கேட்டவுடனேதான் இரண்டு கையையும் எடுப்பார்கள். இந்த பழக்கம் இருந்தது போக, குறிப்பாக சமீப ஆண்டுகளிலே, அதுவும் கலைஞர் அவர்களிடத்திலே நிதித்துறை வந்த பிறகு, நாட்டு மக்கள் மத்தியிலே அந்த பயம் மாறி ஒரு ஆவல் வந்திருக்கிறது. பட்ஜெட்டை கலைஞர் அவர்கள் சமர்ப்பிக்கிறார்கள் என்று சொன்னால், புதிதாக என்ன நன்மை வரும், என்ன புதிய திட்டம் வரும் என்று எதிர்பார்க்கிற நிலைமையிலே நாட்டு மக்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் கலைஞர் அவர்களிடத்திலே ஒரு தனித் தன்மை உண்டு என்பது நமக்கெல்லாம் தெரியும். அவர் செய்யும் எந்தக் காரியமும் பிறரைப் பின்பற்றுவதாக இருக்காது. ஒரு



1973 மார்ச் 3] [திரு. எம். எம். பக்கர்]

தனித் தன்மை உள்ளதாக இருக்கும். அதோடு யாருடைய கற்பனைக்கும் எட்டாத ஒன்றை அவருடைய பட்ஜெட்டிலும் சரி, பிறந்த நாட்களிலும் சரி, நாட்டு மக்களுக்குக் கொடுப்பது அவர்களுடைய வழக்கம். அந்த வழக்கப்படி இந்த பட்ஜெட்டிலே புதிய வரி என்ற எதுமே இல்லாமல் உபரி பட்ஜெட்டை வைத்தது மாத்திரமல்ல. மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும், 10,000 மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் ஒரு அருமையான திட்டத்தையும் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே சேர்த்திருக்கிறார்கள். மனிதனுடைய தேவைகள், முக்கிய தேவைகள், அத்தியாவசிய தேவைகள், 'பேசிக் நெசெசிட்டீஸ்' என்று சொல்கிறார்களே, அந்த அத்தியாவசியத் தேவைகளிலே மிக முக்கியமான தேவை அவனுக்கு மனை, அவன் தங்குவதற்கு ஒரு இடம். பட்டினியாகக் கிடந்தாலும், ஆடை இல்லாமல் இருந்தாலும் கூட, மானமாக ஒரு இடத்திலே ஒதுங்கியிருப்பதற்கு ஒரு இல்லம் தேவை. மனித சமுதாயத்திற்கு தங்குவதற்கு இடம் இல்லாமல் போனால், எவ்வளவு மோசமான நிலையிலே மனித சமுதாயம் இருக்கிறது என்பதை இயேசு கிறிஸ்து அவர்கள் ஒரு தடவை சொல்லிக் காட்டினாராம். "குருவிக்கு வாழ்வதற்கு கூடு உண்டு, பாம்புக்கு வாழ்வதற்கு புற்று உண்டு, ஆனால் கேடுகெட்ட மனிதனே, உனக்கு வாழ்வதற்குத் தான் ஒரு இடம் இல்லையா?" என்று மனித சமுதாயத்தைப் பார்த்து அவர் பரிதாபப்பட்டதாக சரித்திரம் சொல்லும். அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையில், பாரம்பரியம் பாரம்பரியமாக, நூற்றுண்டு நூற்றுண்டாக, காடுகளிலேயும் ஆற்றங்கரையிலேயும், குடிசை இல்லாமல் வாழ்ந்தவர்களுக்கு இந்த அரசு ஒரு சில செண்ட் நிலத்தை ஒதுக்கி "இது உன்னுடைய நிலம், இதிலே நீ வீடு கட்டிக் கொள்ளலாம்" என்று முதல் முதலாக நிலம் வழங்கியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் நாம் பார்த்தோம். அந்த ஏழைகளுக்கு நிலம் வழங்கிவிட்டால் மட்டும் போதாது. அவர்கள் அதிலே வீடு கட்டிக்கொள்ள முடியாது. அதற்கு அவர்களிடம் வசதியில்லையென்று கண்டபோது, பட்டாவைக் கொடுத்தது மட்டுமல்லாமல் உனக்கு அரசு வீடு கட்டிக்கொள்ள உதவி செய்யும், உன்னை வாழவைக்கிறேன் என்று சொல்லி, குறைந்தது 10,000 மக்களுக்காவது அந்த உதவியைச் செய்கிறார்கள். நாம் இதைச் செய்கிறபோது, இது சோஷலிசமா அல்லவா என்பதுபற்றிச் சில நண்பர்கள் நேற்றுக் கூட இங்கே பேசினார்கள். எதிர்க் கட்சி

வரிசையிலே ஒரு அங்கத்தினர் இது சோஷலிசம், சமதர்மம் என்று ஒத்துக்கொள்ள முடியாது என்றெல்லாம் பேசினார். சோஷலிசம், சமதர்மம் என்ற வார்த்தைக்கு, இது தான் சோஷலிசம், இதுதான் சமதர்மம் என்று கூறிக்கொள்ள உலகத்தில் யாருக்கும் சொந்தமில்லை. நம்முடைய நாட்டிலேயே பார்த்தாலும்கூட சோஷலிஸ்டுகள் இரண்டு கட்சிகளாக இருக்கிறார்கள். அவர்கள் இரண்டு முகாம்களாக இருக்கிறார்கள். ஒரு முகாமை இன்னொரு முகாம் ஒத்துக்கொள்ளாது. அதனால்தான் எது சோஷலிசம் என்று வருகிறபோது, பண்டித நேரு அவர்கள் சோஷலிசத்தைப்பற்றிப் பேசுகிறபோது, 'சோஷலிஸ்டிக் பேட்டர்ன் ஆப் சொசைட்டி' என்ற ஒன்றைச் சொல்லி வந்தார்கள். இந்த சோஷலிசத்தை அவரோடு சேர்ந்த நண்பர்கள் ஜெயப்பிரகாஷ் நாராயண், அசோக் மேத்தா போன்றவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. மேலாக, பேருக்கு சோஷலிசம் பேசி வருகின்ற இந்த நாட்டில், திராவிட முன்னேற்றக் கழகம் சமதர்மம் கொண்டு வருகிறதைப் பார்க்கின்றபோது, அழகான விளக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து கொடுத்தார்கள். அதுதான் 'சையன்டிபிக் சோஷலிசம்', அதுதான் 'பிராக்டிகல் சோஷலிசம்', அதுதான் விஞ்ஞான ரீதியான சோஷலிசம், அனுபவ ரீதியான சோஷலிசம். நமக்கு ஆசை இருக்கலாம். எத்தனையோ ஆசைகள் இருக்கலாம். 4½ கோடி தமிழர்களும் மோட்டாரில் போகவேண்டுமென்று ஆசை இருக்கலாம். முடியுமா அந்தக் காரியம். எல்லோரும் பங்களா கட்டிக் கொண்டு வாழ வேண்டும் என்று ஆசை இருக்கலாம். முடியுமா அந்தக் காரியம். ஏழை மக்களிடம் இந்த சோஷலிச ஆசையைத் தூண்டி விடுவதன் மூலம் ஏதோ அரசியல் லாபம்தான் பெற முடியும். அந்த சோஷலிசத்தை எந்த அளவில் அமுல் நடத்த முடியும் என்பதை ஆராய்ந்து கொஞ்சம், கொஞ்சமாக அந்த சோஷலிசத்தைக் கொண்டு வருவதில் கலைஞர் அவர்கள் காட்டுகின்ற அடக்கத்தையும் அதே சமயத்தில் அவர்கள் காட்டுகின்ற ஆணித்தரத்தையும் நான் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது. நேற்றுப் பேசிய ஒருவர் இந்த அறிக்கையில் சமதர்மமே இல்லை, சோஷலிசத் திட்டமும் இல்லை என்று சொன்னார். பல பேர் அப்படித்தான் சொல்வதாகக் கூடச் சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய கணக்குப்படி அவரவர்களுடைய கட்சித் தலைவர்கள் எதைச் சோஷலிசம் என்று சொல்கிறார்களோ அதைத்



தான் சோஷலிசம் என்று சொல்வார்கள். மற்றவர்கள் எதைக் கொண்டு வந்தாலும், இது என்ன பிரமாதமா, இது ஒரு சோஷலிசமா என்று அலட்சியப் படுத்திப் பேசுவதில் அவர்களுக்கு ஒரு சந்தோஷம். இது என்ன பிரமாதம் என்று சொல்லிக்கொண்டேயிருப்பார்கள். நாவலர் அவர்கள் அடிக்கடி சொல்வார். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்துவிட்டு ஸ்பெயினுக்குத் திரும்பி வந்தானாம். பல பேருக்கு அவன்மேலே பொறாமை ஏற்பட்டது. நாங்களும் எட்டு நாட்கள் முன்னால் போயிருந்தால் கண்டுபிடித்திருப்போம். எங்களுடைய பெண்டாட்டிக்கு, பிள்ளைக்கு உடம்பு சரியாகவில்லை, போக முடியவில்லை என்று பேசி பொறாமைப்பட்டார்களாம், அரசுச் சபையிலே. அரசன் பார்த்தானாம். அவர்களுடைய திறமையைப் பார்த்து விடுவோம் என்று எல்லோரையும் கூப்பிட்டு ஒரு ரவுண்ட் டேபிளில் உட்கார வைத்து, ஒரு அவித்த முட்டையைக் கொடுத்து அந்த முட்டையை தலை கீழாக வைக்க வேண்டுமென்று சொன்னானாம். யார் வேண்டுமானாலும் நிறுத்தலாம் என்று சொன்னானாம். ஒவ்வொருவனும் வந்து பார்த்துவிட்டு, நல்ல சுத்தமான இடத்தில் எப்படி வைக்க முடியும், முடியாது என்று சொல்லி விட்டானாம். கடைசியாக கொலம்பஸ் ஒரு வாளை எடுத்து முட்டையை இரண்டாக வெட்டி நிறுத்தி வைத்தானாம். உடனே இது எங்களுக்குத் தெரியாதா, நாங்களும் வெட்டி வைத்திருப்போம் என்று சொன்னார்களாம். ஆனால் வெட்டி வைக்க வேண்டுமென்ற எண்ணமே அதற்கு முன்னால் அவர்களுக்குக் கற்பனையில்கூட வரவில்லை. அதே மாதிரி கலைஞர் அவர்கள் சோஷலிச பட்ஜெட் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார் என்றால், அதை சோஷலிஸ்ட் பட்ஜெட் என்று ஒத்துக் கொள்ளும் அளவுக்குக்கூட சில நண்பர்களுக்கு மனம் வரவில்லை. ஆகையினால் இந்தக் கதை ஞாபகத்திற்கு வந்து அதை இங்கே எடுத்துச் சொன்னேன். இது சோஷலிஸ்ட் திட்டத்தைக் கொண்ட பட்ஜெட் அல்ல என்று இன்னொரு நண்பர் இங்கே எடுத்துச் சொன்னார். அவருக்கு சோஷலிசத்தில் எவ்வளவு நம்பிக்கையோ எனக்குத் தெரியாது. போன நூற்றாண்டில் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தம் நடந்தது. அதிலே பல பேர் இறந்து போனார்கள். அவர்களைப் பரிசோதனை செய்த டாக்டர் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சர்டிபிகேட் கொடுத்த பிறகு, அவர்களைக் கல்லறைக்கு எடுத்துச் சென்றார்கள். ஒருவன் காயமுற்று மிகுந்த மயக்கத்திலிருந்தான். அவன்

இறந்துவிட்டான் என்று டாக்டர் சர்டிபிகேட் கொடுத்து விட்டார். கொஞ்சதூரம் போனவுடனே அவனுடைய மயக்கம் தெளிந்து விட்டது. எங்கே என்னை வண்டியில் ஏற்றிக்கொண்டு போகிறீர்கள் என்று எழுந்து உட்கார்ந்து கேட்டான். வண்டி கூடப் போனவன் டிஸிப்ளின் மிகுந்த ஆள். தலைவன் சொல் வதைத்தான் கேட்பான். போடு குழியிலே என்று சொல்லி விட்டார் தலைவர், அதன்படிதான் நடக்கும் என்று சொல்லி விட்டான். உன்னை அடக்கம்தான் செய்வேன் என்று சொல்லி விட்டானாம். அதே போல் நமது கலைஞர் அவர்கள் கொடுத்துள்ள பட்ஜெட் 'சோஷலிச' பட்ஜெட் என்று தெரிந்தாலும் கூட அதை அவர்கள் வேறுவிதமாகச் சொன்ன காரணத்தால், உள்நோக்கம் காரணமாக, இதை சோஷலிஸ்ட் பட்ஜெட் அல்ல என்று சொல்கின்ற போது, எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. நேற்றுமுன்தினம் நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசியபோது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறுக்கிட்டு, கிளர்ச்சி இப்பொழுது நடைபெறுவதைப்பற்றிப் பேசுகிறார்களே, காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது கிளர்ச்சிகள் நடத்தவில்லையா என்று குறிப்பிட்டுக் கேட்டார்கள். கிளர்ச்சி அப்பொழுது செய்தது உண்மைதான். அப்பொழுது ஒரு முறையை வைத்துக்கொண்டுதான் கிளர்ச்சி செய்தார்கள். சிலவிடங்களில் வன்முறை ஏற்பட்டிருக்கலாம். பெரிய கிளர்ச்சிகள் நடக்கின்ற போது, சிலவிடங்களில் வன்முறை தோன்றலாம். காங்கிரஸ்காரர்கள் செய்த கிளர்ச்சிகளிலும் கூட, ஏன் காந்தியார் நடத்திய சௌரி சௌரா, சீராளா கிளர்ச்சிகளிலும்கூட வன்முறைகள் தோன்றின. ஆனால் எதிர்க் கட்சியில் உள்ளவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் கிளர்ச்சிகள் செய்யுங்கள், ஆனால் நீங்கள் செய்கின்ற கிளர்ச்சிகளில் நியாயம் இருக்க வேண்டும். அதிலே ஒரு பண்பு இருக்க வேண்டும். நீங்கள் எல்லாம் கிளர்ச்சிகள் செய்து பழக்கப்பட்டவர்கள். இந்த நாட்டுக்காகப் போராடி சிறை சென்றவர்கள், கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டவர்கள். எங்களுக்கும் உங்களுக்கும் அபிப்பிராய பேதம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். அந்த மரியாதையை நாங்கள் என்றைக்கும் உங்களிடம் இழந்ததில்லை. ஆகையினால்தான் சொல்கிறோம். நீங்கள் கிளர்ச்சி செய்யுங்கள். அதே சமயத்தில் இந்த நாட்டில் இரத்தப் புரட்சி ஏற்படுவதற்கும்





அராஜகம் விளைவிப்பதற்கும் கச்சை கட்டிக்கொண்டு, எங்கிருந்தோ விரட்டப்பட்டு, எங்கேயோ போய்ப் புதிதாக முளைத்த ஒரு கட்சி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கும் நிலைமையில் இருந்தால், அதற்குப் பின்னால் இந்தப் பாரம்பரியமுள்ள கட்சிகள் போக வேண்டுமா, அது தேவைதானா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நான் ஏற்கெனவே பேசுகிறபோது, ஒரு முறை சொன்னேன். கலைஞர் அவர்கள், நான் ஒருவேளை இந்த அரசாங்கத்தை யாரிடமாவது ஒப்படைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், திருவாளர் காமராஜர் அவர்களிடம்தான் ஒப்படைப்பேனே தவிர சில்லரைகளிடம் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் பொறுப்புடையவர்களிடம்தான் ஒப்படைக்க வேண்டும் என்பதுதான். ஜனநாயகத்தில் அபிப்பிராய பேதம் இருந்தாலும், நாம் மற்றவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டவர்கள். இந்த நாட்டில் பாராளுமன்ற ஜனநாயகம் நடைபெறுகின்ற வரையில், அரசியல் ரீதியாகப் போராட்டங்கள் இருந்துதான் தீரும். ஆனால் அந்தப் போராட்டங்கள் பண்புடையனவாக இருக்க வேண்டும் என்பதுதான் நாமெல்லாம் விரும்புவது. நீங்கள் நல்ல பண்பு உள்ளவர்கள். ஆகையினால்தான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

நான் 5 நாட்களுக்கு முன்பு மாயவரம் வழியாக வந்துகொண் பி.ப.
டிருந்தேன். புதிதாகப் பிரிந்து போனவர்களுடைய கூட்டம் 6-00
நடந்தது. அங்கே பேசிய பேச்சை என் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. அது பேச்சல்ல. குடித்தவர்கள் கூட அப்படிப் பேசமாட்டார்கள். சாக்கடை பாஷையில் பேசினார்கள். இதை இந்த சர்க்கார் மட்டும் அனுமதிக்காமலிருந்தால் போதுமா? பண்புள்ள எதிர்க் கட்சியினர், தலைவர்கள் அனுமதிக்கலாமா? அரசியல் பேசட்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கட்டும், எங்களை எதிர்க்கட்டும். நாங்கள் முஸ்லீம் லீகைச் சேர்ந்தவர்கள். 25 ஆண்டுக் காலமாக, காங்கிரசை எதிர்த்துப் போராடியவர்கள். ஒரு வார்த்தை எங்காவது தவறாகப் பேசியிருப்போமா, பேசியிருக்கிறோமா? உங்களுடைய கொள்கையை விமர்சித்திருப்போம். ஆனால் கடுமையான வார்த்தைகளை உபயோகித்திருக்கிறோமா? தனிப்பட்ட உங்களுடைய குடும்பத்தைப்பற்றி நாங்கள் பேசியிருக்கிறோமா? இப்படிப்பட்ட ஒரு நிலைமையை, இல்லாத நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சாக்கடை மொழியில் பேசுகின்ற, வாய்க்கு

வந்ததையெல்லாம் சொல்லுகின்ற, எங்கே வேண்டுமானாலும் கல் எறிகிற, சர்க்கார் பஸ்ஸை நிறுத்துகின்ற நிலைமை இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவது இந்த அரசின் கடமை மட்டுமல்ல, பொறுப்புள்ள எதிர்க் கட்சிப் பெரியவர்களின் கடமையுமாகும்.

அடுத்து, 6 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 10 ரூபாய் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுப்பதன் மூலம் இந்த 6 கோடி ரூபாய்க்கு முதலமைச்சர் அவர்கள் வழி செய்திருக்கிறார்கள். இந்த 6 கோடி ரூபாய் கொடுப்பது தேவை தான் என்று நான் ஒத்துக்கொண்டாலும், இப்படிச் சம்பளம் மாத்திரம் கூடிக்கொண்டே போவது பிரச்சினைகளைத் தீர்த்து விடுமா என்று தான் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் விலைவாசி உயர்வு என்பது ஒரு 'விஷியஸ்' சர்க்கிள் போன்றது, விஷச் சக்கரம் போன்றது. மத்திய சர்க்கார் போட்டி போட்டுக் கொண்டு, நோட்டை அச்சடிக்கிற வரை, திட்டங்கள் என்ற பெயரில் பல கோடிக்கணக்கான ரூபாய்களை விணடிக்கின்றவரை, பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டே தான் போகும். பணத்தின் மதிப்பு குறைந்து கொண்டு போகப் போக அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்க வேண்டிவரும். அப்படிச் சம்பளம் கொடுப்பதாலே பிரச்சினை தீராது, அந்தப் பிரச்சினை திரும்ப வரத்தான் செய்யும். இதை நம்முடைய அரசு மட்டும் தடுக்க முடியாது. ஆனால் மத்தியில் உள்ளவர்கள் 'நாசிக்' பிரஸ் கையில் இருக்கிறவரையில், எதையும் யோசனை பண்ண மாட்டார்கள். பணப் பிரச்சினை பற்றி அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சோஷலிசம் என்றால், கை நிறையச் சம்பளம் வாங்குவது தான் சோஷலிசமா ?

என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு வெளிநாட்டுக்குப் போய் விட்டு வந்தார். பாட்டாளி மக்களுடைய சொர்க்கம் என்று இங்கேயுள்ளவர்களால் வர்ணிக்கப்படுகின்ற நாட்டுக்குப் போய் விட்டு வந்தார். இங்கே தொழிலாளர்களுக்குச் சம்பளம் 100, 200 என்று இருந்தால் அங்கே 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று சம்பளம். அங்கே ஒரு பெண்ணைப் பார்த்து, உனக்கு என்ன சம்பளம், உன் கணவனுக்கு என்ன சம்பளம் என்று கேட்டபோது, என் கணவனுக்கு 2 ஆயிரம் ரூபிள் சம்பளம்; எனக்கு 2 ஆயிரம் ரூபிள் சம்பளம். . .



**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** நாணயத்தைச் சொல்லும் போதே நாடு எது என்று தெரிகின்றதே. . .

**திரு. எம். எம். பக்கர் :** புருஷன் 2 ஆயிரம், பெண்டாட்டி 2 ஆயிரம் ரூபிள் சம்பளம் வாங்குகிறார்கள். என்ன அம்மா இவ்வளவு சம்பளம் வாங்குகிறீர்களே, எவ்வளவு மிச்சம் பண்ணுகிறீர்கள் என்று கேட்டால், வாங்குகிற சம்பளம் 28 நாளைக்குத் தான் வருகிறது என்று சொன்னாளாம் அந்த அம்மாள். எப்படி என்று கேட்டால், 2,000 ரூபிள் சம்பளம் கொடுக்கிறார்கள், எல்லாச் சாமானும் சர்க்கார் கடையிலிருந்து தான் வாங்கவேண்டும். கத்திரிக்காய் விலை 85 ரூபிள், பூட்ஸ் விலை 500 ரூபிள். ஒரு கையில் சம்பளத்தைக் கொடுத்து விட்டு, இன்னொரு கையால் வாங்கி விடுகிறார்கள். இப்படிப்பட்ட பொருளாதாரத்தை அங்கே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மத்திய சர்க்காரும் இப்படிப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டு வருகிறார்கள். நாளுக்கு நாள் இந்தப் பணம் அதிகரித்துக் கொண்டே போகிறது. சியாங் கே சேக் காலத்தில் சீனாவில், ஒரு ரிக்ஷாவில் சாமான் வாங்கிக்கொண்டு வர வேண்டுமென்றால், 2 ரிக்ஷாக்களில் பணம் கொண்டு போக வேண்டும். அதே போல் இந்திய நாட்டில் பணத்திற்கு மதிப்பில்லாமல் போய்விடக் கூடாது. அதற்கு என்ன செய்ய வேண்டும் ? ஒரு வழி தான் இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் டில்லியில் எடுத்துக் காட்டியது மாதிரி, 'டாக்ஸ் ஸ்ட்ரக்சர்' ஐப் பற்றிப் பரிசீலனை பண்ணியாக வேண்டும். அன்றைக்கு பெரிய 'காண்டிரோவர்சி' ஏற்பட்டது. விவசாய வருமானத்திற்கு வரி சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். நான் விவசாயி, இந்த சர்க்காருக்கு ஒரு முறை வரி கட்டுகிறேன். அங்கேயிருந்து 'இன்கம்டாக்ஸ்' போடுகிறார்கள். நிலைமை என்னவென்றால், 10 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறதென்றால், 9 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் வரியாகக் கேட்கிறார்கள். எவனாவது ஒழுங்கான கணக்கு வைத்துக் கொண்டிருப்பானா ? சட்டம் போடுவதால் வந்து விட்டதா ? சம்பாதிக்கிறவன் ஓரளவுக்கு ஒரு தொழிலில் 'ரீ இன்வெஸ்ட்' பண்ணவிட வேண்டும். அப்போது தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். வெறும் வரியாலும், நோட்டு அடிப்பதாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகையினாலே, அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல், முடிந்த வரை அவரவர்களுடைய தனித்தன்மைக்கு ஒப்ப, இந்திய

6-55 பி.ப. நாட்டில் உபரி பட்ஜெட், வரி இல்லாத பட்ஜெட் ஒன்றைக் கொண்டு வந்த இந்தத் தமிழக முதலமைச்சர் அவர்களை மனப் பூர்வமாக வாழ்த்தி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் திங்கட்கிழமை (5—3—73) அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.



## இணைப்பு

[2 ஆம் பக்கத்தில் 170-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) தமிழ்நாட்டில், கள்ள நோட்டுகள் அச்சடித்ததற்காகவும், கள்ள நாணயங்கள் தயாரித்ததற்காகவும் கண்டு பிடிக்கப்பட்டு 1967-லிருந்து காவலரால் பதிவு செய்யப்பட்ட ஆண்டு வாரியான வழக்குகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | நாணயங்கள். | கரன்ஸி நோட்டுகள். |
|---|---|---|
| 1967 .. .. | 2 | 4 |
| 1968 .. .. | 1 | 2 |
| 1969 .. .. | இல்லை. | 2 |
| 1970 .. .. | இல்லை. | 3 |
| 1971 .. .. | 6 | இல்லை. |
| 1972 .. .. | | |
| (17—8—1972 வரை) | 1 | 1 |

(இ) கள்ள நோட்டு வழக்குகளைத் திறம்படக் கண்டு பிடித்து ஒடுக்குவதற்காக, குற்றப்புலனாய்வுத்துறையில் சிறப்புக் குழு ஒன்று இயங்கி வருகிறது. மாநிலங்களுக்கிடையில் பரவியுள்ள இத்தகைய குற்றவாளி கும்பல்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு எல்லை மாநிலக் காவலரின் ஒத்துழைப்பும் பெறப் படுகிறது. இத்தகைய குற்றங்களின் பரவலான தன்மை குறித்தும் போக்கும் குறித்தும் குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை மாநில நிலையில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு வருகின்றது. இவ்வகையான குற்றங்களை வழக்கமாகச் செய்யும் கன்றிய குற்றவாளிகள் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதி வைக்கப்பட்டு, தடுப்பு ஏற்பாடாக, இத்தகையோரது நடவடிக்கைகள் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## தமிழ் நாடு சட்ட மன்றம்

---

**திங்கட்கிழமை, 1973 மார்ச் 5.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

**1. வினாக்கள்—விடைகள்.**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

*"Agara Mudali" Research Book*

*179 Q.—THIRU K. S. GANAPATHY (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Ministar for Education and Local Administration be pleased to state whether there is any proposal with the Government to give financial assistance from the Tamil Development Department for the publication of "Agara Mudali" Research Book (Dictionary) that is being prepared by Devaneyappavanar?

**"அகர முதலி ஆராய்ச்சி நூல்"**

திரு. கே. எஸ். கணபதி (திரு. சு. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தேவநேயப்பாவாணர் தயாரித்து வரும் "அகர முதலி" ஆராய்ச்சி நூல் வெளியீட்டிற்கு தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித் துறையிலிருந்து நிதி உதவி அளிக்க சொற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

*Admission of Girl Students into Boys' High Schools*

*180 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether girls are permitted to be admitted into Boys' High Schools in localities where there are separate Girls' High Schools; and

(b) if so, the number of High Schools enjoying such a permission in the State?

### ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்களைச் சேர்த்தல்

திரு எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் உள்ள இடங்களில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப் படுகின்றனரா?

(இ) ஆமெனில், இம் மாநிலத்தில் அத்தகைய அனுமதியைப் பெற்ற உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். அவசியம் இருந் தால் மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது.

(இ) மூன்று.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இம்மாதிரியான பள்ளிகளில் மாணவிகளைச் சேர்ப்பதற்காக என்ன தனிக் காரணத்தை அரசு எதிர்பார்க்கிற தென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாபக்குடி யில் உள்ள எஸ்.வி. உயர்நிலைப் பள்ளியில் மட்டும் பெண்கள் அனுமதிக்கப்பட் டுள்ளனர். அனுமதியின்றி மற்றும் 3 பள்ளிக்கூடங்களில் பெண்களைச் சேர்த் திருக்கிறார்கள். அதற்கான விளக்கங்கள் அவர்களிடமிருந்து கேட்கப்பட் டுள்ளன. ஒரு இடத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கும்போது, அதிலே பெண்களைச் சேர்க்காமல், ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காக, பெண்கள் உயர்நிலைப் பள்ளியுள்ள இடத்தில்தான் அவர்களைச் சேர்க்க வேண்டு மென்பதற்காகவும், அந்தப் பள்ளிகளுடைய 'ஸ்ட்ரென்த்'-ஐப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகவும் இருக்கிறது. தக்க காரணம் சொல்லப்பட்டால் —பள்ளி மட்டும் தூரமாக இருக்கிறது என்பது போன்ற தக்க காரணங்கள் சொல்லப்பட்டால், அந்த இடத்தில் மட்டும் அனுமதிக்கலாமென்று இருக்கிறது.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Education has to attend the Convocation exactly at 4-30 p.m. So, the hon. Members are requested to put short supplementaries.

THIRU D. SANTOSHAM : One thing, Sir. In Kanyakumari district in place called 'Santhapuram' there is a Girls' High School. The District Educational Officer has ordered that



there should be no admission of girls in the boys' school. In defiance of the orders of the District Educational Officer, girls are now being admitttd in the Boy's School. What action have the Government taken, Sir?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, காந்தி கலா நிலையம், பாபக்குடி; நேஷனல் ஹைஸ்கூல், நாகப்பட்டினம்; டாக்டர் சாமுவேல் உயர்நிலைப்பள்ளி, சாந்தபுரம் ஆகிய மூன்று பள்ளிகளிலிருந்து அது பற்றிய விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. தக்க காரணங்கள் இருந்தால், அனுமதிக்கலாம்.

திரு. கே. எஸ். சுணபதி : தலைவரவர்களே, சில பெண்கள் உயர்நிலைப் பள்ளி களில் (இங்கிலீஷ் மீடியம்) ஆங்கில வகுப்புகள் இல்லாத காரணத்தால், அவர்களை ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் இங்கிலீஷ் மீடியம் வகுப்புகளை ஆரம்பிப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கே தக்க காரணங்கள் இருந்தால், அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. அதன் அடிப்படையில் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

### *Financial assistance to construct buildings for Tamil Colleges*

*181 Q.—THIRU M. RAMANATHAN (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are schemes with the Government to render financial assistance to construct buildings for Tamil Colleges; and

(b) if so, the details thereof?

### தமிழ்க் கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட நிதி உதவி

திரு. மு. இராமநாதன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்க் கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட நிதி உதவி அளிக்க அரசிடம் திட்டங்கள் இருக்கின்றனவா?

(இ) ஆமெனில், விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): கட்டிடம் கட்டுவதற்கு தமிழ்க் கல்லூரிகளிடமிருந்து மனுக்கள் வந்தால் தற்போதுள்ள மான்ய விதிகளின்படி பரிசீலிக்கப்படும்.

திரு. ம. [illegible]மூர்த்தி: தலைவரவர்களே, தற்போதுள்ள மானிய விதிகளின்படி, தமிழ்க் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் போன்று நிதி உதவி பெற தகுதி உடையனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போதிருக்கின்ற விதி முறைகளின்படி, 'Schools for Special Education for purposes of Grant-in-aid' என்கின்ற திட்டத்தின் கீழ் இது வருவதால் அவர்கள் விண்ணப்பித்தால் தரலாம். அந்த விதிகளின்படி 50 சதவிகிதம் அல்லது 50,000 ரூபாய் வரை கொடுக்கலாமென்று விதி முறைகள் உள்ளன. அவர்கள் விண்ணப்பித்தால், இந்த விதிகளின்படி பரிசீலிக்கலாம்.

## *Government College for Women, Mint, Madras*

* 182 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that P.U.C. students belonging to the Government College for Women, Mint, Madras have to sit on the floor during the class hours; and

(*b*) if so, the reasons for not making proper sitting arrangements for them?

சென்னை, தங்கசாலையிலுள்ள அரசினர் மகளிர் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை, தங்கசாலையிலுள்ள அரசினர் மகளிர் கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவிகள், பாட நேரத்தின்போது, தரையில் உட்கார வேண்டியிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்களுக்கு உரிய இருக்கை வசதிகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்காததன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN: The hon. Member Thiru M. Sankaralingam is not in his seat.



## *Arrears of Pay for Graduate Teachers*

* 183 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM (on behalf of Thiru M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that in spite of Government Orders sanctioning the arrears of pay for several Graduate teachers in Government service who have been appointed to the First Grade, the Government Treasuries have been delaying the payment of the arrear bills thereon;

(*b*) whether any representation has been received in this connection; and

(*c*) if so, the action taken thereon?

பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள பாக்கி

திரு. பி. திருஞானசம்பந்தம் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசு பட்டதாரி ஆசிரியர்களில் முதல் கிரேடு வழங்கப்பட்ட பல ஆசிரியர்களது சம்பள பாக்கியை வழங்கும்படி அரசு உத்தரவு வழங்கியும், அரசு கருவூலங்களில் அதனை வழங்காமல் காலம் தாழ்த்துகிறார்கள் என்பது உண்மையா?

(ஆ) இது பற்றி முறையீடு ஏதும் வந்ததுண்டா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) 20-11-'71 தேதியிட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் ஆணையில் சில இரண்டாம் நிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு சென்ற காலம் உட்பட முதல் நிலை பதவி வழங்கப்பட்டது. இதன் தொடர்பான சம்பள நிலுவைப் பட்டியல் சில தணிக்கைத் தடைகளால் கருவூலங்களில் காசாக்க இயலவில்லை. எனவே மாநில கணக்காயர் முதலியோரிடம் உடனடியாக தொடர்பு கொள்ளப்பட்டு, கருவூலங்களுக்குத் தெளிவுரைகள் வழங்கப்பட்டுவிட்டன. இனி நிலுவைப் பட்டியல் காசாக்குவதில் தடையேதும் இருக்காது.

THIRU D. SANTOSHAM: Sir, I understand that in Dindigul Municipality, orders of the Government passed on the One-man Commission's recommendations have not been received even now

after so many months. Will the Government take steps to avoid such delay with regard to payment of salaries to teachers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றி தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றிக் கவனிக்கலாம்.

*Anti-Defection Law*

*177 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have sent any suggestion to the Central Government on the Anti-Defection Law; and

(b) if so, the details thereof?

**கட்சி மாறுதல் தடைச் சட்டம்.**

திரு எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கட்சி மாறுதல் தடைச் சட்டம் குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு கருத்து ஏதும் தெரிவித்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(ஆ) கட்சி மாறுதல் குறித்த குழுவின் பரிந்துரைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கக் கருதியுள்ள இந்திய அரசின் சட்டமியற்றுதல் சார்ந்த செயற் குறிப்புகளுக்குத் தமிழ்நாடு அரசு ஆதரவு தெரிவித்துள்ளது. இருந்த போதிலும் ஒரு மாநில அரசு தொடர்பாக, அமைச்சர்களின் உயர்ந்த அளவு எண்ணிக்கை, அந்த மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பத்து அல்லது பதினொரு சதவீதம் இருக்கலாம் என்று அந்த வரைவு மசோதாவில் கருதப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு மாறாக அமைச்சர்களின் உயர்ந்த அளவு எண்ணிக்கை மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஏழு அல்லது எட்டு சதவிதமாக வரையறுக்கப்படலாம் என்று நம்முடைய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: முதலில் கேள்வி கேட்டவர்தான் கேட்க வேண்டும். கேள்வி கேட்டவருக்குத்தான் 'ப்ரபாரன்ஸ்'. கேட்பதாக இருந்தால், கேளுங்கள்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: தலைவரவர்களே, எந்த அடிப்படையில் மாநில அரசு மத்திய அரசுக்கு யோசனை தெரிவித்திருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவர்கள் கேட்டு எழுதிய அடிப்படையில் நாம் பதில் தெரிவித்திருக்கிறோம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, மாநில அரசு அமைச்சர்களுடைய விகிதம்பற்றி முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதுதவிர, மாநில அரசு தெரிவித்துள்ள மற்றைய கருத்துக்கள் என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சர்கள் மொத்த எண்ணிக்கையில் 10 அல்லது 11 சதவிகிதம் இருக்க வேண்டுமென்று அந்தச் செயற்குறிப்பு கூறுவதற்குக் காரணம், கட்சி மாறுபவர்கள் இன்னொரு கட்சிக்குச் சென்றால், அமைச்சர்கள் ஆகிவிடலாமென்ற எண்ணத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துவிட்டால், அந்தக் கட்சி மாறுதலைத் தடுக்கலாமென்பது. அது மேலும் கொஞ்சம் இருக்க வேண்டுமென்ற முறையில் அதை 10 அல்லது 11 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக 7 அல்லது 8 சதவிகிதம் உள்ளதாக வைத்துக்கொள்ளலாமென்று நாம் கருத்தாகத் தெரிவித்திருக்கிறோம். அவர்களுடைய மற்ற கருத்துக்களை நம்முடைய அரசு வரவேற்கிறது. அதில் முக்கியமான கருத்து கட்சி மாறுகின்ற ஒருவர் ஒரு ஆண்டுக்காலம்வரை எந்தப் பெரிய பொறுப்பிலும் இருக்கக்கூடாதென்று சொல்லப்பட்டதாகும். அதை நம்முடைய அரசு ஆதரித்துள்ளது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, கட்சி மாறுதலைத் தடுப்பதற்கான மசோதாவின்மூலம் எதிர்காலத்தில் கட்சி மாறுதலைத் தடுக்க முடியும். எனினும் சென்ற பொதுத் தேர்தலிலிருந்து கட்சி மாறியவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நமது அரசாங்கம் பரிந்துரை செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது மிக நல்ல கருத்து; பாராட்டத்தகுந்த கருத்து; வரவேற்கத்தகுந்த கருத்து. இந்தக் கருத்தை, இந்தச் சட்டத்தை 1972 லேயே கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடைபெற்றும்கூட இன்னும் நாடாளுமன்றத்தில் வைக்கப்படாமல், அமைச்சர்கள் கேபினட் மீட்டிங்கில் பரிசீலிப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டமுன்வடிவு வைக்கப்படவில்லையென்று தெரிகிறது. அந்தச் சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் வைக்கப்படும் போது, இங்கிருந்து சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நமது கருத்துக்களைத் தெரிவிப்போம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கருத்தை அங்கு தெரிவிப்பாரென்று நம்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, அத்தோடு நமது மேலவையிலும், பேரவையிலும்கூட தீர்மானம் போட்டு, நமது சிபாரிசுகளை மத்திய அரசுக்குத் தெரிவிக்க நமது அரசு ஏற்பாடு செய்யுமாவென அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் என்னதான் தீர்மானம் போட்டாலும், கட்சி மாறுபவர்கள் அதை உணர்வார்கள் என்று தெரியவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, தாமதத்தின் காரணமாக இந்தக் கட்சி மாறுதல் தடைச் சட்டம் மத்திய அரசால் நிறைவேற்றப் படாமல் போனாலும், மாநில அரசாவது அந்த முயற்சியில் ஈடுபடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதில் அரசியல் சட்டம் 75-வது பிரிவைத் திருத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இது அரசியல் சட்டத்தை திருத்த வேண்டிய சட்டம். நம் அளவில் செயய முடியாது.

**திரு. எல். பலராமன்:** மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் கூறும்போது, மத்திய அரசாங்கம் 10, 11 சதம் அமைச்சர்களை நியமிக்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தும், நம்முடைய மாநிலத்தில் 7, 8 சதம் இருக்கலாம் என்று தமிழ் நாடு அரசாங்கம் பரிந்துரை செய்யும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் விஸ்தரிப்பதற்கு தமிழக அரசாங்கம் ஏதாவது அபிப்பிராயம் வைத்திருக்கிறதா? அல்லது இந்தக் கட்சி மாறிகளை மேலும் கண்டிக்கின்ற அளவுக்கு விதிகளை விதிப்பதற்கு ஏதாகிலும் மேலும் ஆலோசனைகள் கூறியிருக்கின்றதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏழு சதம், எட்டு சதம் என்பதே குறைவானதுதான். அதையே மத்திய அரசு ஏற்றுக்கொள்ளு மானால், நாம் மகிழ்ச்சியடையலாம். கட்சி மாறிகளுக்குரிய தண்டனையை தேர்தல்களிலே மக்கள்தான் தருவார்கள்.

*Poters at the Central Railway Station*

*178 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Central Station Police, Madras are aware of the nuisance caused to the public by the drunken porters at the station; and

**(b) if so, the action taken thereon?**



**சென்ட்ரல் ரயில் நிலைய கூலிகள்**

**திரு. எஸ். வெள்ளபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சென்டிரல் ரயில் நிலையத்தில் குடித்துவிட்டு பணிக்கு வரும் கூலிகளால் பொது மக்களுக்குத் தொல்லை ஏற்படுவதை சென்ட்ரல் ரயில் நிலையக் காவலர் அறிவார்களா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) ரயில்வே நிலையத்தில் பணியாற்றும் ரயில்வே காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைக் காவலர்கள் விழிப்புடனிருந்து, ரயில்வே போர்ட்டர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொள்வதைக் கண்ணுற்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அன்றியும், போர்ட்டர் பொது மக்களுக்குத் தொல்லை கொடுத்தால், அவர்களைக் கண்காணித்துக் கைது செய்யுமாறு ரயில்வே 'பிளாட்பாரக்' காவலர்களுக்கும் போக்குவரத்துக் காவலர்கட்கும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன்:** தலைவரவர்களே. ரெயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டான்ட் இப்படிப்பட்ட பொது இடங்களில் குடித்துவிட்டு குழப்பம் செய்பவர்கள் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அப்படியானால், சென்ற ஆண்டில் எத்தனை பேர் மீது எத்தனை குற்றங்களுக்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மூலக் கேள்வி ரெயில்வே நிலையத்தில் பணியாற்றும் போர்ட்டர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொள்வது பற்றியதாகும். அதன் தொடர்பாக இந்தக் கேள்விக்கு நான் பதில் அளிக்க வேண்டுமானால், குடிபோதையிலே இருந்ததாக 1971-ல் ரெயில்வே போர்ட்டர்கள் ஆறு பேர்கள் மீது வழக்குப் போடப்பட்டு 5 பேர்கள் தண்டிக்கப் பட்டுள்ளனர். 1972-ல் சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷனில் பொதுமக்களுக்குத் தொல்லை கொடுத்ததற்காக, 2 ரெயில்வே போர்ட்டர்கள் மீது குற்றம் சாட்டப் பட்டு, அவர்கள் இருவரும் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவரவர்களே, குடித்துவிட்டவர்கள் வேலைக்கு அனுமதிக்கப்படக்கூடாது என்று ஏதாவது தடை உத்தரவு இருக்கின்றதா? அல்லது அப்படி ஏதாவது தடை உத்தரவு கொண்டுவர அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது ரெயில்வே சம்பந்தப்பட்ட விஷயம். அங்கு இருக்கின்ற நம்முடைய போலீஸார் அதைக் கண்காணித்து வருகின்றார்கள். அம்மாதிரிக் குடித்துவிட்டு இது போன்ற பணிகளில் ஈடுபடுபவர்கள். பொது மக்களுக்குத் தொல்லை கொடுத்தால், உடனடியாகக் காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டும், கைது செய்யப்பட்டும் கஷ்டப்படுகிறார்கள்.

*Dead Ants in soft drink*

* 184. *Q.*—Thiru G. SWAMINATHAN and Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a complaint was lodged by a citizen of Madras during the fourth week of August 1972 with the Health Officer of the Corporation of Madras regarding dead ants found in a popular soft drink;

(*b*) if so, the nature of the complaint; and

(*c*) the action taken thereon?

குளிர்பானத்தில் இறந்த எறும்புகள்

திரு. ஜி. சுவாமிநாதன்—திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெருமளவில் பெயர் பெற்ற குளிர்பானம் ஒன்றில் இறந்த எறும்புகள் காணப்பட்டமை குறித்து, சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரியிடம், 1972-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் நான்காம் வாரத்தில் சென்னை வாசி ஒருவரால் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், புகாரின் தன்மை யாது?

(உ) இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

The Hon. Thiru K. ANBAZHAGAN : (*a*) and (*b*) A complaint was made over phone that dead ants were found when a Coco-Cola bottle was opened and its contents poured into a glass.

(*c*) Three Coco-Cola bottles (two sealed air tight and one partly opened) available with the complainant were arranged to be brought for analysis. On an analysis by the Public Analyst of the Corporation of Madras, dead ants were noticed in one of the sealed bottles.



Messrs. Southern Bottlers Private, Ltd., the manufacturers of Coco-Cola were warned by the Corporation to take all precautions in future to prevent recurrence of the incident of this sort.

Thiru G. SWAMINATHAN : May I know what is the nature of supervision that the Government are having over the people who are manufacturing other soft drinks?

The Hon. Thiru K. ANBAZHAGAN : As far as the answer that is available is concerned, only when such complaint came to the notice of the Corporation Authorities, they sent the Sanitary Inspector and the Health Officer to collect the bottles. From there they collected the bottles and the bottles were examined by the Public Analyst and in that examination it was found that there were one or two dead ants in a bottle. They have been asked to see that such things do not occur.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, உணவுடன் சிற்றெறும்பு சேர்ந்தால், அதை உட்கொள்வது கண்களுக்கு நல்லது என்று பழங்காலத்து மக்களிடையே ஒரு கருத்து உள்ளது. அந்தக் கருத்து சரிதானா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே அனுபவம் உள்ள பெரியவரான திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதைப் பரிசோதனை செய்ய எனக்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : கண்ணாடி கொடுப்பதற்குப் பதிலாக இரண்டு எறும்புகளைப் பிடித்துக் கொடுத்துவிடலாம் போலிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுடைய கண்கள் நல்ல நிலைமையில் இருப்பதற்கு, அதுவும் ஒரு காரணமா என்று அறிய விரும்புவதோடு இந்த 'சாப்ட் டிரிங்க்' போன்றவற்றை உற்பத்தி பண்ணுகின்ற கோகோ கோலா கம்பெனி போன்றவர்கள் நல்ல திறமையான முறையிலே செய்கிறார்கள். ஆனால் பல பேர் பல இடங்களில் இந்தமாதிரித் தயாரிக்கின்றார்கள். இதற்கு என்று ஒரு கண்காணிப்பு முறையை வகுக்க அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட மிகப் பெரிய நிறுவனத்தை நடத்துபவர்கள், தங்களுடைய கம்பெனியின் பெயரிலோ அல்லது தங்களுடைய லேபளிலோ மற்றவர்கள் தவறாகத் தயாரிப்

[1973 மார்ச் 5

பார்களேயானால், அதுபற்றிப் புகார் எழுப்ப வேண்டும். அப்படிப் புகார் எழுப்பினால், அரசு மட்டுமல்ல, போலீஸ் இலாகாவினரும் அதைப்பற்றி விசாரிப்பார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : கோகோ கோலா சிலவற்றிலே ஆல்கஹால், மயக்கம் தரக்கூடிய பொருள் கலந்தது மாதிரி இருக்கிறது. மயக்கத்தை உண்டுபண்ணுகின்ற அளவுக்கு கோகோ கோலாவில் அந்த மயக்கப் பொருளைச் சேர்ப்பதற்கு தனியே ஏதாவது சர்க்காரிடம் ஒரு லைசென்ஸ் வாங்கியிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கோகோ கோலாவிற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஒரு விதமான பான உணர்ச்சி தோன்றத்தக்க வகையில் அது அனுமதிக்கப்பெற்று தயாரிக்கப்படுவதாகவும் அதிலே உள்ள கலப்பு மயக்கத்தைத் தருவது என்றும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் அது ஒரு விதமான உணர்ச்சியை மட்டும் எழுப்புவதாகத்தான் கருதப்படுகிறது. அது மயக்க உணவாகக் கருதப்பட்டால், அது அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட மாட்டாது.

Mr. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. சட்ட மன்ற விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை

Mr. CHAIRMAN : The Hon. the Minister for Works will now make a statement under Rule 82.

### (1) மருந்தகப் பட்டதாரி மாணவர்களின் கோரிக்கைகள் மீது அரசின் நடவடிக்கைகள் குறித்து

*The Hon. Thiru K. ANBAZHAGAN : Sir, in the last week of December 1972, the B. Pharmacy students of the Madurai Medical College made certain representations for bettering their prospects on the conclusion of their studies. The B. Pharmacy students of the Madras Medical College, also have made their representations in their petition dated 5th February 1973. The following are the main demands of the students.—

(i) Hospital Pharmacy units must be established in each hospital with a bed strength of 200 beds and above;

(ii) B. Pharmacy graduates should be gazetted and the basic pay for them raised;



1973 மார்ச் 5] [Thiru K. Anbazhagan]

(iii) Post-Graduate courses in Pharmacy should be started;

(iv) Pharmacy graduates should be employed in the Analytical Laboratories;

(v) A separate faculty of pharmacy, a separate college and separate directorate of pharmacy should be established;

(vi) Only B. Pharmacy graduates should be employed in Pharmaceutical industries;

(vii) B. Pharmacy graduates should be appointed as Liquor Inspectors after giving necessary training;

(viii) Creation of job opportunities.

2. The Government have considered the various requests of the students and have taken suitable action as detailed below:—

(i) *Hospital Pharmacy.*—The Director of Medical Education has reported after discussion with the Deans of the Stanley and the Madurai Erskine Hospital and the Principal, Madras Medical College that it would be uneconomical to start a pharmacy in each hospital with 200 beds and above and not desirable as every such pharmacy must have special quality control staff and equipment and that it would be far better to start bigger manufacturing units on regional basis to cover the entire State and as a beginning two regional units, one at Madras and the other at Madurai might be started. The Director of Medical Education has been instructed to send necessary detailed proposal for consideration of the Government.

(ii) *Gazetting of the posts of Assistant in Pharmacy.*—(*a*) The proposal to Gazette the post of Assistant in Pharmacy is under the active consideration of the Government and (*b*) prior to the Second Pay Commission the Assistant in Pharmacy had the scale of pay of Rs. 200–10–250–15–400. The Second Pay Commission revised the scale of pay for the post as Rs. 400–15–475–20–575–25–650. The Pharmacy Graduates Teachers' Association also made a representation to the One Man Committee stating that there was anomaly in their pay revision. The Committee has considered that there is no anomaly in their pay revision. It is not proper to revise their scale of pay as it was only very recently revised with reference to the Second Pay Commission Report and especially when the One Man Committee has also considered that there is no anomaly. Such a revision will lead to many problems.

[Thiru K. Anbazhagan] [1973 மார்ச் 8

(ii) *Post-Graduate Courses.*—The Director of Medical Education has addressed the Registrar, University of Madras, for affiliation of the Madras Medical College for starting the M. Pharmacy course. The recommendation of the Committee constituted for the purpose by the Syndicate of the University of Madras is under consideration of the Board of Studies. The decision of the University is awaited. As regards Madurai Medical College, the matter is under correspondence with the Dean, Madurai Medical College. Government will take a decision on receipt of the replies from the Madras and Madurai Universities.

(iv) *Employment of Pharmacy Graduates in Analytical Laboratory.*—Rule 44 of the Drugs and Cosmetics Rules prescribes the qualifications for Government Analysts according to which graduates in medicine or science or pharmacy or pharmaceutical chemistry can be appointed as Government Analysts. Hence Pharmacy Graduates can be appointed as Government Analysts provided they have the prescribed experience of three years in the analysis of drugs. The representatives wanted that only pharmacy graduates should be appointed for the posts to the exclusion of others. This could not be conceded in view of the rules position.

(v) *Separate Faculty, College and Directorate of Pharmacy.*—The Government have decided that there is no case for opening a separate college for pharmacy and that the starting of a separate faculty and a separate directorate for pharmacy may wait till pharmaceutical industry is well developed in this State.

(vi) *Employment in Pharmaceutical Industries.*—As rules stand, we cannot prohibit employment of science graduates in pharmaceutical industries nor can we insist that only pharmacy graduates must be appointed in such industries. The Government of India have a scheme for training pharmacy graduates in Pharmaceutical Industry on a stipend of Rs. 250 per mensem for one year. The number admitted is limited to the funds available and to the willingness of the private pharmaceutical industries to take the trainees. It is learnt from the Director of Apprentice Training, that the Government of India will be able to take up more trainees if the industries are willing to accept the candidates and give them facilities. Under the Scheme 23 candidates were taken up for training during last year. The Deputy Drugs Controller has reported that there are at present 34 candidates in various private pharmaceutical courses under training and that the firms have informed their willingness to take up 50 more candidates for the training. The Director of Apprentice Training has pointed out to the Deputy Drugs Controller that the State Governments are also providing funds for similar training and that they are operated by the Director of Technical Education and the Director of Employment and Training. The Deputy Drugs Controller has since addressed the Director of Medical Education to contact the said authorities for providing additional training facilities. The matter will be pursued further in consultation with the Director of Medical Education.



1973 மார்ச் 5] [Thiru K. Anbazhagan]

(vii) *Appointment of Liquor Inspector.*—This relates to the Excise and Prohibition Department which has already declined to accede to this request. Nevertheless this request has again been referred to that Department for consideration.

(viii) *Job Opportunities.*—For the Posts of Junior Chemical Assistants in King Institute, Guindy, ad-hoc rules provide for Chemistry Graduate. There is a proposal to amend these rules to include B. Pharmacy graduates also. The scale of pay for the post is Rs. 300 to Rs. 500. When the representatives were told that after the amendment of rules, even B. Pharmacy graduates could be appointed, they were not willing because of the low scale of pay.

Rule 44 of the Drugs and Cosmetic Rules prescribe the qualifications for the post of Government Analysts. This enables the appointment of graduates in medicine or science or pharmacy or pharmaceutical chemistry as Government Analysts. Hence Pharmacy graduates can be appointed as Government Analysts provided they have the prescribed experience of three years in analysis of drugs.

B. Pharmacy graduates having not less than five years of experience in the analysis of foods in a laboratory under the control of the Public Analyst are also appointed as food analyst.

3. The representatives of the B. Pharmacy Students met the Secretary to Government, Health and Family Planning Department on 13th and 15th February 1973 and he has explained the position in detail to them.

THIRU G. SWAMINATHAN : I gave a Call Attention Notice a few days ago on the same point, namely, the B. Pharm. Students Agitation. I am very sorry that the Hon. the Minister for Public Health has made a statement under rule 82 of the Council Rules when my Call Attention Notice is pending. As already pointed out by the Hon. Chairman, we are not in a position to seek any clarification on the statements made under rule 82. The same thing has happened in the Legislative Assembly when an adjournment motion was sought to be moved and the adjournment motion was not allowed.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, some mistake has happened. When the Hon. Chairman called me, I thought that I should make a statement. Therefore, I have made the statement. What I have now read is the statement of the Government which has given information to the hon. Member to have some more analytical view about the whole problem.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தலைவரவர்கள் பப்ளிக் ஒர்க்ஸ் மினிஸ்டர் என்று சொன்னார்கள். அவர்கள் முறையாகப் படித்திருக்க வேண்டும். இவரிடத்திலே பதில் அறிக்கை இருந்த காரணத்தினால், தன்னை அழைப்பதாக எண்ணி அவர்கள் அறிக்கையைப் படித்து விட்டார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: 'பப்ளிக் ஒர்க்ஸ்' என்று வருவது ஆபத்தாகிவிடுகிறது.

## (2) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வட்டாரத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள், ரயத்துகள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கைகள் குறித்து

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Several representations were received by the Government from the M.L.A.s and ryots in the Parambikulam-Aliyar Project area against the levy of penal water cess for the removal of crop restrictions, for inclusion of seepage affected lands in the Project ayacut, etc. These representations were discussed at length at the High Level Conference held at Coimbatore on 22nd January 1973 presided over by Minister (Revenue) and attended by Minister (Works) and Minister (Religious Endowment) besides all the concerned officials and the local M.P.s and Legislators. The concessions afforded as a result of the decisions taken at the conference are briefly as follows:—





*Representation No. 1.*

To cancel the penalty levied for irrigation from a sluice other than the one recognised for the lands on the ground that the ryots were not aware of the authorised sluice.

It was decided that all penalties levied for the above irregular irrigation up to 1st January 1973 be waived, that a warning notice be issued to ryots that such irregular irrigation in future will be heavily penalised and that water permits be distributed in all the cases where they have not so far been distributed, before the end of the current fasli, i.e., 30th June 1973. It was also decided that the advance payment of the permit fee of Rs. 15 need not be insisted upon but be collected with the land revenue.

The total extent of lands penalised under this category is 6,158 acres and 21 cents during the faslis 1376–1380 and the amount of penalty remitted works out to 2.03 lakhs.

*Representation No. 2.*

To cancel the penalty levied on wet cultivation in the ayacut lands affected by seepage and not capable of being raised with dry crops.

It was decided that these cases be examined critically, that the penalty levied on genuinely seepage affected cases be waived and the lands included in the wet ayacut.

The extent so far localised under this category is 421.37 acres and the amount of penalty levied is about Rs. 23,000 during faslis 1379–80.

*Representation No. 3.*

To cancel penalty levied on lands not included in the ayacut but are commandable. It was decided that all penalties during fasli 1381 and earlier Faslis be waived, that for Fasli 1382, two times the normal water cess be levied and that from Fasli 1383 onwards five times the normal water cess be levied. It was also decided that the ryots be warned of the above orders well in time to dissuade them from resorting to this type of irregular irrigation in future.

[Thiru S. J. Sadiq Pasha] [1973 மார்ச் 5

The extent of non-ayacut lands so irregularly irrigated during Faslis 1376–80 is 10,252 acres and the amount of penalty levied is about Rs. 3.11 lakhs which will stand fully waived.

*Representation No. 4.*

That the levy of twice the normal water cess on lands grown with two crops in a season be cancelled and that only one rate be levied in such cases.

The total extent of lands so levied with two rates is 508.42 acres and the amount of water cess levied for 2nd crop is Rs. 3,806 during Faslis 1378–80. Supply in the canal is normally allowed for 4½ months in a year and no one can raise even two short duration crops during this period. But the ryots start raising crops availing of the rain water well ahead of the opening of the canal and irrigate the crops with canal water when supply is allowed and also raise a second crop. In view of the fact that the ryots should be encouraged to raise dry crops only, it was decided that the following be the liberalisation :—

(1) If the land is localised for dry irrigation and the farmer had raised two irrigated dry crops, water rate would be charged only for one dry crop.

(2) If the land is localised for dry irrigation and the farmer raises one irrigated dry crop and one irrigated wet crop the irrigated dry crop will be exempted from the levy of water charge and the wet crop will be charged appropriately with the penalties according to the rules.

(3) If the land is localised for dry irrigation and the farmer raises two wet crops, both the wet crops will be charged appropriate water rate and with penalties according to rules.

(4) If the land is registered as wet or registered for wet cultivation and the farmer raises one wet crop and one dry crop, only the wet crop will be charged with the appropriate water cess and the dry crop will be exempted from the water rate.

*Representation No. 5.*

To cancel the penalty levied on paddy crops in Parambikulam-Aliyar Project ayacut in Pollachi and Udumalpet taluks.



1973 மார்ச் 5] [Thiru S. J. Sadiq Pasha]

The total extent of lands so irregularly irrigated is about 35,851 acres during faslis 1376–80 and the amount of penalty levied is of the order of Rs. 41 lakhs.

It was decided that genuinely seepage affected lands be considered for inclusion in the wet ayacut, that the remaining lands should continue to be dry crop area and that as a matter of grace, past penalties be waived or reduced on the same lines as indicated under representation No. 3 and that from Fasli 1383 (1st July 1973) onwards penalty be levied as in the case of lands under representation No. 3.

*Representation No. 6*

To include the non-ayacut lands lying interspersed amidst ayacut lands in the ayacut and to cancel the penalty levied on them.

The total extent of lands falling under this category during Faslis 1376-80 is 2,802 acres, and the amount of penalty levied is about Rs. 50,000.

It was decided that genuine cases be included in the ayacut (wet or dry) and that in the matter of waiver and levy of penalty the same treatment accorded to the lands under representation No. 3 be adopted in these cases also.

*Representation No. 7*

To cancel the penalty levied on coconut plantations in lands not localised for wet.

The total extent of lands falling under this category during Faslis 1378–80 is 2,587 acres and the amount of penalty is Rs. 1.53 lakhs.

It was decided that all coconut plantations as on 1st January 1973 be included in the wet ayacut, that no new area will be permitted to be registered for coconut, that the penalty levied on plantations that existed as on 1st January 1973 be waived and that the position be reviewed after the lapse of a period of 5 years.

*Representation No. 8*

To levy only one third of the normal water cess for the special release of water made for the short spell from 28th December 1968 to 27th January 1969 for coconut plantations and topes in Pollachi and Udumalpet taluks.

It was decided to comply with the request as a special case.

The total extent of lands benefited by the special release was 4,107 acres and the amount of water cess that will be remitted by charging 1/3 rd rate is nearly Rs. 83,000.

*Representation No. 9*

To waive completely the water cess levied for the special release of water for 5 days, i.e, from 27th January 1969 to 31st January 1969 for dry crops in Pollachi and Udumalpet taluks.

It was considered that in view of the fact that the special release of water was only for 5 days and that it was also intended to relieve drinking water scarcity no water cess need be levied and that the water cess and penalty if levied be waived in full.

The total extent of lands benefited by the special release is 2,822 acres and the water cess and penalty that will be foregone will be of the order of Rs. 49,000.

It was also decided that in order to ensure speedier collection of the arrears, the benefit of the concessions mentioned above would be available only to such of those ryots who pay the entire dues on or before 20th June 1973. It was also decided that the excess collections that may accrue to ryots consequent on the waiver of penalties be adjusted towards the land revenue payable by such farmers in the current fasli and future faslis. The various amount of penalties that will be waived as a result of those decisions during Faslis 1376-80 alone aggregate to nearly Rs. 49.44 lakhs.

## LOWER BHAVANI PROJECT

*Representation No. 1*

To waive the penalty levied on natural seepage affected lands during Fasli 1381 and also in other cases of irregular irrigation.





It was explained by the Collector that various types of irregular irrigation have been resorted to like lock-breaking, irrigation of non-ayacut lands, irrigation of out-of-turn fields, seepage affected lands, etc. It was decided that cases of irregular irrigation by lock-breaking, cutting open the canal bank, cross bunding the channel etc. and cases of irrigation of poramboke lands within the prohibited distance of main branch or supply channel be dealt with deterrently and that other cases be examined by the Collector on merits and decision taken regarding the quantum of penalty to be retained and the balance remitted.

*Representation No. 2*

To waive the penalty levied on encroachments on small bits of poramboke lands which have been there quite for some years and also to take steps to assign them (Representation by Thiru P. A. Swaminathan, M.P.).

It was decided that the maximum levy of penalty in such cases be restricted to five times the normal water cess (inclusive of 4 rates towards penalty).

*Representation No. 3*

To excavate field bothies by the P.W.D for blocks of ayacut lands of 25 acres and less in extent to ensure adequate supply for irrigation to the last field.

It was considered that Government should take the responsibility of acquiring necessary land and excavate field bothies and the cost thereof be recovered from the beneficiaries. It was also decided that the above general principle be made applicable to all projects.

The Government have approved of the above decisions and suggestions of the High Level Conference.

திரு. கே. சாஜூராம்: தலைவரவர்களே, தற்போது அமைச்சர் அவர்கள் ஆல் [illegible]ன்படி வாசித்த விளக்கம் மிக நீளமாகவும், ஆனால் அந்த நேரத்தில் மிக முக்கியமான ஒரு விஷயமாகவும் இருக்கிறது. அம்மாதிரி நீளமான ஸ்டேட்மெண்டைப் படிக்கும்போது அதை ரோனியோ பண்ணி எங்களுக்கெல்லாம் கிடைக்கும்படியாகச் செய்தால், அதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1973 மார்ச் 5

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரோனியோ செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அவசரமாகத் தெரிவிக்க வேண்டும் என்ற காரணத்தால், முதலமைச்சருடைய அனுமதியோடும், தலைவர் அவர்களுடைய அனுமதியோடும் ஸ்டேட்மெண்டை நான் வாசித்தேன். அங்கேயிருக்கின்ற விவசாயிகள் இதைப்பற்றி ஓராண்டுக் காலமாக கேட்டு பிறகு, உச்ச மட்டத்தில் பேசி முடிவெடுத்த காரணத்தாலும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது போல, ரோனியோ போட்டுக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குக் 'காபி' தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

* திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் கடந்த 7, 8 ஆண்டுக் காலமாக. . .

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : நன்றியா ?

திரு. மு. இராமநாதன் : ரூபாய் 59 லட்சத்திற்கு மேல் தண்டத் தீர்வையாக பரம்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட் விவசாயிகள் மீதும், லோயர் பவானி ஆயக்கட் விவசாயிகள் மீதும் விதிக்கப்பட்டிருந்ததை ஒட்டிய பிரச்சினையானது, கடந்த 8 ஆண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்தது. நம்முடைய தமிழக அரசு பெரிய மனதுவைதது இரண்டு அமைச்சர் பெருமக்களும் வருவாய்த்துறை அமைச்சரும் எல்லா அதிகாரிகளோடும், அங்கு வந்திருந்து, உயர்மட்ட கமிட்டி என்ற முறையில் பரிசிலனை செய்து, இந்த 59 லட்ச ரூபாய் தண்டத் தீர்வையை ரதது செய்ததற்கும், மேலும் பல வசதிகளை அறிவித்திருப்பதற்காகவும் கோவை மாவட்ட விவசாயி மக்கள் சார்பாக என்னுடைய உளம்கனிந்த நன்றியையும், பாராட்டுதலையும் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

MR. CHAIRMAN : Now the general discussion on the Budget will resume.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இரண்டு நாளைக்கு முன்னால் நம்முடைய அவையின் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் நிதி நிலை அறிக்கையின் மீது இங்கே பேசினார்கள். அவர்கள் பேசுகின்றபோது இந்த நிதி நிலை அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த அன்றைய தினம் நான் பத்திரிகையாளர்களுக்குக்





கொடுத்திருந்த செய்தியைப் பற்றி விமர்சனம் செய்தார்கள். அப்போது கொடுத்திருந்த செய்தியில் நம்முடைய அரசு தயாரித்திருக்கிற நிதி நிலை அறிக்கை வரியில்லாத உபரி நிதி நிலை அறிக்கை என்ற அளவில் இருந்தாலும் கூட, இனிமேல் வரி போடுவதற்கு எதுமில்லை என்ற காரணத்தினாலே அவர்கள் வரி போடவில்லை என்ற கருததை நான் சொல்லியிருந்தேன். இரண்டாவதாக, விலைவாசிகள் மிகவும் அதிகமாக இருக்கிற நிலையையும் நான் என்னுடைய அறிக்கையில் சொல்லியிருந்தேன். அவாகள அதைபபற்றிக் குறிப்பாகச் சொல்லுகிறபோது, எதிர்க் கட்சியிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் நிதி நிலை அறிக்கையில் இருக்ககூடிய நலல விஷயங்களைப் பாராட்டாமலிருக்கிறார்கள் என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். அப்போதே அவர்களிடத்தில் நான் சொன்னேன். ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள், இங்கேயும் சரி, சட்டசபையிலும் சரி, அதிகமாக இருககிற காரணத்தினாலே, மிகப் பல பேராக இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினாகள் நிதி நிலை அறிக்கையைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசுவதற்காக இருக்கிற நேரத்தில், எதிர்க்கட்சிகளாக இருப்பவர்கள்—அதுவும் சென்ற தேர்தலுக்குப் பிறகு அவாகள் குறைந்த அளவில் இருக்கிறார்கள்—நிதி நிலையைப பாராடடிவிட்டால், ஆட்சியிலே இனி மேல் ஜனநாயகத்திற்கே இடமில்லாமல் போய்விடும் என்ற கருத்தை நான் சொன்னேன். நான் அந்த சமயத்தில் சொல்ல மறந்து விட்ட இன்னொரு கருத்தையும் சொல்வேன். ஜனநாயகத்தில் நல்ல கருத்துக்களைப் பாராட்டுவதும், சரியற்ற காரியங்களை எடுததுச் சொல்வதும் முக்கியமாக இருந்தாலும் கூட, அதே சமயத்தில் ஆளும் கட்சியிலிருக்கக் கூடியவர்கள் நிதி நிலையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அதிலுள்ள நிறை பாடுகளை நாங்கள் சொன்னால், அது இன்னும்கூட நன்றாக இருக்குமென்ற கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : The hon. Members should know what democracy means. There is no democracy without opposition.

Each and every hon. Member must realise it.

திரு. ஜி. சுவாமிநாதன் : எதிர்க்கட்சிகளாக இருப்பவர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டுமென்ற கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம் என்ற நிலைமைக்குத் தான் நான் முன்னதாகச் சொல்லுகிறேன். நான் குறிப்பாகக் குறிப்பிட்ட விஷயம் நம்முடைய நிதி நிலை அறிக்கையில் இது வரையில் நிறைந்த அளவில் வரி இனங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதை நான் குறிப்பிட்டதற்கு ஒரு நுட்பமான காரணம், இதுதான். தமிழகத்தில் இருப்பவர்களுடைய தனி நபர் வருமானத்தையும், அநதத் தனி நபர் வருமானத்தின் மீது கடந்த பல ஆண்டுக் காலமாக நம் மாநிலத்தில் வரி விதிப்பு செய்யப்பட்டிருப்பதையும் நான் எடுத்துப் பார்த்தேன். 1967-68-லிருந்து தனி நபர்

வருமானத்தின் மீது போடப்பட்டிருக்கிற வரி இனங்களை எடுத்துப் பார்க்கிற
போது, அந்த வரி இனம் மிக அதிகமாக ஆகிக் கொண்டிருக்கின்ற காட்சி
காணப்படுகிறது. தலைவரவர்களே, நான் உங்களுக்குச் சொல்லுவேன
'per capita income of the tax ratio' என்று ஒன்று வைத்
திருக்கிறார்கள். அதிலே 'constant prices' 1960-61-லிருந்த
விலைகளை வைத்து நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கிற ஒவ்வொருவருக்கும்
எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்பதை நாம் பார்த்தோமானால், 1967-
68-லே தமிழ் நாட்டிலே இருப்பவனுக்கு ஒரு ஆண்டுக்கு உள்ள வருமானம்
ரூ. 363 ஆகும். ஒரு ஆண்டுக்கு அந்த வகையில் கிட்டத்தட்ட ரூ. 39 வரியாக
ஒவ்வொரு நபரும் செலுத்த வேண்டியிருந்தது. 1971-72-லே தனி நபர் வரு
மானம் ரூ. 394 ஆக இருந்தது. ஆனால் அவர் செலுத்த வேண்டிய வரி
ரூ. 46.73 ஆக இருந்தது. 1972-73-லே ஒருவருடைய வருமானம் ரூ. 397
ஆக இருந்தது. அவர் கட்ட வேண்டிய வரி ரூ. 66.6 ஆக இருந்தது. 1973-
74-லே ஒருவருக்கு வரக்கூடிய வருமானம் ரூ. 401 ஆக இருக்கும்போது கட்ட
வேண்டிய வரி ரூ. 75 ஆக இருக்கிறது. இப்படிக் கணக்குப் பார்க்கிறபோது
1967-68-லே 11 சதவிகிதமாக இருந்த வரி 1973-74-லே 19 சதவிகிதமாக ஆகி
யிருக்கிறது என்ற காட்சியை நான் பார்த்தேன். அது மட்டுமல்லாமல், 1947-
ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை தனி நபர் வருமானத்தையும்,
கட்டிய வரிகளையும் வைத்துப் பார்க்கிறபோது 10 சதவிகிதம் வரிதான், 1947
லிருந்து 1967 வரை. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய சர்க்கார்
வரியையும் சேர்த்து உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்களா என்பதை அறிய
விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மத்திய சர்க்கார் போட்டிருக்கிற சென்ட்ரல்
இன்கம் டாக்சையும், எக்சைஸ் டியூட்டியையும் சேர்த்துத்தான் நான் குறிப்
பிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தெரிந்துகொள்ள விரும்புவது
வரியை மட்டும் சொல்லுகிறாரா? இப்போது அரசாங்கம் விற்பனை வரி போடு
கிறது. சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் வரி போடவில்லையென்று சொன்ன
லும், வசூலிப்பதிலே கொஞ்சம் கண்காணிப்போடு வசூலித்திருக்கிறோம். அந்த
வருமானத்தையும் சேர்த்து வைத்துக்கொண்டு சொல்லுகிறாரா என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: டாக்சேஷன் என்பதே வரி இனங்களின் மூலம்
அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானம். மத்திய வரியும் மாநில வரியும்
சேர்த்துதான் கலால் வரி அல்லது எக்சைஸ் வரி என்று சொல்லக் கூடியது.
கிட்டத்தட்ட ரூ. 28 கோடி, ரூ. 36 கோடி வரலாம்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தெரிந்துகொள்ள விரும்புவ
தெல்லாம் புது வரி போட்டோம் அல்லது வரிகளை உயர்த்தினோம் என்று சொன்
னாலும், அரசாங்கத்திற்கு வந்திருக்கிற வருமான அதிகரிப்பை வைத்துக்
கொண்டு சொல்லுகிறாரா என்பதுதான். அந்த விளக்கம்தான் கேட்டேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: புதிய வரியாக இருந்தாலும், பழைய வரியாக
இருந்தாலும் இருக்கிற பளு கொடுப்பவனுக்கு இருக்கிறது என்பதை அமைச்
சரவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய
கோறடா அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, மத்திய அரசாங்கத்தினுடைய இன்கம்
டாக்ஸ், எக்சைஸ் டியூட்டி ஆகிய இனங்களும் சேர்ந்ததுதான். அந்த இனங்
களிலே எவ்வளவு அதிகப்பட்டிருக்கிறது, தமிழ் நாட்டினுடைய வரி எவ்வளவு
அதிகப்பட்டிருக்கிறது என்ற அளவுக்கு நுணுக்கமாக ஒவ்வொரு இனத்தையும்
பார்க்க வேண்டியதில்லையென்றாலும்கூட, 1967–68-க்கும் 1973–74-க்கும்
பார்த்தால் நிச்சயமாக அந்த வரி இனங்களைச் சேர்த்துத்தான் அப்போது
இருந்தது, இப்போதும் இருக்கிறது. ஆனால் குறிப்பாக 1947-லிருந்து 1967
வரை 20 ஆண்டுக் காலம் அந்த வரி இனங்கள், வருகிற தனி நபர் வருமா
னத்தில் 10 சதவிகிதமாக இருந்தவை, இப்போது ஏறிக்கொண்டே போகின்றன
வென்ற அளவுக்கு தமிழ் நாட்டிலே இருப்பவனுக்கு வரிப் பளு அதிகமாக
இருக்கிறது., அது புதிய வரிகளினாலோ அல்லது பழைய வரிகளினாலோ
அல்லது மாநில அரசினாலோ அல்லது மத்திய அரசினாலோ, எப்படியிருந்
தாலும், தமிழ்நாட்டிலே இருப்பவனுக்கு அதிகப்பளு இருப்பதாலே, இன்னும்
அதிக வரி போடும்படியான நிலையிலே நம்முடைய அரசாங்கம் இல்லை. இது
நாம் மட்டும் சொன்ன கருத்தல்ல. இதற்கு முன்னாலே இருந்த நிதி நிலை
அறிக்கைகளிலே பல நிதி அமைச்சர்கள் அதே கருத்தை எடுத்துக் கூறியிருக்
கிறார்கள். இருக்கின்ற வரி இனங்கள் அனைத்தும் நம்முடைய மாநிலத்திற்கு
இல்லாத காரணத்தால், வரி போடுவதே கஷ்டமாக இருக்கிறதென்ற காரணத்
தைக்கூட பல நிதி நிலை அறிக்கைகளிலே சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்று
'rising prices' என்று சொல்லக்கூடிய அளவிலே விலைவாசியைப் பற்றி நம்மு
டைய நிதி நிலை அறிக்கையிலே எதுவுமே சொல்லப்படவில்லை என்ற கருத்
தையும் நான் குறிப்பிட்டேன். விலைவாசிகள், அதுவும் உணவுப் பண்டங்களின்
விலைவாசிகள் மிகவும் அதிகமாகக் கடந்த ஓராண்டிலே ஆகியிருக்கின்றன என்
பதை நான் சொல்லத் தேவையில்லை. அண்மையில் நம்முடைய மத்திய
அமைச்சர் திரு. சவான் அவர்கள் பாராளுமன்றத்திலே தன்னுடைய நிதி நிலை
அறிக்கையை வைக்கின்றபோது அவரே இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்
கள். சென்ற ஆண்டு 3.7 சதமாக இருந்த 'wholesale price index', இந்த
ஆண்டு 9.1 சதமாக ஆகியிருக்கிறது என்பதையும் அதிலே குறிப்பாக உணவுப்
பொருட்களின் விலை மிகவும் அதிகமாக ஆகி, அதன் காரணமாக ஏழைமக்கள்
மிகச் சாதாரண மக்கள், எளிய மக்களாக இருப்பவர்கள் பெரும் தொல்லை

களுக்கு ஆட்பட்டிருப்பார்கள் என்ற கருத்தை திரு. சவான் அவர்கள் பாராளுமன்றத்திலே எடுத்து வைத்தார்கள். ஆனால் இதைச் சொல்லுகிற போது, மாநில அரசுக்கும் இந்த விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதிலே அக்கறை இருக்க வேண்டும்; கடமையும் இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசுக்கு அதைத் தடுக்க வேண்டிய கடமை இருக்கிறது. அதே சமயத்தில் மாநில அரசுக்கும் அதிலே கடமையிருக்கிறது என்ற காரணத்தினால் அதைப் பற்றியும் முதலமைச்சரவர்கள் ஓரளவு தனது நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்க வேண்டும். அதைப்பற்றி மாநில அரசுக்கும் கடமையிருக்கிறது என்று சொல்லுகிறபோது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு முதல் முதலிலே ஆட்சிக்கு வந்தபோது, இந்தப் பிரச்சினையைத் தான் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதிலே அவர்கள் மாநில அரசுக்கு இதைப் பொறுத்த வரையிலே பொறுப்பாயிருக்கும். புது மெருகும் பெற்று மிளிரும் புதியதோர் பொருளாதார அமைப்புக்கு உணவுப் பொருட்களின் விலைவாசிக் குறைப்பே அடிகோலாக அமையும் என்பது இவ்வரசின் அழுத்தமான கருத்தாகும் என்று குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல. அப்போதுதான் விலைவாசி ஏற்றத்தால் அல்லல் பட்ட மக்களுக்கு அவர்கள் ஏங்கித் தவிக்கும் துயர் தணிப்பு உடனடியாகக் கிட்டும் என்று குறிப்பிட்டார்கள். கடந்த மூன்று திங்களாக உணவு விலையைக் குறைக்கும் வகையில் எங்ஙனம் செம்மையான ஏற்பாடு ஒன்றைத் தொடங்கலாம் என்றும், அதன் பயனாய் நிகழ்ச்சிகள் தொடர்ந்து வளரும் வகையில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் இந்த அரசு ஆலோசித்து வந்துள்ளது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே நம்முடைய முதலமைச்சரவர்கள்கூட 1973-74-லே, சென்ற நிதி நிலை அறிக்கையை வைக்கிற போது, இந்த விலைவாசி உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தவுடனேயே இந்த விலைவாசியின் உயர்வு காரணமாக சென்னையிலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தை வெளியிட்டார்கள். அதற்குப் பின்னால் பல ஆண்டுகள் அது நடந்த பிறகு, அதை நடத்த இயலாத நிலைமை ஏற்பட்டு, சென்னையிலும், தற்சமயம் கோயம்புத்தூரிலும் இரண்டு இடங்களிலும் இந்தப் ‘படி அரிசித் திட்டம்’ வழங்கப்பட்டு வருகிறது. ஆனாலும் முன்பு எவ்வளவு கொடுத்துக் கொண்டிருந்தார்களோ, ‘quantum’ என்று சொல்லுகிறார்களே, அந்த அரிசியினுடைய அளவு இன்னும் குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது கிடைக்கிற அரிசி ரூ. 1-36 லிருந்து ரூ. 1-62 வரையிலே இருக்கிறதென்றும், இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு வேண்டிய அரிசி கிடைக்கவில்லை என்ற கருத்தையும் சாதாரண மக்கள் சொல்லுகிறார்கள். அது மட்டுமல்லாமல், வெளியே இருக்கக்கூடிய அரிசி விலையை வைத்துப்





பார்க்கிறபோது, வெளி மார்க்கெட்டிலே இருக்கிற சாதாரண மட்டமான அரிசி கூட ரூ. 2-10 லிருந்து ரூ. 2-20 வரைக்கும் விற்கக்கூடிய அளவிலே இன்றைய தினம் அரிசியினுடைய விலை ஆகியிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இப்படி நிலைமை இருக்கக்கூடிய நேரத்திலே, மற்ற உணவுப் பொருட்களின் நிலையையும் எடுத்து நான் பார்க்கிறேன். 1967-லே என்ன விலை, 1973-லே என்ன விலை என்று எடுத்துப் பார்க்கிறபோது, நல்ல எண்ணெய் விலை 1967-லே ஒரு கிலோவுக்கு ரூ. 2-85 இருந்தது, 1973 லே 8-20 ஆக இருக்கிறதென்று பார்க்கிறோம். கடலை எண்ணெய் 1967-லே ரூ. 3 ஆக இருந்தது, ரூ. 6-90 இன்றைய தினம். தேங்காய் எண்ணெய் விலை ரூ. 5 ஒரு கிலோ 1967-ல் இருந்தது, இன்றைய தினம் ரூ. 8-20. உளுத்தம் பருப்பு ரூ. 1-70 ஆக இருந்தது ரூ. 2-30, 1967-லே பயத்தம் பருப்பு ரூ. 1-60 ஆக இருந்தது இப்போது ரூ. 3-20. இந்த விலை இன்றைய தினம் பத்திரிகைகளிலே ‘selling prices of Oils’ T.U.C.S. Chingleput District Co-operative Marketing Society’ என்று அறிவித்துள்ள விலையிலிருந்து தான் எடுக்கப்பட்டதாகும். கூட்டுறவுச் சங்கங்களிலேயே இந்த விலை என்று சொன்னால், வெளியே இன்னும் அதிகமான விலையில் விற்கப்படுகிறதென்று பார்க்கிறபோது, சாதாரண மக்கள் மிகவும் துயருற்றிருக்கிறார்கள் என்று நமது அரசுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு என்ன செய்யவேண்டும் என்ற முடிவை நீங்கள் உடனடியாக எடுக்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையிலே மட்டுமல்லாமல், திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில்கூட இந்த ரேஷனிங் என்று சொல்லக்கூடிய அளவில் நீங்கள் கொடுக்கக்கூடிய இந்த ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நியாய விலைக் கடைகள் ....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ரூபாய்க்கு ஒரு படி இப்பொழுது போடவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சில இடங்களில் ரேஷன் கடை இல்லாதிருந்தாலும் ரேஷன் கார்டுக்கு அரிசி கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தக் கார்டுக்குக் கொடுக்கப்படுகின்ற அரிசி படி ஒன்றுக்கு ரூ. 1.32 ஆகிறது என்று சொன்னார்கள். அதற்காகத் தனியாகக் கடைகள் இல்லாவிட்டாலும், தனியார் வைத்திருக்கும் கடைகளில் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ரேஷன் கடை என்று சொன்னாலும் சரி, நியாய விலைக் கடை என்று சொன்னாலும் சரி, அந்த மாதிரியான கடைகள் இன்னும் ஏழை மக்களுக்குப் பயன்படுவதற்கு சென்னையில் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த முறையை மேலும் பல ஊர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அரிசி நியாய விலையில் கிடைக்கின்ற மாதிரி பாக்கியுள்ள பொருள்களும் நியாய விலையில் கிடைக்க வழி செய்யவேண்டும். நான் இதைச் சொல்லுகின்றபோது, இது ஒரு புதுக்

கருத்து எதுவும் நிலவவேண்டாம். சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய நிதி நிலை அறிக்கையில் தெரிவித்தார்கள். "நாம் ஒரு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன், ஒரு உணவுப்பொருள்கள் வழங்கும் மாநிலக் கழகம் ஒன்று அமைப்போம்" என்று சொன்னார்கள். அப்பொழுது நம்முடைய உணவு இலாகா அமைச்சர் அவர்கள் அந்தக் கார்ப்பரேஷன் அரிசி மட்டுமல்லாமல் சாதாரணமாக விற்கக்கூடிய உணவுப் பண்டங்களையும் வாங்கி சாதாரண ஏழை மக்களுக்குக் கொடுக்கக்கூடியதாக அது அமையுமென்று சொன்னார்கள். சென்ற தடவை நிதி நிலை அறிக்கையில் அந்தக் குறிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் இப்பொழுது இயங்கி வருகிறதா, எந்த அளவுக்கு இயங்கி வருகிறது, எவ்வளவு ரூபாய் மூலதனம், அந்த மூலதனத்திலிருந்து எவ்வளவு ரூபாய்க்குப் பண்டங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன, அரிசி மட்டுமா, மற்றப் பொருள்களும் வாங்கியிருக்கிறதா, அரிசியோடு மற்றப் பொருளைகளும் கொடுக்க வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாகப் பருப்பு முதலியவை எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களுக்கும் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இந்த ஏற்பாட்டை விரைவில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலுள்ள மக்கள் அவ்வளவு துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களை பெரும்பாலான வகையில் தீர்ப்பதற்காக வேண்டி மத்திய அரசாங்கம் மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில் சாதாரணப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்காக சூப்பர் மார்க்கெட்டுகள் வைக்கச் சொன்னார்கள். அப்படி வைக்கப்பட்ட சூப்பர் மார்க்கெட்டுகள் ஒன்றிரண்டு தவிர மற்றவை சரியாக இயங்கவில்லை என்பது உண்மை. சாதாரணமாகப் பொருள்களே இருப்பதில்லை என்று நண்பர்கள் சொன்னார்கள். சென்னையிலே இருக்கும் காவேரி சூப்பர் மார்க்கெட்டில் பொருள்களே இல்லையென்ற குறைபாட்டை பலர் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னால் பப்ளிக் மென் (கிரிமினல் மிஸ்-காண்டக்ட்) பில் என்ற ஒரு மசோதாவைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு ஜாயின்ட் செலக்ட் கமிட்டி போடப்பட்டு அதன் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கமிட்டியிலே என்னையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்திருந்தார்கள். அந்தக் கமிட்டியில் கூட்டம் நடந்துகொண்டிருக்கின்றபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் வெளிநடப்புச் செய்கின்றபோது, நானும் அவர்களோடு சேர்ந்து வெளிநடப்புச் செய்தேன். அந்த பப்ளிக் மென் (கிரிமினல் மிஸ்காண்டக்ட்) பில் என்று போடப்பட்டிருப்பதைப் பற்றி ஒரு



தேவையில்லாத ஒரு சட்டம் என்ற ஒரு கருத்தை, எல்லோரும் பத்திரிகைக்கு கொடுத்தார்கள். அதைப்பற்றி என்னுடைய கருத்தையும் நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தேவையில்லாத சட்டம் என்று ஏன் சொல்லுகிறார்கள் என்று ஆராய்ந்ததன் பேரில் எனக்குத் தோன்றிய இரண்டொரு கருத்துக்களை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

பப்ளிக் மென் என்று சொல்லக்கூடிய மக்கள் தலைவர்களாக இருக்கின்றவர்கள் மட்டும் ஏதாவது குற்றம் குறைகள் புரிந்தால், இப்பொழுது இருக்கின்ற இந்தியன் பீனல் கோடு-இன்படி அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு வழி முறை இருக்கிறது. பப்ளிக் சர்வென்ட் என்று ஒரு செக்ஷன் இருக்கிறது. அந்த செக்ஷன்படி அரசாங்கத்தில் இருக்கின்றவர்களை, உத்தியோகத்தில் இருக்கின்றவர்களைக் கண்காணிப்பதற்கும், அவர்கள் ஏதாவது தவறுகள் இழைத்தால் எப்படிக் கோர்ட்டுக்குப் போவது, அந்தத் தவறுகளுக்கு என்னென்ன தண்டனை கொடுப்பது என்பதற்கெல்லாம் ஏராளமான புரொவிஷன்ஸ் இருக்கின்றன. இந்தியன் பீனல் கோடில் பப்ளிக் மென் என்ற டெபனிஷனில் தற்சமயத்தில இருக்கக்கூடிய மக்கள் தலைவர்கள் வரவில்லை. அரசாங்க அதிகாரிகள் தான் வருகிறார்கள் என்ற கருத்தைப் பார்த்தேன். ஆனால் அண்மையில் 1972-ஆம் ஆண்டில் இந்த இந்தியன் பீனல் கோடு சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தத் திருத்தத்தில் 21-வது செக்ஷனில் நம்முடைய பில்லில் எதையெல்லாம் சேர்த்திருக்கிறோமோ அதையெல்லாம் அவர்களே சேர்த்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தேன்.

'Public servant' means any person who is a Member of Parliament or of the Legislature of a State in India, any person in the service or pay of the Government or remunerated by the Government by fees, commission for the performance of any public duty; any person who is a member or is in the service of a local authority, any person in the service or pay of a corporation owned and controlled by the Government, any judge including any person empowered by law. . . .

அந்த விளக்கப்படி யார் யார் பப்ளிக் மென் என்று நம்முடைய சட்டத்தில் போட்டிருக்கிறோமோ அவர்களையெல்லாம் அந்த ஐ.பி.சி. அமென்ட்மென்ட்டில், 1972-ல் போட்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அது மத்திய அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. அண்மையில் அது சட்டமாக்கப்படவிருக்கிறது என்று கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, அது இருக்கிறபோது இந்தச் சட்டம் உடனடியாகத் தேவைதானா என்ற ஒரு கருத்து நிலவி வருகிறது. 19[illegible]-லேயே மத்திய அரசாங்கம் 'பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்ட், 1947' என்ற அளவில் தனிப்பட்ட முறையில் ஒரு சட்டத்தை இயற்றி

யிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தில் நம்முடைய சட்டத்தில் இருக்கக்கூடிய பலவிதமான ப்ரொவிஷன்கள் இருக்கின்றன. அந்தச் சட்டத்திலுள்ள ஒரு குறைபாடு, இந்தியன் பீனல் கோடில் இருப்பதுபோல், பப்ளிக் சர்வென்ட் என்பவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்று இருக்கிறதே தவிர, பொது மக்களுடைய தலைவர்கள் என்ற அளவிலே இல்லை. ஆனால் இன்று வரப்போவதாகச் சொல்லப்படும் சட்டம் செலக்ட் கமிட்டிக்குப் போயிருக்கிறது. சட்டமாகுமா ஆகாதா என்ற விஷயம் அவர்களே பார்த்துக்கொள்ள வேண்டிய விஷயம். மத்திய அரசாங்கப் பொறுப்பிலுள்ளவர்கள் பொது மக்களுக்கான நல்ல காரியங்களில் ஈடுபடுவதை விட்டுவிட்டு, டில்லியைப் போன்ற இடங்களில் மந்திரி சபையைக் கவிழ்ப்பதில் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் எப்பொழுது அது சட்டமாகுமா என்பது சந்தேகமாகவிருக்கிறது. அது சட்டமானால், அதில் டெபனிஷன் 21-ல் பப்ளிக் சர்வென்ட் என்பதில் மக்களுடைய தலைவர்களும் வருவார்கள் என்று கொண்டு வர இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை நாமே இங்கேயே கூட ஒரு திருத்தம் கொண்டுவரலாம். இந்தியன் பீனல் கோடுக்கு திருத்தம் கொண்டுவருகின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது. கன்கரண்ட் லிஸ்டில் அரசியல் சட்டப்படி நாம் திருத்தம் கொண்டுவரலாம். மத்திய அரசுக்குச் சென்று ஒப்புதல் பெறவேண்டும் என்பது தான். இங்கேயே ஐ. பி. சிக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து, அதோடு இருந்தவைகளை பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்ட், 1947-க்கும் உகந்ததாக ஆக்கி, அவற்றை வைத்துக்கொண்டே விசாரிப்பதற்கு வழிவகை இருக்கும்போது, தனியாக இங்கு ஒரு சட்டம் கொண்டுவருகிறோமே? இந்தச் சட்டத்திலே இருக்கும் குறைபாடுகளை மற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதால் நான் சொல்லுகிறேன். அதிலே கூறப்பட்ட பல விஷயங்கள் இந்த பில்லில் இருக்கின்றன. உதாரணத்திற்கு, யாராவது ஒருவர் ஒரு கம்பிளெயின்ட் கொடுத்தால், அவர்களை 3 வருடம் உள்ளே தள்ளுவோம் என்று சொல்லுகிறார்கள். இன்டியன் பீனல் கோடுபடி கூட 7 வருடம் உள்ளே தள்ளுகிறார்கள். யாராவது கம்பிளெயின்ட் கொடுக்க வந்தால், அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகள் அந்த பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்டில் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இப்பொழுது வந்திருக்கின்ற மசோதாவில் யாராவது ஒருவர் புகார் கொடுத்தால், அவருக்கு பைன் போடலாம் அல்லது அவர் காம்பென்சேஷன் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. யார் அதை விசாரித்து, உண்மையா இல்லையா என்று கண்டுபிடித்து அந்தக் காம்பென்சேஷன் கொடுக்கச் சொல்லுவார் என்றால், அந்த என்கொயரி கமிஷனர்தான். எவ்வளவு போடலாம் என்றால், எவ்வளவு வேண்டுமானாலும் போடலாம். லட்சம் ரூபாய் வேண்டுமானாலும் போடலாம் என்ற ஆபத்து இருக்கிறது. பப்ளிக் மென் என்று சொல்லும்





மக்கள் தலைவர்கள் மீது தவறு இருந்தால், அதைப்பற்றி கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று யாராவது கம்பிளெயின்ட் கொடுத்தால், அவர்களை உடனடியாக பைன் செய்யும் அதிகாரம் இதிலே காணப்படுகிறது. இப்படிப் பல அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இவ்வளவு அருமையான கருத்துக்களைப் பொறுக்குக் கமிட்டி முன்னால் எடுத்துச் சொல்லாமல் வெளியேறிவிட்டாரே என்று நான் வருத்தப்படுகிறேன். அங்குச் சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இப்போது குழுவில் இல்லையென்ற காரணத்தால், முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் இங்கே இருக்கிற காரணத்தால், அந்தக் கருத்துக்களை உங்கள் முன்னே சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இங்கு ஒரு சொற்பொழிவாகத்தான் உங்களுடைய கருத்துக்களை ஆற்ற முடியும். பொறுக்குக் குழுவில் அமர்ந்து நீங்கள் பல விஷயங்களைச் சொல்லவும், மற்ற உறுப்பினர்களுக்கு உரையாடல் மூலம் தெளிவாக்கவும், சட்ட அமைச்சரவர்கள் பல விஷயங்களைச் சொல்லவும், நீங்கள் சொல்லும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளவும் நல்ல ஏதுவான நிலைமை ஏற்பட்டிருக்கும். அந்த வாய்ப்பை ஏன் இழக்க வேண்டுமென்று கேட்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த மசோதாக்களெல்லாம் ஒரு சூழ்நிலையில் கொண்டுவரப்படுகின்றன. அன்றைய நிலையில் அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது. ஒவ்வொரு விதமான சூழ்நிலை ஏற்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எனக்குச் சூழ்நிலை புரிகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் அரசியலில் ஈடுபட்டவர்கள் தான். சூழ்நிலைக்கு ஏற்ப சில பல முடிவுகளை ஆளுங்கட்சியில் உள்ளவர்களும், எதிர்க்கட்சிகளில் உள்ளவர்களும் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மகாராஷ்டிரத்திலே இதே போல் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தில் பொய்க் குற்றம் சாட்டியவர்களுக்கு மூன்று வருஷம் தண்டனை கொடுக்கலாம் என்று இருக்கிறது. நீங்கள் சொன்ன சூழ்நிலை மகாராஷ்டிரத்திலும் இருக்கின்

நதா ஆளுகின்ற காங்கிரஸ் அங்கே ஆட்சியில் இருக்கிறது. இங்கே ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியோடு ஒன்றுபட்டு சேர்ந்து வேலை நடப்பு செய்திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, மாநிலங்களில் அந்தச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டுவரலாம். கொண்டுவருவதைத் தப்பு என்று சொல்லவில்லை. ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கும்போது, இந்த நுண்ணியதொரு சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இதில் பலவிதமான குறைபாடுகள் இருப்பதைப் பார்க்கிறோம். மேலும் அவசரமாகச் செய்திருக்கிறார்களென்று தோன்றுகிறது. அதில் குறைபாடுகள் இருந்தால், மற்றவர்கள் நிச்சயமாகக் கவனிப்பார்கள். இருந்தாலும்கூட, அந்தக் குறைபாடுகளைத் தவிர்க்கின்ற முறையிலே ஒரு சட்டம் இருக்கும்போது, அதை நல்ல முறையில் உபயோகித்துக்கொண்டிருக்கலாமென்ற கருத்தைத்தான் நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் முன்னாலேயே சொன்னபடி கிரி 3 வருடம் என்பதற்குப் பதில் ஐ. பி. சி.யில் 7 வருடம் போட்டிருக்கிறார்கள். இந்தவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. அந்த சமயத்தில் கம்பெனியைக் கொடுப்பவர்களுக்கு ஒரு பாதகமான நிலையை உண்டுபண்ணுவதைப் பார்க்கிறேன். இந்தக் கருத்தை நமது முதலமைச்சரவர்களும், சட்ட அமைச்சரவர்களும் ஆராய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டதாரி ஆசிரியர்கள் பிரச்சினையாகும். நேற்றைய தினம் கல்வி அமைச்சரவர்களோடு நானும், திரு. சாது அய்யர் அவர்களும், திரு. பு. சந்திரனும் அவர்களும், திரு. கே. எல். கணபதி அவர்களும் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசினோம். அதே சமயத்தில் அமைச்சரவர்கள் மனமுவந்து ஆசிரியர்களுடைய முக்கியப் பிரச்சினையாகிய இரண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, 2 நாட்களுக்கு முன்னமேயே, சனிக்கிழமையன்று சட்டசபையில் அறிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு இப்போது தேர்வு நிலை ஒரு பத்து ஆண்டுகளுக்கான காலத்தில் கொடுக்க வேண்டுமென்ற முடிவை கல்வி அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதே மாதிரி தமிழ் நாட்டில், 3,000 பட்டதாரி ஆசிரியர்கள் டெம்பரரியாக, தற்காலிகமாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலை அளிப்பதற்கான உத்தரவுகளையும் போட்டார்கள். அதற்காக நாங்கள் நால்வரும் அரசை மனதாரப் பாராட்டி, அவர்கள் இந்த உத்தரவைப் போட்டதற்கு எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். பட்டதாரி ஆசிரியர்கள் சார்பாக நாங்கள் நால்வரும் இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் காலைச் சென்றோம். மற்ற வேலைகளுக்கிடையில், எங்களுடன் 1½ மணி நேரம் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தார்கள். நாங்கள் பட்டதாரி



ஆசிரியர்களிடம் அது பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். என்றாலும்கூட, அவர்கள் ஓரிரு குறைபாடுகளை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் எல்லாம் பெரிய குறைபாடுகளல்ல. பெரிய காரியங்களையெல்லாம் இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தவிர்க்க வேண்டுமென்ற காரணத்தாலும், மாணவர்கள் படிக்க இடையூறு இல்லாமல் ஆசிரியர்கள் முழு அளவில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும், கல்வியில் அவர்கள் ஈடுபட வேண்டுமென்ற காரணத்தினாலும்தான் நாங்கள் தலையிட்டோம். இன்னும் அவர்கள் ஒருசில குறைபாடுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகள் சாதாரணமாக இருப்பவைதான். எனவே அவைகளை அரசு கவனித்து ஆவன செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில் அரசுக்கு எங்களுடைய உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறோமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். அடுத்தபடியாக, இந்தக் குத்தகைதாரர்கள்.

திரு கே. எஸ். மணி: தலைவரவர்களே . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, காலையிலே வந்து என்னிடத்திலும் கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும் நீங்கள் நால்வரும், ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளும் பேசினீர்கள். அங்கு அப்போது 'பெரிய காரியங்களைச் சாதித்துக் கொடுத்திருக்கிறீர்கள்' என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அரசியல் ரீதியில் இந்தப் பிரச்சினையை அணுகாமல், சமுதாயப் பிரச்சினையாகக் கருதி, நீங்களும் எங்களுடன் சேர்ந்து இந்தப் பிரச்சினையை அணுகியதற்கு நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது ஏற்பட்ட முடிவின்படி அவர்கள் போராட்டம் நடத்தப் போவதில்லை என்று நம்பித்தான் நாம் கலைந்து சென்றோம். அது எந்த அளவுக்கு இருக்கிறது?

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நாங்கள் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற முறையில் அணுகி, சமாதானம் ஏற்படுத்த எங்களாலான முயற்சிகளைச் செய்தோம். அந்தப் போராட்டக் குழுவில் நாங்கள் அங்கத்தினர்களல்ல. அவர்கள் எடுக்கவேண்டிய முடிவுகளைத் தடை செய்யவோ, வேண்டாமென்று சொல்வதற்கோ முடியாத நிலையில் இருக்கிறோம் என்ற கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய கோரிக்கைகளை இவ்வளவு தூரம் நிறைவேற்றிவிட்ட பிறகு, ஏதாவது ஓரிரு சகாயங்களை அரசாங்கம் செய்யக்கூடுமானால், அந்தப் போராட்டத்தைத் தவிர்க்கக் கூடிய நிலையில் இருக்கலாம். அரசாங்கம் பயந்துகொண்டு தவிர்க்க

வேண்டுமென்று சொல்லவில்லை. அரசாங்கத்தால் சமாளிக்க முடியும். அதற்காக நாங்கள் சொல்லவில்லை. இவ்வளவு தூரம் செய்துவிட்டபிறகு ஓரிரு சலுகைகளை நல்ல முறையில் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தங்கள் இப்போது அறிந்தோ, அறியாமலோ பேசுகிற கருத்துக்கள் அவர்கள் மறுபடியும் போராடுவதற்கு ஒரு அடிப்படையைச் சேர்த்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். காலையில் பேசும் போது கூட, பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயங்கள் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், சாதாரண விஷயமாக இருந்தாலும் அவர்களுக்குச் செய்வதன் மூலம், மற்றத் துறைகளிலுள்ள ஊழியர்களும் கோரிக்கைகள் வைத்தால், அரசாங்கத்தின் நிதிநிலையில் சங்கடம் ஏற்படுமென்று சொல்லியிருக்கிறேன். போராட்டத்தை நிறுத்திய பிறகு இதைப் பற்றிப் பேசலாமென்று தங்களிடத்திலும். திரு. ராஜா ஐயர், திரு. சந்தோஷம், திரு. கணபதி அவர்களிடத்திலும், ஆசிரியர்கள் பிரதிநிதிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது அதற்கு ஒப்புதல் அளித்துவிட்டுச் சென்றவர்கள், அவர்களுடைய கமிட்டியைக் கலந்துகொண்டு, போராட்டத்தை நிறுத்திவிடுவதாகத் தெரிவித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதற்குப் பிறகு போராட்டம் நடத்துவார்களானால், வேதனைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, உள்ள நிலைமையை எடுத்துச் சொன்னேன். அரசு ஆராய வேண்டுமென்ற கருத்தைத்தான் சொன்னேன். தீர்வு இருக்கிறது அல்லது இல்லையென்ற பிரச்சினையில்லை. முடியுமானால் பரிசீலனை செய்யுங்கள் என்றுதான் சொல்கிறேன். போராடப் போகிறார்களா அல்லது போராடப் போவதில்லையா என்ற நிலைமை தெரியவில்லை. ஏனென்றால் ஆசிரியர்கள் என்ற நிலைமையில் இருக்கும்போது பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லமுடியும். தலைவர்களாக இருக்கிறவர்கள் சூழ்நிலை எப்படியிருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டுமென்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். அரசைப் பொறுத்தவரையில், என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமான காரியங்களை அரசு செய்திருக்கிறது. சொன்ன உடனே இவ்வளவு முக்கியமான காரியங்களை அரசு செய்யுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதற்காக மீண்டும் என்னுடைய நன்றியை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அவர்களிடத்தில் போகத் தயாராக இருக்கிறோம், எவ்வளவு தூரம் சுமுகமான ஒரு உறவுநிலைமை ஏற்படுத்த முடியுமோ அதற்கு நாங்கள் நால்வரும் முயற்சிப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குத்தகைதாரர்கள் நிதி உதவிக் கழகமென்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குத்தகைதாரர்கள் நிதி உதவிக் கழகம் என்பதைப்பற்றி நான் மேலெழுந்தவாரி . . .



அரசைப் பாராட்டினேன். ஏனென்றால் இந்தக் கருத்து என்றாலும், திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களாலும் இந்த அவையில் சில சமயங்களில் சொல்லப்பட்டது. நிலச்சுவாந்தார்களாக இருப்பவர்கள் அல்லது கொஞ்சம் நிலம் வைத்திருப்பவர்கள் தங்கள் நிலத்தை குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். குத்தகைக்கு விட்டிருக்கும்போது, 30 ஏக்கர் என்றிருந்ததை, 15 ஏக்கராகக் குறைக்கும்போதே, அந்த 15 ஏக்கரை சீலிங்கிலே வாங்கிக்கொண்டு போகிறார்கள், அப்படி வாங்கிப் போனவரையில் நல்லதென்று நினைப்பவர்களில் நானும் ஒருவன். ஏனென்றால் ஆங்கிலத்தில் சொல்வார்கள் "Title is yours and the enjoyment is of the other man" அதற்கு விளக்கம் சொல்லத் தேவையாக இல்லை. பட்டா நிலச்சுவாந்தார்கள் மேல இருக்கிறது. அவர்கள் தங்களிடம் பட்டாவை வைத்துக்கொண்டு, நிலத்தை குத்தகைதாரருக்குக் கொடுத்துவிட்ட பிறகு, குத்தகைதாரர்கள் பல ஆண்டுகளாகக் குத்தகை எதுவும் கொடுக்கவில்லையென்பதை முதலமைச்சரவர்கள் அறிவார்கள். கடந்த 4 ஆண்டுகளாகக் குத்தகை பாக்கியிருக்கிறது. ஐந்தாவது ஆண்டின், அதாவது சென்ற ஆண்டின் குத்தகை பாக்கியைக் கொடுத்துவிட்டால், 4 ஆண்டுகளது குத்தகையும் தள்ளுபடி ஆகிவிடுமென்று அரசு தெரிவித்தது. அப்படியும் இன்னும் குத்தகை பாக்கியைக் கொடுக்காமல், இதையும்கூடத் தள்ளி வைக்கவேண்டுமென்று தஞ்சையில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் நிலத்தை வைத்திருப்பவர்கள், அந்த நிலங்களை குத்தகைதாரர்களாவது வாங்கிக்கொண்டு போகட்டுமென்று நினைக்கிறார்கள். அப்படி எண்ணுவதற்குக் காரணம் இருக்கிறது. அதை விற்றுவிடலாமென்று பார்த்தால், வாங்குவார் யாருமில்லை. வீட்டை யாராவது ஒருவருக்கு வாடகைக்கு விட்டு விடுகிறோம். பிறகு அவர் வீட்டையும் விடமாட்டார். யாரும் வாங்கவும் வரமாட்டார்கள். அவர் இருக்கும் வரை யாரும் வாங்க வர மாட்டார்கள். அந்த நிலைமையில், நிலச் சொந்தக்காரர்களுக்குக் குத்தகை வராது. பணத்தைக் கொடுத்து வாங்குபவர்களுக்கும் குத்தகை வராது. ஆகவே யாரும் பணம் கொடுத்து நிலத்தை வாங்க மாட்டார்கள். இந்த நிலைமையில் சாதாரணமாக ஏழை, எளிய நிலச்சுவாந்தார்கள், 1 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள், 1 ஏக்கர், 2 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள் சென்னைக்கு வந்து உத்தியோகம் பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் இப்போது சாதாரண நிலச்சுவாந்தார்களாகி விட்டார்கள். அதை வைத்துப்பார்க்கிறபோது, தஞ்சை மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு, 2 போகத்தில் ரூ. 400 கிடைத்தால் அதிகம். அக்ரிகல்சரல் வேஜ் கமிட்டியில், மாண்புமிகு முதலமைச்சரவர்களும், அமைச்சரவையும் என்னையும் ஒரு உறுப்பினராகப் போட்டதில், அதன் சார்பாக பல மாவட்டங்களுக்கு நான் சென்றேன். சில மாவட்டங்களுக்குச் சென்று பார்க்கிறபோது, ஒரு ஏக்கர் விலை 60,000 ரூபாய் கூட இருக்கின்றது. இப்படிப்பட்ட இடங்கள்

கோவையில் இருக்கின்றன. 60,000 ரூபாய் பெறுமானமுள்ள இடத்தில் ஒரு ஏக்கருக்கு 6,000-த்திலிருந்து 8,000 ரூபாய் வரை வருகிறது. 15 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு 80,000 ரூபாய், 90,000 ரூபாய் வருமானம் வருகிற நிலைமையிருக்கிறது. அதே சமயத்தில் பல லட்சக் கணக்கான ரூபாய் அளவுடைய சொத்துக்களை நம்முடைய சீலிங் மூலமாகக் கொடுத்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்கள் வைத்திருக்கும் ஒரு வேலி நிலம் இன்றைய தினம் எவ்வளவு என்று முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். அங்குள்ள ஒரு வேலி நிலம் 20,000 ரூபாய்க்கு மேல் இல்லை. சாதாரணமாக 10,000 ரூபாய் முதல் 20,000 ரூபாய் வரையிருக்கிறது. அங்கு 15 ஏக்கர் என்று சொன்னால், அங்குள்ள நிலச்சுவான்தார்கள் 20,000 அல்லது 25,000 ரூபாய் மதிப்புள்ள நிலங்களைத்தான் வைத்துக்கொள்ள முடியும். கோவையில் உள்ளவர்கள் கிட்டத்தட்ட பல லட்ச ரூபாய மதிப்புள்ள நிலத்தை வைத்துக்கொள்ளலாம். ஒரு வருடத்திற்கு அவர்களுக்கு 90,000 ரூபாய் வருமானம் வருகிறது. அந்த அளவுக்கு நிலச் சீர்திருத்தம் வகை செய்திருக்கிறது. ஆனால் அவர்களைப்பற்றி . . .

**திரு. எஸ். வி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் :** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய திரு. சுவாமிநாதன் அவர்கள் ஏக்கருக்கு 60,000 ரூபாய் கோவையில் வருகிறதென்று சொன்னார்கள். அப்படி விற்ற காலம் இருந்தது. அப்பா கொடியாயி விற்றது. வேறு எந்தப் பகுதியிலும் விற்கவில்லை. ஆனால் இன்றைய நிலவரத்தில் 20,000 ரூபாய்க்கு மேல் விலையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஏக்கருக்கு 20,000 ரூபாயென்று சொன்னார்கள். அந்த ஏக்கர் ஸ்டேண்டர்டு ஏக்கர். வேறு அல்ல. நம்முடைய ஸ்டேண்டர்டு ஏக்கர் மாதிரி அவர்கள் ஸ்டேண்டர்டு ஏக்கர் இல்லை. ஒரு ஏக்கர் கிட்டத்தட்ட 1½ ஸ்டேண்டர்டு ஏக்கர். . .

**திரு. எஸ். வி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் :** 1 ஏக்கர் 1½ ஸ்டேண்டர்டு ஏக்கர்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஒரு ஸ்டேண்டர்டு ஏக்கர் என்று வைத்துக்கொண்டாலும் 20,000 ரூபாயென்று சொன்னால், 15 ஏக்கருக்கு 3 லட்சம் ரூபாய் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி அவர்களுக்கு வருகிறது. தஞ்சையில் ஒரு வேலி நிலமே 20,000 ரூபாய் தான். நீங்கள் ஒரு வேலி நிலமே ரூபாய் 20,000 என்கிறீர்கள். இந்த நிலைமையிலே தஞ்சையிலே இருக்கக்கூடிய நிலச்சுவான்தார்களுக்குச் சரியான நீதி அளிக்கப்படவில்லை என்பதை முதலமைச்சர் அவர்களும் தஞ்சையிலே இருந்து வந்தவர் என்ற அளவிலே, நான் அவர்களுக்கு





மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலைமையிலே நிலத்தையும் வைத்துக்கொண்டு நிலத்திலிருந்து வருமானம் வராத நிலைமையிலே இருக்கின்ற போது . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு சாதாரண ஏக்கர் என்ன என்ற கணக்கு அங்கத்தினர் அவர்கள் சொன்னால் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஒரு ஏக்கருக்கு 1½ ஏக்கர் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. நஞ்செய் நிலமாக வைத்துப் பார்க்கப் போமேயானால் கிட்டத்தட்ட 1 ஏக்கருக்கு 1½ ஏக்கர் இருக்கலாம். கிட்டத்தட்ட 15 ஏக்கர் 20 ஏக்கரும் இருக்கலாம். அவ்வளவுதான் இருக்க முடியும். அதற்குமேல் இருக்காது. ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு போன்ற பக்கங்களில் இருக்கின்றன. சீர்காழி, திருத்துறைப்பூண்டி, திருவாரூர் பக்கங்களில், முதலமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய உசரான தஞ்சைப்பகுதி நிலங்களை எடுத்துக்கொண்டு பார்த்தோமானால், ஒரு ஏக்கருக்கு ஒன்றரை ஏக்கர் இருக்கலாம். 20 ஏக்கர் மொத்தத்தில் இருக்கலாம். அதிலே வேலிக்கு ரூ. 20 என்று சொன்னால், இருபது ரூபாய் என்றால் ரூ. 20 ஆயிரம் அல்லது 25 ஆயிரம் வரை என்று நாம் வைத்துக்கொள்ள முடியும். வரக்கூடிய வருமானம் 2,400 ரூபாய். அவர்களுக்கு இந்த 2,400 ரூபாய் வருமானம் என்பது ஒரு ஏக்கரிலே வரக்கூடிய வருமானத்திலே பாதி மாசக்கூட இருக்கும். இந்த நிலைமையிலேதான் 'சம்பர் ரோல்' என்று கூட போடச் சொன்னார்கள். தற்சமயம் பஞ்சு போட்டு பல பேர் தஞ்சை மாவட்டத்திலே நஷ்டப்பட்டிருக்கிறார்கள். பஞ்சு பயிரிட்டவர்கள் அந்தப் பஞ்சை விற்கமுடியாத நிலைமையிலே, இழப்பு அடையக்கூடிய நிலைதான் அவர்களுக்கு இருக்கிறது. கோவையிலிருந்து அந்த பஞ்சு வியாபாரிகள் அந்தப் பஞ்சை குறைந்த விலைக்கு வாங்கிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பருத்தி வாங்கிப் பழக்கப்பட்டவர்கள். அவர்கள் இந்த நிலையால் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டுபோகிறார்கள். இந்த நிலைமையிலே நாங்கள் தஞ்சையில் இருந்துகொண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த 'டெனன்ட்ஸ் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' என்ற அளவிலே நிதி உதவிக் கழகம் ஒன்றை அரசு ஆரம்பித்து அந்த நிதி உதவிக் கழகம் மூலமாகப் பணத்தைக் கொடுத்து நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தை வாங்குவதற்கு வசதி செய்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்து நானும் அரசைப் பாராட்டினேன். ஆனால் சில பேர்கள், அந்தக் குத்தகைதாரர் வைத்திருக்கின்ற நிலத்தைக்கூட அவர்களுக்கு விற்றுவிடவேண்டுமென்று அரசாங்கத்தால் கட்டாயப் படுத்தப் படுகிறார்கள் என்று சொல்லக்கூடிய பயத்தை ஏற்படுத்துகின்றார்கள். அதுவும் குறைந்த விலைக்கு விற்றுவிட வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள் என்கிறார்கள்.

'சீலிங்' அளவு என்று சொல்லக்கூடிய உச்ச வரம்புக்குள்ளாக வைத்திருக்கக் கூடியவர்கள் இந்த நிலத்தை தங்களுடைய குத்தகைதாரர்களுக்குக் கொடுப்பதானால் அதற்கு என்று நிலைமைகளை வரையறுக்க வேண்டும். எவ்வளவு பணம் கொடுப்பது என்பது ஒருவருக்கொருவர் முடிவு செய்துகொள்ளக் கூடிய விஷயம். அது ஒரு தடவையில் கொடுப்பதா அல்லது 2, 3 ஆண்டுகளில் கொடுப்பதா என்று அவர்களே முடிவு செய்துகொள்ள விட்டுவிட வேண்டும். ஆனால் பணத்தைப் பொறுத்தவரையில், இந்த நிலத்தை வாங்குவதற்கு உரிய முறைகளை அந்த குத்தகைதாரர்களுக்கு ......

**திரு. கே. எஸ். மணி:** ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டால் ஒரு முடிவு ஏற்படும் என்று தாங்கள் நம்புகிறீர்களா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நிலச்சுவான்தார்கள் சார்பிலே நான் பேசுகின்றேன். திரு. கே. எஸ். மணி அவர்கள் யாருடைய சார்பிலே பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. ஏனென்றால் அதிலே அபிப்பிராயபேதங்கள் நிச்சயமாக இருக்கும். அந்த நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கவேண்டுமென்று குத்தகைதாரர்களுக்கு எண்ணம் இருக்கும். நிலச்சுவான்தார்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். நியாயமான விலை என்று நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், 15 ஏக்கருக்கு உச்ச வரம்பு கொண்டு வந்து விட்ட பிறகு, இந்த நிலத்தை இனியும் நியாயமான விலைக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே எந்தவிதமான கட்டாயமோ கட்டுப்பாடோ இருக்கக்கூடாது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். நான் முடிவாக இன்னும் ஒன்றை மட்டும் சொல்வேன். பக்கிங்காம் கால்வாயைப் பற்றி அண்மையிலே 50 லட்சம் செலவு செய்யப் போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்த 50 லட்சம் ரூபாய் செலவு செய்யக்கூடிய திட்டத்திலே 6 அடி ஆழம் தான் இருக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது நிதி நிலை அறிக்கையில். நான் கேள்விப் பட்டவரையிலே ஆழத்தைப் பொறுத்த வரையில் 6 அடி ஆழம் தான் இருக்கப் போகிறது என்று சொல்லுகிறார்கள். அது 8 அடி ஆழம் இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் பரவலாகத் தெரிவிக்கப்படுகின்றது. காரணம் அது பல மைல்களுக்கு ஓடக்கூடிய ஆறு. அதை inland water transport ஆகக் கூட பயன்படுத்தக்கூடிய வசதிகள் இருக்க வேண்டுமென்ற அளவிலே இன்னும் அதிக ஆழம் வேண்டும். இந்த 6 அடி ஆழம் வைத்தால் ஸ்டீமர் கூடப் போக முடியாது என்று நிபுணர்கள் சொல்லுகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நிபுணர்கள் இந்தப் போக்கு வரத்துக்கு 3 அடி ஆழம் இருந்தால்கூடப் போதும் என்று சொல்லுகின்றார்கள்.





**திரு. ஜி. சுவாமிநாதன்:** என்னிடத்திலே சொன்னவர்கள் 8 அடி ஆழம் இருந்தால் நல்லது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தைத்தான் நான் உங்களிடத்திலே தெரிவித்தேன். 3 அடி ஆழம் போதும் என்றால், 6 அடியோ அல்லது 4 அடியோ ஆழம்செய்து, எவ்வளவுக்கெவ்வளவு செலவுகளைக் குறைக்க முடியுமோ அப்படியே செய்துகொள்ளலாம். ஆனால் ஒன்று மட்டும் சொல்ல வேண்டும். கூவம் ஆற்றைப் பொறுத்தவரையில் நான் சொல்கின்றேன். கூவம் நிறைவு விழாவின்போது நானும் போயிருந்தேன். அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணைத் தலைவரவர்களும், மற்ற அமைச்சர்களும், மாண்புமிகு திரு. ராஜாராம் அவர்களும், திரு. சாதிக் பாட்சா அவர்களும் வந்திருந்தார்கள். அந்த அளவிலே அது பூர்த்தி அடைந்தது என்பதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைந்தேன். அதற்குப் பிறகு நான் இங்கே 23-ம் தேதி அளவிலே வந்தபோது, என்னுடைய குடும்பத்தினரும் வந்திருந்தார்கள். அவர்கள் கூவத்திலே 'போட்'-லே போக வேண்டுமென்று என்னார்கள். அதன்படி 23-ம் தேதி அளவிலே நானும் எனது குடும்பத்தினரும் ஒரு அரை மணி நேரம் காத்திருந்தபின் ஒரு படகை எடுத்துக்கொண்டு சாயந்திரம் போனோம். அப்படிப் போகிறபோது அந்தத் தண்ணீரைப் பார்க்கின்றபோது, அதிலே மிகவும் நாற்றம் அடிக்கக்கூடிய தண்ணீர் கலந்திருந்தது என்பதை இங்கே நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகின்றேன். அந்தப் படகிலே போகிறபோதும் மறுபடியும் அந்த ஆற்றிலே வருகிறபோதும் அந்த நாற்றம் மாறாமல் சாக்கடைத் தண்ணீர் கலந்திருந்தது. கருப்பாக இருந்தது. அது எந்த இடத்திலிருந்தோ வந்து கலந்துவிட்டிருக்கிறது என்று, உடன் இருந்தவர்கள் சொன்னார்கள். இன்னும் இரண்டு மூன்று நாளில் அந்த நாற்றம் போய்விடும் என்றும் சொன்னார்கள். நேற்றையதினம் நான்கூட போய்ப் பார்க்கலாம் என்று இருந்தேன். அது நாற்றமாக இருக்கும் என்பது உண்மையானால், இந்தத் திட்டத்திலே ஏதாவது தவறு இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். அதை மாற்றவேண்டும். ஏனென்றால் அரசாங்க மருத்துவமனை, ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வரக்கூடிய கழிவு அதிலே வந்து சேர்கிறது என்று சொல்லுகின்றார்கள். கழிவு நீரிலே, இரவிலே அந்த நீரில் படகில் வந்தோமே, ஏதாவது நோய் வந்துவிடுமோ என்றுகூட நான் மன வருத்தம் அடைந்தேன். அந்த அளவுக்கு பயத்தை உண்டுபண்ணுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆகவே அதை மாற்றக்கூடிய அளவிலே அமைச்சர் அவர்கள் கவனித்துச் செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரே ஒரு வார்த்தை, சிறு குறையை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மின்சாரப் பற்றாக்குறை காரணமாக பல இடங்களில் பெரிய கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எங்களுக்கு இருக்கின்ற கஷ்டம் நாங்கள் இருக்கக்கூடிய டெல்டா டிஸ்ட்ரிக்ட்களில்

டலிலே மின்விசிறி இல்லாமல் பகல் நேரங்களிலே தொந்தரவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட 3 நாட்களில் அதற்கு ஏற்பாடு செய்கின்றேன் என்று சொன்னார்கள். இன்னும் வரவில்லை. அந்தத் தொந்தரவுபற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. சாதாரணமாக இருக்கக் கூடிய ஏழை மக்களுக்கு மாவு அரைப்பது போன்றவற்றிற்கு எல்லாம் கூட மாவு மில்களுக்கெல்லாம் கரண்டு கிடைக்காமல் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனாலெல்லாம் ஏழை எளிய மக்களுக்கு மிகுந்த துயரம் ஏற்படுகின்றது. மிகச் சாதாரணமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதில் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்கள் தான். அதை நீங்கள் போக்கினால் இந்த ஏழை மக்கள் ஓரளவுக்கு மன அமைதியை அடைவார்கள் என்று சொல்லிக்கொண்டு, அதற்குச் செல்வாரும் மின்சாரமும் அதிகமாக இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு அங்கத்தினர் சொல்லியதன் பேரில், மின்சாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று மின்சார அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். நான் பொதுப் பணித் துறை அமைச்சர் என்ற முறையில், மாவைப்பைப் வெந்நீர் போடுவதற்கும் மின்சார விசிறிக்கும் மின்சாரம் அனுமதிக்க வேண்டுமென்று உத்தரவு கொடுத்திருக்கிறேன்.

* திரு. ஜி. பாரங்குசம்: தலைவரவர்களே, 1973-74-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைபற்றி சென்ற நான்கு ஐந்து நாட்களாக இந்த சபையில் அதை வரவேற்றும்—எதிர்த் தரப்பிலே இருக்கின்றவர்கள் ஒரு சிலர் வரவேற்றும் சில குறைகளை எடுத்துச் சொல்லியும், சில எதிர்த் தரப்பிலே இருப்பவர்கள் அதிலே செய்ய வேண்டிய சில சிறந்த மாற்றங்களைப் பற்றியும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிற முறையில் இரண்டொரு வார்த்தைகள் சொல்லி வரவேற்கலாம் என்று என்னுடைய எண்ணத்தையும் சொல்லி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக 1973-74 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கை வருவதற்கு முன்னால், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை எப்படி இருக்குமோ, எவ்வளவு வரி இருக்குமோ, எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்களோ என்றெல்லாம் நாட்டிலுள்ள மக்கள் கருதுகின்ற அளவுக்கு, நிலைமை இருந்தது. நம்முடைய தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கை வந்த பிறகு, மத்திய சர்க்கார் நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னால், நம்முடைய அறிக்கையின் எந்தவிதமான வரியும் இல்லை, அது உபரி நிதி நிலை அறிக்கையாக வந்திருக்கின்றது என்பதை தமிழகத்திலே இருக்கின்ற நல்லவர்கள் அத்தனை பேர்களும் வரவேற்றுப் பேசுகின்றார்கள். பத்திரிகைக்காரர்கள்கூட வரவேற்று எழுதி





யிருந்தார்கள். ஆனால் மத்திய சர்க்காரிலே வரப்போகின்ற நிதி நிலை அறிக்கை பற்றி ஐயப்பாடு, அந்த அறிக்கை வருவதற்கு முன்னால், நாட்டில் இருந்தது. அது வந்ததற்குப் பிறகு எந்தெந்த மக்கள் ஐயப்பாடு கொண்டிருந்தார்களோ அந்த ஐயப்பாடு அதிகமாகிற அளவுக்கு மத்திய சர்க்காருடைய நிதி நிலை அறிக்கை இருந்தது என்பதை நாம் எல்லாம் அறிவோம். பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு எவ்வளவு வரி போட முடியுமோ அந்த அளவுக்கு அந்த அறிக்கையில் வரிகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதும், அதனால், தமிழகத்தில் சாதாரண மக்களுக்கு சில சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதும் நன்றாகத் தெரியும். இந்த நிலையில் நம்முடைய நிதி நிலை அறிக்கை உபரி நிதி நிலை அறிக்கையாக, ஏறத்தாழ 49 லட்சம் உபரியாக இருக்கின்ற அளவுக்கு, இருக்கின்றது. இந்த அறிக்கை மட்டுமல்ல. சென்ற ஆண்டு வந்த அறிக்கையும் இதே நிலையில்தான் இருந்தது. வரியை எந்த அளவிற்குப் போடுவது, வரி போடுவதால் மக்களுக்கு எவ்வளவு தொல்லைகள் வரும், வரி போடுவதால் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து அதிகமான அளவிற்கு வரிப் பகுதியை நிறுத்தி விட்டு, மக்களுக்கு என்னென்ன வழிகள் செய்ய வேண்டும், இருக்கிற நிதி நிலைக்கு ஏற்றவாறு எப்படிப்பட்ட திட்டங்களை வகுக்க வேண்டும் என்று ஆலோசித்து அப்படிப்பட்ட திட்டங்களை வகுத்து, இந்த நான்கைந்து ஆண்டு காலமாகவே, குறிப்பாக தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதை நீங்களெல்லாம் நன்றாக அறிய முடியும். அந்த முறையிலே நான், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சமதர்ம நோக்கத்தோடு, சமதர்மத் திட்டம் இந்த நாட்டிலே நிறைவேற்றப்பட வேண்டும், அதுவும் மிக வேகமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த அந்த வழியை நாம் நடைமுறையில் செய்து காட்ட வேண்டுமென்ற முறையில், கலைஞர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையின் பல்வேறு பிரச்சினைகளில் பல திட்டங்களை வகுத்திருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், நான் இரண்டொன்றை மாத்திரம் என்னுடைய உரையில் குறிப்பிட்டு முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

சமதர்மப் பாதையில் நடைபோட்டு, தொழிலாளர் நலனில் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு படிப்படியாக தொழிலாளர்களின் காரியங்களில் இந்தத் தொழிலாளர் அரசு காரியமாற்றியிருக்கிறது என்பதை அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு பிற்பட்ட சமுதாயத்தினர், சமுதாயத்தில் கீழ் நிலையில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள்—இவர்களுடைய அரசு என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். அந்த முறையிலேதான் தொழிலாளர்களுடைய நலன்களுக்காக என்னென்ன செய்ய

முடியுமோ, அவர்களுக்காக தொழிற் சட்டங்களில் எந்த அளவிற்குத் திருத்தங்களைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் இந்த அறிக்கையில் நமது பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பல தொழிற் சங்கங்கள் நாட்டிலே இருந்தாலும், பலம் பொருந்திய தொழிற் சங்கங்களும் இருக்கின்றன, சிறு சாதாரணமான தொழிற் சங்கங்களும் இருக்கின்றன. தொழிற் சங்கங்களை நடத்த முடியாத அளவிற்கு சிறுபான்மையினர் உள்ள தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், முதலாளிகளின் பக்கமும் தீர்ப்பு அளித்து விடுமானால், அந்தத் தொழிற்சங்கங்கள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து வாதிடுவதற்கு வழி இல்லாத அளவிற்கு, வாய்ப்பு இல்லாத அளவிற்கு, பொருளாதார வசதி இல்லாத அளவிற்கு சிறு தொழிற் சங்கங்கள் சில இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட தொழிற் சங்கங்கள் மேற்கொண்டு ரிட் அப்பீல் செய்வதற்கு வழி வகுத்து, இந்த நிதி நிலை அறிக்கையில் அப்பேர்ப்பட்ட தொழிற் சங்கங்களுக்கு 150 ரூபாய் அரசின் பணத்தைக் கொடுத்து அவைகள் ரிட் அப்பீல் செய்வதற்கு வசதியும், வகையும் இந்த அரசு செய்திருக்கிறது. அது மாத்திரமல்ல, தொழிற் சங்கங்களை வைத்து நடத்த முடியாத தனித் தொழிலாளர்கள் பலர், தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படுகிற சிறு தகராறுகளில் தொழிற் சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு வழி தெரியாமல் இருக்கிறார்கள். சிறு தொழில் செய்து கொண்டிருக்கின்றவர்கள், கடைகளில் பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்கள், மற்றும் சிறு சிறு கம்பெனிகளில், சிறு சிறு அச்சகங்களில் பணியாற்றுக்கொண்டு முதலாளிகளுக்கும், தங்களுக்கும் ஏற்படுகிற விவகாரங்களில் எப்படிக் கோர்ட்டிற்குப் போவது, எப்படி லேபர் கோர்ட்டிற்குப் போவது, எப்படித் தொழிற் சட்டப் பிரகாரம் அநீதியிலிருந்து மீள்வது, முதலாளிகளிடமிருந்து எப்படித் தங்களுடைய உரிமையைப் பெறுவது என்பதெல்லாம் தெரியாதிருப்பவர்களுக்கு எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத் தலைநகரங்களில் குறிப்பாக மதுரை, திருச்சி, கோயமுத்தூர் போன்ற பெரிய நகரங்களில், (தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற நகரங்களில்) அதற்கு என்று அலுவலகம் ஏற்படுத்தி, அப்பேர்ப்பட்ட தொழிலாளர்களுக்கு வழி காட்டுவது, அவர்களுக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுப்பது பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் நமது பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் அளித்த அறிக்கையில் மே திங்கள் முதல் நாளை விடுமுறை நாளாக, பொது விடுமுறை நாளாக் ஆக்கினார்கள். அந்த நாள் பொது விடுமுறை நாளாக ஆக்கப்பட்டது இந்த அரசினால். தொழிலாளர்களுக்காக இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள இப் பெரு முயற்சிகளையும், அவர்களுடைய நலனில் அக்கறை செலுத்தி





முறையையும், சமதர்ம நோக்கத்திற்கு நாட்டு மக்களை அழைத்துச் செல்கிற நல்ல நிலையையும் இந்த அறிக்கையில் முதல்வர் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

அதே போலவே தான், குடியிருப்பு மனைச் சட்டம், ஆண்டாண்டு காலமாக தஞ்சை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்கள் பண்ணைகளில் அடிமைகளாக, பெரும் பண்ணையார்களிடமும், நிலச்சுவான்தார்களிடமும், பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். விவசாயக் கூலிகளாக, மிக்க அடிமை நிலையில் இருந்தார்கள். வீடு, குடியிருக்கும் மனை கூட அவர்களுக்குச் சொந்தமில்லாத நிலையில், மிராசுதார்கள் நினைத்தால், நிலச்சுவான்தாரர்கள் நினைத்தால், அவர்களை என்றைக்கு வேண்டுமானாலும் வெளியேற்றி விடலாம் என்ற நிலை இருந்து வந்தது. ஆண்டாண்டு காலமாக இப்படி அடிமைகளாக இருந்த அந்த விவசாயக் கூலிகள் குடியிருக்கிற நிலத்தை அவர்களுக்குச் சொந்தம் ஆக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டு இன்றைக்கு ஏறத்தாழ ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினரான ஒரு லட்சம் பேர்கள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், 4[illegible] ஆயிரம் பேர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சமுதாயத்தில் பிற்பட்ட நிலையில் இருக்கிறவர்கள் இவர்களுக்கு இந்தச் சட்டம் பயன் அளித்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதைப் போலவே திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்கோட்டைப் பகுதியை தனி மாவட்டமாக்க வேண்டுமென்று நீண்ட பல ஆண்டு காலமாக, இந்த நாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகு, அதாவது சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, பல முறை கிளர்ச்சிகள் நடைபெற்றன. குறிப்பாகச் சொல்லப் போனால் புதுக்கோட்டையில் இருந்த காங்கிரஸ் கட்சி அலுவலகத்தைக் கூட புதுக்கோட்டை மாவட்டக் காங்கிரஸ் கட்சி அலுவலகம் என்று தான் அங்கே அமைத்தார்கள். அப்படி இருந்தும் கூட அந்த அரசுகளால் அதை மாவட்டம் ஆக்க முடியவில்லை. அங்கேயிருந்த மக்கள் பல கிளர்ச்சிகளைச் செய்து பார்த்தார்கள், தீர்மானங்கள் போட்டார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் தீர்மானங்கள் போட்டன. இருந்தும் அப்போது நடைபெறாமல், நம்முடைய கலைஞரின் ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே, இந்த நியாயமான கோரிக்கை இன்றையதினம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, புதுக்கோட்டை தனி மாவட்டம் ஆக்கப்பட வேண்டுமென்று இந்த நிதி நிலை அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விரைவில் புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆக்கப்படுகின்ற நிலையை அவர்கள் எடுத்துக் காட்டியதற்காக உள்ளபடியே ...

என்னுடைய வரவேற்பையும், என்னுடைய வாழ்த்துக்களையும், திருச்சி மாவட்ட மக்களின் சார்பாக இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக்காக நம்முடைய அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. கல்விக்காக ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேல் செலவு செய்யப்பட்டு வருகிறது. இவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டாலும் கூட, அந்தத் துறையில் இருப்பவர்களுக்கு மனத் திருப்தியில்லை என்பதை இப்போது எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசுகிறபோது, ஆசிரியர்களுடைய நிலைமைகளையும், பட்டதாரி ஆசிரியர்களுடைய நிலைமைகளையும் எடுத்துச் சொல்லி இங்கே பேசினார்கள். நமது பெருமதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் இந்த நிலைமைகளைச் சமாதான முறையில் தீர்க்க வேண்டுமென்பதற்காக பெருமுயற்சி எடுத்துக்கொண்டு காலையிலே கூட பேச்சு வார்த்தை நடத்தியதைச் சொன்னார்கள். நாம் இந்தச் சபையில் மூன்று, நான்காண்டுக் காலமாக, பார்த்துக்கொண்டு வருகிறோம். இதற்கென்று பெரிய முயற்சிகளை மேற்கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளை எவ்வளவு சுமுகமாக, சமாதானமாக நிறைவேற்ற முடியுமோ அப்படிச் செய்துகொண்டு வருகிறோம். அவர்களுக்கு எத்தனையோ முறை இந்தச் சபையின் மூலம் நல்ல அறிவிப்புகள் தந்திருக்கிறோம் என்பதும், அவர்களுடைய வருவாயை உயர்த்துவதற்கு என்னென்னவெல்லாம் செய்திருக்கிறோம் என்பதும் இந்தச் சபையில் உள்ளவர்களுக்கு நன்கு தெரியும். அப்படியிருந்தும் கூட அவர்களுக்கு நல்ல திருப்தியில்லை. எவ்வளவு தான், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தாலும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்தாலும், மேலும், மேலும் கோரிக்கைகளை வைத்துக்கொண்டே போகிறார்கள். இவர்களைப் போல இல்லாத மற்றப் பகுதி மக்கள் பாதுகாப்பு இல்லாது ஏங்கித் தவிக்கிறார்கள் என்பதை என்னைப் போன்றவர்கள், மிக மிக வேதனையோடு பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். நானும் இந்தச் சபையில் சொல்லிக்கொண்டு வருகிறேன். என்னுடைய கோரிக்கை ஒன்று உண்டு. இந்தப் பகுதியில், நம்முடைய தமிழகத்தில் ஹைவேஸ்சில், பொதுப்பணித் துறையில் ஏறத்தாழ 18 ஆயிரம் தொழிலாளர்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். அவர்கள் கேட்பாரற்ற முறையில் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். இந்த ஏழைத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 36 ரூபாய். இந்த ஏழைத் தொழிலாளர்களுடைய நிலை நிரந்தரமில்லாத அளவிற்கு பல ஆண்டுக் காலமாக இருந்துகொண்டிருக்கிறது. அடிப்படை சம்பளம் 36 ரூபாய், மற்ற சம்பளம், டியர்னஸ் அலவென்ஸ எல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 90 ரூபாய் அவர்கள் வாங்குவார்கள். இந்த 90 ரூபாயையும் மாதந்தோறும் கையிலே மொத்தமாக வாங்க முடியுமா என்றால் முடியாது.



அங்கே இருக்கிற மேஸ்திரிகளுக்கு அடிமைகளாக, சூபர்வைசர்களுக்கு அடிமைகளாக, ஏ.ஈ.-க்கு அடிமைகளாக, இருந்தால்தான், அவர்கள் அந்த 90, 100 ரூபாயை மாதத்திலே வாங்க முடியும். கொஞ்சம் அவர்கள் தலை நிமிர்ந்தார்களானால், அவர்கள் ஒரு மாதத்தில் 10 நாள், 15 நாள் . . . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பராங்குசம் அவர்கள் அடிமை என்று சொன்னார்கள். யாருக்கும் யாரும் அடிமையாக வேண்டிய அவசியம் கிடையாது. செய்ய வேண்டிய வேலையை முறையாகச் செய்ய வேண்டும். அந்தச் சங்கத்திற்கு நம்முடைய உறுப்பினர் தான் தலைவர். எனவே அந்த வேலைகளை மட்டும் செய்வார்களானால் அவர்கள் குறைகளுக்கு நல்ல காலம் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

(மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் தலைமை)

திரு. ஜி. பராங்குசம்: குறைகளுக்கு நல்ல காலம் வரும் என்று கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். நல்ல காலம் வர வேண்டுமென்பதற்காகவே தான் இவைகளை நான் சொன்னேன். சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் கூட இவைகளை நான் எடுத்துக் காட்டினேன். இருபது ஆயிரம் தொழிலாளிகளை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நேராகப் பார்த்தார்கள். அவர்களுடைய மாநாட்டில் வந்து பேசினார்கள். அவர்கள் குறைகளை வைத்தார்கள். அவர்கள் ஒன்றும் கேட்கவில்லை, பணம் கேட்கவில்லை, சம்பளத்தை உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் எங்களை நிரந்தரமாக்குங்கள் என்பது. 35 ஆண்டுகள், 40 ஆண்டுகள் ஒரு தொழிலாளி பணியாற்றி விட்டு, கடைசியாக வீட்டிற்குப் போகும்போது, எந்த விதமான வசதியுமில்லாமல் அவன் வீட்டிற்குச் செல்கிறான். அவன் அங்கே மழையிலும், வெய்யிலிலும், ரோடுகளிலும் பணியாற்றிக்கொண்டிருக்கிறான். அவனுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. அப்பேர்ப்பட்ட தொழிலாளிகளுக்காக நான் வாதாடிக் கொண்டிருக்கின்றேன். இப்போது பட்டதாரி ஆசிரியர்களை, 3,500 பேர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டபோது காலையில் நிரந்தரமாக்குகிறோம் என்று சொல்லி முதலமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியும். இந்த 5, 6 மாதமாகப் பார்க்கின்றேன். மின்சாரத் தொழிலாளர்களில் 6 ஆயிரம் பேர்களை நிரந்தரமாக்கியிருக்கிறார்கள். நாங்கள் கேட்பது அங்கேயிருப்பவர்கள் 18 ஆயிரம், ஹைவேசில் இருக்கிறவர்கள் 12 ஆயிரம், யூனியனில் பணியாற்றுகின்றவர்கள் ஏழாயிரம் பேர், இவ்வளவுதான் இருக்கிறார்கள். முதலில் ஒரு பத்தாயிரம் பேரையாவது நிரந்தரமாக்கினால் போதும். கொஞ்சம் கொஞ்சமாகச் செய்துகொண்டு வாருங்கள்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகம் தானே?

திரு. ஜி. பராங்குசம்: நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் கூட, ஆளும் கட்சியிலிருந்து கொண்டு கேட்பது ஏனென்றால், அவர்கள் ஆளும் கட்சியை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியை நம்பி, ஆளும் கட்சியின் தலைமையில் அந்தச் சங்கம் இருக்கின்ற காரணத்தினால்தான் அவர்கள் கொடி பிடித்துக்கொண்டு இங்கே வந்து நிற்கவில்லை. வேறு கட்சிக்காரர்கள் அந்தச் சங்கத்தின் தலைமையைத் தாங்கியிருப்பார்களானால், அவர்களை, இந்த அரசை எதிர்ப்பதற்கு பயன்படுத்திக்கொண்டிருப்பார்கள். என்னைப் போன்றவர்கள் அந்தச் சங்கத்திற்குத் தலைவராக இருக்கின்ற காரணத்தால், நாங்கள் அந்த வழிக்கு அவர்களை விடாமல், எங்கள் வழியில் இழுத்துச் சென்று, இந்த அரசு உங்கள் காரியங்களைச் செய்து தரும் என்ற நம்பிக்கையை ஊட்டியிருக்கின்றோம். அவர்களும் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டிலாவது வழி பிறக்குமா என்று கேட்கும்போது, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் கூறியது கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அவைகளை விரைவில் செய்து தாருங்கள் என்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையின்போது அந்த அறிவிப்பை அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பராங்குசம் அவர்கள் கல்வித் துறையிலே இருக்கின்ற ஆசிரியர்கள் மேம்பாட்டு நிலையை எடுத்துச் சொல்லி, பொதுப்பணித் துறையிலே இருக்கக் கூடியவர்களைப்பற்றிச் சொன்னார்கள். கல்வித் துறையிலே 90 ரூபாய் கூட சம்பளம் இல்லாமல் 60 ரூபாய் சம்பளத்தை வாங்கிக்கொண்டு, நிரந்தரமில்லாமல் இருக்கக் கூடிய ஆசிரியப் பெருமக்களும் பல ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் இதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பராங்குசம்: ஓரளவுக்காவது அவர்களிடத்தில் திருப்தியிருக்கிறது. இங்கே 100-க்கு 100 பேரும் நிரந்தரமில்லாமலும், சந்தர்ப்ப வசதியும், வாய்ப்பும் இல்லாமலுமிருக்கிறார்கள். இங்கே இருக்கின்றவர்கள் அத்தனை பேரும் 'சார்ஜ்' தொழிலாளிகள் என்று சொன்னால், 100-க்கு 100 யாரும் 'பர்மனென்ட்' இல்லை. அவர்களுக்குத்தான் நான் வாதாடுகிறேனே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. அதே நிலையில் ஆசிரியர்கள் பகுதியில் இருப்பவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும் என்பதிலே நாங்கள் ஒன்றும் குறுக்கே நிற்கவில்லை. அவர்களும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதை வரவேற்கிறேன். ஆக தொழிலாளிகள் எங்கு இருந்தாலும், டெம்பரரியாக, நிரந்தரமில்லாத அளவுக்கு இருக்கக் கூடாது. அவர்களை நிரந்தரமாக்கினால், அவர்களுக்குப் பல உரிமைகள்



கிடைக்கின்றன. சட்டப்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள், நிரந்தரமில்லாமல் இருப்பதால், கிடைக்கவில்லை. அவர்கள் வேலையை விட்டு நீக்கினாலும் சரி. . .

புலவர் ஓ. அறிவுடைநம்பி: தலைவரவர்களே, ஆசிரியர்களை தொழிலாளி என்ற இனத்தில் சேர்க்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தொண்டு செய்யக் கூடியவர்கள். எனவே தொண்டர்கள் அவர்கள். தொண்டு செய்யக் கூடியவர்களை தொழிலாளி என்ற இடத்தில் சேர்க்க வேண்டாம் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கா. கணேசன்: ஆசிரியர்கள் நல்லதொரு தொழில் செய்கிறார்கள். புனிதமான ஒரு தொழிலைச் செய்கிறார்கள் என்று நான் நினைக்கின்றேன். அவர்கள் சோம்பேறிகள் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் அப்படிக் கருதுகிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

* புலவர் ஓ. அறிவுடைநம்பி: நாம் எந்தப் பெரியவருடைய பெயரால் ஆசிரியர் தினம் கொண்டாடுகிறோமோ, அந்தப் பெரியவர் ராதா கிருஷ்ணனே அவரே சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் செய்வது தொழிலல்ல. தொண்டு என்று தான் நாமெல்லாம் கருதிக்கொண்டிருந்தோம். அந்த அடிப்படையிலே தான் நான் தெரிவித்தேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: ஆண்டவனுக்குச் செய்தால் தொண்டு. சம்பளம் வாங்கிக் கொண்டு செய்தால் தொழில்.

திரு. ஜி. பராங்குசம்: ஆசிரியர்கள் புரியாற்றுவதை உள்ளபடியே தொண்டு என்று தான் நாமெல்லாம் கருதிக்கொண்டிருந்தோம். அப்படிப்பட்டவர்கள் இப்போது நடத்துகின்ற போராட்டத்தைப் பார்க்கின்றபோது, அது தொண்டா என்று புரியவில்லை. தொழிலாளிகள் கொடி தூக்கிக்கொண்டு வருகிறார்கள் இந்த மந்திரிசபை ஒழியவேண்டும் என்று. இவர்களும் அப்படிப்பட்ட கோஷத்தை போட்டுக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று புரியவில்லை. மாணவ மணிகளை வைத்து கல்வியறிவு போதிக்கின்றவர்கள், அந்த முறையைக் கையாளுவார்களானால், மற்றவர்கள், அவர்களிடம் படிக்கின்ற மாணவர்கள் என்ன ஆவார்கள், நம் எதிர்காலம் என்ன ஆவது என்பதுபற்றி நமக்கு உள்ளபடியே ஐயப்பாடு இருக்கிறது. ஆகவே நான் இந்தப் பிரச்சினையை இந்த அளவோடு விட்டு, அடுத்தபடியாக நான் இன்னொன்று சொல்ல ஆசைப்படுகிறேன். . . .

* தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவரவர்களே, பல்வேறு நல்ல அம்சங்களோடு இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலைத் திட்டத்தைப் பொதுவாக வரவேற்று, இதன்

சார்பில் அடியிற்கண்ட கருத்துக்களை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல்வேறு உறுப்பினர்கள் பெருமையோடு நம்முடைய அரசு ரூ. 100 கோடி கல்விக்காகச் செலவழித்திருக்கிறது என்று பெருமையாகச் சொன்னார்கள். நியாயமாகப் பார்த்தால், நம்முடைய கல்வி உலகம் பரவியிருக்கின்ற அளவிற்கு, நிறுவனங்கள் எண்ணிக்கை அளவுக்கு, தரமான, தகுதியான கல்வி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இது போல இன்னும் ரூ. 100 கோடி இருந்தால் தான் நாம் மனிதனை, சிந்திக்கின்ற மனிதனை, அறிஞனை உருவாக்க முடியும் என்பதை இன்று இல்லையானாலும், நம் அரசு கவனத்தில் கொண்டு நல்ல தரமான கல்வியை, நல்ல தகுதி வாய்ந்த சிந்திக்கின்ற கல்வியைக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். அண்மைக் காலமாக மாணவர்கள் உலகத்தில அமைதியின்மையைப் பார்க்கின்றோம். அதற்குக் காரணம் வெளிப்புற நிகழ்ச்சிகளாக இருந்தாலும் கூட, கல்லூரி வட்டத்தில், உயர்நிலைப் பள்ளி வட்டத்தில அவர்களுடைய சுறுசுறுப்பான மூளைக்கு வேலை தரக்கூடிய பல்வேறு பகுதிகள், கருத்துக்கள் அல்லது சூழ்நிலைகள் இல்லாமையினால் மாணவர்களின் வெறிச்சோடிக்கிடக்கின்ற மூளையில் அவர்கள் புத்திசாலித்தனம் வேறு வகையாகச் செலுத்தப்படுகிறது. அங்கே விஞ்ஞானக் கழகங்கள், சமூகநலக் கழகங்கள், இலக்கியக் கழகங்கள் போன்றவற்றை நல்லதாக உருவாக்கி, செயல்படுத்தி இயக்கினால், கல்லூரி வட்டத்திலேயே, விருப்பு ஆர்வத்துடன், அறிவு ஆர்வத்துடன், செய்கின்ற பல்வேறு செயல்கள் இருக்குமானால், அந்த மாணவர்கள் உலகத்தை அமைதிப்படுத்த முடியும். அந்த வகையில் நம் அரசு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளில் பெரும்பாலும் இருக்கிற பாடத் திட்டத்தைப் பார்த்தால், இரண்டு வேளை உட்கார்ந்து படிக்க வேண்டிய அவசியம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆதலால் நாம் உயர்நிலைப் பள்ளிகளில் காலை நேரத்தில் வகுப்பைத் தொடங்கி, மதியம்வரை கல்விப் பாடம் சொல்லிக் கொடுத்து, மாலையில் ஒரு தொழிற்கல்வியைப் பயிற்றுவிக்கலாம். பின்னால் எஸ்.எஸ்.எல்.சி. அதாவது 11-வது தேர்ந்த பிறகு செக்ரெட்டேரியல் கோர்ஸ் என்று இரண்டு ஆண்டு படிக்கிறார்கள், இளைஞர்கள். அதற்குப் பிறகு டைப்ரைட்டிங், ஷார்ட்ஹேண்டு என்று இரண்டு ஆண்டுகள் வீணாகிப் போகின்றன. எனவே அம்மாதிரிப் பயிற்சிகளை கல்லூரியிலேயே, பள்ளிக்கூடங்களிலேயே பகுதி நேரத்தில் கற்றுக் கொடுத்து, சான்றுகள் வழங்கினால், வேலை வாய்ப்பு எளிமையாக்கப்படும். இதைப்பற்றி நேற்று சட்டசபையில் விவாதம் நடந்த போது ராஜாஜியினுடைய வழி செல்லுகிறோமோ என்று அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் கேட்டார். அதுவல்ல. இது அவரவர்கள் விருப்பம் போல நடந்து கொள்வதல்ல. பள்ளிக்கூடத்திலே ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு தொழிற் கல்வியை கற்கக்கூடிய ஒரு திட்டத்தை நிலைநி





படுத்த விரும்புகிறேன். மீண்டும், முன்பு பல தடவை வற்புறுத்தியது போல, ஆசிரியர்கள் மாணவர்களுடைய விகிதாசாரத்தைக் குறைந்த பட்சம், ஆரம்பப் பாடசாலைகளிலாவது நடைமுறைப்படுத்துமாறு நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், ஆரம்பப் பாடசாலைகளிலே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து, திரும்ப அவர்களைச் சொல்ல வைக்கின்ற காலம் வரையில் பொறுத்திருந்தால்தான், அங்கே நல்ல தரமான கல்வி இருக்கும். அப்படிப்பட்ட முறையில் விகிதாசாரத்தை நெறிமுறைப் படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நம் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரை, இந்தப் பட்டதாரி ஆசிரியர்களுடைய நலன்களுக்காக நம்முடைய அரசு பல்வேறு குறைபாடுகளை நிறைவேற்றியிருக்கிறது. இன்னும் நிறைவேற்றுவதற்கு அதற்கு நல்லெண்ணம் இருக்கிறது என்பதை நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய நேற்றைய பதிலிலும், இன்றைய பதிலிலும் இருந்து நம்மால் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் ஏதோ குறையிருப்பதுபோல் தெரிகிறது. அந்த மனக் குறைகளுக்கெல்லாம் காரணம் சூழ்நிலை என்று பலர் சொல்லுகிறார்கள். சற்று முன் நடந்த விவாதத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் எதிர்க்கட்சி இப்படிச் சொல்லத்தானே கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். எனக்கு அறிஞர் அண்ணா எதிர்க் கட்சியைப்பற்றிச் சொன்ன பழைய உவமை நினைவுக்கு வருகிறது. எதிர்க் கட்சியைப் பற்றி அவர்கள் சொன்ன உவமை "காருக்கு பிரேக் என்பது போலவும், மாட்டுக்கு மூக்கணாங்கயிறு போலவும் எதிர்க்கட்சி" என்பதாகும். இந்த இரண்டையும் உபயோகப்படுத்துகின்ற முறையிலே உபயோகப்படுத்தினால்தான், அது பயன்பெறுமே தவிர, அதை வேறு விதமான ஆத்திர உணர்ச்சியோடு பயன்படுத்துதல் கூடாது. காருக்கு 'சடன் பிரேக்' போட்டால், உள்ளே இருக்கிறவனுக்கும் ஆபத்து, வண்டிக்கும் ஆபத்து, பிரயாணத்துக்கு இடையூறாகப் போய்விடும். அதே போல மூக்கணாங்கயிற்றை மிக வேகமாகப் பிடித்து இழுத்தால், மாட்டின் மூக்கில் காயம் ஏற்படும். நடைபெறுகின்ற காரியங்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் கருத்துக்களிலே மாறுதலைச் சொல்லி வற்புறுத்தவேண்டும். அதுதான் எதிர்க் கட்சியினுடைய கடமை. அந்த அமைப்பில் நம்முடைய எதிர்க் கட்சி நண்பர்களுக்கு, குறிப்பாக ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள், நம்முடைய திரு. முத்துசாமி உள்பட சொல்லுகிறேன்—ஆசிரியர்கள் வேலை செய்வதில்லை என்று வகுத்துக்கொள்வது என்பது இருக்கிறதே, அது இந்த நாட்டினுடைய வரலாற்றில் ஒரு தவறான மனப்பான்மை உருவாக்கும். அதுபற்றி அவர்களும், நம்முடைய அமைச்சரவையும் அன்பு கூர்ந்து நல்ல முறையில் ஆலோசனை செய்து ஒரு நாட்டிற்கு முன்மாதிரியாக இருக்கக்கூடிய ஆசிரிய உலகத்தை நெறி முறைப் படுத்த வேண்டும். இதனாலே நம் உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உரிமைகளை விட்டுக் கொடுக்காமலே கடமைகளைத்

தொடர்ந்து செய்வது என்பது இருக்கிறதே அதுதான் சிறப்பு. என்னுடைய அருமை நண்பர் புலவர் அறிவுடைநம்பி அவர்கள் ஆசிரியர்கள் தொழிலாளர்கள் அல்ல, தொண்டர்கள் என்று சொன்னார்கள். தொண்டர்கள் என்பதிலே எனக்கு நூற்றுக்கு நூறு உடன்பாடு. இன்னும் சொல்லப் போனால் திருக்கோயில்களிலே அர்ச்சனை செய்யும் தொண்டர்களை விட ஆசிரியர்கள் நூறு மடங்கு சிறந்த தொண்டர்கள். ஆனால் தொண்டர்கள் குறிப்பிட்ட ஒன்று கிடைக்கவில்லை என்பதற்காக வேலையைச் செய்ய முடியாது என்று சொல்லக்கூடாது. அது தொண்டுக்கு இலக்கணம் அல்ல. எனவே புலவர் அறிவுடை நம்பி அவர்களும் நண்பர் திரு. மு. நதுசாமி அவர்களும் ஆசிரிய உலகத்தைச் சேர்ந்தவர்கள். தொண்டர்கள்தான் என்பதை வலியுறுத்துவார்களானால், கடமைகளைத் தொடர்ந்து செய்யும்படியும் உரிமைகளுக்கு ஜனநாயக முறையிலே அரசை அணுகும்படியும் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் நம்முடைய ஆசிரிய உலகத்திலே சிறந்த அமைதி ஏற்பட்டு, நல்ல கல்வியும் நல்ல தரமும் வளர வேண்டும். நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளிலெல்லாம் நம்முடைய அரசு இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்களையும் தமிழாசிரியர்களையும் நியமிக்கலாம் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் நடைமுறையில் அது வரவில்லை. அதை நடைமுறைப் படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதே போல் இசை போன்ற கலைகளில் நம்முடைய நாட்டு மகளிருக்கு நல்ல பயிற்சி கொடுக்க வேண்டியது அவசியம். எனவே மகளிர் குழந்தைகள் அதிகம் பயிலுகின்ற அல்லது 25, 30-க்கு மேல் பயிலுகின்ற பள்ளிகளில் எல்லாம் இசைத் துறை ஆசிரியர்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஏராளமான பட்டதாரிகள் வெளிவந்துகொண்டிருப்பதால், நடப்பு ஆண்டில் புதிய கல்லூரிகளைத் தொடங்குவது அவசியம் தானா என்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். அதற்கு முன்மாதிரியாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று நல்லவிதமான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மருத்துவத் துறையில் மருத்துவக் கல்வியில் நல்ல தரம் வரும் வரையில் புதிய மருத்துவக் கல்லூரிகள் இல்லையென்று அறிவித்திருக்கிறார்கள். அதே கொள்கையை நம்முடைய கல்வித் துறையும் கையாண்டு இப்போது இருக்கிற கல்லூரிகளைத் தகுதிப்பாடு ஆக்குகிற வரையில் புதிய கல்லூரிகள் திறப்பதில்லை என்ற எண்ணத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், விரிந்து பரந்த கிளைகளையுடைய நிறுவனமாக ஆகிவிட்டது. அதன் கீழ் 182 கல்லூரிகள் இருக்கின்றன. கல்வி மான்யக் குழுவின் விதிமுறைப்படி பார்த்தால் கூட 50 கல்லூரிகள் தான் ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் இருக்கலாமென்று இருக்கிறது. நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 182 கல்லூரிகள் ஆகிவிட்டன. எனவே நம்முடைய அரசு தஞ்சையிலும் கோவையிலும் ஆக இரண்டு பல்கலைக் கழகங்களைத் தொடங்





குவதைப் பற்றி ஆலோசித்து, நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய பணிகளைப் பங்கிட்டுக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படி தஞ்சையில் திறப்பது என்று வருமானால், நம்முடைய சிலப்பதிகாரத்தில் வருகின்ற சிறப்பு மிக்க பூம்புகாரில் அந்தப் பல்கலைக் கழகம் அமையும்படி நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும், அதற்குரிய பணிகளைத் தொடங்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் நம்முடைய பல்கலைக் கழகத்தின் ஆட்சி அறிக்கையைப் பார்த்தால், இந்த ஆய்வுத் துறைப் படிப்பு நம்முடைய சென்னை மாநிலம் முழுவதற்குமாக 23 இடத்தில்தான் இருக்கிறது. அதுவும் சமூக இயல், விஞ்ஞானம், சமூக மேம்பாடு, சமூகத் தொண்டு போன்றவைகளைப்பற்றிய ஆய்வுத் துறை விரிவாக இல்லை என்பதைப் பார்க்கிறோம். விரைந்து வருகின்ற, வளர்ந்து வருகின்ற உலகத்தோடு நம்மை இணைக்க வேண்டுமென்றால் இந்த ஆய்வுத் துறையில் அதிகமான மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும். அதற்குரிய வகையில் பல்கலைக் கழகத்தை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாவேந்தன் பாரதிதாசன் காலத்திலிருந்து தமிழை புதிய நவீன மொழியாக வளர்க்க வேண்டும், அதற்கு ஏற்கனவே பெற்றிருக்கும் இலக்கியச் செல்வத்தோடு புதிய செல்வங்களைப் பெற்று வளர வேண்டும் என்ற விருப்பம் நமக்கு இருக்கிறது. நம்முடைய தமிழுக்காக அமைந்திருக்கிற தமிழக அரசு தமிழ் வளர்ச்சியைப் பல்வேறு துறைகளிலும் விரிவுபடுத்தி வளர்க்கிற ஒரு தன் ஆதிக்கமுள்ள வலிமையான சிறந்த ஓர் அமைப்பை உருவாக்கி, தமிழ்ச் செல்வத்தை உலக மொழிகளுக்குக் கொண்டு போகவும், உலக மொழிகளில் அவ்வப்போது தோன்றுகிற செல்வத்தையெல்லாம் உடனுக்குடன் சேர்த்துக் கொண்டுவரவும் சிறந்த வகையில் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி நிலைத் திட்டத்தின் மூலமாக நம்முடைய அரசு சென்ற ஆண்டிலிருந்து பள்ளிக் குழந்தைகளுக்கெல்லாம் மருத்துவ சோதனை ஆய்வைத் தொடங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது. ஆனால் உடல் நூல் வல்லுநர்கள், "12 வயதுக்குள்ளாக ஒரு உடல் கூறுக்கு என்ன வளமும் வாழ்வும் கிடைக்கிறதோ அதேபோல வாழ்நாள் முழுவதும் அமைகிறது" என்று சொல்லுகிறார்கள். எனவே இந்த நாட்டுக் குழந்தைகள் அனைவரையுமே 12 வயதுக்குள்ளாக மருத்துவ சோதனை செய்து குறை இருக்குமானால், அந்தக் குறையை நிவர்த்தி செய்கிற முயற்சியை தமிழ் நாடு முழுவதுக்கும் பரவலாக்கும் முயற்சியை நம்முடைய அரசு எடுத்துக் கொள்ளவேண்டும். இப்போது சென்னை மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் அதனை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலும் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தொழுநோய் நிலையங்கள் நாட்டிலே பல பகுதிகளில் இருக்கின்றன. ஆனால் பல பகுதிகளில் அவைகளுக்குச் சொந்தக்

கட்டடங்கள் இல்லாமல், அந்த நோயாளிகள் நாலு பேர் கூடுகின்ற பொது இடத்தில் இருப்பதால், அந்த நோய் மற்றவர்களுக்கும் பரவுகிறது. அந்த மாதிரி, தொழு நோய் நிலையங்கள் என்று சொன்னால், கட்டடங்கள் கட்ட வேண்டும். அநேகமாக நம்முடைய கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டில் பிச்சைக்காரருக்கு மறு வாழ்வு இல்லம் மாநிலம் முழுவதும் கட்டி விட்டார்கள். எனவே பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிற நிலைமையை ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்தில் வருகிற அண்ணா பிறந்த நாளின் போது அறிவித்து, "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செய்த குறளுக்கு ஒரு சிறப்புரையைத் தந்து ஒரு நிறைவு தரவேண்டுமென்று கலைஞர் அவர்களை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அன்று ஒரு நாள் தற்செயலாக சென்னை மருத்துவ நிலையத்திற்கு ஒருவரைப் பார்க்கப் போகின்ற அவசியம் ஏற்பட்டது. அப்போது அங்கு பொது வார்டிலே, ஜெனரல் வார்டிலே பல பேர் தரையிலே படுத்திருந்தார்கள். போதிய படுக்கை வசதியில்லை என்று தெரிய வருகிறது. அதை நம்முடைய மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்குப் போதிய வசதிகளைச் செய்ய வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை அரசினர் மருத்துவ மனையில் கண்ணப்ப நாயினர் பெயரால் ஒரு கண் மருத்துவ மனைக்கு அடிக்கல் போடப்பட்டது. வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை விரைவில் முடித்து, அங்கே கண்ணப்பருடைய சிலையை வைத்து கண்ணைப்பற்றிய கருத்தை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நம்முடைய நாட்டு அரசு எந்தச் சூழ்நிலையிலோ மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறது. ஆனால் அரசுக்கு மதுவிலக்கில் அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்த நிலைமையில், மத்திய அரசை மது விலக்கை நாடு முழுவதும் அமல்படுத்தக் கூடிய முயற்சியை நடைமுறைப்படுத்தும்படி நம்முடைய கீழ் சட்டசபையிலும் மேல் சபையிலும் தீர்மானம் போட்டு, அதை வலியுறுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லையென்றால், ஈரல் சம்பந்தமான வியாதிகள் வருமென்று மருத்துவர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தக் கொடிய அரக்கனுக்கு பலியாகாமல் காப்பாற்ற வேண்டும்.

அடுத்து, நம்முடைய கிராம குடிசைத் தொழில் வாரியத்தைப் பொறுத்த வரையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று நல்ல ஆர்வமுடைய அமைச்சரவர்கள் அதற்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். கிராமங்



களிலே செல்வச் செழிப்பு ஏற்படுவதற்கு பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக, தீப்பெட்டி அலகுகள் இருக்கின்றன. சொந்தக் கட்டடங்கள் இல்லாமல், பல ஆயிரக்கணக்கான அலகுகள் இருக்கின்றன. குறிப்பாக குன்றக்குடியிலே 12 ஆண்டுகளாக தீப்பெட்டி அலகு இருந்தாலும், சொந்தக் கட்டடம் இல்லாமல், அது வாடகைக் கட்டடத்தில் இருந்து, இரண்டு தடவை தீப்பிடித்து, பல ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நெருப்புப் பிடிக்காத நல்ல பலமான கட்டடத்தை தீப்பெட்டி அலகுகளுக்குக் கட்டிக் கொடுத்து, அவைகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று அமைச்சரவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது முக்கியமாக உடனடியாகக் குன்றக்குடிக்குத் தேவை. ஒரு நாளைக்கு 50 தொழிலாளிகள் வேலை பார்க்கிறார்கள். சிறு தொழில் சேமிப்பு அமைப்பைப் பார்க்கிறபோது, மாவட்டங்கள் தோறும் துணை வணிக இயக்குநர்கள் இருக்கிறார்கள். ஆனால் போதிய அளவுக்கு, அவர்கள் அந்தத் தொழில் நிறுவனங்களுக்கு வந்து நல்ல ஆலோசனைகளைத் தந்து அவைகளை நடைமுறைப்படுத்துவதிலே போதிய ஆர்வம் இல்லாதிருப்பதைக் கண்டுபிடித்து, அதற்கு வசதியும் வாய்ப்பும் தர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூர் தாலுகாவைப் பொறுத்த வரையில், அநேகமாக 500 ஏக்கருக்கு மேல் 1,000 ஏக்கர் வரை முந்திரி அபிவிருத்தியாகி இப்போது அறுவடைக்குத் தகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் அங்கே ஒரு முந்திரி எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை உருவானால், அந்தப் பகுதி மக்களுக்கு அதிகப் பயன் தரும் என்று கூறிக்கொள்கின்றேன்.

ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், சில செய்திகளை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல ஊராட்சி மன்றங்களில் வரி வசூலாகாமல் பாக்கியிருக்கிறது. அந்த வரி வசூலுக்கு பலவிடங்களில் ஊராட்சி மன்றங்களுக்கும் கிராம அதிகாரிகளுக்கும் நெருங்கிய உறவு இல்லாமலிருக்கிறது. அந்த நிலைமையில் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஒரு நல்ல முழு நேர அலுவலரை, அதாவது ஒரு ஊர் நல உதவியாளரை நியமிக்க அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்கள் அளவில் திட்டமிட்டபடி, திட்டங்கள் நிறைவேறுவதில் இப்படிப்பட்ட ஊழியர்கள் இன்றியமையாதவர்கள் என்ற கருத்தில் அதைப்பற்றி அரசு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எப்படியோ தெரியாமல் வாரி வழங்குகின்ற நல்ல பெயரையுடைய நமது அமைச்சரவையில் சில துறையினர் எப்படியோ ஏமாற்றம் அடைந்துள்ளனர். அது எப்படி என்று என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு சாய் பெருமாந்தம் என்று சிலருக்கு அமையும் என்று சொல்வார்கள். அது போல் இந்தத் துறையினருக்கு ஏற்பட்டு விட்டதோ என்னவோ. அப்படி துரதிஷ்ட

வசமானவர்கள் இரண்டு வகையான ஊழியர்கள். கிராமங்களில் நாம் போடு கின்ற திட்டங்களை நிறைவேற்ற உதவுகின்றவர்கள் பசுமைப் புரட்சி உள்பட— அந்த ஊர்நல உதவியாளர்கள், அவர்களில் பலருக்கு பதவி உயர்வுக்கு வழி யில்லாமல் தேங்க நிலைமையிலிருந்து வருகிறார்கள். ஆகையினால் தேர்வுநிலை ஊர்நல உதவியாளர்கள் என்ற ஒன்றை உருவாக்கி அவர்களுக்குப் பதவி உயர்வுக்கு வழி செய்ய வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள் கிறேன்.

ஒரே பரப்பளவில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கிடையே பயணப்படியில் வேறுபாடு காணப்படுகின்ற நிலை இருந்து வருகிறது. நம்முடைய கால்நடை இலாகாவைச் சேர்ந்தவர்கள், இரண்டு பேரும் ஒரே எல்லைக்குள், ஐந்து மைல் களுக்குள் வேலை செய்கின்றவர்கள். ஒரு எல்லைக்குள், ஒரே இலாகாவில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு இந்த வித்தியாசம் இருக்கிறது. ஒருவருக்கு நிரந்தரப் பயணப்படி ரூ. 50-ம் இன்னொருவருக்கு ரூபாய் 20-ம் ஆக இருக் கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்து கவனிக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள் கின்றேன். இந்த ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் இந்த மாதிரி யாக பல சிறந்த திட்டங்களை உருவாக்கியுங்கூட பல ஊராட்சி மன்றங்கள் இயங்க முடியாமல் தேங்கிக் கிடக்கின்ற காரணம் முழு நேர அலுவலர்கள் இல்லாததே யாகும். நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கேயிருக்கிறார்கள். அவர்களிடம் கிராமங்களில் பணியாற்றும் களப் பணி யாளர்களின் எண்ணிக்கையைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வட்டாரத்திற்கு மூன்று களப் பணியாளர்கள்தான் இருக்கிறார்கள். பல சமயங்களில் அவர்களைக் கண்டு பிடிக்கவே முடியாமலிருக் கிறது. அவர்களுடைய சுறுசுறுப்பை நம்பி, இந்தப் பசுமைப் புரட்சித் திட்டம் அமைக்க வேண்டுமானால், இந்தக் களப் பணியாளர்கள் எண்ணிக் கையை அதிகப்படுத்தி, அந்த வேலையைப் பெருமையுடையதாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் ஒன்றை நினைவுபடுத்த விரும்புவது, பால் பண்ணைகளுக்குத் தரமான மாடுகள் கிடைக்கவில்லை என்பது. அடிக்கடி நம்முடைய மாடுகளுக்கு கணைநோய் வந்து அல்லல் படுகின்றன. எனவே, இந்த பால் பண்ணைகளுக்கு நல்ல தரமான மாடுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து, அதன் மூலமாகப் பாலடைகள் வழங்குவதற்கு திட்டமிட வேண்டும். கிராமத்திலிருக்கிறவனுக்கு விவசாயமும், கால்நடையும் தான் செல்வம். இப்பொழுது அரசு அலுவலகங்களில் ஊதியம் வாங்குகிறவர் களுக்கு ரூபாய் பத்து கொடுத்து விட்டார்கள். ஆனால் இவர்களுக்கு யார் அந்தப் பத்து ரூபாயைக் கொடுப்பது என்பது புரியவில்லை. மாடு வளர்ப்பவன், ஆடு, கோழி வளர்ப்பவன், விவசாயம் பண்ணுகிறவன் உடனடியாகச் சொல்வதெல்லாம் விலைவாசி ஏறிவிட்டது என்ற ஒரு வார்த்தைதான். எனவே, அவர்கள்



நிலையில் அக்கறை காட்டி அவர்கள் நலனுக்குக் கூடுதலாகப் பணம் ஒதுக்கி, அவர்களை நல்ல முறையில் வாழவைக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று நினைவூட்டிக்கொண்டு, இந்த நேரத்தில் நம்முடைய தமிழக அரசுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் நலத் துறைக்கு நன்றி தெரி வித்துக்கொண்டு, ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நந்தனார் பிறந்த ஊர் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. அது சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடப்பட்டது. அங்கே போய்ப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். முன்பு எப்படிப் பாழாக இருந்ததோ அதே போல் காணப் பட்டது. நான் அதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த வுடனேயே, அங்கேயிருந்த முப்பது குடும்பங்களுக்கும் குடியிருப்பு வீடுகள், குடிநீர் வசதி, சமூகநலக் கூடம் எல்லாம் அமைக்க ரூபாய் 75 ஆயிரம் அனு மதிக்கப்பட்டு, இப்பொழுது வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நந்தனார் பிறந்த அந்த ஊர் இப்பொழுது மேல் ஆதனூர் என்று வழங்கப்படுகிறது. நந்தனாருக்கு நினைவாக அமையும் இந்த வேலைத் திட்டங்களுக்காக நான் எனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு காலம் கழித்து அந்த ஊர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகை காட்டினாலும், உடனடியாக ஏற்றுக்கொண்டு செயல் படுத்திய தமிழக அரசுக்கு நன்றி தெரி வித்துக்கொள்கிறேன். தீண்டாமையை எதிர்த்துப் போராடிய நந்தனாருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதற்கும் கடமையுணர்ச்சியோடு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் தீண்டாமை நாட்டில் நஞ்சுபோல் கிராமப்புறங்களில் பரவி வருகிறது. தீண்டாமை என்பது ஜாதி இந்துக்கள் இருக்கின்ற பகுதிகளிலேதான் இருக் கிறது. சேரிகளில் இல்லை. ஆகையினால்தான் காந்தி அடிகள் ஹரிஜன சேவா சங்கங்களை ஆங்காங்கே அமைத்து இந்தத் தீண்டாமையை அகற்ற வேண்டுமென்று கூறினார்கள். இந்தத் தீண்டாமை உணர்ச்சியை அறவே அகற்ற வேண்டுமானால், அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுப் பதாலோ அல்லது ஊருக்கு அப்பாலே தனியாகக் காலனி அமைத்து வீடுகள் கட்டிக் கொடுப்பதாலோ கண்டுவிட முடியாது. ஒரு அய்யர் வீட்டிற்குப் பக்கத்தில் அல்லது ஒரு முதலியார் வீட்டுக்குப் பக்கத்தில் வீடுகள் கட்டி கொடுக்க முடியுமானால், அப்படி கட்டிக் கொடுக்க வேண்டும். அப்படி கட்டி கொடுக்க முடியாது போனால், பழைய வீட்டை விலைக்கு வாங்கிக் கொடுப்ப தற்கு நடைமுறையில் முயற்சி செய்து அந்த மாதிரி தீண்டாமையை ஒழிப்ப தற்குரிய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று விரும்பி வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம்.

மாணவர்களைப் பொறுத்த வரையில்—உண்மையாக இருக்காது என்று நம்பு கிறேன்—இருந்தாலும் ஆங்காங்கே தவறான வழிகளில்—மாணவர்கள், இளை ஞர்கள் குடிக்கக்கூடாது என்று சட்டம் இருந்தாலும் கூட, இலை மறைவு காய்

மறைவாக (சிரிப்பு) தவறான வழியில நடைபெறுவதாக தமிழ் நாட்டில் பேசப்படுகிறது. அதிலே கொஞ்சம் கண்காணிப்பு தேவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான ஜனநாயக சட்டமன்ற மரபுப்படி பேச வேண்டும் என்பதற்காக இப்படிச் சொல்கிறேன். ஆகையினாலே நம்முடைய இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் தக்க கண்காணிப்போடும் கண்டிப்போடும் இருக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆசிரம சேவா சங்கங்கள் போன்றவற்றால் உயர்ந்த நோக்கத்தோடு பரிபாலிக்கப்பட்டு வருகின்ற அந்த விடுதிகளையும்கூட அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமா என்பதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். சட்டப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை வந்தாலும், அந்த விடுதிகளைக் கொஞ்சம் உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்ற விடுதிகளை எடுக்காமல் விடுவது நல்லது என்று எடுத்துக் கூறிக்கொள்கின்றோம். ஆம்பூர், வாணியம்பாடி போன்ற பகுதிகளில அரசுக் கல்லூரியோ, இந்துக்கள கல்லூரியோ இல்லாததால், அங்கே பயில்கின்ற இந்து மாணவர்களுக்கு விடுதிகள் இல்லை. வாணியம்பாடியில் ஒன்று இருக்கிறது. அதில் 50 மாணவர்களைத்தான் தங்க வைப்பதற்கான வசதி இருக்கிறது. அங்கு படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, அது போதாது. ஒட்டுமொத்தமாக நல்ல வசதியுடன் மாணவர்கள் விடுதிகள் கட்டித் தரப்பட வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம். கிராம வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில், சென்ற தடவை நம்முடைய அமைச்சர் அவர்கள் ரூபாய் 2,500 மதிப்பு அளவில், குறைந்த செலவில், வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமிருக்கிறது என்று சொன்னார்கள். அதை மீண்டும் வலியுறுத்தி பரிசீலனை செய்து ஒவ்வொரு வீடு கட்டும் சங்கமும் ஆண்டு ஒன்றுக்கு இத்தனை வீடுகள் கட்ட வேண்டும் என்று வரையறை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல தடவை அதைப் பாராட்டியிருந்தாலும், இப்பொழுதும் ஒரு முறை பாராட்டுகிறேன். விவசாயிகள் குடியிருக்கும் மனைகளுக்குப் பட்டா வழங்கும் விஷயமாகச் சட்டம் செய்திருக்கிறோம். அது ஒரு பாராட்டத்தக்க சட்டம். இது தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் தமிழ் நாடு முழுவதும் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கையை இந்த அரசு, கலைஞர் அரசு, தீவிரப்படுத்த வேண்டுமென்று விரும்பிவேண்டிக் கேட்டுக்கொள்கின்றோம். சில இடங்களில் தனிப்பட்டோர் நிலங்களில் வாழ்ந்து வருகின்றவர்கள் வெளியேற்றப்படும் நிலைமை இன்னமும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமைகளில் யாருக்கு பாத்தியதை இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. ஆகையினால் மீது வழக்குகள் வந்தாலும்கூட, அவற்றைக் குடியிருப்போருக்குப் பட்டா செய்து கொடுக்க இந்த அரசு மறுபரிசீலனை செய்தாக வேண்டும். ஒரு ஐந்து, ஆறு வழக்குகள் அம்மாதிரி நீதி மன்றத்தில் இருக்கின்றன என்று நினைக்கி



றேன். 90 வருஷ காலமாக குடியிருக்கிறார்கள் பலர். அவர்களைக் கூட வெளியேற்ற வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். ஆகையினால் இந்த மாதிரி அவர்கள் மீது வழக்குகளை தொடர முடியாத ஒரு நிலைமையை உண்டாக்கி, அதன் மூலமாக அந்தக் குடியிருப்போருக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன் வரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். இரண்டு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், தனியாருக்குச் சொந்தமான நிலமாகவிருந்தாலும், அதிலே குடியிருக்கும் விவசாயிக்கு அந்தத் தேதியிலிருந்தே அது சொந்தமாகிவிட்டது. அந்த உரிமையை, அந்த சைட்டை கேள்வி கேட்பதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. எந்தத் தேதியில் கவர்னர் அவர்களுடைய அங்கீகாரம் பெற்றதோ அந்தத் தேதியிலிருந்து அந்தச் சட்டம் அமலுக்கு வந்தது. அன்றைய தினத்திலிருந்தே அந்த நிலம் குடியிருப்போருக்குச் சொந்தமாகி விட்டது. என்ன காம்பன்சேஷன், அந்த நிலத்திற்குக் கொடுப்பது என்பதுதான் கேள்வி. அந்த நில உரிமையாளர்களுக்கு இந்த அரசு காம்பன்சேஷன் கொடுக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து விட்டார்கள். அவர்களிடம் வாங்கக்கூடாது என்று சட்டத்தில் போட்டிருக்கிறோம். எனவே அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் நீதி மன்றத்திற்குப் போகக் கூடாது என்று சொல்ல முடியாது. சட்டம் நிறைவேற்றிய அன்றைய தினத்திலிருந்தே நிலம் குடியிருப்போருக்கு உரிமையாகிவிட்டது என்பது திண்ணம். 6-00 பி.ப.

**தவத்திரு. குன்றக்குடி அடிகளார்:** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி, கடப்பாடு. அதுவும் ... நடத்திக்கொண்டு. ரெவின்யூ டிபார்ட்மென்டிலே இந்தப் பட்டா விசாரணை வைத்துக்கொண்டு, 'அசைன்மென்ட்' சம்பந்தமான நடவடிக்கைகளை குடியிருப்பவனுக்கு இது சொந்தம், இன்னொருத்தன் தலையிடாதே என்று சொல்லாமல் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே. மேலும் ஒரு சின்ன விளக்கம் தர விரும்புகிறேன். அவர்கள் எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள் என்று, அதை அளந்து பார்க்கவும்தான் ரெவின்யூ டிபார்ட்மென்டைச் சேர்ந்தவர்கள் போய்ப் பார்க்கிறார்கள். அளப்பதற்குக்தான் போகிறார்களே தவிர. வேறு ஒன்றுமில்லை. அவர்கள் 3 செண்ட், 5 செண்ட் அல்லது 10 செண்ட் வைத்திருக்கலாம். அதை அளப்பதற்காகத்தான் அவர்கள் போகிறார்கள். சட்டம் நிறைவேற்றப்பட்ட அந்தத் தேதியிலிருந்து, அவர்கள் வைத்திருந்த நிலம் எவ்வளவு என்பதை அளந்து பார்ப்பதற்காகத்தான் ரெவின்யூ டிபார்ட்மென்டார் போகிறார்கள். பட்டா கொடுப்பதென்ற பிரச்சினையே கிடையாது.

பட்டா கொடுப்பது நடைமுறையில் வர வேண்டிய ஒன்று. சட்டம் நிறைவேற்
றப்பட்ட அந்த நாளிலிருந்தே அவர்கள் சொந்தக்காரர்கள்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** அன்புகூர்ந்து நம்முடைய வருவாய்த்
துறை அமைச்சரவர்கள் என்னைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். திருப்பத்
தூர் தாலூகா ஆத்தங்குடி மேட்டுப்பட்டி என்ற கிராமத்தில் 4 ஆண்டுகளாக
இந்த வழக்கு நடைபெறுகிறது. அது காரைக்குடி தாலூகா அலுவலகத்தில்
பெண்டிங்காக இருக்கிறது. என்னிடத்திலேயே பேரம் பேசினார்கள். அந்த
மனைப் பட்டா கோருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டால், விட்டு
விடுவதாக அவர்கள் என்னிடம் பேரம் பேசினார்கள். நான், ஆயிரம் ரூபாயை
எப்படி அவர்களிடத்திலிருந்து வாங்கிக் கொடுப்பேன் என்று சொல்லியிருக்
கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அடிகளார் அவர்கள்
4 ஆண்டுகளாக வழக்கு இருக்கிறதென்று சொன்னார்கள்.
சட்டம் இப்போதுதான் நிறைவேற்றியிருக்கிறோம். குடியிருப்புச்
பழக்கம் இருக்குமேயானால் 'infructuous' ஆகியிருக்க வேண்டும். அந்தப்
காரணமென்று தெரியவில்லை. நாம் போட்டிருக்கிற குடியிருப்புச் சட்டப்படி,
சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து அந்த நிலம் அவர்களுக்குச்
சொந்தம். அந்த நிலத்தில் இருப்பவன் விவசாயியாக இருக்க வேண்டும்.
குடிசை போட்டு அங்கே வாழ்கிறவன் விவசாயத் தொழிலாளியாக இருக்க
வேண்டும். இன்னொன்றுகூட அந்தச் சட்டத்திலிருக்கிறது. என்ன
நாம் போட்டிருக்கிற அந்தச் சட்டத்தில் 'superstructure' நிலம் மட்டுமல்ல.
கட்டி, அது இன்னொருவருக்குச் சொந்தமாக இருந்தாலும், அதிலே விடு
விவசாயி குடியிருந்தால் அதுகூட அவனுக்குத்தான் சொந்தம், அந்த
விவசாயத் தொழிலாளிக்குத்தான் சொந்தமென்று போட்டிருக்கிறோம்.
வீடாக இருந்தாலும், அடிமனையாக இருந்தாலும் வீட்டுச் சொந்தக்
காரனுக்குச் சொந்தமாகாது. அடிகளார் அவர்கள் 4 ஆண்டுகளாக இந்த
வழக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுபற்றித் தெரியாது. அதுபற்றி
தகவல் எழுதியனுப்பினால், விசாரிக்கலாம்.

**தவத்திரு. குன்றக்குடி அடிகளார்:** அதுபற்றி அமைச்சரவர்களுக்கு நன்றி
கூறிக்கொள்கிறேன். அரசுக்கு நான் முதலிலேயே சொல்லிவிட்டேன்.
அரசுக்கு நெஞ்சறிந்த நன்றிப் பெருக்குடன் பாராட்டி, இப்படியிருக்கிற
விடுதல்களைக் கவனிக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய காட்டு வளர்ப்புத்துறை அமைச்சரவர்கள் இந்த மின்சாரத்தி
னுடைய குறைவினால் மிகவும் சங்கடப்படுகிறார்கள். மழை பெய்யாமலிருக்கிற
தென்பது தெரிகிறது. நான் முன்னேயே சொன்னது மாதிரி, நம்முடைய





நாட்டில் எந்த ஒரு பிரச்சினையிலும் தீர்வு காணப்பட வேண்டுமே தவிர, அவற்றிலிருந்து லாபம் எடுக்கிற முயற்சியை எடுத்துக்கொள்வது நியாயமல்ல, நீதியுமல்ல. மழை வளம் நம்முடைய நாட்டில் நிறைய இருக்க வேண்டுமானால் நிறைந்த காடுகளை வளர்க்க வேண்டும். நான் அண்மையில்கூட பல இடங்களில் 'காடு வளர்ப்பு' என்று பலகைகள் போட்டிருந்ததைப் பார்த்தேன். ஒரு 4 அடி அல்லது 6 அடி உயரம் வளராத நாட்டுக் கருவை மரங்களை அவர்கள் அங்கே போட்டிருந்தார்கள். எனவே அதுமாதிரியல்லாமல், நல்ல உயரமான காடுகளை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய முதலமைச்சரவர்கள் உள்நாட்டு இலாகாவையும் வைத்திருப்பதனால், அவருக்குச் சில வேண்டுகோள்களை விடுத்துக்கொள்ள விரும்புகிறேன். காவல் நிலையங்களில் சில சமயங்களில் ஒருவரே இருக்குமாறு, மற்றவர்களை வெளியே அனுப்பிவிடுகிறார்கள். திடீரென்று காவல் நிலையத்திற்கு அனுப்புகிறதால், அங்கே ஒரேயொரு காவலரைத் தவிர வேறு யாரும் இருப்பதில்லை. அப்படியிருந்தால் சில சமயங்களில் கிராமங்களில் சங்கடமாக இருக்கிறது. எனவே குறைந்தது 5 பேராவது காவல் நிலையத்தில் எப்போதும் இருக்குமாறு செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் கிராமங்களுக்குப் பாதுகாப்பாக, துணையாக இருக்க முடியும். அதுபோல ஸ்ரீரங்கத்திலும், திருச்செந்தூரிலும் திருவிழாக் காலங்களில் சில முறைகேடுகள் எப்படியோ தெரியாமல் நிகழ்ந்துவிட்டன. அதை நமது அரசாங்கம் கவனத்தில் கொண்டு, இந்துக் கோவில்களினுடைய திருவிழாக்களுக்குப் பாதுகாப்பு பொறுப்பிற்கு நல்ல நம்பிக்கையுடைய, நியாயமான, நாகரிகமானவர்களைப் பார்த்துத் தேர்ந்தெடுத்து, ஒரு தனிப் போலீஸ் படையை அமைத்தால், இந்தச் சிக்கல்களிலிருந்து நாம் தீர்வு காண முடியுமென்று நினைக்கிறேன். அரசு அதுபற்றி ஆலோசிக்க வேண்டும்.

நான் என்ன சொல்ல நினைத்தேனோ, அதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. தீ அணைப்பு நிலையங்களை அதிகப்படுத்தியிருக்கிறது. எனவே இப்பொழுது விரைவாக வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காக நன்றி கூறி, பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் தீயணைப்பு நிலையத்திலுள்ள இயந்திரங்களை உடனடியாக இயங்குகிற அளவுக்கு, சீரான முறையில் பராமரித்து வைத்துக்கொள்ள வேண்டும். 15 நாட்களுக்கு முன்பு, குன்றக்குடியில் தீப்பொறி பிடிக்க காலத்தில், காரைக்குடியிலிருந்து முதலில் ஒரு வண்டி வந்தது. அது தண்ணீர் எடுத்து வேலை செய்யவில்லை. திரும்பவும் ஒரு வண்டி வந்தது. அதுவும் தண்ணீர் எடுத்து வேலை செய்யவில்லை. எனவே அந்த இயந்திரங்கள் வந்தும் பயன்படாமல் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் எரிந்துபோய் விட்டன.

எனவே அந்த அலுவலர்கள், அந்த மாதிரியான குறைபாடுகள், தவறுகள் நடைபெறுகிறபோது, சரியான முறையில் கண்காணித்து, ஆவன செய்ய வேண்டும். அடுத்து, எனக்கு அதிக அக்கறையுள்ள அறநிலையத் துறையைப் பற்றிச் சில செய்திகள் சொல்ல வேண்டுமென்பது என்னுடைய கடமை.

(மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் நேரமாகிவிட்டதென்பதற்காக மணியடித்தார்.)

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்: என்னுடைய சொந்த சப்ஜெக்ட் எனவே . .

(மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் ஜாடை மூலம் மேற்கொண்டு தொடரச் சொல்கிறார்.)

ஆலயம் என்ற உடனேயே, ஆலய மணி கொடுத்து—அதை சம்பிரதாயப்படி சொன்னால் 'அசரீரி' — அதற்கு அனுமதியைத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய முதல்வரவர்கள் தன்னுடைய சட்டமன்றப் பதில் உரையிலே இந்தக் கோரிக்கைகளுக்கு விடையளிப்பாரென்று நம்புகிறேன்.

பொதுவாக, நான் சென்ற தடவை நிதிநிலைத் திட்டத்தில் பேசுகிறபோது, திருக்கோவில்களில் வேலை செய்கிற ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுக்குரிய வழிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தேன். நம்முடைய மாண்பு மிகு அறநிலையத்துறை அமைச்சரவர்கள் உடனடியாக உத்திரவுகள் பிறப் பித்து. புள்ளி விவரங்கள் திரட்டிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இருந் தாலும் நமது முதலமைச்சரவர்கள், நம்முடைய ஆண்டு நிதிநிலைத் திட்டத்தில் அதற்குரிய பரிகாரங்களை அறிவித்தால் நல்லதென்று நம்புகிறேன். சென்ற தடவை எனக்கு மகிழ்ச்சியாக அறிவித்தார்கள். 'அடிகளார் மனம் திருப்திப்படுகிற வகையில் அது பைசல் செய்யப்படும்' என்று சொன்னார்கள். அதற்குரிய முயற்சி எடுக்க வேண்டும். அதேபோல இன்று பணியாளர்கள் தங்களுடைய மாநாட்டுக்கு முதலமைச்சரவர்களை அழைத்திருந்தார்கள். ஆனால் அவர் வரமுடியாமல் போய்விட்டது. அவர்களுக்கிடையே ஊதிய உயர்விலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது; பதவி உயர்வில் தேக்கம் ஏற்பட்டிருக் கிறது. அந்த வகையிலும் நம்முடைய அரசு கவனித்து அவர்களுடைய மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த அறநிலையத் துறையினுடைய சகாயத் தொகை அளவினை உயர்த்தலாமா என்ற எண்ணம் இப்போது அரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது. இப்போது அதை உயர்த்தினால், அது ரொம்பவும் சங்கடப்படுமென்பதை நினைவூட்டிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பதிலாக, திருக்கோவில்களின் வருமானத்தை



உயர்த்தி, அதன் மூலம் இங்கேயும் விழுக்காடு உயரும்படியாகச் செய்வது அரசு பரிசீலிப்பதற்குரியது. அதற்காக நல்ல தனி அலுவலாளர்களைப் போட்டு, வருவாய் பற்றாக்குறையாக இருக்கும் கோவில்களின் வருவாயை உயர்த்து வதன் மூலம், இந்து அறநிலைய ஆட்சித் துறையின் வருமானத்தை உயர்த்த முடியும் என்று நினைவூட்டிக்கொள்கிறேன். அதேபோல், துணை ஆணையாளர் கள், உதவியாணையாளர்கள் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நினைவூட்டிக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தில் இந்த நிதிநிலைத் திட்டத்தில் பேசு கிறபோது அறநிலையத்துறை, குறிப்பாக திருக்கோவில்கள் சமூகத்தின் கேந்திரமாக, கலை விளங்கும் வாயில்களாக விளங்கி சமுதாயத்திற்கு பணி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அதனுடைய நிதிநிலையை நேரடியாக அரசாங்க நிர்வாகங்களுக்கு எடுக்காமல், அவைகள் மூலமாக மக்களுக்குப் பணிகளைச் செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு நோக்கங்களை, கோரிக்கைகளை வைத்தாலும், இந்த நிதிநிலை அறிக்கையைப் பொதுவாக வரவேற்று, இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கையோடு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, முதல்வரவர்கள் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்பதை மாற்றி இந்த ஆறு ஆண்டுகளில் சொல்லிய வண்ணம் பல சாதனைகளைப் புரிந்து சமதர்ம ஒளிபரவிடும் புத்தம் புதிய சமுதாயத்தைப் படைத்திட சூளுரை மேற்கொண்டுள்ளோம்" என்று கூறி யுள்ளார்கள். ஆனால் அன்றைக்கு அவர்கள் வறுமையைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோமென்று கூறினார்கள். இன்றைக்கு அவ்வாறு குறைந் திருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் குறையவில்லை. ஆனால் வரி போட வில்லையென்று பெருமிதத்தோடு கூறினார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் வரி போடவில்லையே தவிர, வரியின் மூலம் வரும் வசூல்தான் இந்த நாட்டினுடைய வருமானம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரவு ரூ. 465.56 கோடி என்றும், செலவு ரூ. 465.07 கோடி என்றும், மீதி ரூ. 49 லட்சம் என்றும், உபரி வருமானம் ரூ. 1.8 கோடி இருக்குமென்றும் மதிப்பிட் டிருக்கின்றார்கள். அத்தோடல்லாமல், புதிய வரிகள் போடவில்லை. பழைய வரி களையும் உயர்த்தவில்லை. எனவே எப்படி இந்த அதிக உபரி வந்ததென்ற கேள்விக்குறிதான் இங்கே இருக்கிறது. அந்த அளவுக்கு மக்களிடமிருந்து வாங்கப்படும் வரிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு நீங்கள் எப்படி வியாபாரிகளைத் தூண்டினாலும் அது அடித்தளத்தில் இருக்கக் கூடிய சாதாரண, ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய வரியாகத்தான் இருக்கிறதென்றும், அதுதான் வருமானமாக வருகிறதென்பதைத் தவிர

[திரு. எல். பலராமன்] [1973 மார்ச் 5

வேறொன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு
வரியை உயர்த்தாமல், ஏழை மக்களை உறிஞ்சுகிறீர்களென்று இந்த அவைக்கு
ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அதிலே குறிப்பாக அதிகப்பற்று,
நம் மாநிலத்திற்கு ரூ. 53.07 கோடி என்றும் மாநில மொத்த முதலீடு
ரூ. 37.96 கோடி என்றும் இருக்கின்றது. நம்முடைய முதலீட்டைக்
காட்டிலும் அதிகப்பற்று ரூ. 53.07 கோடி என்ற அளவுக்கு இருப்பதைப்
பார்க்கும்போது, இது பொருளாதாரத்திலே மிகவும் தாழ்ந்த நிலை என்பதை
இங்கே காணுகின்றேன். வரியில்லாமல் ஒரு அரசு இயங்காது என்பதை
ஏற்றுக்கொண்டாலும், வரி நியாயமான முறையில் போடுவோம் மக்களுக்குத்
தேவையான அடிப்படையில் வரியை ஏற்றுவோம் என்று அன்றைக்குக் கூறிய
வாக்குறுதிகளை இன்றைக்கு நாம் நிறைவேற்றுகிறோமா என்று பார்த்தால்,
இல்லை என்றுதான் இங்கே கூற முடியும். இன்றைக்கு நாட்டிலே இருக்கக்
கூடிய பெரும் பிரச்சினைகள் வேலையில்லாத திண்டாட்டம், விலைவாசி உயர்வு
ஆகியவை. இந்த நெருக்கடிகள் ஒரு போர்க்கால நெருக்கடி போன்றவை.
இதற்கு நாமெல்லாம் ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை
முதலமைச்சர் அவர்கள் விடுத்தார்கள். விலைவாசி உயர்வது மிகவும் பயங்கர
மான ஒரு சூழ்நிலையை பொது மக்களிடையே உண்டாக்கியிருக்கிறது. எதை
வாங்குவது, எதை விடுவது, என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. படித்த
இளைஞர்களுக்கு வேலையில்லாத நிலை இருக்கிறது. அதற்கு அறிக்கையிலே
ஏதாகிலும் பரிகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றதா அல்லது வழி வகுக்கப்
பட்டிருக்கின்றதா என்று பார்த்தால், இந்த இரண்டு அடிப்படையான தேவை
களுக்கும் முதலமைச்சர் அவர்கள் வழி வகுக்க மறந்து விட்டார்கள். மறந்து
விட்டார்கள் என்றுதான் நான் இந்த அவைக்கும் நாட்டிற்கும் ஞாபகப்
படுத்த விரும்புகிறேன்.

விவசாயத்திலே இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய முக்கியமான
பிரச்சினை உணவு உற்பத்தி பற்றியது. இந்த உணவு உற்பத்திக்கு இன்றைக்கு
மிகமிக நெருக்கடியான நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது
என்பதை இந்த அவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.
குறிப்பாக எங்கள் மாவட்டத்திலே விவசாயி மின்சாரத்தை நம்பிப் பயிர்
செய்யக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இந்த மாநிலத்தில் 5 லட்சம் பம்பு
செட்டுகள் இருக்கின்றன என்றால், அவற்றிலே ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட
பம்புசெட்டுகள் உள்ள மாவட்டம் வட-ஆற்காடு மாவட்டம். தஞ்சைக்கு அடுத்
தாற்போல் உணவு உற்பத்தியினைச் செய்யக்கூடிய மாவட்டம் அது. அந்த
மாவட்டத்திலே மின்சாரத்தை நம்பி ஆழக்கிணறுகளைத் தோண்டி இந்த
நாட்டிற்காகவும் தங்கள் சொந்த வாழ்க்கைக்காகவும் பயிரிட்டு அதிகமான
விளைச்சலை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு இந்த அரசு



1973 மார்ச் 5] [திரு. எல். பலராமன்]

அளிக்கக்கூடிய பரிசு மிகமிக வருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருக்கின்றது.
அவர்களுக்கு 3 மணி நேரம் தான் மின்சாரம் தரக்கூடிய நிலையில் தமிழ் நாடு
அரசாங்கம், மின்சார வாரியம் இருக்கின்றது என்பதை வருத்தத்தோடு நான்
இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் மாநிலத்திலே டிசம்பர்
வரையில் பருவ கால மழை இல்லாமையினால், அங்கே விவசாயம்
பெருவாரியாகப் பாதிக்கப்பட்டது. கிணறுகளிலும் தண்ணீர் இல்லாத நிலை
ஏற்பட்டுள்ளது. டிசம்பரில்தான் மழை பெய்ய ஆரம்பித்தது. மழை
பெய்த பின்னால் அங்கே விளைவிக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் விளைவித்த
நெற்பயிர்கள் இன்றைக்கு மின்சாரத் தடுப்பினால் சுருண்டு கொண்டிருக்
கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே
அப்படியில்லை என்றுகூட நீங்கள் கூறலாம். ஆனால் என்னுடைய நிலம்கூட
சாவியானது என்பதை நான் இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள
ஆசைப்படுகின்றேன். அந்த அளவுக்கு மாவட்டத்திலே பெருவாரியான
நிலங்கள் மின்சாரத் தடுப்பினால் பாதிக்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கைகூட
அங்கே நடைபெறாத ஒரு நிலை இருக்கின்றது. அது நாட்டுப் பிரச்சினையாக
இருந்தாலும், தன்னுடைய சொந்த வாழ்க்கைப் பிரச்சினை தீராத ஒரு அவல
நிலையில் விவசாயி இருந்துகொண்டிருக்கிறான். இதைச் சமாளிக்க ஆயில்
என்ஜின்கள் வாங்க வேண்டுமென்று எந்த மார்க்கெட்டுக்குச் சென்றாலும்
கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும் ஒன்றுக்கு மூன்று மடங்கு விலை
உயர்ந்திருக்கிறது. உயர்ந்த விலைக்கு வாங்க வேண்டுமென்றாலும் கூட, அது
கிடைப்பதில்லை. ஆகவே நாம் மத்திய சர்க்காரிடமிருந்தாவது வெளிநாடு
களிலிருந்தாவது அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக இறக்குமதி
செய்து விவசாயிகளுக்கு ஆயில் இன்ஜின்களை விரைவாக வழங்குவதற்கு
வேண்டிய வழிகளைக் காண வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைப்
பணிந்து கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஏதோ திட்டுத்திட்டாக நிலத்தில்
விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்குத் தேவையான உரம் கிடைக்கிறதா
என்றால், அதுவும் மிகமிக மோசமான நிலையில் இருக்கிறது என்பதை வருத்தத்
தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஐ.ஆர். எட்டு, ஐ.டி. என்று ரசாயன
உரங்கள் என்று கூறுவார்களே, அவையெல்லாம் ஒரு ஏக்கருக்கு 2 மூட்டை
யளவு போடவேண்டுமென்று விவசாய நிபுணர்கள் குறிப்பிட்டு சிபாரிசு செய்
திருந்தாலும், எங்களுக்குக் கிடைக்கின்ற அளவெல்லாம் 30 கிலோதான்.
எங்களுடைய மாவட்டத்தில் கிடைப்பது இவ்வளவுதான். இதைப்பற்றி
மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அந்தப் பகுதிக்கு வந்தபோது
அவரிடம் கேட்டபோது, எல்லா நெற்பயிர்களுக்கும் உரம் தருவதாகக்
கூறினார்கள். ஆனால் இதுவரையில் விநியோகிக்கப்படவில்லை. இதையும்
வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த ரசாயன உரங்கள் நேரே
கிடைக்கவில்லை. சாதாரணமாக ரூபாய் 40-க்கு விற்கப்படவேண்டியவைகள்,

வெளி மார்க்கெட்டில் ரூ. 90, ரூ. 100 என்ற விலைக்குச் சரளமாகக் கிடைப்பதை இந்த அரசாங்கம் கட்டுப்படுத்தவில்லை என்பதையும் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிக விலைக்கு எவ்வளவு வேண்டுமானாலும் வெளி மார்க்கெட்டிலே கிடைக்கின்றன. வெளி மார்க்கெட்டில் அதை விற்பதைத் தடுக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவில்லை இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இந்த அரசு மின்சாரத் தட்டுப்பாட்டைப்பற்றி ஏற்கெனவே தெரிவித்திருக்க வேண்டும். அந்தத் தட் டுப்பாடு வரும் என்ற ஒரு நிலையை மக்களுக்கு உணர்த்தாது இருந்தது இந்த அமைச்சரவை செய்த ஒரு பெரும் தவறு என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுபோன்ற நிலை மேலும் ஏற்படாதிருக்க அமைச்சரவை ஒரு நல்ல முடிவை எடுத்து மக்களுக்கு நல்லதொரு பணியை ஆற்ற வேண்டு மென்று இந்த நேரத்தில பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, இந்த நாட்டிலே 20 லட்சம் நெசவாளர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இன்றைக்கு ஒரு போர்க்கோலம் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் போராட்டங்களை எப்படியோ நல்ல முறையில் சமாளித்து தன்னுடைய ஆட்சிப் பீடத்தை நிலைக்க நல்ல முறையில் வெற்றிக் கொண்டிருக்கின்றார் என்ற சான்றிதழ் ஒரு பக்கம் நான் வழங்கி ளுலும், இத்துடன் உட்கட்சிப் போராட்டம் பெரிய போராட்டமாக வளர்ந்து அது பல பொதுமக்களைப் பலி கொண்டது. ஆனால் இன்றைக்கு உயிரையே வாங்கக்கூடிய, மாநிலத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் சோதனையாக ஏற்பட்டிருக்கும் போராட்டம் இந்த நெசவாளர் போராட்டம். - மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, யார் செய்வதாக இருந்தாலும், இதைப் பொதுவான கருத்தாக, நாட்டு மக்களுடைய கருத்தாக எண்ணி, அதை நிவர்த்திக்க வேண்டும். 20 லட்சம் நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதற் கான நடவடிக்கைகளைத் துரிதமாக அரசு மேற்கொள்ள வேண்டும். நான் முதலமைச்சர் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள், "எங்களிடம் அதிகாரம் இல்லை. நூலை வழங்குவதற்கு அதிகாரம் இல்லை, மத்திய அரசுதான் அதிகாரம் பெற்றிருக்கிறது" என்று பழைய ஞாபகத்திலே மக்களிடத்திலே சொல்லலாம். ஆனால் தமிழ் நாட்டு மக்களுக்கு யார் முதலிலே நன்மை செய்ய வேண்டுமென்பதை உணர்ந்து, அந்த நன்மையை முதலாவது நீங்கள் செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதி ஒதுக்கீட்டிலே விவசாய மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய கிராமத்து மக்களுக்கு, நீங்கள் மிகமிகக் குறைந்த அளவுக்கு பண வசதி ஒதுக்கியிருக்கின்றீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.



அடுத்ததாக, காந்தி கண்ட சமுதாய வளர்ச்சித் திட்டம் மிகமிகப் பின் தங்கியிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கின்றேன். நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அந்தப் பகுதியிலே பொறுப்பு வகிக்கக்கூடிய தலைவர்களை நிராகரிக்கும் அளவுக்கு இருக்கிறீர்கள் என்பதையும் நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். நீங்கள் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று ஒரு கோஷத்தை எழுப்பி, மாநிலங் களுக்கு அதிக அதிகாரம் தேவையென்று கூறக்கூடியவர்கள், ஜனநாயக மரபில் வந்தவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுப்பதில் ஏன் தயங்குகின்றீர்கள் என்ற கேள்வியை இங்கே எழுப்பவேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. குறிப்பாக பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு காங்கிரஸ் ஆட்சியில் இருந்த சில அதிகாரங்களைக்கூட நீங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டிருக்கின்றீர்கள். மேலும் அவர்கள் இந்த வெள்ளப் பெருக்கின் காரணமாக ஏற்பட்ட பஞ்ச நிவாரணத்தின் போது முனிசிபல் நகரங்களில் தலைவர்கள் அந்தத் தனி வேலைகளை மேற்கொள்ள வேண்டி வந்தபோது, அதிகாரத்தினை வழங்கியிருக்கும்போது, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் அது போன்று வழங்காமலிருப்பது மிகவும் வேதனைக்கும் வருத்தத்திற்கும் உரியது என்று சொல்லிக்கொண்டு, அந்த அளவுக்கு பஞ்சாயத்து அமைப்புக்களை நீங்கள் புறக்கணிக்கின்றீர்கள் என்று சுட்டிக் காட்டுகின்றேன். கிராமப்புற மக்களை நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஏதோ நகரப் புறத்தை ஒளிமயமாக்கி, படகுகளை விட்டு, கூவத்தையும், பக்கிங்காம் கால்வாயையும் வெட்டினால், தமிழ் நாடே மலர்ந்து விடுவதாக நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால் அடிப்படையில் கிராமத்தில் இருக்கக் கூடிய மக்களைப் புறக்கணித்து, கிராம மக்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்ட வில்லை என்பதை நான் இந்த நேரத்திலே . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பக்கிங்காம் கால்வாய் கிராமப் பகுதியில்தான் அதிகமாக வருகிறது. சென்னையில் கொஞ்சம்தான் ஓடுகிறது.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பக்கிங்காம் கால்வாய் கிராமப் பகுதியில் தான் அதிகமாக ஓடுகிறது என்று சொன்னார்கள். கிராமப்புற மக்களுக்கு பொருளாதார வளர்ச்சி அதிகமாக ஏற்படுமா என்ற நிலை ஒரு கேள்விக் குறியாக இருந்தாலும், அதற்கு அவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். ஜனத் தொகையில் 75 பகுதிக்கு மேற்பட்ட கிராம மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவை யான சமுதாயத் திட்டங்களுக்கு ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கி றீர்கள் என்றால், பஞ்சாயத்து யூனியன் அமைப்பையே பாதிக்கக்கூடிய அளவிற்கு கிராமப்புற மக்களையே பாதிக்கக் கூடிய அளவிற்கு இந்த

அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே வன்மையாகச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மேலும் அதற்கான நிர்வா ரணப் பணிகள் நல்ல முறையிலே செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன மக்களுக்கு இங்கே வீடு கட்டித் தருவதாக இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறீர்கள். 1969-க்குப் பின்னால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அதிகமாக நிலம் ஆர்ஜிதம் செய்ய இருந்தாலும், ஆர்ஜிதத்திற்கு வேண்டிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்திருந்தாலும், ஒரு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை எனபதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அளவிலே தான் மாநில அளவிலே இருக்கும் என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த ஹரிஜன மக்கள் அடிப் படையான குடிசைகளைக் கட்டிக்கொள்வதற்குக் கூடத் தேவையான நிலத்தை வாங்கித் தராத சர்க்கார் அவர்களுக்கு எப்படி வீடு கட்டித்தருமோ என்ற ஐய உணர்வு எனக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 1969-க்குப் பின்னால் பல நிலங்களை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்த பின்னாலும், இன்னும் இந்த நிலங்கள் வழங்கப்படாமல், அவை விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாத நிலைமை இருக்கிறது. இந்த ஹரிஜன நலப் பிரிவு இயங்குகிறதா அல்லது இயங்காமல் இருக்கிறதா என்ற கேள்விக் குறியாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இது நல்ல முறையிலே செயல்பட வேண்டும், ஹரிஜன மக்களுக்கு வீட்டு வசதியை நல்ல முறையிலே செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு, ஜனநாயக அடிப்படையில் சோஷலிசத்தை அமைக்க வேண்டுமென்றால், கிராமப்புற மக்களைப் புறக்கணிக்காமல் கிராமப்புற மக்களுக்கு அதிகமான ஒதுக்கீடுகளைச் செய்து, சமுதாய நலத் திட்டம் என்ற காந்தி கண்ட கனவை நினைவாக்கி நிறைவேற்றுவதற்கு முதல்வரவர்கள் பாடு பட வேண்டும். அப்போதுதான் நல்ல ஜனநாயக மறுமலர்ச்சி ஏற்பட முடியும் என்று கூறிக்கொண்டு அந்த முறையிலே இயங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கல்விக்காக நூறு கோடி ரூபாய் செலவழித்தாலும் கல்வியின் தரம் சமுதாயத்தில் மிக. மிகப் பின் தங்கியே இருக்கிறது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அடிகளார் அவர்கள் கூறியபடி தமிழ் ஆசிரியர்களும், கல்வி நிர்வாகமும் குழப்பமான ஒரு நிலையில் இருக்கின்றன. மாணவர்களிடையே அமைதி இல்லாத நிலையிருக்கிறது. அதே போல ஆசிரியர்கள் மத்தியிலும் அமைதியில்லாத நிலையிருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு





அரசாங்கம் நல்ல வழி முறையைக் கடைப் பிடிக்க வேண்டும். அதற்கு ஒரு நல்ல வழியைக் காண்பிக்க வேண்டும் என்பதோடு கல்வி நிர்வாகமே சீர் கெட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்ல. நீங்கள் தமிழ் ஆசிரியர்களுக்காக மிகப் பரிந்து, தமிழுக்காகப் பாடுபடுகிறோம் என்று கூறினீர்கள். அந்தத் தமிழ் ஆசிரியர் களின் நிலை இன்றைக்கு மிக மிக வேதனையையும், வருத்தத்தையும் தருவதாக இருக்கிறது. அவர்களுடைய போராட்டம் வருவதாக இருக்கிறது என்ற நிலையும் கூட ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது முதல் நிலை, இரண்டாம் நிலை என்று தமிழாசிரியர்கள் இடையே ஒரு பாகுபாடு உள்ள சூழ்நிலை இருக்கின்றது. 15 ஆண்டுகள் பணி செய்த ஆசிரியர்கள் கூட இன்றைக்கு செலக்ஷன் கிரேட் பயிற்சிக்குப் போக வேண்டும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற வேண்டும் என்ற நிலையையெல்லாம் தவிர்த்து இந்தத் தமிழாசிரியர் களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். அவர்களெல்லாம் நல்ல முறை யிலே வாழவும், இந்த முதல் நிலை, இரண்டாம் நிலைகளைப் போக்கவும் வழி செய்ய வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் ஐந்து ஆண்டுகள் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணி செய்திருந்தால் முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற பாகுபாடு தேவையில்லை என்ற நிலையை ஏற்படுத்தவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை நல்கிய தலைவ ரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஜார்ஜ் கோமகன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1973-74-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தமிழவேள், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்தின் முன்னாலே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டிப் பேசுகின்ற அருமையான - வாய்ப்பினை நான் இன்றைக்குப் பெற்றமைக்காக மெத்த மகிழ்ச்சியடைகிறேன். இது என்னுடைய கன்னிப் பேச்சாகும். இந்தக் கன்னிப் பேச்சை நான் துவங்கு கிறபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், அது கன்னிப் பேச்சாகவோ வேறு எந்தப் பேச்சாகவோ இருந்தாலும், கண்ணியம் நிறைந்த பேச்சாகவே நிச்சயம் இருக்கும் என்பதை இந்த நாடு மறந்துவிட முடியாது. காரணம் நம்மையெல்லாம் ஆளாக்கிவிட்ட நம் இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய லட்சிய முத்திரைகளாக இந்த நாட்டுக்கு வழங்கியவை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று முத்திரைகளாகும். அந்த மூன்று முத்திரைகளையும் இந்த நாட்டுக்கு, தமிழகத்திற்கு தமது தமிழவேள் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு சமுதாயத் திட்டமாக

வைத்து நாட்டை வளப்படுத்துவதற்கான சிறந்த கொள்கைகளை அமைத்திருக்கிற காரணத்தினால், நான் பேசுகிற இந்தக் கன்னிப் பேச்சு, கண்ணியம் மிகுந்த பேச்சாக, கனிந்த பேச்சாக அமையுமென்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த உரையினைத் துவங்க ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையினைப் பல நண்பர்கள் பாராட்டியும், பல நண்பர்கள் போற்றியும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சில பேர் குறை கூறியும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் என்னுடைய பேச்சைத் துவங்குவதற்கு முன்னாலே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் மிகச் சாமானியமான குடும்பத்திலே பிறந்தவன். ஒதுக்கப்பட்ட இனத்திலே, பின்தள்ளப்பட்ட இனத்திலே பிறந்தவன். இப்படிப்பட்ட என்னை இந்த மாமன்றத்திலே ஒரு உறுப்பினராக்கிய நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடைய தலைவராக இருக்கும் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இந்த பேரவை மிகச் சிறப்புக்குரிய ஒரு பேரவையாகும். சிறந்த அறிஞர்கள், சிறந்த வல்லுநர்கள், சிறந்த பேராசிரியர்கள், ஆற்றல் படைத்தவர்கள் ஆகியவர்களைக் கொண்ட பேரவையிலே மிகச் சாமானியமான என்னையும் ஒரு உறுப்பினராக்கியமைக்காக நான் மட்டுமல்ல, இந்த நாட்டிலே வாழ்கிற ஒன்றே முக்கால் கோடி தாழ்த்தப்பட்ட சமுதாயமும், அதிலும் மதம் மாறிய அரிஜன கிறிஸ்தவ சமுதாயமும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாடு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. முன்னேறிக்கொண்டிருக்கிற நிலையில் நம்முடைய திட்டங்கள் எல்லாம் வேகமாக சமதர்மத் திட்டங்களாக அமைய வேண்டுமென்று சொல்கிறபோது, நம்முடைய டாக்டர் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கையையும், மத்திய சர்க்கார் சமர்ப்பித்த சமதர்மக் கர்த்தாக்கள் என்று கூறிக் கொள்கிறவர்கள், வழங்கியுள்ள அந்த நிதிநிலை அறிக்கையையும் நான் ஊன்றிப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

மதிப்பு மிக்க நம்முடைய பேரவைத் துணைத் தலைவராக இருக்கிற திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது அறிக்கையில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "தமிழக வரலாற்றிலே டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கும் பட்ஜெட் ஒரு நல்ல சோஷலிச பட்ஜெட்டாகும். புதிய வரிகள் போடவில்லை. பழைய வரிகள் உயர்த்தப்படவில்லை. புதிய புதுமையான பட்ஜெட்", என்று நம்முடைய மதிப்புமிகு சிலம்புச் செல்வர் ம.பொ.





சிவஞானம் அவர்கள் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய இந்த அருமையான நிதிநிலை அறிக்கையினை வர்ணித்திருக்கிறார்கள். அந்த வர்ணனையை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நம்முடைய நாடு சமதர்மத் திட்டத்தை நோக்கி வேகமாக முன்னேறுவதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் புதிய புதிய திட்டங்களை இந்த நாட்டுக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். தமிழ் ஆய்ந்த தமிழ் மகன் தமிழ் அரியாசனத்தில் இருக்க வேண்டும். நம்முடைய பாவேந்தர், புரட்சி கவிஞர் கண்ட கனவாகும் இது. இந்தக் கனவை நினைவாக்குகின்ற முறையிலே நம்முடைய தமிழவேள், டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் ஆய்ந்த தமிழ் மகன், ஆட்சியில் அமர்ந்துள்ள காரணத்தினால் அவருடைய நிதிநிலை அறிக்கை உரையினைத் துவங்குகிறபோது,

"இடுக்கண் வருங்கால் நகுக—அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்ற அருமையான குறளோவியத்தை எடுத்துக்காட்டித் துவங்கியிருக்கிறார்கள். தமிழ் ஆய்ந்த தமிழ் மகனாக இருக்கிற காரணத்தினால், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இப்படி நம்முடைய தெய்வப் பெருந்தகை வள்ளுவரின் அந்தக் குறளை எடுத்துக் காட்டி அவர்கள் நிச்சயமாக இந்த நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும், இந்த நாட்டில் வாழ்கிற ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் ஆகியவர்களை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்த அருமையான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள்.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையினை விமர்சிக்கும் முன், சமதர்ம திட்டத்தின் கர்த்தாக்கள் என்று வர்ணிக்கப்படுகிற நம்முடைய மதிப்பு மிக்க மத்திய சர்க்கார் தந்திருக்கிற அந்த நிதிநிலை அறிக்கையினை உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, ஒன்றைச் சொன்னார்கள். "இது உபரி பட்ஜெட். வரி இல்லாமல் வருகிற பட்ஜெட். இப்படிப்பட்ட பட்ஜெட்டை நம்முடைய சர்க்கார் தயாரித்திருக்கிறார்கள். நாளைக்கு ஒரு பட்ஜெட் வருகிறது. அது என்ன ஆகுமோ என்று எனக்கு அச்சம் வருகிறது", என்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அச்சத்தை நிரூபிக்கின்ற வகையில், அவர் அச்சத்தை நிலை நாட்டுகின்ற வகையில், மத்திய சர்க்கார் ஒரு திட்டத்தைத் தந்து ஒரு அச்ச நிலையை உருவாக்கினார்கள். மத்திய அரசு பட்ஜெட்டில் உள்ள வரிகளைப் பார்த்தால், நம்முடைய மக்களுக்கு தலை சுற்றுகின்ற அளவுக்கு வேதனை ஏற்படுகிறது. ரூ. 292 கோடிக்கு புதிய வரிகளை அவர்கள் போட்டிருக்கிறார்கள். சிகரெட்டுக்கு ரூ. 32 கோடி வரி போட்டிருக்கிறார்கள். கந்தல் கம்பளித் துணி இறக்குமதிக்கு வரி போட்டிருக்கிறார்கள். எல்லா

வற்றிற்கும் மேலாக வீட்டு மின்சார சாமான்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். காருக்கு வேண்டிய பெட்ரோல் போடுவதற்கு 8 பைசா லிட்டருக்கு வரி போட்டிருக்கிறார்கள். எவர்சில்வர் சாமான்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். ஷேவிங் கிரீமுக்கும் வரி போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மோசமான வரிகளையெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் அப்படிப் பட்ட வரிகளைப் போட விரும்பவில்லை. காரணம் அவர் இலக்கிய வரிகளை எழுதிப் படைத்தவர். கலைஞர் அவர்கள் புதிய புதிய கவிதை வரிகளை எழுதிப் படைத்தவர். சிறந்த கவிதை வரிகளை, இலக்கிய வரிகளை அவர்கள் படைத்த காரணத்தினால், நிச்சயமாக அப்படிப்பட்ட வரிகளையெல்லாம் அவர் தமிழகத்திலே போட்டு தமிழக மக்களை வேதனைக்கு உள்ளாக்க அவர் விரும்ப வில்லை. ஆகவே இது நிச்சயமாக ஒரு சமதர்மத்திட்டமாகும். சமதர்மத் திட்டத்தின் அடிப்படை நிதிநிலை அறிக்கையாகும் என்று நல்ல மனம் படைத்தவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சிலர் இது சமதர்ம திட்டமா என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகப் புரிகிறது. காரணம் அவர்கள் உதடுகள் அசைகின்றனவே தவிர, உள்ளத்தின் உணர்வுகள் அப்படிப் பட்ட உணர்வுகளாக இல்லை. உதட்டின் அசைவுக்காக மட்டும் சொல்லு கிறார்கள். அவர்கள் நிச்சயமாக தங்கள் நெஞ்சத்தைத் தொட்டுப் பார்த்தால், எப்படிப்பட்ட திட்டத்தை இந்த நாட்டுக்கு கலைஞர் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். எதிர்க் கட்சிக் காரர்கள் பேசலாம். ஜனநாயக பாரம்பரியத்தில், பாராளுமன்றப் பாரம் பரியத்தில் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால் ஆளும் கட்சியால் இந்த நாட்டிற்கு அழகான கருத்துக்களாக, தேவையான கருத்துக்களாக, முன்னேற்றமான கருத்துக்களாக என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளுகின்ற அளவில் அவர்கள் எண்ணம் அமையுமானால், நிச்சயமாக நல்ல ஜனநாயகப் பாரம்பரியம் உருவாவதற்கு வழியாக இருக்க முடியும். கலைஞர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை இந்த நாட்டிற்கு வழங்கியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாட்டு வீட்டு வசதிக் கழகம் என்ற ஒரு கழகத்தை உருவாக்குவதன் மூலமாக 18 ஆயிரம் மக்களுடைய மனைகளில் 10 ஆயிரம் வீடுகள் இப்போது கட்டித் தரவேண்டுமென்று திட்டத்தை இன்றைக்கு அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். நான் பார்த்தேன். எதிர்க் கட்சிக்காரர்கள் பேசினார்கள். யாராவது இதைப் பாராட்டிப் பேசினார்களா என்றால், நிச்சயமாக ஒருவருமே பாராட்டவில்லை. இது வேதனைக்குரிய செய்தி. தாழ்த்தப்பட்டவர்களுடைய பிரச்சினை இருக்கிறதே, அது ஒரு தனி சமுதாயத்தினுடைய பிரச்சினை என்றால், நிச்சய மாக எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது ஒரு நேஷனல் பிராப்ளம், அது ஒரு தேசியப் பிரச்சினை. அப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை நேருபிரான்





கூட ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதினார்கள். நம்முடைய காந்தி அடிகள் கூட தேசியப் பிரச்சினையாகக் கருதினார்கள். அப்படிப்பட்ட ஒரு தேசியப் பிரச்சினையை முன் வைத்து டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டிலே வாழ் கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயம் வாழ்வதற்கு ஒரு அருமையான கழகத்தை உருவாக்கி, அந்தக் கழகத்தின் மூலமாக 10 ஆயிரம் வீடுகள் அவர்களுக்குக் கட்டித் தர வேண்டுமென்று முதற்படியாக அறிவித்திருக்கின்ற அந்த அறிவிப்பு இருக்கின்றதே, அது சமுதாயத்தைச் சிறந்த முறையில் உருவாக்கு கின்ற அறிவிப்பாகும். அது சமுதாயத்தில் சமதர்மத் திட்டத்தை உருவாக்கு கின்ற அறிவிப்பாகும். எனவே தான் அவர்கள் " Saviour of the down trodden " என்று கூட இந்த நாட்டு மக்களால் பாராட்டப்படுகி றார்கள். அவர் இந்த நாட்டிலே வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் ரட்சகராக இருக்கிறார். ரட்சகர் என்ற வார்த்தையைக் கூறுவதற்கே காரணம் இதுதான். ரட்சகராக இருக்கிற காரணத்தினாலே தான் இப்படிப் பட்ட அருமையான திட்டத்தை இந்த நாட்டிற்கு வழங்கியிருக்கிறார்கள். இதை எதிர்க் கட்சிக்காரர்கள் பாராட்டுவதாகத் தெரியவில்லை. ஏன் பாராட்டவில்லை? அவர்கள் காங்கிரஸ் காலத்திலே செய்யவில்லையா என்று கேட்கிறார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். காங்கிரஸ் காலத்தில் என்ன செய்தார்கள்? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் என்ன திட்டங்களைப் போட்டார் கள். அப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் பயனுள்ள திட்டங்களாக இருந்தனவா என்றால், நிச்சயமாக இல்லை. காங்கிரஸ் காலத்தில் மேடை ஒன்று போட்டார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஹரிஜன மக்கள், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அங்கே கலைநிகழ்ச்சி நடத்துவதற்கும், அவர்கள் பொது நிகழ்ச்சி நடத்துவதற்கும் அந்த மேடை போட்டார்கள். அந்த மேடை போட்ட விதமே சாணி தட்டுகிற அளவுக்குத் தான் இருந்தது. அங்குள்ள அத்தனை பேரும் சாணி தட்டிக் கொண்டிருந்தார்கள். அதைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. சரியாகப்பயன்படுத்தப்படுகிறதா என்று கவனிக்கப்படவும் இல்லை. ஆனால் கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கின்ற திட்டம் சமதர்ம அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கின்ற திட்டம். ஒரு ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்குகின்ற திட்டம். அடிப்படையில் ஒரு வித்தியாசத்தை நாம் காண்கிறோம். ஹரிஜனங்களுக்கு காங்கிரஸ் செய்த காரியங்களுக்கும் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு, நம்முடைய கலைஞர் அரசு செய்கின்ற காரியங்களுக்கும் நிறைந்த வித்தியாசத்தைப் பார்க்கின்றபோது, அடிப்படையிலே நான் வித்தியாசத்தைப் பார்க்கிறேன். பாரம்பரிய வித்தியாசத்தைப் பார்க்கின்றேன். காரணம் கலைஞர் அவர்களுடைய இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், நான் சார்ந்திருக்கின்ற கழகம். சுயமரியாதை இயக்க பாரம்பரியத்தில் வந்த கழகமாகும்; தந்தை பெரியார்

அவர்களால் உருவாக்கப்பட்ட கழகமாகும். ஆக நாங்கள் அணுகுகின்ற முறை இருக்கிறதே, அது சரியான முறையாக இருக்கின்றது. எந்த முறையில் அணுகினால், இந்தச் சமுதாய மக்களை மேல்தட்டுக்குக் கொண்டு வரலாம் என்ற முறையிலே நாம் செய்கின்றோம். நம்முடைய மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 20—6—1957-ம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் ஹரிஜன மானியத்தின் மீது நம் அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர் பேசுகிறபோது சொன்னார். "ஹரிஜன முன்னேற்றம் என்பது தேசியப் பிரச்னை. ஹரிஜனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட பெருங்குடி மக்கள் யாரால் தாழ்த்தப்பட்டார்கள், யாரால் ஒடுக்கப்பட்டார்கள். அவர்களை தாழ்த்தி ஒடுக்கியவர்கள் யார் என்று அலசிப் பார்த்த சமயத்தில், ஒவ்வொரு காலத்திலும் நாம் எல்லோருமே அந்தப் பெரும் குற்றம் புரிந்தவர்களாக இருக்கிறோம் என்று மனச்சாட்சி, உறுத்தல் எல்லா சமூகத்தினரிடமும் இருக்கிறது. ஆகவே அந்தப் பெரும் குற்றத்திற்கு, அநீதிக்குக் கழுவாய் தேடுகிற பரிகாரம் தேடுகிற வகையில் எல்லா சமூகத்தினரும் தன் சொந்தப் பிரச்சினையாக ஹரிஜனப் பிரச்னையாகக் கவனித்தாக வேண்டும்" என்று பேரறிஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய கலைஞர் அவர்கள் அண்ணாவாக மாறியிருக்கிறார்கள். அண்ணாவாக மாறியிருக்கிற காரணத்தினாலே தான், இன்றைக்கு இந்த நாட்டிலே அதனைச் சிறந்த பிரச்சினையாகக் கருதுகிறார்கள். இந்தப் பிரச்சனையைப்பற்றி இப்படிக் கருதுவதற்கு காரணம் இப்பிரச்சனை இன்று நேற்று அல்ல, நீண்ட காலமாக இருக்கிறது. நம் எதிர்கட்சி தலைவர் அவர்களுக்கு நன்றாக தெரியும். டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கும் காந்தியடிகளுக்கும் ஏற்பட்ட விவாதத்திலும் தெரியும் What the Congress and Gandhi have done to the untouchables என்ற பெரிய புத்தகத்தை எழுதினார் அம்பேத்கார். அந்த புத்தகத்திற்கு யாருமே மறுப்பு அளிக்கவில்லை. நம்முடைய மதிப்பிற்குரிய மறைந்த ராஜாஜி அவர்கள் மறுப்பளித்தார்கள். "Ambedkar is Rafuted" "அம்பேத்காருக்கு மறுப்பு" என்று, அது மறுப்பாக இல்லை. சமாதானமாகத்தான் இருந்தது. இந்த சமுதாய மக்களைச் சரியான முறையில் அணுக வேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்று நடந்திருக்கிறது. (கைதட்டல்). யாரும் மறுக்க முடியாது. ஹரிஜனங்களை ஆலயத்திற்குள் அழைத்துச் செல்வது என்பது ஒரு பிரச்சினையாக அப்போது கருதப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு அவர்களை அர்ச்சகர்களாக ஆக்க வேண்டும் என்றது. இதனை யார் கொண்டு வந்தார்கள்? எந்த ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது? இதைத் தான் அம்பேத்கார் விரும்பினார். இதைத் தான் அம்பேத்கார் தன்னுடைய கருத்திலே சொன்னார்கள். அவர்களே அறங்



காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டார்களா? ஆகையால், எங்கே தொட வேண்டுமோ அங்கே தொட்டால் தான் சமுதாயத்தினுடைய கொடுமை தீரும் என்று கலைஞருக்குப் புரிகிறது, கழகத்திற்குப் புரிகிறது. எனவே தான் கழகம் அணுகுகின்ற முறை இருக்கிறதே அந்த முறை ஒரு புதிய முறை. சமதர்மத் திட்டத்திலே கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு, நம்முடைய கலைஞர் அரசு அணுகுகின்ற முறை ஒரு புதிய திட்டமாக இருக்கிறது. இந்த நாட்டிலே இரண்டு பிரிவாகச் சொல்லுவார்கள். பணக்காரன், ஏழை என்று சொல்லுவார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் அதை இரண்டு பிரிவாக மட்டும் கருத முடியாது. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் சொன்னதுபோல, வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால், சூழ்கின்ற பேதம் அந்தத் தொகை இருக்கும். அந்தத் தொகை இருக்கும்போது இதை மாற்றியமைத்தாக வேண்டாமா? அப்படி மாற்றியமைத்தால்தானே, சமதர்மத் திட்டத்தை உருவாக்க முடியும். எனவே தான் கலைஞர் அவர்கள் சமதர்மத் திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், சமுதாயச் சீர்திருத்தத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக இந்த நாட்டில் நீண்ட காலமாக தீர்க்க முடியாமலிருக்கின்ற ஒரு மிகப் பெரிய பிரச்சினையைத் தீர்த்திருக்கிறார்கள். அம்பேத்காருக்கும் காந்தியடிகளுக்கும் கூட பெரிய போராட்டங்களெல்லாம் நிகழ்ந்திருக்கின்றன. ஒரு முறை அம்பேத்கார் அவர்களைப்பற்றி காந்தியார் அவர்களிடத்திலே, "உங்களைப்பற்றி இப்படி அவதூறாகப் பேசுகிறாரே, கேவலமாகப் பேசுகிறாரே, பத்திரிகையிலே தாறுமாறாக எழுதுகிறாரே, நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே" என்று அவரின் சீடகோடிகள் கேட்கிறார்கள். அப்போது காந்தியடிகளார், "தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை, பஞ்சாப் படுகொலை நடத்தினோமே ஐயா, அவனைவிட கொடுமைப்படுத்தியிருக்கிறோம். அதற்காக அம்பேத்கார் நம்முடைய மண்டையைப் பிளக்காமல் இருக்கிறாரே, அதற்கு நன்றி செலுத்த வேண்டும்" என்று பேசியிருக்கிறார். காந்தியடிகள் உணர்ந்தார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் காந்தியினுடைய தத்துவங்களையெல்லாம் விவரமாகச் சொன்னார்கள். காந்தியடிகளின் தத்துவங்களை அமல்படுத்தியது எந்த அரசு என்று உணர்ந்து பார்க்க வேண்டும். காந்தியடிகள் ஹரிஜன சமுதாயம் உயர்ந்தாக வேண்டும் என்பதிலே அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். அந்தத் தத்துவத்தை யார் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்? கலைஞர் அரசுதான் இன்றைக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. ஆகையினால் நல்ல திட்டங்களை, உயரிய திட்டங்களை நாம் போடுகிறபோது பாராட்டித்தான் சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல. இப்போது பக்கிங்ஹாம் கால்வாய் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நண்பரும் யாங்கரை

தலைவருமாக இருந்த, வழக்கறிஞர் திரு. செங்கல்வராயன் அவர்கள் மேயராக இருந்தபோது, "சென்னை ஒரு அழகு ராணி" என்று குறிப்பிட்டார்கள். நான் அப்போது ஒரு பத்திரிகையிலே துணை ஆசிரியனாக வேலை பார்த்து வந்தேன். அது அழகு ராணி அல்ல, அலங்கோல ராணி என்று எழுதினேன். காரணம் ஆயிரம் ஆயிரம் பேர்கள், வேதனைக்கு ஆளாக்கப்பட்ட மக்கள், நொந்து செத்த மக்கள் புழுக்களாக நெளிகின்ற மக்கள், சேரி ஓரங்களிலே வேதனைக்கு ஆளாக்கப்பட்ட மக்களைப் பார்க்கும்போது சென்னை நகரத்தை எப்படி ஒரு அழகு ராணி என்று வர்ணிக்க முடியும் என்று கேட்டேன். அந்த அழகு ராணியாக இன்றைக்கு சென்னை உருவாகிக் கொண்டிருக்கிறது. மறுக்க முடியுமா? குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் மூலமாக ஒரு மாபெரும் திட்டத்தை உருவாக்கி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவரையும் பிற்பட்ட சமுதாயத்தில் உள்ளவரையும் அந்த மாடி வீட்டில் ஏற்றி வைத்தது யார்? எதிர்க் கட்சி உறுப்பினர் தங்களுடைய மனதிலே கையை வைத்துப் பார்த்து இதற்குப் பதில் சொல்லியாக வேண்டும். அந்தப் பெருமை திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத் தான் உண்டு. இதற்குக் காரணம், அடிப்படையை நாம் அணுகுகிற முறை வேறு. அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அது பொதுப் பிரச்சினையாக இருந்தாலும், தனியார் உடைமைகளை தேசிய உடைமையாக்குவது என்ற பிரச்சினையாக இருந்தாலும், அது தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சினையாக இருந்தாலும், டாக்டர் கலைஞர் அவர்கள் அணுகுகின்ற முறை இருக்கிறது, அது, சுய மரியாதை இயக்கப் பாரம்பரிய முறை. அதை யாரும் மறுத்துச் சொல்ல முடியாது. அந்த சுய மரியாதை இயக்கப் பாரம்பரிய முறை இருக்கிறதே, அந்த முறை சமதர்மத்தையும் சமு தாயச் சீர்திருத்தத்தையும் ஒன்றாக இணைத்து உருவாக்கிய முறையாகும். இந்த நாட்டிலே மக்களில் ஒருவனைப் பார்த்து நீ யார் என்று கேட்டால் என்ன சொல்லுவான்? ஒருவன் கூட தன்னை இந்தியன் என்று சொல்ல மாட்டான். ஒருமைப்பாடு பேசப்படுகிறது. நாம் ஒருமைப்பாட்டை உருவாக்குகிறோம். ஒருமைப்பாட்டை ஆதரிக்கிறோம். ஆனால் பிவர்லி நிகோலாஸ் என்ற ஒரு அறிஞன் அழகாகச் சொன்னான். அவன் இந்த நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்தான். அப்படி வந்தபோது, ஒரு மனிதனைப் பார்த்து நீ யார் என்று கேட்டான்? அவன் என்ன சொல்லியிருக்க வேண்டும்? நான் இந்தியன் என்று சொல்லியிருக்க வேண்டும். அவன் செட்டியார் என்றான். இன்னொரு இடத்திலே இன்னொரு மனிதனைப் பார்த்து நீ யார் என்று கேட்டான். இன்னொரு வேறொரு ஜாதியைச் சொன்னான். இப்படி இந்தியா முழுமைக்கும் சென்ற போது அவன் ஜாதிகளையும் மொழிகளையும் பார்த்தானே தவிர, ஒரு இந்தியனைக் கூடப் பார்க்கவில்லை. அவனுடைய நாட்டுக்குச் சென்று 'வெர்டிக்ட் ஆப் இந்தியா' Verdict of India என்று ஒரு புத்தகத்தை எழுதினான். நான் இந்தியாவுக்குப் போனேன். ஒரு இந்தியனைக் கூடப்





பார்க்கவில்லை என்று எழுதினான். உடனே இந்திய நாட்டிலே உள்ள தேசிய ஏடுகளெல்லாம் அந்த பிவர்லி நிகோலஸ்சைப்பற்றித் தாறுமாறாகத் திட்டி எழுதின. அப்போது ஒரே ஒரு ஏடு மட்டும் நிகோலாசின் நல்ல தீர்ப்பு என்று எழுதிற்று. அதுதான் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திராவிட நாடு ஏடு. சமுதாயத்தை அழகாகப் படம் பிடித்துக் காட்டினார் என்பதற்காக அவரைத் தாறுமாறாகத் திட்டினார்கள். அதையெல்லாம் கலைஞர் அவர்கள் எண்ணிப் பார்த்துப் பார்த்து அவர் அண்ணாவாக ஆகிவிட்டிருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணுவதிலே, முடிவு காணுவதிலே, அந்த முடிவிலே இன்பம் காணுவதிலே, தான் துடித்துக்கொண்டிருக்கிறார். அந்தத் துடிப்புக்காக இந்த நாடு அவருடைய காலடியிலே தன்னுடைய காணிக்கையைச் செலுத்திக்கொண்டிருக்கிறது. நான் உணர்ச்சி பூர்வமாகப் பேசுகிறேன். உள்ளபடியே இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கையை யார் உருவாக்கிக் காட்ட முடியும்? உபரி பட்ஜெட்டா, பற்றுக்குறை பட்ஜெட்டா என்பது அல்ல பிரச்சினை. சமுதாயத்திற்கேற்ற ஒரு திட்டத்தை உருவாக்கித் தர வேண்டிய நிலையை கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இதைப் பாராட்ட வேண்டாமா? எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பாராட்ட வேண்டாமா? பாராட்ட மறுக்கிறார்கள். காரணம் என்ன? இதயம் பாராட்டுகிறது. உதடுகள் மட்டும் அசைய மறுக்கின்றன. உதட்டினுடைய அசைவுகளெல்லாம் உள்ளத்தினுடைய உணர்ச்சிகள் ஆகிவிட முடியாது. ஆனாலும் நான் அவர்களைச் சந்தேகிக்கவில்லை. எனவே நம்முடைய கலைஞர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கை இருக்கிறதே. அது ஒரு உயர்வான, சிறப்பான, பாராட்டுதலுக்குரிய அறிக்கை மட்டுமல்ல, சமுதாயத்தை மாற்றக் கூடிய ஒரு அறிக்கையாகும். அப்படிக் கூட அடக்கமாகச் சொல்லியிருக்கின்றார்கள். இது முதல் முயற்சி தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு அருமையான திட்டங்களையெல்லாம் சொல்லிவிட்டு தனியார் உடைமைகளை தேச உடைமை ஆக்குவதிலே நல்ல ஆர்வத்தைக் காட்டி அதிலே திட்டங்களைத் தீட்டிவிட்டு இப்படி நாம் செய்கின்ற நிலை கூட ஒரு முதல் உதவியே, நாம் இன்னும் முன்னேற வேண்டுமென்று தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட அருமையான தலைவரை, அருமையான முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட தலைவருக்கு, முதலமைச்சருக்கு எனது நன்றியைத் தெரிவித்து, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, எனது கன்னிப் பேச்சை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இராம சுப்பையா: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த அவையில் நான் முதன் முதலிலே பேசத் தொடங்கியிருக்கின்றேன். இந்த அவையிலே என்னை ஒரு உறுப்பினராக ஆக்கி, இந்தப் பெரிய மேலவையிலே என்னை அமரச் செய்த நமது கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது முதல்வரவர்கள் இந்த மன்றத்திலே [illegible]

செய்திருக்கின்ற 1973-74 ஆம் ஆண்டுக்கான உபரி நிதி நிலை அறிக்கையினை நான் வரவேற்றுப் பாராட்டிப் பேசத் தொடங்குமுன் "ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப வரவினை மிஞ்சாத செலவினைக் கொண்டிருக்கிற இந்தச் சிறப்பு மிக்க நிதி நிலை அறிக்கையினை நான் மனமாரப் பாராட்டுகிறேன். முதல்வரவர்கள் கூறியிருப்பதைப் போல, உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமர்ப்பம் அமையாமல் செயல் வடிவத்திலே இந்த நிதி நிலை அறிக்கையில் ஒளி விடுகின்றது. ஆனால் இந்த நாட்டிலே ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசு செய்திருக்கின்ற காரியங்களைப் போல இது வரையில் எந்த அரசும் செய்ததில்லை. இப்போது உழவர்களுக்காக இந்த அரசு தீட்டிய நிதி நிலை அறிக்கையிலே கண்டிருக்கிற அந்தச் செயல்களைப் பார்த்தால், இதனை வரவேற்றுப் பேச மனமுள்ள நெஞ்சம் உள்ளவர்கள் அதனைப் பெரும் வரவேற்புத்தான் செய்வார்கள். ஆனால் ஒரு சிலர் இதனை வரவேற்றுப் பேசுவதற்குக் கூட நெஞ்சில் இடம் கொடுக்கவில்லை என்றுதான் எண்ணுகின்றேன். அவர்கள் மனமார நெஞ்சாரப் பாராட்டினாலும், நமது மதிப்பிற்குரிய திரு. ஜார்ஜ் கோமகன் கூறியதைப் போல, அவர்கள் உதட்டளவிலே தான் பேசுகிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கை, இந்த நாட்டை கலைஞர் அவர்கள் எப்படி நல்ல முறையில் அமைக்கவிருக்கின்றார் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சுவாமிநாதன் என்று எண்ணுகிறேன், நம்முடைய உறுப்பினர் ஒருவர் பேசுகின்ற போது குறிப்பிட்டு, 'உங்களை வரவேற்றுப் பேசுவோர் இல்லையே. உங்களை வரவேற்க ஏராளமான பேர் இருக்கிறார்களா' என்று சொன்னார்கள். ஆம், கோடிக்கணக்கான பேர் இந்த நாட்டிலே கலைஞர் அவர்களையும் இந்த நிதி நிலை அறிக்கையையும் பாராட்டிப் பேசி வருகிறார்கள். "மழைவருவது தெரிவதில்லை மாளிகை வாசலிலே, மழை வருமுன் தெரிந்து விடும் மண்குடிசையிலே" அதையுணர்ந்துதான் கலைஞர் குடிசை வாழ் மக்கட்கு வேண்டியது செய்கிறார். இதை உணர்ந்துதான் கலைஞர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். அதுபோல் மண் குடிசைகளில் இருப்போருக்கு பாடுபட்டு வருகிறார். உண்மையாகவே கூறுகிறேன். இந்த நாட்டிலிருக்கின்ற ஏழை, எளிய மக்கள் அத்தனை பேரும் போற்றிப் பாராட்டி வரவேற்கும் ஒரு அறிக்கை இது. எந்த அரசாவது இந்த மாதிரியாகத் தெள்ளத் தெளிவாக ஒரு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்ததுண்டா? இதைப் பாராட்டாமல் எதைத்தான் பாராட்டுவீர்கள் என்று தெரியவில்லை. திட்டச் செலவு 10, 8 சதவீதத்திலிருந்து 4.7 சதவீதமாகக் குறைந்து வந்துள்ளது மத்திய அரசு காட்டும் மாற்றாந்தாய்ப் போக்கை எடுத்துக் காட்டவில்லையா? இதைப் பார்க்கும்போது, நம்முடைய தமிழக அரசு செய்துள்ள சாதனைகளை யார் தான் பாராட்டாமலிருப்பார்கள்? மக்கள் தொகை 7.5 சதவீதமாக இருக்கின்ற நிலைமையில் இனியாவது அந்த அடிப்படையில்



நியாயம் வழங்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசு அலுவலர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக கிராக்கிப்படியை உயர்த்தியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். வரி எதுவும் போடாமல் நம்முடைய மாநில அரசு கிராக்கிப்படி போன்ற சலுகைகளை அரசு ஊழியர்களுக்கு வழங்கியிருக்கிறது. மத்திய அரசு 292 கோடி ரூபாய்க்கு வரி போட்டும் அதன் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கவில்லை. ஆனால் நம்முடைய அரசோ புது வரி எதுவும் போடவில்லை, பழைய வரியையும் உயர்த்தாமல் நல்ல முறையில் செய்திருக்கிறது. அதை மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் பாராட்ட மறுக்கிறார்கள்.

புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக்க வேண்டும் என்று நீண்டகாலமாக அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருந்தாலும், இப்போது தான் நமது அரசு [illegible], அந்தப் புதுக்கோட்டை தனி மாவட்டமாகியிருக்கிறது. அது மாவட்டமாவதற்கான அமைப்புகள் அனைத்தும் அங்கே அமைந்திருக்கிறது.

தனி உடைமையை தேசிய உடைமையாக்குவதில் தனிப்பட்ட உரிமையாளர்களுக்குக் கொஞ்சம் சிரமம் இருந்தாலும், அவைகளை எடுத்துக்கொள்வதால் இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் அத்தனை பேரையும் வாழ வைக்க முடியாது என்றும், வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலமாக வறுமையைப் போக்கி மக்களுக்கு நல்ல வசதி செய்து தரலாம் என்றும் நமது அரசு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறது. இது மாற்றுக் கட்சி நண்பர்களுக்குத் தெரியவில்லை. நிலச் சீர்திருத்தம் மூலம் உழவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதற்கு கலைஞர் அவர்கள் எவ்வளவோ முயற்சி எடுத்து, அதற்கு வேலை செய்து வருகிறார். அந்தச் சட்டத்தின் மூலமாக ஏராளமான நிலமற்ற விவசாயிகள் நிலச் சொந்தக்காரர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் வருமென்று சொல்லியிருக்கிறார்கள். சிலர் உண்பதற்காகவே இந்த நாட்டில் இருக்கிறார்கள். பலர் வாழ்வதற்காக உண்கிறார்கள். வாழ்வதற்கு உண்கிறவர்களுக்குத்தான் இந்த அரசு, கலைஞர் அரசு நல் வழி வகுத்து வருகிறது என்று கூறி, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேச விழைகிறேன். வள்ளுவர் சிலைக்கு எதிரில் அமைந்திருக்கும், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் விடுதிக்கு, மாணவர்களின் அழைப்பின் பேரில் கலைஞர் அவர்கள் சென்றிருந்தார்கள். மாணவத் தலைவர் கலைஞர் அவர்களை வரவேற்றுப் பேசும்போது பக்கிங்ஹாம் கால்வாயை கூவத்தின் தங்கை என்று எடுத்துக் காட்டி, கூவத்தைச் சீரமைப்பதுபோல் பக்கிங்ஹாம் கால்வாயையும் சீரமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அப்பொழுது கலைஞர் அவர்கள் அந்த மாணவர்களுக்கு அழகாகச் சொன்னார்கள். இப்போது கூவத்தில் சீரமைப்பு நடக்கிறது. இது முடிந்த பிறகு

[திரு. இராம. சுப்பையா] [1973 மார்ச் 5

தான் பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைக்கப்பட வேண்டும் என்று சொன்னார். நமது மாணவ நண்பர்கள் அதை 'தங்கை' என்று குறிப்பிட்டார்கள். அண்ணா மறைந்த பின் தானே தங்கை மணக்க வேண்டுமென்று சொன்னார். இன்று கூவத்தின் சீரமைப்பு முடிந்து பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புக்கு ஐம்பது லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அண்ணனுக்கு மணம் முடிந்த பிறகு, தங்கைக்கு மணம் முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைத் துவங்கியிருக்கிறார்கள். சொல் அளவிலே நின்று விடாது எதையும் செயலில் செய்து காட்டும் திறனுடையவர். அங்கே கலைஞரின் சொல்வண்ணம் கண்டேன். இங்கே அவரின் செயல் வண்ணம் கண்டேன். தனக்குச் சரியாகப் பட்டதைத் தெளிவாக மக்களிடம் எடுத்துச் சொல்லி, துணிவோடும், கனிவோடும் காரியமாற்றும் தன்மை உடையவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர். எந்த வேலையும், எந்த நிலையிலும் நல்ல முறையில் நடந்து வருகிறது இந்த ஆட்சியில், என்று கூறி இந்த நிதி நிலை அறிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மன்றம் மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

## 4. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and orders.

60. Order issued with G.O.R. No. 213, Revenue, dated the 1st February, 1973, exempting from liability to entertainments tax show-tax and additional surcharge, on cinematograph film show organised by Ceylon Students' Association, Ganga Hostel, I.I.T., Madras-36, to be held at 10 a.m. on 4th February 1973 at Devi Theatre, to raise funds for establishing a Recreation Centre for Ceylon Students. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

61. Order issued with G.O.R. No. 2192, Revenue, dated the 16th November 1972, exempting from liability to entertainment tax, show tax and additional surcharge on Entertainments Tax, the benefit film shows which may be conducted in the City of Madras and in the districts in connection with the Flag Day Celebrations during the period up to 30th June 1973 in aid of the Flag Day



Fund. [Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

62. Order issued with G.O. Rt. No. 2219, Revenue, dated the 3rd October 1972, exempting from liability to entertainments tax and show tax and additional surcharge on Entertainments Tax, the benefit films shows which may be conducted in the City of Madras and in the districts, in connection with the "Chief Minister Eye Camp Fund". [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

63. Order issued with G.O. Rt. No. 109, Revenue, dated the 17th January 1973, exempting from liability to entertainments tax, show tax and additional surcharge on the cinematograph film show organised by Muslim Women's Association Matriculation School at Devi Theatre, Madras at 10.00 a.m., on 21st January 1973. [Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)·]

64 Notification issued with G.O. Ms. No. 2967, Revenue, dated the 15th November 1972, in regard to amendments to the Revenue Department Notification II-1 No. 3987 (b) of 1971, dated the 7th September 1971 published at page 2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 8th September 1971. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

65. Notification issued with G.O. Ms. No. 191, Rural Development and Local Administration, dated the 1st February 1973, in regard to the term of office of the Members of the Tamil Nadu Khadi and Village Industries Board shall be extended for a further period of one month from the 3rd February 1973. [Laid on the table of the House under section 29(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959)].

66. Statement of guarantees given by the Government of Tamil Nadu to the State Housing Board. [Laid on the table of the House under section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961)].

*B. Reports, Notifications and other Papers.*

37 Notification issued with G.O. Ms. No. 1333, Labour and Employment, dated the 7th November 1972, in regard to an amendment to the Tamil Nadu Factories Rules, 1950.

38. Fifth Report of the Committee on Public Accounts 1972-73 on the Audit Report on the Accounts of the Tamil Nadu State Electricity Board for the years 1966-67, 1967-68 and 1968-69.

## தமிழ் நாடு சட்ட மன்றம்

**செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 6.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

**1. வினாக்கள்-விடைகள்.**

**உடுக்குறியிட்ட வினாக்கள்.**

*Political Pension for the Freedom Fighters*

* 185 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of applications received from the Freedom Fighters, requesting the grant of Political Pensions from April 1967 to 31st March 1971;

(b) the number of persons among them, for whom the pension has been sanctioned so far; and

(c) the reasons for not sanctioning the pension to others?

**அரசியல் தியாகிகள் ஓய்வூதியம்**

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறை சென்ற அரசியல் தியாகிகள் ஓய்வூதியம் கோரி 1967 ஏப்ரல் மாதம் முதல் 31—3—1971 வரை அரசுக்கு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(இ) அவற்றுள் எத்தனை பேருக்கு இதுவரை மானியம் வழங்கப்பட்டிருக்கிறது ?

(உ) மற்றவருக்கு மானியம் வழங்காமலிருப்பதற்குக் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) 1967 ஏப்ரல் முதல் 31—3—71 வரை வந்த விண்ணப்பங்கள் 10,025.

(இ) 5,692 பேர்களுக்கு அந்த விண்ணப்பங்கள் வாயிலாக ஓய்வூதியம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

(உ) 1966-ம் ஆண்டின் ஓய்வூதிய விதிகளுக்கு உட்படாத காரணத்தினால் 3,311 விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 1,022 விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட காரணங்களினால் முடிவு பெறவில்லை :—

(1) மாவட்ட ஆட்சியரின் விசாரணைக்குப்பின் அனுப்பும் அறிக்கை வரப்பெறவில்லை.

(2) விண்ணப்பதாரர் கூறியுள்ள தண்டனை விவரங்கள் சரியானதுதானா என்று சரி பார்க்க, இம்மாநிலச் சிறை அதிகாரிகளுடனும் மற்றைய மாநில அரசினிடமும் கடிதத் தொடர்பில் இருந்தன.

(3) விண்ணப்பதாரர் உண்மையாகவே இந்திய தேசிய ராணுவத்தில் பணிபுரிந்தவர்தானா என்ற விவரத்திற்கு அகில இந்திய தேசிய ராணுவக் குழுவுடன் உள்ள கடிதத் தொடர்பிற்கு பதில் வரவில்லை.

(4) மனுவை ஏன் தள்ளுபடிச் செய்யக்கூடாது என்று காரணம் கேட்டுள்ள அறிக்கைக்கு, விண்ணப்பதாரரிடமிருந்து பதில் வரவில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, மனுவை ஏன் தள்ளுபடி செய்யக்கூடாதென்று காரணம் கேட்கப்படும்போது, சிறையில் இருந்தாரா என்பதற்கான ஆதாரங்கள் இல்லையென்றும் அல்லது அதற்கு அவர்களுடன் சிறையில் இருந்த மந்திரிகள் அல்லது பார்லிமெண்ட் உறுப்பினர்களுடைய கடிதங்களை ஆதாரங்களாக வாங்கி அனுப்ப வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சொன்ன பிறகு, மேலும் இவ்வளவு தினங்களுக்குள் பதில் வரவில்லையென்றால், மனு தள்ளுபடி செய்யப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. அவைகளைப் பெறுவதில் கஷ்டமிருக்கிறதென்றாலும்கூட, பெருவாரியான விண்ணப்பங்களில்



அவர்கள் கோர்ட்டில் ரிமாண்டில் இருந்ததைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குத் தக்க ரிகார்ட் இருக்கிறது. கேஸ் நம்பர்களெல்லாம் இருக்கின்றன. இந்த விவரங்களையெல்லாம் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். போராட்டங்களில் பங்குகொண்ட போட்டோ படங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு ஆதாரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அந்த ஆதாரங்களை வைத்துப் பரிசீலனை செய்யாமல், மானியமும் வழங்காமலிருப்பதற்கு என்ன காரணமென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, முக்கியமான காரணம் குறைந்தது 3 மாதங்கள் அவர்கள் சிறையில் இருந்திருக்க வேண்டும். அது விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்படாமல் இருந்திருந்தால், அதைக் கவனிக்க இயலாது. முன்னாள் அமைச்சர்கள், தகுதி வாய்ந்த தலைவர்கள், அவர்களோடு சிறையில் இருந்தார்களென்று எழுதித் தருவார்களானால், அது பற்றிப் பரிசீலிக்கப்படுமென்று நான் அறிவித்திருந்தேன். அவைகளும் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினரவர்களும் பரிசீலிக்கப்பட்டதை அறிவார்கள். ஆனால் சில பேர் இப்படி ஒரு சலுகை அளிக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும் அதிகத் தொந்தரவு கொடுத்து, அதிகப்படியான விண்ணப்பங்களைப் பெற்றுத் தரும் முயற்சியில் ஈடுபட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்று காலையில்கூட ஒரு மனுவை ஒரு சிலர் பரிந்துரை செய்ய முன் வந்தார்கள். ஒருவர், அவரும், அவருடைய நண்பரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, " இருவரும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் கைது செய்யப்பட்டோம். ஆனால் தண்டனை வழங்கிய நீதிபதி என்னுடைய நண்பனுக்கு ஒரு வருடம் தண்டனை அறிவித்தார். அவருக்கு ஓய்வு ஊதியம் கிடைக்கிறது. எனக்கு ஒரு மாதம்தான் தண்டனை கொடுத்தார். எனவே எனக்குக் கிடைக்கவில்லை. ஆகவே என்னையும் அந்த வழக்கோடு சேர்த்து ஓய்வு ஊதியம் தர வேண்டும் " என்று கேட்டிருக்கிறார். இதில் நீதிபதி வழங்கிய தீர்ப்புக்கு நாம் பொறுப்பாக முடியாது. இது போன்ற நிலைமைகளில், இவைகளைச் செய்ய முடியவில்லை. நான் கொடுத்த கணக்கு 31—3—71 வரைதான். மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதுவரை 5,692 பேருக்கு வழங்கப்

பட்டதாகச் சொன்னேன். ஆனால் 31—1—73-ல் உள்ள நிலைமை இந்த வீர மானியம் பெறுபவர் தொகை 7,506 என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இன்னும் எவ்வளவு விண்ணப்பங்கள் முடிவெடுக்காமல், 'பெண்டிங்காக' இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, முடிவு பெறாமல் பரிசீலனையில் இருப்பது சுமார் 2,000 விண்ணப்பங்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, தமிழகத்தின் வடக்கெல்லை—தெற்கெல்லைக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு, சிறை சென்ற வீரர்களுக்கும்—குறிப்பாக, அந்தப் போராட்டங்களில் உயிர் நீத்த தியாகிகளின் குடும்பங்களுக்கும் மானியமோ அல்லது உதவித் தொகையோ வழங்க அரசுக்கு ஏதேனும் எண்ணமிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, முதலில் இந்திய சுதந்திரத்திற்கு அடித்தளமாக அமைந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கென முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஓய்வு ஊதியத்தொகை வழங்கப்படுகின்றது, வழங்கப்பட்டு வருகின்றது. அடுத்து, மொழிப் போராட்டம், எல்லைப் போராட்டம் இவைகளும் வரிசையாகக் கவனிக்கப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, அரசியல் துறையிலுள்ள பிரமுகர்கள் இதுபற்றிச் சான்றுகள் கூறினாலும் கூட, அதுவும் கவனிக்கப்பட்டதென்று முதலமைச்சரவர்கள் கூறினார்கள். நானும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும்கூட ஒரு தினம் இதிலுள்ள சிரமங்களை ஆராய்வதற்காக, முதலமைச்சரவர் களிடத்தில் பேசினோம். அதற்குப் பின்னால் இங்கு வந்துள்ள விண்ணப்பங்களை எந்த முறையில் பரிசீலனை செய்து, முடிவு செய்வதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்யலாமென்று அதுபற்றி யோசனை கூறினோம். அதே போல பரிசீலனை செய்வதற்கு ஒரு ஆய்வுக் குழுவை அமைத்து, அதில் ஒரு சிலரை வைத்துக்



கொண்டு, அவைகளை ஆய்வு செய்து, முறையாகப் பரிசீலித்து, எதையெதை நாம் ஒத்துக்கொள்ளலாமென்பதைப்பற்றி முடிவு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த யோசனையை நான் சிந்தித்த பிறகு, இது பற்றிச் சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, எல்லைப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கும்போது அப்போராட்டங்களில் ஈடுபட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த வீர மானியம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறதோ, அந்த அடிப்படையில் தான் வழங்கப்படும்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, எல்லாப் போராட்டங்களுக்கும் கொடுக்கிறது போல, மொழிப் போராட்டத்தில் சிறை சென்றவர்களுக்கும் இந்த வீர மானியம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் அதுபற்றிச் சொன்ன மொழி எள்ளளவும் காதில் கேட்கலையோ !

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, குறிப்பிட்ட வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்த மானியம் கொடுக்கப்படுமென்று விதிகளில் இருக்கிறது. ஓரளவுக்கு வருமானம் அதிகமாகப் பெறுபவர்கள், சற்று வசதியாக இருப்பவர்கள், விடுதலைப் போராட்ட காலத்தில் 4, 5 ஆண்டுகள் சிறை சென்றிருந்தால், அவர்களுக்கு மானியம் கொடுக்கவில்லையென்றாலும், ஏதாவது ஒரு அடையாளம் அல்லது பட்டயம் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஏற்கெனவே அந்த விடுதலை வீரர்கள் இருக்கின்ற குடும்பத்தில், யாருக்காவது 100 ரூபாய் வருமானம் இருந்தாலும்கூட, அந்த

விடுதலை வீரருக்கு இந்தத் தொகை வழங்கப்படாமல் இருந்தது. இப்பொழுது அந்த நாம் மாற்றி, அந்த நபர் நூறு ரூபாய் வருமானம் உடையவராக இருக்கிறாரா, இல்லையா என்பதைப் பார்த்து, அவருக்கு அளிக்கும் சலுகையைப் புதிதாக அளித்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் சொன்னார்கள். அந்த விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு—வசதி படைத்தவர்களாயிருந்தால்—மானியம் கொடுக்கப்படாவிட்டாலும், மதிப்பாவது கொடுக்கப்படுமாவென்று கேட்டார்கள். அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் அளிக்கும் வகையில், வெள்ளி விழா ஆண்டின் இறுதிக் கட்டத்தில் தமிழக அரசின் சார்பில் ஏதாவது பட்டயங்கள் வழங்கலாமென்ற யோசனை இருக்கிறது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, அமரர் தோழர் ப. ஜீவானந்தத்தின் மனைவியார் இந்த மானியத்தைக் கேட்டு, அவர் பெறுகிற ஊதியம் அதிகமாயிருக்கிறதென்ற காரணத்தால் இல்லையென்று சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பல்வேறு சிக்கல்களுக்கிடையே அந்தக் குடும்பம் சங்கடப்படுவதால், மொத்தமாக ஏதாவது ஒரு மானியத்தொகையாவது அவர்களின் குழந்தைகள் படிப்புக்குத் தந்து உதவி செய்ய இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் அரசாங்க அலுவலில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களெல்லாம் இந்தப் பட்டயங்கள் பெறும் பட்டியலில் இடம் பெறுவார்கள்.

## *Retired Officers Association, Madras*

* 186 Q.—THIRU V.—ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Retired Officers Association, Madras, has made any representation to the Government about May 1972; and

(*b*) if so, the details thereof?



## ஓய்வுபெற்ற அதிகாரிகள் சங்கம்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ஆம் ஆண்டு மே திங்கள் வாக்கில், சென்னையிலுள்ள ஓய்வு பெற்ற அதிகாரிகள் சங்கம், முறையீடு ஏதும் அரசுக்குக் கொடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) அச்சங்கம் 1972 ஏப்ரலில் கீழ்க்கண்ட வேண்டுகோள்களை அரசுக்கு விடுத்துள்ளது :—

(1) இந்த அரசு வழங்கும் ஓய்வூதியம் மத்திய அரசு வழங்கும் ஓய்வூதியத்துக்குச் சமமானதாக இருக்கும் வகையில் ரூ. 200 வரையிலான மாத ஓய்வூதியத்தில் 10 சதவிகிதத்திற்கு இடைக்கால உயர்வுக்கு அனுமதித்தல்.

(2) இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகள் செயலுக்கு வந்த நாளான 2—10—70-க்கு முன்பும் அதற்குப் பிறகும் ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய வீதங்களின் இடையே காணப்படும் வேறுபாட்டைக் களைதல்.

(3) ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் இந்திய அரசு 1963-இலும் 1969-இலும் வழங்கிய (ஓய்வூதிய) இடைக்கால உயர்வுகளின் அடிப்படையில் இடைக்கால ஓய்வூதிய உயர்வு வழங்குதல்.

(4) பணியாற்றும் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படக் கூடிய வீதத்தில் பாதி அகவிலைப்படியை ஓய்வூதியம் பெற்றவர்களுக்கும் வழங்க வேண்டுமென இரண்டாவது சம்பள ஆணைக் குழு செய்த பரிவுரையை 2—10—70-லிருந்து செயற்படுத்தல்.

இந்த வேண்டுகோள்களை ஏற்க இயலவில்லை என்று அச் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

15—5—1972, 27—5—1972, 1—6—1972 ஆகிய தேதிகளில் அந்த சங்கத்திற்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டன.

[1973 மார்ச் 6

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, ஏற்க இயலவில்லை, என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த அடிப்படையிலே அந்தக் கோரிக்கைகளை ஏற்க முடியவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்களுக்கு தாராள ஓய்வு ஊதிய நலன்களைக் கணிசமான அளவிற்கு அண்மையிலே நீட்டித்துக் கொடுத்திருக்கின்றது. 1—4—1972-லிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 என்ற அளவிலிருந்து ரூ. 40 அளவுக்கு உயர்த்தப்பட்டு, குறைந்த அளவு ஓய்வு ஊதியமே அவர்களுக்குப் பொருந்துவதாக அமைந்திருக்கின்றது. குறைந்த அளவு ஊதியத் தொகை உயர்த்தப்பட்டதால் நலன் பெறுபவர்களாக இருந்தால், அவர்கள் 1—4—1972-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 5 அகவிலைப்படி பெறத் தகுதி உடையவர்கள் என்கின்ற சலுகை அளிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு மேலும் செய்ய முடியாததற்குக் காரணம், அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வதென்றால் 197 லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு மேலும் இழப்பு வரும். கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய். அதற்கு அரசினுடைய நிதி ஆதாரம் இடம் தரவில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, அவர்களுடைய எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட, இரண்டாவது சம்பளக் குழு எப்பொழுதாவது நம்முடைய அகவிலைப்படி உயர்த்தப்படுகின்றபோது அந்த உயர்வில் பாதி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்து இருக்கின்றதனாலே, அதை மட்டுமாவது அரசு ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் ஏற்கெனவே சொன்னேன். நிதிநிலை இடம் தருவதைப் பொருத்துத்தான், அதைப்பற்றி யோசிக்கவே முடியும்.

THIRU D. SANTOSHAM : Mr. Cha'rman, Sir, the Hon. the Chief Minister has just now stated that financial difficulty is the only reason. But, I find in the Budget a surplus of Rs. 49 lakhs. If there is a surplus of Rs. 49 lakhs without any additional taxation, the Central Government may not give us any



1973 மார்ச் 6]

additional aid. When there is a surplus of Rs. 48 lakhs, this Government are paying a pension of Rs. 40 which is totally insufficient for any man to maintain himself in these hard days Will the Government considerat at least the giving of this amount of Rs. 49 lakhs?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இயற்கையின் எத்தனையோ மாறுபாடுகளுக்கு இடையே இந்த 49 லட்சம் ரூபாய் உபரி என்பது ஒரு பெரிய உபரி அல்ல. —

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, அவர்களுடைய இந்த வேண்டுகோள்களை ஏற்றுக்கொள்ளும்போது, நிதி நிலை சீராகி ஏற்றுக்கொள்ளும்போது, ஆசிரிய பென்ஷனர்களுக்கும் இந்தப் பலனைத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திருமணமே நிச்சயம் ஆகவில்லை.

*Hunger Strike by Law College Students*

*187 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of Thiru L. BALARAMAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the students of the Law College, Madras resorted to a Hunger Strike during September 1972;

(b) the reason therefor; and

(c) the action taken thereon by the Government?

**சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதம்**

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எல். பலராமன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை சட்டக் கல்லூரியில் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தனரா ?

(இ) இதற்கான காரணம் யாது ?

(உ) இதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) விடுதி வசதி, பேருந்து, வகுப்பில் மின் விசிறி, கல்லூரி அரங்கம் போதுமான ஆசிரியர்களை நியமித்தல் ஆகிய கோரிக்கைகளை வற்புறுத்த எண்ணமிருந்ததும் இருந்தவை.

(உ) இப்போதுள்ள விடுதியை ஒட்டி மேலும் புதிய கட்டடம் ஒன்று எழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. கூடுதலாக ஒரு பேருந்து வாங்கப்பட்டுவிட்டது. புதிய வகுப்பறைகளில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டு, ஆசிரியர்கள் பதவிகளும் பெரும்பாலும் நிரப்பப்பட்டுவிட்டன.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, இந்த விடுதியிலே மாணவர்கள் தங்க வேண்டுமென்று கட்டாயம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன். மேலும் இந்த விடுதியிலேயே இப்போது எல்லா இடவசதியும் இருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த விடுதியிலே மாணவர்கள் தங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆனால் மாணாக்கர்களில் பலர் விடுதி வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கோருகின்றார்கள். பல்வேறு விடுதிகளிலே அவர்கள் தங்கிக்கொண்டு வந்தார்கள். இப்போது இருக்கிற விடுதியில் எவ்வளவு இடங்கள் இருக்கின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. இப்போது புதிதாகக் கட்டப்படுகின்ற விடுதிக் கட்டிடம் 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்படும்.

## *Saraswathi Mahal Library in Thanjavur*

* 188 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to upgrade the **Saraswathi** Mahal Library in Thanjavur; and

(b) if so, the nature of the proposal?





## தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அச்செயற்குறிப்பின் தன்மை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சரஸ்வதி மகாலுக்கு இப்போது மாநில அரசினுடைய சார்பில் உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறதா ? இந்த உதவித் தொகையை அதிகரிக்கும் செயல் குறிப்பு இருக்கின்றதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எவ்வளவு அளிக்கப்படுகிறது என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் மாநில அரசின் மேலாண்மைக் குழுவுக்கு அதைச் சீர்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்றது. அவர்களிடமிருந்து வருகின்ற கோரிக்கைகளை வைத்து, அதைப் பொறுத்து, நாம் பரிசீலிக்க இருக்கின்றோம். மத்திய அரசினுடைய உதவித் தொகையைக் கேட்டபோது, அவர்களே ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் அதிலே அவர்களுடைய பிரதிநிதிகள் தான் அதிகமாக இருக்க வேண்டுமென்றும் மன்னர் அவர்கள் தலைவராக இருக்க வேண்டுமென்றும் பல்வேறு நிபந்தனைகளைப் போட்டார்கள். அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். அந்த உதவி பெறுவது என்ற நிலை வேண்டாம். மாநில அரசே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம் என்ற அளவிலே அரசு முடிவு செய்துள்ளது. அந்த நிர்வாகக் குழுவினால் செயற்குறிப்பு அனுப்பப்பட்டால், அது பற்றி ஆராயப்படும்.

**திரு. கோ. சி. மணி :** தலைவரவர்களே, சரஸ்வதி மகாலில் கண்காட்சி பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு, அது கொஞ்சம் அதிகரித்ததால் பொதுமக்கள் ஈர்க்கப்பட்டு அதிக

வசூலைக் கொடுக்கின்ற அளவுக்கு அது இருக்கின்றது. இன்னும் அதிகமாக வசதி செய்து கொடுப்பதற்கேற்றவாறு திருத்தி அமைக்கின்ற யோசனை அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பொறுப்பிலே தான் இருந்து வருகிறது. ஆகவே அவர் அதற்கான தக்க முயற்சிகளை மேற்கொள்ளுவார்.

**திரு. சா. கணேசன் :** இந்த சரஸ்வதி மகாலிலே உள்ள நூல்கள் குறிப்பாக ஏட்டுச் சுவடிகள் சிதிலமாக ஆவதிலிருந்து அதைக் காப்பதற்கு விஞ்ஞான ரீதியான முறையைக் கையாண்டு அந்த ஏடுகளை மைக்ரோ பிலிம் செய்து பாதுகாப்பதற்கு, அரசு உடனடியாக தொகை ஒதுக்கி அதை நிரந்தரமான பாதுகாப்புள்ள முறையிலே காப்பதற்கு, ஏதேனும் வழிவகை செய்திருக்கின்றதா? இல்லாவிட்டால் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட முயற்சிகளுக்குக் கூட போர்டு பவுண்டேஷனைச் சேர்ந்தவர்கள் வந்தபோது அவர்கள் போய் பார்த்துவிட்டு வந்தார்கள். அதற்குச் செய்ய வேண்டிய உதவிகள் எல்லாம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அவர்களிடத்தில் வைத்திருந்தோம். அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் இன்னும் வரவில்லை. அப்படிப்பட்ட முறையில் அங்கு இருக்கின்ற பழங்காலச் சுவடிகளையெல்லாம், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்ததுபோல், பாதுகாத்து வைப்பதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். அதற்கான செலவுக்குறிப்பை ஆராய்ந்து, அதற்கொப்ப பண ஒதுக்கீடு எவ்வளவு இருக்கிறது என்ற அடிப்படையிலே, மத்திய அரசாங்கத்திடம் ஒரு தொகையைக் கேட்டு வகை செய்ய வேண்டுமென்று இருக்கிறோம். அந்தக் குறிப்பு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. அதுபற்றி ஆராயப்படுகிறதா என்றும் தெரியவில்லை. அந்தச் செலவுக்குறிப்பு பெற்று அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, போர்டு பவுண்டேஷன் மட்டும் இன்றி யுனெஸ்கோ கார்னகி பவுண்டேஷனும் இந்த முறைகளுக்கு உதவித் தொகை மட்டுமின்றி கருவிகளும்



மைக்ரோ பிலிமுக்கு வேண்டிய சாதனங்களும் உதவி செய்வதனாலே, அதை நேரடியாக நமது அரசு அவர்களிடமிருந்து பெற்று அதை மேற்கொண்டு இந்த சரஸ்வதி மகால் நூல் நிலையத்தைப் பாதுகாக்க உபயோகப்படுத்துமா? அதே நேரத்திலே, இந்நூல்கள் இன்டெக்ஸ் கார்டுகள் மாதிரி தற்கால விஞ்ஞான முறையிலே வகையாக அமைக்கப் பெறாமல், பழங்கால முறையிலேயே இன்னும் தொடர்ந்து இருக்கின்றன. மொழிவாரி, எழுத்துவாரி, கருத்துவாரி, ஆசிரியர்வாரி என்றெல்லாம் இன்டெக்ஸ் கார்டு வைத்து, அவற்றைப் பயன்படுத்தக்கூடிய முறையிலே செம்மைப்படுத்தவும் அரசு மிக விரைவிலே முன்வர வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து, அப்படிச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறிய நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கான வழிவகைகளில் நாம் பெறலாம். ஆனால் பெரும்பாலான உதவிகள் மத்திய அரசாங்கத்தின் மூலமாகத்தான் பெற முடியும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட வழிமுறைகள் கிடைக்கப் பெறுமானால், அந்த வகையிலேயே முயலலாம். அங்கே இருக்கின்ற நூல் நிலையத்தைச் செம்மைப்படுத்துகின்ற முறையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது கருத்தில் வைக்கப்பட்டு அதைப் பற்றி ஆராயும்போது, அதை மேற்கொள்ளுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சரஸ்வதி மகாலில் இருக்கும் நூல் நிலையத்தில் சித்த வைத்தியத்தைப் பொறுத்த ராஜா சரபோஜி மன்னர் காலத்தில் அதை நோயாளிக்குக் கொடுத்து பரிசீலனை செய்த அற்புதமான சித்த வைத்தியப் புத்தகங்களை வைத்திருக்கின்றார்கள். அங்கு சித்த வைத்திய ஆராய்ச்சிப் பிரிவின் அலகு இருக்கின்றது. அந்நூல்களின் அடிப்படையில் சித்த வைத்திய மருந்துகள் தயாரித்து அவற்றை நோயாளிகளுக்குக் கொடுத்து ஆராயக்கூடிய ஒரு ரிசர்ச் யூனிட் போன்ற ஒரு ஆராய்ச்சிப் பிரிவை அமைக்க அரசு முயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது போலவே, சித்த மருத்துவத் துறையினுடைய ஆராய்ச்சிப் பிரிவு என்ற நிலையை வைத்துக்கொண்டு மருத்துவத் துறை ஆய்வினை ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். அவர் சொல்லுகிற மாதிரி பெருமளவு செய்கின்ற முறை மருத்துவத் துறையிலே மேற்கொள்ள வேண்டும். அதற்கான முயற்சிகளில் நாமே ஆராய்கின்ற கருத்துக்களையும் வேறு பல இடங்களில் வைத்திருக்கின்ற மருந்து ஆராய்ச்சித் துறைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கருத்துக்களையும் பயன்படுத்துவதற்கான வழிவகைகள் இருக்கின்றன.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர்களே, சரஸ்வதி மகாலில் நடனத்திற்காக எழுதப்பட்ட சில ஏடுகளைக் கொண்டு, நடனக் கலை, மற்றக் கலைகளையெல்லாம் ஏதாவது ஆரம்பிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்களே, பல்வேறு துறைகள் பற்றிய நூல்கள் அங்கே இருக்கின்றன. மருத்துவத் துறை, இசைத் துறை, கலைத் துறை, நாட்டியக் கலை ஆகிய பல்வேறு கலைகள் பற்றிய நூல்களெல்லாம் இருக்கின்றன. இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வெளிவந்த மேல் நாட்டு நூல்கள் அங்கே இருக்கின்றன. எங்கேயும் கிடைக்காத நூல்களையெல்லாம் பயன்படுத்திக்கொள்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஒவ்வொரு துறையின் ஆராய்ச்சிகளையும் மற்றவற்றையும் போட்டோ படி எடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு வருகின்றார்கள். ஆகவே அந்த நாட்டியக் கலையைப் பயன்படுத்துவது நாட்டில் பரவலாகவே இருந்து கொண்டு வருகின்றது. ஆகவே புதிதாகக் கற்றுகொண்டு பரப்ப வேண்டிய அவசியமில்லை.

*Teachers' Organisations recognized by the Government*

* 189 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the names of Teachers' Organisations in the State recognized by the Government for making representations on behalf of teachers?



அரசு ஏற்பு அளித்துள்ள ஆசிரியர் சங்கங்கள் பி.ப. 4-20

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

ஆசிரியர்கள் சார்பில் முறையீடுகளைச் செய்து கொள்ள இம்மாநிலத்தில் அரசு ஏற்பு அளித்துள்ள ஆசிரியர் சங்கங்களின் பெயர்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரு சில ஆசிரியர்கள் அமைப்புக்கள் அரசினால் முன்பு அங்கீகரிக்கப் பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளிலிருந்தோ, அங்கீகரிக்கப்படாத அமைப்புகளிடம் இருந்தோ பெறப்படும் முறையீடுகளுக்கு உரிய முறையில் அரசின் கவனம் செலுத்தப் படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர்களே, புதிய புதிய ஆசிரியர் சங்கங்கள் தோன்றுகின்றபடியினாலே, அரசு ஏற்பு அளிப்பது எந்தச் சங்கத்திற்கு, எந்தெந்த விதிமுறைக்கு ஒப்ப அது இருக்க வேண்டுமென்று ஏதாவது குறிப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்களே, அப்படிப்பட்ட விதி, குறிப்பு முறைகள் எதுவும் இல்லை. இப்போது ஏழு அமைப்புகள் தான் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 30, 40 அமைப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக இருந்தாலும், அங்கீகரிக்கப்படாத அமைப்பாக இருந்தாலும், அவர்களிடத்திலே இருந்து வருகின்ற முறையீடுகளையும், மற்றவைகளையும் ஒரே விதமாகக் கவனிக்கிற முறைதான் இருந்து வருகிறது.

(Thiru D. Santosham rose. . . .)

MR. CHAIRMAN: Is the hon. Member going to ask any question of Thiru M. Rajah Iyer? The hon. Member who has tabled the question will have the first preference.

THIRU M. RAJAH IYER: Sir, what are the seven organisations that have been already approved by the Government?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: They are—

(1) Harijan Welfare School Teachers' Association, Tiruchirappalli.

(2) The North Arcot District Harijan Welfare Teachers' Association, North Arcot district.

(3) The Madras District Labour School Teachers' Association, Madras.

(4) The Chingleput District Harijan Welfare School Teachers' Association.

(5) The Government Welfare Teachers' Association, South Arcot.

(6) Tamil Nadu Educational Subordinate Service Association, Madras.

(7) The South India Teachers' Union. (Tamil Nadu Asiriar Kazhagam)

THIRU D. SANTOSHAM: Sir, my question is closely associated with that of my hon. Friend Thiru Rajah Iyer. It is very desirable to frame rules for recognising these Unions and also for de-recognising them under certain circumstances. Will the Government frame the necessary rules soon for recognition as well as de-recognition of these Organisations?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படி முடிவெடுத்து, அப்படி ஒரு விதிமுறை வகுத்து, ஒரு சீரான முறையை ஏற்படுத்தினால், மிக மிக நல்லது தான். 35, 40 அமைப்புகள் இருப்பதைவிட ஒவ்வொரு துறைக்கு ஒரு அமைப்பு இருப்பது நல்லது தான். அப்படிப்பட்ட கருத்தை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பற்றி கனம் நீதிபதி பி. வி. ராஜமன்னார், டி. எல். வெங்கட்ராமய்யர்



இருவரும் அளித்த தீர்ப்பின்படி, தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியினை நடத்த இனி கல்வித் துறையினரோ அரசினரோ ஒப்புதல் அளிக்கத் தேவையில்லை. இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில்

*Director of Public Instruction R. C. No.* 192/BL2/52, dated *10th October* 1952.

"There is no need in future to recognise any Teachers' Union."

என்று இருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது இல்லாததனால் தான் பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி அதனுடைய குறிப்புகளைத் தருகிறது. உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் அதனுடைய குறிப்பைத் தருகிறது. தமிழாசிரியர் கழகம் தன்னுடைய குறிப்பைத் தருகிறது. தமிழ் நாடு ஆசிரியர் கழகம் தன்னுடைய குறிப்பைத் தருகிறது. உயர்நிலைப் பள்ளி செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தங்களுடைய குறிப்பைத் தருகிறார்கள். இந்த விண்ணப்பங்கள் அப்படி அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் மட்டுமே கொடுக்கத் தேவையில்லை என்று அரசு முடிவெடுத்திருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு முறையாக 'ரெப்ரசன்டேஷன்' கொடுத்து அழைத்துப் பேசுவதற்கு அமைச்சரவர்களும், அரசும் நல்ல முறையில் ஈடுபடுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே,

"The Teachers' Union need not be recognised for making representations on behalf of the teachers".

என்று அதிலே கொடுத்திருக்கிறார்கள். 'ரெப்ரசென்டேஷன்' கொடுக்கும் உரிமை அங்கீகரிக்கப்பட்ட யூனியனுக்குத் தர வேண்டும், மற்றவர்களுக்குத் தரக்கூடாது என்று தடை விதிக்க முடியாது. ஏற்கெனவே ஹைகோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அத்தகைய நிலைமையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் எடுத்துச் சொன்னது மாதிரி, ஒரு முறையை வகுத்து ஒவ்வொரு துறைக்கும் ஒரே அமைப்பு இருந்து, அதன் மூலமாக வரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுகிற சூழ்நிலை இருந்தால், 'ரெப்ரசென்டேஷன்'

கொடுக்கலாம். இல்லாவிட்டால் 'ரெப்ரசன்டேஷன்' கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக இன்னும் 40 அமைப்புகள் ஏற்பட்டாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே, ஒழுங்குபடுத்துகிற முறையில் நாம் இவைகளை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** நம்முடைய நாட்டுக்கு நல்ல நெறியான தொண்டு செய்து வரக்கூடிய ஆசிரியர்கள் இடையிலே இப்படிப் பல்வேறு சங்கங்கள் அமைவதும், அவைகளுக்குள்ளே யார் பெரிய சங்கம், யார் சலுகை பெற்றுத் தருகிறார்கள் என்று போட்டாபோட்டிகள் ஏற்பட்டு, ஆசிரியர் சமுதாயத்திலே பெயரையும், செல்வாக்கையும் வைத்து உள்ளே நுழைவதைப் பார்த்தால், இந்தச் சங்கங்களை அங்கீகரிப்பதற்குப் பதிலாக மாவட்ட அளவில், மாநில அளவில் ஒரு சட்டபூர்வமான உத்திரவாதம் கொடுக்கக்கூடிய அமைப்பு ஒன்றினை அமைத்து அதன் மூலம் இந்த ஆசிரியர்களுடைய உத்தியோகத்திற்கும், மற்றவைகளுக்கும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டு இந்தச் சங்கங்களே இல்லாமல் செய்வதற்குரிய எண்ணத்தை அரசு செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்தக் கருத்து பரிசீலிக்கப்படலாம்.

*Liberalised Pension Scheme to the Aided College Teachers*

• 190 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Senate and the Syndicate of the Madurai University have requested the Government to extend the benefits of the Liberalised Pension Scheme to the Aided College teachers as well; and

(b) if so, the action taken thereon?



**மானியம் பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு தாராள ஓய்வூதியத் திட்டம்.**

**திரு. டி. சந்தோஷம்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தாராள ஓய்வூதியத் திட்டத்தை மானியம் பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்குமாறு மதுரைப் பல்கலைக் கழகத்தின் பேரவையும் ஆட்சிக் குழுவும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுத்த நடவடிக்கை யாது?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (a) Yes.

(b) The question of extending the liberalised pension scheme to the aided College teachers is under the consideration of the Government.

THIRU D. SANTOSHAM: Sir, at present the pension received by a College Professor who has served for more than 30 years and retired as Vice-Principal of a leading College in South India is only Rs. 75 per month which is hardly sufficient even to pay the house rent. Will the Government expedite the consideration of this matter and expand the Liberalised Pension Scheme to the Aided College Teachers also?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இது அரசாங்கத்ினுடைய பரிசிலனையில் இருக்கிறது. முதலில் டீச்சிங் ஸ்டாப், ஆசிரியர்களைப் பற்றி முடிவு எடுத்ததற்குப் பிறகு நான்-டீச்சிங் ஸ்டாப் பற்றி யோசிக்க வேண்டியிருக்கும்.

*Nadaswaram Training School attached to the Central College of Karnatak Music*

• 191 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of persons who have successfully completed training in the Nadaswaram Training Schools attached to the Central College of Karnatak Music during the last three years?

[1973 மார்ச் 6

**சென்னை மத்திய கர்நாடக இசைக் கல்லூரி நாயனப் பள்ளி**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மத்திய கர்நாடக இசைக் கல்லூரி நாயனப் பள்ளியில் கடந்த மூன்று ஆண்டுகளில் பயிற்சி பெற்று வெளியேறியோர் எண்ணிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சென்னை மத்திய கர்நாடக இசைக் கல்லூரியில் நாயன வகுப்பில் படித்து வெளியேறியவர் எண்ணிக்கை ஆறு.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, இந்த கர்நாடக இசைக் கல்லூரியில் நாயனப் பயிற்சிக்காக வந்து பயிற்சி பெறுகிறவர்கள், பயிற்சி முடிந்ததற்குப் பின் தான் பயிற்சி பெற்றதனுடைய ஒரு அனுகூலத்தை வைத்துக்கொண்டு அந்த தொழிலில் அவர்கள் ஈடுபாடு கொண்டிருக்கிறார்களா என்பதை அரசு பரிசீலனை செய்திருக்கிறதா, கேட்டறிந்திருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மூன்றாண்டுக்கு ஒரு முறை ஒரு செட்டைத் தேர்ந்தெடுக்கிறார்கள். 1968-69-ல் 11 பேர் அனுமதிக்கப்பட்டார்கள். அதில் இடையிலே 5 பேர் நின்று விட்டார்கள். 6 பேர்தான் கடைசி வரையில் வந்தார்கள். 1970-71-ல் மே மாதத்தில் தேர்விலே இரண்டு பேர் வெற்றி பெற்றார்கள். அதிலே தேர்ச்சி பெற்றவர்கள் அந்தத் தொழில் நடத்துகிற அளவிற்கு இருக்கிறார்கள். ஏற்கெனவே 30 ரூபாய் மாதத்திற்கு ஊதியம், ஸ்டைபண்டு கொடுத்து வந்தது, இப்போது 60 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 60 ரூபாயாக உயர்த்திக் கொடுத்ததற்குப் பிறகு 8 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** வினா 192 ஒத்திப் போடப்படுகின்றது.



1973 மார்ச் 6]

*Development of Parambu Hills as a Tourist Resort*

* 193 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether there is any proposal with the Government to develop Parambu Hills, where Pari lived once, as a tourist resort?

**பறம்பு மலையைச் சுற்றுலா இடமாக அபிவிருத்தி செய்தல்.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

பாரி வாழ்ந்த பறம்பு மலையைச் சுற்றுலா இடமாக அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இல்லை.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** நம்முடைய அமைச்சரவர்கள் தன்னுடைய உரையிலே பறம்பு மலையைப் பார்வையிட்டதாகச் சொன்னார்கள் அதை அபிவிருத்தி செய்து சுற்றுலா கேந்திரமாக்குவார்கள் என்று அந்த இடத்து மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சரவர்கள் இல்லையென்று சொல்லவில்லை. அதை நடப்பு ஆண்டுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சமீபத்திலே நான் பறம்பு மலைக்குப் போயிருந்தது உண்மை. பறம்பு மலையைச் சுற்றுலா இடமாக மாற்றுவதற்கான வசதிகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. தற்போது தான் சுற்றுலா வாரியம் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த இடத்தை சுற்றுலா இடமாக்கலாம் என்ற ஆய்விலே ஈடுபட்டிருக்கிறது. ஆய்வு அறிக்கை வந்த பிறகு, இந்தப் பறம்புமலைப் பிரச்சினையை அரசு கவனிக்கும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** சாதாரணமாக கேள்வி கேட்கப்படுகிறபோது அமைச்சர்கள் உண்டு, இல்லை என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்கிறார்கள். அப்புறம் திருப்பிக் கேட்ட பிறகுதான் அதற்குக் கூடுமான வரையிலும் விவரமான பதில்கள் சொல்லப்படுகின்றன. அந்த முறையை எதற்காக வைத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 6

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கேள்வி "பாரி வாழ்ந்த பறம்பு மலையைச் சுற்றுலா இடமாக அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசுக்கு இருக்கிறதா" என்பது. தற்போது இல்லை. ஆகவே 'இல்லை' என்று பதில் வருகிறது. வேறு ஒன்றுமில்லை இந்த நடைமுறைதான் இப்போது இருந்து வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இல்லை என்றால், அமைச்சர் அவர்கள் கூறிய பிறகு அதை ஒப்புக்கொண்டு நாம் உப கேள்வி கேட்காமல் இருந்தால் அமைச்சரவர்களிடத்திலே உள்ள விவரங்கள் கூடத் தெரிய முடியாத நிலைமை ஏற்படும். எல்லா அமைச்சர்களுமே அப்படியேதான் பதில் சொல்கிறார்கள். இம்முறை எதற்காக என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அமைச்சர்கள் இந்த அவையில் அந்தந்த இலாகாவில் உள்ளவர்களால் ஏற்கெனவே எழுதி வைக்கப்பட்டுள்ள குறிப்பில் உள்ள செய்தியின்படி தரவேண்டிய பதிலை முதலில் தந்துவிடுகிறார்கள். அமைச்சர்கள் தங்களுடைய அனுபவத்திலிருந்து எதிர்காலத்தில் என்ன செய்ய முடியுமென்பதையும் சேர்த்து அத்தகைய கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறார்கள்.

## *Car Accidents during* 1970

* 194 *Q*.—Thiru R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of car accidents that occurred in Tamil Nadu during 1970;

(*b*) the percentage of deceased and wounded in those accidents;

(*c*) of these the category-wise data regarding accidents in which car, bus and lorry were involved respectively;

(*d*) the number dead and the number injured in the accidents in which car, bus and lorry were involved respectively, and the percentage thereof; and

(*e*) the reasons for the accidents and the percentage thereof?



1973 மார்ச் 6]

## 1970 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கார் விபத்துக்கள்

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட கார் விபத்துக்கள் எத்தனை?

(இ) மொத்தம் ஏற்பட்ட விபத்துக்களில் மரணமடைந்தோர் காயமுற்றோரின் சதவிகிதம் என்ன?

(உ) இவற்றில் கார், பஸ், லாரி இவைகளால் நேர்ந்த தனித்தனி விபத்துக்கள் எத்தனை?

(எ) கார், பஸ், லாரி இவற்றால் தனித்தனியாக ஏற்பட்ட விபத்துக்களில் தனித்தனியாக மரணமுற்றோர் காயமுற்றோர் தொகையும் சதவிகிதமும் என்ன?

(ஐ) விபத்துக்களுக்குக் காரணங்கள் எவை எவை? அவற்றின் விகிதாசாரமென்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** விவர அறிக்கை@ ஒன்று சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, 1970-ம் ஆண்டில் இந்த லாரிகள், பேருந்துகள், மோட்டார்கள், இவைகளினால் ஏற்பட்டுள்ள விபத்துக்கள் 12,486 என்று அமைச்சர் அவர்களுடைய இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் 1,750 பேர் இறந்து விட்டார்கள், 10,000 பேர் காயமுற்றார்கள் என்று இதில் ஏற்படுகிறது. இந்த நிலையிலே இந்த விபத்துக்களை அதற்கு முந்தைய, பிந்திய ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த ஆண்டில் அதிகமாக இருக்கிறதா, குறைவாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, முந்தைய ஆண்டுகளுடைய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் 1971-ல் 18,690; 1972-ல் 10,050. ஆகவே 1970-ஐப் பொறுத்த வரையிலே, குறைந்து தான் இருக்கிறது.

---

@ 272 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, பெருந்துகளினால் ஏற்பட்ட விபத்துக்களிலே மரணமடைந்தார்கள் என்று பொதுவாக இருக்கின்றது. இதில் அரசுப் பெருந்துகளினால் எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டன, அரசு அல்லாத தனியார் பெருந்துகளினால் எவ்வளவு விபத்துக்கள் ஏற்பட்டன, எதனால் எத்தனை மக்கள் மரணமடைந்தனர் என்று பிரித்துச் சொல்ல இயலுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, விபத்துக்கள் யாரால் ஏற்பட்டன என்பது முக்கியமல்ல. எப்படி ஏற்பட்டன என்பதுபற்றித் தான் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்ட விவரம் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், இந்த விபத்துக்களைப் பொறுத்த வரையிலே, நம்முடைய நாட்டில் இந்த அளவுக்கு இருப்பதைக் குறைக்க வேண்டுமென்ற வகையில் அனைத்து அதிகாரிகளையும் கொண்டு ஒரு ஆலோசனையை நேரிலே நானே நடத்தினேன். அதிலே கிட்டத்தட்ட ஒரு பன்னிரெண்டு முடிவுகள் எடுத்திருக்கிறோம். அதன்படி டிரைவர்களினால் 50 சதவிகித விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் டிரைவிங் ஸ்கூல் நாமே ஆரம்பிப்பது, இந்த ஐ.டி.ஐ. பள்ளிக்கூடங்களிலே அந்த டிரைவிங் சொல்லிக் கொடுப்பதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது போல டிரைவிங் லைசென்ஸ் வழங்கும்போதும், அல்லது புதுப்பிக்கின்ற போதும், அவர்களுக்கு பார்வைக்கான டெஸ்ட், மற்ற டெஸ்டுகளையெல்லாம் மிகவும் தீவிரப்படுத்துவதும், அதே போல பாயின்ட் சிஸ்டம் போன்ற பல வகையான காரியங்களெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வேண்டுமானால், அதுபற்றிய ஒரு விவர அறிக்கையைச் சட்டமன்றத்திலே வைக்க முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்திய நாட்டில் தமிழகத்தில் தான் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற குறிப்பை நான் சில நாளைக்கு முன்பு படித்ததாக ஞாபகம். நம்முடைய மாநிலத்தில் அதிக விபத்துக்கள் உண்மையிலே ஏற்பட்டிருக்கின்றனவா? அப்படியென்றால், அதற்குள்ள காரணங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, விபத்துக்கள் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், நம் தமிழ் நாட்டிலே அதிகமில்லை. மராட்டிய மாநிலத்தில் அதிகமாக



இருக்கிறது. ஆனால் ஏற்படுகின்ற விபத்துக்களிலே இறக்கின்றவர்களுடைய தொகை தமிழ் நாட்டிலே அதிகமாக இருக்கிறது என்ற கருத்து நிலவுகிறது. அந்தப் பெருமையைக் கூட இப்போது டெல்லி தட்டிப் பறித்துக்கொண்டு போய் விடும் என்ற நிலை தான் இருக்கிறது. இருந்தாலும் அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்கின்ற வகையிலே அரசாங்கம் யோசித்து வருகிறது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, பெரும்பாலான விபத்துக்கள் டிரைவர்கள் மது அருந்துவதால் ஏற்படுகின்றன என்ற அபிப்பிராயம் நிலவி வருகிறது. அது அப்படியிருந்தால், அதை ஆலோசித்து மது அருந்துபவர்களுக்கு கார் ஓட்டும் லைசென்ஸ் வழங்குவதைக் கட்டுப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அதைத்தான் நான் முன்னமேயே சொன்னேன். டிரைவர்களைப் பொறுத்த வரையில், டிரைவிங் பள்ளிகள், டிரைவிங் லைசென்ஸ் வழங்குவதில் தீவிரமுறை, பாயின்ட் சிஸ்டம், தவறுகள் செய்தால் புள்ளிகள் போட்டு அவர்கள் லைசென்சை நாளா வட்டத்தில் ரத்து செய்வது, லாரிகளில் மஞ்சள் நிறம் பூசுவது, ஹெல்மெட் அணிவது, போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தல், பிறகு தகுதிச் சான்று, பிட்னஸ் சர்டிபிகேட்டைப் பொறுத்த வரையில் அதற்கென்று ஒரு தனி பாரம் ஏற்படுத்தல், நின்று பிரயாணம் செய்கின்றவர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்தல், வண்டிகள் நிறுத்தப்படும் இடம், அதே போல சாலைப் பாதுகாப்பு. வைஹவேஸ் கோடு ஏற்படுத்தல். இதை பொது மக்களிடத்தில் எடுத்துச்சொல்வதற்காக சினிமாப் படங்கள், விளம்பரங்கள் இவைகளை அதிகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.

**திரு. டி. சந்தோஷம் :** இப்போது லாரிகளில் பிரயாணம் செய்யக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் அரசியல் மாநாடுகள் நடக்கும்போது, எந்தக் கட்சி நடத்தினாலும் சரி, எல்லா லாரிகளிலும் 100, 200 பேர் ஏறிக்கொண்டுபோய், அந்த நிலையில் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதைத் தடுக்க மாட்டேன் என்கிறார்கள். காவல்துறை பார்த்துக்கொண்டு

சும்மா இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா அல்லது ஏன் அந்தக் காவல் துறையினர் தடுத்து நிறுத்த மாட்டேன் என்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பொதுவாக குறிப்பிட்ட சில நாளிலே தான் அத்தகைய அரசியல் கட்சிகளோ அல்லது இவ்வாறு அமைப்புகளோ மாநாடுகள் நடத்துகின்றன. அதற்காக அவர்கள் லாரிகளில் ஏறிச் செல்லுகிறார்கள். ஏதோ ஒன்றிரண்டு இடத்தில் தான் அத்தகைய விபத்துக்கள் நடந்திருக்கின்றனவே தவிர வேறல்ல. ஆனால் இந்த விபத்துக்களைப் பொறுத்த வரையில், இவைகளெல்லாம் சாதாரணமாக சாலைகளிலே நடக்கின்ற ஒரு நிலைமை. அதுவும் தமிழ் நாட்டிலே சாலைகளின் நீளம் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலும், வண்டிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் ஒரு அளவுக்கு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையிலே, இந்த லாரிகளில் பொதுவாக மக்களை ஏற்றிச்செல்வது அவ்வளவு உசிதமானதல்ல என்ற கருத்து நிலவினாலும், அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் கைகொடுக்கவும் வேண்டியிருக்கிறது. ஒத்துழைப்பும் தர வேண்டியிருக்கிறது.

**திரு. [illegible] அம்பலம்:** தலைவர்களே, அமைச்சர்கள் கார் ஓட்டுபவர்கள் மது அருந்துவதால் அதிகமாக விபத்துக்கள் நடப்பதாகச் சொன்னார்கள். பாதசாரிகள் மது அருந்துவதாலே அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதை அரசாங்கம் அறியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அரசாங்கம் அறியும்.

**திரு. [illegible]:** தலைவர்களே, லாரி ஓட்டுநர்கள் [illegible] டிரைவிங் ஸ்கூலில் சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் பார்த்தவரையில் அவர்கள் எந்த முறையிலும் பயிற்சி கொடுப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அதற்கு சர்டிபிகேட் பணம் கொடுத்து வாங்குகிறார்கள். அந்த சர்டிபிகேட் வாங்கக் கூடிய நிலைமையை மாற்றுவதற்கு அரசு வேறு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இப்போது பொதுவாகவே ஹெவி வெஹிகிள்ஸ் டிரைவிங் லைசென்சிற்கு எந்த விதமான முறையான வகுப்பு கிடையாது. அவர்கள் இப்படியெல்லாம் கண்டபடி ஈடுபடுகிறார்கள் என்ற புகார் ஏற்கெனவே அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆகையினால் தான் முறைப்படி டிரைவிங் ஸ்கூல் நாமே ஆரம்பிப்பது, இல்லையென்றால் ஐ.டி.ஐ.-யில் பயிற்சி கொடுப்பது ஓரளவுக்கு நல்ல பயனை அளிக்கும் என்ற முறையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

**திரு. சா. கணேசன்:** விபத்துக்களுக்குக் காரணம் குறிப்பிடுகின்றபோது டிரைவர்களுடைய தவறாலே 50 சதம் என்றும், பாதசாரிகள் தவறாலே 25 சதம் என்றும், இயந்திரக் கோளாறு காரணமாக 25 சதம் என்றும் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஓட்டுனர்களின் தவறை நீக்குவதற்கு அவர்களுக்கு பயிற்சிப் பள்ளிகளிலே வைத்து சில முறைகள் கற்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாதசாரி தவறுகளை நீக்குவதற்கு என்ன பயிற்சி கொடுக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். பாதசாரிகள் அதிகமாகக் கஷ்டப்படுவதற்குக் காரணம் அவர்கள் பெரும்பாலும் ரோடுகளிலேயோ பெரும் தெருக்களிலோ நடப்பது தான். ஏன் அவர்கள் பெரும் தெருவிலே நடக்கிறார்கள் என்றால், தெருவோரங்கள் ஓரமெல்லாம் மனிதர்கள் நடக்கக் கூடிய பாதை அவ்வளவு கேவலமாக இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமலிருக்க வேண்டுமானால், அவர்கள் நடமாடுகின்ற அந்த ஓரங்களை, ரோட்டை விட அகலமாகவும், அழகாகவும், செம்மையாகவும் வைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

பி.ப. 4-40

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர்களே, நான் கொஞ்சம் வேகமாகப் பார்க்கேன். பொது மக்களுக்கும் இவை பற்றியெல்லாம் விளக்க வேண்டும் என்கிற வகையிலே தான் சிறுவர்களுக்குப் பள்ளிகளிலே பயிற்சி கொடுக்கிற வகையிலே அதைச் சினிமாப்படம் போன்றவற்றின் மூலம் விளக்கலாம் என்று யோசனை செய்து அதற்கான ஏற்பாடு செய்து வருகிறது. பொதுவாக பாதசாரிகளாலே 25 சதவிகிதம் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது அவர்கள் பாதைகள் மீது நடக்...

போவதாலும், அதே போல ரோடுகளின் குறுக்கே அவர்கள் ரோடுகளைக் கடந்து போக முற்படுவதாலும் தான். நடைபாதைகளைப் பொறுத்தவரையில், அவை மோசமாகத்தான் இருக்கின்றன என்பதை அறிவோம். மாநகராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் எவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டாலும் கூட, அங்கேதான் திடீர் கோயில்களிலிருந்து திடீர் கடைகள் வரை வந்துவிடுகின்றன. இருந்தாலும் படிப்படியாக எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு நடைபாதைகள் நடந்து செல்லும் வகையிலே வசதியாக இருப்பதற்கு அரசாங்கம் • நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, இயந்திரக் கோளாறுகளின் காரணமாக 25 சதவிகிதம் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தெரிகிறது. இம்மாதிரி இயந்திரக் கோளாறு மட்டுமல்ல, சிக்னல் முதலிய கோளாறுகளின் காரணமாகவும், போலீசார் இருக்கும் போது 'டேன்ஜர் லைட்' இல்லாமல் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செல்வதற்கு அனுமதித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கப் பேருந்துகள் சம்பந்தப்பட்ட மட்டிலே தான் இயந்திரக் கோளாறுகள் அதிகமாக ஏற்படுகின்றன என்பது பரிகாசமாகக் கூட பொதுமக்களால் பேசப்பட்டு வருகிறது. ஆகையினாலே இந்த இயந்திரக் கோளாறு ஏற்படாமல் பாதுகாப்பதற்கு அரசு ஏதேனும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இயந்திரக் கோளாறுகளைப் பொறுத்த வரையிலே, இயந்திரங்கள் அரசாங்கத்திற்கு மட்டும் சொந்தம் அல்ல. தனியாரிடத்திலும் இருக்கின்றன. தனியாரிடத்திலே இருக்கின்ற பஸ்ஸிலும் அவற்றைச் சரிபார்க்கின்ற வாய்ப்பு இப்போது வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடத்திலே இருப்பதால், அங்கே அவற்றைச் சரிபார்க்க பிரேக் இன்ஸ்பெக்டரோ மற்ற அதிகாரிகளோ ஓட்டிப் பார்க்கிற நிலையிலேதான் இருக்கிறதே தவிர பெரிய வொர்க்ஷாப் மூலம் அவைகளைச் சோதனைகள் செய்வதற்கு வசதியில்லை. மேல் நாடுகளிலே 'பிட்னஸ் சர்டிபிகேட்' கொடுக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் அங்கங்கே



'பிட்னஸ் சர்டிபிகேட்' தருகின்ற அளவுக்கு பணிமனைகள் அமைக்குமானால், மேலும் இதைத் தீவிரப்படுத்த இயலும்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### பட்டதாரி ஆசிரியர்களின் கிளர்ச்சி குறித்து.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கிழ்க்கண்ட திட்டவட்டமான பொருள் குறித்து விவாதிப்பதற்கென, மேலவையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோரும் பிரேரணை ஒன்றை திரு. வ. ஈஸ்வரமூர்த்தி, எம்.எல்.சி., அவர்கள் தந்துள்ளார்கள் :—

" the ag tation of the Graduate teachers before the Secretar at on their six-point demands and the consequent distress caused to them ".

திரு. செ. முத்துசாமி, எம்.எல்.சி., அவர்கள் கீழ்க்கண்ட திட்டவட்டமான பொருள் குறித்து விவாதிப்பதற்கென ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றைத் தந்துள்ளார்கள் :—

" சென்னை நகரில் 6—3—1973 காலை 11 மணியளவில் 600-க்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தங்களின் கோரிக்கைகளைக் கேட்க தலைமைச் செயலகம் நோக்கி வந்தபோது அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் தமிழ் நாட்டில் உள்ள கல்வியமைப்புகளில் அமைதியற்ற பதட்ட நிலை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது குறித்து "

திரு. கே. எஸ். கணபதி, எம்.எல்.சி., அவர்கள் கீழ்க்கண்ட திட்டவட்டமான பொருள் குறித்து விவாதிப்பதற்கென ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றைத் தந்துள்ளார்கள் :—

" A few hundreds of graduate teachers were taken into police custody when they were proceeding to the Secretariat in Madras. This has caused restlessness in the minds of the public."

[மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்] [1973 மார்ச் 6

இவைகள் எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் என்றும், அவைகளின் கீழ் எவ்வாறு வரும் என்றும் விளக்குமாறு உறுப்பினர்களைக் கோருகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இன்று காலையிலே ஏற்பட்டிருக்கக் கூடிய நிகழ்ச்சி மிக வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு சென்ற ஆண்டிலே மார்ச் 6-ஆம் நாள் ஒரு உண்ணாவிரதம் நடத்தினார்கள். அதன் பிறகு முதலமைச்சரவர்கள் ஆசிரியப் பிரதிநிதிகளோடு பேசி சில உறுதிமொழிகளைத் தந்தார்கள். அந்த உறுதிமொழிகள் இன்றைக்கு ம் அம்சக் கோரிக்கைகளாக இருக்கின்றன. நான் அன்றைக்கு இருந்த காரணத்தால் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் அதைத் தெளிவுபடுத்தி முதலமைச்சரவர்கள் பெரிய பொறுப்பிலே இருக்கக் கூடியவர்கள், அதைச் சரி செய்வார்கள், அவர்களுடைய உறுதி மொழிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையிலே அதைச் சொல்லுகிறேன். 1972 மார்ச் 7-ஆம் தேதி உட்கார்ந்து பேசிய நேரத்தில் . . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** 1972-ல் நடந்த விவகாரம் இல்லை. இந்தச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய காரணம் என்ன என்பதை மாத்திரம் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தேவையில்லை, நேரடியாகச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடுகிறேன். தலைவரவர்களே, இன்றைக்குப் பட்டதாரி ஆசிரியர்கள்—483 பேர் என்று அதிகார பூர்வமாக நான் அறியவருகிறேன்—483 பேர் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் ரிமாண்டிலே சென்ட்ரல் ஜெயிலிலே அடைக்கப் பட்டிருக்கின்றார்கள். ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காகச் சென்றவர்கள் அடைக்கப்பட்டு விட்டார்கள் என்ற நிலைமை எல்லாப் பகுதிகளுக்கும் எட்டும்போது, கல்வி ஸ்தாபனத்திலே என்ன ஆகும் என்பது நீங்கள் அத்தனை பேரும் அறிந்த ஒன்றாகும். இந்தச் செய்தி பரவி, அதனால் ஏற்படும் விளைவுகளை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகாமல் இருக்க முதல்வரவர்கள் என்ன செய்யப் போகி றார்கள் என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 6]

* **திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புவதெல்லாம்—இந்த மாமன்றத்திலே இருக்கக் கூடிய எல்லா உறுப்பினர்களும் அந்தக் கருத்தை ஏற்பார்களென்று நினைக்கிறேன்—இந்த மாநிலத்திலே உள்ள பள்ளிகளிலே பயிலக் கூடிய மாணவர்கள் அனைவருடைய கல்வியும் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும்; கல்வி நிலையங்களிலே அமைதி நிலவ வேண்டுமென்ற ஒரு பெரிய பொறுப்பினை மனதில் கொண்டு நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நான் சில மாதங்களுக்கு முன்பேயே இப்படி ஒரு சூழ்நிலை வருமென்று சொன்னபோது, என்ன காரணத்தாலோ அதற்குரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. அதன் காரணமாக இப்போது இரண்டு நாட்களாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களும், ஆசிரியப் பிரதிநிதிகளோடு பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அந்தப் பிரச்சினைகள் எந்தவிதமான சிக்கலும் இல்லாமல், எந்த விதமான உள்நோக்கங்களும் தெரிவிக்கப்படாமல், சுமுகமாகத் தீர வேண்டும் என்ற காரணத்தால்தான், நான் இதுவரை எந்த விதமான கருத்தும் தெரிவிக்கவில்லை. இப்போது கூட என்னைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினை ஒரு பணப் பிரச்சினையாக இல்லாமல், ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் ஆசிரியர்கள் மானப் பிரச்சினையாகவும் மாறிவிட்டது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நான் மிகவும் பொறுப்போடு, அடக்கத் தோடு, பணிவோடு, இந்த அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், தயவு செய்து தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். கல்வி நிர்வாகத்திலே பல பிரச்சினைகள் இருக் கின்றன; ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக இருக் கின்றன. அவர்களுக்குச் சரியான முறையில் ஒரு ஆறுதல் சொல்லாவிட்டால், அவர்கள் அதை ஒரு பெரிய மானப் பிரச் சினையாக எடுத்துக்கொள்கிறார்கள். ஆசிரியர்கள் போராடு கிறார்களென்றால், உடனே மாணவர்களும் அதிலே இறங்கி விடுகின்றார்கள். எனவே இத்தகைய பிரச்சினைகள் இருக்கக் கூடிய காரணத்தால், அவற்றை மிக அனுதாபத்தோடு அணுக வேண்டும். அதற்குரிய ஒரு யோசனையை, என்னுடைய யோசனையை, அரசாங்கம் கேட்டால், இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். தயவு செய்து உடனடியாக

சிறையிலிருக்கும் ஆசிரியர்களை விடுதலை செய்வதே பிரச்சினைகள் தீர்வுக்கு ஒரு முதல படியாக இருக்கும். ஆகவே இதைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள் கின்றேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, முதலிலேயே என்னுடைய நிலையைத் தெளிவுபடுத்திச் சொல்ல விரும்புகிறேன்.
பி. ப. 4–00 பட்டதாரி ஆசிரியர்கள் அமைதியான முறையில் தங்களுடைய கோரிக்கைகளைத் தெரிவிக்க வரும்போது, அவர்கள் கைது செய்யப் பட்டார்கள். இதனால், தங்களுடைய ஆசிரியர்கள் கைது செய்யப் பட்டுவிட்டார்கள் என்ற செய்தி தெரிந்த மாணவர்கள் ஆங்காங்கே சில கிளர்ச்சிகளைச் செய்வதாக நான் அறிகிறேன். அது போன்ற கிளர்ச்சிகளைத் தடுக்க, ஆசிரியர்களைக் கைது செய்யாமல், வேறு முறையில் சமாதானப்படுத்தி, தீர்வு காண அரசு முயற்சித்திருக்க வேண்டும் என்று கூறி, இந்த விஷயத்தில் மற்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கும் வகையில் இந்த சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் காலையில் கைதானது பற்றிக் கொண்டுவந்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன் வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப் பினர்களில் திரு. கணபதியைத் தவிர மற்ற இரண்டு உறுப்பினர் களும் காலையிலே அந்த ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தவர்கள் என்ற முறையில் அதிலே அதிக உரிமையோடு பேசக் கூடியவர்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் முதலிலேயே ஒன்றைச் சொன்னார்கள். ஆசிரியர்கள் கோரிக்கைகளை அமைச்சர்களிடம் தெரிவிப்பதற்காகக் கோட்டையை நோக்கி வந்தார்களென்றும், அப்படி கோரிக்கை வைப்பதற்கு வந்தவர்களைக் கைது செய்து விட்டார்களென்றும் குறிப்பிட்டார்கள். அதையேதான் திரு. கணபதி அவர்களும் சொன்னார்கள். இதிலே பெரிய முரண் பாடு இருக்கிறதென்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று காலையில் வந்த பத்திரிகைகளில்கூட முதலமைச்சருடன் நடத்திய பேச்சு வார்த்தை பலன் தராததால், கோட்டை முன் மறியல் போராட்டம் இன்று திட்டமிட்டபடி நடக்கும் என்று ஆசிரியர்கள் கொடுத்த அறிவிப்பு பத்திரிகையில் வந்திருக்கிறது.





ஆகவே அவர்கள் கோரிக்கைகளைக் கொடுப்பதற்காக வரவில்லை, மறியல் செய்வதற்கு வந்தார்கள் என்பது அவர்களுடைய அறிக்கை யிலிருந்து தெரிகிறது. ஏற்கெனவே அவர்கள் இது போல பல அறிவிப்புகளை வழங்கியிருக்கிறார்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடித்து வழங்கியிருக்கிறார்கள். அவர்களே அதில

'So, we have decided to go on direct action of picketing before the Fort'

என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சடித்துக் கொடுத் திருக்கிறார்கள். அவர்கள் வந்த நோக்கம் மறியல் செய்வதுதான்.

இரண்டாவது, கோட்டையைச் சுற்றி அவை நடைபெறுகின்ற நேரங்களிலேயெல்லாம் தடை உத்தரவு போடப்பட்டு வருகிறது. அந்தத் தடையை மீறி அவர்கள் வந்திருக்கிறார்கள். தடையை மீறிச் செல்லக்கூடாதென்று காவல் துறையினர் எச்சரித்தும், அதையும் மீறி அவர்கள் வந்திருக்கின்றார்கள். ஆகவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டப்படியான நடவடிக்கைகள் அவர்கள் மீது எடுக்கப்பட்டு வருகின்றன.

இதிலே நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் மிக முக்கியமான இரண்டு அறிவிப்புகளைத் தந்ததை இந்த மன்றத்திலிருக்கும் யாரும் மறந்துவிட முடியாது. அவர்களுடைய கோரிக்கை, சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லாமலேயே அவர்கள் வேலை வரைமுறைப் படுத்தப்பட வேண்டும். இது 'பி' பிரிவில் உள்ள பி.டி. ஆசிரியர்களுடைய கோரிக்கையாகும். ஆனால் அவர்கள் அந்தப் பணிக்கு வருகிற நேரத்தில் எந்த விதிக்குட்பட்டு பணிக்கு வந்தார்களென்பதை மறந்துவிடக் கூடாது. அதற்காக அச்சடிக்கப்பட்டு ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட பாரத்தில், அந்த உறுதி மொழியை ஏற்றுக்கொண்டுதான் அவர்கள் தங்கள் வேலைக்கு வந்தார்கள். 1—4—1970-லிருந்து 1972 வரையில் இந்தப் பணிக்குச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியப் பெருமக்கள் இட்டத்தட்ட 3,000 பேர். அவர்கள் இந்த உறுதிமொழியை அளித்துவிட்டு வந்துள்ளவர்கள். அந்த உறுதிமொழியானது :—

"The candidate is informed that if he or she does not qualify himself or herself for regular appointment to the post to which he or she has been appointed temporarily by appearing for regular recruitment by the Tamil Nadu Public Service Commission, he is likely to be ousted as and when candidates selected by regular recruitment are available or at any time without notice or without any reasons being assigned therefor."

அவர்கள் இதிலே கையெழுத்திட்ட பிறகு, உடனடியாக அந்தப் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் எந்த உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, எந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டு அந்தப் பணியில் அமர்ந்தார்களோ, அந்த அடிப்படையை மாற்ற வேண்டும், அனைவருடைய வேலையையும் வரைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வைத்தார்கள். அதை ஆராய்ந்துதான் சொல்ல வேண்டுமென்று நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இந்த அவையில் எடுத்துச் சொன்னோம். இந்த அவையில் ஆசிரியர்களுக்காக வாதாடுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், "நீங்கள் எப்படியாவது அதைச் செய்து கொடுத்து விடுங்கள், அதுவே மிகப் பெரிய பிரச்சனை, அதைச் செய்யாமல் இந்தப் போராட்டம் நடக்காது" என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக அதை ஆராய்வதாகக் குறிப்பிட்டு, மறுநாள் சட்டத்துறையினரைக் கலந்து கொண்டு இந்த அவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். 'பி' பிரிவு பள்ளிகளிலே தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த ஆசிரியர்களுடைய சேவையை வரைமுறைப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது என்று கல்வி அமைச்சருடைய அறிக்கை அறிவித்தது. அது மட்டுமல்ல, பத்து ஆண்டுக்காலம் பணியாற்றிய பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள், முதல் நிலை ஆசிரியர்கள் அனைவருக்குமே தேர்வு நிலைப் பதவி வழங்கப்படும் என்பதனையும் இந்த அவையில் கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டதை வரவேற்று திரு. ராஜா அய்யர், திரு. சுவாமிநாதன், திரு. சந்தோஷம் அவர்களும் நன்றி கூறினார்கள். திரு. கணபதி அவர்கள் அதை வரவேற்று பத்திரிகையில் அறிக்கை ஒன்றையும் கொடுத்திருந்தார். இவ்வளவுக்கும் பிறகு, பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுடைய கிளர்ச்சியைக் கைவிட்டு விடுவார்கள் என்று தான் நானும் அவர்களும், இந்த மன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும், பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளும், எதிர்பார்த்தோம். 5-ஆம் தேதி காலையில் பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள், மேலவை உறுப்பினர்கள் திரு. ராஜா அய்யர், திரு. கணபதி, திரு. சந்தோஷம், திரு. சுவாமிநாதன் எல்லோரும் என்னையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் சந்தித்து ஒரு மணி நேரம் பேசி, அந்த ஆணைகள்



பற்றிய விளக்கங்கள் சிலவற்றை நாங்கள் அளிக்க, அவர்கள் அந்த சந்தேகங்களைக் கேட்டு, தெளிவு பெற்றார்கள். எங்களை அன்று சந்திக்க வராத இரண்டு சங்க உறுப்பினர்களையும் கலந்து கொண்டு கிளர்ச்சியை நிறுத்தி வைப்பது பற்றி அறிவிப்பதாகக் கூறிச் சென்றார்கள். அப்படிக் கூறிச் சென்றபோது, இந்த மேலவையில் உள்ள உறுப்பினர்களும் அங்கே இருந்தார்கள். ஒரு சம்பிரதாயத்துக்குத்தான் அவர்களிடம் சொல்லிக் கொள்ளப் போகிறார்கள். ஆகவே கிளர்ச்சியைக் கைவிட்டு விட்டார்கள் என்று ஜாடை தெரிவித்துவிட்டுத்தான் சென்றார்கள். அதைத்தான் நேற்று பேரவையில் கூட அறிவித்தேன். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை என்று அவர்கள் இன்றைய தினம் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். அதை நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை. இன்று காலை அவர்கள் கோட்டையை நோக்கி, ஊர்வலமாகக் கிளர்ச்சி செய்ய வந்து, காவலர்கள் தடுத்தும் கேளாமல் தடையை மீறி வந்த பிறகு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 480 என்பதும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. 11-ஆவது விதியின் கீழ் தடை உத்தரவை மீறியதால் அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதோ கோரிக்கை வைப்பதற்கு, அல்லது முதலமைச்சரையும், கல்வி அமைச்சரையும் சந்திப்பதற்கு வந்ததாகவும் ஏதோ நாங்கள் அழைத்துப் பேசாமலிருப்பது போலவும் நாட்டில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அவர்கள் விடுத்துள்ள ஒரு அறிக்கையைப் பார்த்தால் விளங்கும்.

"The Chief Min.ster, the Education Minister, the Education Secretary and the Director of School Education held talks with us many times."

என்று அவர்களே அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பல முறை அழைத்துப் பேசியிருக்கிறோம். இறுதியாக நேற்றுக் காலை அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறோம். மேலவை உறுப்பினர்கள், முக்கியமான உறுப்பினர்களை வைத்துக்கொண்டு பேசியிருக்கிறோம். எந்த அளவுக்கு ஆசிரியர்களிடம் அவர்கள் போராட்ட உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்பதை தமிழில் விடப்பட்டுள்ள ஒரு அறிக்கை எடுத்துக் காட்டும். அது இப்பொழுது வந்ததல்ல. முன்பே, கோரிக்கைகளையெல்லாம் வைத்த அதே நேரத்தில் எல்லா ஆசிரிய நண்பர்களுக்கும்

அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் குழு, கோடவாசல, பழனிச்சாமி—தலைவர்; முத்துசாமி—செயலாளர் என்று கையெழுத்திட்ட, அதிலே "தானை தளபதிகளே தங்க மலர் சிங்கங்களே, போர் முரசு ஒலித்து விட்டது" என்று ஆரம்பித்து "தளபதிகள் உத்தரவுக்குக் காத்திருப்போம், நாம் தினம், தினம் சிறை செல்லத் தயாராகவிருப்போம், நாம் செந்நீரும் வெந்நீரும் சிந்துவதில் பெருமை கொள்வோம்" என்று இருக்கிறது. நான் தமிழில் அவ்வளவு புலவனல்ல. நம்முடைய திரு. சா. கணேசன் போன்றவர்களுக்குத் தெரியும், வெந்நீரை எப்படிச் சிந்துவது என்று எனக்குத் தெரியவில்லை. செந்நீரும், வெந்நீரும் சிந்துவதில் பெருமை கொள்வோம் என்று இருக்கிறது. நான் பிழைத் திருத்தம் செய்வதில் ஈடுபட விரும்பவில்லை. மாணவர்களுக்குச் சொல்லித் தர வேண்டிய பட்டதாரி ஆசிரியர்கள் இப்படிப்பட்ட தமிழைப் பயன்படுத்துகிறார்களே என்பதில் மிகுந்த கவலை கொள்பவனாக இருக்கிறேன். 'உளர்நால், இளத்நால்' என்று கூறப்படுகிறது, 'இனத்நால்' என்று தான் கருதுகிறேன். இப்படியெல்லாம் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது இதிலே பிழைத்திருத்தம் செய்வது அவசியமில்லை என்றாலும், ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். நேற்று ஆசிரியர்கள் பிரதிநிதிகளிடம் நானும் கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும் இது கௌரவப் பிரச்சினை அல்ல என்று எடுத்துச் சொன்னோம்; இங்கே உறுப்பினர்கள் இதை கௌரவப் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது, ஆசிரியர்களின் மானப் பிரச்சினை என்று சொன்னார்கள்.
பி.ப. இது சமுதாயத்தினுடைய எதிர்காலப் பிரச்சினை என்பதை
5-00 மறந்து விடக்கூடாது. ஆசிரியர்களுக்கா, அரசாங்கத்திற்கா யாருக்கு மானப் பிரச்சினை என்பதல்ல முக்கியம். அதை அவர்களிடம் சொன்னோம். நாம் இருவரும் சண்டை போட்டுக் கொள்கிற காரணத்தால் எதிர்கால சமுதாயத்தைப் படுகுழியில் தள்ளுகிற நிலைமை உருவாகிறதென்பதை அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னோம். இவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும், இந்த மேலவையிலுள்ள, பேரவையிலுள்ள உறுப்பினர்கள் மிகுந்த அக்கறையோடு இந்தக் கிளர்ச்சி நடைபெறக்கூடாதென்று பெருத்த முயற்சி எடுத்துக் கொண்ட பிறகும், முக்கியமான அவர்களுடைய இரண்டு கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டு ஆணைகள் பிறப்பித்த பின்னரும், அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்களென்றாலும், திரு. முத்துசாமி, திரு. கல்யாண



மூர்த்தி, திரு. கே. எஸ். கணபதி ஆகியோர் ஆங்காங்கு இருக்கிற ஆசிரியர்கள் கிளர்ந்து எழுவார்கள்; மாணவர்களெல்லாம் போராட்டத்தில் ஈடுபடுவார்களென்று சொன்னார்கள். இப்படிச் சொல்வதால்கூட மற்றவர்களையெல்லாம், தெரிந்தோ தெரியாமலோ, தூண்டி விடுகிற குற்றத்தை நாம் செய்து விடக்கூடும். மாணவர்களைக் கேட்டுக்கொள்வேன், ஆசிரியப் பெருமக்களைக் கேட்டுக்கொள்வேன். இப்போதே, இந்தக் கிளர்ச்சி புரிகின்றவர்களுக்கு ஆசிரியர்களுடைய ஆதரவில்லையென்பதை நன்றாக அறிவேன். மாணவர்கள் இந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவு தந்து, அவர்கள் வருங்கால வாழ்வினை வீணாக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தை மீறிய ஆசிரியர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து இலாகா அளவில் நடவடிக்கை எடுக்கப்படும். இவைகளெல்லாம் தவிர்க்க முடியாதவை என்பதை வேதனையுடனும், மிகுந்த கண்டிப்புடனும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அவையை ஒத்திவைத்து, இதை விவாதிப்பதற்கு அவசியமில்லை என்பதை, தலைவரவர்களே, தங்களுக்கு அறிவிக்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் இப்படிப்பட்ட நிலைமையை அறிந்து சொல்வதே, தூண்டிவிடுவதாக அமைந்துவிடக்கூடும் என்று சொல்லிவிட்டு, அவர்கள் தயார் நிலையில் இல்லையென்பதையும் சொன்னார்கள். நிலைமையைத் தத்ரூபமாகவும், ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளையும், மார்ச்சில் மட்டுமல்ல, 1965-லிருந்து பார்க்கிறோம். சில போராட்டங்கள் வந்து, சில சங்கடங்களை உருவாக்கும் இயற்கையான நிலை இருப்பதால், அதை அவர்கள் தூண்டிவிடுவதென்று கருதுவார்களானால், அது எப்படி முடியுமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** என்ன நிலைமைகள் ஏற்படுமென்று அவர்கள் சொல்கிறார்கள்? என்ன செய்வது? எந்த நிலைமை வந்தாலும், கேரளாவில் திரு. அச்சுதமேனன் அவர்கள் சமாளித்தது போல, அவைகளைச் சமாளிக்க இந்த அரசும் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் அடங்கிய விவாதத்தை எழுப்ப அனுமதியை மறுக்கிறேன்.

## 3. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு குறித்து

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following further programme of business of the Council has been decided :—

| | |
|---|---|
| 7—3—1973 | Reply by the Hon. the Chief Minister to the General Discussion on the Budget for 1973–74. |
| 8—3—1973 to 19—3—1973 | No meeting. |
| 20—3—1973 | Discussion on the Policy Note on Industries. |
| 21—3—1973 & 22—3—1973 | Discussion on the Policy Note on Education. |
| 23—3—1973 | Discussion on the Policy Notes on Medical and Public Health. |
| 24—3—1973 | Discussion on the Policy Notes on Food and Agriculture. |
| 25—3—1973 | Sunday—Holiday. |
| 26—3—1973 | 1. Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1972–73. 2. Discussion on the Policy Note on Religious Endowments. |
| 27—3—1973 | Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1972–73. |
| 28—3—1973 | Discussion on the Policy Note on Legislature. |
| 29—3—1973 | Consideration and passing of Appropriation Bills. |
| 30—3—1973 & 31—3—1973 | Consideration and passing of Official Bills. |

The Council will meet on 2nd April 1973, if necessary. The Council will meet from 4 p.m. to 7 p.m. daily.

THIRU S. NARAYANASWAMY : Are we meeting tomorrow?

MR. CHAIRMAN : Yes, we are meeting tomorrow.





## 4. அரசினர் தீர்மானம்

### சட்டமன்ற விதி 42 (5) நிறுத்தி வைக்கப்படுவது குறித்து

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானத்தை முன்மொழிவார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (5) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்தவரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்."

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** மன்றத்தின் முன்னுள்ள கேள்வி : " தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42-வது விதி, அதன் (5) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 5. சட்டமன்ற விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை தாலுகாவில் நில ஒப்படைப்பு குறித்து

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, in the transferred territory, i.e., the Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District, lands were given for cultivation purposes, by the erstwhile Travancore-Cochin Government under the rules for Kuthakapattom or under Kandukrishi Thanathu system or under the Kandukrishi Pattom system, as the case may be. In order to grant permanent rights to the holders of these lands, we have now decided that these lands should be assigned to them with reference to the provisions in the B.S.Os. In view of the fact that the lands under Kuthakapattom

[Thiru P. U. Shanmugam] *[1973 மார்ச் 6*

and the Kandukrishi Thanathu and Kandukrishi Pattom lands in the Transferred Territory have been under the enjoyment of the ryots for a long time under circumstances pecul'ar to this area, the Government have decided to ass'gn the lands to the present holders in partial relaxat'on of the conditions and restrictions as applicable elsewhere in the State. The follow'ng orders have accordingly been issued in G.O. Ms. No. 947, Revenue, dated 2nd March 1973 :—

### I. Lands held under Kuthakapattom

(*a*) Persons who are in possession of these lands who are eligible for assignment of Government lands, i.e. landless poor persons may be assigned these lands up to five acres of dry or three acres of wet *free of land value*. Lands in excess of these l'mits in the'r possession may be assigned to them on collection of *single market value* provided the following two conditions are satisfied :—

(i) they had effected very valuable improvements to the land; and

(ii) the lands in excess of the limits prescribed cannot be independently ass'gned to any other landless poor.

(*b*) Persons who are in possession of these lands who are normally ineligible for assignment of Government lands, i.e. persons who are not landless poor, may be assigned five acres of dry land or three acres of wet land provided they had effected very valuable improvements to the land. Such assignment will be on collection of *single market value* if their annual income from all sources is less than Rs. 12,000 and on collection of *double market value* if their annual income from all sources is Rs. 12,000 or more.

### II. Lands held under Kandukrishi Thanathu and Kandukrishi Pattom

Government have decided that these lands should be assigned *free of land value* to the holders thereof irrespective of the extent held by them and irrespective of whether or not they are normally eligible for such assignment.



*1973 மார்ச் 6]* [Thiru P. U. Shanmugam]

2. In making these ass'gnmnets, care will be taken to see that the extent of land for which patta is granted together with any other land the individual concerned may own in the State is not in excess of the ceiling under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, as amended.

3. Encroachments on Government lands will be regular'sed under the provisions of the Board's Standing Orders applicable in the State.

THIRU G. SWAMINATHAN : Sir, I rise on a point of order. Normally after quest on-hour, the call attention notice should have been taken up. Now the Hon. M n ster is making a statement under rule 82.

MR. CHAIRMAN : We will take it up.

### 6. கவன ஈர்ப்பு

#### (1) பாலிடெக்னிக் மாணவர்களின் கிளர்ச்சி குறித்து

MR. CHAIRMAN : Now the hon. Member, Thiru V. Isvarmurti will call the attention of the Hon. the Minister for Education and Local Administration.

THIRU V. ISVARMURTI : Sir, I w'sh to call the attent'on of the Hon. the Minister for Education and Local Administrat'on to a matter of urgent public importance, namely, the strike of the students of Polytechnics in th.s State for the last two weeks.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, பயிற்சிப் பள்ளிகளான பாலிடெக்னிக் மாணவர்கள் அண்மைக் காலமாகத் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி பள்ளிகளுக்குச் செல்லாமல் கிளர்ச்சி செய்துவருவதையும், அதையொட்டி விரும்பத்தகாத வன்முறைச் செயல்கள் சில நடைபெற்றதையும் இம்மாமன்றத்தினர் அறிவர். மாணவர்களின் கோரிக்கைகளில் முக்கியமானவை பற்றி அரசாங்கத்தின் நிலைமையைத் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 6

பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயின்று, டிப்ளமோ பெற்ற
மாணவர்களை, பொறியியல் பட்டம் (பி.இ.) பெறுவதற்கு முழு
நேரப் பயிற்சிக்கு வசதி செய்து தர வேண்டும் என்பது மாணவர்
களின் ஒரு கோரிக்கை. இது பல்கலைக் கழகங்களால் முடிவு
செய்யப்பட வேண்டிய பிரச்சினை. தொழிற் கல்வி இயக்குநர்
பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு இக்கோரிக்கையைப்
பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். பல்கலைக் கழகங்
களும் தங்கள் பல்வேறு நிபுணர் குழுக்களைக் கலந்தாலோசித்து,
இப்பிரச்சினையை பல கோணங்களிலிருந்தும் பரிசீலனை செய்து,
இதில் முடிவெடுக்க வேண்டும். இந்த நிலைமை மாணவர்
களுக்குத் தெளிவாக விளக்கப் பட்டுள்ளது.

எஸ்.எஸ்.எல்.சி. பயிற்சியையோ, தொழில் நுட்ப உயர்நிலைப்
பள்ளிப் பயிற்சியையோ முடித்த பின்பு, பல்தொழில் பயிற்சிப்
பள்ளிகளில் சேரும் மாணவர்கள் மூன்று ஆண்டுகள் பயின்ற
பின்பு டிப்ளமோ பெறுகின்றார்கள். மேலும் 1½ ஆண்டுகள்
படித்துவிட்டு, அவர்கள் பொறியியல் பட்டம் பெற வசதி செய்ய
வேண்டும் என்பது கோரிக்கை. பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து
பொறியியல் பட்டம் பெறுகின்ற மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.
பயிற்சியை முடித்த பின்பு, ஓராண்டு புகுமுகப் பயிற்சி எடுத்துக்
கொண்ட பிறகு, 5 ஆண்டுகள் பொறியியல் பயிற்சி பெற்ற பின்பே
அவர்களுக்குப் பட்டம் வழங்கப்படுகிறது. இது அகில இந்திய
தொழிற்கல்விக் குழுவினரால் அனைத்திந்திய அடிப்படையில்
அங்கீகரிக்கப்பட்ட நியதியைப் பின்பற்றி ஏற்படுத்தப்பட்ட
பி.ப. முடிவு. எஸ்.எஸ்.எல்.சி-க்குப் பின்பு 6 ஆண்டுகள் பயிற்சியின்
5-10 பயனாக வழங்கப்படும் இப்பட்டத்தை, 3 ஆண்டு பயிற்சிக்குப்
பின் டிப்ளமோ பெறும் மாணவர்களுக்கு, மேலும் 1½
ஆண்டு பயிற்சிக்குப் பின் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை,
ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. ஆறு ஆண்டுப் பயிற்சிக்குப் பின்
தாங்கள் பெறும் பட்டத்தை, 4½ ஆண்டு பயிற்சிக்குப் பின் வேறு
சில மாணவர்கள் பெறுவதற்கு வழி செய்து தருவதை பொறியியல்
பட்டப்பயிற்சி மாணவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள
மாட்டார்கள். அகில இந்திய தொழிற்கல்விக் குழுவும் இதற்கு
இசைவளிக்காது. மேலும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில்
டிப்ளமோ பயிற்சிக்கு வசதி செய்யப்பட்டது, தொழில் நுட்பத்
துறையில் பட்டப் பயிற்சி தேவைப்படாத, நடுமட்டத் திறமைத்
தேவைகளை நிறைவு செய்வதற்குத்தான். டிப்ளமோ பயிற்சியும்
பட்டப்பயிற்சியும் தனித்தனி அடிப்படையில் வகுக்கப்பட்ட



1973 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

திட்டங்கள். இந்த இரு பயிற்சிகளின் அடிப்படை நோக்கமே
வேறுபட்டதாகும். இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு பல்கலைக்
கழகங்களின் முடிவான கருத்தையும், அகில இந்திய தொழிற்
கல்விக் குழுவின் ஒப்புதலையும் பெற்ற பின்புதான் அரசு இந்தக்
கோரிக்கை பற்றி ஒரு முடிவு எடுக்க முடியும் என்பது
அனைவருக்கும் தெளிவாகும்.

இது மட்டுமல்லாமல், 'இன்ஸ்டிட்யூசன் ஆப் என்ஜினியேர்ஸ்'
இந்தியா, என்ற நிபுணர் அமைப்பு நடத்துகின்ற தேர்வுகளில்
பிரிவு ஏ, பிரிவு பி என்ற இரு தேர்வுகளில் வெற்றி பெற்றால், பொறி
யியல் பட்டத்துக்குச் சமமான பட்டத்தைப் பெறுவதற்கும்
டிப்ளமோ மாணவர்களுக்கு வசதியுள்ளது என்பதையும் நான்
இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதன்படி நாடு முழுவதும்
சுமார் நாற்பதாயிரம் மாணவர்கள் இத்தேர்வுகளை எழுதப் பதிவு
செய்துள்ளனர்.

டிப்ளமோ பெற்ற மாணவர்கள் பொறியியல் பட்டம் பெறு
வதற்காகப் பகுதி நேர பட்டப்பயிற்சி வகுப்புகள் அண்மையில்
திறக்கப்பட்டுள்ளன. டிப்ளமோ பெற்ற பின்பு ஐந்து ஆண்டுகள்
பணி அனுபவம் பெற்றவர்களை இந்தப் பயிற்சியில் சேர்த்துக்
கொள்ளலாம் என்று உத்தரவு இடப்பட்டுள்ளது. பணி அனுபவ
காலத்தை ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாகக்
குறைக்க வேண்டும் என்பது மாணவர்களின் கோரிக்கை.
இப்பகுதி நேரப் பயிற்சிக்கு ஏராளமான மனுக்கள் வந்ததை
யொட்டி அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கும்
பொருட்டு, ஐந்து ஆண்டு அனுபவ காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்
தது. இருந்தபோதிலும், இந்தப் பணி அனுபவ காலத்தை
மூன்று ஆண்டுகளாகக் குறைக்க அரசாங்கம் முடிவு செய்
துள்ளது.

மாணவர்கள் தேர்ச்சியை நிர்ணயிக்கும் முறையில், தேர்வு
களில் பெறும் மதிப்பெண்களுடன், வகுப்புப் பயிற்சியில் அவர்கள்
பெறும் தேர்ச்சியை மதிப்பிட்டு வழங்கப்படும் மதிப்பெண்களையும்
சேர்த்துக்கொள்ளும் முறை இப்பொழுது இருந்து வருகிறது.
இந்த முறையை நீக்கிவிட வேண்டுமென்பது மாணவர்களின் மற்
றொரு கோரிக்கை. கல்வித் தரத்தை உயர்த்தவும், மாணவர்கள்
ஆண்டு முழுவதும் தொடர்ந்து கல்வி பயில்வதை மதிப்பிட்டு,
அவர்கள் திறமையைச் சீராக நிர்ணயிக்கவும்தான், இந்த முறை
புகுத்தப்பட்டது. இது போன்ற முறையை பல்தொழில் பயிற்சிப்

பள்ளிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் மட்டுமல்லாமல், சாதாரண பள்ளிகளிலும் கலைக்கல்லூரிகளிலும்கூட புகுத்த வேண்டுமென்பதுதான் கல்வி நிபுணர்களின் ஒருமித்த கருத்தாகும். ஆனால் இதுவரையில் நடைபெறும் ஒரு தேர்வை மாணவர் பெறும் மதிப்பெண்கள், அவர்களுடைய திறமைக்குப் பொருத்தமான சான்றாகாது என்ற கருத்தில்தான் வகுப்பறைப் பயிற்சியில் அவர்கள் பெறும் தேர்ச்சியையும் மதிப்பிட்டு, மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, இரண்டும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்பது இந்த முறையின் அடிப்படை. தேர்வு முறையில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்ற நிபுணர்கள் அனைவரும் இது போன்ற சீர்திருத்தங்களை ஆதரித்துள்ளனர். இம்முறை மாணவர்கள் நலனுக்கு எவ்விதத்திலும் ஊறு செய்யாது என்பதோடு, உண்மையில் அவர்கள் நலனுக்கு உகந்ததாகும், என்ற நிலைமை மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலே ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால், அவை அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்றும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு முன்பு குறைந்த அளவு குறிப்பிட்ட நாட்கள் பள்ளிகளுக்கு சென்றிருக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. உடல் நலக் குறைவு காரணமாக, மாணவர்கள் போதிய நாட்கள் பள்ளிக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டால், இந்த விதியைத் தளர்த்தி, அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருந்ததற்கு நியாயமான காரணங்கள் இருந்தால், அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படும் என்று ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

டிப்ளமோ பயிற்சி பெற்றவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்குமென்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். நாட்டில் தொழில் வேகமாக வளர்ந்து வருகின்ற இக்கட்டத்தில், வேலைக்கான வாய்ப்புகளும், போதிய அளவு பெருகும் என்று நாம் எதிர்பார்க்கலாம். படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மாநில அரசும் மத்திய அரசும் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதையும் இம்மன்றம் அறியும்.



பட்டதாரி வாக்காளர் தொகுதி என்று தனியாக அமைத்து, அவர்கள் பிரதிநிதிகள் சட்ட மன்ற மேலவையில் இடம் பெற வசதி செய்யப்பட்டுள்ளது போல், டிப்ளமோ பெற்றவர்களுக்கும் வாக்காளர் தொகுதி தனியாக அமைத்து, அவர்கள் பிரதிநிதிகளையும் மேலவைக்கு அனுப்ப வசதி செய்ய வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. இக்கோரிக்கை பற்றி மாநில அரசு முடிவு செய்வதற்கில்லை. அனைத்திந்திய தேர்தல் கமிஷனும், மத்திய அரசும் தான் யார் யாருக்கு பிரதிநிதித்துவம் அளிப்பது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

டிப்ளமோ பெற்றவர்கள் பணியில் அமர்த்தப்படும்போது பட்டம் பெற்றவர்களுக்குச் சமமாக அவர்களுக்கு ஊதியமும் அந்தஸ்தும் தரப்பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. பட்டம் பெற்றவர்களுக்கும் டிப்ளமோ பெற்றவர்களுக்குமிடையே ஊதியத்தில் பாகுபாடு இருக்கக்கூடாது என்ற கோரிக்கை ஏற்புடைமை கொண்டதல்ல. டிப்ளமோ பெற்றவர்களுக்கு உரிய ஊதியமும் அந்தஸ்தும் அளிக்கப்பட வேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கு எப்பொழுதும் நாட்டம் உண்டு.

மேற்சொன்னவற்றிலிருந்து, மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலிக்க அரசு தன்னால் இயன்றதை அனைத்தையும் செய்துள்ளது என்பது தெளிவாகும். இக்கோரிக்கைகளை வற்புறுத்தி மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம் செய்தும், பள்ளிகளுக்குச் செல்ல விரும்பிய மாணவர்களையும், குறிப்பாக மாணவிகளையும் வலுக்கட்டாயமாகத் தடுத்தும், சில பள்ளிகளுக்குள் ஆசிரியர்கள் செல்லவிடாமல் தடுத்தும் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது வருந்தத்தக்கதாகும். கோவையிலும் பொள்ளாச்சியிலும் கிளர்ச்சி செய்யும் பல்தொழில் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் சிலர், பஸ்களைக் கொளுத்துவது போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளதை மாணவர்கள் நலனில் அக்கறைகொண்ட அனைவரும் வன்மையாகக் கண்டிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பல பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களின் வன்முறைச் செயல்களின் விளைவாக, பள்ளிச் சொத்துக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையைச் சமாளிப்பதற்காக, பல்தொழில் பயிற்சி மாணவர்களின் பதட்ட நிலை அடங்கும் வரை பள்ளிகள் சிறிது காலம் மூடப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் பள்ளிக்குச் செல்ல விரும்புவதாகத்

தெரிவித்ததன் பேரில், பள்ளிகள் படிப்படியாகத் திறக்கப்பட்டு, இப்போது சில பள்ளிகள் சுமுகமாக இயங்கி வருகின்றன. இன்னும் சில பள்ளிகள் விரைவில் திறக்கப்பட இருக்கின்றன.

பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவருக்காகவும் கல்விச் செலவு ஆண்டுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் * ஆகின்றது. அரசும் சமுதாயமும் இந்த அளவில் முதலீடு செய்து, இந்த வசதியைச் செய்து தந்திருப்பது, மாணவர்கள் தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்று, தங்கள் எதிர் காலத்தை வளமாக்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். தேர்வுகள் வெகு விரைவில் நடக்கவிருக்கின்றன. இவற்றை யெல்லாம் மனதிற்கொண்டும், நான் கூறியுள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டும், பாலிடெக்னிக் மாணவர்கள் தங்கள் கிளர்ச்சியை நிறுத்திவிட்டு, பள்ளிகளுக்கு மீண்டும் செல்ல வேண்டுமென்று இம்மன்றத்தின் மூலம் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, இங்கு படிக்கின்ற அனைவருக்கும் நிதி உதவி, ஸ்டைபண்ட் ஏதாவது கொடுக்கப்படு கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பொதுவாக முதல் ஆண்டு படிப்பவர்கள், பி.யு.சி. போல முழுவதும் இலவசமாகப் படிக்கின்றார்கள். அதன் பிறகு இரண்டாவது, மூன்றாவது ஆண்டுகள் பலர் ஸ்காலர்சிப் பெற்று படிக்கின்றார்கள்.

### (2) மின்வெட்டு காரணமாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சேமநல நிதித்தொகையிலிருந்து உதவி செய்யுமாறு மத்திய அரசினரைக் கோருவது குறித்து

* **திரு. காட்டூர் கோபால் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன். தமிழகத்தில் உள்ள தொழிற் சாலைத் தொழிலாளர்கள் அனைவரும், மின்வெட்டு காரணமாக முழுமையாக வேலை கிடைக்காமல் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதால், தத்தமது சேமநலநிதித் தொகையிலிருந்து கணிச மான முன்பணத் தொகையைப் பெறுவதற்குத் தடையாக உள்ள சில விதிகளில் விலக்களித்து தொழிலாளர்களுக்கு உதவி





செய்திடவேண்டுவதற்கு மத்திய அரசினரை வலியுறுத்தி உடனடி [illegible] வேண்டியது குறித்து.

* **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தில், மின்வெட்டு காரணமாக வேலையிலிருந்து நிறுத்தப் பட்ட தொழிலாளர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்குவதற்கான விதித்துறை எதுவும் இல்லை என்றும், தற்போதுள்ள சூழ்நிலையில், மின்வெட்டு காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் வழங்கப்படலாம் என்று தொழிற் சங்கங்கள் தன்னிடம் முறை யிட்டுள்ளன என்றும் வட்டார வருங்கால வைப்புநிதி ஆணை யாளரிடமிருந்து அறியப்பட்டது. இந்த முறையீட்டை அவர், புது டில்லியில் உள்ள வருங்கால வைப்பு நிதி மத்திய ஆணையாளரின் பரிசீலனைக்காக அனுப்பியுள்ளார். வருங்கால வைப்பு நிதி மத்திய ஆணையாளரின் பதிலை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். முழுச் சம்பளத்தைப் பெற முடியாத தொழிலாளர்களின் துயரை ஓரளவு குறைக்க, மின்சார வெட்டு செயலில் இருக்கும் காலங்களில் தொழிலாளர் நல ஈட்டுறுதி நிதி, தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றிற்குத் தொகை பிடிப்பதை நிறுத்திவைத்து மின்சார வெட்டு நீக்கப்பட்ட பின்னர் இத்தொகையைத் தவணை முறையில் வசூலிக்க வேண்டும் என்று இந்திய அரசுக்கு இவ்வரசு எழுதியுள்ளது.

* **திரு. காட்டூர் கோபால் :** தலைவரவர்களே, பொருளாதார அளவில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்தப் பாட்டாளி மக்கள் தற்போது மாநில அரசாவது, மத்திய அரசாவது தனித் தனியாகவாவது உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவரவர்களது வைப்பு நிதியிலிருந்து உடனடியாகக் கடன் கொடுப்பதற்கு விதிவிலக்கு செய்ய உடனடியாக ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு அரசு என்ன செய்திருக்கின்றது என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இதனை உடனடியாகக் கவனிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசோடு கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது.

[1973 மார்ச் 6

## (3) மண்ணெண்ணெய் பற்றாக்குறையினால் பொதுமக்களுக்கு விளைந்துள்ள இடர்ப்பாடுகள் குறித்து.

• **திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களை கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் :

நமது மாநிலத்தின் பல மாவட்டங்களில் மண்ணெண்ணெய் பற்றாக்குறை இருப்பதும், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, தியாகராய நகர், மயிலாப்பூர், சேத்துப்பட்டு போன்ற பகுதிகளில், குறைபாடுள்ள பங்கீட்டு முறையினாலும் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் பொது மக்களுக்கு விளைந்துள்ள இடர்ப்பாடுகள் குறித்து.

• **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இம்மாநிலத்திற்குத் தேவையான மண்ணெண்ணெயை சென்னை மற்றும் கொச்சியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் வழங்குகின்றன. இம்மாநிலத்திற்கு ஒரு மாதத்திற்கு சுமார் 36 முதல் 38 ஆயிரம் கிலோ லிட்டர் வரை மண்ணெண்ணெய் ஒதுக்கப்படுகிறது. இந்தத் தேவைகளை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், எஸ்ஸோ, பர்மா ஷெல், கால்டெக்ஸ் ஆகிய நான்கு பெரிய கம்பெனிகள் கீழ்க்கண்ட அளவில் பூர்த்தி செய்கின்றன :—

| | |
|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | சுமார் 29,000 கிலோ லிட்டர் |
| எஸ்ஸோ | சுமார் 5,000 கிலோ லிட்டர் |
| பர்மா ஷெல் | சுமார் 2,500 கிலோ லிட்டர் |
| கால்டெக்ஸ் | சுமார் 1,500 கிலோ லிட்டர் |

இந்த மாநிலம் முழுவதும் மண்ணெண்ணெய் கட்டுப்பாடு ஆணையின்கீழ் உரிமம் பெற்ற பல மொத்த விற்பனையாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் உள்ளனர். இந்த மொத்த விற்பனையாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும், மண்ணெண்ணெயை மேற்சொன்ன கம்பெனிகளிலிருந்து பெற்று சில்லறை வியாபாரிகள் பொது மக்களுக்குத் தங்களால் நடத்தப்படும் கடைகள் மூலமாகவோ அல்லது கை வண்டி மூலமாகவோ விநியோகம் செய்கின்றனர். மண்ணெண்ணெய் தற்பொழுது லிட்டருக்கு 65 காசு என்ற வெளியிட்டு விலையில் சென்னை நகரில்





விற்கப்படுகிறது. மாவட்டங்களில் மண்ணெண்ணெய் விலை கம்பெனியின் விலை, வண்டிக் கூலி மற்றும் இதர செலவுகளைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயிக்கப் படுகிறது.

ஜனவரித் திங்களில் கொச்சியிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கம்பெனி நடத்துவதிலுள்ள இடர்ப்பாடுகளின் காரணமாக 10 நாட்களுக்கு மூடப்பட்டிருந்தது. இதனால் இக்காலத்தில் மண்ணெண்ணெய் கிடைப்பதில் தற்காலிகமாக தட்டுப்பாடு ஏற்பட்டது. பெரும்பாலும் மாவட்டங்களுக்கு மண்ணெண்ணெய் கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து இரயில்வே எண்ணெய் வேகன்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால் முக்கியமாக கொச்சியிலிருந்து எண்ணெய் பெறும் தென் மாவட்டங்களான, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் எண்ணெய் பெறுவதில் தற்காலிகத் தடங்கல் ஏற்பட்டது. பிப்ரவரி திங்கள் மத்தியில் சென்னையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை பழுது பார்ப்பதற்காக ஒரு வாரம் மூடப்பட்டது. மேலும் மின்சார வெட்டின் காரணமாக சேமிப்பு முனைகளிலிருந்து ஒவ்வொரு நாளிலும் சில நேரங்களில் விநியோகம் பாதிக்கப்பட்டது. எண்ணெய் வழங்கப்படாததால்

பல பகுதிகளில் எண்ணெய் குறைவாக வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட தட்டுப்பாட்டின் காரணங்களையும் மற்றும் சீக்கிரத்தில் எண்ணெய் கிடைக்கச் செய்யக்கூடிய வழிவகைகளையும் காண எண்ணெய்க் கம்பெனிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. சென்னையும் அதன் சுற்றுப்புற பகுதிகளும் பொறுத்தவரையில் பற்றாக்குறை எதுவுமில்லை என்றும், ஆனால் சாதாரணமாக கொச்சிப் பகுதியிலிருந்து மண்ணெண்ணெய் பெறும் பகுதிகளுக்கு சாலை மூலமாக எண்ணெய் போக்குவரத்து சென்னைப் பகுதியிலிருந்து அனுப்பப்பட்டதால், சென்னைப் பகுதியிலும் ஓரளவு பற்றாக்குறை நிலைமை நிலவியது என்றும், இந்நிலைமைக்கு முக்கிய காரணம் போதுமான எண்ணெய் போக்கு வரத்துக்காக கிடைக்கப் பெற்ற எண்ணெய் வண்டிகளின் அளவு குறைந்து விட்டதேயாகும் என்றும் இதனால் வழக்கமாக சென்னையிலிருந்து எண்ணெய் பெறும் வடக்கு மாவட்டங்களுக்கு எண்ணெய் அனுப்புவது குறைந்தது என்றும் இந்திய எண்ணெய் கார்ப்பரேஷன் சார்பாகக் கூறப்பட்டது. மேலும் ஆந்திர

மாநிலத்திற்கு ஓரளவு எண்ணெய் அனுப்பியதால், வழக்கமாக எண்ணெய் விநியோகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது என்றும் அவர்கள் கூறினர்.

மற்ற எண்ணெய்க் கம்பெனிகள் தங்களுக்குத் தேவையான எண்ணெயை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனிடமிருந்து பண்டம் மாற்றும் உடன்படிக்கைப்படி பெற்றுவருவதாகக் கூறினர். பண்டம் மாற்றும் உடன்படிக்கைப்படி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் தேவைகளை இதர எண்ணெய்க் கம்பெனிகள் அவர்களுடைய மற்ற இடங்களிலிருந்து சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து பூர்த்தி செய்கின்றனர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் பிரதிநிதிகள் இனிமேல் எண்ணெய் விநியோகம் சீராக இருக்குமென நம்பிக்கையுடன் உள்ளனர். தொலை மாவட்டங்களுக்கு விநியோகத்தில் சிறிது சிரமம் ஏற்படுமாயின் அது போக்குவரத்து இடர்ப்பாடுகள் காரணமாகவே இருக்கும் என்றும் கூறினர்.

எனினும், விநியோகத்தில் தற்காலிகமாக நடைபெறும் தடங்கல்களையும், அதனால் உண்டாகும் பற்றாக்குறையையும், பதுக்குதலையும், எண்ணெய் கிடைக்காமை பற்றிய புகார்களையும் தவிர்த்து கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) பிப்ரவரி திங்களுக்கு ரூ. 300-க்குக் குறைந்த வருமானம் உள்ள அரிசி அட்டை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு 3 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. மாநகரிலேயே இதே அளவுகளில் கட்டுப்படுத்தப்பட்ட விநியோக முறையை மாவட்டங்களிலும் அமல் நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. தேவையானால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு குறைந்த பட்சம் 2 லிட்டர் எண்ணெய் வீதம் கிராமங்களில் வழங்க உத்தரவிடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மார்ச் மாதம் முதல் எண்ணெய் கிடைக்கும் நிலைமையை பரிசீலனை செய்து எண்ணெய் வழங்கும் அளவுகள் ஒழுங்கு படுத்தப்படும்.

(2) உரிமம் பெற்ற சில்லறை வியாபாரிகளின் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படும். சமீபகாலம் உணவுப்பொருள்கள் வழங்கல் கழகத்தால் நடத்தப்படும் சில்லறைக் கடைகளிலிருந்து உணவுப் பொருள்கள் வாங்குபவர்களுக்கு பங்கீடு அட்டைகள்





மூலம் அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான அளவு கை வண்டிகள் நிறுத்தி வைக்கப்படும்.

(3) மண்ணெண்ணெய் சமையலுக்கு உபயோகப்படுத்த பவர்களின் கூடுதல் தேவையைப் பூர்த்தி செய்ய மண்ணெண்ணெய் கிடைப்பதைப் பொறுத்து, ஒவ்வொரு கை வண்டி வைத்திருப் போருக்கும் ஒரு பீப்பாய் எண்ணெய் ஒரு நாளுக்குக் கொடுக்கப் படும்.

(4) எரிவாயுவின் பற்றாக்குறைக் காரணத்தைக் கருத்தில் கொண்டு சமையலுக்கு எரிவாயுவை உபயோகப்படுத்துபவர் களுக்கு அவர்களின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்ய சர்க்கரை அட்டையின் மேல் மாதத்திற்கு 18 லிட்டர் (ஒரு டின்) மண்ணெண்ணெய் வழங்கப்படும். இந்த எரிவாயு பற்றாக்குறை, இம்மாதத்தின் இறுதிக்குள் சரியாகி விடும் என்று இந்திய எண்ணெய்க் கழக பிரதிநிதிகள் உறுதி அளித்துள்ளார்கள்.

(5) மாவட்டங்களில் எண்ணெய் கிடைக்கும் அளவைப் பொறுத்து மாவட்ட ஆட்சியாளர்கள் எண்ணெய் வழங்கும் அளவை நிர்ணயிப்பார்கள். இதைத் தவிர சென்னை நகரத்தில் குறைந்த பட்சத் தேவைக்கு மேலுள்ள அளவு மண்ணெண்ணெய் மாவட்டங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

## 7. 1973-74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி

**திரு. செ. ராக்காசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து முதன் முதலில் "இடுக்கண் வருங்கால் நகுக. அதனை அடுத்தூர்வது அஃதொப்பதில்" என்ற வள்ளுவரின் இலக்கணத்தை எல்லோருக்கும் சொல்லி இருக்கிறார்கள். சற்று ரஸ்யமாக அவர்கள் சற்று வேடிக்கையாகக் கூட விளையாட்டாகச் சொன்னார்கள். நான் வருத்தத்தோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர் சமுதாயம் இந்த அரசாங்கத்தைத் தாயாக, தந்தையாக மதித்து, தன்னுடைய பிரச்சினைகளை

[1973 மார்ச் 3

உண்மையோடு எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டிருக்கிறது. நான் அவர்களுக்கு ஒன்றைப் பணிவோடு
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசு என்னென்ன
தியாகங்களை இந்த ஆசிரியர் சமுதாயம் செய்ய
வேண்டுமென்று திணித்தாலும அதைச் செய்வதைத் தவிர வேறு
வழியில்லை என்று ஆசிரியர் சமுதாயம் "இடுக்கண் வருங்கால்
நகுக" என்று அவர்கள் கூறினர்களே அதையே இலக்கணமாக
வைத்துச் செயல்பட வேண்டிய ஒரு கட்டாய நிலை வந்துவிடும்
என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, நான் 7—3—1972-ல் முதலமைச்சரிடத்திலே உட்
கார்ந்து பேசிய நேரத்தில் ஒரு கருத்தை அவர்களுக்குத் தெளி
வாகச் சொன்னேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள்.
ஆண்டுக்கு இரண்டு முறையாவது, மூன்று முறையாவது,
ஜாயிண்டு எஜுகேஷனல் கௌன்சில் என்று வைத்து, அதில்
எஜுகேஷன் செக்ரடரியை வைத்து, ஆசிரியர்களுடைய பிரச்சினை
களில் ஆண்டுக்கு இன்னின்ன பிரச்சினையில் தீர்வு
காண்பது என்ற முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று நான்
அவர்களிடத்தில் கேட்டேன். அதற்கு அவர்கள் யோசனை செய்
கிறேன் என்று ஒப்புக்கொண்டார்கள். இன்று பட்டதாரி ஆசிரி
யர்கள் பிரச்சினை மட்டும் நாட்டிலே இல்லை. இன்றைக்கு மிக
வேகமாக காலேயிலே 483 பேர் அரெஸ்ட் ஆகக்கூடிய சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஒரு லட்சம்
பேர் இருக்கிருர்கள். ஹையர் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் 97
ஆயிரம் பேர் இருக்கிருர்கள். அவர்களுடைய பிரச்சினைகள்
நாட்டிலே இருக்கின்றன. அவற்றிலே இப்போது பட்டதாரி ஆசிரி
யர்கள் பிரச்சினை பற்றி இரண்டு அறிவிப்புகளைத் தந்திருக்
கிருர்கள். இந்த அறிவிப்புக்கு முன்னல் பட்டதாரி ஆசிரியர்
களுக்கு இந்த இரண்டு காரியங்களைச் செய்வதற்கு முதலமைச்சர்
எடுத்துக்கொண்ட முயற்சியிலே என்ன நடைபெற்றது என்று
எனக்குத் தெரியாது. நான் இரண்டு நாட்களாக வெளியூர்
சென்றிருந்தேன். அதன் பிறகு நான் நேற்று வந்தபோது அதிலே
என்ன நடந்தது என்ற விஷயத்தை என்னிடத்திலே, நான் இந்த
அவைக்கு வந்து விட்டுச் சென்றதற்குப் பிறகுதான் சொன்
ஞர்கள். அதன் பிறகுதான் நான் அறிந்தேன். முதலமைச்சர்
போட்டிருக்கக்கூடிய உத்தரவிலே இரண்டு விஷயங்கள் அவர்
களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லையென்று அவர்கள்



1973 மார்ச் 6] [திரு. செ. முத்துசாமி]

கூறியதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன்.

முதலமைச்சரவர்கள் வரன் முறைப்படுத்துதல், 1—4—1970-க்கு
பிறகு உத்தரவாதம கொடுக்கப்பட்டிருப்பதாகவும், ஆனல் அவர்கள்
பிலைல் இந்தத் தேதி வரை அப்பாயின்ட்மெண்ட் ஆகி இருக்கக்
கூடிய எல்லா ஆசிரியர்களை உத்தியோகத்தில் எடுத்துக்கொள்ள
வேண்டுமென்ற அப்பாயிண்ட்மெண்ட் ஆகிய தேதியிலிருந்து வரன்
முறைப்படுத்தப்பட்டுள்ளது தெளிவாக இல்லை என்பது அவர்க
ளுடைய சந்தேகமாகும் என்று என்னிடத்திலே கூறினார்கள்.

அடுத்து, 10 ஆண்டுத் தேர்வு நிலை என்பது. ஏற்கெனவே உயர்
நிலைப் பள்ளிகளில் 5 ஆண்டு ஊழிய காலம் பெற்றவர்களுக்கு
தலைமை ஆசிரியர் பொறுப்புக் கொடுக்கலாம் என்று ஒரு
அறிவிப்பு இருக்கிறது, அதேபோல 10 ஆண்டு ஊழிய காலம்
பெற்றவர்களுக்கு இந்தத் தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும்
என்று சொல்லும்போது, 10 ஆண்டு ஆனலே இந்த ஊதியம் வந்து
விடுகிறது. இதனலே இது தெளிவாகச் சொல்லப்படவில்லை என்ற
அவர்களுடைய சந்தேகத்தைத் தெரிவித்தார்கள்.

அடுத்து, சென்ற 1972-ம் ஆண்டு மார்ச் 7-ம் தேதி முதலமைச்சர
வர்கள் மேலவையிலே ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அந்த
அறிக்கையிலே அங்கே உட்கார்ந்து பேசிய நேரத்தில் பட்டதாரி
ஆசிரியர்கள் சம்பள விகிதம் மாற்றியமைக்கப்படுமென்ற உறுதி
யைச் சொன்ஞர்கள். அப்போது ஒரு வாசகத்தைச் சொன்ஞர்கள்
தேர்வு நிலை பட்டதாரி ஆசிரியர்கள் விஷயத்தை நீங்கள் கவனிப்
பீர்களானல், நூற்றுக்கு நூறு நாங்கள் திருப்தியோடும் மகிழ்ச்சி
யோடும் செல்வோம் என்று பிரதிநிதிகள் சொன்ஞர்கள். அந்த
நேரத்திலே முதலமைச்சரவர்களால் ஒரு வார்த்தை சொல்லப்
பட்டது. முதலமைச்சரவர்களே சொன்ஞர்கள். தேர்வு நிலை
உள்ளிட்ட பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்சினையுடன் சம்பளம்
மாற்றியமைக்கப்படுமென்ற வாசகம் சொல்லப்பட்டது. அந்த
நேரத்தில் கல்விச் செயலாளரும், கல்வியமைச்சரவர்களும் குறுக்
கிட்டு ஒன்றைச் சொன்ஞர்கள். பட்டதாரி ஆசிரியர்கள்
சம்பளம் உயர்த்தப்படும்போது, முன்பு 275 என்று இருப்பது
மாற்றியமைக்கப்படும்போது, செலெக்ஷன் கிரேட் சம்பளத்தை
யும் மாற்றியமைக்கக்கூடிய நிலை வரும் என்பதைப் போல்

அன்றைக்குச் சொன்னார்கள். இந்த நிலையிலே இன்றைக்கு பட்டதாரி ஆசிரியர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கு முதலமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட உறுதியிலே தேர்வு பெறாத பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்சினை பற்றி பரிசீலிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருந்தது தவிர இது வரை, இந்த நேரத்திலும் அது செய்யப்படவில்லை.

அப்படி ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் உறுதி சொன்னார்
பி.ப. 5-30 கள். நான் சென்ற போராட்டத்தின்போது அவர்களிடத்தில் சொன்னேன். ஆக்ஷன் கமிட்டியிலும் சென்று அங்கேயிருக்கக் கூடிய ஆசிரியப் பெருமக்களிடம் சென்று சொன்ன பிறகு, அந்தப் போராட்டம் 'விதட்ரா' செய்யப்பட்டது. இன்றைக்கு அவர்கள் ஒன்று சந்தேகப்படுகிறார்கள். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இன்னும் செய்யவில்லை. இன்றைக்கு இரண்டொன்றைச் சொல்கிறார். செய்கிறேன் என்று சொல்லுகிறார்கள். ஓராண்டு காலமாகச் செய்யவில்லையே என்ற சந்தேகம் அவர்களுக்கு. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் ஒரு கமிட்மெண்ட் செய்துவிட்டார், இன்றைக்கு அது நிறைவேற்றப்படவில்லையே, முதலமைச்சர் சொன்ன வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லையே என்ற குறையைச் சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேண்டுமென்றே உண்மைக்கு மாறான விஷயத்தைச் சொல்லி அதைத் திரும்பத் திரும்பச் சொல்வதால் அது உண்மையாகி விடும் என்று எதிர்பார்ப்பது நல்லதல்ல. பரிசீலிக்கப்படும் என்று சொன்னதெல்லாம் ஒத்துக்கொள்ளப்பட்டது என்கின்ற பட்டியலிலே வராது. பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டது, அது பரிசீலிக்கப்படுகின்ற நேரத்தில் வேறு துறைகளில் எந்தெந்த அளவுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதைப் பார்த்துத்தான் பரிசீலிக்க வேண்டும். அந்த அளவிலே தான் பரிசீலிக்கப்படும் என்று சொன்னது. இப்போது சொல்லப்பட்டவைகள் பரிசீலிக்கப்படும் என்பதல்ல. இந்த அவையிலே ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது என்று அறிவிக்கப்பட்ட விஷயங்களிலும் சந்தேகப்படுவதாக இருந்தால், எப்படியாவது போராட்டம் நடத்த வேண்டும், சென்னைக்கு வந்து விட்டோம், சும்மா திரும்பிப் போகக்கூடாது என்பதற்காக ஒரு போராட்டம் நடத்துவதாகத்தான் தோன்றும். நீங்கள் இந்த அவையில் உள்ள இவ்வளவு பேரை வைத்துக்கொண்டு, கல்வி



யமைச்சர் தந்த அறிவிப்பு, சட்டப் பேரவையில் தந்த அறிவிப்பு இவையெல்லாம் நம்பக் கூடாதவைகள் என்று சொன்னால், அதை எப்படி எடுத்துக்கொள்வது?

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இந்த இரண்டு அறிவிப்பிலே அவர்களுக்குச் சந்தேகம் இருக்கிறது என்று என்னிடத்தில் சொன்னார்கள் என்று சொன்னேன். இந்த அறிவிப்பை நம்பவில்லை என்ற கருத்தை நான் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் அப்படி எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்று நான் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே சொன்னதிலே தேர்வுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுடைய நிலை . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சந்தேகங்கள் அவர்களுக்கு இருக்கின்றன என்று சொன்னார்கள். நேற்றைய தினம் என்னுடைய வீட்டில் நான், கல்வியமைச்சர், திருவாளர்கள் ராஜா அய்யர், சந்தோஷம், கணபதி, சுவாமிநாதன் இவர்களை வைத்துக் கொண்டு, ஆசிரியப் பிரதிநிதிகள், அவர்கள் தலைவர்கள், அந்தச் சங்க நிர்வாகிகள் அவ்வளவு பேரும் இருந்து, அவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு, அவர்களுடைய சந்தேகங்கள் தீர்ந்து விட்டதாகச் சொன்னார்கள். "போராட்டத்தை நிறுத்துவதா இல்லையா என்பதை மற்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டு அறிவிக்கின்றோம். எங்களைப் பொறுத்த வரையில் உங்கள் விளக்கங்களுக்குப் பிறகு நாளைய போராட்டத்தை நிறுத்தும் முடிவுக்கு வந்து விட்டோம். அவர்களையும் கலந்து கொண்டு அறிவிக்கின்றோம்" என்று சொல்லிவிட்டுத் தான் போனார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, அந்தப் பிரதிநிதிகள் அப்படிச் சொல்லி விட்டுச் சென்றதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் அவர்களை என்னுடைய அறைக்கு வரச் சொல்லிக் கேட்டேன். அவர்களைப் பொறுத்த வரையில், முதலமைச்சர் அவர்களிடத்தில் அப்படிச் சொல்லி விட்டு வரவில்லையென்று சொன்னார்கள். நான் அதைத்தான் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. ராஜா அய்யர் இருக்கிறார். அவர்களே சொல்லட்டும்.

திரு. எம். ராஜா அய்யர் : நம் முதலமைச்சர் அவர்கள் மேலும் அவர்களைக் கேட்டார்கள். இன்னும் எத்தனை பேர் வெளியே இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். ஐவர் என்று கூறினார்கள். இத்தனை பேர் வந்திருக்கிறீர்களே, அந்த ஐந்து பேரைக் கூட்டிக் கொண்டு வந்து இங்கேயே முடிவு எடுத்து விடலாமே என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் பதில் கூறினார்கள் வேடிக்கையாக : "வீடு சிறியதாயிற்றே என்பதற்காகக் கூட்டிக்கொண்டு வரவில்லை" என்று. ஏனென்றால் ஆரம்பத்தில் என் வீடு சிறிய வீடு என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்காக அவர்கள் வீடு சிறியதாயிற்றே என்று கூட்டிக்கொண்டு வரவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் வீடு சிறியதாக இருந்தாலும் மனம் பெரியதாக இருக்கிறது என்று கூறினோம். ஆகையினால் அவர்கள் வெளியே இருக்கக் கூடியவர்களைக் கலந்தாலோசித்து இதை வாபஸ் பெற்றுக் கொள்வது என்ற முடிவுக்கு வந்ததாகத்தான் தெரிந்தது. 'பார்மாலிடி' என்று சொல்லுவார்களே, ஒரு விதிக்கு ஒப்ப, தன் இச்சை போல் ஒரு முடிவு எடுக்க முடியாது என்பது ஜனநாயக முறை. அந்த ரீதியாக மற்றவர்களையும் கலந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டியது என்ற முறையைக் கடைப்பிடிப்பது போல் தோன்றியது. முடிந்து போன விஷயம் என்று எல்லோரும் கருதினோமேயொழிய, அதில் எந்த வித ஐயமும் இருப்பதாக என் மனச்சாட்சி சொல்லவில்லை (கைத்தட்டல்). அது தான் உண்மை என்று சொல்லுகின்றேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, நான் அந்த இடத்தில் இல்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னிடத்தில் அவர்களுடைய தலைவரும், செயலாளரும் சொன்னதை நான் இங்கே சொன்னேன். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்குமானால், அது நான் இல்லாத நேரத்திலே நடந்திருக்கக்கூடிய விஷயமாகையால், பெரியவர்களும், முதலமைச்சர் அவர்களும் சொல்வதிலே எனக்கு வேறுபாடான கருத்து இல்லை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அண்டை மாநிலத்தில் இருக்கக்கூடிய ஒரு முதலமைச்சர், ஆசிரியர்களும், என். ஜி. ஓ. க்களும் நடத்திய போராட்டத்தை எவ்வாறு சமாளித்தார்கள் என்பதை நீங்களெல்லாம் படித்திருப்பீர்கள், எல்லோரும் படித்திருப்பார்கள் என்பதை மனதில்





கொண்டு, அவரைப் போல நடப்பேன் என்று சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை அவர்களிடம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாடு பலவிஷயங்களிலே முற்போக்காக இருக்கிறது என்று பல முறையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ....

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆசிரிய சமுதாயத்திற்குச் சொல்லலாமே. ஒன்றுமே தெரியாது என்று சொல்லி விட்டு, சவாலை ஏற்றுக்கொள்கிற மாதிரி முதலிலே சொன்னார்கள். இப்போது மறுபடியும் கவர்ன்மெண்டிற்கு 'அட்வைஸ்' பண்ணுவதை விட்டு, அந்தப் போராட்டத்தை நிறுத்தி விட்டு மறுபடியும் பேசலாமே.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, அவர்கள் சவால் விடுவதாகச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. சவால் விடவில்லை. தியாகம் செய்ய வேண்டுமென்று கருதினால், அந்தத் தியாகத்தைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தான் நான் சொன்னேன். இதை அவர்கள் எப்படிப் பொருள் கொண்டு பார்க்கிறார்களோ, அது அவர்களைப் பொறுத்ததே தவிர, நான் சொன்ன அந்த வாசகத்தை மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அத்தகைய முதலமைச்சர் சமாளித்தார்கள். பீஹாரில் 'ஷூட்டிங்' கூட நடைபெற்றது. இதையெல்லாம் மனதில் கொண்டு அப்படியெல்லாம் நடைபெறுமென்று முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டாம் என்றும், மீதியிருக்கிற பிரச்சினைகளில் ஆறு கோரிக்கைகளிலே . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி 'ஷூட்டிங்' நடக்க வேண்டுமென்று விரும்புகிறாரா? அது போன்று அரசாங்கம் விரும்பவில்லை. தயவு செய்து அந்த அளவுக்கு ஆசிரியர்களைத் தூண்ட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, அடுத்த மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைச் சொன்ன காரணத்தினால் தான் நான் சொன்னேன். அது இந்த அளவுக்குப் பொருள்படக் கூடும்,

சமுதாயத்தின் மத்தியில் அறியப்படும் என்றால், நான் விட்டுவிட
விரும்புகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** பீஹார் அடுத்த மாநிலம்
இல்லையே.

**திரு. செ. முத்துசாமி :** ஆசிரியர்கள் போராட்டத்தைப்பற்றிச்
சொல்லும்போது, இப்படி அடுத்த மாநிலத்தில் நடக்கக் கூடிய
விஷயத்தை சமாளித்தது போன்று என்று சொல்லக் கூடிய விஷயங்
களை முதலமைச்சர் பரிசீலிக்க வேண்டும். அந்த அளவுக்கு நட
வடிக்கை எடுப்பேன் என்று சொன்னது வேகமாகத்தான்
சொன்னதாக உணருகின்றேன். அதில் அவரிடத்தில் வேண்டாத
வேகம் தென்படுகிறது என்பதை நான் உணருகின்றேன். அதை
அவர்கள் மாற்றிக் கொண்டு, ஆசிரிய சமுதாயத்தினுடைய
பிரச்சினையில் மதி இருக்கக் கூடிய கோரிக்கைகளை நிறைவேற்ற
வேண்டுமென்று கூறி, நான் ஆசிரியர்களின் வேறு பிரச்சினைகளைப்
பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குப் பட்டதாரி ஆசிரியர்
களுக்கு 10 ஆண்டு சேவையென்றால் தேர்வு நிலை என்று ஒரு
பாலிசியாக முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இவ்வளவு சொன்ன
பிறகும், திரு. ராஜா அய்யர் அவர்கள் பெரிய உள்ளத்தோடு நடந்த
விஷயங்களை இங்கே எடுத்துச் சொன்ன பிறகும் முதலமைச்சரும்,
அரசாங்கமும்தான் ஏதோ தவறு செய்துவிட்டது போல அவர்கள்
நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்வது முறையல்ல. ஒரு
ஆசிரிய சங்கத்தினுடைய தலைவராக இருக்கிற நண்பர் திரு.
முத்துசாமி அவர்கள், மேலவையினுடைய உறுப்பினர் பொறுப்பில்
இருக்கின்ற அதையும் பயன்படுத்தி, "நான் இது வரையிலே
இப்படித் தவறாக எண்ணிக் கொண்டிருந்தேன். முதலமைச்சரே
அப்படி ஒரு தவறான விஷயத்தைச் சொல்லுகிறார் என்று எண்ணிக்
கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் திரு. ராஜா அய்யர் நடந்த
வைகளை ஒப்புக் கொண்டார். அதற்குப் பிறகு எனக்கு உண்மை
விளங்கியது. ஆகவே நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்," என்று
ஆசிரிய சமுதாயத்திற்குச் சொல்லுகின்ற உரிமையை திரு. முத்து
சாமி பெற்றிருக்கவில்லையா என்று நான் அவர்களிடத்தில் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.





**திரு. செ. முத்துசாமி :** மேலவைத் தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு மாநிலம் பூராவுமிருக்கக்கூடிய ஒரு நல்ல அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பின் தலைவர், செயலாளர் என்னிடத்தில் சொன்னார்கள். நான் அதை இங்கே சொன்னேன். இந்த விஷயத்தில் என்ன நடந்தது என்பதை திரு. ராஜா அய்யர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அந்த விஷயத்தை இருவரும் சொல்கிற காரணத்தால், எனக்கு, அதில் கருத்து வேறுபாடில்லை என்று சொன்னேன். மீண்டும் அவர்களைச் சந்தித்து இந்த விஷயத்தைப்பற்றி நான் விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு அவர்கள் தவறு செய்து விட்டார்கள் என்று நான் சொல்ல வேண்டுமென்று முதலமைச்சர் எதிர்பார்த்தால், நிச்சயமாக நான் அப்படிச் சொல்லத் தயாராக இல்லை. அந்தச் சங்கம் வைத்த கோரிக்கைகளில் 2 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றாலும், மீதி 4 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லை. அவர்கள் ஆறு கோரிக்கைகளுக்காக இந்தத் திட்டத்தைத் தீட்டினார்கள். அந்த நான்கு கோரிக்கைகளையும் நிறைவேற்றி விட்டால், நான் உடனே சென்று அவர்களை 'வித்டிரா' செய்யச் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று முதலமைச்சர் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே கணிசமாக ஆசிரியர்களுடைய சமுதாய உயர்வு செய்யப்பட்டிருக்கிறது என்று எழுதப்பட்டிருக்கிறது. உண்மையாகவே நான் மிக வருந்துகிறேன். இரண்டாவது பே கமிஷனைப் பொறுத்த அளவில், 1960-ம் ஆண்டு பே கமிஷன், முதல் ஊதியக் குழுவின் அறிக்கையில் இருந்ததை அப்படியே அவர்கள் சமப்படுத்தி, எழுதியிருக்கிறார்களே தவிர, முரண்பாடுகளைத் தீர்க்கும் குழுவில் சொல்லப்பட்டது கூடச் சரியாகப் பரிசீலிக்கப்படவில்லை. அதை நாங்கள் ஏற்கெனவே சொன்னோம். எஸ்.எஸ்.எல்.சி.-க்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பார்மசிஸ்டுகளுக்கு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் 225 ரூபாய் சம்பளம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 150 ரூபாய்தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் டிரெயினிங் காலத்திற்கு நியாயமான, மதிக்கத்தகுந்த அளவுக்கு சம்பளம் அறிவிக்கப்பட வில்லை. அவர்களுக்கு ஊதிய விகிதம் மாற்றி அமைக்கப்படவில்லை என்பதையும் இரண்டாவது ஊதியக் குழுவில், முரண்பாடு

குழுவில், மதிப்பிற்குரிய திரு. ராகவன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் போட்ட குழுவில் எடுத்துச் சொன்னோம். அது எந்தவிதச் சிபார்சும் செய்யவில்லை. ஒன் மேன் கமிட்டியில் அன்றைக்கு அழைத்துப் பேசிய நேரத்தில் நாங்கள் சொன்னோம். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் போராட்டத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் மே மாதம் 22-ம் தேதி அழைத்துப் பேசிய நேரத்தில், "நீங்கள் அந்த
5-40 பி.ப
ஒன் மேன் கமிட்டியிடம் கொடுங்கள், உங்கள் பிரச்சினை பரிசீலிக்கப்படும்," என்று சொன்னார்கள். ஆனால் ஹையர் கிரேடு ஆசிரியர்களுடைய சம்பளம் மாற்றப்பட வேண்டும் என்று சொன்ன விஷயம் என்னவாயிற்று? இது வரை அறிக்கை என்ன சொன்னது என்று இந்த அவைக்குக் கூடச் சொல்லப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பிறகு 2 ஆண்டு காலம் பயிற்சி பெற்றிருக்கக் கூடியவர்கள். ஒரே செக்ஷனில் இருக்கக் கூடியவர்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத்திற்கு ஒரு 'பாலிசி' இருக்க வேண்டும். ஒரு பாலிசிப்படி எஸ்.எஸ்.எல்.சி.-க்குப் பிறகு 2 ஆண்டுக் காலம் பயிற்சி பெற்றிருக்கக்கூடிய ஒரு கேடிகரிக்கு ஊதியவிகிதம் தருவார்களானால், இதே கேடிகரியில் இணைக்கப்பட்டிருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் சென்ற ஆண்டு போராடியதன் விளைவாக, செக்ரடேரியட் அசிஸ்டெண்டை அவர்களோடு இணைத்து, சீனியர் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் போல் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த கேடிகரியில் உள்ள எல்லோருக்கும் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கு இந்த செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும், அதே கேடிகரியிலே இருக்கக் கூடியவர்களுக்கு ஊதிய விகிதம் உயர்த்தப்பட்ட நிலைமைகளில், ஊதிய விகிதம் உயர்த்தப்படவில்லை என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசுத் துறையில் பல்வேறு இலாக்காக்களிலுள்ள ஊழியர்களுக்காக தினமும் இரண்டொரு ஆணைகள் போடப்படுகின்றன. நிதிக் கஷ்டத்தைப் பற்றியெல்லாம் முதலமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். **ஆனால் தினமும் சில உத்தரவுகள் வந்துகொண்டே**





யிருக்கின்றன. முதலமைச்சரவர்கள் செல்லக்கூடிய மாநாடுகளிலே சில வற்றில் அறிவிக்கிறார்கள். இதை நாங்கள் பார்க்கிறோம். முதலமைச்சரவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரிய சமுதாயத்திற்கும் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். 10 ஆண்டுக் காலம் பணி செய்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் வழங்கப்பட்டிருப்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் இந்த அறிவிப்பு பல இடங்களிலே சரியான அடிப் படையிலே பலன் அளிக்காமல் இருக்கிறது என்பதை நான தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 10 ஆண்டுகளில் செலக்ஷன கிரேட் அந்தஸ்து அளிக்கும்போது, அது ரப்பர் ஸ்டாம்ப் செலக் ஷன் கிரேட் ஆசிரியர்களைப் போல சில நேரங்களிலே ஆகிவிடு கிறது. எப்படியென்றால் ரூ. 400 இப்போது செலக்ஷன் கிரேட் ஆசிரியர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 300 அடிப்படைச் சம்பளம். ரூ. 150 ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம்; ரூ. 180 செலக்ஷன் கிரேட். ஆனால் இது 15 ஆண்டுகள், 17 ஆண்டுகள் பணிசெய்தவர்களுக்குத்தான் வருகிறது. அவர்கள் ஏற்கெனவே இதைவிட அதிகமாகச் சம்பளம் வாங்குகிறார்கள். இப்படியிருக்கக் கூடிய நிலையில் செலக்ஷன் கிரேட் வழங்குவதனால் எந்தவிதமான ஊதிய உயர்வு,ஊக்குவிக்கக் கூடிய நிலையில்லை. ஸ்டாக்னேஷனைத் தவிர்ப்பதற்கு ஒரு ஊக்கம் கொடுத்துச் செயல் படுத்துவதற்காகத்தான் செலக்ஷன் கிரேட் கொடுக்கப்படுவதாக பே கமிஷன் அறிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் அந்த செலக்ஷன் கிரேடை அமல்படுத்தும்போது, குறைந்தது ஒரு நாலு இன்க்ரிமெண்டாவது கொடுக்கக் கூடிய சூழ்நிலையில்லை. செலக்ஷன் கிரேட் என்று சொல்லுவதற்கும் சாதாரண ஆசிரியர்கள் என்று சொல்லுவதற்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். சில நேரங்களிலே செலக்ஷன் கிரேட் ஆசிரியர்களை விட ஜூனியராக இருக்கக் கூடியவர் ஒரு ரூ. 5 அதிகமாகப் பெறுகிறார். இது ஒரு வேடிக்கையான ஏற்பாடாக இருக்கிறது. 2—10—1971-லே சம்பளம் 'ரீபிக்ஸ்' செய்யப்பட்டிருக்கிறது. 1—1—1971-லே செலக் ஷன் கிரேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 2—10—1971-லே ரீபிக்ஸ் செய்யப்பட்டு ஜூனியராக இருக்கக் கூடியவன் 2—10—71-லே ரூ. 5 சம்பளம் அதிகமாகப் பெற்றுவிடுகிறான். இந்த முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகச் சொன்னாலும், இந்தப் பிரச்சினைகளைப் பற்றி அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டு நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். முதலமைச்சரவர்களை

குழுவில், மதிப்பிற்குரிய திரு. ராகவன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் போட்ட குழுவில் எடுத்துச் சொன்னோம். அது எந்தவிதச் சிபார்சும் செய்யவில்லை. ஒன் மேன் சமிட்டியில் அன்றைக்கு அழைத்துப் பேசிய நேரத்தில் நாங்கள் சொன்னோம். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் போராட்டத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் மே மாதம் 22-ம் தேதி அழைத்துப் பேசிய நேரத்தில், "நீங்கள் அந்த
5-40 பி.ப ஒன் மேன் கமிட்டியிடம் கொடுங்கள், உங்கள் பிரச்சினை பரிசீலிக்கப்படும்," என்று சொன்னார்கள். ஆனால் ஹையர் கிரேடு ஆசிரியர்களுடைய சம்பளம் மாற்றப்பட வேண்டும் என்று சொன்ன விஷயம் என்னவாயிற்று? இது வரை அறிக்கை என்ன சொன்னது என்று இந்த அவைக்குக் கூடச் சொல்லப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி.க்குப் பிறகு 2 ஆண்டு காலம் பயிற்சி பெற்றிருக்கக் கூடியவர்கள். ஒரே செக்ஷனில் இருக்கக் கூடியவர்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத்திற்கு ஒரு 'பாலிசி' இருக்க வேண்டும். ஒரு பாலிசிப்படி எஸ்.எஸ்.எல்.சி.-க்குப் பிறகு 2 ஆண்டுக் காலம் பயிற்சி பெற்றிருக்கக்கூடிய ஒரு கேடிகரிக்கு ஊதியவிகிதம் தருவார்களானால், இதே கேடிகரியில் இணைக்கப்பட்டிருக்கக் கூடிய அத்தனை பேர்களுக்கும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் சென்ற ஆண்டு போராடியதன் விளைவாக, செக்ரடேரியட் அசிஸ்டெண்டை அவர்களோடு இணைத்து, சீனியர் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் போல் சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த கேடிகரியில் உள்ள எல்லோருக்கும் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.

ஆனால் இன்றைக்கு இந்த செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும், அதே கேடிகரியிலே இருக்கக் கூடியவர்களுக்கு ஊதிய விகிதம் உயர்த்தப்பட்ட நிலைமைகளில், ஊதிய விகிதம் உயர்த்தப்படவில்லை என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசுத் துறையில் பல்வேறு இலாக்காக் களிலுள்ள ஊழியர்களுக்காக தினமும் இரண்டொரு ஆணைகள் போடப்படுகின்றன. நிதிக் கஷ்டத்தைப் பற்றியெல்லாம் முதலமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் தினமும் சில உத்தரவுகள் வந்துகொண்டே





யிருக்கின்றன. முதலமைச்சரவர்கள் செல்லக்கூடிய மாநாடுகளிலே சில வற்றில் அறிவிக்கிறார்கள். இதை நாங்கள் பார்க்கிறோம். முதலமைச்சரவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரிய சமுதாயத்திற்கும் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். 10 ஆண்டுக் காலம் பணி செய்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் வழங்கப்பட்டிருப்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் இந்த அறிவிப்பு பல இடங்களிலே சரியான அடிப் படையிலே பலன் அளிக்காமல் இருக்கிறது என்பதை நான தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 10 ஆண்டுகளில் செலக்ஷன் கிரேட் அந்தஸ்து அளிக்கும்போது, அது ரப்பர் ஸ்டாம்ப் செலக் ஷன் கிரேட் ஆசிரியர்களைப் போல சில நேரங்களிலே ஆகிவிடு கிறது. எப்படியென்றால் ரூ. 400 இப்போது செலக்ஷன் கிரேட் ஆசிரியர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 300 அடிப்படைச் சம்பளம். ரூ. 150 ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம்; ரூ. 180 செலக்ஷன் கிரேட். ஆனால் இது 15 ஆண்டுகள், 17 ஆண்டுகள் பணிசெய்தவர்களுக்குத்தான் வருகிறது. அவர்கள் ஏற்கெனவே இதைவிட அதிகமாகச் சம்பளம் வாங்குகிறார்கள். இப்படியிருக்கக் கூடிய நிலையில் செலக்ஷன் கிரேட் வழங்குவதனால் எந்தவிதமான ஊதிய உயர்வு,ஊக்குவிக்கக் கூடிய நிலையில்லை. ஸ்டாக்னேஷனைத் தவிர்ப்பதற்கு ஒரு ஊக்கம் கொடுத்துச் செயல் படுத்துவதற்காகத்தான் செலக்ஷன் கிரேட் கொடுக்கப்படுவதாக பே கமிஷன் அறிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் அந்த செலக்ஷன் கிரேடை அமல்படுத்தும்போது, குறைந்தது ஒரு நாலு இன்க்ரிமெண்டாவது கொடுக்கக் கூடிய சூழ்நிலையில்லை. செலக்ஷன் கிரேட் என்று சொல்லுவதற்கும் சாதாரண ஆசிரியர்கள் என்று சொல்லுவதற்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். சில நேரங்களிலே செலக்ஷன் கிரேட் ஆசிரியர்களை விட ஜூனியராக இருக்கக் கூடியவர் ஒரு ரூ. 5 அதிகமாகப் பெறுகிறார். இது ஒரு வேடிக்கையான ஏற்பாடாக இருக்கிறது. 2—10—1971-லே சம்பளம் 'ரீபிக்ஸ்' செய்யப்பட்டிருக்கிறது. 1—1—1971-லே செலக் ஷன் கிரேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 2—10—1971-லே ரீபிக்ஸ் செய்யப்பட்டு ஜூனியராக இருக்கக் கூடியவன் 2—10—71-லே ரூ. 5 சம்பளம் அதிகமாகப் பெற்றுவிடுகிறான். இந்த முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகச் சொன்னாலும், இந்தப் பிரச்சினைகளைப் பற்றி அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டு நாங்கள் கடிதம் எழுதியிருக்கிறோம். முதலமைச்சரவர்களை

இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பாக தீர்மானங்கள் போடப்பட்டு அந்தத் தீர்மானங்கள் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் ஆசிரியர்களை அழைத்துப் பேச வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கின்றோம். சில நேரங்களிலே அரசினுடைய...

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள்.

திரு. செ. முத்துசாமி: குறுக்கீடு கொஞ்சம் அதிகமாகிவிட்டது. குறுக்கீடு ஆகிவிட்டதனாலே கொஞ்சம் 'டைம்' கொடுங்கள் மாண்புமிகு தலைவரவர்களே. குறுக்கீடு இல்லாமல் பேசுவது என்பது குறுக்கீடுகளைப் பொறுத்திருக்கிறது. நான் அப்படியே பேசவேண்டுமென்று சொன்னால் வாழ்க, வளர்க, உயர்க என்று பாட்டுப் பேசிவிட்டால் தான் குறுக்கீடு இருக்காதே தவிர, தவறுகளைச் சொல்லும்போது கருத்துக்களிலே சில தெளிவு இல்லாத பொழுதிலே குறுக்கீடுகள் சட்ட மன்றத் துறைகளிலே அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், நான் நேரத்தைச் சொல்லுகிறேன் என்பதைத் தலைவரவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: நேரமானால் உங்களுக்கு வீணாகப் போய்விடுமே என்று சொன்னேன். குறுக்கீடு வந்தால், உங்கள் நேரம் நஷ்டமாகிவிடும். நான் உங்களை அமைதிக்காக சொன்னேபோயிருக்கவேண்டுமா 25 நிமிஷம். 10 பேர் இருக்கிறார்கள். நாளைக்குக் கடைசி நாள். நீங்கள் தானே 'அட்ஜஸ்ட்' செய்ய வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அடுத்து

"சொல்லுதல் யார்க்கும் எளியவாம்;
அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்"

என்று சொல்லியிருக்கின்றார்கள். பல அறிவிப்புகள் அமைச்சர்களால் ஆசிரிய சமுதாயத்திற்கென்று சொல்லப்பட்டிருக்கின்றன. பல அறிவிப்புகள் நம்முடைய அமைச்சர் பெருமக்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் செயல்படுத்தாமல் இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கொடுத்த அறிவிப்புகளைச் செயல்





படுத்துவதற்கான முயற்சிகளிலே, ஆசிரிய இயக்கங்களிலே தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய கூட்டணியின் மாநிலச் செயல் குழுவை அழைத்துப் பேச வேண்டுமென்று வேண்டுகோள் விட்டு, இதுவரையிலும் வேறு சட்டமன்றப் பணி இருக்கிறது என்று சொன்னாலும் கூட, பின்னால் அதைத் தருகிறேன் என்ற ஒரு குறிப்பாவது, ஒரு கடிதமாவது பதில் எழுதுவதற்கு எத்தனை பி.ஏ.-க்கள் அமைச்சர்களுக்கு இருக்கிறார்கள்? "நாங்கள் கடிதங்கள் எழுதுகிறோம். எழுதுவதற்கு ஒரு பதிலாவது அனுப்பக் கூடாதா?" என்று நான் இந்த நேரத்திலே வருத்தத்தோடு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து இந்தப் பிரச்சினைகளைச் சொல்லும் போது, ஏதாவது வேண்டுகோள் விடுக்கும்போது, அதற்கு ஒரு பதில் அனுப்பக் கூடிய நடைமுறையைக் கல்வித் துறையிலே ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, இந்த ரூ. 450 கோடி இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வரும்போது ரூ. 150 கோடி கல்விக்கும் உள்ளாட்சித் துறைக்கும் செலவிடப்படுகிறது. இவ்வளவு பெரிய தொகை, இவ்வளவு பெரிய நிதியை நிர்வகிக்கும்போது, அதற்கு ஒரு டிபுடி மினிஸ்டராவது போட்டு, எலிமெண்டரி எஜுகேஷனைப் பொறுத்த வரையில், மிகச் சரியாகக் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுடைய தொகை அதிகமாகிவிட்ட காரணத்தால், டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் என்ற முறையிலே வைத்துக்கொண்டு, பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் பைல்கள் கட்டி வைக்கப்பட்டு, கட்டி வைக்கப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறதே தவிர, எலிமெண்டரி எஜுகேஷனுக்கு என்று தனியாக ஒரு டைரக்டர் நியமித்து இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1 ஆம் தேதி சம்பளம் பஞ்சாயத்து யூனியனிலே கொடுக்கப்படு மென்று உத்தரவாதம் கொடுக்கப்பட்டு இரண்டுக் காலம் சரியாக நடந்தது. இப்போது மீண்டும் 24 பஞ்சாயத்து யூனியன்களிலே 1-ந்தேதி சம்பளம் கொடுக்காத நிலையிலே, ... அலுவலகத் திலே இதுவரை சம்பளம் கொடுக்காத நிலைமையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ... அரசு இதிலே கவனம்

செலுத்தி அந்த ஆசிரிய சமுதாயத்திற்கு 1-ந்தேதி சம்பளம் கொடுப்பதற்கான நிலைமைகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். 10 ஆண்டு சேவை செய்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் வழங்கப்பட்டிருக்கும் இதே அறிவிப்பை, தொடக்கப் பள்ளிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும், ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும் வழங்குவது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று இந்தக் கல்விக் குறிப்பிலே அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன. கல்வி அமைச்சர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அறிவித்திருப்பதை, முதலமைச்சரவர்கள் இன்று தொடக்கப் பள்ளி ஆசிரிய சமுதாயத்திற்கும் நீட்டித்துக் கொடுக்க வேண்டும், அதை விரிவாக்கிக் கொடுக்க வேண்டும். அது கொள்கையாகிவிட்ட காரணத்தால், மற்றவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். செலக்ஷன் கிரேட் வழங்கும்போது குறைந்தது நாலு, கூடிய உயர்வுகள் 'வெயிட்டேஜ்' ஆவது கொடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, கோரிக்கைகள் எதையாவது கேட்கும்போது வேகமாக எதையாவது கேட்டால், இவர்கள் அரசியலில் தூண்டப்பட்டிருப்பார்கள் என்று அன்றைக்குக் கூட அவையிலே ஒருவர் சொன்னார். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அரசியல் உணர்ச்சியோடு எதிலும் ஈடுபடவில்லை. இந்த ஆட்சி 1967-ல் அமைந்தது. 1967-க்கு முன்னாலும் பலவற்றைக் கேட்டுப் பார்த்தோம். கிடைக்கவில்லை. கிடைக்காத ஏமாற்றத்தால் 1967-க்குப் பின் வந்த இந்த அரசு பலவற்றைச் செய்யுமென்று நம்பினோம். நம்பிக்கையின் அடிப்படையிலே பல காரியங்களைக் கேட்டோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது ஒரு முறை நாங்கள் வேகமாக இங்கே கோட்டை முன் வந்தபோது கூட அவர்கள் ஓர் அறிக்கை எழுதியிருந்ததைப் பார்த்தோம் கோட்டை முன்னால் சி.சி.ஏ. பிரச்சினைக்காக 3,000 ஆசிரியர்கள் வந்து விட்டார்கள். மறைந்த பெரியவர் மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்கள்தான் அப்போது ஆசிரியர்களைச் சமாதானப்படுத்தி அண்ணா அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அழைத்துச் சென்ற நேரத்திலே அண்ணா அவர்கள் சொன்னார்கள் "கோட்டையை நோக்கி நீங்கள் ஊர்வலம் வருவதை நான் தவறாக நினைக்கமாட்டேன். இங்கே கோட்டைக்கு நீங்கள் அப்படி வந்து விட்டால், நான்கு பேர்களுக்கு மத்தியிலிருந்து பாடம் சொல்லிக்





கொடுக்கும் ஆசிரியர்கள் அதை விட்டு வரக்கூடிய அளவுக்கு அதிகாரிகளே, நீங்கள் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டீர்களே என்று அவர்களுக்குச் சுட்டிக் காட்டி உடனடியாகக் காரியத்தைச் செய்வதற்கு அதைப் பயன்படுத்திக் கொள்வேன்," என்று மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை இந்த நேரத்திலே நினைவுபடுத்திக்கொள்கிறேன். "செவிகைப்ப சொற்பொறுக்கும் பண்புடைய வேந்தர்" என்று இங்கே காட்டப்பட்டிருக்கக்கூடிய குறளின் அடிப்படையிலே நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன். பல கோரிக்கைகளையும் ஆசிரிய சமுதாயம் இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய தேவையின் அடிப்படையிலே கேட்கும். கேட்கக் கூடிய கோரிக்கைகளை வலிமையாக வைப்பதை கருத்து வேறுபாடாகக் கருதாமல், அரசியலில் தூண்டிவிட்டார்கள் அல்லது வேறு தூண்டுதல் என்று கருதாமல், அந்தந்த சமுதாயத்தினுடைய எண்ண உணர்ச்சியின் காரணமாக, எழுச்சியின் காரணமாக, அந்தச் சங்கங்கள் முடிவெடுத்ததன் காரணமாக, அந்தக் கோரிக்கைகளை மற்றவர்கள் பெற்றுவிடும் போது, தாங்களும் பெற்றுவிட வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக இன்றைக்கு இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன. இங்கே செகரடேரியட்டில் உள்ளவர்கள் கறுப்பு பாட்ஜ் அணிந்தார்கள். அவர்களுக்கு இன்கிரிமெண்ட் உயர்த்தப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு மற்ற சங்கங்களிலே மற்ற மாநாடுகளிலே இம்மாதிரி உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பலருக்கு அறிவித்துக்கொண்டேயிருக்கக்கூடிய நேரத்திலே, ஆசிரியப் பெருமக்களுக்கு, தொடக்கப் பள்ளி ஆசிரியப் பெருமக்களுக்கும் ஹையர் கிரேட் செகண்டரி கிரேடுக்கும் உயர்வு இல்லாமலிருப்பது கண்டு மிக வேதனையோடு நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதை உடனடியாகத் திருத்தியமைப்பதற்கும் மாற்றியமைப்பதற்கும் ஒன்றுமே செய்யவில்லையா என்று கேட்கிறார்கள். செய்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் என்றைக்குமே மறுத்ததில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: செய்ததற்கு நன்றியாவது தெரிவிக்கக் கூடாதா என்று தான் கேட்டேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, செய்ததற்கெல்லாம் நன்றியை ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொண்டு நேரத்தை வீணாக்க வேண்டாமென்று கூடச் சொன்னார்கள். ஒவ்வொரு

முறையும் நாங்கள் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம். சென்ற கூட்டத்திற்கும் இந்தக் கூட்டத்திற்கும் இடையில் எந்த வித அறிவிப்பும் இல்லை. அறிவிப்பு இருக்கிற நேரத்தில் நாங்கள் சொல்லத்தான் செய்வோம். ஒவ்வொரு நாள் சொல்லுகிறேன். அமைச்சர்கள் சொல்லியதை வைத்து ஒன்று சொல்லுகிறேன். இந்த ரூ. 10 விலைவாசி ஈட்டுப்படியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஈட்டுப்படி கொடுப்பதைப்பற்றி நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், வரவேற்கின்றோம். அந்த ஈட்டுப்படி கொடுக்கப்பட்டும், எந்த விலைவாசி உயர்வை ஈடுகட்டக் கொடுக்கப்படுகின்றதோ அதை ஈடு கட்டிக் கொள்வதற்காக அது வழங்கப்படாமல் அது சேமிப்பிலே சென்று விடும்போது ஆசிரியர்களுக்கு உண்மையான பயன் கிடைக்கவில்லை என்பதையும் நாங்கள் தெரிவித்திருக்கிறோம். ஏற்கெனவே வரவேற்று அறிக்கை கொடுத்திருக்கின்றோம். எங்களுடைய கமிட்டியிலே தீர்மானம் போட்டிருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்டதற்குப் பதிலாகச் சொல்லி, ஆசிரியப் பெருமக்களுடைய பிரச்சினைகளில் விரைவாக ஒரு தேதியைக் குறிப்பிட்டு, தொடக்கப் பள்ளி ஆசிரிய சமுதாயத்தினை அழைத்து, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய மாநில செயல் குழுவை அழைத்து, பிரச்சினைகளைப் பற்றிப் பேச வேண்டும். பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்சினையை முதலமைச்சரவர்கள் வேகப்படாமல், கோபப்படாமல் பார்த்து, தீர்த்துவைக்கும் முறையில் சில அறிவிப்புகளை இப்போதே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின்மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே பேசுகையில், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள். . . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** உங்களுக்கு உடம்பு சரியாக இல்லாவிட்டால் நாளைக்குப் பேசலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவர் அவர்களே, வணக்கம். நாளைக்குப் பேசுகிறேன்.



* திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவரவர்களே, பி.ப.
இந்த அவையின் முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5-50
சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கை [illegible] நலன்கள் அடங்கியது என்று கருதுமாறு வரவேற்கிறேன். இன்று ஆளுகின்ற கட்சியின், அதன் செல்வாக்குள்ள ஆட்சியின் தோழன், தோழமைக் கட்சியின் என்ற முறையில் இந்த அவையில் பங்கு கின்ற பெருமையை அடைந்ததற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆட்சியைப் பாராட்டுவதற்காகவே தோழமைக் கட்சியாக நான் இருக்க வேண்டிய அவசியமில்லை. பாராட்டப்படக்கூடிய ஒரு ஆட்சியாக அமைந்திருக்கிறது என்ற முடிவின் பின்னால்தான் தோழமைக் கட்சியாக ஆகியிருக்கிறோம் நானும் என் போன்ற கட்சியினரும். ஆளுங் கட்சியின் தோழமைக் கட்சியான என்ற உறவை விடவும்—கட்சியோடும் ஆட்சியோடுமுள்ள தோழமையையும் நல்லெண்ணத்தையும் விடவும்—தமிழ் இனத்தோடும் தமிழ் நாட்டோடும் எனக்குள்ள உறவுகள், நல்லெண்ணங்கள், புறக்கணிக்க முடியாதவை. இந்த ஆட்சி அறிவித்துள்ள நலன்களையெல்லாம் ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்க விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையைத் திருக்குறளில் தொடங்கி திருக்குறளில் முடித்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அதற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். "இந்த இரண்டு திருக்குறள் மக்களுக்கு என்ன வழங்கின". என்று கேட்கலாம். இன்னும் என்ன வழங்க வேண்டும்? தமிழனுக்கு தன்மானத்தை வழங்குகின்றன. ஆகையினால், திருக்குறளில் தொடங்கி திருக்குறளில் முடித்த நிதியமைச்சருடைய தமிழ் மனப்பான்மையைப் பாராட்டுகிறேன். ஒரு அவையில்; ஒரு உறுப்பினர், "திருக்குறள் பஜனை செய்தார் முதலமைச்சர்" என்று நிதிநிலை அறிக்கை பற்றிப் பேசுகிறபோது சொன்னார். உடம்பில்—நாடி நரம்புகளில் தமிழ் உணர்வு ஓடுகின்ற யாரும் "திருக்குறளில் பஜனை செய்கின்றார்" என்று கேலி செய்ய விரும்ப மாட்டார். இருந்தாலும் தமிழ் இனத்தின் தாராள மனப்பான்மை—ஆளுங் கட்சியினுடைய இனத் துவேஷமற்ற கொள்கை அந்த அளவுக்கு அவருக்கு ஆணவத்தை வழங்கியிருக்கிறது. தமிழ் நாட்டில் திருக்குறளைப் பற்றிக் குறை சொல்லவும் ஒரு நபர் இருக்க முடிகிறது, அவரும் தமிழர்கள் ஆதரவால் சட்ட மன்றத்திற்குள் நுழையும் சாத்திய

மாகிறது என்பதை மிகுந்த வேதனையோடு பத்திரிகையில் நான் படித்தேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கை—உண்மையாகவே சொல்கிறேன்—சோஷலிசக் கண்ணோட்டத்தில் தயாரிக்கப்பட்டது. சோஷலிசம் என்ற சொல்லை பிறர் பயன்படுத்துவது போன்ற நிலையில் நான் பயன்படுத்தவில்லை. உங்கள் எல்லோருக்கும் தெரியும், கையுழைத்து வாழும் பாட்டாளியாக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியவன் நான் என்பது. சோஷலிசத்தை ஒரு கட்சி நலத்துக்கோ அல்லது ஒரு வாதத்திற்கோ, உதட்டளவிலான உபதேசமாக நான் கொள்ள முடியவில்லை. நான் பிறந்து, வளர்ந்து, இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிற பாட்டாளி வர்க்கத்தின் நன்மைக்கு இது ஒன்றுதான் தாரக மந்திரம் என்று அனுபவ ரீதியாக எண்ணுகின்ற காரணத்தினால்தான் நான் சோஷலிசத்தை நம்புகிறேன். இந்த ஆட்சி சில பல நன்மைகளைச் செய்திருக்கிறது என்றால், அது யார், யாருக்கென்று தொகுத்துப் பார்த்தேன். சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டவர்களாக—பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கின்ற நலிந்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, பட்டியல் போட்டு, அந்த நலிவுற்ற பகுதிகளுக்கு எதை எதை அவசரம் அவசரமாகச் செய்ய வேண்டும் என்பதை ஆய்ந்து முடிவு எடுத்து, இந்தப் பட்ஜெட்டில் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துத்தான் இதை "சோஷலிஸ்ட் பட்ஜெட்" என்று உறுதியாகச் சொல்கிறேன். அந்த வார்த்தையை உபயோகிப்பது நான் பாராட்டப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்லது ஆட்சியைப் பாராட்ட வேண்டுமென்பதற்காகவோ சொல்லவில்லை. சோஷலிச பட்ஜெட் என்பதற்கு நிதி நிலை அறிக்கையில் நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற சில வாக்கியங்களே சான்றாக அமைகின்றன.

"உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவைகள் ஒளி விட வேண்டும் என்பதில் அந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு. அவசரக் கோலம் அலங்கோலமாகிவிடும் என்பதையும் கருத்தில் கொண்டு, படிப்படியாக—ஆனால் உறுதியாக சமதர்மக் கொள்கைகளை நடைமுறைப்படுத்திவருகிறோம். அறிவிக்கப்பட்ட சமதர்மத்





திட்டங்கள்—சட்டங்கள் எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், மேலும் நாம மேற்கொள்ள இருக்கின்ற அடுத்த கட்ட சமதர்மத் திட்டங்களையும்—இந்த நிதிநிலை அறிக்கை கோடிட்டுக் காட்டுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியுடைமைகளைத் தேசிய உடைமைகளாக்குவதால் தனியார் ஆதிக்கம் இளைக்க வைக்கப்படுகிறது என்றாலும் தேசிய உடைமையாக்கப்பட்ட அந்தத் தனியார் உடைமைகள், தரித்திர நாராயணர்களாய்த் திரியும் வசதியற்ற லட்சோபலட்சம் அடித்தளத்து மக்களை வாழவைக்கப் போதுமானவைகளல்ல என்பதை மறந்திடலாகாது. வேலை வாய்ப்புகளின் வாயிலாக வறுமையை வெளியேற்றுவதின் வாயிலாக அனைவரையும் வாழவைக்கலாம்—வசதிகளைத் தரலாம் என்பது இன்பகரமான நம்பிக்கைதான் எனினும், அந்த நம்பிக்கை விளிம்பை அடைய இடையில் உள்ள தொலைவை எண்ணிப் பார்த்து அதற்குள்ளாகக் காலம் கடத்தாமல், ஏழை எளியோர்க்கு, இரப்போர்க்கு, குடிசை வாழ்வோர்க்கு, குருடாகி விட்டோர்க்கு, வீடு மனை இல்லாதோர்க்கு, நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம்".

இந்தக் கண்ணோட்டத்தோடு தயாரிக்கப்பட்டதால்தான் இந்த பட்ஜெட் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களைக் கவரத் தக்கதாகவிருக்கிறது. முன்னிருந்த ஆட்சியாளர்களையோ, வேறு மாநிலங்களில் இன்றுள்ள ஆட்சியாளர்களையோ, மத்தியிலுள்ள ஆட்சியாளர்களையோ சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களிடம் நல்லெண்ணம் இல்லாதவர்களென்று குற்றஞ்சாட்ட நான் விரும்பவில்லை. ஆனால், அந்த ஆட்சிகளை நடத்திய—நடத்துகின்ற கட்சிகளுக்குள் புகுந்துள்ள ஆதிக்க சக்திகள் பலம் வாய்ந்த சக்திகளாகி, அவற்றிற்கு ஆட்சியாளர்கள் அடிமையாகும் நிலை ஏற்பட்டதன்காரணமாக, பிரச்சினைகளை அணுகும் முறையிலே வேறுபாடு இருந்து வருவதைப் பார்த்தோம்—பார்க்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் நிலை வேறு. சமுதாயத்திலுள்ள சாதாரண மக்களிலிருந்து வந்த ஊழியர்களைத் தலைவர்களாக்கி, அந்தத் தலைவர்களிலிருந்து சிலரை அமைச்சர்களாக்கி, தி.மு.க. அரசு நடைபெறுகிறது; அதனால், ஆளுங்கட்சிக்குள் உள்

போராட்டமில்லை. 'முற்போக்காளர்—பிற்போக்காளர்' என்று பேசுவோர் இல்லை. வேறு கட்சிகளில் முற்போக்கு பிற்போக்கு என்று பேசுவோருண்டு. அதனால் பிளவுகள் தோன்றி, பணிந்து போகும் நிலையைக் காண்கிறோம். அந்த நேரங்களில் முற்போக்குத் தத்துவத்தின் முனை முறிந்து போவதையும் பார்த்திருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையானாலும் சரி, சட்ட மன்றக் குழுவானாலும் சரி, பொதுக்குழு, செயற்குழு வானாலும் சரி; உட்போராட்டத்தை வளர்க்கும் ஆதிக்க சக்திக்கு அங்கெல்லாம் இடமில்லை. இருந்தாலும் அந்த ஆதிக்கம் வாலாட்ட முடியாது. இவ்வளவு நல்ல சூழ்நிலையில் தி.மு.க. அரசு இருப்பதன் காரணமாகத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சோஷலிச பட்ஜெட்டைத் தயாரிக்க முடிந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு நல்ல பட்ஜெட்டைத் தயாரித்து, எப்படி சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்குப் பயன்படத்தக்க திட்டங்களை உருவாக்கி, அவர் களையும் செல்வாக்கைப் பெற்று வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் பிரச்சினைகளை எவ்வளவு சிறந்த முறையில் அணுகுகிறார்கள் என்பதை இந்த பட்ஜெட் எடுத்துக் காட்டுகிறது. அதற்காகத்தான் பாராட்டுகிறேன்.

சென்னைக்கு அருகில் ஒரு துணை நகரம் அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. 1948-ல் நான் சென்னை மாநகராட்சியின் ஆல்டர்மேனாக இருந்தபோது இந்தத் திட்டத்தைச் சொன்னேன். இதனை முதலமைச்சரோடோ, அமைச்சரவையோடோ அறிவுத் திறனில் நான் போட்டி போடுகிறேன் என்று யாரும் எண்ண வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சென்னை வாசி என்ற சுயநலத்தின் காரணமாக இதைச் சொன்னேன். அந்தத் திட்டம் இன்று ஏற்பட்டு ஒரு துணை நகரம் அமைய இருக்கிறது. துணிவுடனும் தெளிவுடனும் எதையும் செய்யும் ஆற்றல் மிகுந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்; இந்தத் துணை நகரத் திட்டத்தையும் நிறைவேற்றுவாராக!

கூவம் நதியைச் சீரமைப்பு செய்யும் பணிகள் எடுத்த இந்த அரசு பக்கிங்காம் கால்வாய் நாற்றத்தையும் போக்க முன் வந்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். என் வீட்டுக்குப் பின்னால்





ஓடும் இந்தக் கால்வாயிலிருந்து அடிக்கும் துர்நாற்றம் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது. இதை வெகு நாள் தள்ளிப் போடாமல் சீக்கிரமே செய்து முடிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பக்கிங்காம் கால்வாயின் நாற்றம் கூவம் நாற்றத்தைவிடவும் அதிகமாக உள்ளது. நான் அந்தக் கால்வாயின் பக்கத்தில் போகவேண்டியவனாக இருப்பதால், இதை அடிக்கடி அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். அவ்வளவு பெரிய நாற்றம், அவ்வளவு பெரிய அசிங்கம். அதைப் போக்குவதற்காக எடுத்துக்கொண்டுள்ள முயற்சிக்குப் பாராட்டுகிறேன்.

மற்றொன்று, தாழ்த்தப்பட்டோருக்கு குடியிருப்புகள் அமைத்துக் கொடுப்பதற்கு தனிக் கழகம் கண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோருக்கு குடியிருப்பு அமைத்துக் கொடுக்கும் இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களும், மத்தியும் கூட பின்பற்றலாம். இந்த அரசு பிரச்சினைகளை அணுகுகின்ற முறைக்கு தெளிவுக்கு இதுவும் சான்றாக இருக்கும். அந்தக் கழகத் தலைவராக தி.மு.க.விலுள்ள ஒருவர் வந்துவிடுவாரோ என்று யாரும் கருத வேண்டாம். ஏனென்றால், அந்த வாரியத்தை அதிகாரி ஒருவர் தலைமையில் அமைக்க வேண்டுமென்று முதல்வர் சொல்லியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதைக்கூட சம்பந்தி ஜாதியாருக்கு முதல்வர் சலுகை காட்டியிருக்கிறார் என்று சொல்வார்களோ என்னவோ. சலுகை காட்டக்கூடிய ஜாதி என்று தெரிந்து சம்பந்தியாக்கிக் கொண்டாரே, அதற்காக இன்னொரு முறை எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகாத்மா காந்தி அடிகள் இருந்திருந்தால், முதல்வர் மகன் திருமண நாள் அன்று வாழ்த்துச் செய்தி அனுப்பியிருப்பார் அல்லது நேரிலேயே வந்து வாழ்த்தியிருப்பார். வேறு எந்த முதலமைச்சரைவிடவும் இந்த முதலமைச்சரே காந்தி அடிகளின் பாராட்டுதலுக்கு உரியவராவார் என்று உறுதியாகச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டில் விளை நிலங்களை உழுபவனுக்கே உடைமையாக்கக்கூடிய நிலைமையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் செய்துள்ள உச்சவரம்புச் சட்டங்களை விட, இது மிகச் சிறப்பு வாய்ந்தது. நம்முடைய நண்பர் திரு.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1973 மார்ச் 6

சுவாமிநாதன் அவர்கள், நிலச்சுவாந்தார்கள் சார்பாகப் பேசிய போதுகூட, இதை அவர் ஆட்சேபிக்காதது எனக்கு நல்லதொரு மகிழ்ச்சியைத் தந்தது. வேறு பல காரணங்களை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பணம் இல்லாதவர்களுக்கு பணம் கொடுத்து, உழுகிற நிலங்களை உழவர்களுக்கு உடைமையாக்குகிற திட்டத்தைக் கொண்டு வந்து, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக நீங்கள் இருக்கிறீர்கள். இதுதான் சரியான முறையில நிலவுடைமைப் பிரச்சினையை அணுகுவதாகும். அதிலேயுங்கூட, சிறிய நிலச்சுவாந்தார்கள் பாதிக்கப்படாமல பார்த்துக்கொள்ளக் கூடும் என்று முதல்வர் கூறினார். அதை வரவேற்கிறேன்.

மற்றொரு முக்கியமான நிலையைப் பார்க்கிறேன். வரி இல்லாத பட்ஜெட் ஒன்றை நீங்கள் தந்திருக்கிறீர்கள். என்னுடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள், "போட வேண்டிய வரிகளை யெல்லாம் போட்டு முடித்து விட்டதால், இது வரியில்லாத பட்ஜெட்டாக இருக்கிறது" என்று பத்திரிகையில் அறிக்கை விடுத்தார்கள். இன்னொன்று, அவர் என்னோடு சேர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்; குறை சொல்வதற்காக வல்ல; புது வரி போடுவது வேறு; இருக்கிற வரியை உயர்த்துவது வேறு. இந்த ஆட்சி இதுவரை இருக்கிற வரியை உயர்த்தியதே தவிர, புதிய வரியைப் போடவில்லை. புது வரி போடாததற்குக் காரணம் ஏற்கெனவே போட்டு முடிந்துவிட்டதுதானேயன்றி, அப்படி அவைகளைப் போட்டு முடித்தவர்கள் 1966-க்கு முன்பிருந்தவர்கள். புதிதாக வந்தவர்கள் போடுவதற்கு வழியில்லாமல், அவர்களே வரிகளையெல்லாம் போட்டுவிட்டார்கள். இந்த ஆண்டில் பழைய வரிகளை உயர்த்துவதற்கும் அரசு முயலவில்லை. நானும் முதலமைச்சர் அவர்கள் நெஞ்சோடு சேர்ந்திருந்து, நினைக்கிறேன்; அவர்கள் புது வரி போட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால், யார் தாங்குவார்களோ அவர்களுக்குப் புதுவரி போட்டு, அதை எடுத்துத்தான் ஏழை மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும். ஆனால், தாங்கிக்கொள்பவர்களுக்கு வரி போட இந்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையென்பதை நாம் இங்கு உணர்கிறோம். அதைத் தெளிவாக முதலமைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



1973 மார்ச் 6] [திரு. ம. பொ. சிவஞானம்]

துணைத் தலைவர் என்ற செல்வாக்கோடு அதிக நேரம் பேசி தலைவருக்குத் தொல்லை கொடுக்காமல் விஷயத்தைச் சுருக்கமாகப் பேசுகிறேன்.

சுயாட்சியைப்பற்றி நம்முடைய முதல்வரவர்கள் மிகத் தெளிவாக இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கையில் "இப்படிப்பட்ட பல நிலைகளில் எப்படி மத்திய அரசு, மாநிலத்திற்குரிய வேளாண்மை, கல்வி, நல் வாழ்வு போன்ற மற்றைய துறைகளிலும் மேலுரிமை ஏற்கும் பழக்கம் நிற்க வேண்டுமென்று நாம் அவர்களிடம் கூறியுள்ளோம்" என்று முதல்வரவர்கள் கூறியுள்ளார்கள். அரசியல் சட்டப்படி கிடைத்துள்ள உரிமையைக்கூட சில கமிஷன்கள், சில கமிட்டிகள் என்ற பெயர் கொண்டு, அவைகள் மூலமாக மாநில அரசின் மீது மேலாதிக்கம் பெறுகிற ஒரு நிலையை, மத்திய ஆட்சி செய்வதைப் பார்க்கிறோம். 'இத்தகைய இடர்ப்பாடுகளைக் களைந்து, தயக்கமின்றி தகைசால் திட்டங்களை நிறைவேற்றத்தான் மாநில அரசுகள் முழுமையான சுயாட்சித்தன்மையோடு விளங்க வேண்டுமென்று இந்த அரசின் கொள்கையை வலியுறுத்தி வருகிறோம். மத்தியிலும், மாநிலங்களிலும் ஆளுகின்றவர்களைப் பொருத்தில்லாமல், மத்திய-மாநில உரிமைகள் அரசியல் சட்டப்படி நிலை பெற வேண்டும், வலுப்பெற வேண்டும்" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்தியில் உள்ள இன்றைய பிரதமர் கொஞ்சம் தாராளமாக நடப்பதாக வைத்துக்கொள்ளலாம். மத்தியில் ஆளுகின்ற கட்சியும் இன்று தாராளமாக நடப்பதாக வைத்துக்கொள்ளலாம். அதுவல்ல நமக்குப் பாதுகாப்பு. 'மாநிலங்களுடைய உரிமை' என்பதைவிட சரியான வார்த்தை 'தமிழ் இனத்தின் உரிமை' என்பது தான். மாநிலங்கள் என்பதெல்லாம் மொழி அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு மாநிலமும் ஒரு மொழிவழி தேசிய இனத்தின் வீடாக, தாயகமாக இருக்கிறது. தமிழ் இனத்தின் சுயாட்சி என்பது பிறப்புரிமை—தமிழகத்தின் சுயாட்சி என்பது தமிழ் இனத்தின் பிறப்புரிமை. இது இனவேற்றுமை மனப்பான்மையில் சொல்வதல்ல. ஒவ்வொரு மொழி வழி இனத்திற்கும் ஒவ்வொரு மொழி வழி மாநிலத்திற்கும் அந்த சுயாட்சி உரிமை இருக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டு, அகில இந்திய அடிப்படையில் இந்தப்

பிரச்சினையை அணுகுவதால், இது பிரிவினை மனப்பான்மையோ அல்லது பிளவு மனப்பான்மையோ என்று யாரும் எண்ணத் தேவையில்லை.

இப்போது என்ன நாட்டில் நடக்கிறதென்று பார்க்கிறோம். இன்று நெசவாளர்கள் பிரச்சினை—நூல் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இந்தத் தவறுக்கு யார் காரணம்? மத்திய அரசா, மாநில அரசா என்று விவாதம். அடுத்து மின்வெட்டுப் பிரச்சினை. இந்தத் தவறுக்கு மத்திய அரசு காரணமா அல்லது மாநில அரசு காரணமா என்ற பிரச்சினைகள். ஒருநாளுக்கும் நேரிடுகிற வகையில் இந்தப் பிரச்சினைகள் நம்மை வந்து நமது இதயக் கதவைத் தட்டிவிட்டுப் போகின்றன. இந்த இரண்டு பிரச்சினைகளிலிருந்தும் என்ன தெரிகிறது? மத்திய அரசானது பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு உறவு என்ற மூன்றோடு நின்றிருக்குமேயானால், இந்த மாதிரியான பொதுத் தகராறுகளோ ஏற்பட வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. இது ஒன்று மட்டுமல்ல. இனி எந்த நெருக்கடி நாட்டில் தோன்றினாலும், எந்தப் பிரச்சினை மக்களைப் பாதித்தாலும், அந்தப் பிரச்சினையில் மத்திய—மாநில அரசுகளிடையே போராட்டம் ஏற்படத்தான் செய்யும். முன்பு மத்தியில் அமைந்திருந்த கட்சியினரே இங்கேயும் ஆட்சி புரிந்து வந்திருந்தார்கள். எனவே, அவர்கள் அந்த உண்மைகளை எடுத்துச் சொல்லாமல் மறைத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது மத்தியில் ஒரு கட்சி, மாநிலத்தில் வேறு கட்சியென்று ஏற்பட்டுவிட்டதால், எந்தப் பிரச்சினையிலும் மாநிலத்திலுள்ள ஆளும் கட்சி, தனக்குள்ள பலவீனத்தை மக்கள் முன்னே எடுத்துச் சொல்வது இயற்கை. ஆகவே, இப்படி வெளிப்படையாக இங்குள்ள ஆட்சியும், கட்சியும் குறை சொல்வதால், அதிலிருந்து தப்பித்துக்கொள்ள, இந்தக் கட்சியின் மீது பழிபோடுவதற்கு மத்திய ஆட்சி திருப்பிச் சொல்வது இயற்கை. இது சபையில் என்னவாகும்? 'ஸ்டேட்-சென்ட்ரல் ரிலேஷன்ஷிப்' என்று டாக்டர் ராஜமன்னார் குழுவுக்குப் பெயர் வைத்தீர்களே, அந்த ரிலேஷன்ஷிப் சரியாக இருக்காது மாநில-மத்திய உறவு இனி அபாயகரமாகப் பாதிக்கப்படுமென்பதனை இந்த மின் வெட்டு, நெசவாளர் நூல் பஞ்சம் மிகத் தெளிவாகக் காட்டுகிறது. நெசவாளர்கள் சார்பிலும், மின் வெட்டால் பாதிக்கப்பட்டுள்ள கோடிக் கணக்கான மக்கள் சார்பிலும்,



மாநில-மத்திய அரசுகளை வேண்டுகிறேன், மாநில சுயாட்சி வருவதற்கு முன்பு ஒரு இடைக்காலமிருக்கலாம். ஆகவே இரண்டு அரசுகளும் சமரசமாகக் கலந்து பேசி, விரைவில் மக்களுடைய இன்னல்களைத் தீர்க்க வேண்டும்.

நெசவாளர்கள் ஏற்கெனவே பயங்கரமான தரித்திரத்தில் வாழ்கிறார்கள். பரிதாபத்திற்குரிய அந்தச் சமுதாயம் தொழிலாளி வர்க்கமாக மட்டுமல்லாமல், பிறப்பு வழியில் ஒரு ஜாதியாகவும் இருந்திருப்பதால், ஒரு நெசவாளிக்கு வேலை போய்விட்டதென்றால் அவன் மச்சான் வீட்டுக்கு சோற்றுக்குப் போக முடியாது, பங்காளி வீட்டுக்கு சோற்றுக்குப் போக முடியாது. அவர்கள் வீட்டிலும் அடுப்பில் பூனை தூங்கக்கூடிய அளவுக்கு அந்தத் தொழில் ஜாதி அமைந்திருக்கிற கொடுமையை நாம் நினைத்துப் பார்த்தால், அவர்கள் போராடுவதைக் கண்டு நாம் வியப்படைய முடியாது. அவர்களுக்கு நிவாரணம் காட்ட, மத்திய-மாநில அரசுகள் ஒன்று சேர்ந்து பரிகாரம் காண வேண்டும்.

மத்தியில் இருக்கிற இரண்டு மந்திரிகள் இங்கே அடிக்கடி வந்து பேசுவதைப் பார்த்தால், மாநில சுயாட்சி இப்பொழுதே வந்து தீர வேண்டுமோவென்ற எண்ணம் ஏற்படுகிறது. அந்த மந்திரிகள் தி.மு.க. அரசைக் குறை கூறுவதற்கென்றே வந்து வந்து போகிறார்கள். அவர்கள் இங்கு வருகிறபோது அகில இந்தியப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதில்லை. மத்திய மந்திரிகளாக இருப்பவர்கள், அண்டையிலுள்ள ஆந்திரப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதில்லை. இங்கே வரும்போதெல்லாம் இந்த ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்துங்களென்று மக்களைத் தூண்டிவிட்டு அமைச்சர்கள் பேசுகிறார்கள். அந்த அளவுக்கு ஏன் பேச வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன? எனக்கு ஒன்றுதான் படுகிறது. நான் அவர்களுடன் இருந்தவன், பழகியவன் என்பதால் அது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் அடிக்கடி வந்து அப்படிப் பேசினால்தான் அவர்கள் கட்சி நன்றாக இருக்கிறதென்பது தெரிகிறது. அதற்காக அவர்கள் மாநில-மத்திய உறவை மறிக்க வேண்டாம். அப்படி அவர்கள் வந்து பேசித்தான் அவர்களது கட்சிக்கு விளம்பரம் தேட வேண்டும், வலுத் தேட வேண்டும் என்றால், அவர்கள் அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு வந்து, இங்கே மாநில

[திரு. ம. பொ. சிவஞானம்] [1973 மார்ச் 6

கட்சித் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டு, இந்த ஆட்சிக்கு எதிர்க் கட்சியாகப் பேசட்டும். அந்த உரிமை அவர்களுக்கு இருக்கிறது. கட்சி வளர்ச்சிக்காக மாநில-மத்திய உறவை முறிப்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவி புரியாதென்பதை இங்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மற்றொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே நீங்கள் "பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு" கொண்டு வந்திருக்கிறீர்கள். நானும் பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு ஊழியன் என்ற முறையில் இப்படியொரு மசோதா வரவேண்டிய நிலைமை ஏற்பட்டதற்காக மிகவும் வேதனைப்படுகிறேன். எதிர்க் கட்சியினர் இதை ஏன் எதிர்க்கிறார்களென்று எனக்குப் புரியவில்லை. மத்தியில் இதுபோன்ற ஒரு சட்டம் இருப்பதை ஒரு காரணமாகச் சொல்கிறார்கள். நான் அவர்களையெல்லாம் வேண்டிக் கொள்கிறேன், இது வெறும் இந்தியா மட்டுமென்று எண்ணாதீர்கள், தமிழ் நாடும் கூட. இது தமிழ் நாடு மட்டுமல்ல, இந்தியாவும்கூட. இந்திய தேச பக்தியோடும், தமிழன் என்ற இன உணர்வோடும் நான் சொல்கிறேன், இப்படியொரு சட்டத்தை இந்த ஆட்சி கொண்டுவராமல் இருந்திருந்தால், கொண்டு வர வேண்டியதற்கான நிர்பந்தத்தை எதிர்க் கட்சிகள் உருவாக்காமல் இருந்திருந்தால், நான் மகிழ்ந்திருப்பேன்.

அரசாங்க அலுவலர்களுடைய ஒழுக்கத்திற்கு சட்டம் வருவது வேறு. பொது ஜன ஊழியர்களுடைய ஒழுக்கத்திற்கு சட்டம் வருவது வேறு. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் அரசாங்க அலுவலில் ஒரு முறை சேர்ந்துவிட்டால், கிட்டத்தட்ட 40 ஆண்டுக் காலம் அதில் அவர் ஈடுபடுகிறார். படிப்படியாக அவர் பல பதவிகளில் உயர்கிறார். அவரை அரசே தண்டித்தாலொழிய, அவர் தண்டனை பெற வேறு வழி கிடையாது. அதனால் அரசாங்க அலுவலர்களுடைய ஒழுக்கத்தை நிலைநாட்ட சட்டம் கொண்டு வந்து, அவர்கள் குற்றத்தைத் தடுப்பதில் அரசு முயல்வதில் நியாயம் இருக்கிறது. ஆனால், பொது ஜன ஊழியர்களுக்கு அந்த நிலையில்லை. வாக்காளர்களால் ஒரு பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அடுத்த தேர்தலுக்கு முன்புள்ள இடைக் காலத்தில் லஞ்சம் வாங்கினாரானால், ஊழல் புரிந்து தவறு செய்பவரானால், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி வாக்காளர்கள் அவரைத்



1973 மார்ச் 6] [திரு. ம. பொ. சிவஞானம்]

திரும்பவும் தேர்ந்தெடுக்காமல், தோல்வியுறச் செய்ய வாய்ப்பிருக்கிறது. எந்தக் கட்சியின் சார்பில் அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அந்தக் கட்சியே, அவருக்கு லஞ்ச ஊழல் குற்றத்திற்காக தண்டனை கொடுக்க வாய்ப்பிருக்கிறது. எனக்குத் தெரியும் அப்படி தண்டிக்கப்பட்டவர்களைப்பற்றி. இப்படி பொது ஜன ஊழியர்களை கட்சியே தண்டிக்கலாம். தேர்தல் களத்திலே வாக்காளர்கள் தண்டிக்கிறார்கள. இந்தத் தண்டனைகளெல்லாம் பொது ஜன ஊழியனுக்கு இருக்கிறது. மத்தியில் ஒரு சட்டம் இருக்கிறது, அந்தச் சட்டம் போதாதா என்று கேட்டார்கள. அந்தச் சட்டம் போதுமானதாகயிருந்தாலும், அதை ஏற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. எதிர்க் கட்சியிலுள்ள பெரியவர்களெல்லாம் நாட்டு மக்களை வெறும் வாக்காளர்களென்று எண்ணுகிறார்களோ என்ற ஐயம் இருக்கிறது. தமிழரசுக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் மக்களை வாக்காளர்களாக மட்டும் எண்ணாமல், தனித்த அரசியல் பாரம்பரியம் உடைய ஆயிரமாயிரம் ஆண்டுக் காலம் நாகரிகமுடைய, தனி மொழியை உடைய, தனிப் பழக்க வழக்கங்கள் உடைய, தனிப் பண்பாடு உடைய ஒரு இனமாகப் பார்க்கின்றன. ஆகவேதான் தமிழகத்தை வெறும் வாக்காளர்களாக எண்ணி, வயிற்றுக்குச் சோறு, உடுப்பதற்கு உடை, இருப்பதற்கு இடம் என்று கொடுத்து விடுவதாலே, இந்தச் சாதியை ஆண்டுவிடலாமென்ற எண்ணத்திற்குப் போகாமல், அவர்களுடைய அரசியல் உரிமை, மொழி உரிமை, இன உரிமை, பிறப்புரிமை ஆகிய அடிப்படைகளில்தான் எந்த ஒரு பிரச்சினையையும் அணுக வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாடு இந்தியாவாக இருக்கிறதென்று எல்லோருடனும் சேர்ந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய தேச பக்தி எனக்கு இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள எல்லோரும் இந்தியர்களாகவும் இருக்கிறார்களென்பதை ஒப்புக்கொள்ளக்கூடிய தேச பக்தி எனக்கு இருக்கிறது. ஆனால், அது முடிவானதல்ல, முதலாவதாக இருக்கலாம். ஆனால், நாம் தமிழர்களாகவும் இருக்கிறோம், தமிழ் இனத்தவராகவும் இருக்கிறோம். இந்த அடிப்படையில் இந்த மசோதாவைப் பார்க்கிறபோது, இதை எதிர்ப்பவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்களென்று பார்க்க வேண்டும். மத்திய ஆட்சிக்கு அவர்கள் மனுப் போட்டுவிட்டதால் இந்த ஆட்சியின் மீது லஞ்சக்-குற்றம் சாட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

[திரு. ம. பொ. சிவஞானம்] [1973 மார்ச் 6

6.10 பி.ப. அங்கே போய் விண்ணப்பம் போட்டு, தண்டனிட்டு அந்த மனுவுக்கு உயிர் கொடுப்பதற்காக இந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்கள். ஒரு அரசியல் பாரம்பரியம் உடையவர்கள், ஆயிரம் ஆயிரம் ஆண்டு நாகரிகம் உடைய, தனி மொழி உடைய, தனிப் பழக்க வழக்கம் உடைய தமிழ் நாட்டிலுள்ள மக்கள் இந்தியர்களாகவும் இருக்கின்றார்கள். அது முடிவானதும் அல்ல, முதலானதும் ஆக இருக்கலாம். நாங்கள் தமிழர்களாகவும் இருக்கிறோம், தமிழ் இனத்தாராகவும் இருக்கிறோம். அந்த அடிப்படை மசோதாவை வைத்துப் பார்க்கின்றபோது இதை ஒப்பாதவர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? மத்திய ஆட்சிக்கு அவர்கள் மனுப் போட்டுவிட்டதால் இந்த ஆட்சியின் மீது லஞ்சக் குற்றம் சாட்டி நடவடிக்கை எடுக்க, வேண்டுமென்று அங்கே போய் விண்ணப்பம் போட்டு தெண்டனிட்டு அந்த மனுவிற்கு உயிர் கொடுப்பதற்காக இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றார்கள். இப்படி இந்தச் சட்டத்தைப் போட்டுவிட்டால், இந்தச் சட்டம் வந்துவிட்டால், அது வராமல் போகுமே என்பதற்காக எஜமான் காலால் உதைப்பட வேண்டுமே ஒழிய என் நாட்டு மக்களுடைய கையால் அடிபடக்கூடாது என்ற மனப்பான்மை கொண்டவர்களுக்கு மீண்டும் சொல்லுகின்றேன், தமிழ் நாடு இப்படிப்பட்ட மனப்பான்மை கொண்டவர்களிடம் தண்டனை அடையத்தான் வேண்டும் போலும்.

மொழிவாரி சிறுபான்மையினராக இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களை நாம் அன்னியராக எண்ணுவதில்லை, நாம் எப்படித் தமிழராக இருக்கின்றோமோ அப்படியே இந்தியராக இருக்கின்ற காரணத்தால். இந்த உணர்வை வேறு எந்த மாநிலத்திலேயும் நீங்கள் பார்க்க முடியாது. இதனை நாம் சென்னைக் கடற்கரையை ஒரு முறை சுற்றிப் பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். கால்டுவெல்லுக்கும், போப்புக்கும், பெஸ்கிக்கும் நாம் அங்கே சிலை வைத்திருக்கிறோம். பேசும் மொழியாலும், பிறந்த நிலத்தாலும், பெற்ற நிறத்தாலும் அன்னியர்களான அவர்களுக்கு, ஏதோ தமிழ்த் தொண்டு செய்ததற்காக, தலை வணங்கி சிலை எடுத்தோம். கம்பனோடு சமமாக, இளங்கோவோடு சமமாக, வள்ளுவனோடு சமமாக, அவ்வையோடு சமமாக நாம் அவர்களுக்கு மதிப்பு அளித்திருக்கின்றோம். ஆனால் மொழிவழி சிறுபான்மையினர், இந்தத் தமிழகத்திலே தமிழினத்தை அவமதிக்கின்ற போக்கில்,



1973 மார்ச் 6] [திரு. ம. பொ. சிவஞானம்]

ஆர்ப்பாட்டங்களும் அமளிகளும் நடத்திக்கொண்டு 'இந்த ஆட்சி செத்துவிட்டது; இந்தச் சட்ட சபை செத்துவிட்டது' என்று சொல்கிற வார்த்தைகளையெல்லாம் கேட்கின்றபோது எனது தன்மானம் வேகமாகத்தான் போகின்றது. அவர்களை வேண்டுகின்றேன்; 'தமிழர்களுடைய இன உணர்ச்சியைக் கிளப்ப வேண்டாம்' என்று. நாங்களும் இன உணர்ச்சியைக் கிளப்ப விரும்பவில்லை. கிளப்புவது நம்முடைய நோக்கம் அல்ல. ஆனாலும், கன்னடத்தில் எங்களுக்குக் கிடைக்காத உரிமையை, கேரளத்தில் எங்களுக்குக் கிடைக்காத உரிமையை, தமிழகத்தில் வேறு யாரும் எங்களிடம் எதிர்பார்க்கக்கூடாது. தமிழ் மக்களுடைய இன உணர்ச்சிக்கு அவர்கள் மதிப்புக் கொடுத்தலைப் பேச வேண்டும் என்று சொல்லுகிறோம்; யாரைப் பற்றிச் சொல்லுகிறோம்; சொல்லுகின்ற நாம் யார் என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்து, கொஞ்சம் மரியாதையையும் நாகரிகத்தையும் கடைப்பிடித்து வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த ஆட்சியை மாற்றட்டும் தேர்தல் களத்திலே; இந்த அமைச்சரவையைத் தாக்கட்டும், சட்ட மன்றத்திலே; ஆனால் 'இந்த ஆட்சி செத்துப்போய் விட்டது; இது லஞ்சக்காரக் கும்பல்' என்றெல்லாம் ஆளுவோரைப் பார்த்து அவர்கள் சொல்லுகின்றபோது, வேதனையாகத்தான் இருக்கின்றது. அவர்கள் அரசு கொண்டு வந்துள்ள பொது ஊழியர் ஊழல் விசாரணை மசோதாவை விட்டுவிட்டு வேறு என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றார்கள்? புகார் மனு கொடுப்பவனைக் கடுமையாகத் தண்டிக்க விசாரணை மசோதாவில் விதி இருக்கின்றது. அவர்கள் இதை எதிர்ப்பானேன்? அவர்கள் இதைத் தான் சொல்லுகின்றார்களோ ஊழல் என்று எனக்கு ஒரு சந்தேகம் —அதாவது "தி.மு.க. அமைச்சர்கள் மீதுதான் ஊழல் விசாரணை நடக்கவேண்டும்; எதிர்க்கட்சியாளர் மீது விசாரணை நடக்கக் கூடாது. தண்டிக்கப்படுகின்றவர்கள் ஆளுங்கட்சியினராகத்தான் இருக்க வேண்டும். வேறு யார் மீதும் தண்டனை வரக்கூடாது. அவர்கள் தி.மு.க. வினராகத்தான் இருக்க வேண்டும்." என்று சொல்கிறார்களோ? உங்கள் யோக்கியதையில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், நீங்கள் ஏன் பயப்பட வேண்டும் அந்த விதியைக் கண்டு? எனக்குப் புரியவில்லை. யார் மீதாவது புகார்

[திரு. ம. பொ. சிவஞானம்] [1973 மார்ச் 6

மனுக் கொடுக்கின்றபோது, மனுக் கொடுக்கின்றவன் கையும் சுத்தமானதாக இருக்க வேண்டும் என்பதிலே நம்பிக்கை நமக்கு வேண்டும். இன்னொன்று சொல்கின்றேன், இந்தச் சட்டப்படி பொது வாழ்க்கையிலே உள்ளவர் லஞ்சம் வாங்குவது மட்டும் குற்றமென்று சொன்னால் போதாது; வரி ஏய்ப்பதைக் கூடத்தான் குற்றம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முனிசிபாலிடி தேர்தலுக்கு நிற்கின்ற ஒருவர் முனிசிபாலிட்டிக்கு வரி பாக்கி இருக்கக்கூடாது; வரி பாக்கியிருந்தால் அவருடைய நியமனப் பத்திரம் செல்லாது; சட்ட மன்றத் தேர்தலுக்கு நிற்கின்ற ஒருவர் ராஜ்ய சர்க்காருக்கு வரி பாக்கியிருந்தால், அதன் மேல் ஆட்சேபணை எழுந்தால், நியமனப் பத்திரம் செல்லாது. நாடாளுமன்றத்திற்கு மனுப் போடுகிற ஒருவர் மத்திய அரசுக்கு வரி பாக்கியிருக்கக்கூடாது. அப்படியானால் வருமான வரி பாக்கி இருக்கலாமா?

அதற்காகத்தான் சுய ஆட்சி கேட்கிறோம். இங்கே இருக்கின்ற வரி ஏய்ப்புக் கொள்ளைக்காரர்களைப் பிடிக்கத்தான். வருமான வரி பாக்கி வைத்திருப்பதும் குற்றம்தான். லஞ்சம் வாங்குவது குற்றந்தான்; வரி ஏய்ப்பு மோசடி அதைவிடப் பெருங்குற்றம் அல்லவா என்று பார்க்க வேண்டும்.

இந்த மசோதாவைப் பற்றி இன்னும் ஒரு வார்த்தையைச் சொல்வதோடு முடிக்கின்றேன். அமைச்சரவை இதைக் கொண்டு வந்திருக்கிறது. நான் வரவேற்கிறேன். பொது வாழ்க்கையிலே இப்படி ஒரு மசோதாவைக் கொண்டு வருகின்ற அளவுக்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது வேதனைக்குரியதுதான்; உங்களையெல்லாம் கேட்கின்றேன், "இந்த மசோதா நம் எல்லோருக்குமே ஒரு பாதுகாப்பு அல்லவா?" என்று. நம்மில் எல்லாருமே குற்றவாளிகள் அல்ல. உள்ளது நமக்கே தெரியும். நம்மில் ஒருவர் மீது புகார் கொடுக்கப்படுகிறபோது, பொய்ப் புகார் கொடுக்கிறவர்களுக்கும் தண்டனை வேண்டுமல்லவா? புகார் கொடுப்பவருக்கும் அச்சம் இருக்கின்ற வகையில் மசோதாவில் விதி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு மசோதாவில் விதி இப்படி இருந்தாலொழிய, நம்மில் யாரும் பிழைக்க முடியாது. ஒரு மஞ்சள் பத்திரிகையிலே, "ம.பொ. சிவஞானம் வீட்டில் சோதனை,



1973 மார்ச் 6] [திரு. ம. பொ. சிவஞானம்]

5 லட்சம் ரூபாய் பறிமுதல்" என்று செய்தி வெளியானது. போட்டதுதான் போட்டார்களே, 10 லட்சம் என்று போட்டு, என்னை பெருமைப்படுத்தியிருக்கக்கூடாதா? '5 லட்சம் ரூபாய் பறிமுதல்' என்று கொட்டை எழுத்தில் போட்டிருக்கின்றார்கள் போஸ்டர்களில்! அது கடைக்குக் கடை தொங்குகின்றது. ஆனால், பத்திரிகைக்கு உள்ளே, 'இப்படி விடுகளெல்லாம் பேசப்படுகிறது' என்று இருக்கின்றது. இவ்வளவு கேவலமாக அரசியல் வாழ்வு வந்துவிட்ட பிறகு—புகார் கூறுவதற்கு இவ்வளவு மோசமான நபர்கள் பொது வாழ்வில் புகுந்துவிட்ட பிறகு, பொய்ப் புகார் தருபவரைத் தண்டிக்கும் விதி மிகமிக அவசியம் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். இந்தச் சட்டத்தை பொது வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துவதற்காக இந்த ஆட்சி கொண்டு வந்ததை நான் வரவேற்கின்றேன். மத்திய ஆட்சியின் சட்டத்தைக் கொண்டு இந்த மாநிலத்திலுள்ளவர்களை விசாரிக்கலாம் என்றால், அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை, அது சரியான சட்டமேயானாலும், மத்தியில் உள்ள ஒரு கட்சியின் ஆட்சியானது மாநிலத்திலே ஆளுகின்ற இன்னொரு கட்சியினரை ஒழுக்க ஈனத்திற்காக தண்டிப்பதற்கு அதிகாரம் தருவது என்பது, இனப் பிரச்சினையாகும்—சமஷ்டிப் பிரச்சினையாகும்! திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி விசாரிக்க காங்கிரஸ் கட்சிக்கு எப்படி அதிகாரம் கொடுக்க முடியும்? இது மாநில—மத்திய ஆட்சிகளின் பிரச்சினை மட்டுமல்ல; இரு வேறு கட்சிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையுமாகும். இந்த மாநிலத்தில் ஆளுகின்ற கட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று மந்திரிகள் அடிக்கடி வந்துவந்து பேசிவிட்டுப் போவதை இன்றைக்குக் கண்ணாரக் காண்கிறோம், காதாரக் கேட்கிறோம். இந்த நிலையில் மத்திய ஊழல் விசாரணைச் சட்டத்தை இங்கு அமுல் நடத்த அனுமதிக்கலாமா? பகைவன் கையிலே பஞ்சாங்கத்தைக் கொடுத்து, 'நான் என்றைக்குச் சாவேன், பார்' என்றால் 'சாயந்திரமே சாவாய்' என்றுதான் சொல்வான். இந்த அரசு பிரேரித்துள்ள சட்டம் வந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்லாமல், பழைய காங்கிரஸ்—சுதந்திரா கட்சிகளுக்கும்தான் அது பயன்பட வேண்டும். இப்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் தி.மு.க. ஆட்சி இல்லாத காலத்திற்கும் அமுலாக்கக்கூடியதாகும். இதிலே கடுமையான விதிகள் இருக்கின்றன என்று சொன்னால், அது

நாளைக்கு தி.மு.க. எதிர்க் கட்சியாக வரும்போது, அது கடுமையாக அவர்களையுந் தானே பாதிக்கும்! இப்போதுள்ள ஆளுவோருக்குக் கஷ்டம் என்றால், நீங்கள் நாளைக்கு ஆட்சிக்கு வந்தால் உங்களையும் பாதிக்கும். ஆக இந்தச் சட்டத்தை யார் கொண்டு வருகிறார்கள் என்று பார்ப்பதைவிட, அதனுடைய தீர்க்காயுள் தன்மையைப் பார்க்கும்போது என்றைக்கும் நிலைக்கக் கூடிய சட்டம்! அந்தச் சட்டம் இல்லாத நிலையிருந்தால், பொது வாழ்வில் ஈடுபட்டவன் என்ற முறையிலே பெருமை கொள்வேன். ஆனால், பகிரங்கமாக வீண் சர்ச்சைகள் வந்துவிட்ட பிறகு, இது அவசியம்தான். இந்தச் சட்டம் அமுலாவதாலேயே ஊழலைத் தடுத்துவிட முடியாது என்று நமக்குத் தெரியும். ஏனென்றால், எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் சொந்தக் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அத்தீர்மானத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டோம். ஆனால், கணக்குக் கொடுக்காதவர்கள்தான் ஊழல் குற்றம் சாட்டுகின்றார்கள். கணக்குக் கொடுத்துவிட்ட பிறகும் ஊழல் குற்றம் சொல்லுகின்றார்கள். ஒருவர் தன்னுடைய சொத்து இவ்வளவு என்று தெளிவாகக் கணக்கு தந்துவிட்ட பிறகும் அவர் மீது ஊழல் குற்றம் சாட்டப்படுமானால், சாட்டுகின்ற பாரம்பரியம் முடிந்துவிடாது; குற்றம் சாட்டப்படுகின்ற பாரம்பரியமும் முடியாது. என்றாலும் சரியான நேரத்தில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாநில சுயாட்சிக் கொள்கையில் நமது அரசு உறுதியாக இருக்கின்றது என்பதற்காகப் பாராட்டுகின்றேன். அதே நேரத்தில் ஆந்திரப் பிரிவினைபற்றி ஆளும் கட்சி இங்கே கொஞ்சம் தெளிவாக தனது நிலையைத் தெரிவிக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ஒரு மொழிவழி மாநிலமாக இருக்கின்றதைப் பிரிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. ஆந்திரத்தைத் துண்டாட வேண்டுமென்றால்; அதை எல்லா மாநிலங்களுக்கும் உரிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். வங்காளத்தைத் துண்டாடுவதற்கு கர்ஸான் செய்த செயலுக்கும் ஆந்திரத்தைத் துண்டாடக் கோருவதற்கும் வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இன்னொரு முக்கிய காரணத்திற்காக நான் பிரிவினையாளரோடு மாறுபடுகின்றேன். என்னவென்றால், திராவிட முன்னேற்றக்





கழகமும் தமிழரசுக் கழகமும் மாநில சுயாட்சி கேட்கின்றன. பொருளாதாரத் தன்மையில் தன் காலால் ஊன்ற முடியாத மாநிலங்கள் எண்ணிக்கையில் பெருகுவது சுயாட்சியைக் குழி தோண்டிப் புதைககிற அபாயமாகும். சுயாட்சியை மறுக்கின்றவர்கள் இதைத்தான் சான்றாக எடுத்துச் சொல்வார்கள். ஆகவே, ஒரு மொழி வழி இனத்தின் தாயகத்தைத் துண்டாட யாருக்கும் உரிமையில்லை. அப்படித் துண்டாடுவது மாநில சுயாட்சிக் கோரிக்கையை பலஹீனப் படுத்துவதாகும். பலஹீனமான மாநிலங்கள் தோன்றத் தோன்ற மத்தியில் எதேச்சாதிகாரம் வலுப் பெற்றுவிடும். மானியங்கள் பெறுவதற்காக மத்திய அரசிடம் மண்டியிடுகின்ற புத்தி படைத்த மாநிலங்களின் எண்ணிக்கை பெருகுகின்றபோது மாநில சுய ஆட்சி கிடைக்காது, மத்தியில் ஜனநாயகமும் வாழாது-- என்று கூறி, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, கொஞ்சம் கூடுதலான நேரம் எடுத்துக் கொண்டதற்கு தலைவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு சட்ட மன்றத் தலைவரவர்களே, 1973–74 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்ற வாய்ப்பைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தில் 465.56 கோடி ரூபாய் வரவாகவும், 465.07 கோடி ரூபாய் செலவாகவும், 49 லட்சம் ரூபாய் மிகுதியாகவும் அமைந்திருக்கின்றது. இந்த நிதி நிலை அறிக்கையினை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தில் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களாலும் சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்டிருக்கின்ற மக்களாலும் திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்று, அதனுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கையினை இங்கே தாக்கல் செய்திருக்கின்றார்கள். இந்த மாமன்றத்திலே கருத்துத் தெரிவித்த பல்வேறு அங்கத்தினர்களும் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களிலே கூட சில அங்கத்தினர்களும், எதிர்த் தரப்பிலே இருக்கின்ற உறுப்பினர்கள் இந்த

மகத்தான நிதிநிலை அறிக்கைக்குரிய பாராட்டுதலைத் தெரிவிக்க வில்லையே என்ற வருத்தத்தைத் தெரிவித்தார்கள். அப்படிச் சொன்ன காலத்தில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்திருந்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். "பாராட்டிப் பேசுவதற்குத்தான நீங்கள் 40 பேருக்கு மேல் இருக்கின்றீர்களே, நாங்கள் குற்றம் குறைகளைக் கண்டு அவற்றைத் திருத்துவதற்கு வழி சொல்கின்ற எதிர்க் கட்சியாக இருக்கிறோம்", என்று அவர்கள் சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை என்பதை நான் மறுக்கவில்லை. எங்களையெல்லாம் ஆளாக்கிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்திலும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலே இருக்கின்ற இந்த ஆட்சிக்கு நாங்கள், எதிர்க் கட்சியாக இருப்பவர்கள், லாலி பாடுவதற்காக வரவில்லை, குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வதற்குத்தான் வந்திருக்கின்றோம் என்று எங்கள் அண்ணாவே அந்தக் காலத்தில் சொன்னார்கள். அப்படிச் சொன்ன அண்ணா அவர்கள் அதே நேரத்தில் நாட்டிலுள்ள வளம் பெருகிடவும், இந்த நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடவும் மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டிய தொகையினை வாங்கு வதற்கு நீங்கள் எதிர்க் கட்சியினராக இருக்கின்ற எங்களை ஆளும கட்சியாக இருக்கின்ற நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம், அதற்கு நாங்கள் பயன்படுவோம் என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லிவிட்டு, அதற்கு ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். இராணுவத்தில் சேப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்
பி.ப. 6-20 என்ற ஒரு பிரிவு இருப்பது போல, எதிர்க் கட்சிக்காரர் களாகிய எங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையினைப் புரட்டிப் புரட்டிப் படித்தபோது. இந்த அறிக்கையினைத் தாக்கல் செய்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய உள்ளத்தின் ஏக்கத்தினை நான் கண்டேன். ஒவ்வொரு 5 ஆண்டுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்த மத்திய அரசு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சதவிகிதம் ஒதுக்கியது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சதவிகிதம் ஆகக் குறைந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 74 சதவிகிதம் ஆகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்



4.7 சதவிகிதம் ஆகக் குறைந்து, தேய்ந்து, தேய்ந்து பரிதாப கரமான நிலைமையில் இந்த நிதி ஒதுக்கீடு இருக்கிற வேதனையைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மாநிலங்களில் தொழில் துறை அபிவிருத்திக்கு முதலீடு செய்கிற மத்திய அரசு இந்த நடப்பு ஆண்டில் 686 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்றாலும், நம்முடைய நாட்டுக்கு ஒதுக்கியிருக்கிற தொகை வெறும் 20 கோடி ரூபாய் தான் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தனையையும் சொல்லி தொழில்களைப் பெருக்குவதற்கும், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கும் தமிழ் நாடு அரசின் சார்பாக நாம் வகுத்திருக்கிற திட்டங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைத் திட்டம் 52 கோடி ரூபாய் திட்டம். அதே மாதிரி, மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை அமைப்பதற்கு 80 கோடி ரூபாயிலே திட்டம். அது போல பாலிஸ்டர் தொழிற்சாலை அமைத்திட 13 கோடி ரூபாயிலே ஒரு திட்டம். அது போலவே சேலம் மாவட்டத்தில் வெப்பம் தாங்கிக் கற்கள் ஆக்குகிற தொழிற்சாலைக்கு 10 கோடி ரூபாய் திட்டம், சேது சமுத்திரத் திட்டம் இந்த நாட்டின் 20 ஆண்டு காலக் கோரிக்கை. இப்படி பல்வேறு திட்டங்களை நம் அவையிலே அறிவித்தார்கள். அந்த அறிவிப்பைக் கொடுத்துவிட்டு இவ்வளவுக்கும் பிறகு இறுதியாக அவர்களுடைய அறிவிப்பிலே ஒன்றைச் சொல்லி யிருக்கிறார்கள். மத்திய—மாநில அரசுப் பொறுப்பில் இருப்பவர்கள் உள்ளப் பாங்குக்கு ஏற்றாற்போல பரிபாலனம் இருப்பதைக் காட்டியும், அரசியல் அமைப்புச் சட்டப்படி நமக்கு உரிமைகள் வழங்கும் முறையிலே அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற குறிப்பை இங்கே தந்திருக்கிறார்கள். என்னிடத்திலே இருக்கிற சில புள்ளி விவரங்களை நான் இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

31-3-1973 குறிப்பின்படி, தமிழக அரசு ஓப்பன் மார்க்கட்டிலே லோன் என்று திரட்டியிருக்கிறது. அந்தக் கடனுடைய அளவு ரூ. 154.88 கோடி.. அதே போல, மத்திய அரசிடமிருந்து நாம் பெற்றிருக்கிற மொத்தக் கடன் ரூ. 350 கோடி. 91 லட்சம்.

[திரு. மு. இராமநாதன்] [1973 மார்ச் 6

அதே போல லோன் பிரம் அடானமஸ் பாடிஸ், எல்.ஐ.ஸி. நிறுவனம் போன்ற நிறுவனங்களிடத்திலிருந்து இந்த அரசு பெற்றிருக்கிற கடன் ரூ. 39.95 கோடி. ஆக ஒட்டுமொத்தமாக 31—3—1973 முடிய ரூ. 545.74 கோடிக்கு நாம் கடன்காரர்கள். இந்தக் கடனை எந்தக் காலத்திலேயாவது இந்த மாநில அரசு கொடுத்து முடித்து, பொருளாதாரச் சீர்குலைவைச் சீர்படுத்திக் கொள்ள வரி வருவாய்த் துறைகள், வாய்ப்புகள் இந்த மாநில அரசுக்கு இருக்கின்றனவா என்று பார்த்தால் அது சம்பந்தமாக நான் சில குறிப்புகளை, தலைவரவர்களே, சொல்ல விரும்புகிறேன்.

1970—71-லே மத்திய அரசு இந்த மாநில அரசிற்கு மானியமாக ஒதுக்கிய தொகை ரூ. 25.96 கோடி. கடனாக ஒதுக்கிய தொகை ரூ. 51.34 கோடி. அதே 1970—71-ல் இந்த அரசு கடன் பாக்கிக்காகவும், வட்டிக்காகவும் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூ.31.74 கோடி. வட்டி வகையில் ரூ. 11.95 கோடி. ஆக கடனாக நாம் 1970-71-ல் பெற்ற தொகை ரூ. 51.34 கோடி. அதே ஆண்டில் கடனுக்காகவும், வட்டிக்காகவும் திருப்பிச் செலுத்திய தொகை ரூ. 43.69 கோடி. மிச்சம் எவ்வளவு என்றால், ரூ. 7.65 கோடி. அதேபோல, 1971-72-ல் இந்த அரசு மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிற கடன் தொகை ரூ. 151.32 கோடி, அதே 1971-72-ல் கடனுக்காகவும் வட்டிக்காகவும் திருப்பிச் செலுத்திய தொகை. கடனுக்காக ரூ. 97.43 கோடி, வட்டிக்காக ரூ 21.84 கோடி, வாங்கிய கடன் ரூ. 151.32 கோடி, திருப்பிச் செலுத்திய தொகை ரூ. 119.27 கோடி. ஆக மிச்சம் எவ்வளவு என்றால், ரூ. 32.05 கோடி.

நடப்பு ஆண்டில் 1972—73-ல் மத்திய அரசு நமக்குக் கடனாக ஒதுக்கிய தொகை ரூ. 45.80 கோடி. இந்த ஆண்டில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை கடனாக ரூ. 53.38 கோடி, வட்டித் தொகையாக ரூ 20.03 கோடி. ஆக வாங்கியிருக்கிற கடன் ரூ. 45.80 கோடி. திருப்பிச் செலுத்தியது ரூ. 73.41 கோடி. ஆக மைனஸ் கணக்கில் ரூ. 27.61 கோடி. இந்த நிதி வருவாயை வைத்துக் கொண்டு இந்த மாநில அரசு எவ்வளவோ வேலைகளைச் செம்மைப்படுத்தி நடத்த வேண்டும். இந்த வரி வருவாய் பற்றி மறுபரிசீலனை வேண்டுமா என்று முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே கேட்டிருக்கிறார்கள். வரியை



1973 மார்ச் 6] [திரு. மு. இராமநாதன்]

ஒதுக்குகிற நேரத்தில் இன்கம் டாக்ஸ் என்று சொல்லுகிற வரியை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிற கார்ப்பொரேஷன் டேக்ஸ், சர்சார்ஜ் என்ற பல்வேறு வரி வருவாய்த் துறைகளிலிருந்து நமக்குப் பங்கு கிடைத்தாலொழிய, நம்முடைய மாநில நிதிநிலையை நாம் செம்மைப்படுத்திக் கொள்ள முடியாது என்ற கருத்தை, இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதோடு மற்றொன்றையும் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்கம் டாக்ஸ் என்று சொல்கிற இந்த வருமானம் மூலம் அகில இந்திய அரசிற்கு வருகின்ற சராசரி வருமானம் ஒரு ஆண்டுக்கு 137 கோடி ரூபாய். ஆனால் 1952—53-லிருந்து 1968—69 முடிய என்னிடத்திலே இன்கம் டாக்ஸ் பற்றிய அகில இந்தியக் குறிப்பு இருக்கிறது. அந்த அறிக்கையின்படி 1952-53-ல் அது ரூ. 43.2 கோடியாக இருந்து வந்ததைப் பார்க்கிறோம். அகில இந்திய ரீதியில் 1968-69-ல் 338 கோடி அளவிற்கு அது வளர்ந்திருக்கிறது. இப்படி வளர்ந்த ரூ. 338 கோடியில் நமக்கு வந்திருக்கிறது சுமாரிருப்பது ரூ. 13 கோடி. ஆனால் அதே நேரத்தில் கூட்டு நிறுவனங்கள், கார்ப்பொரேட் பாடீஸ் என்பவைகளிடத்திலிருந்து மத்திய அரசு வசூலிக்கிற தொகை 1952-53-ல் ரூ. 43.8 கோடியாக இருந்தது. அந்த கார்ப்பொரேஷன் டாக்ஸ் 1968—69-ல் கிட்டத்தட்ட 322 கோடி ரூபாய் அளவிற்கு கிடுகிடுவென்று வளர்ந்திருக்கிறது. ஆனால் நம்முடைய பரிதாபம் இந்த 322 கோடி ரூபாயில் ஒரு சல்லிக் காசு கூட இந்த மாநில அரசிற்குப் பிரித்துக் கொடுக்கிற நிலையில் மத்திய அரசு இல்லை. அதில் நமக்குப் பங்கு இருந்தாலொழிய, அதில் நமக்கு விகிதாசாரம் தந்து நிதி ஒதுக்கீடு செய்தாலொழிய, நமது மாநில நிதிநிலை அறிக்கையை நாம் சரிப்படுத்திக்கொள்ள முடியாது.

இன்னொரு குறிப்பினையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்திலே எந்தெந்தத் துறையிலே எல்லாம் மத்திய அரசு வரி விதிக்கிற அதிகாரம் பெற்றிருக்கிறது என்று சொன்னார்கள். மோட்டார் ஸ்பிரிட், சுகர், டொபாகோ காட்டன் கிளாத் சிமெண்டு ஸ்டீல், டயர் அண்டு ட்யூப், ரிபைண்டு டீசல் மாட்சஸ் பேப்பர்

டீ, காபி, மோட்டார் வெஹிகில் ஜீப் பெயின்டு வார்னிஷ் அலுமினியம், ரிப்ரிஜிரேட்டர், எலெக்டிரிக் ஒயர் அண்ட் கேபிள்ஸ், எலெக்டிரிக் மோட்டார்ஸ் என்று இப்படி வரிகள் வருகின்ற துறைகள் அனைத்திலிருந்தும் வரியை எடுத்துக்கொள்கிற அதிகாரம் மத்தியிலே இருக்கிறது. இன்னொன்றையும் இந்த மன்றத்திற்குக் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, சர்க்கரை மீது வரி விதிக்கப்படுகிறது. 1965-66-ல் சர்க்கரை மீது விதித்த வரி மூலம் கிடைத்தது ரூ. 33.69 கோடி. பேசிக் டேக்ஸ் அடிப்படை வரி இது. ஆனால் சர்க்கரை மீது பேசிக் டாக்ஸ் மட்டும் விதிக்கப்படுவதில்லை. ஸ்பெஷல் டாக்ஸ், அடிஷனல் டாக்ஸ் என்று. 16.38 கோடி ரூபாயை மத்திய அரசு விதிக்கிறது. மாநிலத்திற்கு இந்த வரியைப் பிரித்துக் கொடுக்கிற நேரத்தில், பேசிக் டாக்ஸ் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பிரித்துத் தருகிறார்கள். ஸ்பெஷல் டாக்ஸ், அடிஷனல் டாக்ஸ் என்று வசூலிக்கிற அந்த வரியில் நமக்குப் பங்கு இல்லை. அதே போல டுபாக்கோ அண்ட் சிகரெட் என்ற தலைப்பின் கீழ் 1965-66-ல் மத்திய அரசு வசூலித்த வரி ரூ. 82.37 கோடி ரூபாய். அதில் ஸ்பெஷல் டாக்ஸ் என்று வசூலித்த தொகை ரூ. 16.51 கோடி. அடிஷனல் டாக்ஸ் என்று வசூலித்திருப்பது ரூ. 10.25 கோடி. அந்த ஸ்பெஷல் டாக்ஸ், அடிஷனல் டாக்சில் மத்திய அரசு மாநில அரசிற்குப் பங்கு தருவதில்லை.

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)

பி.ப. 6-30 அதே போல டெக்ஸ்டைலை எடுத்துக்கொண்டால், டெக்ஸ்டைலில் அடிப்படை வரி 1965—66-ல் ரூ. 53.20 கோடி. அதே நேரத்தில் அடிஷனல் டாக்ஸ் ஸ்பெஷல் டாக்ஸ் என்று வசூலித்திருப்பது ரூ. 20.52 கோடி. எதற்கு இந்த மாமன்றத்தில் இந்தக் குறிப்பைத் தருகிறேனென்றால், இவ்வாறு வரியை பல்வேறு துறைகளிலிருந்து வசூலித்துக்கொள்ளுகின்ற ஒரு அதிகாரம் அரசியலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் எந்தெந்த வரிகளை மாநில அரசு மட்டும் வசூலித்துக் கொள்ளலாம், எந்தெந்த வரிகளை மத்திய அரசு மட்டும் வசூலித்துக் கொள்ளலாம் என்ற முறை வகுக்கப்பட வேண்டும், அதற்கு ஒரு நிபுணர் குழுவையாவது அமைக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கரை அல்லது சிமெண்ட் அல்லது டெக்ஸ்டைல் ஆகிய





தலைப்பின் கீழ் இருக்கின்ற வருமானத்தையாவது மாநில அரசு பெற்றுக்கொள்வதைத் தவிர, வேறு வகையில் நம்முடைய நிதி வருவாய்களைப் பெருக்கிக்கொள்ள முடியாது. நம்முடைய முதலமைச்சர் சொல்லியிருப்பது போல, நாட்டு வளம் பெருகிடவும் நல்வினை தீர்த்திடவும் நமக்கு வாய்ப்பில்லை. அப்படி வாய்ப்பினை உருவாக்கிடத் தான் மாநில சுயாட்சி என்ற மகத்தான கோரிக்கையை நாம் வைத்திருக்கின்றோம். இன்னும் ஒன்று, தலைவரவர்களே, சொல்லி முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கலாம். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல, ஆட்சி என்பது வேறு, கட்சி என்பது வேறு, சர்க்கார் என்பது வேறு. எந்தக் கட்சி வேண்டுமானாலும் ஆட்சிக் கட்சியாக இருக்கலாம். இன்றைய அரசு மாறி வேறு அரசு பொறுப்புக்கு வரலாம். ஆனால் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், நம்முடைய உரிமைகள் காப்பாற்றப்படத்தக்க வகையில் நம்முடைய மாநில மக்கள் தேவைக்கேற்ற வசதிகளைப் பெற்று வாழ்ந்திடத்தக்க வகையில் வகை கண்டிட வேண்டும் என்கின்ற முறையில் மகத்தான நிதி நிலை அறிக்கையினைத் தந்து, இன்னும் ஒளி உமிழும்படியான ஒரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அல்லும் பகலும் அன்று வழியில் பணியாற்றுகின்ற தமிழக முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் நான் வரவேற்றுப் பாராட்டி "மடுத்த வாயெல்லாம் பகடன்னான், உற்ற இடுக்கண் இடர்பாடு உடைத்து" என்ற குறளைக் கூறி, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU G. SWAMINATHAN : Sir, on a point of order. There seems to be no quorum in the House.

திரு. கோ. சி. மணி : மாமன்றத் துணைத் தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இன்றைய தினம் பாராட்டி ஆதரித்துப் பேசும் முகத்தான் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி இந்த மாமன்றத்தில் விவாதித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இடையிடையே பல பிரச்சினைகள் புகுத்தப் பட்டு, அவைகளுக்கும் பரிகாரங்கள் அளிக்கப்பட்டு . . . .

[1973 மார்ச் 6

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: அவைத் தலைவரோடு சேர்ந்து 10 பேர் இருக்கிறார்கள். கோரம் இருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: கோரத்திற்காக வெளியிலிருந்து வந்தவரையும் சேர்த்து 'கோரம்' இருக்கிறது என்பது சரியா என்று கேட்கிறேன்.

திரு. கோ. சி. மணி: இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், இங்கே பாராட்டிப் பேசிய ஆளும் கட்சி நண்பர்களானாலும், இது உபரி பட்ஜெட்டாக இருந்தாலும், புதிய வரியை விதிக்காத பட்ஜெட்டாக இருந்தாலும், இதை என்னால் பாராட்ட முடியவில்லையென்று சொல்லுகின்ற அளவுக்கு இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் இருந்தாலும், இது ஓரளவுக்காவது மனநிறைவு தரத்தக்க அளவில் இருக்கிறது என்று ஒத்துக்கொண்டு இந்த மாமன்றத்தில் அத்தனை உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையினால் மனநிறைவு கொள்ளவில்லை, மகிழ்ச்சியடையவில்லை, சந்தோஷமடையவில்லை, பாராட்ட முடியவில்லை என்று புதிதாக அரசியலுக்கு வந்தவர்களோ அல்லது புதிதாகப் பொறுப்புக்கு வந்தவர்களோ சொல்லியிருந்தால், அதைப் பற்றி நாம் வருத்தப்படத் தேவையில்லை. ஆட்சி செய்து பழக்கப்பட்டவர்கள், ஏறத்தாழ 1947-லிருந்து 1967-ம் வருடம் வரை ஒரே கொடியின் கீழ், இந்த நாட்டை ஆண்டு இருக்கின்ற பல முதலமைச்சர்கள், பல நிதியமைச்சர்கள் சார்ந்த கட்சியினர் அதைப்பற்றிக் குறை சொல்லி, பாராட்ட முடியவில்லை, வரிகள் போடவில்லையே தவிர பழைய வரிகளை நீக்கவில்லை என்று சொன்னதையும் இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழ் நாட்டிற்கு நம்முடைய டாக்டர் கலைஞர் மட்டும் முதலமைச்சராக இல்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 6 முதலமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். பிரகாசம் காரு அவர்கள் இந்தத் தமிழ் மாநிலம் பிரிவதற்கு முன்னால் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். குமாரசாமி ராஜா அவர்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள்



1973 மார்ச் 6] [திரு. கோ. சி. மணி]

காங்கிரஸ் கட்சி சார்பாக முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களும் காங்கிரஸ் கட்சியில் இருந்த நேரத்தில் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். திருவாளர் காமராஜ் அவர்களும் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். திருவாளர் பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். இத்தனை பேர்களும் நிதி அமைச்சர் களாகவும், முதலமைச்சர்களாகவும் இருந்து பணியாற்றி இந்த மாமன்றத்தில் பல நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக் கிறார்கள். ஆனால் இதைவிடப் பாராட்டத் தகுந்ததாக, பெருமைப்படத் தகுந்ததாக எந்த இனத்திற்கும் அதிக நிதி ஒதுக்கீட்டை செய்தோ, அல்லது இதைவிடக் குறைந்த அளவு வருமானத்தை வைத்து, வரியே போடாமலோ ஒரு பட்ஜெட்டை இந்த மன்றத்திலோ அல்லது சட்டப் பேரவையிலோ தந்திருக்கிறார்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் தலைவர் அவர்கள் மூலம் இன்னுமொன்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் ரூ. 49 லட்சம் உபரி என்று சொன்னார்கள். அதே முதலமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் இந்த 49 லட்சம் உபரி இயற்கைக் கோளாறு ஏற்பட்டால் என்ன ஆகுமோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த மன்றத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1959-ல் முதலமைச்சராக காமராஜ் அவர்கள் இருக்கின்ற நேரத்தில், தமிழ் நாட்டில் அழுகும் பொருட்களுக்கு வரி போடப்பட்டது. காங்கிரஸ் கட்சி சார்பாக இந்த நாடு ஆளப்படும் நேரத்தில் அழுகும் பொருட்களுக்கெல்லாம் வரி போடப்பட்டது. கடுமையான எதிர்ப்பு சட்ட மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அப்படித் தெரிவிக்கப்பட்டிருந்தும் கூட, மெஜாரிட்டி பலத்தை வைத்து அந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் அதை கைதட்டி வரவேற்றார்கள்.

திரு. கே. ராஜாராம்: தனி வரி போடப்பட்டதா? விற்பனை வரி போடப்பட்டதா?

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: விற்பனை வரியில் அழுகும் பொருள் சேர்ந்தது.

திரு. கோ. சி. மணி: பல எதிர்ப்புகளுக்குப் பிறகு அது நிறுத்தப்பட்ட பொழுதும் கூட கைதட்டினார்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். எதிர்ப்புகளுக்குப் பிறகு அந்த வரி ரத்து செய்யப்பட்டபோது இந்த மன்றத்தில கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். அந்த வரி போட்டதும் அவர்களே, நீக்கியதும் அவர்களே. அந்தக் காலங்களிலெல்லாம் இந்த மன்றத்தில் யாரும் ஆளும் கட்சியைப் பற்றிக் குறை சொல்லி இது தவறு என்று சொன்னால், அதை ஒத்துக்கொள்ளவில்லை. இப்படி இந்த வரியே போடாமல் 1 கோடி 60 லட்சம் ரூபாய் வரையில் நிதி நிலை அறிக்கையில் துண்டு விழுந்தது 1964-ல் என்று கருதுகிறேன். இந்த 1 கோடி 60 லட்சம ரூபாயைச் சரி செய்ய முடியாமல், விவசாயிகளுக்கு நீருக்கும், நிலத்திற்கும் என்ன அடிப்படைத் தீர்வையோ, அந்தத் தீர்வையின் பேரில் 25 சதவிகிதம் சர்சார்ஜ் போடப்பட்டது. 1 கோடி 60 லட்சம் ரூபாயைச் சரி செய்வதற்காக வேறு வழியில்லாமல், வக்கில்லாமல், விவசாயிகளுக்கு நீர் வரி, நில வரி இரண்டையும் ஒன்றாக்கி அந்த அடிப்படையில் 25 சதவிகிதம் சர்சார்ஜ் விதிக்கப்பட்டது. அப்படிப்பட்டவர்களெல்லாம இன்றைய தினம் கூட வரி போடவில்லை என்று சொல்வதில் பெருமையில்லையென்று ஹிதோபதேசம செய்கிறார்கள். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையில் மேலும் எவ்வளவோ மறைமுக வரிகள் இருக்கின்றன. விவசாய வரிகளை இணைத்ததை ரொம்ப காலத்திற்கு முன்னால் நான் எதிர்த்திருக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். யார் சொல்லுகிறார்கள்? எதிர்த்திருக்கிறேன் என்று சொல்லுகிறவர் முதலில் முதலமைச்சராக இருந்த ஒருவர். ஆனால் அவரே விவசாயிகளுக்கு நீர் வரி, நில வரி இரண்டையும் சேர்த்து சர்சார்ஜ் விதித்திருக்கிறார். விவசாயிகள் தாங்க மாட்டார்கள், வரி போடக் கூடாது, அவர்களுடைய கணக்கை மற்ற இனத்தோடு சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று இன்று வாதாடுகின்றவர், ஏற்கனவே தெரிவித்த ஒரு கருத்து என்று சொல்லுகின்றவர், அவருடைய காலத்திலே அவரே இந்த வரியை விதித்து இந்த வரி கட்ட வேண்டியது அவசியம் என்று வாதாடினார். இதை நாம் பத்திரிகையில் படித்திருக்கிறோம். இதைப் போல என்னால் நிறையக் கூற முடியும். ஆனால் இன்றைய தினம் இருக்கின்ற நிதியமைச்சர் அவர்கள் இந்த உரையில் மிகத் தெளிவாக ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். உழுபவனுக்கு



நிலம் சொந்தம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இங்கே பல பேர் சொன்னார்கள். துணைத் தலைவரவர்களும் குறிப்பிட்டார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய உத்தமர் காந்தியடிகளார் காலத்தில் கராச்சி மாநாட்டில் உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியதாக நான் புத்தகத்தில் படித்தேன். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒன்றை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது சாலச் சிறந்தது என்று எண்ணுகிறேன். சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் உச்ச வரம்புச் சட்டம் வந்தது. அன்றைய தினம் "இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இருக்கின்ற குறைபாடுகளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலிருக்கிற அநேக விதிவிலக்குகள் ரத்து செய்யப்பட வேண்டும். இது உச்ச வரம்பு என்று ஆரம்பித்து மிச்ச வரம்பாகப் போய் முடியும். எனவே இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கக் கூடாது. இன்னின்ன இனங்கள் திருத்தப்பட வேண்டும்" என்று சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட பி.ப. 6-40
வில்லை. அதற்கு ஒரு 15 நாள் கழித்து அவர்கள் கும்பகோணம் பகுதியில் பொதுக்கூட்டத்திற்கு வந்தார்கள். ஒரு கூட்டத்தில் அவர் பேசுவதற்கு முன்னால் நான் பேசினேன். அவர் அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டு வந்தார்கள். பிறகு கூட்டம் முடிந்து அவர் சாப்பிடப் போகிற நேரத்தில் என்னை அழைத்து அன்று, "உன்னுடைய பேச்சை 20 நிமிடம் நான் கேட்டேன். நீ பேசிய பேச்சினுடைய விவரம் நான் தெரிந்துகொண்டேன். நீ சட்டமன்றத்தில் நான் பேசிய பேச்சுக்களை எல்லாம் கோடிட்டுக் காட்டினாய். இருந்தாலும் உன்னுடைய வாதம் முடிவாக எனக்குத் திருப்தியளித்தது. 15 ஏக்கரா, 10 ஏக்கரா, 30 ஏக்கரா, 5 ஏக்கரா என்பதல்ல பிரச்சினை. யார் உழுகிறானோ அவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கித் தர வேண்டுமென்றுதான் நீ கேட்டாய். அதை நான் கேட்டேன். அதற்கு உதாரணம் காந்தியடிகள் சொல்லியிருக்கிறார்கள். கராச்சி மாநாட்டிலே காங்கிரசு தீர்மானம் போட்டிருக்கிறது" என்று நினைவு படுத்தினார். "என்னைப் பொறுத்த வரையில். ஒருக்கால் காந்தியாரே மறுபிறவி எடுத்து வந்தால் செய்வாரோ என்பது எனக்குத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் எந்தப் பண்ணையாளன் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளப்போகிறானோ, செய்யப் போகிறானோ, எனக்குத் தெரியவில்லை" என்றார். மறைந்த

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட இன்றையதினம் இல்லை, மறைந்து விட்டார்கள். காந்தியார் வரவில்லை. அவர் வந்து அதை நிறைவேற்றவில்லை. எந்தப் புண்ணியவான் வந்து அதைச் செய்யப்போகிறானோ என்று அவர் நினைவுபடுத்தியதை இன்று அந்தப் புண்ணியவானாக தமிழ் நாட்டின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். உழுநிலம் உழுபவனுக்குச் சொந்தம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: உழுபவன் என்றால் யார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

திரு. கோ. சி. மணி: நேரடியாக யார் உழுகின்றாரோ அவனைத் தான் உழுபவனாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தானும் தன் குடும்பமும் பற்றாக்குறைக்கு மற்றவர்கள் துணை கொண்டு செய்கிறவர்களைத்தான் சாகுபடியாளர்கள் என்று சொல்லுகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தானும் தன்னுடைய குடும்பத்தினரும் வாழ சாகுபடி செய்யலாம் என்பதையும், தானும் தன்னுடைய குடும்பத்தினரும் சாகுபடி செய்யாமல் மற்றவர்களைக் கொண்டு சாகுபடி செய்கிறவர்கள், வீட்டிலே இருப்பவர்கள் உழுபவர்களா என்பதையும் உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

திரு. கோ. சி. மணி: இல்லவே இல்லை. அவனெல்லாம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நிலம் கொடுக்கப்பட வேண்டுமா? வேண்டாமா?

திரு. கோ. சி. மணி: கொடுக்கப்படத் தேவையே இல்லை. இடைத் தரகர்கள் எற்கெனவே இருக்கிற குத்தகை உரிமைப் பாதுகாப்பு சட்டத்திலே நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் வருகிற வரை அவர்கள் காத்திருக்கவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: குத்தகைதாரர்கள் உழுபவர்களா?

திரு. கோ. சி. மணி: குத்தகைதாரர்கள் உழுபவர்களாகத் தான் இருக்க வேண்டும். அப்படித்தான் இருக்கிறார்கள், எனக்குத் தெரிந்த வரை. இருந்தாலும் பெரும்பாலான... ஒரு நல்ல திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டி,





அதற்கு ஒரு தனியான சட்டம் வரும் என்பதையும் நினைவூட்டியிருக்கிறோம். அது எல்லோராலும வரவேற்கத் தகுந்ததாயிருந்தாலும் கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் "நான் முன்னாலேயே சொன்னேன் சிறு நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தையெல்லாம் எடுத்துக்கொள்வது நல்லது என்று. இப்போதும் நிலச்சுவான்தார்கள் சார்பாக அந்த ஒரு சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் தொகை என்ன தரப்போகிறார்களோ தெரியவில்லை எப்படித் தரப்போகிறார்களோ தெரியவில்லை". என்று சொன்னார். அந்தச் சட்டம் வருகிறபோது அவர்கள் பேசுகிற வாய்ப்பு இருக்கும். எனவே இந்த நிதி நிலை அறிக்கையைக் கொண்டு வந்த முதலமைச்சரை நான் பாராட்டி, ஏழை உழவர்களுக்கு உள்ள ஒரு வரப்பிரசாதமாக இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மு. மாசிலாமணி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம்—மாண்புமிகு முதல்வரவர்கள் 1973-74 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையில் எனக்கும் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த துணைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த நாட்டு மக்கள் அடித்தளத்தில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் போற்றும் அளவில் இந்த மாமன்றத்திலே வைத்திருப்பதைக் கண்டு அந்த மக்களிலே நானும் ஒருவன் என்ற முறையில் எனது பெரும் மனமகிழ்ந்த நன்றியை மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணைத் தலைவரவர்கள் நிறையப் பேர் பேசவேண்டிய காரணத்தால் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று பிறப்பித்த ஆணைக்குக் கட்டுப்படுகின்றேன் என்று சொல்லி, நான் மிகமிகப் பின் தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நிறையக் கருத்துக்களைச் சொல்லுவதற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை யொட்டி, நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகின்றேன். நான் மூன்றாவது முறையாக இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருந்தாலும், ஒரு சில கருத்துக்களை மீண்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு. மாசிலாமணி] [1973 மார்ச் 6

தமிழ்நாட்டில், சென்னையைப் பொறுத்தமட்டிலே பதினோராயிரம் வரை முடிதிருத்தும் கடைகள் இருக்கின்றன. இன்றையதினம் மாலை 7 மணிக்குமேல் கடைகளைத் திறக்கக் கூடாதென்ற காரணத்தால் அதிகாரிகள் கடைகள் அடைக்கப்படவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். பதினோராயிரத்து சொந்தக் கடைகளை வைத்திருக்கும் முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கின்ற நிலைமை பாதிக்கப்படுகின்ற காரணத்தால், மாலை 7 மணி என்று இருப்பதை ஒரு மணி நேரம் தள்ளி இரவு 8 மணி என்ற அளவில் ஆக்கப்படவேண்டுமென்று அமைச்சர்கள் மூலம் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இன்றையதினம் சென்னையிலேயும் மற்றப் பகுதிகளிலேயும் உள்ள மக்களெல்லாம் வாழ்கின்ற விதத்தில், இந்த ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையிலே பொருளாதாரத்தை நிச்சயமாக்கும் சட்டத்தைக் கொண்டு வருவது கண்டு மக்களெல்லாம் பாராட்டுகிறார்கள். அதனை நான் முழு மனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, பிற்பட்ட சமுதாயத்திலே மீனவர் சமுதாயம் என்று சொல்லப்படுகின்ற முக்குவர் சமுதாயம் இருக்கிறது. அதில் பெரும்பாலான மக்கள் கன்னியாகுமரி பகுதியிலே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய தொழிலே மீன் பிடிப்பது. கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேர், அப்படி வாழ்கின்றதாக, என்னைப் பொறுத்தவரை, நான் அங்கே சென்றபோது கேள்விப்பட்டேன். இந்த முக்குவர் சமுதாயத்தினர் கடல் கடந்து மீன் பிடிக்கச் சென்று, ஆபத்து ஏற்பட்டு இறக்க நேரிட்டால், இந்த அரசு ஆயிரம் ரூபாய் உதவி அளித்து வருகிறது. அவர்கள் பெரும்பாலும் கிருஸ்துவ மதத்திலே சேர்ந்து விட்ட காரணத்தால் அவர்களுடைய மகன் மகள் உபகாரச் சம்பளம் பெறுவதை இழந்திருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு அந்த உபகாரச் சம்பளத்தை அளிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதற்கு அடுத்தாற்போல், கன்னியாகுமரி பகுதியிலே நம்முடைய சவேரியார் கோயில் இருக்கின்றது. அந்தக் கோயிலிலே ஆண்டுக்கு ஒரு தடவை டிசம்பர் 3 ஆம் தேதி திருவிழா நடைபெறுகிறது. இந்தக் கோயிலிலே இருக்கின்ற



1973 மார்ச் 6] [திரு. மு. மாசிலாமணி]

பாதிரிகள் மூலமும் அந்தப் பகுதியில் இருக்கின்ற கிருஸ்துவர் மூலமும் அந்த டிசம்பர் 3 ஆம் தேதி விடுமுறை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டு நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் விடுமுறை அறிவித்திருக்கின்றார்கள். அந்த விடுமுறை அளித்திருப்பதை ஏன் இங்கே சுட்டிக் காட்டுகிறேனென்று சொன்னால், 20 ஆண்டுக் காலம் இருந்தவர்கள் அந்த விடுமுறையைக் கொடுக்கவில்லை. கடந்த 1970 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்ததன் பேரில் அதை நிறைவேற்றியிருக்கிறார்கள். நிரந்தரமாக அந்த டிசம்பர் 3 ஆம் தேதி கன்னியாகுமரி பகுதியிலுள்ள கிருஸ்துவ மக்களுக்கு விடுமுறை அளிக்கப்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதனை ஏன் இங்கே சொல்கிறேன் என்றால், மற்றக் கட்சிக்காரர்கள் பேசுகின்ற கூட்டத்தில், குறிப்பாக மன்றத்திலே மதிப்புக்குரிய ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகின்றபோது 1967 ஆம் ஆண்டு இந்த நாட்டிலே கழக அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து கன்னியாகுமரி பகுதியிலே எந்தவித நன்மையும் செய்யவில்லை என்று பேசியிருப்பதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன்.

ஆகவே கழக அரசுக்கு எம்மதமும் சம்மதம் என்ற கருத்துப்பட, எம்மதத்தாருடைய மனமும் புண்படாமல், முகம்மதிய மதமாகவிருந்தாலும், கிறிஸ்தவ மதமாகவிருந்தாலும், இந்து மதமாகவிருந்தாலும் சரி, எந்தப் பிரச்சினையையும் பேரறிஞர் அண்ணா காட்டிய வழியில் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அணுகி வருகிறார் என்பதை நான் இங்கே சொல்லாமலிருப்பதற்கில்லை. ஆகவே குமரி மாவட்டத்தில் வாழ்கின்ற பெருவாரியான மக்களும், நான் சுற்றுப்பயணம் செய்தபோது, அந்தக் கோவில் பாதிரியாரும், கிறிஸ்தவ மக்களும் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மிக, மிகப் பாராட்டிப் பேசினார்கள். இன்னொன்றை நான் இங்கேக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சென்னை மாநிலத்திலிருக்கின்ற சலூன்களுக்கெல்லாம் ஒரு ரூபாய் லைசென்ஸ் பீஸ் விதிக்கப்பட்டிருக்கிறது. அதை வசூல் செய்வதற்காக ரூபாய் 1.40 என்று போட்டு மொத்தம் ரூபாய் 4 லைசென்ஸ் வரியாக விதித்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களால் நடத்தப்படும் அந்த

[திரு. மு. மாசிலாமணி] [1973 மார்ச் 6

முடி திருத்தும் நிலையங்களுக்கு அந்த ஒரு ரூபாய் மட்டும் லைசென்ஸ் வரியாகப் போட்டு அதை மட்டும் வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு—செலவுத் திட்டம் 49 லட்சம் ரூபாய் உபரியாகக் காட்டுகின்ற திட்டம். சென்னை பூராவும், தமிழ் நாடு பூராவும் இந்த நாட்டு மக்கள், முடிதிருத்துவோர் சமுதாயமாகவிருந்தாலும், சலவையாளர் சமுதாயமாகவிருந்தாலும், அத்தனை பேரும் இந்த உபரி பட்ஜெட்டை வரவேற்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த அரசு செய்து காட்டிய சாதனைகளை, இந்த அரசு செய்கின்ற நல்ல பணிகளைப் பாராட்டி வருகிறார்கள். அது மட்டுமல்ல, தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்தும், சிலோனிலிருந்தும் தமிழ் நாட்டிற்கு வந்து வாழ்கின்ற அகதிகளுடைய வாழ்வில் இந்த அரசு அக்கறை காட்டி, கண்ணியமுள்ள தன்மையில் அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்ளவும், வியாபாரம் செய்து கொள்ளவும் நிதி உதவிகள் அளிக்கமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளும் வகையில் அந்த அகதிகள் இந்த அரசை மனதாரப் பாராட்டி வருகிறார்கள். மக்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற அளவுக்கு அவர்கள் பாராட்டிப் பேசி வருகிறார்கள். எனவேதான் இந்த அரசு, இந்தத் தமிழக அரசு, தானைத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வருகின்ற அரசு, டாக்டர் கலைஞர் அவர்களாலும் மற்ற மாண்புமிகு அமைச்சர்களாலும் நடத்தப்படுகின்ற இந்தக் கழக அரசு மக்களால் மனதாரப் பாராட்டப்பட்டு வரவேற்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த உபரி பட்ஜெட்டை நான் சார்ந்திருக்கின்ற சமுதாயத்தின் சார்பிலும் நான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் சார்பிலும் வரவேற்று, பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு எனது இந்த உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அய்யணன் அம்பலம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள, 1973-74-வது ஆண்டிக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசும் சந்தர்ப்பத்தை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் முன்னுரையில் சொல்லும்



1973 மார்ச் 6] [திரு. அய்யணன் அம்பலம்]

பொது சோஷலிசம் என்பது வாயளவில் இல்லாமல் செயலளவில் செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதை நினைக்கும் போது, 25 ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் மகாசபை இந்த நாட்டில் சுதந்திர இயக்கத்தில் போராடிக் கொண்டிருந்தபோது--- இன்றையதினம் சோஷலிஸ்ட் கட்சிகளில் உள்ளவர்கள் அப்பொழுது காங்கிரஸில் இருந்தார்கள்—நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால் சோஷலிசப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், கராச்சி தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்ன நேரத்தில், "சோஷலிஸ்ட்களாகக் காங்கிரஸில் இருந்த ஜெயபிரகாஷ் நாராயண், டாக்டர் லோஹியா போன்றவர்கள் அந்தத் திட்டத்தை பரிசீலிக்கும்போது வண்டியில் பாரத்தை ஏற்றிக்கொண்டு மாடு இழுத்துச் செல்லும்போது அந்த நிழலில் நாய் செல்கிறதே, அப்படித்தான் இந்த சோஷலிஸத்தைச் சுமந்து கொண்டு செல்கிறோம்" என்று சொன்னார்கள். கலைஞர் அவர்களுடைய வரவு-செலவுத் திட்டத்தில் அந்தக் கனவு நினைவாகிறதென்பதைக் காண்கின்றபோது, என் போன்று நீண்டகாலமாக சோஷலிசத்தில் நம்பிக்கையும், அதைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணமும் கொண்டவர்கள் அதைப் பாராட்டாமலிருக்க முடியாது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 25 கோடி ரூபாய் அதிகமாக வரவு கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த 25 கோடி ரூபாய் அதிக வரவு வருகின்ற போது, ஒரு புது வரி போடாது, ஏழை மக்கள் மீது எந்த விதமான சுமையையும் சுமத்தாமல் ½ கோடி ரூபாய் உபரியாகவும் காட்டியிருக்கிறார்.

இந்த நாடு விவசாய நாடு. விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற காரணத்தால். 24 கோடி ரூபாய் அதிகமாக விவசாயத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படிச் செய்யப்பட்டிருக்கும்போது, சென்ற ஆண்டு விவசாயிகள் எந்த அளவுக்கு உற்பத்தி செய்திருக்கிறார்கள், திட்டங்கள் எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கின்றபோது, எழுபது லட்சம் டன்னாகவிருந்தது இந்த ஆண்டு 72 லட்சம் டன்னாக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டில் விவசாயத்தில் பசுமைப் பாட்சி செய்து உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் பார்க்கின்றபோது, உபரியாக நெல் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறதென்பது விளங்குகிறது.

விவசாயி உற்பத்தி செய்கிறான். அதே நேரத்தில் விவசாயி உற்பத்தி செய்கின்ற பொருள்களை ஏழை மக்கள் வாங்குகிறார்கள். அப்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கும் வாங்கும் சக்திக்குமுள்ள நிலைமையைப் பார்க்க வேண்டும். தஞ்சை, ராமநாதபுரம், மதுரை போன்ற பகுதிகள் அதிகமாக நெல் விளையும் பகுதிகள். அங்கெல்லாம் நெல் மூட்டை ரூ. 30-லிருந்து ரூ. 38 வரை போகிறது. அதிலே நமது விவசாயிகளுக்கு அதிகமான லாபம் கிடைப்பதில்லை. அந்த லாபத்தை தொழிலாளர்கள், சாதாரண நடுத்தர மக்கள் பெறுகிறார்களா என்றால், அதுவும் இல்லை. ஒரு படி அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. வாங்கும் சக்திக்கும் உற்பத்தி சக்திக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்கும்போது, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போலிருக்கிறது. அரசாங்கம் எப்படி விவசாயிகளை உற்பத்தி செய்யச் சொல்கிறதோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு உதவியும் செய்ய வேண்டும். அதிகமான செலவுகளைச் செய்து விவசாயி உற்பத்தி செய்கிறான். அப்படி உற்பத்தியாகும் பொருள்களை வாங்கும் சக்தி படைத்த இடைத் தரகர்கள் வாங்கி அந்த லாபத்தையெல்லாம் கொண்டு போய்விடுகிறார்கள். விவசாயி எந்த அளவுக்கு உற்பத்தி செய்கிறான், எந்த அளவில் அவன் உற்பத்திப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விவசாய நிபுணர்கள், விவசாயிகள் பிரதிநிதிகள், அரசாங்கப் பிரதிநிதிகள் கலந்து ஆலோசித்து ஒரு விலை நிர்ணயம் செய்தால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் பார்க்கலாம் என்று சொல்லலாம். எனவே அரசு அதனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வித் துறையைப் பொறுத்த வரையில், 1966-67-ஆம் ஆண்டில் 47 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 108 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இந்த ஆண்டு வரவில் நான்கில் ஒரு பங்கு கல்விக்காகச் செலவு செய்கிறோம். கல்வியின் தரத்தைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில்





சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எங்களை மேடையிலும், அவருடைய பிரசங்கங்களிலும் இந்த அரசாங்க நடவடிக்கைகளிலும் நான் தொடர்ச்சியாகக் கண்டு வருகிறேன், அவர் ஒரு மணி நேரம், 1½ மணி நேரம் கல்வியின் மேம்பாட்டிற்கான திட்டங்களைப்பற்றி எடுத்துக் கூறி வருகிறார்கள். அவருடைய திட்டங்களைப் பார்க்கும்போது, இந்த நாட்டு மக்களுடைய கல்வித் தரம், கல்வி வாய்ப்பு இழந்த மக்களுடைய வாழ்க்கைத் தரம் 100 ஆண்டுகளிலாவது நல்ல முறையில் உயர்த்தப்படுமா என்ற எண்ணம் மனதில் எழுகிறது. ஆசிரியர்களைப்பற்றி உறுப்பினர் திரு. முத்துச் சாமி அவர்கள் நன்றாக எடுத்துக் கூறினார்கள். ஆசிரியர்களுடைய நலனுக்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன், ஆகவே அவர்களுக்காக நான் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொன்னார். ஆசிரியர்களின் நலன்களை ஒரு பக்கம் பார்க்கும்போது, இன்னொரு பக்கம் நாட்டின் நலன்களைப் பார்க்க வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 120 கோடி ரூபாய் செலவு செய்து 1½ லட்சம் பட்டதாரி ஆசிரியர்களை உற்பத்தி செய்கின்றோம். உயர்நிலைப் பள்ளிகளில் படித்தவர்களை உற்பத்தி செய்கிறோம். இவர்களுடைய வாழ்க்கை நிலைமையைப் பார்க்க வேண்டும். அப்படிக் கல்வி கற்ற வாலிபர்களுக்கு, இந்தச் சமுதாயத்தில் அரசாங்க உத்தியோகம் கொடுக்கப்படாவிட்டால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு இருக்கிறதென்பதைப் பார்க்க வேண்டும். என்னைப் போன்ற சட்டசபை, மேலவை உறுப்பினர்கள் இங்கே சில விஷயங்களைச் சொல்ல முடியாமலிருக்கலாம். நாங்கள் எல்லோரும் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. கிராமத்தில் உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவனுடைய தகப்பனார் ஒருவர் என்னிடம் வந்து, 'என்னுடைய மகன் ஏதோ இங்கிலீஷில் இரண்டு வார்த்தை பேசுகிறான், அவனுக்கு ஒரு உத்தியோகம் வாங்கிக் கொடுங்கள். அவனை எப்படி விவசாயத்தில் ஈடுபடுத்த முடியும்?' என்று கேட்கிறார்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: அவை மேலும் 5 நிமிடங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது.

திரு. அய்யணன் அம்பலம்: அவர்களுக்குப் பல சால்ஜாப்புகளைச் சொல்கிறோம். முதலில் அந்தப் பையனை மனுப்போடச்

சொல்லுங்கள் என்று சொல்லுகிறோம். பிறகு நேரடியாக போய்ச் சொல் என்று அவரிடம் சொல்கிறோம். அதற்குப் பிறகு வேலை வேலைத்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்திருக்கிறாயா என்று கேட்கிறோம். பிறகு அவன் அங்கு சென்று பதிவு செய்து வந்தவுடன், அவனுக்கு என்ன சாக்குச் சொல்வதென்று நினைக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் செய்வதில்லை. அந்த நிலைமையில் ஒவ்வொரு சட்டசபை மெம்பரும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும் . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, வெளிப்படையாக உறுப்பினரவர்கள் சொல்லிவிட்டார்கள். இனிமேல் யாரும் அவ்வாறு சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது.

**திரு. அய்யணன் அம்பலம் :** ஒவ்வொரு உறுப்பினரிடத்திலும் "நீங்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்கிறீர்கள்; முதலமைச்சரவர்களையும் மற்ற அமைச்சர்களையும் உங்களுக்குத் தெரியும், எப்படியாவது என் பையனுக்கு வேலை வாங்கிக் கொடுங்கள்" என்று சொல்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் பார்க்கும் போது, இந்தக் கல்வித் திட்டத்தால் நாட்டிற்கு ஏதாவது பயனுண்டா என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது அரசாங்கத்தினுடைய நிலைமையைப் பார்ப்போம். ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைவன் என்ற முறையில் சொல்கிறேன். இந்த ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக கல்வித் துறையில் செலவு செய்யப்படுகிற பணம் நல்ல முறையில் பயன்படுகிறதாவென்று பார்த்தால், இல்லை. அதில் ஒரு பைசா கூட இந்த நாட்டுக்கும், மக்களின் வாழ்க்கைக்கும் பயன்படாத நிலைமையைப் பார்க்கிறோம். எனவே இப்படிப்பட்ட நிலைமையில், ஏன் கல்விக்காக 120 கோடி ரூபாயை செலவு செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றுகிறது. நான் என்னுடைய விடுதியில் இருக்கும்போது, காலையில் பட்டதாரி ஆசிரியர்கள் போட்ட கோஷத்தைக் கேட்ட போது, இவர்களுடைய பள்ளிகளில் நம்முடைய குழந்தைகள் படித்தால் என்னவாகும் (சிரிப்பு) என்று நினைத்தேன். ஆசிரியர்களுக்கு நல்ல நோக்கு வரவேண்டும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினரவர்களுடைய பேச்சு ஒரு சாராரைப் பாதிப்பதாக இருக்கிறது. எனவே அப்படிப் பேச வேண்டாமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.





**திரு. அய்யணன் அம்பலம் :** நானும் இந்த நாட்டின் பிரஜை தான். பொறுப்புள்ளவன்தான். [illegible] பொறுப்புள்ளவன்தான். ஒரு நிர்வாகத்தைத் தலைமையேற்று நடத்துபவன் என்ற முறையில், அந்த ஒன்றியத்திலுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களைப் பற்றிச் சொல்கிறேன். எங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், தங்கள் குழந்தைகளை அந்தப் பள்ளிகளிலேயே படிக்க வைப்பது கிடையாது. அவர்களுடைய குழந்தைகளை மதுரையிலுள்ள பாலமேட்டுக்கு, பஸ் மூலம் அனுப்பிப் படிக்க வைக்கிறார்கள். எங்கள் ஊராட்சி ஒன்றியத்திலுள்ளதைத்தான் சொல்கிறேன். அவர்கள் போதிக்கும் கல்வியில் அவர்களுக்கே நம்பிக்கையில்லை (சிரிப்பு). முதலமைச்சரவர்கள் கல்வித் துறையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அவைகளைப்பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலைமைகளையெல்லாம், கல்வி அமைச்சரவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். இப்போது சில அங்கத்தினர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லையென்று சொன்னார்கள். நான் கல்வியமைச்சர் அவர்களிடத்தில் 2, 3 கமிட்டிகளில்கூட, கொடைக்கானலில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில்கூட, 'நீங்களே இந்தப் பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லியிருக்கிறேன். ஏதோ நாங்கள் அவர்களுக்கு எதிராக இருப்பதாகவும், அதனால் அவர்கள் சங்கடப்படுவதாகவும் ஆசிரியர்கள் நினைக்கிறார்கள். ஆசிரியர்களை நாங்கள் கௌரவமாகத்தான் நடத்துகிறோம். நான் எல்லா ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாகவும் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன். இந்தப் பள்ளிகளையெல்லாம் அரசாங்கமே நேரடியாக எடுத்துக்கொண்டால்கூட, இந்தக் கிராமங்களில் நடைபெறும் தவறுகளெல்லாம் அரசாங்கத்தின் சார்பாக நடக்கிறதென்று நினைத்துக்கொள்வோம். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இவைகளெல்லாம் மாற்றப்பட வேண்டும்.

இப்போது முதலாளித்துவத்தை ஒழிக்க வேண்டுமென்றும், அவர்களின் சொத்துக்களையெல்லாம் எடுக்க வேண்டுமென்றும் புரட்சியான திட்டங்களை நாம் போட்டுள்ளோம். இந்தச் சூழ்நிலையில் நாம் கிராமப் பொருளாதாரச் சூழ்நிலையைப் பார்க்க வேண்டும். கிராமங்களில் ஒரு நாளைக்கு 2½ ரூபாய்கூட

கிடைக்காத கூலித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் ஆசிரியர்களுக்கெல்லாம் அதிகமாகக் கொடுக்கிறோ மென்பதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. இப்போதுகூட 10 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் வந்த பிறகு 35 கோடி ரூபாயைச் சம்பளமாகக் கொடுத்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் கிராமப் பொருளாதாரச் சூழ்நிலையைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 ரூபாய், 1½ ரூபாய் கூட கிடையாது. ஒவ்வொரு மாதமும் 30 நாட்களும் வேலை கிடையாது. ஒரு பக்கத்தில் அரசாங்க ஊழியர்களுக்கெல்லாம் பணம் கொடுத்துக்கொண்டிருக் கிறோம். மற்றொரு பக்கத்தில் கிராமத்தில் எல்லோரும் கஷ்டப் படுகிறார்கள். நாம் ஒரு முதலாளித்துவத்தை ஒழிக்கப்போக, அரசாங்க அதிகாரிகள் என்ற போர்வையில் இன்னொரு முதலாளித் துவம் வளர்கிறதென்பதை மறுக்க முடியாது. அதிலும் இந்தக் கீழ்க் குடி மக்கள், சாதாரண விவசாயிகள், மில் தொழிலாளர்கள்—இவர்களுடைய வாழ்க்கை மேம்பட வேண்டும். அந்த விதத்தில் பொருளாதார நிலைமைகள் அமைக்கப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'மண்ணுக்குப் மாகாணிப் பங்கு' என்று சொல்லுவார்கள். யாராவது மல்லு காட்டினால், இப்போது மாகாணிப் பங்கு கிடைக்கும். கிளர்ச்சி செய்தால், சத்தம் போட்டால், அமைச் சர்களைக் கூட்டி வந்து, அங்கே கோரிக்கைகளை வைத்தால், அங்கு அமைச்சர்கள் உடனே பல கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். அதே நேரத்தில் கிராமங்களில் வாழும் ஒரு பகுதி மக்கள் எந்தவிதமான வசதியும் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

25 ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய தாய்மார்களுக்கு இந்தச் சுதந்திரம் வந்தால்தான் ஒரு புடவைக்கு மேல் மறு புடவை கிடைக்குமென்று சொன்னார்கள். அந்தக் காலத்தில் ஒரேயொரு புடவையை வைத்துக்கொண்டு, அதன் ஒரு பக்கத்தை புளிய மரங்களில் கட்டி, மற்றொரு பக்கத்தை உடம்பில் சுற்றிக்கொண்டு, அவற்றைக் காயவைத்து கட்டிக் கொண்டிருந்தார்களென்று, சுதந்திரம் வேண்டுமென்று சொன்ன காலத்தில் பேசினார்கள். அப்படியெல்லாம் ஏன் சொன்னோம்





என்றால், இந்த நாட்டுச் செல்வத்தை வெள்ளைக்காரர்கள் சுரண்டிக் கொண்டுபோய் விட்டார்கள். இந்த நிலை மாற வேண்டுமென்ப தற்காக சுதந்திரம் வேண்டுமென்று சொன்னோம். எனவே இந்த நாட்டின் சுதந்திர இயக்கத்தை நடத்திய காங்கிரஸ் கட்சிக்கு மக்கள் பெருவாரியாக வாக்களித்தார்கள். 20 ஆண்டுகளாக காங்கிரஸ் அரசாங்கம் அந்தக் குறைகளை நிவர்த்திக்கவில்லை. எனவே மக்களிடம் ஒரு தடவை அரசாங்கத்தை எங்களிடம் கொடுங்கள் என்று சொன்னோம். நாட்டு மக்கள் யாரையும் பார்க்காமல், முதலமைச்சரைப் பார்க்காமல், நாவலரைப் பார்க் காமல், திரு. மாதவனைப் பார்க்காமல், மாற்றம் தேவையென்ற ஒரே காரணத்திற்காக வாக்களித்தார்கள். அதிகமான மெஜாரிட்டி கொடுத்து இப்போதுள்ள இந்த கட்சியை அனுப்பிவைத்தார்கள். பிறகாவது அவர்களுடைய நிலைமை திருந்தியிருக்கிறதா, அவர் களுடைய பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் அதற்குப் பின்னாலும் அந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. நாம் போடும் திட்டங்களெல்லாம் கீழ் மட்டத்திற்குப் போகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். சென்னை, மதுரை, கோவை நகரங்களிலேயே அந்தத் திட்டங்கள் தங்கிவிடுகின்றன.

கிராம மக்களுக்கு பொருளாதாரத் திட்டங்களின் மூலம் பலன் ஏற்பட வேண்டுமென்பதை மனதில் வைத்து, இவைகளெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டும். பாங்குகள் தேசிய உடைமை யாக்கப்பட்டிருக்கின்றன. மின்சார நிறுவனங்களையும், போக்கு வரத்தையும் தேசிய உடைமையாக்கியிருக்கிறோம். இவைகளையெல் லாம் வரவேற்கிறோம். அதே நேரத்தில் தேசிய உடைமையாக்கப் பட்ட சொத்து இந்த நாட்டின் பொதுச் சொத்து என்ற முறையில் இந்த நாட்டு மக்களிடையே ஒரு எண்ணம் வந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மதுரை நகரத்தில் டி.வி.எஸ். என்ற தனியார் ஸ்தாபனம் பேருந்துகளைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்தது. அதைத் தேசிய உடைமையாக்கினோம். அதை வரவேற்கிறோம். தனியார் துறை நிறுவனம் சிறப்பாக நடந்ததைப் பாராட்டினோம். அதைக் காட்டிலும் சிறப்பாக நடந்தால்தான் தேசிய உடைமையாக்கப்பட்ட தொழில்களை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். 8, 9 தேதிகளில் மதுரையில்

திடீரென்று பஸ்களை நிறுத்திவிட்டார்கள். அன்று முகூர்த்த நாள். எவ்வளவு கஷ்டங்கள் மக்களுக்கு ஏற்பட்டதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் சொல்கிறேன் என்றால், நாட்டுடைமையாக்கப்படும்போது, நாட்டு மக்களும் அதற்குத் தயாரிக்கப்பட வேண்டும். அப்படித் தயாரிக்கப்பட்டால்தான், நாம் எந்த இலட்சியத்திற்காக சோஷலிசத்தை நோக்கிப் போகிறோமோ அதை அடைய முடியும். இல்லாவிட்டால், அந்த இலட்சியம் விரோதமானது, தவறானது, நாட்டுக்குப் பயன்படாதென்று, நாட்டு மக்களால் அது தூக்கி எறியப்பட்டால் மீண்டும் இந்த சந்தர்ப்பம் ஏற்படாது, பிறகு மீண்டும் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியாது. எனவே தொழிலாளி வர்க்கமும், விவசாய வர்க்கமும் மத்தியதர வர்க்கமும் அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆரம்பக் கல்வியிலே நாட்டு மக்களை ஈடுபடுத்த வேண்டும். அமைச்சர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். இன்னும் மதிய உணவுத் திட்டத்திலே ஏதோ தவறு இருக்கிறது என்று சொன்னார்கள். மதிய உணவுத் திட்டம் ஏழைகளுக்கு உணவு அளிக்க இருக்கிறது என்று சொல்லலாம். மதிய உணவுத் திட்டம் இந்த நாட்டு மக்களின் சோஷலிசத்திற்கு விரோதி என்று சொல்லுகின்றார்கள். ஏனென்றால் குழந்தைகள் மத்தியிலே சிலர் ஏழைகள் வீட்டுக் குழந்தை, சிலர் பணக்கார வீட்டுக் குழந்தை என்று ஒரு தாழ்வு மனப்பான்மை வந்து விடுகின்ற வகையில் இருக்கின்றது. ஏழை வீட்டுக் குழந்தைகள் • மதிய உணவு சாப்பிடுகிறார்கள் என்ற மனப்பான்மை வந்துவிடுகிறது. குழந்தைகளிடத்தில் தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டால், இப்படி அவர்கள் இந்த நாட்டின் வீரர்களாக, இந்த நாட்டின் சோஷலிஸ சக்திகளாக, தியாகிகளாக, இந்த நாட்டின் விஞ்ஞானிகளாக டாக்டர்களாக எப்படித் தயாராக முடியும்?

**திரு. க. அறிவழகன்:** மதிய உணவு என்பது உலகம் எங்கும் வளர்ந்திருக்கின்ற ஒன்று. மேல் நாடுகளிலே கூட குழந்தைகளுக்கு வழங்குகின்ற ஒன்றாக இருக்கிறது. நான் இப்போது பிரிட்டனுக்குச் சென்றிருந்தேன். அங்கே பாலும் வழங்குகின்றார்கள், உணவும் வழங்குகின்றார்கள்.





**திரு. அய்யணன் அம்பலம்:** தலைவரவர்களே, நான் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதற்கு பதில் சொல்லுகிறேன். சோஷலிஸ நாட்டில் எல்லாக் குழந்தைகளுக்கும் மதிய உணவு போடப்பட வேண்டும். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இருக்கக்கூடாது. எல்லாக் குழந்தைகளுக்கும் சீருடை கொடுக்க வேண்டும். ஒருவன் பட்டுச் சொக்காயும், ஒருவன் கிழிந்த சொக்காயும் போட்டுக்கொண்டு வருவது இருக்கக் கூடாது. ஏழைக் குழந்தைதான் மதிய உணவு சாப்பிடுகிறது, வசதியுள்ள பணக்காரக் குழந்தை சாப்பிடுவதில்லை என்று இருக்காமல் எல்லோருக்கும் மதிய உணவு அளிக்க வேண்டும், ஆறு மணிக்கு வீட்டிலே கொண்டு போய் விடவேண்டும். இந்த அளவுக்குச் செய்ய வேண்டும். நம் நாட்டிலே 25 ஆண்டு முடிந்த சுதந்திர தின வெள்ளி விழா கொண்டாடுகிறோம். 25 வயதான இளைஞர்களையும் நாம் பார்க்கிறோம்.

***திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, ஏற்றத் தாழ்வு என்பது நாடு எங்கும் இருக்கும். பள்ளிகளிலே சீருடை எல்லோருக்கும் கொடுத்துவிடலாம். அமைச்சர் அவர்களுக்கு முடியுமானால் எல்லோருக்கும்கூட மதிய உணவு வழங்கிட முடியும். ஆனால் ஒரு குழந்தை தெருவிலே நடந்து செல்லும், ஒரு குழந்தை பஸ்ஸிலும், ஒரு குழந்தை காரிலும் செல்லும். ஒரு குழந்தை ரயிலிலே செல்லும் போது முதல் வகுப்பிலே செல்லும். இன்னொரு குழந்தை மூன்றாவது வகுப்பிலே செல்லும். ஆகவே, மாறுபாடுகள் சமுதாயத்திலே இருக்கின்றன. அவற்றை மேலெழுந்தவாரியாக மறைத்துவிடமுடியும் என்று கருதக்கூடாது. அதுவும் அறிவுள்ள இந்தக் காலக் குழந்தைகளின் கண்களிலிருந்து ஏற்றத்தாழ்வுகளை மறைக்க முடியும் என்று எண்ணுவோமானால், அது முடியாத காரியம் என்றே நான் கருதுகிறேன்.

**திரு. அய்யணன் அம்பலம்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இன்னும் அந்த நிலையை விட்டு வரவில்லை. எப்போதும் அந்த ஏழை சமுதாயம் அப்படியே இருக்கவேண்டும். பணக்காரர் அப்படியே இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

* **திரு. ஜி. சுவாமிநாதன்:** அப்படியே இருக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. அந்தக் குறிக்கோளும் எனக்கு இல்லை. எல்லாக் குழந்தைகளுக்கும் சௌகரியம் இருக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளும் நலமடைய வேண்டும். எல்லோரையும் உயர்த்த வேண்டும். வெளியிலே ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்போது அதை மறைத்துவிட முடியாது. அதை மறைத்துவிட வேண்டுமென்று நினைத்தால், அது முடியாத காரியம் என்றே சொல்லிக்கொள்கின்றேன். ஏழை மக்கள் நிலை ஜப்பானில் உள்ளது போல உயரவேண்டும். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மணி அவர்களும் ஜப்பானிய நாடு சென்றிருக்கிறார்கள். அதுவும் ஒரு சமதர்ம நாடு. மேல் நிலையில் இருப்பவர்களை, கீழ் நிலைக்குக் கொண்டுவந்தாலும் சமதர்மம் இருக்கும். குறிப்பிடப்படுகின்ற இவ்விரண்டு சமதர்மத்தில் எது நமக்குத் தேவை என்பதை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். இந்த 20, 25 ஆண்டுகளில் சோசலிசத்தின் மூலம் எல்லோரையும் கீழே கொண்டுவரக்கூடிய ஒரு நிலைமையைத்தான் நாம் இதுவரை உருவாக்கியிருக்கிறோம்.

**திரு. அய்யணன் அம்பலம்:** சோஷலிசத்திலே நாம் வெற்றி பெற வேண்டுமானால், அவசியம் குழந்தைகளுக்கு முதல் ஆண்டிலேயே நாம் அதைச் செய்யவேண்டும். குறிப்பிட்ட ஒரு காலத்தில், 20, 25 ஆண்டுகளில் இந்த நாட்டின் வாலிபனாக வரும் போது, அவன் ஒரு தன்மான உணர்ச்சியுள்ள வீரனாக வளர்ச்சியடைய வேண்டும். அடிமை உணர்ச்சி வரக்கூடாது. நாம் நாட்டு மக்களைப் பயன்படுத்துவதிலே ஈடுபட வேண்டும். சமுதாயம் வளர்ச்சியடையவேண்டும். தொழிலாளர் குழந்தையும் கூட ஒரு விஞ்ஞானியாக வர வேண்டும். அந்த மாதிரித் தான் நம் நாட்டிலே சோஷலிசத்தை உண்டாக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. இன்னும் ரஷியா, சைனா நாட்டிலே போய் நமது அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கலாம். அந்த நிலைமைக்குத் தக்கவாறு நமது கல்வித் திட்டத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் அதிகமான சலுகைகளைக் கொடுத்திருக்கின்றது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே அவர்கள் நமது திரு. முத்துசாமி சொன்னமாதிரி



மீண்டும் போராட்டம் என்றால், அது ஏதோ அரசியல் நோக்கத்தோடு என்று தான் சொல்ல வேண்டும். அவர்கள் போராடி சிறைக்குப் பிடித்துச் செல்லப்பட்டாலும், மாணவர்கள் போராடுவார்கள், பஸ்களை எரிப்பார்கள், கல் எறிவார்கள், கடைகளின் மேல் கல் எறிவார்கள் என்பது போலச் சொல்லுகின்றார்கள். ஆகவே ஆசிரியர்களுக்கு அவர்களுடைய போராட்டத்திலே நம்பிக்கையில்லை, அவர்களுடைய போராட்டத்திலே ஒரு ஜீவனே இல்லை. அவர்கள் சிறை சென்றால், மாணவர்கள் போராட்டம் நடக்கும்; அவர்கள் வெளி வந்துவிடுவார்கள் என்றார்கள். நான் அச்சுத மேனன் அவர்களைப் பாராட்டுகின்றேன். பல காலமாக இந்த நாட்டு மக்களுடைய வரிப் பணத்தில் பாதிப் பணத்தை நிர்வாகச் செலவுக்காகவே செலவு செய்துவிட்டோம். இந்த நாட்டு மக்களுக்கு என்ன பதிலைச் சொல்லப்போகிறோம்? இங்கு 4½ கோடி மக்கள் இருக்கின்றார்களே. நம் அரசாங்கம் கொஞ்சம் நாட்டு மக்களைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நிலச் சீர்திருத்தம் என்று விவசாயிகளுக்காக பல திட்டங்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் அமைச்சராகவும் இருக்கின்றார்கள் என்ற முறையிலே கேட்டுக்கொள்கின்றேன். பிற்பட்ட நலத்துறை அமைச்சகத்தில் தனித்தனி இலாகா என்று வைத்திருக்கின்ற மாதிரி, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அலுவலகங்கள், அலுவலர்கள் ஆகியவை வேண்டுமென்ற பல நாள் கோரிக்கையை, பஞ்சாயத்துத் தலைவர்கள் கோரிக்கைகளை அனுசரித்து தனி இலாக்காவை அமைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொண்டு இவ்வளவு நேரம் அதிகமாகப் பேச அனுமதித்ததற்கு துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

## இணைப்பு

[185 ஆம் பக்கத்தில் 194 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்டப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) 1970-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட மோட்டார் விபத்துக்கள். 12 486

(இ) மொத்தம் ஏற்பட்ட விபத்துக்களில் மரணமடைந்தோர் காயமுற்றோரின் சதவிகிதம்.

1. இறந்தவர்களின் சதவிகிதம். 14%
2. காயமடைந்தவர்களின் சதவிகிதம். 80%

(உ) இவற்றில்.

1. மோட்டார் வண்டிகளினால் ஏற்பட்ட விபத்துக்கள். 2462
2. சரக்கு பேருந்துகளினால் ஏற்பட்ட விபத்துக்கள். 3755
3. பேருந்துகளினால் ஏற்பட்ட விபத்துக்கள். 2786

(எ) கார், பஸ், லாரி இவற்றால் தனித்தனியாக ஏற்பட்ட விபத்துக்களில் தனித்தனியாக மரணமுற்றோர், காயமுற்றோர் தொகையும் சதவிகிதமும்.

(1) மரணமுற்றோரின்

| | எண்ணிக்கை | சதவிகிதம். |
|---|---|---|
| 1. மோட்டார் வண்டிகளினால் | 263 | 2 3% |
| 2. பேருந்துகளினால் | 363 | 3% |
| 3 சரக்கு பேருந்துகளினால் | 514 | 4 5% |

(2) காயமுற்றோரின்

| | எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|
| 1. மோட்டார் வண்டிகளினால் | 2061 | 17·5% |
| 2. பேருந்துகளினால் | 2133 | 18% |
| 3 சரக்கு பேருந்துகளினால் | 1841 | 15·7% |

(ஐ) விபத்துக்களின் காரணமும் அதன் விகிதாச்சாரமும்.

1. ஓட்டுநரின் தவறால் 50%
2. பாதசாரிகளின் தவறால் 25%
3. இயந்திர கோளாறால் 25%

## தமிழ் நாடு சட்ட மன்றம்

---

### புதன்கிழமை, 1973 மார்ச் 7.

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. பு. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.*

### *Maintenance of Roads*

* 200. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have proposals under its consideration to take over the maintenance of more roads in Madras City; and

(*b*) if so, the details thereof ?

### சாலைகளைப் பேணுதல்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் மேலும் பல சாலைகளை அரசு தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு பேணி வருவதற்கு வகை செய்வதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சியிடமிருந்து கீழ்க்கண்ட சாலைகளை நெடுஞ்சாலைகள் கிராமப்பணித்துறை எடுத்துக்கொள்ளலாமா என்பது குறித்து தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது :

(1) கோக்ரேன் பேசின் சாலை (2 மைல் 7 பர்லாங், 560 அடி)

(2) வண்ணாரப்பேட்டை லெவல்கிராசிங் சாலை (0.8 கிலோ மீட்டர்)

(3) வாலாஜா கேட்டிலிருந்து பாண்டு பிராக்டீஸ் சாலை, தெற்கு கடற்கரை சாலை, அனைத்திந்திய வானொலிக்கு எதிராக உள்ள லூப் சாலை, கிரீன்வேஸ் சாலை, அடையாறு பாலம், ஆளுநர் மாளிகை வழியாக ஹால்டா அருகில் டிரங் சாலை வரையில் செல்லுகிற சாலை. அவைகளை எடுத்துக்கொள்ள தலைமைப் பொறியாளர் குறிப்பு அனுப்பியிருக்கிறார்.

THIRU V. ISVARMURTI : In addition to these roads, we find that even pavements as near as Mount Road and Wallajah Road are not maintained properly. The maintenance is far from satisfactory. Will the Government take over the maintenance of these pavements also, Sir ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I do not know to which pavements my hon. Friend is referring to and whether they are under the control of the Corporation of Madras or Highways Department. If the hon. Member's suggestion is accepted, it would amount to interference with the Corporation work.

THIRU K. RAJARAM : Will the Government at least press the Corporation authorities to maintain the pavements in a proper way ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The views of the hon. the Leader of the Opposition will be conveyed to the Corporation.

### *Government Servants Dying in Harness*

£* 192 Q.—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether recruitment procedure of service in this State has been relaxed in the case of (1) sons and (2) daughters of Government servants dying in harness; and

(*b*) if so, the details thereof ?

### பணியில் இருக்கும்போது உயிர் துறக்கும் அரசுப் பணியாளர்கள்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பணியில் இருக்கும்போது உயிர் துறக்கும் அரசுப் பணியாளர்களின் (1) மகன்கள், (2) மகள்கள் நேர்வில் இம்மாநிலத்திலுள்ள பணிக்கேற்ற ஆள் திரட்டல் நடைமுறை தளர்த்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமி திரு. செ. மாதவன் :** (அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

@ 332-335 ஆம் பக்கங்களில் பின்னிணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது. 6-3-1973 வினாப்பட்டியலின் ... வைக்கப்பட்டது.



### *Palladam Panchayat Union Teachers*

* 195 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are any teachers in Palladam Panchayat Union, whose probation has not been declared though their period of service has exceeded 10 years;

(*b*) if so, the number of such teachers;

(*c*) the reasons therefor;

(*d*) whether any management in Palladam Panchayat Union has ordered that the teacher under its control who has refused to be in charge of the Midday Meals Scheme, was not eligible to be Head-master of the school; and

(*e*) if so, whether the Education Department has issued any order making it compulsory on the part of the teachers to serve midday meals ?

### பல்லடம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஊழிய காலம் ஆகியும் பணி வரன்முறை (Probation Declare) செய்யப்படாமல் உள்ள ஆசிரியர்கள் உள்ளனரா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு பேர் ?

(உ) அதற்கான காரணமென்ன ?

(எ) பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் மதிய உணவு பொறுப்பை ஏற்காத காரணத்தால் எந்த ஆசிரியராவது பள்ளியின் தலைமைப் பொறுப்பை ஏற்கக் கூடாது என சம்பந்தப்பட்ட நிருவாகம் உத்திரவிட்டுள்ளதா ?

(ஐ) ஆமெனில், மதிய உணவு போடுவதை ஆசிரியர்கள் கட்டாயம் செய்யவேண்டுமென கல்வித் துறையில் ஏதேனும் உத்திரவு உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஒருவர்.

(உ) அந்த ஆசிரியர் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றிய போது அவருடைய தகுதிகாண் பருவம் முடித்து உத்திரவிடுதலை நிர்வாகக் காரியங்களுக்காக நிறுத்தி வைக்க உத்திரவிடப்பட்டிருந்தது. பிறகு பல்லடம்

[1973 மார்ச் 7

ஊராட்சி ஒன்றியத்திற்கு மாறுதல் பெற்று வந்துள்ளார். அப்பொழுது அவர் பொய் பதிவுத் தாள்களை (False Record Sheets) வழங்கியதாகவும், பள்ளியில் அடிக்கடி தகராறுகளை செய்து கொண்டதாகவும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி, நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்ததால் தகுதிகாண் பருவத்தை முடித்து உத்திரவிடவில்லை. இதற்கிடையில் அவர் தகுதிகாண் பருவம் முடித்து உத்திரவிட்டு சம்பளம் நிர்ணயிக்கவில்லை என திருப்பூர் மாவட்ட முன்சிப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். அவ்வழக்கு தள்ளுபடி செய்யப் பட்டது. மீண்டும் கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து வழக்கு நடைபெற்று வருகிறது. எனவே இவ்வழக்கு முடிந்தவுடன் அவருடைய தகுதிகாண் பருவத்தை முடிக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) ஆம். அந்த ஆசிரியர் பள்ளித் தலைமைப் பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொள்வதாகவும், மதிய உணவுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இயலா தென தெரிவித்ததால் அவரிடம் பள்ளித் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க வில்லை.

(ஐ) பள்ளியின் தலைமை ஆசிரியர் 'மதிய உணவு செயற்குழு செயலர்' என்ற முறையில் 8—12—1967 நாளிட்ட 1850 எண்ணுள்ள கல்வித் துறையின் அரசாணைப்படி மதிய உணவு பொறுப்புகளை ஏற்கவேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவாவர்களே, மதிய உணவுப் பொறுப்பு அரசாங் கத்தால கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களாக இருக்கக்கூடிய வர்கள் இன்னின்ன அடிப்படையில்தான் செயல்பட வேண்டுமென்று சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? ஆசிரியர்களின் கடமைகளில் மதிய உணவுப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதும் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். முதல் முதலில் மதிய உணவளிப்பதை இலவசமாகச் செய்யுங் கள் என்று அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. சம்பந்தப்பட்ட ஆசிரி யரின் பள்ளியில் கமிஷனர் அவர்கள் கணக்குகளைப் பார்த்து, அதில் தவறு இருந்ததைக் கண்டு, போலீசில் ஒப்படைக்கப்பட்டார். இது போன்ற விஷயங் களில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் நடவடிக்கை எடுக்க வேண்டுமேயல்லா மல், போலீசில் ஒப்படைக்கக்கூடாது. எனவே போலீசில் அந்த ஆசிரியரை இரண்டு முறை ஒப்படைத்ததால், அவர் மதிய உணவுப் பொறுப்பை எடுத்துக் கொள்ளாமல், ஆசிரியர் பணிப் பொறுப்பைச் செய்கிறேன் என்று சொல்லி யிருக்கிறார். எனவே அதுபற்றி அரசு ஆராய்ந்து அவரை மீண்டும் தலைமை ஆசிரியர் பொறுப்பில் கடமையாற்ற உத்திரவிடுமாவென்று அறிய விரும்பு கிறேன்.



1973 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவாவர்களே, 8—12—1967-ல் வெளியிடப்பட்ட ஆணைப்படி, மதிய உணவு செயற்குழு செயலர் பொறுப்பை தலைமை ஆசிரியர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. அதன்படி எல்லாப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதே போன்று இந்த ஆசிரியரும் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். போலீஸ் நடவடிக்கை என்பது தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அவர் மீது எடுத்துள்ள நடவடிக் கைகளைத் தொடர்ந்து, அவர் ஒரு வழக்கை முன்சிப் கோர்ட்டில் தொடர்ந்து, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, இப்போது மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது தனியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. எல்லாத் தலைமை ஆசிரியர்களும் மதிய உணவுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இவரும் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கூறப்படுகிறது.

## *Model High School*

*196 Q.—Thiru M. Rajah Iyer: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether the Government propose to run one model High School in each district; and

(b) if so, the details thereof?

### மாதிரி உயர்நிலைப் பள்ளி

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாவட்டம் ஒவ்வொன்றிலும் மாதிரி உயர்நிலைப் பள்ளி ஒன்றை நடத்த அரசு கருதியுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இது சம்பந்தமாக ஒரு திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

Thiru M. Rajah Iyer: May I know, Sir, whether any Model Schools have been started in our State? At present, I know from papers that a Model School has been started at Pudukottai. Does it come under this scheme, Sir?

[1973 மார்ச் 7

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொருத்த வரையில், மாநில அரசின் சார்பாக புதுக்கோட்டையில் ஒரு மாதிரி உயர்நிலைப் பள்ளி சென்ற ஆண்டு, 7—7—1972 அன்று துவங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியில் 6-வது, 8-வது வகுப்பு துவங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பள்ளியில் 6 முதல் 8-வது வகுப்பு வரை பி.ஏ., பி.டி., படித்த ஆசிரியர்களைக் கொண்டும், 9 முதல் 11-வது வகுப்பு வரை முதுநிலை பட்டப் படிப்பு படித்த ஆசிரியர்களைக் கொண்டும் பாட போதனை அளிக்க வேண்டுமென்றும், மாநிலம் முழுவதும் ஒரு தேர்வு நடத்தி, அந்தத் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பள்ளியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் அங்கே மாதிரிப் பள்ளியாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி இன்னொரு பள்ளி, சென்னையில் பெண்களுக்காகத் துவங்குகிற எண்ணம் இருக்கிறது. வரும் ஆண்டில் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, மாதிரிப் பள்ளிகளைத் துவக்கும் விஷயம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளதென்று கூறினார்கள். மத்திய அரசு, புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள மாதிரிப் பள்ளிக்கு ஏதாவது நிதி உதவி அளித்திருக்கிறதா அல்லது நாமே அந்தப் பள்ளியைத் துவக்கியிருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்படியொரு திட்டத்தை கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசின் கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் மாதிரிப் பள்ளிகளை வைக்க வேண்டுமென்றும், அந்தப் பள்ளிக்கு மத்திய அரசு நிதி உதவியைத் தருவதென்றும், நிர்வாகப் பொறுப்பை மாநில அடிப்படையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஒவ்வொரு கல்வி ஆண்டு அளவிலும் அதற்கு நிதிஉதவி கிட்டத்தட்ட 10 லட்ச ரூபாயாகுமென்று மத்திய அரசின் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் திட்டக் குழுவினிடத்திலும், மற்றவர்களிடத்திலும் கூறியிருக்கிறார்கள். திட்டக்குழு அந்தத் திட்டத்தை ஏற்கவில்லை. மத்திய கல்வித் துறை அதுபற்றி வற்புறுத்திக்கொண்டு வருகிறது. அத்திட்டம் வருமானால், மாவட்டத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளி அமையக் கூடும். அதற்கு முழு உதவியும் மத்திய அரசிலிருந்து வரக்கூடும். புதுக்கோட்டையிலுள்ள மாதிரிப் பள்ளிக்கு மத்திய அரசிலிருந்து உதவி எதும் வரவில்லை. நம்முடைய அரசுதான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, ஏற்கெனவே கிராமப்புறங்களில் அரசு நடத்திவரும் உயர்நிலைப் பள்ளிகளை இம்மாதிரியான மாதிரி உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றி, அங்கேயும் இந்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமாவென்று அறிய விரும்புகிறேன்.



1973 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாநில அளவில் ஒரு பள்ளியைத் திறந்திருக்கிறோம். இது ஆரம்பகாலக் கட்டமாக இருக்கும். இந்த மாதிரிப் பள்ளியில் ஏற்படும் அனுபவங்களைப் பார்த்த பிறகு, மற்றப் பள்ளிகளை எடுத்துக்கொண்டு 6 முதல் 8-வது வகுப்பு வரை பி. ஏ., பி.டி. படித்த ஆசிரியர்களைக் கொண்டும், 9-வது வகுப்பிலிருந்து முதுநிலைப் படிப்பு படித்த ஆசிரியர்களைக் கொண்டும் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றால், வேறு பல சலுகைகளைத்தர வேண்டும்; மற்றும் செலவும் அதிகமாகும். மற்றப் பள்ளிகளுக்கு எடுத்துக்காட்டாக அமைய வேண்டுமென்கிற அளவுக்கு இந்தப் பள்ளியை வைக்கலாமென்று வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. ABDUL WAHAB : May I know what are the salient features of Model Schools which are different from ordinary schools ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர்கள் ஆறாவது வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு முடியவும், பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்கள் ஒன்பதாவது வகுப்பு முதலும் பாடபோதனை செய்வார்கள். பள்ளிக் கல்வி இயக்குநரின் நேரடி நிர்வாகத்தில் இந்தப் பள்ளி இருக்கும். இப்பள்ளி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட மாதிரிப் பள்ளியாக இல்லாவிடினும், அந்தக் கல்லூரியில் படிப்பு சம்பந்தமான பல வசதிகளையும், அங்குள்ள ஆசிரிய வல்லுனர்களின் உதவியையும் அப்போதைக்கப்போது மாதிரிப் பள்ளி பெறுவதற்காகத்தான், புதுக்கோட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இருக்கிற காரணத்தால், அந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாநிலம் முழுவதற்கும் ஒரு போட்டித் தேர்வு நடத்தப்பட்டது. அந்தத் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள் இந்தப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மாணவர்கள் பள்ளியோடு இணைந்துள்ள பள்ளி விடுதியிலேயே தங்கிப் படிக்க வேண்டுமென்பதுதான் விதி. மாநிலம் முழுவதிலிருந்தும் 6-வது மற்றும் 9-வது வகுப்பிற்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் திறக்கக்கூடிய சென்ட்ரல் ஸ்கூல் என்பது "மாதிரிப் பள்ளி" போன்றதா என்று அறிய விரும்புகின்றேன். அப்படி இருக்குமானால், கோயம்புத்தூரைப் பொருத்த வரையில், தனியார் துறையைச் சேர்ந்த பல சென்ட்ரல் பள்ளிகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் கல்வித் துறையின் கீழ், அதன் கட்டுப்பாட்டிலே வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவரவர்களே, சென்ட்ரல் ஸ்கூல் இதற்குக் கீழே வராது. செவ்வனே அவைகளை நிர்வகிக்க முடியாது. அவர்கள் மாணவர்களிடத்தில் நேரடியாகக் கட்டணம் வசூல் செய்து நிர்வகிக்கின்றார்கள். அது ஒரு தனித் திட்டத்தின் கீழ் வருகின்றது. "மாதிரிப் பள்ளி" என்று அமைக்க ஒரு குழு அமைத்து, அப்பள்ளி மற்றப் பள்ளிகளுக்கு முன் மாதிரியாக அமைய வேண்டுமென்பதற்காக மாவட்டத்திற்கு ஒரு "மாதிரிப் பள்ளி" அமைப்பது அபிப்பிராயம். அது மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுப்போமேயானால், அதை நிர்வகிக்க தனிக் குழு அமைப்பது போன்ற மற்றவைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

***திரு. ஜி. சுவாமிநாதன் :*** தலைவரவர்களே, இந்தப் புதுக்கோட்டை மாதிரிப் பள்ளியில் எவ்வளவு மாணவர்கள் இருக்க வேண்டும்? இப்போது எவ்வளவு மாணவர்கள் இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவரவர்களே, குறைந்தது 30 மாணவர்கள் இருக்க வேண்டும். இந்த ஆண்டு முதல் ஆண்டாக இருக்கின்ற காரணத்தால், தேர்ந்தெடுக்கப்பட்டபோது 20 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறாவது வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

***திரு. அய்யணன் அம்பலம் :*** தலைவரவர்களே, இந்த "மாதிரிப் பள்ளியை" நகரத்தில் அமைக்காமல் கிராமப்பகுதியில் அமைக்க வேண்டும். நகரங்களில் அதிகமான அரசு, தனியார் உயர்நிலைக் கல்வி நிலையங்கள் இருப்பதால், இந்த "மாதிரிப் பள்ளி" ஏற்படுத்துவதில் கிராமப் பகுதிகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவரவர்களே, நாம் அமைத்திருக்கின்ற "மாதிரிப் பள்ளி" ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை ஒட்டி இருக்க வேண்டுமென்பதாலும், புதுக்கோட்டையில் இருக்கும் இட வசதி காரணமாகவும் அங்கே ஆரம்பித்திருக்கிறோம். மத்திய அரசாங்கத் திட்ட மூலம் ஆரம்பிக்கப்பட இருக்கும் "மாதிரிப் பள்ளி"களை கிராமச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கம் இருக்கிறது.

***திரு. கே. எஸ். கணபதி :*** தலைவரவர்களே, புதுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்ட "மாதிரிப் பள்ளி" காலம் கடந்து ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக, மாணவர்கள் மற்றப் பள்ளிகளிலிருந்து கவரப்பட்டு, சேர்க்கப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். இது இனிமேலாவது தவிர்க்கப்படுமா?





***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவரவர்களே, ஓரளவுக்குக் காலம் கடந்து 7—7—1972-ல் ஆரம்பித்ததன் காரணமாக, மீதியுள்ள இடங்களில் மாநில அளவில் மாணவர்கள் வந்து சேர்வது கொஞ்சம் கடினமாக இருந்தது. எல்லா இடங்களிலும் தேர்வு நடத்தினாலும், போதுமான மாணவர்கள் வந்து சேரவில்லை. ஆகவே புதுக்கோட்டையில், மறுபடியும் ஒரு தேர்வு நடத்தி, தகுதி வாய்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் இவ்வாண்டு மாநில முழுவதற்குமென்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

***திரு. கே. ராஜாராம் :*** தலைவரவர்களே, இந்த "மாதிரிப் பள்ளி"-க்கும் பிரத்தியேகமாக மாணவர்கள் இல்லங்கள் ஆரம்பிப்பதற்கான திட்டம் ஏதாகிலும் இருக்கின்றதா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவரவர்களே, இதிலே படிக்கின்ற மாணவர்களுக்குத்தான் இந்த இல்லங்களிலே இடம் கொடுக்கின்றோம்.

***மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :*** திரு. தீக்ஷிதர்.

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :*** நான் எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை.

***மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :*** உறுப்பினர், கையைத் தூக்கினார்களே.

***திரு. ஜி. சுவாமிநாதன் :*** தலைவரவர்களே, இந்த "மாதிரிப் பள்ளி"யில் மாநிலம் பூராவும் உள்ள மாணவர்கள் சேருவதற்கு சிரமப்படுகின்றார்கள். புதுக்கோட்டையிலே விட்டுவிட்டு சென்னையிலே ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா? ஏனென்றால் இந்த ஆண்டும் சிரமம் இருக்கும் என்பதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :*** தலைவரவர்களே, சென்னையில் பல பள்ளிகள் ஏற்கெனவே இருக்கின்றன. பெண்களுக்காக "மாதிரிப் பள்ளி" சென்னையில் துவங்க எண்ணம் இருக்கிறது.

### *Rajah Serfoji Government College, Thanjavur*

* 197 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that some of the students belonging to the Rajah Serfoji Government College, Thanjavur, undertook a fast on 31st August;

(*b*) if so, the nature of their demand; and

(*c*) the action taken by the Government in the matter?

[1973 மார்ச் 7

### ராஜா சரபோஜி அரசினர் கல்லூரி, தஞ்சாவூர்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், ராஜா சரபோஜி அரசினர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களில் சிலர், ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் நாள் உண்ணாவிரதம் இருந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்களது கோரிக்கையின் தன்மை யாது ?

(உ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) மாணவர்கள் அதிகப்படியான விடுதி வசதி கோரினர்.

(உ) முதல்வரின் இணங்கச் செய்தலின்பேரில் மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். 1—10—72 அன்று 109 மாணவர்கள் தங்கும்படியான கூடுதல் விடுதி ஒன்று திறக்கப்பட்டது.

THIRU K. S. ABDUL WAHAB : May I know, Sir, what the demands of the students were and what were the demands that were conceded?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாணவர்களுக்கு விடுதியில் இடம் போதுமான அளவுக்கு இல்லை. மாணவர்கள் அதிகப்படியான விடுதி வசதி வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். சில பேராசிரியர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில், 30—8—1972 அன்றே உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. 1—10—1972 முதல் புதியதொரு இல்லம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதிலே 109 மாணவர்களைச் சேர்க்கின்ற அளவுக்கு வசதி ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு ராஜா சரபோஜி கல்லூரியில் இருந்த அரிஜன மாணவர்களுக்கு இடம் கொடுத்தது போக, பாக்கி இடங்கள் இருந்தால்தான், மற்றவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக அரிஜன மாணவர்களுக்கு எல்லா இடங்களும் போக மற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இடம் கிடைக்காமல் போய்விட்டது. ஆகையால் இடங்களை அதிகரிக்க அரசு யோசிக்குமா ?



1973 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது பற்றிய விவரம் இல்லை. ராஜா சரபோஜி ஆஸ்டலில் 206 பேர்கள் இருக்கிறார்கள். இதைத் தவிர சோசியல் வெல்பேர் டிபார்ட்மெண்ட் ஆஸ்டல் ஒன்றும், டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபிஸர் நடத்தும் ஆஸ்டல் ஒன்றும் ஆக மூன்று ஆஸ்டல்கள் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால், விவரம் தெரிவிக்கப்படும்.

THIRU G. VASANTHA PAI : May I know, Sir, whether they have givenup their fast?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 31—8—72-ல் உண்ணா நோன்பு ஆரம்பித்தார்கள். அன்றே முடித்துக்கொண்டார்கள்.

THIRU A. R. DAMODARAN : The University Grants Commission has a scheme under which they give an advance of 85 per cent of the total cost of construction. May I know, Sir, why the Government have not taken advantage of this scheme to build hostels wherever the Government Colleges are in existence in view of the 85 per cent of the loan-cum-grant that is given by the University Grants Commission?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பல்கலைக் கழக நிதி ஆணைக் குழு (யு.ஜி.சி.) தருகின்ற நிதியை நாம் பயன்படுத்தி வருகிறோம். மூன்று, நான்கு கல்லூரிகள் சார்பில் நாம் உதவித் தொகையாகவும் கடன் தொகையாகவும் வேண்டுமென்று நாங்கள் விண்ணப்பித்திருக்கின்றோம். அதிலே நமக்குப் பாதி அளவு அல்லது 3 லட்சம் ரூபாய் என்ற அளவுக்குத் தருகிறார்கள்.

### *Rajah Serfoji Government College, Thanjavur*

*198 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any request has been received from the students of Rajah Serfoji Government College for the provision of more accommodation in the hostel attached to the College; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter ?

[1973 மார்ச் 7

### ராஜா சரபோஜி அரசினர் கல்லூரி, தஞ்சாவூர்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ராஜா சரபோஜி அரசினர் கல்லூரியோடு இணைந்துள்ள மாணவர் இல்லத்தில் அதிக இட வசதி செய்து தருமாறு அக்கல்லூரி மாணவர்கள் அரசுக்கு வேண்டுகோள் அனுப்பியுள்ளனரா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 1—10—72 அன்று 109 மாணவர்கள் தங்கும்படியான கூடுதல் விடுதி ஒன்று துவக்கப்பட்டது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, ராஜா சரபோஜி அரசினர் கல்லூரியோடு இணைந்துள்ள மாணவர்கள் இல்லம் எத்தனை மாணவர்கள் இருப்பதற்காகக் கட்டப்பட்டது ? இப்போது அதில் எத்தனை மாணவர்கள் இருக்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன். ராஜா சரபோஜி கல்லூரியில் எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் என்பதையும் அரசிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதில் 100 மாணவர்கள் இருக்கும்படியான அளவுக்குக் கட்டப்பட்டது. அதிலே இப்போது 206 மாணவர்கள் இருந்து வருகிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தக் கல்லூரியில் கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுகின்றார்கள். குறைந்தது 500, 600 பேருக்காவது விடுதி வசதி இருந்தாலொழிய, எந்த விதமான பயனும் இருக்காது. ஆகவே கூடுதல் விடுதி வசதி ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தக் கோரிக்கையையும் இங்கே கொடுத்திருக்கின்றார்கள். அது அரசின் பரிசிலனையில் இருந்துகொண்டு வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கல்லூரிகளுக்குப் புதிதாக விடுதிகள் கட்டினால், மாணவர்கள் தொல்லை அதிகமாகிறது என்ற காரணத்தால், மேலும் விடுதிகள் கட்ட வேண்டாமென்று அரசு கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1973 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எப்படியும் தொல்லைகளைத் தாங்கித்தான் தீரவேண்டும். ஆண்டுக்கு ஆண்டு கொடுக்கப் படுகின்ற நிதி வசதியைப் பொறுத்து, பல்வேறு அரசினர் கல்லூரிகளைக் கலந்து கொண்டு பணிகள் செய்யலாம். முதலில் மகளிர் கல்லூரிகளுக்கு, மதுரை மீனாட்சி மகளிர் கல்லூரிக்குக் கொஞ்சம் அதிக அக்கறை செலுத்தப்படுகிறது. அந்த வகையில் தஞ்சை சரபோஜி கல்லூரியினுடைய கோரிக்கையும் கவனிக்கப் படும்.

**திரு. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, ஒரு புதுக் கல்லூரி அமைக்கும்போது, அதற்கு விடுதியும் உடனடியாக அமைப்பதோடு மட்டுமல்லாமல், கல்லூரியில் எத்தனை மாணவர்கள் இருக்கின்றார்களோ அதற்குத் தக்கவாறு விடுதியும் விஸ்தரிக்கப்பட்டு கட்டாயம் விடுதியில் சேர வேண்டுமென்று அரசு ஆணை இருக்கின்றதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட ஆணை எதுவும் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தக் கல்லூரி விடுதிகளில் தங்கக்கூடிய பின்தங்கிய மாணவர்களுக்கு, ஷெட்யூல்டு காஸ்டு மாணவர்களுக்கு உபகாரத் தொகை கொடுக்கின்றார்கள். அந்த விடுதியில் இருந்தால்தான் அந்தத் தொகை கிடைக்கும். ஆகவே வீட்டிலிருந்து படிக்கலாம் என்கின்றவர்கள் கூட அங்கு வந்து தங்க வேண்டிய நிலையிலிருக்கின்றார்கள். இதை மாற்றி, வீட்டிலேயிருந்து படிப்பவர்களுக்கும் உபகாரத் தொகையில் 50 சதம் கொடுத்து, இந்த இட நெருக்கடியைக் குறைக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட காரணமும் சொல்லியிருக்கின்றார்கள். அதை அமைச்சரவை அளவிலே வைத்து ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கின்றோம். அப்படி முடிவு எடுத்தபின் சங்கடங்கள் தீரலாம் என்று கருதுகிறேன்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, புதுப் புது கல்லூரிகளை ஒட்டி மாணவர்கள் விடுதி கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊருக்கு வெளியில் வெகு தொலைவில் கல்லூரிகள் அமைந்திருக்கும் ஊர்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இராமநாதபுரத்தில் கல்லூரி கட்டப்பட்டிருக்கும் இடம் ஊரிலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. உணவு விடுதி நகரத்திற்குள்

இருக்கிறது. இதனால் மாணவர்களுக்குப் பெரிதும் சிரமமாக இருக்கின்றது. இம்மாதிரி கல்லூரிகளை ஊருக்கு வெளியில் கட்டாமல் ஊருக்குள்ளேயே கட்ட முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இனிமேல் புதிதாகக் கல்லூரிகள் ஆரம்பித்தால் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான், புதிய கல்லூரிகள் அமைக்க வேண்டுமானால், 40 ஏக்கரா நிலம் கட்டாயமாக இருந்து தீர வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். கல்லூரி ஏற்படுத்தப்படும் இடத்திலே உணவு விடுதியும், தங்கும் விடுதியும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவேற்றி வருகிறோம். அந்த வகையில் இராமநாதபுரம் கலைக் கல்லூரிக்கு அருகிலேயே இப்படிப்பட்ட விடுதிகளைக் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், இத்தகைய நிலைமைகள் மாற்றப்பட்டு விடும். இதைப் பற்றிக் கவனிக்கப்படும்.

## *Employees of Madras Institute of Technology*

* 199 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the employment of the Madras Institute of Technology, Chromepet, Madras, have represented to the Government regarding some of their grievances during September, 1972;

(b) if so, the nature of the grievances; and

(c) the action proposed to be taken by the Government in the matter ?

### சென்னை தொழில் நுட்பக் கல்லூரி பணியாளர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கல்லூரியில் பணிபுரியும் பணியாளர்கள், தங்களது குறைகள் சிலவற்றை 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசிடம் முறையிட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்களது குறைகள் யாவை ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தமிழக இரண்டாம் ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி திருத்திய ஊதிய விகிதங்களை தங்களுக்கும் அளிக்குமாறு கோரினர்.

(உ) நிலையத்தின் ஆளுனர் குழு அவர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்களை 2—10—70-லிருந்து அளிக்கலாம் என முடிவு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து அரசு ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரை 2—10—70-ல் வெளியிடப்பட்டது. 1972 வரையில் அவர்களுக்கு இந்த ஊதிய விகிதம் அளிக்கப்படவில்லை. இரண்டாண்டு தாமதம் செய்வதற்கு என்ன காரணம்? இப்படித் தாமதம் செய்த அதிகாரிகள் மீது வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்களுக்காக இருக்கிற "கவர்னிங் கவுன்சில்" இப்படி அவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, சம்பள விகிதம் கொடுக்கலாம் என்று முடிவு செய்து பரிந்துரை செய்தது. இந்திய அரசாங்கமும், தமிழ் நாடு அரசாங்கமும் 2 :1 என்ற விகிதத்தில், அவர்கள் இரண்டு பங்கும், நாம் ஒரு பங்கும் போடுகிற காரணத்தினால் அவர்களைக் கேட்டோம். இந்திய அரசாங்கத்தின் விகிதாசாரப்படி அவர்கள் சம்பளம் வாங்குகிறார்கள். இந்திய அரசாங்கம் புதிய சம்பள விகிதப்படி கொடுப்பதால் ஏற்படுகிற அதிகப்படிச் செலவை ஏற்றுக் கொள்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தைச் சொல்லப்பட்டது. அவர்கள் அதிகப்படியாக ஏற்படும் செலவில் மூன்றில் இரண்டு பங்கை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறார்களா என்று அறிந்துகொள்வதற்காக அவர்களுக்குக் கடிதம் எழுதினோம். இப்படிப் புதிய சம்பள விகிதங்களைக் கொடுப்பதால் ஏற்படுகிற அதிகச் செலவில் அவர்களுக்கு உரிய விகிதாசாரத்தை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்கள். அவர்களுடைய இசைவைப் பெற வேண்டியிருந்தது. அவர்களுடைய இசைவைப் பெற்று புதிய சம்பள விகிதங்களை அவர்களுக்குக் கொடுப்பதில் காலத் தாழ்வு ஏற்பட்டது. அவர்களுடைய இசைவு வந்ததற்குப் பிறகு 2—10—70-லிருந்து இவர்களுக்கு இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இதற்காக வேண்டிய நடவடிக்கைகளை முன்பே எடுத்திருந்தால், அவர்களுக்கு நகர ஈட்டுப்படி கிடைத்திருக்கு மென்று சொல்கிறார்கள். இப்படி இரண்டாண்டுகளுக்கு மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் கடிதப் போக்குவரத்திலே கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்த்திருக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாநில அரசு மத்திய அரசிற்குக் கடிதம் எழுதியது. அவர்களுக்குச் சில சந்தேகங்கள் ஏற்பட்டு விளக்கங்களைக் கேட்டார்கள். அவற்றிற்கு விளக்கங்கள் மாநில அரசு சார்பிலே அனுப்பப்பட்டன. இந்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டு அவர் முடிவெடுத்து நமக்குத் தெரியப்படுத்துவதிலே தாமதம் ஏற்பட்டது. அவர்களுடைய சம்மதம் கிடைத்ததும் இவர்களுக்கு அரியர்ஸுடன் புதிய சம்பள விகிதங்களை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

THIRU G. VASANTHA PAI: Are the Government aware of the fact, Sir, that there are some Writ Petitions pending before the High Court? Have they anything to do with the question that is now before the House?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றி இங்கே விவரங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்களுடைய ரிட்டிற்கும் இந்தப் புதிய சம்பள விகிதங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவர்களுக்கு இந்தச் சம்பள விகிதங்களை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

*Unstarred Questions*

*Defence Raffle Tickets*

23 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether raffle tickets worth about Rs. 3,000 have been lost by Officers, during 1972; and

(b) if so, the action taken thereon?

A.—

(a) Yes, Defence Raffle Tickets worth Rs. 3,775 have been lost by the Government Servants who had been entrusted with the sale of Defence Raffle Tickets to the public by District Collectors during 1972.

(b) The Government have ordered that a token recovery of 15 per cent of the cost of the Special Defence Fund Raffle Ticket be made from the concerned Government Servants who lost the raffle tickets.



*Vellore Finger Print Bureau*

24. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Finger Print Bureau has been opened at Vellore; and

(b) if so, the details thereof?

A.—

(a) Yes.

(b) A statement @ is placed on the Table of the House.

*Persons taken into Police custody*

25 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any persons were taken into custody by the police in June 1972 by mistake at Madras for Thiru Narayanaswamy Naidu of the Agriculturists Association; and

(b) if so, the details thereof?

A.—

(a) No person was taken into custody by the Police in June 1972 by mistake at Madras for Thiru Narayanaswami Naidu, Convener of the Tamil Nadu Agriculturists Association.

(b) Does not arise.

*Dangerous Drugs*

26 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Police have conducted any drive to locate the source of dangerous drugs for the preparation of sub-standard drinks in Madras City about June 1972; and

(b) if so, the details thereof?

A.—

(a) No.

(b) Does not arise.

MR. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு: ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை, உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

---

@ ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : I have received notice of an adjournment motion from the hon. member Thiru A. R. Damodaran. It will be taken up tomorrow.

## 2. அறிவிப்பு.

### உடுக்குறியிட்ட வினாக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினாக்களாக விடைகள்.

MR. CHAIRMAN : I have to announce to the House that answers to four Starred Questions which have been received from the Government are laid on the Table of the House to-day, as answers to Unstarred Questions Nos. 23 to 26.

## 3. கவன ஈர்ப்பு.

### (1) அகப்பைக்குளம் இந்து நாடார் தொழில் பள்ளியின் அங்கீகாரத்தை ரத்து செய்தது குறித்து.

THIRU M. RAJAH IYER : (On behalf of Thiru D. Santosham) With the permission of the Hon. Chairman, may I call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the withdrawal of recognition to the Hindu Nadar Primary School, Agappaikulam, Nazareth Range, Tirunelveli East Education District, without making alternative arrangements for the take over of the school which has resulted in several teachers being suddenly thrown out of employment and several students having to lose their education for one year?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அகப்பைக்குளம் இந்து நாடார் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பள்ளியின் நிர்வாகி தங்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத் தொகையைக் கொடுக்கவில்லை என்று புகார் செய்தனர். ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காதது பற்றிய குறை, பள்ளிகளின் துணை ஆய்வாளரால், அவர் பள்ளிக்கு 1968 ஆம் ஆண்டு சென்று பார்வையிட்டபோதும், 29—1—1969 அன்று பள்ளியின் ஆய்வு நடத்தப்பட்டபோதும், எடுத்துக்





கூறப்பட்டது. பள்ளி நிர்வாகி அத்தவறினைச் சரி செய்யாததால், தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர் பள்ளியின் ஏற்பையும் மானியத்தையும் ரத்து செய்து ஆணையிட்டார்.

பஞ்சாயத்துக் கூட்டு மன்ற நிர்வாகத்தின் கீழ் ஒரு பள்ளி திறக்க முயற்சி செய்யப்பட்டது. பின்னர் பஞ்சாயத்துக் கூட்டு மன்றம், புதிய பள்ளி திறக்க வேண்டியதில்லை என்றும், தனியார் பள்ளியே புதிய நிர்வாகத்தில் தொடர்ந்து நடக்கலாம் எனவும் தீர்மானம் செய்து விட்டது. இப்பள்ளி முன்பு ஒரு பதிவு செய்யப்படாத கமிட்டியால் நடத்தப்பட்டு வந்தது. இக்கமிட்டியால் நிர்வாகம் ஒழுங்காக நடத்தப்படவில்லை. தற்பொழுது ஒரு புதிய கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டு, பதிவும் செய்யப்பட்டுள்ளது. புதியதொரு தாளாளரும் நியமிக்கப்பட்டு விட்டார்.

பள்ளியின் புதிய நிர்வாகம் ஆசிரியர்களுக்குரிய சம்பள பாக்கியினைக் கொடுத்து விட்டதால், தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர் மேற்கூறிய பள்ளியின் ஏற்பையும், மானியத்தையும் திரும்ப அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, பழைய பள்ளியில் இருந்த ஆசிரியர்களெல்லாம் புதிய பள்ளியில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பள்ளியிலிருந்தவர்கள் அப்படியே இருந்து வருகிறார்கள். புதிய பள்ளி ஒன்றும் திறக்கப்படவில்லை. பழைய பள்ளியே இருந்து வருகிறது. பஞ்சாயத்து கூட்டு மன்றம் மறுபடியும் தீர்மானம் போட்டு பழைய நிர்வாகத்தை மாற்றி விட்டு, புதிய நிர்வாகத்தின் கீழ் அமைத்து பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய பழைய சம்பள பாக்கிகள் எல்லாம் கொடுத்து முடித்து விட்டது. இந்தப் பள்ளிக்கு அரசாங்கம் ஏற்பு வழங்கி, மானியமும் வழங்க ஒப்புக்கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (2) சிலிண்டர்கள் கிடைக்காததன் காரணமாக வீடுகளில் சமைப்பதற்கு உதவும் வாயு வழங்கப்படாததால் மக்கள் அவதியுறுவது குறித்து.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the difficulties experienced by

[Thiru G. Vasantha Pai] [1973 மார்ச் 7

the public in the matter of supply of cooking gas for domestic consumption on account of non-availability of cylinders and the consequent burning of excess cooking gas at Manali and the hardship caused to the consumers in the City of Madras and elsewhere as a consequence?

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the Indian Oil Corporation is the sole selling agent for all the products of the Madras Refineries Ltd. The Indian Oil Corporation supplies empty cylinders to the Madras Refineries. It supplied an equal number of cylinders in December 1972 and January 1973. The Madras Refineries Ltd., had planned a shut down from 27th January to February 1973. If the Indian Oil Corporation had supplied more number of cylinders to Madras Refineries the latter could have filled them and supplied them for sale. But the Indian Oil Corporation could not supply additional number of empty cylinders due to shut down of the Alwyn Plant at Hyderabad which manufactures Cylinders and supplies to Indian Oil Corporation and also due to dislocation of transport and communication in Andhra Pradesh.

THIRU G. VASANTHA PAI : On a matter of clarification. Could not the Refineries ask the consumers in Madras City to deliver all the empty cylinders to them in order to meet the situation because most of them are without gas for nearly 1½ months?

THE HON. THIRU S. MADHAVAN : I will pass on the suggestion of the hon. Member to the Madras Refineries.

## (3) அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வால் மக்கள் துயரம் குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"இரு வார காலத்திற்குள் இதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவிற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்திருப்பதால் ஏழை, நடுத்தர மக்களுக்கு ஏற்பட்டுள்ள துயரம் குறித்து".



1973 மார்ச் 7]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : விலைவாசி புள்ளி விவரத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் நெல் மற்றும் அரிசியின் விலைகள் பொதுவாக குறைந்திருப்பதைக் காணலாம். இது பிரதான அறுவடையை அடுத்து மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி உட்கொள்ளும் சில பகுதிகளில் விலை சிறிது உயர்ந்திருப்பதற்கு மின்சார வெட்டும், மற்றும் உள்ளூரில் நிலவும் தற்காலிகமான சில காரணங்களுமேயாகும். இந்த மின்சார வெட்டினால் ஏற்பட்ட பாதிப்பும், அரிசி ஆலைகள் தாங்கள் ஏற்கனவே உபயோகித்து வந்த மின்சார அளவில் எழுபத்தைந்து சத விகிதம் உபயோகப் படுத்தலாம் என்று அனுமதி அளித்ததன் மூலம் நிவர்த்திக்கப்பட்டது. பொதுவாக விலைகள் சென்ற ஆண்டில் இதே காலத்தில் இருந்ததை விட இவ்வாண்டு உயர்வாக இல்லை. பொதுவாக நாடெங்கும் பரவலாக நிலவிய வறட்சியின் காரணத்தால் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகள் எல்லா இடங்களிலும் குறைந்த அளவில் உற்பத்தியாகியதே எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளின் தீவிர விலையேற்றத்துக்குக் காரணம். நம் மாநிலமும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. தென்மேற்கு பருவ மழை தவறியதால் இம் மாநிலத்தில் நிலக்கடலை மற்றும் சிறு தானியங்களின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இக்குறையை ஈடு செய்யும் நோக்கத்தோடு அரசு பல முக்கிய திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. இத்திட்டங்களினால் 100,000 டன் நெல்லும், 57,000 டன் சிறு தானியங்களும், 46,000 டன் பருப்பு வகைகளும், 64,000 டன் நிலக்கடலையும் 1973 நவரைப் பருவத்தில் கூடுதல் உற்பத்ியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறு தானியங்கள் ஓரளவுக்குக் குறைவாகக் கிடைத்தபோதிலும் டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாய் நெற்பயிருக்கும் ஓரளவுக்கு சேதம் ஏற்பட்டபோதிலும் பொதுவாக தானியங்கள் கிடைப்பதில் திருப்திகரமான நிலைமை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுக்கவும் மற்றும் அறுவடை இல்லாத காலங்களில் நெல்லின் விலையை நிலைப் படுத்தவும் உபரிப் பகுதிகளில் இருபது (20%) சதவிகிதம் விதிமுறை கொள்முதல் செய்து முடையிருப்பு (பப்பர் ஸ்டாக்) வைத்துக் கொள்ளும் கொள்கையை அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

இம்மாநிலத்திலிருந்து நெல், அரிசி, மற்றும் சிறு தானியங்களை வெளியே எடுத்துச் செல்வதைக் கட்டுப்படுத்தியதால் உணவு தானியங்களைப் பொறுத்த வரையில் இந்த அரசு திருப்திகரமான நிலைமையை உருவாக்க முடிகிறது. ஏனெனில் பிரத்யேக அனுமதியில்லாமல் இத்தானியங்களை வெளியே கொண்டு செல்ல இயலாது. ஆனால் பருப்பு மற்றும் எண்ணெய் வகைகளை இவ்வாறு கட்டுப்படுத்த இயலவில்லை. ஏனென்றால், நம் மாநிலத்தின் பெரும்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 மார்ச் 7

பான்மையான தேவையை, நாம் வெளி மாநிலங்களிலிருந்து பெற வேண்டி யிருக்கிறது. மற்றும் நாடெங்கிலும் வறட்சியின் காரணமாக இவைகளின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலக்கடலையைப் பொறுத்த மட்டில் இம்மாநிலத்தில் போதுமான உற்பத்தி உள்ளது. ஆனால் கோடை மழை தவறியதால் இப்பயிரும் பாதிக்கப்பட்டது. மேலும் நாடெங்கிலும் நிலவிய பற்றுக்குறையின் காரணமாக இம்மாநிலத்தில் நிலக்கடலை கிடைப்பது பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக முன்பு எப்பொழுதும் இருந்திராத அளவில் விலையேற்றம் ஏற்பட்டது. மத்திய அரசுடன் கலந்தாலோசித்து நிலக்கடலை மற்றும் கடலை எண்ணெய் ஆகியவற்றை இம் மாநிலத்திற்கு வெளியே எடுத்துச் செல்வதைக் கட்டுப்படுத்த அரசு உத்தேசித் திருக்கிறது. ஆனால் அகில இந்திய அளவில் பொருட்களை கொள்முதல் செய்து விநியோகிக்கும் கொள்கையைக் கடைபிடிக்காமல் இவ்விதம் ஒவ்வொரு பொருளுக்கும் உற்பத்தியாகும் பகுதிகளில் தனித்தனியாகக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவது நல்லதல்ல. ஏனென்றால் ஒவ்வொரு மாநிலமும் தங்கள் மாநிலங்களில் உற்பத்தியாகும் பொருட்களின் மேல் கட்டுப் பாடு விதிக்க ஆரம்பித்தால் வேறு இடங்களில் அப்பொருள்களுக்கு பற்றுக் குறையை தோற்றுவிக்கும் என்று சிலர் விவாதிக்கலாம். பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் சென்னை மற்றும் இதர நகரப் பகுதிகளில் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் நேர் பார்வையின்கீழ் இயங்கி வரும் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் நியாய விலையில் ஓரளவு விநியோகம் செய்யப்படுகிறது. பருப்பு வகைகள் விற்பனையாகும் அளவை அரசு கண் காணித்துக் கொண்டிருக்கிறது. தேவைக்கு ஏற்றபடி கொள்முதல் ஒழுங்கு செய்யப்படும். இருந்தபோதிலும், இவ்வாண்டின் நிலவரத்தை நோக்கும் போதும் சென்ற 'காரீப்' பருவத்தில் பருப்பு உற்பத்தியாகும் முக்கிய பகுதி களில் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாலும், பெரிய அளவில் கொள்முதல் செய்து மிகப் பரந்த அளவில் விநியோகம் செய்வதற்கு இயலாது.

உணவுப் பழக்கத்தில் சிறிது மாறுதல் ஏற்பட்டால், மக்களின் பருப்புத் தேவைகளை கோதுமை, மற்றும் கோதுமைப் பொருட்களை உபயோகப்படுத்து வதின் மூலம் ஓரளவு ஈடு செய்யலாம். இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமை முந்திய அளவான 35,000 டன்களிலிருந்து 15,000 டன்களாகக் குறைக்கப்பட்டிருந்த போதிலும் நெல், அரிசி மற்றும் இதர தானியங்களுக்கு இம்மாநிலத்தைத் தனி மண்டலமாக ஆக்கியதைப் போல், கோதுமைக்கும் இம்மாநிலத்தை தனி மண்டலமாக ஆக்கினால் கோதுமையை வெளியில் கொண்டு செல்வதை தடை செய்வதன் மூலம் கோதுமையை இம்மாநில மக்களுக்கு போதுமான அளவு கிடைக்கும்படி செய்யலாம்.



1973 மார்ச் 7] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

நாடெங்கிலும் நிலவிவரும் கடுமையான பற்றுக்குறையைக் கருத்தில் கொண்டு குறைந்த அளவில் கிடைக்கும் பருப்பு மற்றும் எண்ணெய் வகை களையும் பயன்படுத்துவதில் ஒரு ஒழுங்கு முறையும், கட்டுப்பாடும் அவசிய மாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. உட்கொள்வோர் தேர்ந்தெடுக்கும் இப்பொருள்களைப் பொறுத்த மட்டில் கட்டுப்படுத்தப்பட்ட விநியோக முறையைக் கொண்டு வந்து செயல்படுத்துவதில் சில சிக்கல்கள் உள்ளன. இருப்பினும் இக்கொள்கையை நாடு முழுவதும் செயல்படுத்தும் திட்டமாகக் கருத வேண்டும். இல்லாவிட்டால் சில பகுதிகளில் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் சில பொருள்களின் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான குறைபாடுகளுக்கு ஏதுவாகும்.

MR. CHAIRMAN : Has the hon. Member Thiru G. Swaminathan anything to ask?

THIRU G. SWAMINATHAN : Nothing, Sir.

### (4) சட்டமன்ற விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை.

### பாண்டிச்சேரி பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள விகிதத் தகவலுக்குத் திருத்தம் குறித்து.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ரூல் 82 விதியின்படி ஒரு அறிவிப்பைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பட்ட தாரி ஆசிரியர்களின் சம்பள விகிதத்தைச் சொல்லுகின்றபோது பாண்டிச் சேரியில் பி.டி. ஆசிரியர்களுடைய சம்பளம் ரூ. 231 என்று குறிப்பிட்டிருந் தேன். ஆனால் பாண்டிச்சேரி மத்திய அரசாங்கத்தினுடைய நேரடி கண் காணிப்பிலிருந்து அந்தத் தொகை வழங்கப்படுகிறது என்று எனக்குத் தகவல் தரப்பட்ட பிறகு, பாண்டிச்சேரி அரசோடு நான் தொடர்பு கொண்ட வகையில், அவர்கள் அடிப்படைச் சம்பளம் 250-ம், அகவிலைப்படி 146-ம் மத்திய அரசாங்கத்தினுடைய விதிப்படி தரப்படுகிறதென்றும், இப்போது 'இன்டரிம் ரிலீப்' என்ற வகையிலே மூன்றாவது சம்பளக் கமிஷன் முன்னோடி யாகத் தரப்பட்ட தொகை 50 தரப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக் கிறது. அதை இந்த அவைக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

### 5. 1973–74-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் தொடர்ச்சி.

MR. CHAIRMAN : Now the general discussion on the Budget with resume.

[1973 மார்ச் 7

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மதிப்பிற்குரிய மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்த 1973–74-ம் வருஷ வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகின்றேன். இந்த மதிப்பீட்டிலே பொதுவாக மக்களுக்கு எந்த விதமான ஒரு சலுகையும் கிடைக்கவில்லை. மதிப்பீடு வெளிவருவதற்கு முன்னால் மக்கள் அதிலே எவ்வளவோ சலுகைகளை எதிர் பார்த்தார்கள். ஆனால் எந்த விதமான சலுகைகளும் அதிலே கிடைக்கப் பெறவில்லை. முக்கியமாக இங்கே உரையாற்றிய அன்பர்கள் எல்லோரும் இந்த பட்ஜெட்டிலே எந்தவிதமான வரியும் விதிக்கவில்லை யென்று சொன்னார்கள். ஆனால் இந்த மதிப்பீட்டின்படி, புதிய வரி விதிக்காமலே 24½ கோடி ரூபாய் உபரி வரவு வந்திருக்கிறது. ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அல்ல. புதிய வரி விதித்தால் கூட, இவ்வளவு அதிகமாகப் பணம் கிடைக்காது. 24½ கோடி ரூபாய் வருவதென்றால் அது எந்த விதமாக வந்தது என்று நாம் யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கள்ளுக் கடை ஏலம் போன வருஷத்தை விட இந்த வருஷம் போனதைத் தாங்கவே முடியாது. எப்படித்தான் ஏலம் எடுத்தார்களோ? கட்டுமோ கட்டாதோ. பணம் மழையாகப் பெய்கிறது. எப்படி என்று தெரியவில்லை. 1-க்கு மூன்று பங்கு. ஏலம் எடுத்தவர்களையெல்லாம் கசக்கி, கணக்கில்லாமல் ஏலத்தை உயர்த்தி, நல்ல வருமானம் வந்தது. விலைவாசி ஏற்றத்தினாலே விற்பனை வரி அதிகமாகியிருக்கிறது. அதில் இன்னும் வேடிக்கை என்ன என்று சொல்லப் போனால், அந்தக் காலத்தில் ஒரு காமதேனு என்று இருந்தது. இவர்களுக்கு நிறைய வழங்கியிருக்கிறது. விற்பனை வரி மாத்திரமே அவ்வளவு வழங்கியிருக்கிறது. இப்போது வீட்டுக்குச் சாமான் வாங்கப் போனால், ஒரு படி பருப்பு, 2 படி அரிசி, எண்ணெய், உப்பு, புளி வாங்கப் போகின்ற நேரத்தில், அளவு அதே மாதிரி இருக்கிறது. விலைவாசி மட்டும் 1-க்கு 4 பங்கு ஏறியிருக்கிறது. அளவைக் குறித்து வரியில்லை. வரி எப்படி இருக்கிறது? ரூபாயைப் பொறுத்திருக்கிறது. முன்னே 5 ரூபாய்க்குச் சாமான் வாங்கினால், இன்றைக்கு 25 ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக்கிறது. விற்பனை வரி ரூ. 5-லிருந்து ரூ. 25-க்குப் போகிறது. அது ஜனங்களுக்கு நான்கு பங்கு வரி போட்ட மாதிரித்தான். அத்தனையும் வரி போடுகிற மாதிரி ஆகிவிடுகிறது. ஆகையினால் இவ்வளவு உயர்ந்திருக்கிறதே, 24½ கோடி ரூபாய் வரி ஜாஸ்தி வருகிறதே, ஏதாவது வரிச் சலுகை நமக்குக் கிடைக்குமா என்று எதிர்பார்த்தேன். அந்த விற்பனை வரியில் ஏதாவது ஒரு சலுகை கிடைக்குமா என்று எதிர்பார்த்தேன். நான்கு பங்கு விலை ஏறிவிட்டது. ஒரு பங்கு, 2 பங்கு வைத்துக்கொண்டு, 2 பங்கு சலுகை கொடுக்கலாம். இது திடீர் விலையேற்றம் பாருங்கள். போன கூட்டத்தின்போது இருந்த விலையையும், இந்தக் கூட்டம் நடக்கும்போது





இருக்கும் விலையையும் பார்த்தால், ஒன்றுக்கு நான்கு பங்கு ஆகியிருக்கிறது. அதுவும் எண்ணெய், பருப்பு, மளிகை, இதுபோல அன்றாடம் உபயோகிக்கக்கூடிய சீமெண்ணெய், சர்க்கரை எல்லாவற்றின் விலையும் ஏறி விட்டது. ஆனால் சீமெண்ணெய், சர்க்கரை கண்ட்ரோல் விலைக்குப் போடுகிறார்களா என்றால், அது சரியான முறையில் இல்லை. அவை மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை. ஏதோ முனிசிபாலிட்டியில் கார்டுகள் கொடுக்கிறார்கள் என்றால், முனிசிபல் டவுனில் போய்ப் பார்த்தால், ஒரு 10 ஆயிரம் ஜனத்தொகை இருந்தால, கார்டுக்காகப் போகும்போது, அவை திடீரென்று 5 ஆயிரம் கூடுதலாய் விடுகின்றன. வரிக்குப் போகும்போது, குறைகின்றன. எப்படித் தான் இவை நடக்கின்றன என்று தெரியவில்லை. விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். பலவிதமாகக் கஷ்டப்படுகிறார்கள். சாகுபடி செய்து முன்னேற வேண்டுமென்றால், அந்த வார்த்தையை டிக்ஷனரியிலிருந்து எடுத்து விடலாம். அந்த அளவில் இருக்கிறது. காரணம் என்ன? நிலநீர்ப் பாசனத்தில் பல விதமான சங்கடம் இருக்கிறது. வெள்ளம் வந்துவிடுகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற தன்மை நீடிக்கிறது. கரெண்ட் இல்லாததினால் பம்ப்செட் பாதிப்பு வேறு ஜாஸ்தி. உரம் கிடைப்பதில்லை. சாமான்யமாக கண்ட்ரோல் விலைக்கு உரம் வாங்க வேண்டுமானால், கலைக்டர் பிள்ளையிலிருந்து அந்த யூனியன் ஆபீஸ் வரைக்கும் நாம் அலைந்து, நாம் வேலையை விட்டு 2, 3 நாள் அலைந்தால், அந்த உரம் கிடைக்கிறது. எவ்வளவு கிடைக்கும்? நமக்குப் பூராவும் கிடைக்கிறதா என்றால், ஓரளவுக்குத்தான் கிடைக்கிறது. நாம் பூராவையும் ஃபுல்ஃபில் பண்ண முடியவில்லை. வெளியில் வாங்க வேண்டுமானால், ஒரு மூட்டை யூரியா, ஒரு மூட்டை சல்பேட், ஒரு மூட்டை காம்ப்ளெக்ஸ் எத்தனை மூட்டை வேண்டுமானாலும் வாங்கலாம். எங்கேயிருந்து கிடைக்கிறது? எப்படிக் கிடைக்கிறது? எப்படிக் கிடைத்தது, ஆதாரம் இருந்தால் கொடுங்கள் என்று கேட்டால், அதுவும் கிடைக்காமல் போனால் என்ன ஆவது? இந்தவிதமான கஷ்டம். கடலைப் பிண்ணாக்குபற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஏற்கெனவே சென்ற வருடம் 70 கிலோ 40 ரூபாயிலிருந்து 45 ரூபாய் வரை மார்க்கெட்டில் விற்கப்பட்டது. இப்போது அதே பிண்ணாக்கு 130 ரூபாய்க்கு மேலே விற்கிறது. விவசாயிகளைக் கேட்டால், வயலில் பிண்ணாக்கு போடுவதையே மறந்து போய் விடுவார்கள் போலிருக்கிறது. அந்த அளவுக்குப் பயங்கரமாக இருக்கிறது. அமைச்சர்கள் கூடச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொண் 4-40
டிருந்தேன். அந்த விலை இன்றைக்கு விற்கிறது என்பதனால் விவசாயிகள் பி.ப.
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், தீர்வை ரூ. 8, கிஸ்தி வாட்டர் வரியையும் சேர்த்தால் ரூபாய் 50-க்கு வந்துவிடுகிறது. அந்தக் காலத்திலே காம்பௌண்ட் ரேட் ரூ. 17 இருந்தது. இன்றைக்கு ஒரு ஏக்கர் நிலம் வைத்திருந்தால், ரூ. 50-லிருந்து

ரூ. 60 வரை செலுத்த வேண்டியிருக்கிறது. அந்த ஒரு சதுரமானாவது விலை சரிகளுக்கும் கொடுத்திருக்கிறோமா என்று பார்த்தால், அந்தவிதமான சலுகை அவர்களுக்கும் கிடைக்கவில்லை. ஆகையினாலே இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் போடப்படவில்லை என்று பாராட்டிவிட முடியாது. விலைவாசியைப்பற்றித்தான் நாம் தினமும் சொல்லிக்கொண்டே வருகிறோம். மற்ற விலைகளையாவது பொறுத்துக்கொள்ளலாம். இந்தக் காய் கறியைக் கூடவா மற்ற மேல் நாடுகளிலிருந்து இறக்குமதி பண்ணுகிறோம்? காய்கறி விலை ஏறிவிட்டது பாருங்கள். [illegible] ரூ. 1½. ரூ. 2 என்கிறேன். நம் நாட்டுக்குள்ளே புழங்கக்கூடிய ஒரு வஸ்து. என்னைப்போல பச்சைக் காய்கறி சாப்பிடுகிறவர்களைப்பற்றிச் சொல்லவே முடியாது.

(மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் தலைமை)

புலவர் ஓ. அறிவுடைநம்பி: காயும் கறியும் சாப்பிடுகிறீர்களா?

**திரு. ஓய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** கறி என்கிற வார்த்தையின் அர்த்தத்தையும் அனர்த்தத்தையும் ஒன்றாகச் சேர்க்கக்கூடாது. விலைவாசி ஏற்றத்தினால் மக்கள் அவதிப்படுகிறார்களே, அந்த விலைவாசிக் குறைப்புக்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் மக்களுக்குப் போதுமா என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். விலைவாசிக் குறைப்புக்கு சீக்கிரமாக விலையைக் குறைக்க எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. ஆங்காங்கே கடைகளை வைத்து நடத்துகிறார்கள். அதுவும் கோயம்புத்தூர் போன்ற பல பெரிய மாநகராட்சிகளிலே தான் இந்தக் கடைகளை வைத்திருக்கிறார்கள். அதிகமான மக்கள் கிராமப்புறங்களிலேதான் வசிக்கிறார்கள். அங்கெல்லாம் வைக்கப்படவில்லை. ஒரு சின்ன சமாசாரம். இந்தக் கார்டு கொடுக்கிறார்களே, அதிலே எனக்கு ரூ. 200 வருமானம். என் பியூனுக்கு ரூ. 600 என்று போட்டிருக்கிறார்கள். எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நீங்கள் ஊராட்சி மன்றத் தலைவர், உங்களுடைய சபார்டினேட்தானே கணக்கையெல்லாம் எடுத்திருப்பார்?

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** வாஸ்தவம் தான். அவர்கள்தான் எடுத்திருப்பார்கள். அப்படியிருந்தபோதும் ஜனங்கள் என்ன பண்ண முடியும்? வேலையில்லாத் திண்டாட்டம் வேறே வளர்ந்துகொண்டே போகிறது. பண வசதி உள்ளவர்களுக்கே இந்தக் கஷ்டம் என்றால், மற்றவர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டாம். அன்று திரு. காட்டூர் கோபால் அவர்கள் படித்தவர்களில் வேலையில்லாதவர்கள் 4,97,964 என்று சொன்னார்கள். இது படித்து



எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலே போய் பதிந்து கொண்டவர்கள். பதியாத மக்கள் இன்னும் பாவலாக இருப்பார்கள். அதே போல படிக்காதவர்கள் இன்னும் ஏராளமாக இருப்பார்கள். 35 சதவிகிதம் படித்தவர்கள் இருந்தால் அது போல இன்னும் இரண்டு பங்கு படிக்காதவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய நிலைமை என்ன? சொத்துக்களை வைத்திருப்பவர்களாவது சாப்பிட்டு வாழ்க்கை நடத்த முடியவில்லையென்றால், வேலையில்லாதவர்கள் நிலைமை எப்படியிருக்கும்? வேலையில்லாமல் ஜனங்கள் இருக்கும்போது, மக்களுடைய உணர்ச்சி எப்படியிருக்கும்? நாட்டிலே உள்ள வறுமைதான் எல்லாவற்றிற்கும் காரணம். நாட்டிலே சண்டை சச்சரவு எல்லாவற்றிற்கும் வறுமை தான் காரணம். ஆகையினாலே முக்கியமாகச் சொல்லப் போனால், திருச்சி மாவட்டத்திலே செயற்கை வைரம் கல்ச்சரல் டைமண்ட் தொழிற்சாலை இருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 50,000லிருந்து லட்சம் பேர் வரை வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு கூலி சரியான முறையிலே கிடைப்பதில்லை. எப்போது பார்த்தாலும் அவர்களுக்குக் கஷ்டம் தான். அது குடிசைத் தொழில் மாதிரி நடக்கிறது. அவர்களுடைய கஷ்டம் சரியான மார்க்கெட் கிடைக்கவில்லை. அங்கேயுள்ள கூட்டுறவு மார்க்கெட் சரியாக வேலை செய்ய வில்லை. ரவை, கயிறு போன்ற பல சாமான்கள் சரியான விலையில் கிடைப்ப தில்லை. அப்படிக் கிடைத்து மார்க்கெட்டுக்குக் கொண்டு போனால், வரிசையாக ஷேட்டுகள் உட்கார்ந்திருக்கிறார்களே, பின்னாலே ஒரு தலையணை, முன்னாலே ஒரு தலையணை, காலுக்கு ஒரு தலையணை, கைக்கு ஒரு தலையணை, தலைக்குத்தான் வைத்துக்கொள்ள முடியவில்லை. அங்கே கொண்டு போனால் இது சரியில்லை, அது அப்படி, இது இப்படி என்று சொல்லுவான். இப்படி நூற்றுக்கணக்கான கல்களைத் தள்ளிவிட்ட பின்னால், மிச்சம் இருப்பவைகளை எவ்வளவு குறைத்து வாங்க வேண்டுமோ அப்படி வாங்குகிறார்கள். இது சாமானியமானதல்ல. நூற்றுக்கணக்கான தொழிலாளிகள், கிட்டத்தட்ட லட்சத்திற்கு மேலான தொழிலாளிகள் இருக்கின்றார்கள். கொஞ்ச நாளாக திருச்சூரிலிருந்து நம் நாட்டுக்கு வருகின்றன. அவர்கள் மூட்டையாகக் கொண்டு வருகிறார்கள். அதனாலே வேறே மார்க்கெட் குறைந்து போய் அன்றாடம் ரூ. 10 செலவுக்கு வேண்டியிருக்கிறதென்றால், இவர்களுக்கு இரண்டு ரூபாய் கூடக் கிட்டுவதில்லை. அதற்கு நாம் ஏதாவது ஒரு முடிவெடுத்து வகை செய்யவில்லையென்றால், அந்தத் தொழிலாளிகளுடைய துயரம் நாளுக்கு நாள் உயர்ந்துவிடும். அதே மாதிரியாக நம் மாநிலத்திலே உலகத் தமிழ் மாநாடு ஒன்று நடந்தது. அப்போது எல்லா மாவட்டங்களிலும் வசூல் பண்ணினார்கள். எங்கள் மாவட்டத்திலும் நிறைய வசூல் பண்ணிக் கொடுத்தோம். என்ன காரணம் என்றால், வைத்தியக் கல்லூரி ஒன்று வைக்கப் போகிறோம் என்றார்கள். நிறையக் கிடைத்தது.

ரூ. 60 வரை செலுத்த வேண்டியிருக்கிறது. அந்த ஒரு சலுகையாவது விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோமா என்று பார்த்தால், அந்தவிதமான சலுகை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகையினாலே இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் போடப்படவில்லை என்று பாராட்டிவிட முடியாது. விலைவாசியைப்பற்றித்தான் நாம் தினமும் சொல்லிக்கொண்டே வருகிறோம். மற்ற விலைகளையாவது பொறுத்துக்கொள்ளலாம். இந்தக் காய் கறியைக் கூடவா மற்ற மேல் நாடுகளிலிருந்து இறக்குமதி பண்ணுகிறோம்? காய்கறி விலை ஏறிவிட்டது பாருங்கள். எதையெடுத்தாலும் ரூ. 1½. ரூ. 2 என்கிறான். நம் நாட்டுக்குள்ளே புழங்கக்கூடிய ஒரு வஸ்து. எங்களைப்போல பச்சைக் காய்கறி சாப்பிடுகிறவர்களைப்பற்றிச் சொல்லவே முடியாது.

(மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் தலைமை)

புலவர் ஓ. அறிவுடைநம்பி : காயும் கறியும் சாப்பிடுகிறார்களா ?

திரு. ஓய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : கறி என்கிற வார்த்தையின் அர்த்தத்தையும் அனர்த்தத்தையும் ஒன்றாகச் சேர்க்கக்கூடாது. விலைவாசி ஏற்றத்தினால் மக்கள் அவதிப்படுகிறார்களே, அந்த விலைவாசிக் குறைப்புக்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் மக்களுக்குப் போதுமா என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். விலைவாசிக் குறைப்புக்கு சீக்கிரமாக விலையைக் குறைக்க எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. ஆங்காங்கே கடைகளை வைத்து நடத்துகிறார்கள். அதுவும் கோயம்புத்தூர் போன்ற பல பெரிய மாநகராட்சிகளிலே தான் இந்தக் கடைகளை வைத்திருக்கிறார்கள். அதிகமான மக்கள் கிராமப்புறங்களிலேதான் வசிக்கிறார்கள். அங்கெல்லாம் வைக்கப்படவில்லை. ஒரு சின்ன சமாசாரம். இந்தக் கார்டு கொடுக்கிறார்களே, அதிலே எனக்கு ரூ. 200 வருமானம். என் பியூனுக்கு ரூ. 600 என்று போட்டிருக்கிறார்கள். எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நீங்கள் ஊராட்சி மன்றத் தலைவர், உங்களுடைய சபார்டினேட்டானே கணக்கையெல்லாம் எடுத்திருப்பார்?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: வாஸ்தவம் தான். அவர்கள்தான் எடுத்திருப்பார்கள். அப்படியிருக்கிறபோது ஜனங்கள் என்ன பண்ண முடியும்? வேலையில்லாத் திண்டாட்டம் வேறே வளர்ந்துகொண்டே போகிறது. பண வசதி உள்ளவர்களுக்கே இந்தக் கஷ்டம் என்றால், மற்றவர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டாம். அன்று திரு. காட்டூர் கோபால் அவர்கள் படித்தவர்களில் வேலையில்லாதவர்கள் 4,97,964 என்று சொன்னார்கள். இது படித்து



எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலே போய் பதிந்து கொண்டவர்கள். பதியாத மக்கள் இன்னும் பரவலாக இருப்பார்கள். அதே போல படிக்காதவர்கள் இன்னும் ஏராளமாக இருப்பார்கள். 35 சதவீதம் படித்தவர்கள் இருந்தால் அது போல இன்னும் இரண்டு பங்கு படிக்காதவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய நிலைமை என்ன? சொத்துக்களை வைத்திருப்பவர்களாலேயே சாப்பிட்டு வாழ்க்கை நடத்த முடியவில்லையென்றால், வேலையில்லாதவர்கள் நிலைமை எப்படியிருக்கும்? வேலையில்லாமல் ஜனங்கள் இருக்கும்போது, மக்களுடைய உணர்ச்சி எப்படியிருக்கும்? நாட்டிலே உள்ள வறுமைதான் எல்லாவற்றிற்கும் காரணம். நாட்டிலே சண்டை சச்சரவு எல்லாவற்றிற்கும் வறுமை தான் காரணம். ஆகையினாலே முக்கியமாகச் சொல்லப் போனால், திருச்சி மாவட்டத்திலே செயற்கை வைரம் கல்ச்சால் டைமண்ட் தொழிற்சாலை இருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 50,000லிருந்து லட்சம் பேர் வரை வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு கூலி சரியான முறையிலே கிடைப்பதில்லை. எப்போது பார்த்தாலும் அவர்களுக்குக் கஷ்டம் தான். அது குடிசைத் தொழில் மாதிரி நடக்கிறது. அவர்களுடைய கஷ்டம் சரியான மார்க்கெட் கிடைக்கவில்லை. அங்கேயுள்ள கூட்டுறவு மார்க்கெட் சரியாக வேலை செய்ய வில்லை. ரவை, கயிறு போன்ற பல சாமான்கள் சரியான விலையில் கிடைப்ப தில்லை. அப்படிக் கிடைத்து மார்க்கெட்டுக்குக் கொண்டு போனால், வரிசையாக ஷெட்டுகள் உட்கார்ந்திருக்கிறார்களே, பின்னாலே ஒரு தலையணை, முன்னாலே ஒரு தலையணை, காலுக்கு ஒரு தலையணை, கைக்கு ஒரு தலையணை, தலைக்குத்தான் வைத்துக்கொள்ள முடியவில்லை. அங்கே கொண்டு போனால் இது சரியில்லை, அது அப்படி, இது இப்படி என்று சொல்லுவான். இப்படி நூற்றுக்கணக்கான கல்களைத் தள்ளிவிட்ட பின்னால், மிச்சம் இருப்பவைகளை எவ்வளவு குறைத்து வாங்க வேண்டுமோ அப்படி வாங்குகிறார்கள். இது சாமானியமானதல்ல. நூற்றுக்கணக்கான தொழிலாளிகள், கிட்டத்தட்ட லட்சத்திற்கு மேலான தொழிலாளிகள் இருக்கின்றார்கள். கொஞ்ச நாளாக திருச்சூரிலிருந்து நம் நாட்டுக்கு வருகின்றன. அவர்கள் மூட்டையாகக் கொண்டு வருகிறார்கள். அதனாலே வேறே மார்க்கெட் குறைந்து போய் அன்றாடம் ரூ. 10 செலவுக்கு வேண்டியிருக்கிறதென்றால், இவர்களுக்கு இரண்டு ரூபாய் கூடக் கிட்டுவதில்லை. அதற்கு நாம் ஏதாவது ஒரு முடிவெடுத்து வகை செய்யவில்லையென்றால், அந்தத் தொழிலாளிகளுடைய துயரம் நாளுக்கு நாள் உயர்ந்துவிடும். அதே மாதிரியாக நம் மாநிலத்திலே உலகத் தமிழ் மாநாடு ஒன்று நடந்தது. அப்போது எல்லா மாவட்டங்களிலும் வசூல் பண்ணினார்கள். எங்கள் மாவட்டத்திலும் நிறைய வசூல் பண்ணிக் கொடுத்தோம். என்ன காரணம் என்றால், வைத்தியக் கல்லூரி ஒன்று வைக்கப் போகிறோம் என்றார்கள். நிறையக் கிடைத்தது.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1973 மார்ச் 7

வசூல் பண்ணின தொகை ரூ. 35 லட்சத்திலிருந்து ரூ. 43 லட்சம் வரை என்று பலர் பலவிதமான கணக்கைச் சொன்னார்கள். எப்படிப் பார்த்தாலும் ரூ. 40 லட்சத்திற்கு மேல் வசூலாகிவிட்டது.

திரு. சி. வி. ராஜகோபால்: உங்கள் அறிக்கை எவ்வளவு?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: என் அறிக்கை ரூ. 40 லட்சத்திற்கு மேல் வசூலாகியிருக்கிறது என்பது. மருத்துவக் கல்லூரிக்கு வசூல் பண்ணினார்களே தவிர, அதைக் கட்டுவதற்கு வழிகூட பிறக்கவில்லை. அப்பொழுதே திரு. எம. எஸ். மணி, முன்னேற்றக் கழகத் தோழர் கூட என்ன ஆயிற்று என்று கேட்டார். பட்டை நாமம்தான். மருத்துவக் கல்லூரி பக்கத்திலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்தப் பக்கம் தஞ்சாவூரிலும் அந்தப் பக்கம் கோயம்புத்தூரிலும் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது அப்போது தெரியவில்லையா?

* மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு நிதி வசூலிக்கின்ற முயற்சிதான் அப்போது நடைபெற்றது. அதோடு இணைக்கப்பட்டு வேறு பல நற்காரியங்களுக்கும் நிதி சேர்க்க வேண்டுமென்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் சொல்லப்பட்டிருக்கலாம். ஆகவே அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையிலே என்ன தெரிவித்திருக்கிறார் என்பதை வைத்துத்தான் அதைப் பரிசீலிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு உலகத் தமிழ் மாநாட்டுக்குச் செலவு செய்ததே திருநாமம் போட்டாகிவிட்டது என்று சொல்லுவதாக இருந்தால், உள்ளபடியே சில பேருக்குத் திருநாமம் பிடிக்கவில்லையென்றால் திருநீர் போடலாமே தவிர, உலகத் தமிழ் மாநாட்டுக்குச் செலவழிக்கப்பட்டது, அந்தப் பொதுக் காரியத்திற்குச் செலவழிக்கப்பட்டது தவறாகச் *செலவழிக்கப்பட்டுவிட்டது என்ற கருத்து ஏற்பட இடமின்றி இன்னொரு காரியமாக செய்திருக்கலாம் என்று அங்கத்தினரவர்கள் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே அமைச்சர் அவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள். நான் சொல்லி முடிப்பதற்குள் அவர் எழுந்து சொல்ல ஆரம்பித்து விட்டார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநாமத்திற்குப் பதிலாகத் திருநீர் போடலாமென்று சொன்னார்கள். அப்படிச் சொல்வது வழக்கமல்ல. குல்லாய் போடுவது என்று சொல்வது வழக்கம்.



1973 மார்ச் 7]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் ரொம்ப அவசரப்பட்டுவிட்டார். உலகத் தமிழ் மகாநாட்டு வசூலோடு இதையும் சேர்த்து வசூல் செய்திருக்கிறார்கள். உலகத் தமிழ் மகாநாட்டு வசூலைப் பற்றியோ செலவைப் பற்றியோ நான் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. மருத்துவக் கல்லூரிக்கு என்று தனியாக டிக்கெட் அச்சடித்து வசூல் செய்திருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டுக்கு வசூல் செய்த பணத்தைப் பற்றி நான் எப்பொழுதுமே பேசவில்லை. முப்பது லட்சம், நாற்பது லட்சம் என்ற அளவுக்கு வசூல் செய்யப்பட்டது என்றும், அதில் ஏற்பட்ட நிலைமைக்குத்தான் வருத்தம் தெரிவிக்கிறேன் என்றும் சொன்னேன.

அடுத்தபடியாக, மின் சப்ளை. மின் சப்ளையைப் பொறுத்தவரைக்கும் போன இரண்டு மாதத்திற்கு முன்னால் போடப்பட்ட 'கட்'க்கு மேலேயே இப்பொழுது இரண்டு 'ஸ்டெப்ஸ்' அதிகமாகிவிட்டன. 40 சதவிகிதமாக இருந்தது எண்பது சதவிகிதமாக ஏறிவிட்டது. இதனால் தமிழ் நாட்டில் எல்லா மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண விவசாயிகளிலிருந்து, சிறு தொழில் பெருந்தொழில் வைத்திருப்போர், சாதாரண குடும்பஸ்தர்கள், நிலமிருப்போர், நிலமில்லாதவர்கள் எல்லோருமே பெரிதாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் காண்ட் கட்டுக்குக் காரணம் என்னவென்று கேட்டால், மத்திய அரசு, மத்திய அரசு என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். இந்த மாநில அரசு ஆட்சிக்கு வந்து ஐந்து வருஷமாயிற்றே. என்ன முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்? எத்தனை நீர் நிலையம், அனல் நிலையம், அணு நிலையம் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள்? அவைகளையெல்லாம் உங்களால் சரியான முறையில் பராமரிக்க முடிந்ததா? ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தும்போது, அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு முன்னால், என் தேவையான மூலப்பொருள்கள் வைத்துக்கொள்ளவில்லை என்று கேட்டால் அல்லது அப்படிப்பட்ட குறைகளை எடுத்துச் சொன்னால், ஏதோ மத்திய அரசுதான் காரணம் என்று சொல்லி தட்டிக் கழித்துக்கொண்டு போனால், ஜனங்கள் நம்பத் தயாராக இல்லை. அந்தக் காண்ட் வருவதற்கு என்ன ஏற்பாடு செய்தீர்கள் என்று கேட்டால், அதற்கான பதிலைக் காணோம். அடுத்தபடியாக. . .

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு குறைபாட்டைச் சொன்ன பிறகு அதற்கு யோசனையும் சொல்ல வேண்டும். குறைகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி நிறைவு செய்ய வேண்டுமென்று சொன்னால், மகிழ்ச்சிகரமாகவிருக்கும்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: இன்னும் அவருடைய பேச்சு முடியவில்லையே.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, யோசனை சொல்லத் தயாராயிருக்கிறேன். நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறீர்களா. ஏற்றுக்கொள்வதாயிருந்தால், சொல்லத் தயாராயிருக்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொண்டால் பிரயோஜனமில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொல்வது உண்மையாயிருந்தால், அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ள முடியும். உண்மையான புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு, அங்கத்தினர் அவர்கள் பேச வேண்டும். அவர் சொல்கின்ற முதல் குற்றச்சாட்டே சரியானதல்ல. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் சில கிராமங்களில் தெருத் திண்ணைகளில் உட்கார்ந்துகொண்டு பேசுவார்கள். என் நகரங்களிலும் அப்படித்தான் பேசுவதுண்டு. திண்ணையிலேயே பெஞ்சுகளைப் போட்டுக்கொண்டு பேசும் பழக்கத்தை நாம் பார்த்திருக்கிறோம். அந்த மாதிரி விஷயங்களைச் சொல்லாமல், சட்ட மன்ற உறுப்பினர் புள்ளி விவரங்களை வைத்து அரசாங்கம் என்னென்ன வழிகளில் தவறிவிட்டது என்று சொன்னால், அரசாங்கம் மாற்று ஆலோசனையை ஏற்றுக்கொள்ள இயலும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, எல்லா மாவட்டங்களிலும், கிராமங்களிலே தெருத் திண்ணையிலேதான் உட்கார்ந்துகொண்டு பேசுவது வழக்கம். மண்ணில் உட்கார்ந்துகொண்டு பேசமாட்டார்கள். திண்ணையிலே உட்கார்ந்து பேசுவார்கள் அல்லது பெஞ்சு போட்டுக்கொண்டு தெருவில் உட்கார்ந்துகொண்டு பேசுவார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பஞ்சப்படி பத்து ரூபாய் ஏற்றியிருக்கிறார்கள். அது யானைப் பசிக்குச் சோளப்பொரி போட்ட மாதிரி. அபாரப் பசி. அந்தப் பசிக்கு பத்து ரூபாய் எப்படிப் போதுமானது? ஏதோ கொடுத்தது நல்லது, அதற்கு மகிழ்ச்சி. அப்படிக் கொடுத்ததையும் கையில் கொடுக்காமல் ஒரு வருஷத்திற்கு பிராவிடண்ட் பண்டில் போடச் சொல்லியிருக்கிறது. ஏற்கெனவே விலைவாசி ஏறிவிட்டது. அரசாங்கம், இந்த விலைவாசி ஏற்றத்தை இந்தப் பஞ்சப்படி ஏற்றத்தால் சரிக் கட்டிவிட முடியாடா என்று பார்க்க வேண்டும். அதே அறிக்கையில் இந்த பத்து ரூபாய் உயர்வு நகராட்சிகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் ஊழியர்களுக்கும் பொருந்தும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கும் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் பற்றுச்



குறை நகராட்சிகளும், பற்றுக்குறை யூனியன் நிர்வாகங்களும் இருக்கின்றன. அவைகளுக்கு சர்க்கார்தான் நிதி உதவி செய்து தரவேண்டும். சர்க்கார்தான் நடத்த வேண்டியது. சர்க்கார் செய்ய வேண்டிய வேலையை இந்த நகராட்சிகளும் பஞ்சாயத்து யூனியன்களும் செய்துகொண்டு வருகின்றன. சர்க்காருக்குப் பதிலாக நாங்கள் நடத்துகிறோம். [illegible] ரூபாய் சர்ப்ளஸ் உள்ள நகராட்சிகள் இருக்கின்றன. [illegible] கவலையில்லை. ஆகவே அரசாங்கம் [illegible] செய்ய முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரோடுகளைப் பற்றியது. நான் அதைப்பற்றிக் கேள்வி பதில் நடக்கின்றபோது கேட்கவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் வர முடியவில்லை. பஸ் வரி, லாரி வரி எல்லாம் நீங்களே வாங்குகிறீர்கள். ஓட்டுகிறபோது எங்களுடைய ரோடுகளில் தான் அதிகமாக ஓடுகின்றன. ஆனால் கொஞ்சம்தான் மான்யம் தருகிறீர்கள், தரவேயில்லை என்று நான் சொல்லவில்லை. முழு அளவில் மான்யம் தந்தால், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய நகராட்சிகளுக்கு வசதியாக இருக்கும். இந்தப் பஞ்சப்படி உயர்வை நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பற்றுக்குறை இருக்கக் கூடியவற்றிற்கு காண்டிரிபூஷனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால், வரவேற்கத் தக்கதாயிருக்கும்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டையைப்பற்றி. அதைப் பிரித்துத் தனி மாவட்டமாக்க திட்டமிட்டிருப்பதைபற்றி ரொம்ப சந்தோஷம். அது ரொம்ப நாளானது. ஒரு மகன் மேஜராகிவிட்டால், சொத்தை அவனிடம் கொடுக்காமல் வைத்துக்கொள்ளக்கூடாது. பாகத்தைப் பிரித்துக் கொடுத்து விடவேண்டியதுதான். அந்த ராஜா நம்மை விட்டுப்போய் எவ்வளவோ நாளாகிவிட்டது. அவர் மேஜராகி நாலைந்து, ஐந்து வருஷத்திற்கு மேலாகிவிட்டது. நான் வருஷத்திற்கு மேல் தாமதம் பண்ணிவிட்டோம். இப்பொழுதாவது பண்ணியதற்கு ரொம்ப சந்தோஷம்.

ஆனால் அரசாங்கத்தில் ரெவின்யூ அதிகாரிகள் அளவு எடுத்துக் காண்டிருக்கிறார்கள். இங்கே சில பிர்க்கா சேரும், அங்கே சில பிர்க்கா விட்டுப் போகும். பின்னால் தொந்தரவு ஏற்படக்கூடாது. அந்தப் பகுதி மக்களைக் கேட்டு, அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு அறிந்துகொண்டு மெஜாரிட்டி அபிப்பிராயம் தெரிந்து செயல்பட்டால், பின்னால் உபத்திரவமில்லாமல் இருக்கும். அதுமாதிரி உபத்திரமில்லாமல் பிரிந்து போய் நம்முடைய மூதாதை

பிள்ளைகள் நல்லபடி இருக்க வேண்டும். தொந்தரவில்லாமல் நாங்கள் இருவரும் பிற்காலத்தில் இருக்கக்கூடிய வகையில் அரசாங்கம் பிரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலச் சட்டம் வரவேற்கத்தக்க நல்ல சட்டம். குடியானவனுக்கு நிலம் கொடுப்பதைப்பற்றி ஆட்சேபணையில்லை. 1969-ல் ஸ்தாவர சொத்துக்களை ரிஜிஸ்டர் பண்ணவேண்டுமானால், ரொம்பக் கஷ்டம். இப்பொழுது 'கைடன்ஸ்' என்று சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். அப்பொழுது ஸ்தாவர சொத்துக்கள் வாங்குவதும் விற்பதும் ரொம்பக் கஷ்டமாக இருந்தது.

**மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :** தலைவர் அவர்களைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** துணைத் தலைவர் அவர்களே, நான் புதியவன். இரண்டு மூன்று கூட்டங்களுக்குத்தான் வந்திருக்கிறேன். இன்னும் போகப்போகச் சரியாகிவிடும். அந்த 'கைடன்ஸ்' படி எவ்வளவு தொந்தரவு கொடுக்காமல் செய்ய வேண்டுமோ, அதன்படி செய்ய வேண்டும். சிறு நிலச்சுவான்தார்களுக்கு எந்த விதமான கஷ்டமும் இருக்கக்கூடாது. என்ன 'காம்பென்சேஷன்' கொடுக்கும் என்று இந்த அறிக்கையில் இல்லை. பின்னால் முடிவு செய்யப்படுமென்று கருதுகிறேன். இப்பொழுது எல்லா கட்சிகளும் சோஷலிசம் பேசுகிறார்கள். சுதந்திரா கட்சி கூட பேசுகிறது.

**மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :** அது சோஷலிசத்திற்கே கஷ்ட காலம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** பஸ் தேசியமயமாக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. டி.வி.எஸ்., ஏ.பி.டி., எல்.ஆர்.வி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அந்த நிர்வாகத்தைச் சரியானபடி நடத்திக்கொண்டு போவார்களா என்பதுதான் சந்தேகமாயிருக்கிறது. நம்மை முதலாளிகள் என்று சொல்லப்பட்டவர்களிடமிருந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைக் கெடுக்காமல் நடத்திக் காட்ட வேண்டும். ஒரு கர்ப்பிணி இந்த பஸ்ஸில் தானாகவே பிரசவமாகிவிடும் நிலையில் இந்த பஸ்கள் ஓடுகின்றன. சப்தமும், அவ்வளவு அட்டகாசம் கொடுக்கின்றன. அப்படிப்பட்டதைக் கேட்டே ரோட்டில் போகிறவன் தானாக ஒதுங்குகிறான். ஆகையினால் இவைகளைத் தேசியமயமாக்கியதைவிட அவற்றைச் சரியான முறையில் பராமரிப்பு செய்து நடத்துவதுதான் பெருமை.





இந்த நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்து, இது டப்பு காரமில்லாத ஒரு அறிக்கை என்பதுதான்.

(மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அது படித்துப் பார்ப்பதற்குத்தான். நிதிநிலை அறிக்கை படிப்பதற்காகத்தான் கொடுக்கப்பட்டது, ருசி பார்ப்பதற்குக் கொடுக்கப்படவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஏதோ வரவு-செலவுத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ வரவு வந்திருக்கிறது. அதில் செலவு எழுதுகிறோம். அப்படிப்பட்ட நிலை இருக்கிறதே ஒழிய மக்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இல்லையென்று கூறிக்கொண்டு, மாண்புமிகு தலைவரவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். வரவு-செலவுத் திட்டத்திற்காக நன்றியைக் கூறிக்கொள்ளவில்லை, மாண்புமிகு தலைவரவர்களுக்கு என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** சபை நாளை மாலை 4 மணிக்கு இருக்கிறது. நாளைதான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசியதற்குப் பிறகு, பதில் உரை அளிப்பார்கள்.

* **திரு. சி. ஆர். கோலப்பா :** தலைவரவர்களே, நமது முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே வைத்துள்ள 1973-74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழைகளுக்குத் தொண்டு செய்வதன் மூலம் 'ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் கண்டேன்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நமது கலைஞர் அவர்கள் இந்த அவையிலே 1973-74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வைத்த பிறகு, அதிலேயுள்ள பல நல்ல திட்டங்களைப் பார்த்த பிறகு, 'ஏழைகளின் சிரிப்பில் கலைஞரைக் காணலாம்' என்ற அளவுக்கு இந்த பட்ஜெட்டிலே நல்ல பல திட்டங்கள் இருப்பது கண்டு நான் மட்டுமல்ல, இந்தத் தமிழகத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நலிந்துள்ள மக்களெல்லாம் இதை வரவேற்றுப் பாராட்டி மகிழ்கிறார்களென்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதித் திட்டம், மற்றும் குடிசை மாற்று வாரியம் போன்ற திட்டங்களை

யெல்லாம் நல்ல முறையில் நமது கலைஞர் அவர்கள் விளக்கி, அந்த நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அறிவுரைகளைக் கொடுத்திருக்கின்றார்கள். உள்ளபடியே தமிழகத்தில் இப்போதுதான், நமது கலைஞர் ஆட்சிக்குப் பிறகுதான் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நலிந்த மக்களெல்லாம் நல்ல நிலையில் இருக்கிறார்கள். உள்ளபடியே இதற்காக அவர்கள் கொடுத்துள்ள பல திட்டங்களை, 'கலைஞர் டானிக்' என்று கூடக் கூறலாம். நாட்டு மக்களெல்லாம் நல்ல முறையில் இருக்கக்கூடிய நல்ல திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தையெல்லாம் மற்றவர்கள் பார்க்கும்போது, உள்ளபடியே அவர்களெல்லாம், ஏதோ கலைஞர் அவர்கள் செய்த பல நல்ல காரியங்கள் மக்களுக்கு நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்தி, அதனால் அவர்கள் இந்த அரசை எப்போதும் ஆதரித்துக்கொண்டு இருப்பார்களேயென்ற நிலையில், இந்த பட்ஜெட்டில் ஒன்றுமில்லையென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே நான் கூறுகிறேன். கடந்த மாதத்தில், அதாவது தமிழகத்தில் பெரும் புயலும், வெள்ளமும் ஏற்பட்டது. அந்த நேரத்தில் சேலம், கோவை மாவட்டத்தில் பவானி போன்ற இடங்கள், அதுமட்டுமல்ல, திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களில் பல லட்சக் கணக்கான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டார்கள். அதாவது விவசாயப் பெருங்குடி மக்களும், தொழிலாளர்களும், மற்றும் பிற்பட்ட மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் கலைஞர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல. ஆற்று ஓரங்களிலுள்ள, ஏறக்குறைய 5,000 சலவைத் தொழிலாளர்களுக்கு நமது கலைஞர் அவர்கள் உதவி செய்திருக்கிறார்களென்பதை இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே சலவைத் தொழிலாளர்கள் பிரச்சினை பல ஆண்டுகளாக இந்த அவையில் பேசப்பட்டு வருவதை இந்த அவையில் உள்ள பெரியவர்களெல்லாம் நன்றாக அறிவார்கள். அதாவது கிராமங்களில் சலவையாளர்கள், மருத்துவர்கள், முடி திருத்துவோர்கள் போன்றவர்கள் எந்த அளவுக்கு இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களென்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் கிராமங்களிலிருந்து துரத்தப்படுவதாகக் கூட சில செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நமது சர்க்கார் தவிர்த்து, நடவடிக்கை எடுத்து, நல்ல முறையில் அவர்களுக்குத் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், திரு. சட்டநாதன் அவர்கள் பிற்பட்ட மக்களுக்காக ஒரு அறிக்கையை சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை நல்ல முறையில் பரிசீலனை செய்து, அந்த அறிக்கையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்



கொள்கிறேன். இந்த அறிக்கையிலே முடி திருத்துவோர்களுக்கும், சலவையாளர்களுக்கும் நல்ல பல திட்டங்களை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம், அவர்கள் சமுதாயத்திலே நலிவுள்ள மக்களாக இருப்பதால், அவர்களுக்குக் கை கொடுத்து, அவர்களைத் தூக்கிவிட நல்லதொரு சந்தர்ப்பத்தை இந்த ஆட்சியால்தான் செய்ய முடியுமென்பதை இந்த சபையில் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திரு. ஸ்ரீகண்டன் என்ற அதிகாரியை நியமித்து, அவர் தமிழகம் எங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, ஒரு அறிக்கையைக் கூட அரசுக்குக் கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கையை இந்த அவையில் வைப்பது நல்லதென்று கருதுகிறேன். அந்த அதிகாரி நல்ல முறையில் அந்த அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அது இந்த அரசுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 17 இருக்கின்றன. ஆனால் 17 சங்கங்களில் ஒன்றுகூட செயல்பட முடியாமல், செயலற்ற நிலையில் இருக்கின்றன. அந்தச் சங்கங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, ஒரு சம்மேளனமாக்கி, அதாவது 'பெடரேஷன்' ஆக்கி சென்னையில் ஒரு தலைமைக்கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து, அதன் மூலம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல சேவைகள் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது போல கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சலவையாளர்கள் தாழ்த்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மற்ற மாவட்டங்களில் அவர்கள் பிற்பட்ட சமுதாயப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அங்கே உள்ளவர்களுக்கு சர்விஸ் கமிஷன் தேர்வு எழுதுவதற்கு பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தச் சலுகைகளையும் ஏனைய மாவட்டங்களிலுள்ள சலவையாளர்கள் பெறும் வண்ணம், நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய மாவட்டங்களிலுள்ள சலவையாளர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெறாத காரணத்தால், அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இங்குள்ள சலவையாளர்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது சர்க்கார் தொழிலாளர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்க சட்ட ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்கப் போவதாக இந்த பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. எனவே அதை நான் வரவேற்கிறேன். சில கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு 2, 3 பேர் உள்ள முடி திருத்துவோர், சலவையாளர்கள் எல்லாம் ஜாதி கெடுபிடிகள் காரணமாக பல தொல்லைகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான

நியாயமும் கிடைப்பதில்லை. காவல் துறைக்குச் சென்றால், அங்கே அவர்களுக்கு பாதகத்தை உண்டுபண்ணி விடுகிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களுக்கு நீதி மன்றத்திலும்கூட நியாயம் கிடைப்பதில்லை. அதற்காக இந்தத் தொழிற் சட்டத்தை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வந்து, இந்தத் தொழிலாளர் களையும் அந்தப் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். குறிப்பாக கிராமங்களில் பல ஆண்டுக் காலமாக, சலவையாளர்களுக்கு இனமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் மற்றவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு, சலவையாளர்கள் தங்கள் தொழிலைச் செய்ய முடியாமல், பல தொல்லைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். எனவே நமது ரெவின்யூ அமைச்சரவர்கள் அதைப் பரிசிலனை செய்து பார்க்கவேண்டும். தமிழகத்தில் பல இடங்களில் சலவையாளர் குளம், சலவையாளர் இடம் என்று அந்தக் காலத்தில், ராஜாக்கள் மற்றும் பெரிய நிலையில் உள்ளவர்கள் கொடுத் திருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையோடுகூட, அந்த நிலங்களையும் பரிசிலனை செய்து, அவர்களுக்கு அவற்றைக் கொடுத்தால் சலவைத் துறைப் பிரச்சினை தீர்ந்து விடுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையிலே சில இடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு இடம் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அது சலவையாளர் களுக்குத் தெரிவதில்லை. அதே நேரத்தில் விஷயம் தெரிந்தவர்கள் அதை அவர்களுக்குக் கூறாமல் அதை அவர்களே பயன்படுத்தி விவசாயம் செய்து கொண்டு வருகின்றார்கள். அதுபோன்ற இடங்களிலெல்லாம் சர்க்கார் மூலமாகக் கண்டுபிடித்து அந்த இடங்களை சலவையாளர்கள் சலவைத் தொழில் செய்வ தற்குக் கொடுத்துவிட்டால், எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. காரணம் என்னவென்றால் வயல்களிலே 5 மைல், 10 மைல் நடந்து சலவைத் தொழில் செய்ய வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. மற்றவர்களுடைய வயல் களில் செல்வதால், அவர்கள் ஆட்சேபிக்கின்றனர். நமது நாவலர் அவர்கள் மேற்கொண்டுள்ள உள்ளாட்சித் துறையில் பல ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் சிறிய அளவிலே ஒரு சலவைத் துறை கட்டிக் கொடுப்பதற்காக இந்த ஆண்டிலே நிதி நிலை அறிக்கையிலேயே சேர்க்க வேண்டுமென்று நான் அவர்களை மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர் சலவைத் தொழிலாளர் சமுதாயத்தின் மீது அன்பும் அக்கறையும் கொண்டவர். அதனால் அவர்கள் இந்த நிதி நிலை ஆண்டிலேயே 5 லட்சமாவது சேர்த்து சிறுசிறு சலவைத் துறைகள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நம்முடைய கலைஞர் அவர்கள் பிற்பட்ட மக்களுக்காகச் செய்து வரும் சேவையை நான் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மாண்புமிகு தலைவரவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்த 1973-74-ஆம் ஆண்டிற்கான நிதி





நிலை அறிக்கையை முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் வரவேற்று, பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த விவாதத்தில் பேசிய நமது அருமை உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் இந்த பட்ஜெட்டைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, உப்பு, காரம் இல்லாத பட்ஜெட் என்று குறிப் பிட்டார்கள். உப்பு, காரம் இல்லாத பட்ஜெட் என்ற வார்த்தைகளைச் சொன் னார்கள். நான் சொல்லுகின்றேன். உண்மைதான். உப்பு, காரம் இல்லாத பட்ஜெட்தான். அதை எதிர்க் கட்சி நோக்கத்துடன் பார்த்தால், அது உப்பு, காரம் இல்லாத பட்ஜெட். உப்பு, புது வரி என்ற உப்பு அதிலே இல்லை. பழைய வரியை உயர்த்துவது என்ற காரம் அதிலே இல்லை. அதனால் ருசி அவர் களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய பட்ஜெட்டாக இல்லை. அதே நேரத்தில் இந்த நாட்டில் வாழக்கூடிய கோடானுகோடி மக்களுக்கு ஒரு ருசி மிக்க பிரியாணி யாக பட்ஜெட் அமைந்திருக்கிறது. தீக்ஷிதருக்கு அதிலே ருசி எப்படி இருக்கும் என்று புரியாது. அதைச் சாப்பிட்டுப் பார்க்கட்டும். (சிரிப்பு).

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** திரு. அப்துல் வகாப், அவருக்கு நிச்சயமாகத் தெரியாது. அந்த ருசி அவருக்குத் தெரியாது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மட்டன் பிரியாணி என்று சொல்லுகின்றார்கள். சைவ பிரியாணி இருக்கிறதே, அதைச் சாப்பிட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** சிக்கன் பிரியாணி சாப்பிட்டுப் பார்த்தால், அதனுடைய ருசி அதைவிடச் சிறந்ததாக இருக்கும். இந்த வருடம் முறைப்படி எல்லோரும் பாராட்டியிருக்க வேண்டிய அளவுக்குச் சிறந்த பட்ஜெட்டை முதல்வர் அவர்கள் அளித்தார்கள். எதிர்க் கட்சியிலே யாருமே பாராட்டிப் பேசவில்லை. நமது அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூட, "பட்ஜெட்டிலே புதுவரி போடவில்லை. ஏனென்றால் எந்த வரியும் பாக்கி வைக்கப்படவில்லை. அதனாலே புதிய வரி போடவில்லை", என்று பேசினார்கள். உண்மையிலேயே எந்த வரியும் பாக்கி விடவில்லையா? புது வரி போட வேண்டுமென்றால், ஒவ்வொரு மாநிலத்தின் வரிகளைப்பற்றிப் பரிசிலனை செய்து பார்த்தால், எத்தனை வரிகள் இருக்கின்றன என்பது தெரியும். நம் மாநிலத்தில் இல்லாத புது வரிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒன்றிரண்டு இருக்கத்தான் செய்யும். அப்படிச் சேகரித்தால், 20 புது வரிகளாவது நாம் கண்டுபிடிக்கலாம். வேறு பல நாடுகளிலிருந்து 100 புது வரிகளையாவது கண்டுபிடித்துவிடலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** என்னென்ன புது வரிகள் போடலாம் என்று உறுப்பினர் அவர்கள் அபிப்பிராயம் சொல்லுகின்றார்கள்? ஏதாவது ஒன்றிரண்டு வரிகள்பற்றி அவர்கள் சொல்லலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** பல நேசங்களிலிருந்து சேகரித்தால், பல வரிகள் சொல்லலாம். ஆனாலும் வரியே இல்லையென்று சொன்னதை அவர் மனச்சாட்சியோடு சொன்னதாக நான் நம்பவில்லை. அவர் உருவென் நான் பேசிக்கொண்டனை எனலாம். அது தப்பு என்று மனச்சாட்சி உறுத்திக் கொண்டிருக்கிறது என்றுதான் நான் நினைக்கின்றேன். அவர் மனச்சாட்சியை மறைத்துச் சொன்னால், நல்லதைப் பாராட்டக்கூடிய உயர்ந்த பண்பு குறைந்தவர் என்றுதான் நான் சொல்வேன். நல்லவற்றைப் பாராட்டித்தான் ஆக வேண்டும். எதிர்க் கட்சி என்றால், எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது, நல்ல பண்பாடு அல்ல என்று சொல்லுகின்றேன். அதற்காக இந்த பட்ஜெட்டைக் குறை கூறிப் பேசுபவர்கள் இரண்டு அடிப்படைகளை மையமாக வைத்து அவர்கள் தாக்குதல்களைத் தொடுத்துப் பேசினார்கள். ஒன்று மின்சாரப் பற்றாக்குறை. மின்சாரப் பற்றாக்குறையை மையமாக வைத்து, பலர் பேசினார்கள். இரண்டாவது விலைவாசி உயர்வு. இந்த இரண்டையும் வைத்துத்தான் இந்த மாநில அரசை ஒவ்வொருவரும் பெருவாரியாகத் தாக்க முற்பட்டதை நான் பார்த்தேன். இந்த இரண்டிற்கும் மாநில அரசு பொறுப்பா என்றால், ஆம் என்று தான் சொல்ல வேண்டும். மாநில அரசு பொறுப்புத்தான் என்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். எந்த அளவுக்கு என்றால், இதற்கு மொத்தப் பொறுப்பு, நூற்றுக்கு நூறு என்று கணக்கிட்டால், மாநில அரசினுடைய பொறுப்பு 10 சதம் என்றால், மத்திய அரசினுடைய பொறுப்பு 20 சதம் என்று சொல்வேன். மீதிய 70 சதம் என்ன ஆயிற்று என்றால், அது இயற்கையினுடைய ஒத்துழைப்பு இல்லாமையால், மழை பெய்யாததால் ஏற்பட்ட கோளாறு. இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ‘மாநிலமும் மத்திய அரசும்’ என்று சொல்வது நியாயமற்ற பேச்சு என்றுதான் நான் சொல்வேன். அடுத்ததாக, விலைவாசி உயர்வைப் பொறுத்து, அன்றைக்கு அவர்கள் பெரிதுபடுத்திப் பேசினார்கள். அதிலும் மாநில அரசுக்குப் பொறுப்புண்டு. அதிலும் 10 சதம் தான். மாநில அரசினுடைய பொறுப்பு. மீதி 90 சதம் மத்திய அரசினுடைய பொறுப்புதான். ‘நாசிக்’கிலே உள்ள அரசாங்க அச்சகம் கடிவாளம் இல்லாத குதிரை போல் ஓடிக் கொண்டிருக்கின்றது. விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்றால், நாசிக் அச்சகத்திற்குக் கடிவாளம் போட வேண்டும். கண்டபடி நோட்டுகள் வினியோகிக்கப்படுவது குறைக்கப்பட வேண்டும். அங்குதான் மருந்திருக்கின்றது. சூட்சமும் இருக்கிறது. அந்த மருந்தை உபயோகித்துத்தான் விலைவாசிகளைக்



குறைக்க முடியும். இதை நமது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி, அதைக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்று அவர்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன். இந்த அரசின் சார்பிலே அடிக்கடி டெல்லிக்குப் போய் கோரிக்கை சமர்ப்பிப்பதைக் கிண்டல் செய்து பேசியிருப்பதை நான் பத்திரிகையிலே பார்த்தேன். நாங்கள் காவடி தூக்குகிறோம் என்றீர்களே, இப்போது நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்று ஒரு உறுப்பினர் பேசினார், கேட்டேன். அப்படிப் போவது தகாதது, குறை சொல்லக்கூடியது என்ற உணர்வுடன் அவர்கள் பேசுகிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். அங்கு போகக்கூடாதுதான். அடிக்கடி போவது விரும்பத்தகாததுதான். ஆனால் வேறு மார்க்கம் என்ன? அதற்கு அங்கு போகாமலிருப்பதற்கு வழிகள் என்ன? அந்த வழிதான் மாநில சுயாட்சி. மாநில சுயாட்சி என்ற கோரிக்கை நிறைவேற்றப்படுமேயானால், அடிக்கடி அங்கு போக வேண்டிய அவசியம் இருக்காது. எடுத்ததற்கெல்லாம் அவர்கள் உததரவு வேண்டும் என்ற உணர்வு எங்களுக்கு ஏற்படுவதன் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சி கோரிக்கையை முஸ்லீம் லீக் முழு மனதோடு ஆதரிக்கின்றது. அதற்கு நீங்களும் ஆதரவு கொடுத்து, அங்கு காவடி தூக்காத நிலையை உருவாக்க உதவ வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக் கொள்கின்றேன். இந்த மாநிலத்திலே, ஒரு புதுமையான நிலை உருவாகியிருக்கின்றது. ஒரு மூன்று மாத காலத்திற்குள் சட்ட சபையிலே வெளி நடப்பு நிகழ்ச்சிகள், எந்த தேசத்திலேயும், எந்த மாநில சட்ட சபையிலும், நடக்காத அளவுக்கு, ஒரு புது ‘ரெக்கார்ட்’ அளவுக்கு அதிகமாக நடந்திருக்கின்றன.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** சட்ட சபையைப் பற்றி இங்கே குறிப்பிடாமலிருப்பது நல்லது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** சரி, அத்தோடு நிறுத்திக் கொள்கின்றேன்.

அடுத்து, மின்சாரப் பற்றாக்குறையைப்பற்றிப் பேசிய உறுப்பினர்கள் முடிந்த அளவு அனல் மின்சாரத்தை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற பிரச்சினையைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த மட்டில், அனல் மின்சாரம் அவசரத் தேவைக்கு உதவியாக இருக்கக் கூடும். திருச்சி நகரத்திலே பாய்லர் பிளாண்ட், ஹெவி பாய்லர் பிளான்ட் என்று அனல் மின்சாரம் உற்பத்தி செய்யும் மிஷின்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை மத்திய அரசின் சார்பில் நடத்தப்படுகிறது. அங்கு வந்த ஒரு பெரிய இன்ஜினியரிடத்திலே நான் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் சொன்னார் அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வது out of date என்று. அகில உலக ரீதியில், வெளிநாடுகளில் அடாமிக் எனெர்ஜியை அவர்கள் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கே

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1973 மார்ச் 7

நம் தேசத்தில் தான் அனல் மின்சார மிஷின்களை உற்பத்தி செய்கிறார்கள். நாம் சுமார் ஒரு 50 ஆண்டுகள் பின்னுக்கு இருக்கிறோம், மற்றவர்கள் ஏரோபிளே னிலே போனால் நாம் இரட்டை மாட்டு வண்டியில் போவது போல அமைந் திருக்கிறது இது என்ற கருத்தினை அவர்கள் சொன்னார்கள். ஹைட்ரோ எலெக்டிரிக் பவரை ஓரளவுக்கு அதிகமாக விருத்தி செய்வதைத் தவிர்த்து, அனல் மின்சாரத்தில் அதிகச் செலவு செய்யாமல், அனல் மின்சாரத்தைக் குறைத்து, முடிந்த அளவுக்கு அதிகமாக அடாமிக் எனெர்ஜியை இந்த மாநிலத்தில் உற்பத்தி செய்ய நாம் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று பழைய காவியங்களிலிருந்த ஒரு நல்ல கருத்தை நடைமுறைச் சாத்தியமான கருத்தாக உருவாக்கிய பெருமை நமது அருமை மாண்புமிகு முதலமைச்சரைச் சாரும். இது இந்த தேசத்தில், இந்த மாநிலத்தில் அமுலில் இல்லாத ஒரு புதுத் திட்டம். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற நிலை அகில இந்தியாவிற்கும் வழி காட்டக்கூடிய ஒரு புதுமை யான திட்டம். நம்முடைய மாநிலத்திற்கு பல திட்டங்களை அகில இந்தியா விற்கும் வழி காட்டுவதாக அமைந்த திட்டங்களாக உருவாக்கிய பெருமை உண்டு. அந்தப் பெருமைகளிலே இதுவும் ஒரு புரட்சிகரமான நல்ல திட்டம். இப்படி ஒரு நல்ல வழி காட்டக் கூடிய திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையிலே அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு மெடிகல் காலேஜ் வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மெடிகல் காலேஜ் திருச்சி நகரத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதை நான் மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி மையமாக இருக்கிறது. (சிரிப்பு) முதலமைச்சர் அவர்களுக்கும், (சிரிப்பு) நமது சுகாதார அமைச்சர் அவர்களுக்கும்...

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்த மெடிகல் காலேஜ் சேலத் திலே அமையலாம் என்ற ஒரு கருத்து அவருக்கு இருக்கிறதோ என்று தோன் றுகிறது. அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: சேலத்தில்... (சிரிப்பு).

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தஞ்சாவூரில் உள்ள மாணவர்களுக்கும் திருச்சியிலே பயிற்சி முறை ஒன்றை ஏற்படுத்தி, அதன் தொடர்பாக மிகச் சிறந்த மருத்துவர்களுடைய பணி இவர்களுக்குக் கிடைக் கும்படி செய்யமுடியுமா என்பது இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.



1973 மார்ச் 7]

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: முன்பு ஒரு தடவை சுகாதார அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேதான், ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்திற்கும் ஒரு மருத்துவமனைக் கல்லூரியை வைக்கக்கூடிய ஒரு திட்டத்தை நாங்கள் உருவாக்கிக்கொண்டு இருக்கிறோமென்று அறிவித் தார்கள். அந்த முறையில் எல்லா ஜில்லாக்களுக்கும் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி அமைக்கிற நிலையில், அடுத்து அமைக்கப்பட இருக்கிற மருத்துவக் கல்லூரி திருச்சியில் அமைக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அடுத்து, நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவாகச் சொல்வது :

முஸ்லீம்கள் எல்லோரையும் பிற்பட்டவர்கள் என்று அறிவிக்க வேண்டும். திருப்பித் திருப்பி ஆயிரம் முறை சொல்லி வருகிறோம். என்ன தான் கூறினாலும் இன்னும் மனம் இளக மாட்டேன் என்கிறது. என்ன தான் கோபமோ எங்களிடத்திலே. எங்களிடத்தில் உண்மையாகவே ஏதாவது குறை இருந்தால், சொல்லுங்கள், திருத்திக்கொள்கிறோம். தயவு செய்து இதை நீங்கள் அங்கீ கரிக்க வேண்டும். எங்களுடைய இஸ்லாமிய சமுதாயத்திற்கு திருப்தி அளிக்கக்கூடிய வகையில் நல்ல அறிவிப்பைச் சொல்ல வேண்டுமென்று பணி வாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி சம்பந்தமாக ஜில்லா வாரியாக கமிட்டிகள் போடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டிகளில் ஆங்காங்கு எங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஊழியர்களையும் போட வேண்டுமென்ற கோரிக்கையை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது ஒரு விஷயம், சின்ன விஷயம். ஆனால் முக்கியம் என்று நான் நினைக்கிறேன். சென்னை நகரத்தில் ஓடக்கூடிய டாக்சிகள் ஒழுங்காக ஓட வில்லை. எக்மோர் ஸ்டேஷனில் இறங்கி ஹாஸ்டலுக்கு வருவதற்கு டாக்சி கேட்டால் டாக்சிக்காரன் வருவதில்லை. ஹாஸ்டல் என்றாலே ஒதுங்கி விடு கிறார்கள். 5 மைல், 10 மைல் தூரத்திற்கு வேண்டுமானால் அவர்கள் டாக்சி ஓட்டுகிறார்கள். ஹாஸ்டல் என்றால், இரண்டு ரூபாய் கேட்கிறார்கள். இதை அங்குள்ள போலீஸ்காரர்களிடத்திலே சொன்னாலும், அவர்கள் கேட்பதாக இல்லை. கொஞ்சம் பெரிய அதிகாரிகள் அங்கு தொடர்ந்து இருக்கும்படி ஏற்பாடு செய்தால், இதற்கு வழி பிறக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையினை நான் நிறைவு செய்கிறேன்.

[1973 மார்ச் 7

* புலவர் ஓ. அறிவுடை நம்பி: மாண்புமிகு தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று, என்னுடைய கருத்தினை இந்த மாமன்றத்திலே வைக்க ஆசைப்படுகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றியினையும் வணக்கத்தையும் எழுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"மாலைக்கு மலர் தேவை. மலருக்குத் தோட்ட வளம் தேவை.
அதுபோல் அரசுக்கு அழகு தர மனிதன் ஒழுங்காக வாழ
வேண்டும். மனிதன் ஒழுங்காக வாழ சமதர்ம வாழ்வு தேவை"

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த தத்துவத்தை அப்படியே ஏற்று இங்கே செயல் வடிவம் தரப்பட்டிருக்கிறது. தரித்திரருக்கு சுவிசேஷம் பிரசிங்கிக்கப்படுகிறது என்று சொல்வதைப போல, ஏழையர்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது.

சட்டப் பேரவையில் ஒரு உறுப்பினர் இந்த நிதி நிலை அறிக்கையைப் பலாப் பழத்தோடு ஒப்பிட்டுச் சொன்னார்கள். பலாச் சுளையை எடுப்பதற்குக் கொஞ்சம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். நான் முக்கனியில் ஒன்றான வாழைப் பழத்தோடு ஒப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். உரித்தாலே போதும் உள்ளே தள்ளி விடலாம். அவ்வளவு எளிமையும், இனிமையும், சிறப்பும் மிகுந்ததாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. குறிப்பாக "அறிவினிலே தெளிவு, நெஞ்சினிலே உறுதி, அகத்தினிலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின் மீது தனியரசாணை, பொருளெல்லாம் ஏழைக்கூட்டத்தின் நெறியிலே நாட்டம்" என்று என்னுடைய தலைவர் கலைஞர் அவர்களை வர்ணிக்கும் அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையை மிக மிகச் சிறப்புடையதாக வழங்கியிருக்கிறார்கள், முதல்வர் கலைஞர்.

இன்றைய உலகம் ஏழைகள் உலகமாக இல்லாது இருக்கலாம். ஆனால் நாளைய உலகம் அவர்களுடையது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. உலகத்தில் எதுவும் தானாக நிறைவேறி விடுகிறதா? இல்லவே இல்லை. கல்லிலிருந்து எந்தத் தெய்வச் சிலையும் தானே தோன்றி விடுவதில்லை. சிற்பி வடிக்கின்றான்.

அப்படியானால் இந்தத் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு புது வடிவை உருவாக்கிக் கொடுக்கக் கூடியவர்கள் யார்? ஏழைக்கோ வல்லமை இல்லை, பணக்காரருக்கோ விருப்பம் இல்லை, நடுத்தர வர்க்கத்தின் தலைவருக்குத்தான் பொறுப்பு. அந்தக் கூட்டத்தின் தலைவர்தான் இதனை உருவாக்கித் தர வேண்டும். அந்தத் தலைவர்தான் என்னுடைய தானைத் தலைவர், பெருமதிப்





பிற்குரிய கலைஞர் ஆவார்கள். நான் இங்கே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய கவிதையின் சில வரிகளை நினைவுபடுத்தலாம் என்று நினைக்கிறேன்.

"சோறும் துரைத்தனத்தாரும் பெரும்பொருள் கொண்டவர்க்கே நலம்
கூட்டுவார்—உழைப்போரிடமே கத்தி நீட்டுவார்"

ஏழைகளுடைய வாழ்வு உயர துரைத்தனத்தார் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியிருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் நடுவண் அரசின் மூலம் வந்திருக்கிற அறிக்கையைப் பார்க்கும்போது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வார்த்தைகள் எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றன என்பதை எண்ணித் தீர வேண்டும்.

'சங்கர்ஸ் வீக்லி' பத்திரிகையில் 4—3—1973 ஆம் தேதி இதழில் மத்திய அரசாங்கம் வழங்கியிருக்கும் நிதிநிலை அறிக்கையைப்பற்றிக் கருத்து ஒன்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

"It has no impulse other than to remain in power by promising relief for the poor and incentive for the rich".
என்று சொல்லப்படுகிறது.

வறுமையை ஒழிப்போம் என்று ஏழைக்கு வாக்களித்து, ஆனால் பணக்காரர்களை ஊக்குவித்துத் தன்னைப் பதவியில் மேலும் நீடிக்க வழி செய்வதன்றி வேறு நோக்கமற்றதாக மத்திய சர்க்காருடைய நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதை 'சங்கர்ஸ் வீக்லி' பத்திரிகை மிக அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

இதற்குப் பிறகும் மாண்புமிகு உறுப்பினர்களிலே பல பேர் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்ட முன் வந்திருக்கிறார்களா என்று கேட்டால், பாராட்ட மனம் வரவில்லை. பாராட்டுவதற்கு நாவின் ஈரம் மட்டும் இருந்தால் போதாது. மனத்தின் ஈரமும் வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையினுடைய கடைசிப் பகுதியில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆண்டாண்டு காலமாக ஆண்டுகொண்டிருக்கின்ற ஆதிக்கபுரியினரிடமிருந்து எதிர்ப்பும், நாம் யாரிடமிருந்து ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோமோ அவர்களிடமிருந்து வியக்கத் தக்க விதத்தில் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் கூட, நம்முடைய இலட்சியப் பயணம் தொடரும் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அப்படிச் சுட்டிக் காட்டுகிறபோது

[புலவர் ஓ. அறிவுடைநம்பி] [1973 மார்ச் 7

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்ற குறளை நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அந்தக் குறளுக்கு அடுத்த குறளை நான் ஞாபகப் படுத்தலாம் என்று கருதுகிறேன்.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்றார் வள்ளுவர். இதிலே கொடையைப் பொறுத்த வரையில், நன்றாகச் சொல்லிவிடலாம் பொருள். வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்குதல் கொடை. அளி என்பது அருள். செங்கோல் என்பது முறை செய்தல். குடியோம்பல் என்பது தளர்ந்த குடிகளைப் பேணுதல் என்ற பொருளை பரிமேலழகர் தருகிறார். தளர்ந்த குடிகளைப் பேணக் கூடியது இந்த நிதி நிலை அறிக்கையில் வெளிப்படையாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஏழையாய் உழவர் பெருங்குடி மக்களுக்கு குடியிருப்பு மனைகள் 1,57,000 பேருக்கு வழங்கப்பட்டன. அப்படி வழங்கப்பட்ட காலத்திலே ஒரு நாள், திருத்துறைப் பூண்டியிலே சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கும் பெரியவர் மணலி சொன்னார்கள் "பெரிய புரட்சியின் மூலம் செய்யக் கூடிய காரியத்தை கலைஞர் அவர்கள் ஒரு துளி மையினாலே சாதித்து விட்டார். அது மட்டுமல்ல. இன்றைய தினம் இரவு மனைப் பட்டா பெற்றுச் செல்லும் அத்தனை பேரும் உறங்குகின்றபோது தன்னுடைய சொந்த வீட்டிலே உறங்குகின்றோம் என்ற நினைவோடு உறங்குவார்கள்" என்று பெரியவர் மணலி பாராட்டினார்கள். ஆதி திராவிட பெருங்குடி மக்களில் ஒரு லட்சம் பேர் அந்த மனைகளைப் பெற்றார்கள். பிற்பட்ட குடியானவர்களில் 47 ஆயிரம் பேர் பெற்றார்கள். இந்த நிதி நிலை அறிக்கை மூலமாக என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்தத் திட்டம் மேலும் எல்லா மாவட்டங்களுக்கும் பரப்பப்படும் என்று. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமல்ல என்று தெரிவித்திருக்கிறார்கள். அடுத்த நிதி நிலை அறிக்கையில் அதை தர வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாட்டு வீட்டுக் கழகம் இருக்கிறதே, இதை நினைத்துப் பார்க்கிறபோது, 80 ஆயிரம் பேர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 10 ஆயிரம் பேருக்கு இந்த ஆண்டு வீட்டு வசதித் திட்டம் தருவதற்காக நல மேம்பாட்டு வீட்டுக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது பாராட்டத் தக்கது. ஆதித்திராவிட பெருங் குடிமக்கள் பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் வாழவழியின்றி வதைபட்ட கூட்டம். அவர்களை நோக்கி என்னுடைய தலைவர் கலைஞர் சொல்வது.



1973 மார்ச் 7] [புலவர் ஓ. அறிவுடைநம்பி]

"மனிதரில் நீயும் ஓர் மனிதன் மண்ணன்று
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்
தோளை உயர்த்து! சுடர் முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று
விழித்த விழியில் மேதினிக்கு ஒளி செய்
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை
இது உன் வீடு!"

என்று தெரிவிப்பது போல் இருக்கிறது இந்தத் திட்டம். அது மட்டுமல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தக் கவிதையின் அர்த்தத்தைச் சொன்னால் மற்றவர்கள் புரிந்துகொள்வதற்குச் சுலபமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்வேன்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: நண்பர் திரு. சுவாமிநாதன் மெத்த தமிழ் அறிந்தவர். தமிழ் வளர்கின்ற தஞ்சையில் இருக்கிறார். சாதாரண வார்த்தைக்குப் பொருள் தேடி அலைகிறாரே என்று வருத்தப்படுகிறேன். "மனிதனில் நீயும் ஓர் மனிதன்" பொருள் சொல்ல வேண்டுமா? சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். எனவே, அடுத்து, நான் இங்கே ஏழை விவசாயக் குத்தகைதாரருக்கு நிதி உதவிக் கழகம் மிகப் பெரிய திட்டம் என்பேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடிய இன்னொரு வரியினை நான் நினைவுபடுத்தலாம் என்று கருதுகிறேன்.

"உடலை கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க்குரிய தென்பதையே"

என்று பாரதிதாசன் பாடினார். அந்த விதத்தில் ஏழை விவசாயக் குத்தகைதாரருக்கு நிதி உதவிக் கழகம் அமைத்து அதன் மூலம் உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற திட்டத்தை வழங்கியிருப்பது—காலையிலே எழுந்திருந்து, தன்னுடைய அலுப்பையெல்லாம் நீக்கி விட்டு, அழகுவான வில்போல் வளைந்து இருக்கக் கூடிய ஏரினை எடுத்து தோளில் வைத்துக்கொண்டு, எருதுகளை முன் நடத்தி, இந்த நாடு எங்கும் பஞ்சம் தலைகாட்டக் கூடாது என்று நெஞ்சம் அயராமல் நிலத்தை உழுது வித்தினை விதைத்து விரியும் களையெடுத்து, கொத்தினை முற்றி தலைசாய்ந்த கோலத்தில் கதிரினை அறுத்து, அடித்து, தூற்றி, குவித்து, துறைதோறும் பொன்மலைகளாக்கி, அவைகளை சாக்குகளில் கட்டி எஜமானர் வீட்டிற்கு அனுப்பியது போக, ஈரத்துணியை வயிற்றில் போட்டுக்கொண்டிருந்த குத்தகைதாரருக்கு இன்றைய தினம் நிலம் கிடைக்கும் என்ற திட்டம் வழங்குவது இருக்கிறதே சாதாரணமான காரிய

[புலவர் ஒ. அறிவுடைநம்பி] [1973 மார்ச் 7

மல்ல. அதை நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்னொன்றையும் வேண்டுகோளாக விடக் கருதுகிறேன். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன். நான் இருக்கிற பகுதியிலே மூன்று பெரும் திருமடாலயங்கள் இருக்கின்றன. அந்த மடாலயங்களுக்கு ஏராளமான நில புலன்கள் இருக்கின்றன. கோவில்கள் ஏராளம். அந்தக் கோவில்களுக்கு ஏராளமான காங்கழனிகள் உள்ளன. நான் கேட்டுக் கொள்வேன், என்னுடைய தலைவரை. அடுத்த நிலையில் அந்தக் கோயில்களின் நிலங்களை, திருமடாலயங்களுடைய நிலங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் ஏழையருக்கு என்று. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வழங்குதல் வேண்டும். உள்ளபடியே இந்த நாட்டில் ஏழையருக்கு வாழ்வு தருகின்ற ஒரு அரசு இருக்கிறது என்று சொன்னால், அது இந்த அரசு தான். அது மட்டுமல்ல. இங்கே திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "நாங்கள் 1967 தேர்தலில் நிச்சயம் வெற்றி பெற்றிருப்போமானால், இந்த நிலவரியை நீக்கியிருப்போம். அப்படிப்பட்ட நீக்குகின்ற திட்டத்தை நாங்கள் வகுத்திருந்தோம். நீங்கள் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டீர்கள் என்கின்ற புளகாங்கிதத்தில் இருக்காதீர்கள்" என்று சொல்வதைப் போலச் சொன்னார்கள். எடுத்த நிலவரிக்கோ பாராட்டவில்லை. அதைப் பாராட்டுகின்ற மனம் வேண்டும். அது மட்டுமல்ல. இந்த அரசு நாற்பதிற்கு மேற்பட்ட நற் காரியங்களை ஆசிரியப் பெருமக்களுக்குச் செய்திருக்கிறது. பாராட்டுகின்ற மனம் வருகிறதா? நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சியை ஒட்டி என்னுடைய தலைவருக்குச் சொல்வேன். நல்ல மனம் படைத்திருக்கிற திரு. ராஜா அய்யார் போன்றவர்கள் நிச்சயமாகப் பாராட்டு தெரிவிக்கிறார்கள், நன்றி தெரிவிக்கிறார்கள். என்னுடைய அருமை நண்பர், கெழுதகைமை நண்பர் திரு. முத்து சாமி கூட சொன்னார்கள். முன்னைய அரசு எதுவும் செய்யவில்லை என்று அவர்களே பேசினார்கள். தொடர்ந்து இன்னொன்றையும் சொன்னார்கள். நான் நன்றி தெரிவித்துக்கொண்டு நேரத்தைக் கடத்த விரும்பவில்லை என்று சொன்னார்கள். நன்றி தெரிவிக்க வேண்டும் என்ற நிலை இல்லாவிட்டாலும் கூட, இந்த அரசு செய்திருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களே அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்வேன். நான் திருப்பூருக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு சிறப்பு ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. அந்த ஆசிரியர் கூட்டத்தில் இந்த அவையிலே அங்கம் வகிக்கக் கூடிய ஒரு நண்பரே குறிப்பிட்டுச் சொன்னார்கள். "அமைச்சர்கள் மிக நல்லவர்கள். அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதைத்தான் கேட்கிறார்கள். எனவே எங்கள் வாயிலாக எதையும் சொல்லுங்கள். ஆசிரியப் பெருமக்களே, நிச்சயம் காரியம் நிறைவேறும். அதனை அறிவுடைநம்பியினிடத்தில் சொல்ல



1973 மார்ச் 7] [புலவர் ஒ. அறிவுடைநம்பி]

வேண்டாம். ஆனால் நாங்கள் சொன்னால் நிச்சயம் நிறைவேறும். எனவே எங்களை நீங்கள் ஆதாரமாக்க வேண்டும்." எங்கள் கட்சிக்கு வரவேண்டும் என்று அவர்கள் பேசினார்கள். நான் பின்னாலே பேசினேன். அவர்கள் சொன்னார்கள் அமைச்சர்கள் மிக நல்லவர்கள் என்று. நான் அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதைத் தான் கேட்கிறார்கள் என்று அவர்கள் தெரிவித்தார்கள். அது தான் உண்மை நிலை. அதைத் நீங்கள் புரிந்துகொள்ளுதல் வேண்டும். இன்றைக்கு ஏன் அவர்கள் எதிர்க் கட்சியாக இருக்கிறார்கள் என்றால், முன்பு எதிர்க் கட்சி சொன்னதைக் கேட்காத காரணத்தாலே இன்றைய தினம் அவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறார்கள். நாங்கள் ஆளும் கட்சி வரிசைக்கு வந்திருக்கிறோம். அதுதான் ஜனநாயக மரபு. எதிர்க் கட்சி சொல்வதைக் கேட்கத் தான் வேண்டும். நாங்கள் கேட்கிறோம். ஆனால் அறிவுடைநம்பி சட்டியில் தான் அது வேக வேண்டும் என்பதல்ல. எமது சட்டியிலேயும் கொழுக்கட்டை வெந்தால் போதும். ஆனால் மற்றொன்றை மறந்து விடாதீர்கள். நீங்கள் அந்தக் கட்சிக்கு வர வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அங்கே போனால் ஆட்சி குலையும், ஆட்சி குலைந்தால் உங்களுக்குக் காரியம் நிறைவேறாது என்று சொன்னேன். இன்றைய தினம் நான் பார்க்கிறேன். பாராட்டுகின்ற மனம் படைத்தவர்கள் இல்லை யாரும்! நாம் நல்ல காரியம் செய்தாலும் கூட, புகழ்ந்து பேசுவார் இல்லை. டாக்டர் காண்டேகரின் கருத்து ஒன்றை நினைவுபடுத்தலாம் என்று கருதுகிறேன்.

> "உலகம் ஒரு கடைத்தெரு. இந்தக் கடைத் தெருவில் மோசக்காரர்கள் விற்கக்கூடிய இலந்தைப் பழம் திராட்சை விலைக்குப் போகும். நாணயமானவர்களின் திராட்சை களாப்பழத்தின் விலைக்குக் கூடப் போவதில்லை"

என்று காண்டேகர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் பல பேர் பாராட்டுகின்ற மனமில்லாமல் இருக்கிறார்கள். ஆசிரியர்களைப் பற்றி நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைய தினம் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். நான் வேதனைப் படுகின்றேன். அந்த ஆசிரியப் பெருமக்களிலே சில பேர் சிறைக் கோட்டத்திற்குள் போயிருப்பதை எண்ண எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்களிலே சில பேர் தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து வந்திருக்கலாம். வடாற்காடு மாவட்டத்திலிருந்து வந்திருக்கலாம். அவர்களிலே பல பேர் எனக்கு வாக்களித்திருப்பார்கள். அவர்கள் போட்ட பிச்சையாலே நான் இந்த மன்றத்திற்கு வந்திருக்கின்றேன். ஆனால் இன்றைய தினம் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற போராட்ட முறை சிறந்ததா என்று அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் எடுத்துச்

சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்
னார்கள்: "எதிர்கால சமுதாயத்தை உருவாக்குகின்ற சிற்பிகள் யார்?
ஆசிரியரா? அல்லது அரசியல் வாதியா? என்று கேட்டால் நான் நிச்சய
மாகச் சொல்லுவேன், அறுதியிட்டுச் சொல்வேன். ஆசிரியர் என்று" எதிர்
கால சமுதாயத்தை உருவாக்கக் கூடிய சிற்பிகளாக ஆசிரியப் பெருமக்கள்
இருக்கிறார்களா என்று கேட்டால், வருத்தமாக இருக்கிறது. அறிஞர்
அண்ணா இருந்தால், நிச்சயமாக ஆசிரியப் பெருமக்களுக்கு மேலும் மேலும்
பல நன்மைகள் செய்திருப்பார் என்பது போல, நேற்றைய தினம் நண்பர்
திரு. முத்துசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அண்ணா கூறிய ஒரு
கருத்தைப் படித்துக் காட்டலாம் என்று கருதுகிறேன், உங்களுடைய மேலான
ஆணைப்படி! ஆசிரியர்களுடைய ஊதியத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்
பி.ப. 5-40 துவதின் மூலம் தான் திறமையானவர்களை...

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, நான் நேற்று
அறிஞர் அண்ணா அவர்கள் செய்ததைச் சொன்னேன். இன்றைக்கு உறுப்பின
ரவர்கள் அண்ணா இருந்திருந்தால், பலவற்றைச் செய்திருப்பார்களென்று
பொருள்படச் சொன்னதாகச் சொன்னார்கள். அவர் வலிய பொருள் கொண்டு
கூறுவது சரியாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: நன்றி. எனவே ஆசிரியர்களைப் பொறுத்த
வரையிலேயும், ஆசிரிய சமுதாயத்திற்கு எவ்வளவு செய்ய வேண்டும் என்கிற
ஒரு நிலையை எடுத்துச் சொல்லுகிறபோது, அண்ணா அவர்கள், "ஆசிரியர்
களுடைய ஊதியத்தைக் கணிசமாக உயர்த்துவதன் மூலம் திறமையானவர்களை
இந்தத் தொழிலுக்கு வரச் செய்வதற்கும் அவர்களுக்கு ஊக்கம் தந்து துணை
புரிவதற்கும், அதனால் அறிவுத் துறையில நாடு மேம்பாடு அடைவதற்கும்
நாடு வழி வகுக்கும் என்பதை நான் அறிவேன். ஆசிரியர்களின் சிக்கலுக்கு
முதலிடம் அளித்து, அதே நேரத்தில் தமிழக அரசு அவர்களுடைய நிலைமை
யையும் இருக்கின்ற நிதி நிலைமையையும் கண்டு ஆசிரிய சமுதாயத்திற்கும்
கல்வித் துறைக்கும் எந்தெந்த வகையில் என்னென்ன நன்மைகள் செய்ய
முடியுமோ அவற்றையெல்லாம் செய்ய தமிழக அரசு தகுந்த நடவடிக்கைகளை
மேற்கொள்ளப் போகிறது" என்று தான் சொன்னார்கள். நிதி நிலையையும்
பொருத்து என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் ஆசிரியப் பெரு
மக்களுக்கு எவ்வளவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். புத்தகப்படிப்பினால் யாரும்
மனிதனாக ஆகிவிட முடியாது. அன்பினாலேதான் ஆக முடியும். "பூனை தன்
குட்டிகளுக்கு எலிகளைக் கொல்லக் கூடக் கற்றுக் கொடுப்பதில்லை. நம் வயிறு
நிரப்பும் கல்வி இருக்கிறதே, இது போன்றதுதான். விலங்குகளும் பறவை
களும் கூட தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்கின்றன. "வயிறு நிரம்பிப்





போய் உள்ளம் காலியாக இருந்தால் என்ன பயன்?" என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். சிலருக்கு வயிறு நிரம்பி உள்ளம் காலியாக இருக்கிறது. அதற்காக நான் வேதனைப் படுகிறேன். நான் மீண்டும் ஆசிரிய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்வேன். இன்னும் கூட அதிக இன்பத்தோடு வாழ வேண்டுமென்று நினைக்கிறார்கள். இந்த ஆசிரிய குடும்பத்தைப் போலவே வெளியிலும் உலகம் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த உலகம் நம்மைவிட விசாலமானது. சமூக விருக்ஷத்திலுள்ள கோடிக்கணக்கான கூடுகளிலே ஆசிரிய சமுதாயம் ஒரு கூடு என்பதை மறப்பது நன்றன்று! பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும், குறிப்பாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் 10 ஆண்டுகள் பணியாற்றினால், இப்போது தரப்பட்டிருக்கும் தேர்வு நிலை இருக்கிறதே அந்தத் தேர்வுநிலை அவர்களுக்கு ரூ. 460 கிட்டிவிடுகிறது என்று கணக்குச் சொல்லுகிறார்கள். உண்மைதான். ரூ. 460 கிட்டுகிறது. 300–15–420–500. 15 என்கிற அளவுக்கு அவர்களுக்கு அது கிடைக்கிற காரணத்தால் 8 ஆண்டுகளிலே ரூ. 120 ம் சேர்ந்து அவர்களுக்கு ரூ. 420 கிடைக்கிறது. இன்னும் இரண்டு ஆண்டுகள் அவர்கள் பணியாற்றுவார்களேயானால் 20, 20 ரூபாயாக 460 கிட்டி விடுகிறது. மேலும் இரு ஆண்டுகளில் ரூ. 40 கிடைக்க ரூ. 500 கிடைக்கிறது. பத்து ஆண்டுகளிலேயே இந்த ரூ. 460 கிடைத்துவிடுகிறது. நீங்கள் தரப்படுகின்ற இந்த தேர்வுநிலையினால் என்ன பயன் என்று கேட்கிறார்கள்? பட்டதாரி ஆசிரியர்களுக்கு நான் சொல்லுவேன். நாம் இனி சம்பள உயர்வே கோரப்போவதில்லையா? இந்த நாட்டில் இனி மூன்றாவது சம்பளக் கமிஷனே அமைக்கப் போவதில்லையா? 3 வருஷம் கழித்து அல்லது 4 வருஷம் கழித்து. 5 வருஷம் கழித்து நாம் இதே சம்பளத்தில் இருந்துவிடப் போகிறோமென்று அவர்கள் சொல்லப் போகிறார்களா? அப்படியானால் சொல்லட்டும்: இனி சம்பள உயர்வே கேட்கப் போவதில்லை. எங்களுடைய சம்பளக் கூறு ரூ. 25 ஏற்றினால் போதுமென்று தெரிவிக்கட்டும். நான் என்னுடைய தலைவருடைய கால் திருவடிகளைத் தொட்டுக் கேட்டு இந்த ரூ. 25-ஐ நாளையதினமே அவர்களுக்கு வாங்கித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் 10 வருஷ காலம் வரை நீங்கள் இப்படியே இருந்துவிடுவீர்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வொன்றை நான் இங்கே எடுத்துச்சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். தாங்கள் ஆட்சி...

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: ரிடையர் ஆகிவிடுவார்கள். வருகிறவர்கள் ஒத்துக்கொள்வார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் புலவர் அறிவுடை நம்பி அவர்கள் அடுத்த 'பே கமிஷன்' விரைவிலே,
வருவது போல கருத்தொலிப்பதாகச் சொல்லுகிறார்கள். பத்து ஆண்டுகள்
அவர்கள் கேட்காமலிருப்பார்களானால், கோரியதைத் தருவதாக முதலமைச்ச
ரிடம் பெற்றுத் தருவதாகவும் கூறுகிறார்கள். அப்போது விரைவாக ஏதாவது
'பே கமிஷன்' வருவதாக அவர்கள் அறிகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**புலவர் ஓ. அறிவுடை நம்பி :** உறுதியாக ஐந்து ஆண்டுகளுக்குள் நிச்சய
மாக வருமென்று நான் நம்புகிறேன். தலைவரவர்களே, கடந்த 1967-ஆவது
ஆண்டுக்குப் பிறகு நம்முடைய தமிழக அரசு ஆசிரியர்களுக்குச் செய்திருக்
கிற சாதனையை நான் இங்கே எடுத்துச் சொல்லவேண்டியவனாக இப்போது
இருக்கிறேன். சொல்ல வைத்துவிட்டார் நம்முடைய நண்பர் திரு முத்துசாமி
அவர்கள். சொல்லித்தான் தீர வேண்டும். 1—10—1967 முதல் சென்னைக்கு
நகர ஈட்டுப்படி வழங்கப்பட்டது. 1967 டிசம்பர் முதல் உதகை, குன்னூர்,
கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் பணிபுரிவோர்க்கு குளிர்காலப்
படி வழங்கப்பட்டது. ஆசிரியர்களின் குழந்தைகள் அனைவருக்கும் கல்லூரி
யில் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.
1—3—1968 முதல் மதுரை நகருக்கு நகர ஈட்டுப்படி வழங்கப்பட்டது.
1—4—1969 முதல் திருமணக் கடன் ரூ. 2,000 வழங்க வழி செய்யப்பட்டது.
மேலும் ஊதிய விகிதங்களைச் சீராக்கி ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கை
களைப் பரிசீலித்துப் பரிந்துரை செய்ய ஒரு நபர் குழுவை தமிழக அரசு
நியமித்துள்ளது. விடுப்பு ஊதியத்தைக் கணக்கிட 12 மாத ஊதிய சராசரிக்
கணக்கில் கொள்ளப்பட்டிருந்ததை 12—7—1968 முதல் 10 மாதமாகக் குறைக்
கப்பட்டபின் அதனையும் நீக்கி 1—11—1969 முதல் கடைசி மாதம் என்ன
ஊதியம் வழங்கப்பட்டதோ அதனையே வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.
தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மருத்துவ
வசதி அளிக்கப்பட்டுள்ளது. முந்தைய அரசு 1965-ஆம் ஆண்டிலேயே
அமைக்க வேண்டிய 2-வது ஊதியக் குழுவினை இந்த அரசு 4—9—1969-ல்
அமைத்தது. இந்தக் குழுவின் பரிந்துரைப்படி 2—10—1970 முதல் ஊதிய
விகிதம் மாற்றி அமைக்கப்பட்டது. 1—9—1970 முதல் ஊட்டி, கொடைக்
கானல் போன்ற மலைப்பகுதிகளுக்கும் படி உயர்த்தப்பட்டுள்ளது. முதற்குத்
தண்ணுட்ட வாங்க வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன் பணம் ரூ 50 கொடுக்க
17—9—1970-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 2-வது ஊதியக் குழுவின்
அறிக்கையை அரசு பெற்றுப் புதிய ஊதிய விகிதங்கள் 2—10—1970 முதல்
அமுல் படுத்தப்பட்டுள்ளன. நான் தேதியிட்டுக் கொடுத்தது தமிழக அரசின்
25 ஆண்டுக் கால வரலாற்றில் இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்





தக்கது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆரம்பத்தில் 21 கோடி ரூபாயும்,
இறுதிவாக்கில் 47 கோடி ரூபாயும் கூடுதல் செலவாகும். வேலையற்ற ஆசிரியர்
களின் கண்ணீரைத் துடைக்க 1970-ஆம் ஆண்டு பயிற்சி ஆசிரியத் திட்டங்கள்
மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. ஓய்வு கால ஊதியத்தை கடைசி
3 ஆண்டுகளின் ஊதியத்தின் சராசரியைக் கணக்கிட்டு வந்ததை மாற்றிக்
கடைசி 12 மாதங்களின் சராசரி ஊதியத்தைக் கணக்கிட்டு வழங்க ஆணை
யிடப்பட்டது. இதனால் பென்சன் அதிகமாக உயர்ந்தது. 1—4—1971 முதல்
கோவை நகருக்கும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கும் நகர ஈட்டுப்படி
வழங்கப்பட்டுள்ளது. 1970-71 ஆம் ஆண்டில் பயிற்சி ஆசிரியர் திட்டங்களின்
மூலம் 3,703 பேருக்கும் 1971-72-ஆம் ஆண்டில் 1,000 பேருக்கும் வேலை வாய்ப்பு
வழங்கப்பட்டது. 1967 நவம்பர் மாதத்திலிருந்து முதல் முறையாக அகவிலைப்
படி உயர்வு அளிக்கப்பட்டது. 1—6—1968 முதல் 2-வது முறையாகவும்,
11—1—1969 முதல் 3-வது முறையாகவும் அளிக்கப்பட்டது. 1—4—1972
முதல் நான்காவது முறையாக யாரும் எதிர்பாராத வகையில் டாக்டர் கலைஞர்
கருணாநிதி அவர்கள் ரூ. 10 அகவிலைப்படியை உயர்த்தித் தந்துள்ளார்.
1—4—1972 முதல் குறைந்த பென்சன் ரூ. 40 என்று உயர்த்தப்பட்டது. வீட்டு
வாடகைப்படி மத்திய அரசு ஊழியர்கள் பெறுவது போலவே 10 சதவிகிதத்
துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது 1972-73-ல் 8 சதவிகிதம், 1973-74-ல் 10
சதவிகிதம் என உயர்த்தப்படுகிறது. இளநிலை ஆசிரியர் ஊதியத்தில் பணி
புரிந்து வந்த 10,500-க்கும் அதிகமான இடைநிலை ஆசிரியர்களுக்கு தகுதிக்
கேற்ற ஊதியம் வழங்க வழிவகுத்தது. மேலும் 1972-73-ஆம் கல்வி ஆண்டில்
4,000 இளநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது.
1972-73-ஆம் கல்வி ஆண்டில் மேலும் 3,000 பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க
அரசு ஆணை பிறப்பித்தது. 1972-73-ஆம் கல்வி ஆண்டில் மேலும் 3,600 புதிய
இளநிலை, முதுநிலை, பட்டதாரி நிலைப்பதவிகள் உருவாக்க ஆணை பிறப்பிக்கப்
பட்டுள்ளது. ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படி வழங்கப்பட்
டுள்ளது. விழா முன்பணம் ரூபாய் 120 ஆக இருந்தது ரூபாய் 150 ஆக
உயர்த்தப்பட்டது. ஒரு பதவியில் அதிகப்படியான ஊதியத்தைப் பெற்றவர்
மேலும் ஊதிய உயர்வோ அல்லது பதவி உயர்வோ இல்லாது துன்பப்படுகின்ற
நிலை நீங்கிடப் பதவி உயர்வு கிடைக்கின்றவரை, இரண்டு ஆண்டுக்கு ஓர்
ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. பதவியிலிருந்து ஓய்வு பெறுபவர்கள் தங்
களுடைய கணக்கிலுள்ள விடுப்பில் 120 நாட்களுக்கு ஊதியமாகப் பெற வழி
செய்யப்பட்டுள்ளது. ஓய்வுகால ஊதிய வரம்பு நீக்கப்பட்டது. நகர
சபை ஆசிரியர்களை ஆணையாளர்கள் இஷ்டம்போல் மாற்றிக்கொண்டிருந்த
நிலையை மாற்றி, வேலை நியமனக் குழுதான் மாறுதல் செய்ய வேண்டுமென

ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 2-00, ரூ. 5-00 என்று கொடுக்கப்பட்டு வந்த அலுவல் படியை முந்தைய அரசு ரத்து செய்துவிட்டிருந்தது. அந்த அலுவல்படியை மீண்டும் அமுலுக்கு கொண்டு வந்ததோடு, 4 ஆசிரியர்களும் 300 குழந்தைகளுக்குக் குறைவாகவும் உள்ள பள்ளிகளுக்கு ரூ. 5-00-ம் அதற்குமேல் உள்ள பள்ளிகளுக்கு ரூ. 10-00-ம் அலுவல் படி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு ரகசியக் குறிப்பு எழுதும் முறை ஒழிக்கப்பட்டுள்ளது. குடும்ப ஓய்வு கால ஊதியம் கிராஜுட்டியில் இரண்டு மாத ஊதியத்தைக் குறைத்துக் கொண்டிருந்ததை மாற்றி ஒரு மாத ஊதியம் மட்டுமே குறைத்துக்கொள்ளப்படுகிறது. ஓய்வு பெறும் பணிக்காலத்தின் வரம்பு 30 ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பின்னும், அல்லது பணிபுரிந்து கொண்டிருந்தபோதே இறந்துவிட்டாலும் அவர்களது குடும்பத்திற்கு உடனடியாகவும், நீண்டகால உதவியாகவும் ஆசிரியர் நல நிதியிலிருந்து பணம் கிடைக்க வழிசெய்யப்பட்டுள்ளது. கைத்தறித் துணி கடனில் பெற வழிசெய்யப்பட்டுள்ளது. எல்லாத் தரப்பினருக்கும் தேர்வுநிலை வழங்கப்பட்டுள்ளது. பட்டதாரி ஆசிரியர்கள் ஊதியம் ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டது. தனிநபர் குழுவின் மூலம் அகவிலைப்படி ரூ. 10, 26-2-1973 நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது. பட்டதாரி ஆசிரியர்களில் 1-4-1970 முதல் பணிசெய்வோர் 3,500 பேருக்கு பணி உறுதி செய்தளிக்கப்பட்டுள்ளது. பட்டதாரி ஆசிரியர்களுக்கும் முதல் நிலை தமிழாசிரியர்களுக்கும் 10 ஆண்டு பணிக்காலம் கணக்கிடப்பட்டு தேர்வுநிலை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதோடு தனியார் துறைப் பள்ளியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற சட்டத்தை விரைந்து கொண்டுவந்துகொண்டிருக்கிறது. இவ்வளவும் செய்திருக்கிறது நம்முடைய அரசு. நான் கேட்டுக் கொள்வேன். பட்டதாரி ஆசிரியர்களைத் தூண்டிவிடுகின்ற சிலருக்கு நான் எடுத்தும் சொல்வேன்.

பி.ப. 5-50 (மணி அடிக்கப்பட்டது.)

தலைவர் அவர்களே, ஒரு ஐந்து நிமிஷம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** இரண்டு நிமிஷம்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** தலைவர் அவர்களே கொங்கு மண்டலத்தில் ஒரு தனியார் பள்ளி. 21 மாணவர்கள் இருக்கிறார்கள். ஏழு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்துக்கொண்டு அந்தப் பள்ளிக்கூடம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. முன்பு பணியாற்றிய ஆசிரியர்கள் 13 பேர்கள், இரண்டு பேர்



எழுத்தர்கள், ஒரு காவலர். அவர்கள் மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து மேலும் இரண்டு மாதமாகிவிட்டன. இன்னும் அவர்கள் 'ரிலீவ்' செய்யப்படவில்லை. விடுவிக்கப்படவில்லை. அவர்களுடைய சான்றிதழ்களையும் அந்தப் பள்ளிக்காப்பாளர் வைத்துக்கொண்டிருக்கிறார், கொடுக்க மறுக்கிறார். பழைய ஆசிரியர்களை நீக்கியதாக அறிவிப்போ வரவில்லை. பத்து மாதம் சம்பளமின்றி வறுமை வாட்ட, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், அந்த ஆசிரியப் பெருமக்கள். அவர்களுக்குக் குரல் கொடுப்பதற்கு ஒருவருமில்லை என்று வருத்தம் தெரிவிப்பதோடு மட்டுமல்ல, அந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மூன்று மாதச் சம்பளத்தை உதவித் தொகையாகவாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இறுதியாகச் சொல்வேன். தலைவர் அவர்கள் நேரமில்லை என்று சொல்கின்ற காரணத்தால், ஒன்றை மட்டும், ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் நினைவுபடுத்திவிட்டு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு விடுகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** கடிகாரத்தைப் பார்த்துப் பேசுங்கள்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** தலைவர் அவர்களே, அந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் கூறிக்கொண்டு கல்வி மான்யக் கோரிக்கை வருகின்றபோது பேசிக் கொள்ளலாமென்ற காரணத்தாலே, என்னுடைய உரையை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொங்குச் சீமையில் ஒரு தனியார் பள்ளி நிர்வாகத்தில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையைச் சொல்லிவிட்டு, இந்த மாதிரியான போராட்டங்களைத் தூண்டிவிடுவது என்பது போன்ற சில விஷயங்களைச் சொன்னார்கள். அந்த நிர்வாகி அந்த ஆசிரியச் சமுதாயத்திற்கு எதிராகச் செய்கின்றார் என்பதையும் சொன்னார்கள். ஆசிரியச் சமுதாயத்தைப் பழி வாங்கிக்கொண்டு இருக்கக் கூடியவரைத் தூண்டிவிடுவதால் ஒரு ஆசிரியச் சமுதாயம் எப்படிச் செயல்படும் என்பதை அவர் கூறுவார்களா?

**புலவர் ஓ. அறிவுடைநம்பி:** தலைவரவர்களே, அவைகளையெல்லாம் விளக்கிச் சொல்ல நேரமில்லாததால், அவைகளை அப்படியே விட்டு விடுகிறேன். அவருடைய சிந்தனைக்கும் அவருடைய எண்ணத்திற்கும் தெரியும், அவனுடைய மனதிற்கே தெரியும். எனவே அதை விட்டுவிட்டு அடுத்த நிலைக்குப் போகிறேன்.

அண்மையிலே நான் ஒரு ஸ்கூட்டர் விபத்துக்கு ஆளானேன். மயிரிழையில் நான் தப்பினேன் என்று சொல்ல வேண்டும். நான் ஹெல்மெட் போட்டுக் கொண்டிருந்தேனேயானால், நிச்சயமாக ஆபத்துக்கு ஆளாகியிருக்கமாட்டேன்.

[புலவர் ஓ. அறிவுடைநம்பி] [1973 மார்ச் 7

என் மூளையைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு அந்த விபத்திலிருந்து நான் சிறு நிலையில தப்பினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் வேன். யாராகயிருந்தாலும் ஸ்கூட்டரில் செல்லக்கூடியவர்களெல்லாம் ஹெல் மெட் இல்லாமல் ஓட்டக்கூடாது என்று சட்டம் ஒன்றை கொண்டுவர வேண்டும் என்று. இறுதியாக

சீர்மேவும் கீழ்வானில் சிவந்தெழுந்த செஞ்சுடர்
கார்மேவும் குன்றம் தவழ்ந்து வரும் மென்காற்று
உச்சிமலைத்தேன் ! உயிர் சலால் நீர் அருவி !
பச்சை மலை பாறை பயிலும் புலிக்குட்டி—
சாரல் மலை வாழும் சந்தம் காரகில்
வேரில் பழுத்த பலா ! விடிவான் !
ஏழைகளின் குறை தீர்க்க வந்த ஒளி விளக்கு !
கலைஞர் அவர்களின் மலரடிப்பற்றிச் சொல்வேன்.

தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்கு தடை செய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும், "எரிகின்ற எங்களின் நெஞ்சின்மேல் ஆணை ! இனி எங்கள் ஆட்சிதான் இந்நாட்டிலே !" என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஸ்கூட்டரில் போகிறவர்கள். . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** நீங்கள் திரும்பப் பேசினால் அவர் பதில் சொல்வார்.

**திரு. பி. திருஞானசம்பந்தம்:** பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, 1973-74-ம ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்று, என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை யைப் பார்க்கின்றபோது, தமிழ் சமுதாயத்திற்கு கடந்த 10, 20 ஆண்டுகளில், கிடைக்க முடியாத பல நன்மைகளும், குறிப்பாக விவசாயச் சமுதாயத்திற்கு, ஒரு அருமையான திட்டமும், அதிலே காணப்படுகின்றன. ஆண்டாண்டு காலமாக குத்தகைதாரர்களிடம் தங்களுடைய வயிற்றையும், வாயையும் கட்டி இரவு பகலாக உழைத்து, அப்படி உழைத்த பலனை களத்து மேட்டிலேயே குத்தகைதாரர்களுக்கு அனுப்பிவிட்டு பெருமூச்சுடனே வீடு செல்கின்ற சாதா ரண விவசாயப் பெருங்குடிமக்களுக்கு இந்தத் திட்டம் ஒரு அருமையான திட்டம் என்பதை யாவரும் ஒத்துக்கொள்வர்.



1973 மார்ச் 7] [திரு. பி. திருஞானசம்பந்தம்]

இதே போன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாட்டு வீட்டு வசதிக் கழகம் என்ற ஒரு அமைப்பை அமைத்திருக்கிறார் கள். இதற்கு முன்பிருந்த சர்க்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பல வீடு களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படிக் கட்டிக் கொடுத்த வீடுகள் இன்றையதினம் இருக்கின்றனவா என்றால் கிடையாது. அங்கே வீடுகள் கட்டுகின்ற கண்ட்ராக்டர்கள் அவர்களுடைய இஷ்டத்திற்கு அந்த வீடுகளைச் சரியற்ற முறையில் கட்டிக்கொடுத்த, காரணத்தால், இன்றைய தினம் அந்த வீடுகள் இல்லை. இருந்த இடம் தெரியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டம் போடாமல், அதற்காக ஒரு தனி வாரியம் அமைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கே அந்த வீடுகளைச் செவ்வனே கட்டிக் கொடுக்க முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியது.

அதேபோல் நீண்டநெடுங்காலமாக புதுக்கோட்டையைத் தனி மாவட்ட மாக்க வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுகோளை இன்றைய தினம் நிறைவேற்றுவதற்கு நம்முடைய சர்க்கார் முன்வந்திருக்கிறது. அதை அந்தப் பகுதி மக்கள் மனதார வரவேற்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. அதே போல் தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்த மின் சப்ளை கார்ப்பரேஷன்களை யெல்லாம் தேசியமயமாக்குவதற்கு இன்றைய தினம் இந்த நிதிநிலை அறிக்கை யில் வழி செய்யப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். அதோடு எங்களுடைய மாவட்டத்தினுடைய நெடுநாளைய கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டம் தாயில்லாத பிள்ளை போலிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திற் கென ஒரு தலைநகர் கிடையாது. ஆகவே கலைஞர் அவர்கள் தயவுசெய்து எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு தலைநகரை, அதுவும் சிவகெங்கையைத் தலைநகராக அறிவிக்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு இந்தச் சந்தர்ப் பத்தில் வேண்டிக்கொள்கிறேன்.

மற்றொன்று, மத்திய சர்க்காரிலிருந்து வருகின்ற அமைச்சர்களானாலும் சரி, மற்ற அதிகாரிகளானாலும் சரி, தமிழ் நாட்டிற்கு வருகிறபோது, தமிழ் நாட்டி லிருக்கின்ற, குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப் பினர்களையும், அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களையும், இங்கேயிருக்கின்ற மக்களையும் மந்தை போன்று பார்க்கின்ற வகையில் சில பல பேச்சுகளை ஆற்றி வருகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், சமீபத்தில் நம்மு டைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. அரங்கண்ணல் வீடு சோதனையிடப் பட்டது. அப்படிச் சோதனை செய்ததுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. சோதனை செய்தவுடனேயே அந்த வீட்டிலிருந்து சட்ட விரோதமான பொருள்கள் என்னென்ன கைப்பற்றப்பட்டன அல்லது ஒன்றுமில்லை என்பதை வெளிப்

படையாக அறிவித்திருக்க வேண்டும் என்பதை இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொண்டு, இந்த அவையில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. வெங்கா :** மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், 1973-74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய மன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையை நான் ஆதரித்துப் பேச எனக்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கலைஞர் அவர்கள் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த நேரத்தில் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த அறிக்கையின் மூலம் ஏழை எளியோருக்கும், இரப்போருக்கும், குடிசை வாழ்வோருக்கும், குருடாகிவிட்டோருக்கும் வீட்டு மனை இல்லாதாருக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் நம்மால் முடிந்ததைச் செய்ய முயற்சிக்கின்றோம் என்று அன்றையதினம் மிகப் பணிவன்போடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

உள்ளபடியே எந்தக் கட்சி அரசாளுறும் பதவிக்கு வர வேண்டுமா, இல்லையா என்று முடிவு செய்யாமல் நம்மால் முடிந்ததை இந்த நாட்டு மக்களுக்கு, அவர்கள் வாய்ப்பு அளித்த காலத்தில் செய்ய வேண்டுமென்று செய்யும் போது தான், அது ஒரு சிறந்த அரசாக அமைய முடியும். உள்ளபடியே கலைஞர் அவர்கள் நல்ல முறையில் இந்த அறிக்கையை முதல் முறையாக இந்திய உபகண்டத்தில் சமர்ப்பித்திருக்கிறார்களென்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் நம்முடைய மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கூட முற்போக்கு வாதிதான். அவர் சோஷலிஸ்ட். இருந்தபோதிலும், அவர் கொண்டிருந்த கருத்துக்களை சட்டமாக இயற்ற முற்படுகிற நேரத்தில், இடையிலே இருக்கக்கூடிய பிற்போக்கு சக்திகள் தேர்தல் நேரத்தில் என்ன செய்துவிடுமோவென்று அஞ்சி, அஞ்சித்தான்,
6 00 பி.ப. சிறுகச் சிறுகத்தான் தன்னுடைய முற்போக்குத் திட்டங்களை உருவாக்கினார். அப்போதுதான் அந்த முற்போக்கு அமைச்சரவையில் இருந்த மற்றொரு முற்போக்கு வாதியான அம்பேத்கார் அவர்கள் வெளியேறினார்கள். அரசியல் வாதிகள் தங்களுடைய ஆட்சி நிலைத்திருப்பதற்காக பயந்து, பயந்துதான் இது வரையில் அறிக்கைகளை, சட்ட திட்டங்களை இந்த நாட்டில் உருவாக்கிக்கொண்டிருந்தார்கள். எனவே அந்த நிலை மறைந்து, நம்முடைய கலைஞர் அவர்கள் தான், என்ன நிலைமை வந்தாலும் சரி, பிற்போக்கு சக்திகள் எதிர்த்து, அடைந்து வருகின்ற வட்சித்தை அழித்துவிட்டாலும் பரவாயில்லை; தான்



பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ள இந்த நேரத்தில் நம்மால் முடிந்த அளவுக்கு இந்த நாட்டு மக்களை உயர்த்தியாக வேண்டுமென்ற உறுதியில் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் திரு. நிகழிதர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "இது வரி போடாத பட்ஜெட் என்று சொல்கிறீர்களே, அப்படியென்றால் 1972-73-லே ரூ. 441 கோடியாக இருந்தது, இப்போது 1973-74-ல் எப்படி ரூ. 465 கோடியாக உயர்ந்திருக்கிறது? 24 கோடி ரூபாய் வருமானம் உயர்ந்திருக்கிறது. ஆக மறைமுகமாக வரி போட்டிருக்கிறீர்கள்" என்று சொன்னார்கள். வாடிக்கையாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பார்கள். எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் ஏதோ கருத்தைச் சொல்ல வேண்டுமென்று, மாறி மாறி அதிலே ஊடுருவிச் சென்று, குறைகளைக் கண்டுபிடித்துச் சொல்வதும் வாடிக்கையாகிவிட்ட ஒன்று. ஒரு பக்கத்தில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் வரிகளை ஏன் போடவில்லையென்று கேட்கிறார்கள். நான் பத்திரிகையில் படித்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்க்கக்கூடிய பத்திரிகையில் பார்த்தேன். அதன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். வரி இல்லாமல் பட்ஜெட்டைப் போட்டதால் மகிழ்ச்சியடையலாம். ஆனால் வரி போடாத காரணத்தால், முற்போக்கான திட்டங்களைச் செய்ய முடியாது. எனவே இது முற்போக்கு இல்லை. இது ஒரு பிற்போக்கு அரசுதான் என்று எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அதற்கு மாறாக இன்னொரு பக்கத்தில், வரியைப் போட்டிருக்கிறீர்கள் என்று எடுத்துச்சொல்லி, அதே நேரத்தில் அவர்களுடைய தேவைகள் என்ன என்பதை எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் வாரி வாரி வழங்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். வரி போடாத பட்ஜெட்டைக் காட்டுகிறார்கள், அந்தத் திட்டத்தை ஏன் நிறைவேற்றவில்லை, இதை ஏன் செய்யவில்லையென்று மற்றொரு பக்கத்தில் சொல்கிறார்கள். போடுவதற்கு என்ன இருக்கிறது, அனைத்து வரிகளையும்தான் போட்டுவிட்டார்களேயென்று பலதரப்பட்ட கருத்துக்களை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரி 24 கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறதென்றால், இருக்கிற அரசு, அரசு அலுவலர்களை நல்ல முறையில் பயன்படுத்தி, யார் யார் வரி செலுத்த வேண்டுமோ, யார் யார் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களிடமிருந்தெல்லாம் நல்ல முறையில் வசூலிக்கிற காரணத்தினால், அரசுக்கு வர வேண்டிய வருமானம் பெருகிக் கொண்டிருக்கிறது. இருக்கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு, ஒரு 'மணி' கூட வீணாகாத அளவுக்கு பலதரப்பட்ட திட்டங்களை இந்த அரசு செய்கிறதென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். நாம் மத்திய ஆட்சியின் உதவியைப்

பெறுகின்ற நேரத்தில், முதலமைச்சரவர்கள் அவருடைய அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும், இந்த நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய தொகையை ஒதுக்காதது, மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்போக்கைத்தான் காட்டுகிறதென்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்குக்கூட மன்றத்தில் பேசிய உறுப்பினர், "வெள்ள நிவாரணத்திற்கு 14¼ கோடி ரூபாயை மத்திய அரசு கொடுத்திருக்கிறார்கள். அது மாற்றாந்தாய் மனப்போக்கா?" என்று கேட்டார்கள். அதைக் கூட தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் கலைஞர் அவர்கள் பாராட்டித்தான் இருக்கிறார்கள். 14 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்களென்று பாராட்டுகிற நேரத்தில், நம்முடைய தேவைகள் என்ன என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஏறக்குறைய 40 கோடி ரூபாய் இந்த நாட்டிலே ஏற்பட்டுள்ள சேதாரங்களைச் சரி செய்வதற்குத் தேவைப்படுகிற நேரத்தில், 14 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். கொடுத்த அந்தப் பணத்தைக்கூட இந்த ஆண்டே கொடுக்கவில்லை. இப்படிப்பட்ட வெள்ளத்தால் ஏற்பட்ட சேதாரங்களை அன்றைய தினமே, மறுகணமே சரி செய்து தர வேண்டுமே தவிர, திட்டங்களைக் கொண்டு படிப்படியாக ஆண்டுதோறும் செய்கிற காரியமல்ல. கொடுத்த 14 கோடி ரூபாயை இந்த ஆண்டே கொடுத்திருப்பார்களேயானால், பாராட்டவேண்டியதுதான். நாம் கேட்ட 25 கோடி ரூபாயைக் கொடுத்திருந்தால், பாராட்டப்பட வேண்டியதாக இருக்கும். அதை மறந்துவிட்டு, 14 கோடி ரூபாயை அதிலும் இந்த ஆண்டு 7¼ கோடி ரூபாயும், அடுத்த ஆண்டு 7 கோடி ரூபாயும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிவாரணத்திற்கு உரிய காலத்தில் உதவியைச் செய்யாமல், காலங்கடந்து செய்வதற்குப் பெயர் நிவாரணம் என்று இருந்தால், [illegible] மாநிலத்திலும், [illegible] மாநிலத்திலும் அந்த அரசுகள் என்ன செய்கிறார்களோ, அவை [illegible] 100 கோடி ரூபாய் கணக்கில் அவர்களுக்கு [illegible] கொடுத்திருக்கிறார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற மக்களைக் காப்பாற்ற [illegible] பாதிக்கப்படுவது அதிகமென்பதை உணர்ந்து, மேலும் அதிகமாக உதவியை, நம்முடைய அரசு, இன்றைய தேவையாகப் பெற வேண்டுமென்று இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இன்று மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய தொகை, ஒவ்வொரு திட்டத்திலும் குறைந்துகொண்டே வருகிறது. அதன் காரணம் என்ன? நம்முடைய நாட்டிலே எப்படி ஆண்டுதோறும் வருமானம் பெருகிக்கொண்டு, நல்ல நிர்வாகம் நடைபெறுகிறதோ, அதே போன்று மத்தியிலும் ஆண்டுதோறும் வருமானம் உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால், மத்தியிலிருந்து மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவியின் சதவிகிதம் குறைந்துகொண்டே வருகிறது.



மக்கள் தொகைப்படி நமக்கு 7.5 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த அளவுக்காவது அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய பட்ஜெட்டிலே ஏறக்குறைய 25 சதவிகிதம் இன்றைய தினம் கல்விக்காகத்தான் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே நாட்டிலே இருக்கக்கூடிய அனைவருக்கும் கல்வி கற்றுத்தர வேண்டுமென்பது ஒரு அரசினுடைய நியாயமான கடமையென்பதை உணர்ந்திருக்கிறோம். அதே நேரத்தில் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டது போன்று, நம்முடைய நாட்டிலே அமைந்துள்ள கல்வி முறையானது, போதிக்கிற கல்வியானது, பள்ளியை விட்டு கல்லூரியை விட்டு வெளிவரும்போது, உத்தியோகத்திற்கு அனுப்பக்கூடியதாக இருக்கிறதே தவிர, அவர்கள் தாங்களாகவே ஒரு தொழிலை ஏற்று நடத்தக்கூடிய அளவுக்கு இல்லை. எனவே அந்த அளவுக்குக் கல்வி முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இப்போது இருக்கக்கூடிய அமைப்பைப் பார்க்கிற நேரத்தில், இந்தக் கல்வியும் போய் விடுமோயென்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சிகளைப் பார்க்கிற நேரத்தில் நாம் வருந்த வேண்டியவர்களாக இருக்கிறோம். காரணம், இன்றைய தினம் யார் யார் ஒழுக்கத்தையும், நல்ல கல்வியையும் போதிக்க வேண்டுமென்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோமோ, அந்த ஆசிரியர்கள் பலரால் தூண்டப்பட்டு, அரசியல் கொள்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை தேவைதானா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலைமை ஏன் வந்தது என்பதைப்பற்றி நான் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தேன். சமுதாய அரசுக்கு முன்பிருந்த அரசினுடைய காலத்தில் இது போன்ற நிலைமைகள் இருந்ததா என்றால், இல்லை. நம்முடைய அரசு பதவி ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு நாம் அவர்களுடைய தேவைகளை அதிகமாகப் பூர்த்தி செய்கிறோம். அப்படிச் செய்கிறபோதுதான், அவர்கள் ஏதேதோ போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். 'கறக்கக்கூடிய மாட்டில் தான் பின்னும் ஒரு பீர் கறக்க வேண்டும்' என்று கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். அந்த அளவுக்கு இந்தக் கட்சியை மிரட்டினால் பெற்று விடலாமென்று கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு முன்பிருந்த அரசு, 20 ஆண்டுக் காலமாக எந்தவிதமான சலுகையையும், எந்தக் குறைக்கும் செய்து தரவில்லை. அதை இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகுதான், '20 வருடமாகக் கோரிக்கைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதில் நியாயம் இருக்கிறது' என்று நினைத்து, அவர்களிடத்தில், உங்களுக்கு என்னென்ன கோரிக்கைகள் இருக்கின்றன, அவற்றை எடுத்துச் சொல்லுங்கள் என்று

வேண்டி, விரும்பி, கேட்டுப் பெற்ற அந்தக் கோரிக்கைகளில் நியாயமானதை, செய்யக்கூடியதைச் செய்து கொடுத்தார்கள். இப்படிச் செய்து கொடுக்கின்ற நேரத்தில், ஒரு துறைக்குச் செய்தவுடன், மற்றொரு துறையினர் கேட்டார்கள். அவர்களுக்கும் செய்து கொடுத்தார்கள். அவர்கள் கோரிக்கைகளில் நியாயம் இருந்தது. இப்படிச் செய்யச் செய்ய, மனிதனுடைய சுபாவத்தைப் பார்த்தால், ரூ. 10 கொடுத்தால், ரூ. 11 கொடுக்க வேண்டும் என்பார்கள். ரூபாய் 11 கொடுத்தால், ரூபாய் 12 கொடு என்று சொல்லிவிட்டால் ரூபாய் 12 கொடுத்து விட முடியாது. படிப்படியாக மேலும் மேலும் போக வேண்டுமென்பதுதான் மனிதனுடைய சுபாவம். அந்த அடிப்படையிலே அவர்கள் மேலும் மேலும் செய்ய முடியாத கோரிக்கைகளை, தேவையற்ற கோரிக்கைகளை வலியுறுத்த ஆரம்பித்தார்கள். அந்தக் கோரிக்கைகளை வலியுறுத்த ஆரம்பித்த நேரத்திலே அவற்றில் நியாயமில்லை என்பதைக் கண்டு, அரசானது அவற்றை யோசித்து, பரிசீலனை செய்வதாக இருந்த நேரத்தில், நாம் கோரிக்கைகளைக் கொடுத்தால் பரிசீலிக்க மாட்டார்கள் போல் இருக்கிறது, இதற்காகப் போராட்டத்தை நடத்துவோமே என்ற ரீதியிலே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய தினம் ஒவ்வொரு துறையிலேயும் அவரவர்கள் போராட்டம், போராட்டம் என்று சொல்லி எப்படியாவது இந்த அரசைப் பயமுறுத்தி தங்களுடைய நோக்கத்தை எடுத்துச் சொல்லி மெஜாரிடி பலத்தைக் கொண்டு பணிய வைக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் கருத்து. இப்படித்தான் இன்றையதினம் செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள். இந்த மனப்பான்மையே வளருமானால், நிச்சயமாக ஒரு நிரந்தரமான அரசாங்கத்திற்கு நல்ல நிலைமை உருவாகாது என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்பு கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இந்த மன்றத்திலே ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்தார்கள். பத்து ஆண்டு காலம் பணியிலே இருந்தவர்களுக்கு 'செலக்‌ஷன் கிரேட்' என்று எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் வெளியிலே பல நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்: "இது பட்டதாரி ஆசிரியர்களுக்கு மட்டும் தானே கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருக்கிறோமே. நாங்கள் போராடவில்லையாதலால், எங்களுக்குக் கொடுக்கவில்லை போலிருக்கிறது. நாங்களும் போராட்டம் நடத்தப் போகிறோம்" என்று அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பிற துறைகளிலே, பி.டபிள்யூ.டி., வெட்டரினரி இப்படி பல அரசுத் துறைகளிலே இருக்கின்றவர்கள் எல்லாம், "ஏறத்தாழ 20 ஆண்டு எந்த இன்சென்டிவ்வும் கிடையாது, எந்தப் புரமோஷனும் கிடையாது, இன்கிரிமென்டே கிடையாது, இந்த நிலையில் நாங்கள் இருக்



கின்றோம். எங்களுக்கும் அந்த செலக்‌ஷன் கிரேடு அமையப்பெற வேண்டும்" என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்க்கும் நேரத்திலே, படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் இப்படியே போராட்டம் நடத்துவார்களோ என்று அச்சப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைய தினம் ஏறத்தாழ நமக்கு 400 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால், ஜனத்தொகையில் 10 சதம் இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு அரசின் வருமானத்திலே ஏறத்தாழ 45 சதத்தை ஊதியமாக இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அரசு அலுவலர்கள் நினைத்துப்பார்க்க வேண்டும். பாக்கி இருக்கக்கூடிய 55 சதம் வருமானத்தைத் தான் (குறுக்கிடு) நாம் செலவு செய்துகொண்டிருக்கிறோம். காரணம் கிராமப்புறத்தில் விவசாயத்தில் ஈடுபாடு கொண்டிருக்கின்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் தினக் கூலி, எங்கள் பகுதியிலே ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது. தஞ்சை போன்ற போராட்டம் மிக்க இடங்களிலே தினம் ரூ. 2, ரூ. 3 இருக்கக்கூடும் என்று வைத்துக்கொண்டால்கூட, அது நிச்சயமாக அவர்களுக்குப் போதுமானதாக இருக்காது. இந்த மாதிரி நிலைமையில், அரசு அலுவலர்களை முதலாளிகளைப் போல நாம் உருவாக்குகின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். நாம் ஏழை எளியவர்களை உயர்த்த வேண்டும், சம தர்மம் ஓங்க வேண்டும், ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டும் என்று கருதுகின்ற நேரத்தில், இதைச் செய்து கொண்டிருக்கின்றோம். மறு பக்கத்தில் இந்த ஏழை எளிய மக்கள் மிகமிகச் சாதாரணமாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்த நிலை நியாயம் தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எப்படி இந்த மனோபாவம் இருக்கிறது? போராட்டத்தை நடத்தியே ஆகவேண்டும், இந்த அரசை மிரட்டியே ஆகவேண்டும், சம்பள உயர்வு பெற்றே ஆகவேண்டும் என்ற மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டுமானால், நிச்சயமாக, இனிமேலாவது நம்முடைய அமைச்சரவை எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி, அதனால் இந்த அரசே கவிழ்ந்துவிட்டாலும் கூட பரவாயில்லை, நியாயமான கோரிக்கைகளைத் தவிர மற்றக் கோரிக்கைகளுக்கு, முறையீடுகளுக்கு செவி சாய்க்கவேண்டாம் என்று என்னுடைய தனித்த கருத்தை இங்கே கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதையடுத்து இந்த அரசானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மிக நல்ல முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல சலுகைகளை தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கும் இந்த அரசு மேலும் மேலும் அளித்துக்கொண்டிருக்கிறது. இது வரவேற்கக்கூடிய நிகழ்ச்சிதான். ஆனால் இதிலே ஒன்றை மட்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். சில அரசு ஊழியங்களில் அரிசன மக்களுக்கு 16 சதம், 18 சதம்

என்று ஒதுக்கி வைத்திருக்கின்றார்கள். அந்த 10, 15 சதந்திரத்தைக் கூட்டிக் கொடுத்தாலும்கூட நான் வருத்தப்படமாட்டேன், நிச்சயமாக மகிழ்ச்சியடைவேன். இந்தத் திருத்தத்தை அரசு மேற்கொள்ளுமானால், தனி சிறந்ததாக இருக்குமென்று கருதுகின்றேன். உதாரணத்திற்கு, கோபால் என்னும் ஒருவர் அந்தச் சலுகையைப் பெற்று ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆகின்றார். அப்படி அவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனபிறகு அவருடைய பிள்ளையை நல்ல முறையிலே கான்வெண்ட்டுக்குக்கூட அனுப்பிப் படிக்க வைக்க முடியும். அவருடைய பெற்றோர்கள் நல்ல நிலையிலே குழந்தையை வளர்க்கின்றார்கள். ஒதுக்கப்பட்ட அந்த ஸ்தானத்திற்கு இந்த கோபாலனுடைய மகன் போட்டியிடுகின்றான். அதே நேரத்தில், அங்கு வந்திருக்கக்கூடிய முத்துசாமியினுடைய மகனும் போட்டியிடுகின்றான். அப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய மகன் அங்கே வெற்றி பெறுவானா, கிராமச் சூழ்நிலையிலே வளர்ந்த பிள்ளை வெற்றி பெறுவானா என்று பார்க்கின்ற நேரத்திலே, இந்தச் சலுகையின் மூலமாக ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் வசதிகளைப் பெற்றுக் கொண்டு வருகின்றார்கள். கிராமத்திலே இருக்கக்கூடிய அரிஜனங்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்தச் சலுகை கிடைப்பதில்லை. யார் ஒருவர் முதல் முறையாக அந்தச் சலுகையைப் பெற்று உயர்ந்த நிலைக்கு வந்து விட்டார்களோ, அவர்களின் இரண்டு தலைமுறைக்காவது அந்தச் சலுகை பெறாமல், அவர்கள் ஜெனரல் காம்படிஷனிலே, பொதுத் தேர்விலே வருவதற்கு வழி வகுத்தால், அந்தச் சமுதாயம் 'அப்லிப்ட்' ஆக உதவியாக இருக்கும் என்று கருதுகின்றேன். தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினர் மட்டும்தான், சலுகை பெற்றவர்கள்தான், அந்தச் சலுகையை மேலும் மேலும் பெறுகிறார்கள். எனவே அந்தச் சலுகையைப் பெற்ற குறைந்தது இரண்டு தலைமுறைகள் லாயக்கில்லையென்று அறிவித்து, மற்றவர்கள் சலுகை பெற வசதியளிக்க வேண்டும்.

இன்றைய தினம் குத்தகை நிலங்கள் குறித்து இங்கே பேச்சிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். உள்ளபடியே அது ஒரு நியாயமான நிலை என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், நிலம் உழுபவனுக்குத்தான் சொந்தமாக இருக்க வேண்டும். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா இருக்குமானால், அதைக் குத்தகைக்கு விட்டிருந்தால், அதை எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்கின்றார்கள். உள்ளபடி யார் நிலத்தை உழுகின்றாரோ அவனுக்குத்தான் நிலம் இருக்க வேண்டுமேயொழிய, சென்னையிலே இருக்கின்ற ஒருவருக்கு கிராமத்திலே 15 ஏக்கரா வைத்துவிட்டு குத்தகை கொடு என்று சொன்னால், அது நல்ல நிலைமையாக இருக்க முடியாது. எனவே பயிரிடுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற மூல மந்திரத்திற்கு ஏற்பத்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதற்காக ஒரு கார்ப்பரேஷனை



அமைத்திருக்கின்றார்கள். இந்த கார்ப்பரேஷன் மூலமாக, நிதி உதவியைச் செய்து, குத்தகை நிலம், பயன்படுத்தப்படாமல் இருக்கும் [illegible], சர்க்கார் [illegible] ஆயக்கட்டில் இருக்கிற [illegible] அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, அந்த நிலத்தைக் குடியானவனுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இது உள்ளபடியே [illegible] ஒரு நல்ல முன்மாதிரியை உருவாக்குகிறது என்று நான் கருதுகின்றேன். அந்த அளவுக்கு இன்னும் பலப்பல திட்டங்களை அரசினர் உருவாக்கியிருக்கின்றார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் நிச்சயமாக நம்முடைய தமிழக நிலையை உயர்த்தும் என்று எடுத்துச் சொல்லக் கொள்கின்றேன். இப்போது 12 ஆண்டுத் திட்டம் என்ற ஒன்றை நம்முடைய மாநிலத் திட்டக் கமிஷனில் வைத்திருக்கின்றார்கள். அந்தத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுமானால், இந்த நாட்டிலே சொர்க்கம் என்று ஒன்று இருக்குமானால், அந்த அளவுக்கு உயர்ந்து [illegible] என்ற முறையிலே கலைஞர் அவர்கள் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக சமர்ப்பிக்கின்ற இந்த பட்ஜெட்டை பாராட்டி வரவேற்கின்றேன். வணக்கம்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்னால் எதிர்க் கட்சிகள் சம்பந்தமாக [illegible]. [illegible] அவர்கள் நேற்று முன் தினம் இங்கே குறிப்பிட்டதையொட்டி நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். எதிர்க் கட்சி என்றால், சட்ட மன்றத்திலே ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சி. எதிர்க்கட்சியின் பணி ஆளும் கட்சியின் குறைபாடுகளை 'அப்போஸ், எக்ஸ்போஸ் அண்டு டிஸ்போஸ்' செய்வது என்று சொல்லுவார்கள். ஆளும் கட்சியினுடைய குறைபாடுகளை, போக்குகளை முறையற்றது என்று கருதுபவற்றை எதிர்ப்பது, 'எக்ஸ்போஸ்' அதன் தவறுகளை அம்பலப்படுத்துவது, 'டிஸ்போஸ்' அதிகாரத்திலிருந்து அவர்களை அகற்ற முயற்சிப்பது இது ஆளும் கட்சிக்கு எதிர் வரிசையிலே உட்கார்ந்திருக்கக்கூடிய கட்சிகள் செய்யவேண்டியது என்று பாராளுமன்ற நெறிகளில் அனுபவம் வாய்ந்த பெரியவர்கள் கூறுவார்கள். இது பாராளுமன்ற நெறிமுறை. வளர்ச்சியுற்ற நாடான பிரிட்டன் போன்ற மேற்கு ஐரோப்பாவிலே இருக்கக்கூடிய சில ஜனநாயகங்களுக்கு இது பொருந்தலாமே தவிர, இந்தியாவைப் பொறுத்த வரையிலும், ஒரு வளர்ந்து வரும் பொருளாதாரம் உள்ள இந்திய ஜனநாயகத்தைப் பொறுத்தவரையில், இது முற்றிலும் ஏற்கக்கூடிய கருத்து அல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும். பல அரசியல் வல்லுநர்கள் இதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் நான் மேற்கோளாக வேண்டுமானால் இங்கே சொல்ல இயலும். என்னைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சி

என்று சொல்லும்போது, எதிர்ப்பது, அம்பலப்படுத்துவது, ஆளும் கட்சியை அதிகாரத்திலிருந்து அகற்ற முயற்சிப்பது என்பது மட்டுமல்ல, அதன் கடமை. அது மட்டுமல்ல — "it should assist in implementing whatever is correct in those polices" அதே நேரத்தில் "Whatever is wrong, in the Governments policies" அதனை எதிர்க்க வேண்டும். எதெந்தக் கொள்கையையெல்லாம் நாம் ஏற்றுக்கொள்கிறோமோ, அரசு எதை யெல்லாம் கடைப்பிடிப்பது சரியென்று நாம் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறோமோ, அதை அமுல் செய்வதில் அரசுடன் ஒத்துழைப்பது, எதிர்க் கட்சிகளுடைய கடமையாகும். எனவே எதிர்க் கட்சி என்று சொன்னால் எதிர்ப்பது, அம்பலப்படுத்துவது, அதிகாரத்தை விட்டு அகற்றுவது என்பது மட்டுமல்லாமல், எவையெல்லாம் நம்மால் ஒத்துக்கொள்ளப்படுகிறதோ, நடைமுறைக் கொள்கையாக வைக்கப்படுகிறதோ, அதை அமுல் செய்வதில் ஒத்துழைப்பது என்பது பொருளாகும்.

துரதிருஷ்டவசமாக நம்முடைய தேசத்திலே இந்த மாநிலத்திலேயானாலும் சரி, மத்தியிலேயானாலும் சரி, மற்ற மாநிலங்களிலேயானாலும் சரி, எதிர்க்கட்சிகள் இந்தப் போக்கை அனுஷ்டிப்பதாகச் சொல்வதற்கில்லை. அதே போல ஆளுங் கட்சிகளும் இந்தப் போக்குக்கு அனுசரணையாக நான் சொன்ன எல்லா மட்டங் களிலும் இல்லை. மாநிலத்திலேயானாலும் சரி, மத்தியிலானாலும் சரி, பிற மாநிலங்களிலேயானாலும் சரி, ஆளுங்கட்சியினுடைய நல்லம்சங்களும், போக்கு களும் கூட ஏறத்தாழ எதிர்க்கட்சிகளின் நிலைமையை ஒத்தே இருக்கின்றன. திட்டங்களில் மக்கள், ரொம்பத் தீவிரமாகப் பங்கு எடுத்துக்கொள்ள இயல வில்லையென்று எல்லோரும் சொல்வதற்குக் காரணமும் இது தான். ஆளுங்கட்சி களும் இப்படிப்பட்ட பலவீனம் இருப்பதாகச் சொல்கிறார்கள். எதிர்க் கட்சியிலே இருப்பவர்களும் இந்த பலவீனம் இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் சொல்வதற்குக் காரணம் இது ஒரு ஏகோபித்த அபிப்பிராயம். இதை நம்முடைய திட்டங்களில், நம்முடைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளில் மக்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை அல்லது மக்கள் முழுமையாகப் பங்கெடுத்துக்கொள்ளும்படி அப்படிப்பட்ட உணர்வு தூண்டப்படவில்லை. இந்த பலவீனம் நம்முடைய தேசத்தின் அரசியலில் இருந்து வருகிறது. இதை நான் சொல்கிறபோது, ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி எல்லாவற்றையும் சேர்த்தே சொல் கிறேன். இன்றைக்கு நான் பொதுவாகச் சேர்ந்திருக்கிற அரசியல் கட்சி சில மாநிலங்களில் எதிர்க்கட்சி, சில மாநிலங்களில் ஆளுங்கட்சி. இங்கே இருக்கிற தோழர் இரண்டு பேருடைய நிலையும் ஒன்றே. இந்த மாநிலத்திலே ஆளுங் கட்சியினுடைய நிலையும், இந்திய முழுமையிலும் ஆளுங் கட்சியிலே இருக்கக்





கூடியவர்களின் நிலைமையும், தேசப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஏறத் ஒன்று தான். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து எங்கே நாம் விலகுகிறோமோ, தடம் புரள்கிறோமோ அப்போது நம்முடைய பிரச்சினையை அணுகும் விதத்தில் தவறு ஏற்படுகிறது. எதிரும், புதிருமான மோதல்களை நாம் காண வேண்டி யிருக்கிறது. இப்போது எடுத்துக்கொள்வோம். 'இம்பிளிமெண்டேஷன்' என்று சொல்கிறோம். ஒரு திட்டத்தை அமுல்படுத்துகிறபோது ஆளுங் கட்சி யினரால் அதுபற்றி என்ன கருதப்படுகிறதோ அதை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் ஆதரிக்க வேண்டும் என்பதோடு சரி. அதிலே 'ஆக்டிவாக' பங்கு எடுத்துக்கொள்ளக் கேட்கப்படுவது கிடையாது. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அப்படிப் பங்கு எடுத்துக் கொண்டால், ஒருவேளை அவர்கள் ஆளுங்கட்சியோடு சேர்ந்துவிட்டதாகக் கருதப்படுமோ என்ற ஐயப்பாடு உண்டாகிறது. இந்த மாதிரி நிலைப்பாடு இருப்பதன் காரணமாக, தேசத்தின் பொதுவான பிரச்சினைகளில் பல்வேறு மோதல்கள் தவிர்க்க முடியாததாகின்றன.

இன்றைய தினம் இங்கே பல நண்பர்கள் பேசினார்கள், வெளியிலும் சொன்னார்கள்: நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் ஒரு வரியில்லாத பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று. வேறு சில மாநிலங்களிலும் கூட, குஜராத் போன்ற மாநிலங்களில் கூட வரியில்லாத பட்ஜெட்டைச் சமர்ப்பித் திருக்கிறார்கள். வரி இல்லாமல் இருப்பதனாலேயே அது முற்றிலும் சரியானது என்றோ, வரவேற்கத் தக்கது என்றோ சொல்ல இயலாது. இதை நான் சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே பேசும்போது சொன்னேன். சென்ற ஆண்டு ஒரு சில வரிகள் கொண்டுவரப்பட்டபோது, அதை நான் வரவேற்கிறேன். இந்த வரிகளை இந்த மாநில அரசு போடுவதில் தவறில்லை என்று நான் சொன்னேன். அவ் வரியினை கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னேன். இப்போது என்ன பார்க்கிறோம்! இந்த மாநில அரசினுடைய பட்ஜெட்டிலே வரி இல்லையானாலும், மத்திய பட்ஜெட்டில் வரி இருக்கிறது. ஆகவே பட்ஜெட்டில் எப்படியோ வரிகள் மக்களுக்கு வருகின்றன. இன்றைய தினம் ஒரு பெரிய அடிப்படையான உண்மை என்னவென்றால், பஞ்ச காலத்தில் வரி போடுவது சரியாக இருக்காது என்று சில மாநிலங்கள் டெபிசிட் 'fi[illegible]' பண்ணாமல் விட்டிருக்கிறார்கள். மகாராஷ்டிரா போன்றவை 33 கோடி ரூபாய் துண்டு விழுகிற பட்ஜெட்டில் அதற்கு வழிவகை காட்டாமல் விட்டிருக் கிறார்கள். அடுத்த அறுவடை முடிந்தவுடன் வரி வரும், கொஞ்சம் நிலைமை மாறிய பிறகு வரும். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், சில இடங்களில் சில காரணங்களை உத்தேசித்து, வரி போடாமல் விட்டு விடுவார்கள். இரண்டாவது, சில மாநிலங்களிலே தேர்தல் வருகிறது. தேர்தல் வருகிற ஆண்டில் வரி போட்டால், அது தேர்தலுக்கு அனுசரணையாக இருக்காது என்கிற அபிப்பிராயம் பொதுவாக இருக்கிறது. இதற்கு நீங்கள்

[திரு. எம். ஆறுமுகசாமி] [1973 மார்ச் 7

ரொம்ப தூரம் போக வேண்டியதில்லை. நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களை 2½ கோடி ரூபாய் வரி போடலாமென்று நாம அனுமதித்திருக்கிறோம். சென்ற ஆண்டு சட்டம் போட்டோம். இந்த ஊராட்சி ஒன்றியங்கள் போடத் தயாராக இருக்கின்றனவா? போட்டால் ஊரிலே அதிருப்தி ஏற்படும். அதனாலே அப்படியே விட்டுவிட்டார்கள். மாநில சர்க்கார் பாதி 'கிராண்ட்' தருகிறோம் என்று சொல்கிறோம். நீங்கள் ஒரு 500 ரூபாய் திரட்டுங்கள், நாங்கள் இன்னொரு 500 ரூபாய் தருகிறோம் என்கிறோம். இந்த 500 ரூபாய் வேண்டாம், நான் இந்த ஊரிலே வரி போடத் தயாராயில்லை என்கிறார்கள். எப்படியாவது நீங்களே போடுங்கள் என்று சொல்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இது இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டுமல்ல. பல மாநிலங்களுக்குக் கூடப் பொருந்தும். ஆகையினாலேதான் மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் வரி ஏறிக்கொண்டே போகிறது. மாநிலங்கள் விதிக்க வேண்டியவைகளை யெல்லாம் மத்திய அரசு விதித்து வாங்கிக் கொடுக்கும்படியான ஒரு நிலைமை இருக்கிறது. அதனாலே மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் வரிகள் கூடுதலாகப் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. சில மாநிலங்கள் இந்த அதிகாரத்தை தாங்களாகவே கொடுக்கிறார்கள். இதை நீங்களே போட்டு விடுங்கள் என்று சொல்கிறார்கள். சென்ற ஆண்டு இங்கே காரியம். விவசாய விளைப் பண்டங்களுக்கு, உற்பத்திப் பொருள்களுக்கு வரி விதிக்கிற முறை தோன்றி வரப்பட்டபோது, அதை பல மாநிலங்கள் போடுவதற்குத் தயாராக இல்லை. நான் இப்படிச் சொன்னால், நம்முடைய முதலமைச்சரவர்களின் இந்த வரி விதிப்பை நீங்கள் எதிர்க்காக கிளர்ச்சி செய்யவில்லையா என்றுகூடக் கேட்பார்கள். இது எனக்குத் தெரியும். ஆனால் இந்த வரி விதிப்பை நீக்கி, மற்றக் கோரிக்கைகளையும், குறைகளையும்தான் வலியுறுத்தினேன் என்று என்னைப் பொறுத்தவரையில் தெளிவாக அப்போதே சொல்லியிருக்கிறேன். நான் எதைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சொல்லவில்லை. நான் [illegible] வந்திருக்கிறேன். கூட்டங்களிலே அறிவும் [illegible] பொதுக் [illegible] நான் சட்டமன்றத்தில் [illegible]. இந்த வரி விதிப்பை [illegible]. இது மத்திய அரசு போடச் சொல்ல அரசு போட்டிருக்கிற வரி [illegible] என்றேன். மத்திய அரசு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய வருமானம் "டாப்" [illegible] செய்ய வேண்டுமென்று சொல்கிறது. ஏற்கெனவே [illegible] [illegible] கிராமங்களில் [illegible] பணக்கார வர்க்கத்தின் மீது கொஞ்சம் வரி போடுவதிலே தப்பு இல்லையென்று [illegible] உதுகிறோம். நம்முடைய மாநில [illegible] பஞ்சாபிலும் வளம் பெருகிக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு புதிய பணக்கார



1973 மார்ச் 7] [திரு. எம். ஆறுமுகசாமி]

விவசாய வர்க்கம் உருவாகிக்கொண்டு வருகிறது. அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகளுக்காக அவர்களிடத்திலிருந்து கொஞ்சம் கூடுதலாக தேசத்தின் நலத்திற்காக வரி வாங்குவதிலே தப்பு இல்லை என்பதை எங்கேயும் சொல்லுவேன்; இலனும் தைரியமாகச் சொல்லுவேன். இங்கேயும் சொல்லுவேன், வெளியிலும் சொல்லுவேன். ஏழை மக்கள் மீது வரி கூடுதலாவது தப்பு. ஆனால் தாங்கக்கூடியவர்களுக்கு வரி விதிக்கப்பட வேண்டும். அந்த வரி வீக்கர் செக்ஷன்களைக் கடுமையாகப் பாதிக்கக் கூடாது. அவ்வளவுதான். முற்றிலும் பாதிக்கப்படாமல் இந்தியா போன்ற நாட்டில் வரி போட முடியாது. தியாகத்தைப் பணக்காரர்கள் செய்யவேண்டும். பணக்காரர்களுக்கு அது தியாகமில்லை. கொள்ளையைக் கொஞ்சம் குறைக்கிறது. அவ்வளவு தான். ஏழைகளிடத்திலிருந்து, அவர்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும், வரி வசூலிக்கிறோம். அது நீடிக்க முடியாது. இன்றைய இந்தியப் பொருளாதார நிலை இது. எனவே நீங்கள் பட்ஜெட்டில் வரி விதித்திருந்தாலும் கூட, அதற்காக நான் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டேன். அப்படி வரி விதித்திருந்தாலும் கூட, அது நியாயமான இடத்திலே போடப்பட்டிருக்கிறதா என்று நான் வலியுறுத்திச் சொல்லியிருப்பேன். இந்த பட்ஜெட்டைப்பற்றி பேசுகிறபோது, புதிய வரி இல்லாமலேயே 400 கோடி ரூபாய் நம்முடைய வரவு-செலவு இருக்கிறது என்று சொன்னார்கள். தொகையைப்பற்றிக் கவலை கிடையாது. ஏனென்று சொன்னால், நம்முடைய தேசத்தின் தற்போதைய பொருளாதார நிலைமை "டெபிசிட் பைனான்சிங்கில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரனும், திரு. [illegible]னும் இதை ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். எனவே டெபிசிட் பைனான்சிங் பற்றி இங்குகூட நம்முடைய உறுப்பினர் திரு. அப்துல் வஹாப் அவர்கள் சொன்னார்கள். நாசிக்கிலே இயந்திரம் கடிவாளம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். கடிவாளத்தோடுதான் ஓடிக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் வேகமாக ஓடுகிறது அவ்வளவுதான். கடிவாளத்தின் ஸ்பீடு கொஞ்சம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கடிவாளம் இருக்கிறது. கடிவாளம் இல்லாமல் அடித்தால், கள்ள நோட்டுக்கும், நாசிக் நோட்டுக்கும் வேறுபாடு இருக்காது. எனவே 'டெபிசிட் பைனான்சிங்' என்று இருக்கும்போது, நம்முடைய மாநில பட்ஜெட்டுகளும் அதற்கேற்ப கொஞ்சம் உப்பத் தான் செய்யும். இது பிசுச் சாதாரண பொருளாதாரம். எனவே அன்றைக்கு 150 கோடி ரூபாய் இன்றைக்கு 400 கோடி ரூபாய் என்று பேசுவதில் பொருளில்லை. அன்றைக்கு ஒரு திட்டத்தை 25 கோடியில் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், இன்றைய தினம் 25 கோடியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலாது. இந்த ஆண்டு அதைச் செய்யும்போது, அது 100 கோடிக்கு 'Bloat' ஆகலாம். நிர்வாகத்தில் நடைபெறுகின்ற ஒழுங்கீனங்கள்,

[திரு. எம். ஆறுமுகசாமி] [1973 மார்ச் 7

ரொம்ப தூரம் போக வேண்டியதில்லை. நம்முடைய பஞ்சாயத்து யூனியன்களை 2½ கோடி ரூபாய் வரி போடலாமென்று நாம அனுமதித்திருக்கிறோம். சென்ற ஆண்டு சட்டம் போட்டோம். இந்த பஞ்சாயத்து யூனியன்கள் போடத் தயாராக இருக்கின்றனவா? போட்டால் ஊரிலே அதிருப்தி ஏற்படும். அதனாலே அப்படியே விட்டுவிட்டார்கள். மாநில சர்க்கார் பாதி 'கிராண்ட்' தருகிறோம் என்று சொல்கிறோம். நீங்கள் ஒரு 500 ரூபாய் திரட்டுங்கள், நாங்கள் இன்னொரு 500 ரூபாய் தருகிறோம் என்கிறோம். இந்த 500 ரூபாய் வேண்டாம், நான் இந்த ஊரிலே வரி போடத் தயாராயில்லை என்கிறார்கள். எப்படியாவது நீங்களே போடுங்கள் என்று சொல்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இது இந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கு மட்டுமல்ல. பல மாநிலங்களுக்குக் கூடப் பொருந்தும். ஆகையினாலே நான் மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் வரி ஏறிக்கொண்டே போகிறது. மாநிலங்கள் விதிக்க வேண்டியவைகளையெல்லாம் மத்திய அரசு விதிக்க வேண்டிக் கொடுக்கும்படியான ஒரு நிலைமை இருக்கிறது. அதனாலே மத்திய அரசினுடைய பட்ஜெட்டில் வரிகள் கூடுதலாகப் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. சில மாநிலங்கள் இந்த அதிகாரத்தை தாங்களாகவே கொடுக்கிறார்கள். இதை நீங்களே போட்டு விடுங்கள் என்று சொல்கிறார்கள். சென்ற ஆண்டு இங்கே காரியம், விவசாய வருமானப் பண்டங்களுக்கு, உற்பத்திப் பொருள்களுக்கு வரி விதிக்கிற முறை கொண்டு வரப்பட்டபோது, அதை பல மாநிலங்கள் போடுவதற்குத் தயாராக இல்லை. நான் இப்படிச் சொன்னால், நம்முடைய முதலமைச்சரவர்களின் இந்த வரி விதிப்பை எங்கள் கட்சிக்காரர்கள் எதிர்க்காமல் கிளர்ச்சி செய்யவில்லையா என்றுகூடக் கேட்பார்கள். இது எனக்குத் தெரியும். ஆனால் இந்த வரி விதிப்பை நீக்கி, மற்றக் கோரிக்கைகளையும், குறைகளையும்தான் வைக்கிறேன் என்று என்னுடைய பொறுப்பில் தெளிவாக அப்போதே சொல்லியிருக்கிறேன். நான் இதைக் கண்டித்துக்கொள்வதாகச் சொல்லவில்லை. நான் ஏதோ மறைத்து வைக்கவில்லை. பொதுக் கூட்டங்களிலே அதிலும் சட்டமன்றப் பொதுப்பணிகளிலே இந்த வரி விதிப்பை நான் சட்டமன்றத்தில் வரவேற்கிறேன். வெளியே வந்து எதிர்ப்பது போல் அல்ல. இது மத்திய அரசு போடச் சொல்லி அரசு போட்டிருக்கிற வரி என்றேன். மத்திய அரசு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய வருமானம் "டாப்" பாரில் எதற்காக நாம் வரி போட்டுக்கொண்டு வருகிறோம். எனவே கொஞ்சம் (1) செய்ய வேண்டுமென்று சொல்கிறது. ஏற்கனவே கார்ப்பரேட் செக்டர் வரைகளைக் கிராமங்களில் பரவச்செய்தபோது, புதிதாக வளர்ந்து வருகின்ற பணக்கார வர்க்கத்தின் மீது கொஞ்சம் வரி போடுவதிலே தப்பு இல்லையென்று சொல்கிறோம். நம்முடைய மாநில கிராம வளர்ச்சியை விட மகாராஷ்டிரத்திலும் பஞ்சாபிலும் வளம் பெருகிக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு புதிய பணக்கார



1973 மார்ச் 7] [திரு. எம். ஆறுமுகசாமி]

விவசாய வர்க்கம் உருவாகிக்கொண்டு வருகிறது. அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகளுக்காக அவர்களிடத்திலேயிருந்து கொஞ்சம் கூடுதலாக தேசத்தின் நலத்திற்காக வரி வாங்குவதிலே தப்பு இல்லை என்பதை எங்கேயும் சொல்லுவேன்; இதனையும் தைரியமாகச் சொல்லுவேன். இங்கேயும் சொல்லுவேன், வெளியிலும் சொல்லுவேன். ஏழை மக்கள் மீது வரி கூடுதலாவது தப்பு. ஆனால் தாங்கக்கூடியவர்களுக்கு வரி விதிக்கப்பட வேண்டும். அந்த வரி வீக்கர் செக்ஷன்களைக் கடுமையாகப் பாதிக்கக் கூடாது. அவ்வளவுதான். முற்றிலும் பாதிக்கப்படாமல் இந்தியா போன்ற நாட்டில் வரி போட முடியாது. தியாகத்தைப் பணக்காரர்கள் செய்யவேண்டும். பணக்காரர்களுக்கு அது தியாகமில்லை. கொள்ளையைக் கொஞ்சம் குறைக்கிறது. அவ்வளவு தான். ஏழைகளிடத்திலிருந்து, அவர்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும், வரி வசூலிக்கிறோம். அது நீடிக்க முடியாது. இன்றைய இந்தியப் பொருளாதார நிலை இது. எனவே நீங்கள் பட்ஜெட்டில் வரி விதித்திருந்தாலும் கூட, அதற்காக நான் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டேன். அப்படி வரி விதித்திருந்தாலும் கூட, அது நியாயமான இடத்திலே போடப்பட்டிருக்கிறதா என்று நான் வலியுறுத்திச் சொல்லியிருப்பேன். இந்த பட்ஜெட்டைப்பற்றி பேசுகிறபோது, புதிய வரி இல்லாமலேயே 400 கோடி ரூபாய் நம்முடைய வரவு-செலவு இருக்கிறது என்று சொன்னார்கள். தொகையைப்பற்றிக் கவலை கிடையாது. ஏனென்று சொன்னால், நம்முடைய தேசத்தின் தற்போதைய பொருளாதார நிலைமை "டெபிசிட் பைனான்சிங்கில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரனும், திரு. சுவாமிநாதனும் இதை ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். எனவே டெபிசிட் பைனான்சிங் பற்றி இங்குகூட நம்முடைய உறுப்பினர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள் சொன்னார்கள். நாசிக்கிலே இயந்திரம் கடிவாளம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். கடிவாளத்தோடுதான் ஓடிக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் வேகமாக ஓடுகிறது அவ்வளவுதான். கடிவாளத்தின் ஸ்பீடு கொஞ்சம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. கடிவாளம் இருக்கிறது. பி.ப.
கடிவாளம் இல்லாமல் அடித்தால், கள்ள நோட்டடிக்கும், நாசிக் நோட் 6-20
டிக்கும் வேறுபாடு இருக்காது. எனவே 'டெபிசிட் பைனான்சிங்' என்று இருக்கும்போது, நம்முடைய மாநில பட்ஜெட்டுகளும் அதற்கேற்ப கொஞ்சம் உப்பத் தான் செய்யும். இது பிரச் சாதாரண பொருளாதாரம். எனவே அன்றைக்கு 150 கோடி ரூபாய் இன்றைக்கு 400 கோடி ரூபாய் என்று பேசுவதில் பொருளில்லை. அன்றைக்கு ஒரு திட்டத்தை 25 கோடியில் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், இன்றைய தினம் 25 கோடியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலாது. இந்த ஆண்டு அதைச் செய்யும்போது, அது 100 கோடிக்கு 'bloat' ஆகலாம். நிர்வாகத்தில் நடைபெறுகின்ற ஒழுங்கீனங்கள்,

[திரு. எம். ஆறுமுகசாமி] [1973 மார்ச் 7

வளர்ச்சியைப்பற்றிச் சொல்லவில்லை. இயற்கையாக இருக்கக்கூடிய பண விக்கக் கஷ்டங்களைச் சொல்லுகிறேன். எனவே ரூபாய் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதல்ல பிரச்சினை. அதற்கு பதிலாக என்னென்ன விகிதாசாரப்படி அது விநியோகிக்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த மட்டங்களுக்கு அது போக வேண்டுமோ அது சரியாகப் போகிறதா என்பது தான் பிரச்சினை. இங்கே நான் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னால் சபையில் பேசிய பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். திரு. அய்யணன் அம்பலம் நேற்றைய தினம் பேசுகின்றபோது சொன்னார்கள். நீங்கள் எவ்வளவு ஒதுக்கினாலும், அது ஒத்தக்கடைக்கு 'ரீச்' ஆகமாட்டேனென்கிறது என்று சொன்னார்கள். "அது மதுரை கிழக்குப் பஞ்சாயத்து யூனியனுக்குப் போய்ச் சேர மாட்டேன் என்கிறது. மதுரை நகரத்தில் தங்கி விடுகிறது. வேறு இடங்களில் தங்கி விடுகிறது" என்று சொன்னார்கள். நாம் திட்டமிட்டாலும் இன்றைக்கு அதில் மக்களின் 'ஆக்டிவ் பார்டிஸிபேஷன்' இல்லை. தேர்தலில் வாக்குகளைப் பெறும் தந்திரம், வெற்றி பெறும் தந்திரம் படைத்த ஆளும் கட்சிகள், திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, நான் அங்கம் வகிக்கின்ற இந்திய தேசிய காங்கிரசானாலும் சரி, தேர்தலில் எந்த அளவுக்கு மக்களை தங்களுக்குச் சாதகமாகத் தங்களுக்கு ஆதரவாக திருப்ப முடிகிறதோ அந்த அளவுக்கு தேசத் திட்டத்தில், தேச நலனில் அவர்களை ஈடுபடுத்துவதில் வெற்றி பெறவில்லை. எல்லா மாவட்டங்களிலும் இதனுடைய பலவீனங்களால் ஏற்படும் விளைவுகளை நாம் பார்க்கிறோம். நான் இப்படித்தான் இந்தப் பிரச்சினையைப் பார்க்கிறேன். நான் எதிர்க்கட்சி என்பதற்காக எங்கேயாவது ஓட்டை அகப்படுமா என்று பார்க்கவில்லை. தேசத்தில் இருக்கக்கூடிய பிரதான பிரச்சினைகள் என்ன? இதற்கு ஒரு உதாரணம் வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். பொதுத் துறையைப்பற்றிப் பேசாதவர்களே கிடையாது. பஸ் போக்குவரத்தில் நேஷனலைசேஷனை ஆதரிக்கிறோம்; ஆனால் பஸ் சரியாக ஓடவில்லை. இப்போதெல்லாம் யாரைக் கேட்டாலும் சரி, ஆதரிக்கவில்லை என்று சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் அது ஒரு புதிய மேனியா. பேஷன் என்று கூடச் சொல்லலாம். நேஷனலைசேஷன் அல்லது சோஷலிசம் என்று சொன்னால், அதை நேரடியாக எதிர்ப்பதற்கு ரொம்பப் பேருக்கு இப்போது துணிச்சல் இல்லை. அல்லது அது நாகரீகமோ என்னவோ, நானறியேன். ஏதோ ஒரு பாணியில் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். இப்போது வேலை செய்வதில்லை, சரியாக நடைபெறவில்லை என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஏன் சரியாக நடைபெறவில்லை? இந்தத் திட்டத்தில் 'ஆக்டிவ் பார்டிஸிபேஷன்', தீவிரமாகப் பங்கெடுத்துக்கொள்ளாதது, தங்களது என்று உணர்வதில்லை. சென்னையில் 'லைட்' எரிகிறது. முனிசிபாலிடி தண்ணீர்க் குழாயில் தண்ணீர் வருகிறது. அதிலே போய் மலஜலம், கால் கழுவுகிறான். கேட்டால் இது முனிசி



1973 மார்ச் 7] [திரு. எம். ஆறுமுகசாமி]

பாலிடி பைப் என்றால், நீ யார், கேட்பது என்கிறான். முனிசிபாலிடி சொத்து unclaimed property என்று முடிவுக்கு வந்து விடுகிறார்கள். சர்க்கார் சொத்து யாருக்கும் சொந்தமற்றது என்ற முடிவுக்கு வந்துவிட்டான். தேசம் என்ற உணர்வு இருக்கிறதா? அல்லது 'நேஷனல் கேரக்டர்', தேசிய ஒழுக்கம் இருக்கிறதா? அதனால் ஏற்பட்டிருக்கின்ற விளைவு இது. ஏன் என்று கூறுகிறார்கள்? பஸ் போக்குவரத்து என்று சொன்னால், இதை ஏன் இப்படிச் செய்யக்கூடாது என்று திரு. திருவேங்கடசாமி நாயுடு கேட்க முடியாது. நான் ஒரு முறை ரயிலில் பிரயாணம் செய்தபோது, அந்த ரயிலிலே சில தொழிலாளர்கள் படுத்திருந்தார்கள். அந்த ரயில் தஞ்சைக்கும் திருச்சிக்கும் மட்டும் போகின்ற ரயில் என்று தஞ்சை மாவட்டக்காரர்களுக்குத் தெரியும், நண்பர் திரு. பராங்குசத்திற்கும் தெரியும். அது 'லாக்ஷாப் டிரெயின்'. அந்த ரயிலில் போகின்றவர்கள் தொழிலாளிகள். நான் தொழிலாளி வர்க்கத்தை நேசிக்கின்றவன், தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பிற்கு ரொம்ப மதிப்புக் கொடுக்கின்றவன். அந்த ரயிலில் இருந்த தொழிலாளிகளில் சில பேர் என்ன செய்தார்கள்? ஒரு ஸ்குரு டிரைவரைப் போட்டுக் கழட்டி, அதிலேயிருக்கிற பல்பை எடுத்து உள்ளே போட்டார்கள். ஏன் இதை இப்படிப் போடுகிறார்கள் என்று கேட்டேன். இந்த லைட் எரிந்தால் தூங்க முடியவில்லை என்றார்கள். லைட் எரிந்தால் தூங்க முடியவில்லை என்பதற்காக அவர்கள் பல்பைக் கழட்டி உள்ளே போட்டார்கள். வேறு யாரோ ஒருவன் அதை எடுத்துக்கொண்டு போய் விட்டான். இது எப்படி நடக்கிறது? இது 'பப்ளிக் பிராப்பர்டி'. சர்க்காருடையது, பொதுத் துறையில் சம்பந்தப்பட்டது என்று சொன்னால், அதை யாருமே கேட்க முடியாதது, யாரும் கேட்கக் கூடாது என்ற ஒரு உணர்வு மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. இந்த எண்ணம் பொது ஜனங்களிடையே இருக்கிறது. அவர்கள் வீட்டுப் பிள்ளைகள், அவர்கள் வீட்டைச் சேர்ந்தவர்கள் தான் வேலை செய்பவர்கள். அவர்களிடத்தில் இந்த உணர்வு பிரதிபலிக்கிறது. அதற்குக் காரணமே மேலிருந்து தான் வருகிறது. அடுத்தது நம்முடைய அதிகாரிகள். இந்த அதிகாரிகளெல்லாம் யார்? தேசியமயமாக்கும் கொள்கையை ஆதரிக்காதவர், தேசியமயமாக்கப்பட்ட தொழிலுக்கு ஒரு நிர்வாகி. இவர்கள் நேஷனலைசேஷனைக் கட்டோடு எதிர்ப்பவர்கள். இம்மாதிரி பல இடங்களில் தேசியமயமாக்கப்பட்ட பல தொழிற்சாலைகளில் நான் பார்க்கின்றேன். பாங்குகளைத் தேசியமயமாக்குகிறோம். யாரைப் போடுகிறோம்? லோனல் டைரக்டர்கள் லிஸ்ட் ஒன்று வந்தது. பெயர்களைப் பார்த்தேன். அவர்களெல்லாம் யார்? முன்னால் வங்கியில் இருந்த பெரிய முதலாளிகள். அவர்களே இங்கே வந்துவிட்டார்கள். பஸ் நேஷனலைசேஷன் பண்ணுகிறோம். அதிலே ரொம்ப தொழில் நுணுக்க அறிவை உடையவர்கள் என்று கருதி—நான் குறைவாகச் சொல்லவில்லை—திரு. டி. எஸ். இருவரு

சிறந்த தொழில் நுணுக்கம் தெரிந்த ஒரு பெரிய தொழில் அதிபர் என்பதற்காக, அவரைக் கொண்டுவந்து நம்முடைய பஸ் போக்குவரத்துக்குப் போட்டால், நிச்சயமாகச் சொல்லுகிறேன் அவர் ஒருபைசா தன்னுடைய நிர்வாகத்தில் இருந்தபோது வேண்டுமென்றாலும் ஒழுங்காகக் கவனித்திருப்பார். இது பொதுத் துறை என்று வருகின்றபோது, யாருக்கோ லாபம் போகிறது; இதில் எனக்கு என்ன என்ற எண்ணம் வந்துவிடும். சரியாக நடக்காது. மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும். யார் செய்வது?

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இப்போது டாடா அவர்களை சேர்மனாகப் போட்டு, இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் நல்ல முறையில் லாபம் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அறிவாரா என்று கேட்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: இரண்டொரு விதி விலக்குகள் இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. பெரும்பாலானவற்றைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். நண்பர் அவர்கள் இந்தியன் ஏர்லைன்ஸை உதாரணமாகச் சொன்னார்கள். இருக்கிறது. பல நிர்வாகங்களை உதாரணத்திற்கு நான் சொல்லலாம். நான் எதற்காகச் சொல்லுகிறேன்? இவைகளில் யாரை ஈடுபடுத்த வேண்டும்? ஜீவகாருண்ய சபைக்கு கசாப்புக் கடைக்காரரைத் தலைவராகப் போட்டால் என்னவாகும்? அது போல தேசியமயமாக்கப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களிலெல்லாம், பொதுத் துறையையும், தேசியமயமாக்கும் கொள்கையையும் எதிர்ப்பவர்கள், பிடிக்காதவர்கள், இதை உடைக்க வேண்டுமென்று கருதுபவர்கள். இவர்களைப் போட்டு வைத்தால், அது என்னவாகும்? நிச்சயமாக பல இடங்களிலே கோளாறுகள் நடந்திருக்கின்றன. நிறைய உதாரணம் சொல்ல முடியும், ஆனால் சொல்ல விரும்பவில்லை. இந்த மாநிலத்திலேயே பல உதாரணங்கள் நான் சொல்ல இயலும். தனி நபர்களை நான் குறிக்க வேண்டியிருக்கும். அந்தக் காரணத்திற்காக நான் அந்த உதாரணங்களைச் சொல்லவில்லை. எனவே இந்த மாநிலத்தில் ஆளும் கட்சியிலிருப்பவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்: "நீங்கள் என்ன திட்டங்களைச் சொன்னாலும், அந்தத் திட்டங்களிலே இந்த தேசத்து மக்களை இழுத்துச் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள்". அந்த முயற்சி குறைவாகயிருக்கிறது. அதனால் தான் இது ஒரு கட்சி நடவடிக்கையாக இருக்கிறது. குடியிருப்பு மனைப் பட்டா விழா என்றால் அது ஒரு கட்சி விழாவாகக் கருதப்படுகிறது. ஒரு தேசியமயமாக்கும் திட்டமென்றால், அது ஒரு கட்சி விழாவாகக் கருதப்படுகிறது அல்லது கருதும்படி செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தஞ்சை மாவட்டத்தில் குடியிருப்பு மனைகள் வழங்கிய விழாக்கள் மூன்று இடங்களில் நடைபெற்றன. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் மாத்திரம் தான் கலந்துகொண்டார்களா அல்லது ஆளும் கட்சிக்காரர்கள் தான் கலந்துகொண்டார்களா? இது கட்சி விழாவாக நடைபெறுகிறது என்று எந்த அடிப்படையில் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதை தயவு செய்து விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: திருவையாற்றில் ஒரு விழா நடந்தது. முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். நான் திருவையாற்றுக்கு 12 கல் தொலைவில் உள்ளவன். சொல்லப்போனால் திருவையாறு தொகுதியைச் சேர்ந்தவன். இந்தக் குடியிருப்பு மனைக்கட்டு விழா நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றியெல்லாம் அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவரவர்கள் நான் உட்கார்ந்த இடத்திலே பேசிக்கொண்டிருந்தார்கள். நான் குடியிருப்பு மனை வேண்டும் என்பதற்காக—மன்னை அவர்கள் இங்கே இல்லை—சிறை சென்றவன். குடியிருப்பு மனை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்பதற்காக, சட்ட வேண்டும் என்பதற்காக 1948-ம் ஆண்டிலே, தலைவரவர்களே, நான் சிறைக்குச் சென்றவன். அதுமட்டுமல்ல. என்னுடைய சொந்த இடத்திலே குடியிருப்பவர்கள் ஹரிஜனங்கள். அவர்களை காலி செய்ய வேண்டாம் என்று நான் பேசினேன் என்பதற்காக என்னைப் பரிகாசம் செய்தார்கள். நான் அவர்களை காலி செய்ய விட்டுக் கொடுத்து விட்டேன். வழக்காடவில்லை. அவர்கள் சக்தி உள்ளவர்கள். என்னைக் காட்டிலும் பணக்காரர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருவையாறு விழாவுக்கு நான் அழைக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்தால் இந்த மூன்று இடங்களிலும் நடைபெற்ற விழாக்கள் கட்சி விழாக்கள் என்று கருதிவிட முடியாது. திருவையாறு விழாவுக்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் அழைக்கப்படாவிட்டால், அதுபற்றி நான் வருந்துகிறேன். அதுபற்றி நான் விசாரிக்கிறேன். ஆனால் அவர் அழைக்கப்படாத காரணத்தாலே, அது கட்சி விழாவாக நடைபெற்றதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் திருவையாற்றிலே நடைபெற்ற விழாவிலே கூட வேறு பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். பிறகு திருத்துறைப்பூண்டியிலே நடைபெற்ற விழாவிலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மணலி கந்தசாமி அவர்களும், திரு. சுப்பையா அவர்களும், திரு. காத்தமுத்து, எம்.பி., அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். பிறகு கும்பகோணத்திலே நடைபெற்ற குடியிருப்பு

மணப் பட்டா விழாவில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், அந்த ஊர் நகராட்சித் தலைவர்களும், மற்றவர்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த இடத்திலும் வெறும் கட்சி விழாவாக அது நடைபெறவில்லை.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, நான் விழா என்று ஒன்றைச் சொன்னதை முதலமைச்சரவர்கள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அதிலே நீங்கள் சொல்லுவது சரியில்லையென்று மெய்ப்பிப்பதைப் போல உதாரணங்களைச் சொன்னார்கள். நான் சொன்னது . . . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** கட்சி விழா என்று குறிப்பிட்டீர்களே! அதனாலே சொன்னார்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** இது ஒரு கட்சியின் பிரச்சாரத்திற்காக, ஒரு கட்சியின் நலனுக்காகச் செய்கின்ற ஒரு காரியம் என்பது போன்ற எண்ணத்தை எப்படியோ உண்டாக்குகிறோம். திட்டம் போட்டுச் செய்கின்றார்கள் என்று நான் சொல்லத் தயாராயில்லை. நான் உள் நோக்கம் கற்பிப்பது கிடையாது. இப்படிச் சொன்னால் யாரும் எதையும் செய்யவே முடியாது. நீங்கள் செய்கிற ஒவ்வொன்றுக்கும் நான் உள்நோக்கம் சொன்னால் நான் செய்கிற ஒவ்வொன்றுக்கும் நீங்கள் ஒன்று சொல்வீர்கள். ஊரிலே இருக்கிறவன். யாரையும் நம்பமாட்டான். எனவே எதற்கும் நான் உள்நோக்கம் கற்பிப்பதில்லை. தேசியமயமாக்குதல் பஸ் முதலாளிகளுக்கு எதிரானது, உங்களுடைய கொள்கையில் வழி தப்பு என்று சொல்லுவேன். பஸ் முதலாளிகளுக்கு தனிப்பட்ட வகையில் எதிரான நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் ஏற்கமாட்டேன். இதுபோன்ற சம்பவம் ஏதோ தனிப்பட்ட ஒரு கட்சியின் சம்பவம் என்று கருதும்படி அமைந்து விடுகிறது. தங்களுடைய நிர்வாகங்களிலே இருக்கிறவர்கள் அல்லது அந்த அமைப்புகள் இயங்குகிறபோது, அவர்களுடைய நடவடிக்கைகள் இப்படிப்பட்ட ஒரு தோற்றத்தை மக்களிடத்திலே உண்டாக்கிவிடக் கூடாது என்று எச்சரிப்பதற்காகவே நான் இதைக் கூறினேன்.

அடுத்தபடியாக, தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையிலே பல வரவேற்கத் தக்க காரியங்கள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகம், 10,000 வீடுகளை கட்டிப் போட்டாலும், இது சமுத்திரத்திலே பெருங்காயம் கரைக்கிற மாதிரி இருந்தாலும், தமிழ் நாட்டில் இன்றைக்கு இதற்கு மேல் கூடுதலான வீடுகள் தேவையாக இருந்தாலும் கூட, இது ஒரு முயற்சி. இனி வரப்போகிற காலங்களில் வீடுகள் அதிகப்படுத்தப்படும் என்கிற முறையில் நான் இதை வரவேற்கிறேன். அதே போல தனியார் மின் நிறுவனங்களை



நாட்டுடைமையாக்குவதை, இப்போது போன்ற ஒரு நெருக்கடி மிக்க நேரத்தில் வருங்காலத்தில் உஷாராக இருப்பதற்கு உதவுபடியாக இருக்குமென்ற காரணத்தாலும் விநியோகத்தில் மக்களுக்குச் சங்கடங்கள் இல்லாமலிருக்கும் என்ற வகையிலும், நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம்பற்றி குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் ஒன்று தோற்றுவிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதி உதவிக் கழகத்திற்கு நிலம் எவ்வளவு கிடைக்கப் போகிறது? இன்றைய தினம் குத்தகை ரிஜிஸ்ட்ரார், பதிவாளர் என்று ஒருவரைப் போட்டு நாம் குத்தகை பதிவு செய்யச் சொல்லி இருக்கிறோம். ஆனால் பெரும்பாலான இடங்களிலே இது மெய்யாக பதிவு செய்யப்படவில்லை. பல இடங்களிலே மோசடி வேலைகள் நடந்திருக்கின்றன. ஏழை விவசாயிகள் வஞ்சிக்கப்பட்டு குத்தகைதாரர்கள் என்ற தகுதியில்லாது விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஊர்களிலே இப்படி நடந்திருப்பதை நான் சொல்ல முடியும். என் பகுதியிலே சொல்ல முடியும். காரணம் வருவாய்த் துறை அமைச்சர் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருந்தபோது சொன்னேன். வெள்ளைக்காரனாலே நம்முடைய நிர்வாக அமைப்பு கணக்குப் பிள்ளை தலையிலே அஸ்திவாரத்திலே போட்டுக் கட்டி விட்டார்கள். கணக்குப் பிள்ளை பரம்பரையாக 50 வருஷமாக என்னுடைய அனுபவத்திலே இருக்கிற 12 ஏக்கர் நிலம்—பத்திரம் இல்லாத நிலம் இல்லை. 'சேல் டீட்' இருக்கிற நிலம்—எங்கேயிருக்கிறது என்று என்னிடத்திலே கேட்கிறார், நான் உரத்திற்கு கார்டு கேட்கப் போனால், என்னிடத்திலே கேட்கிறார். நான் சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்ற அந்தஸ்திற்காகச் சொல்லவில்லை. புரிந்தவன், விஷயம் தெரிந்தவன், இதையெல்லாம் ஓரளவுக்குத் தெரிந்தவன். நிர்வாகம் புரிந்தவன் என்கிற கருத்திலே நான் சொல்லுகிறேன். அந்த அதிகார தோரணையில் நான் சொல்லவில்லை. என்னிடத்திலேயே இல்லையென்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு நான் இ.சி. எடுத்து, என்னிடத்திலே பத்திரம் காணாமல் போய் விட்டதால் வாங்கி வரவேண்டியிருக்கிறது. மிகச் சாதாரண ஏழைகள், எந்தவிதமான சொத்தும் இல்லாதவர்கள். நியாயமாகச் சாகுபடி செய்யக் கூடியவர்கள் கூட குத்தகை பதிவு பண்ணியிருக்கிறார்களா? பல ஊழல்கள் பல இடங்களிலே நடந்திருக்கின்றன. பல குத்தகைதாரர்கள் ஏற்கெனவே வெளியேற்றப்பட்டிருப்பார்கள். அவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக, பெரும்பாலான நிலங்கள் நமக்குக் கிடைக்க வேண்டும். இதிலே மடம், கோயில் நிலங்களை எடுத்து அவைகளுக்கும் இந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டால், அவர்களுக்குப் பணம் கிடைத்து விடுகிறது. இப்போது நஷ்ட ஈடு இல்லாமல் எடுக்கிற பேச்சையே எந்தக் கட்சியும் சொல்ல

[திரு. எம். ஆறுமுகசாமி] [1973 மார்ச் 7

வில்லை. ரொம்ப 'ரெவல்யூஷனரிஸ்' என்று சொல்லுகிறவர்கள் கூட இந்த
நஷ்ட ஈட்டை எதிர்ப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகையினாலே 'எய்ட்'
கொடுக்கிறது கொடுக்கிறோம், பணமாகக் கொடுத்து அவைகளையும் எடுத்து,
இந்தச் சட்டம் வருகிற நேரத்தில் ஒரு 3 லட்சம், 4 லட்சம் ஏக்கர் விநியோகம்
பண்ணக் கிடைக்க வேண்டும். அப்படிச் செய்கிறபோது மெய்யாகவே நான்
போன ஆளுநர் உரையிலே சொன்னதைப் போல 'ரூரல் அன்எம்ப்ளாய்மென்ட்',
கிராமத்திலே இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளிகளுடைய வேலையில்லாப்
பிரச்சினை ஒரு கணிசமான அளவு குறையும். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்
கிடைக்கும். அதனாலே ஒரு பெரிய பிரச்சினை கிராமப் புறத்திலே தீரும்.
நிதிநிலை அறிக்கை. இதிலே 'வேக்' ஆக இருக்கிறது. சட்டம், வருகிற
போது தெளிவாக வருமென்று நான் கருதுகிறேன். அப்போது இவைகளை
யெல்லாம் கருத்தில் கொண்டு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, மால்கோ அலுமினியம் பாக்டரியை தேச உடைமையாக்
குவதை நான் வரவேற்கிறேன். அதற்கு என்ன நோக்கம் சொன்னாலும் எனக்கு
அதைப்பற்றிக் கவலையில்லை. எடுப்பதை வரவேற்கிறேன். 1968 என்று
நினைக்கிறேன். இங்கே அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள்.
அந்த சமயத்திலே மேட்டூரிலே 'தொழில் தகராறு ஒன்று நடந்தபோது, நான்
அவரை அவருடைய இல்லத்திலே சந்தித்தபோது சொன்னார்கள். தொழிற்
சங்கத் தலைவர்கள் என்னைப் போய் சந்திக்கும்படி சொன்னார்கள். அவர்கள்
சந்திக்க இயலாத ஒரு சூழ்நிலைமை. அந்த நிலைமையில் சந்தித்தபோது,
அவர்கள் சொன்னார்கள். "கொஞ்சம் பொறுமையாக இருங்கள். அந்தத்
தொழிற்சாலையை அரசே மேற்கொள்ளும்" என்று. பொதுப்பணித் துறை
அமைச்சருக்குக் கூட அந்தக் கருத்தைச் சொன்னது தெரியுமென்று நான் கருது
கிறேன். அவர்கள் இங்கேயில்லை. எனவே அதை ஒரு 3, 4 ஆண்டுகளுக்குப்
பிறகு செய்கிறார்கள். அந்த எண்ணம் உங்களுக்கு ஏற்கெனவே உதயமாகி
யிருக்க வேண்டும். எனவேதான் நான் ஒன்றும் சொல்லவில்லை. மத்திய
அரசிடத்திலே முன்கூட்டியே சொல்லிவிட்டு இதை திடீரென்று ஒரு
'ஆர்டினன்ஸ்' மூலமாகவே எடுத்திருந்தால் மெத்தவும் நன்றாக இருந்திருக்கும்
என்பது என்னுடைய கருத்து. ஏனென்று சொன்னால் கோல், நிலக்கரிச்
சுரங்கங்களை, சுடும் நிலக்கரி, 'கோக்கிங் கோல்' மைன்களை எடுத்தபோது,
இரண்டு மூன்று வார அவகாசம் கொடுத்ததால் தெரிந்து போய் விட்ட காரண
மாக, பல இடங்களிலே—நம்முடைய எஃகு, உருக்கு அமைச்சர், நம்முடைய
தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்தானே, அந்த நிர்வாகப் பொறுப்பிலே இருப்பவர்—
அந்த முதலாளிகள், சிறுசிறு முதலாளிகள். அவைகளிலிருந்த ஜீப்புகள்,
வாகனங்கள், இவைகளையெல்லாம் அப்புறப்படுத்தி விட்டார்களாம். எடுத்த



1973 மார்ச் 7] [திரு. எம். ஆறுமுகசாமி]

போது வெறும் படுகுழியைத் தவிர வேறு ஒன்றுமில்லையாம். தொழிலாளி களுடைய 'பிராவிடண்ட் பண்ட்'ஐககூடத் தூக்கிக் கொண்டுபோய் விட்டார்களாம். இப்போது 'லையபிலிட்டீசே' ரொமப அதிகமாக இருக்கிறது. அதை நாங்கள் எப்படியும் அவர்களுக்கு உள்ள சொத்துக்களின் மீது 'அட்டாச' பண்ணி எடுப்போமென்று இப்போது சொல்லுகிறார்கள். இப்படி பெரும் மூலதனம் உள்ள அந்தத் தொழிற்சாலையை ரொம்ப சாதுர்யமாக எடுத்திருக்க வேண்டும். இப்படிச் செய்வதனால், வாதப் பிரதிவாதங்களுக்கு ஒரு அவகாசம கிடைக்கிறது. பத்திரிக்கைகளிலே இதை எடுத்தது தப்பு, அல்லது எடுத்தது நியாயம் என்று பெரிய தர்க்கங்களை ஏற்படுத்திவிடக் கூடிய நிலைமையை உண்டாக்கக் கூடாதென்று நான் கருதுகிறேன.

அடுத்தபடியாக, நான் இன்னொன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே எல்லோரும் விலைவாசி ஏற்றத்தைப்பற்றிச் சொன்னாகள. விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசும் பொறுப்பு, மத்திய அரசும் பொறுப்பு. இந்த இரண்டு சர்க்காருக்கும் பொறுப்பிருக்கிறது. சும்மா பேசிக்கொள்வதில் அர்த்தம் ஒன்றுமில்லை. இரண்டு சர்க்காருக்கும் பொறுப்பிருக்கிறது. இன்னும சொல்லப் போனால் முக்கால் பாகம் எங்களுக்கு இருக்கிறது. கால் பாகம் மாநில அரசுக்கு இருக்கிறது. அதிலே நாங்கள் பின் வாங்கிப் போகத் தயாராக இல்லை. அதுவும் நாடு முழுமையும் ஆளுகிற இடத்திலே நான் இருந்து கொண்டு ஒரு மாநிலத்திலே மட்டும் பொறுப்பை இன்னொரு சர்க்கார் மீது சுமத்திவிடுவது கோழைத்தனம் அல்லது நிலைமையைச் சமாளிக்க முடியாமல் ஓடுகின்ற தன்மை என்று கருதுவேன். அதற்கு நாஙகள் தயாராக இல்லை. உண்மையைச் சொல்லுவேன். கடந்த சில ஆண்டுகளாக பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். அதையெல்லாம் இப்போது பேசினால், பெரிய பொருளாதாரப் பிரச்சினையாகப் பேசியாக வேணடும். பொருளாதாரத்திலே பல மாற்றங்கள் இருக்கின்றன. நாம் படித்த காலத்திய சித்தாந்தங்கள் எல்லாம் ஒவ்வாது என்கிறான். 'சப்ளை அண்டு டிமாண்ட்' என்றால், அது 'அவுட் மோடட்' என்கிறான். இப்போது அந்தமாதிரி 'தியரி', இப்போது அதுபோல் பல சித்தாந்தங்கள் காலாவதி போய்க்கொண்டிருக்கின்றன. ஆகையால் அவை களைப்பற்றியெல்லாம். 'spiralling of prices' இந்த விலையேற்றத்தைப் பற்றி நான் சொல்லப் போவதில்லை. கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கை உணவு தானிய விநியோகத்தை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதுதான். இதைச் சென்ற தடவை குறிப்பிட்டேன். மத்திய அரசு இதை நாடு பூராவும் செய்ய வேண்டுமென்று சொல்கிறேன். நம்முடைய உணவு அமைச்சர் 'மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ்'-ஐ எல்லாம் வாங்கப் போகிறோம் என்று சொன்னார். நான் சொல்

கிறேன், அவ்வளவையும் வாங்கினாலும் மோசமாகி விடப் போவதில்லை. அதிலே அது இருக்கிறதே, இது இருக்கிறதே, மூன்று லட்சம் பேருக்கு வேலை போய்விடுமே என்று சொல்கிறார்கள். பிறகு நல்ல அரிசி கிடைக்காது என்று சொல்வார்கள். இப்படி ஒவ்வொரு காரியத்திலும் ஒரு விதமான குற்றச்சாட்டு. பிறகு 'சூப்பர் பைன் வெரைட்டி' கிடைக்காது என்று சொல்வார்கள். 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்' எல்லோருக்கும் அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். தமிழ் நாட்டுக்கு ஏற்ற வகையில் உணவு தானிய வர்த்தகம் என்று போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டுக்கு ஏற்ற வகையில் என்று ஒரு அடைமொழியைச் சேர்த்திருக்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. உணவு வாணிபத்தை அரசு ஏற்றுக்கொள்வது என்று சொல்லியிருக்கலாம். அதை விட்டுவிட்டு, தமிழ் நாட்டுக்கு ஏற்ற வகையில் என்று சொல்லியிருப்பது விளங்கக்கூடியதாக இல்லை. எப்படியிருந்தாலும், உணவு தானியத்தோடு பருப்பு, மிளகாய், உணவு சம்பந்தமான அத்தியாவசியப் பண்டங்கள்——மிளகாய் பருப்பு போட்டுத்தானே குழம்பு வைக்கிறோம்——எல்லாவற்றிலும் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் வாணிபம் செய்தால் பெருமளவுக்கு விலைவாசி மற்றப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். அந்தந்த மாநிலங்களில் 'எஸென்ஷியல் கமாடிட்டீஸ்'-ல் வாணிபம் மேற்கொள்கின்றபோது, விலைவாசிகளை நாம் கொஞ்சம் கட்டுப்படுத்த முடியும். அதன் மூலமாக குறைந்தபட்சம் 'வேஜ் ஃப்ரீஸ்' இல்லாவிட்டாலும், அதைத் தடுக்கலாம், கோரிக்கைகள், கிளர்ச்சிகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்று கருதுகிறேன். அதைக் கொஞ்சம் ஸ்பஷ்டமாகச் சொல்லி நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, இன்னும் பத்து நிமிஷம் பேச அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பின்னால் பேச யாருமில்லை.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** சரி, யாருமில்லை, பேசுங்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, மத்திய மாநில உறவுகள்பற்றி நிரம்பச் சொல்லப்படுகிறது. மத்திய மாநில உறவில் இவ்வளவு பஞ்ச நிவாரணம் தர வேண்டும், இவ்வளவு வெள்ள நிவாரணம் தரவேண்டும், மான்யம் அதிகமாகத் தரவேண்டுமென்று நிதிக் கமிஷனிடம் கோருவது, கேட்பது ஒருவகை. அப்படிக் கேட்பதில் யாருக்கும் விவகாரம் இருக்க முடியாது. அதுவும் தமிழ்நாட்டு நலனில் அக்கறை கொண்டுள்ள யாரும் கேட்கின்ற விஷயம். அப்படிக் கேட்பதிலே தகராறு இருக்காது என்று கருதுகிறேன். ஆனால் இப்படிக் கேட்பதோடு நிறுத்தாமல், மத்திய மாநில



உறவுக்கு அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டுமென்று சில காரியங்களைச் சொல்கின்றபோது, பலருக்கு ஐயம் ஏற்படுகின்றது. என்ன காரணமென்று சொன்னால், நாம் எல்லாவற்றிற்கும் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தினாலொழிய இயலாது என்று சொல்வதுபோல் தொனிக்கிறது. அப்படிச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் பல காரியங்களை நீங்களே செய்திருக்கிறீர்கள். இன்றைய சட்ட அமைப்பிற்கு உட்பட்டே அவைகளைச் செய்ய முடிந்திருக்கிறது. எனவே எதையும் இன்றைய நிலையிலிருக்கின்ற அரசியலமைப்பு சட்டத்தின்கீழ் நீங்கள் செய்ய முடியாது என்று சொல்ல முடியாது. அதற்குப் பதிலாக வேறு சில மாற்றங்கள் தேவையென்று சொன்னால், எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றவர்களோடு கலந்து பேசி அதற்கான முயற்சிகளை விட்டு விடாது மேற்கொள்ளலாம். பல நேரங்களில் சூழ்நிலை சரியாக இல்லாமலிருக்கிறது. அதன் காரணத்தால் சில நேரங்களில் யோசிக்க வேண்டும். 'பாலிடிக்ஸ் ஈஸ் தி ஆர்ட் ஆப் பாஸிபிலிடி' என்று பிரெஞ்சு கம்யூனிஸ்ட் தலைவர் மாரிஸ்தோரே சொன்னார். ஒரு கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவர் இதைச் சொல்லியிருந்தால், ஆச்சரியப் படுவதற்கில்லை. அதற்கு என்ன பொருள்? கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரே 'பாலிடிக்ஸ் ஈஸ் தி ஆர்ட் ஆப் பாஸிபிலிடி.' என்று சொன்னார் என்றால், இன்றைய தினம் இருக்கின்ற சூழ்நிலையை நிதானித்து, ஏற்ற தருணத்தில் உங்கள் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும். அவைகளை நீங்கள் தருண தருணமில்லாது முன் வைக்கின்றபோது நீங்கள் பிரிவினைக்காகவே கிளர்ச்சியைத் துவக்குவதற்கு இதிலே ஒரு அடிப்படை போடுகின்றீர்கள் என்று பிரசாரம் செய்வதற்கு எங்களுக்கு உதவியாகிறது. தனியாக வைத்து, தனியாக நாங்கள் கோரிக்கை என்னவென்று எடுத்துச் சொல்ல வேண்டும். இவைகளில் நம்முடைய முயற்சிகள் பலன் தரவில்லை, முயற்சிகளினால் காரியங்கள் செய்ய முடியவில்லை என்று சொல்லி, அவைகளைச் செய்வதற்காக இது தேவை என்று சொல்லி, பல மாநிலக்காரர்களைக் கூட்ட முடியும். நீங்கள் ஆளும் கட்சி என்பது ஒரு பக்கம் இருந்தாலும், நீங்கள் பல நண்பர்களையும் பெற முடியும். ஏனென்றால் இதில் ஒன்று கேட்கிறோம், மாநிலங்களுக்கு திட்டங்கள் கூடுதலாகக் கேட்கின்ற நேரத்தில், நிறைச் செய்ய வேண்டிய நிலையில் பங்கு கூடுதலாகத் தேவை என்ற உணர்வு இயல்பாகவே வந்துகொண்டிருக்கிறது. ஆனால் இது எல்லாவற்றையும் சேர்த்து பலவீனத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது. இப்பொழுது உதாரணத்திற்குச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொன்னார்கள். நான் இந்த அவையில் சொன்னேன்: மத்திய அரசு பொறுப்பென்று நீங்கள் சொல்வீர்கள், மாநில அரசு பொறுப்பென்று மற்றவர்கள் சொல்வார்கள், இருக்கக்கூடிய நிலைமையை யாரும் கவனிக்கவில்லை என்று ஊர் மக்கள் நினைப்பார்கள். இரண்டு பேருமாகச் சேர்ந்து

முயற்சித்து, பிரச்சினையைச் சமாளிப்பது எப்படி என்று நீங்கள் ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று சொன்னேன். அதன் பிறகு சில நடவடிக்கைகளைப் பார்த்தேன். நான் மறுக்கவில்லை. அந்த நடவடிக்கைகள் எந்த விதமான பலனளித்தது என்று நான் சொல்லத் தயாராகவில்லை. அவர்களிடமிருந்து வரவேண்டிய விஷயம் அது. நான் எதற்கு அதைச் சொல்கிறேன் என்றால், இந்தப் பிரச்சினைகளெல்லாம் ......

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மின் வெட்டுக்கு மத்திய அரசுதான் பொறுப்பென்று குற்றஞ்சாட்டுவதற்கு முனையவில்லை. மின் வெட்டு வந்ததற்கு மாநில அரசுதான முழுப் பொறுப்பென்கின்ற குற்றச்சாட்டு வேறு எதிர்க் கட்சிகளிலிருந்து வந்தாலும் பரவாயில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியிலிருந்து வந்தபோது, நாங்கள் நிலையை விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படி நிலையை விளக்கி விவரிக்கும்போது, மத்திய அரசுதான் பொறுப்பு என்று குற்றம் சாட்டுகின்ற நிலையில்லாமல், இருக்கின்ற சூழ்நிலையில் எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்றாமல் நிதானித்துவிட்டது என்று எடுத்துச் சொன்னோம். அதை நாங்கள் குற்றமாகச் சொல்லவில்லை. பத்திரிகைகள் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் வாக்குவாதம் நடைபெறுவதாகச் சித்தரிக்கலாமேயல்லாமல் வேறல்ல.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, நான் இன்னும் கூடச் சொல்வேன். நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தில் 263-ஆவது உறுப்பு, 21 ஆண்டுகளாக அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. ஏற்ற தருணம் இன்னும் வரவில்லையென்று கருதுகிறீர்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆர்டிகள் 263-படி இண்டர் ஸ்டேட் கவுன்ஸிலை இந்தச் சமயத்திலாவது ஜனாதிபதி அவர்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களின் வாயிலாக மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஆர்டிகிள் 263-ன் படி இண்டர் ஸ்டேட் கவுன்சில் ஏற்பட்டால், பல்வேறான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று, தலைவரவர்களே, நான் உறுதியாக நம்புகிறேன். அந்த முயற்சியை நாம் சிறிதளவேனும் எடுக்காத காரணத்தால்தான், இப்பொழுது தமிழக அரசியல் அரங்கங்களில் கோளாறுகள் வெடிக்கின்றன என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வெட்டு. இந்த மின்சாரப் பஞ்சம் போக்கப்படுவதற்கு, ரீஜனல் பேஸிஸில் முதலமைச்சர்கள் மகாநாடு கூட்டவேண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட அதற்குப் பேசியிருந்தார்கள். தென் பிராந்தியத்திலிருக்கும் முதலமைச்சர்கள் கூடிப் பேசி அதிக உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம். ஒரு மாநிலத்தார், அரிசி, சிமெண்ட் கொடுத்



தால் நாங்கள் மின்சாரம் தருகிறோம் என்று சொல்கிறார்கள். இன்னொரு மாநிலம் இன்னொன்றைச் சொல்கிறது. இந்த மாநில முதலமைச்சர்கள் உடனடியாகக் கூடி வரவிருக்கும் மாதங்களில் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்க ஒரு ரேஷனிங், ஒரு கட்டுப்பாடு, யாருக்கு எவ்வளவு தேவை, இண்டஸ்டிரி என்று சொன்னால் எவ்வளவு தேவையும் மற்றவற்றிற்கு எவ்வளவு என்று நாம் எல்லோரும் சேர்ந்து பேசி நிர்மாணித்துக்கொள்ள வேண்டும். இந்த ஊரிலே இண்டஸ்டிரி ஓடாதபோது ஆந்திராவில் தெருவில் எரிந்து கொண்டிருப்பதும், இன்னொரு இடத்தில் வெறுமனே உபயோகமில்லாமலிருப்பதுமான நிலை இருந்தால், என்ன பிரயோஜனம்? ஆகையினால் இந்த நான்கு மாநிலங்களும் சேர்ந்து ஒரு ரீஜனல், ஸோனல் கான்பரன்ஸ் போட்டு, நமக்குள்ளே, ஒரு ரேஷனிங் முறையை அமலாக்கி, இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுக் கழகம் உருவாக்குவதென்று ஆளுநர் அவர்கள் தனது உரையில் கூறியிருந்தார்கள். அதற்கு இது உதவியாக இருக்கக்கூடுமென்று கருதுகிறேன். எனவே முதலமைச்சர்கள் கூடி இப்படிப்பட்ட ஒரு ரேஷனிங்கைக் கொண்டு வருவதற்கு நமது முதல்வர் முயற்சிக்கலாம், காலம் தாழ்ந்துவிடவில்லை என்று நான் கருதுகிறேன். பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி நான் பேசுவதற்கு விரும்பினாலும், இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

**பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.**

### 6. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**Nil.**

### *B. Reports, Notifications and other Papers.*

30. Answer to Unstarred Questions Nos. 23 to 26.

1973 மார்ச் 7]

## இணைப்பு I

[274 ஆம் பக்கத்தில் 192 ஆம் எண்ணுடன் குறிப்பிட்ட வினாவின் விடையைக் காண்க]

(அ) ஆம்.

(இ) இது தொடர்பான தொழிலாளர் நலத்துறையில் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் நாளன்று வெளியான 225-ஆம் எண் அரசாணையின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு

தொழிலாளர் நலத்துறையில் 15—2—1972-ஆம் நாளன்று வெளியிடப் பட்ட 225-ஆம் எண் அரசாணையின் நகல்.

பார்வை : வேலைவாய்ப்பு—பயிற்சித் துறை இயக்குநரின் கடிதம் கேட்புக் குறிப்பு எண் Z/56216/71, நாள் 5—6—71.

**ஆணை**

தேசிய வேலை வாய்ப்புப் பணி நடைமுறை விதிகள், 1-வது தொகுதியின் இணைப்பு (17), இனம் 36-ல் அடங்கியுள்ள இந்திய அரசு முடிவின்படி, மத்திய அரசின்கீழ் நியமிக்கப்படுவதற்காக, வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலம் ஆட்சேர்ப்பதற்குரிய நடைமுறைகளைத் தளர்த்துவதற்குத் தேவைப்படும் நேர்வுகள் பொதுவாக கீழ்க்காணும் இரண்டு வகைப்படும். அவையாவன :

(அ) தமது குடும்பத்தினரை வறுமையில் வாடும் சூழலில் விட்டு விட்டு, பணியில் இருக்கும்பொழுது இறந்துவிடுகின்ற அரசுப் பணியாளர் ஒருவரின் மகன்/மகள் நெருங்கிய உறவினரை வேலை வாய்ப்பு நிறுவனத்துக்குத் தெரிவிக் காமலேயே நியமிப்பதற்கான செயற்குறிப்பு.

(ஆ) தற்காலிகப் பணியாளர்களாக இருந்து அந்த வகையில் அவர்கட்கு அனுமதிக்கப்படும் சம்பளமில்லா உயர்ந்த அளவு விடுப்பு நாட்கள் அனைத்தும் கழிந்த பின்னர் பணிக்கு மீண்டும் வரத் தவறிய காரணத்தால் பணியிலிருந்து அற்றுப்போனவர்களாகி விட்டவர்களை வேலை வாய்ப்பு நிறுவனத்திற்குத் தெரிவிக்காமலேயே நியமிப்பதற்கான செயற்குறிப்புகள்.

மத்திய அரசின், மேற்சொன்ன இரண்டு வகைகளையும் சேர்ந்த நேர்வுகள் தொடர்பாக வேலை வாய்ப்பு நிறுவன நடைமுறையைப் பின்பற்றாது விட்டுவிடு வதற்கான அதிகாரம் அந்தந்த அமைச்சகங்களின் கையில் உள்ளன; அதற் குறிய ஆணைகள் நிருவாக பொறுப்பில் உள்ள இணைச் செயலாளர்களால் பிறப் பிக்கப்படுகின்றன.



1973 மார்ச் 7]

மத்திய அரசில் உள்ளதுபோன்று, மாநில அரசின்கீழ் நியமிக்கப்படுவதற்கு மேற்சொன்ன வகை நபர்களுக்குச் சாதகமாக வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் ஆட்சேர்க்கும் பொது நடைமுறையைத் தளர்த்துவதற்குரிய அரசாணை கள் எதுவுமில்லையென்று, மேல் குறிப்பிட்ட பார்வைக் கடிதத்தில் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். அரசுப் பணிகளில் நியமிக்கும் பொருட்டு, முன்னாள் அரசுப் பணியாளர்களைச் சார்ந்தவர்களது நேர்வுகளைப் பரிசீலனை செய்வதற்கு வசதியாக, வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் ஆட்களைச் சேர்ப்பதற்கான சாதாரண நடைமுறையைத் தளர்த்தி, இந்திய அரசின் முடிவின்படியான பொது அரசாணை ஒன்று பிறப்பிக்கப்படலா மென்று வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2. 26—1—1971-ல் நடைபெற்ற தமிழ்நாடு சிவில் பணிகள் இணை குழுவின் கூட்டத்தில் "பணியிலிருக்கையில் இறந்துவிடுகின்ற கடைநிலை அரசு ஊழியர்கள் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு நிறு வனத்தைக் கேட்காமலேயே அவர்களது கல்வித் தகுதிகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்" என்ற பொருள் பற்றியும் விவாதிக்கப் பட்டது: இப்பொருள் பற்றி விவாதித்த பின்னர். பொதுவாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அச் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்படலாமென்று முடிவு செய்யப்பட்டது.

3. மேலே 1, 2 பத்திகளில் கூறப்பட்டுள்ள செயற்குறிப்புகள் அரசால் விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. தமது குடும்பத்தை வறுமையில் வாடவிட்டு இறந்துவிடுகின்ற அரசு பணியாளரது மகன்/மகள்/அவரது குடும் பத்தைக் காக்கப் பொறுப்புள்ள நெருங்கிய உறவினருக்குச் சாதகமாக, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் கழகத்தின் வரம்புக்குப் புறத்தேயுள்ள அனைத்துப் பதவிகளுக்கும் வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் ஆட்சேர்க்கும் பொது நடைமுறை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தளர்த்தப்படுகிறது என்று அரசு உத்தரவிடுகிறது :—

(a) மேற்குறிப்பிட்டவர்கள் தொடர்புடைய பதவிகளுக்கு வரை யறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் அனைத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

(b) வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் ஆட்சேர்ப்புக்குரிய சாதாரண நடைமுறையைப் பின்பற்றுதலை விட்டுவிடுவதற்குரிய அதிகாரம், தொடர்புடைய துறைகளின் அரசுச் செயலாளர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும்.

(c) இத்தகைய நியமனங்கள் செய்வதற்கு முன், தொழிலாளர் நலத் துறையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

1973 மார்ச் 7]

[ 80 ஆம் பக்கத்தில் 24 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்படாத வினாவின் விடையைக் காண்க.]

The Finger Print Bureau is functioning at Vellore from 1942. The Director is the Head of the technical work in the Finger Print Bureau, Vellore. It is under the administrative control of the Principal, Police Training College, Vellore. The Bureau serves the entire State.

2. The following staff are working in the Bureau :—

| | |
|---|---|
| (i) Director (Gazetted) ... ... ... | 1 |
| (ii) Superintendent ... ... ... ... | 3 |
| (iii) Tester Sub-Inspectors ... ... ... | 3 |
| (iv) Finger Print Experts ... ... ... | 21 |
| (v) Finger Print Searchers ... ... ... | 23 |
| (vi) Photographer ... ... ... ... | 1 |
| (vii) Typist ... ... ... ... ... | 1 |
| (viii) Record Clerks ... ... ... ... | 2 |
| (ix) Technical Attender ... ... ... | 1 |
| (x) Police Boy Constables ... ... | 5 |

The Single Digit Finger Print Section for North Arcot District started functioning at Vellore from 16th June 1972 with a staff of one Superintendent and one Finger Print Expert. The opening of this Section helps the investigating Officers of North Arcot District in the detection of crime through latent finger prints found at the scenes of crime in cases of house-braking and house theft, etc., by comparing them with the prints relating to criminals addicted to such crimes and who had already been convicted for such offences in North Arcot district. The records are concise as they consist of only the criminals of North Arcot district and the criminals from outside the district who have had convictions in this district.

3. The Finger Prints of arrested persons are sent to the Finger Print Bureau of this State as well as to the Finger Print Bureau of the State of their origin, for search and record. The Finger Print experts examine finger prints on documents and at scenes of crime and give expert opinion regarding them after fixing their identity by comparison with the finger prints of known persons or criminals in the Bureau. After conviction, the Finger Prints of persons convicted along with particulars of convictions are sent to Finger Print Bureau for record.

# தமிழ் நாடு சட்ட மன்றம்.

---

## வியாழக் கிழமை, 1973 மார்ச் 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

## உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Retirement Benefits to Teachers*

* 201 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the retirement benefits for which teachers in Municipal Schools who retired (i) before 26th February 1970 and (ii) after 26th February 1970 are eligible ?

### ஆசிரியர்களுக்கு ஓய்வு காலச் சலுகைகள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(1) 26—2—1970-க்கு முன்பும், (2) 26—2—1970-க்குப் பின்பும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்கள் ஓய்வு காலச் சலுகைகளைப் பெறத் தகுதியுடையவர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர் பணியாளராகக் கருதப்படும் நகராண்மைக் கழக ஆசிரியர்கள் 14—1—1970-லிருந்து 26—2—1970 வரையிலான இடைக்காலத்தே பணி ஓய்வு பெற்றிருந்தாலும் அல்லது 26—2—1970-க்குப் பின் பணி ஓய்வு பெற்றிருந்தாலும் அவர்களுக்கு ஏனைய அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வு காலப் பலன்கள் அளிக்கப்படும். 26—2—1970-க்கு முன் அல்லது அதற்குப் பின் ஆனால் 1—6—1970-க்கு முன் ஓய்வு பெற்று ஆசிரியர் பணியாளராகக் கருதப்படாத நகராண்மைக் கழக ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர்கள் வைப்புத் தொகை, ஆயுள் காப்பு மற்றும் ஓய்வூதிய

விதிகள், 1958-ன் கீழ் ஓய்வு காலப் பலன்கள் அளிக்கப் படுகின்றன. 1—6—1970-க்குப் பின் இவர்கள் ஏனைய அரசு ஊழி யர்களைப் போன்று ஓய்வு காலப் பலன்கள் பெறுவர்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த ஆணைகளெல்லாம் அக்கவுன்டன்ட்-ஜெனரல் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, இந்த ஓய்வு ஊதியம் பற்றிய பல ஆணைகள் அக்கவுன்டன்ட்-ஜெனரல் அவர்களுக்குக் கிடைக்காததால் பெரும் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே எல்லா ஆணைகளும் உடனுக்குடன் அக்கவுன்டன்ட்-ஜெனரல் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஆணைகள் எப்போது வெளியிடப்பட்டாலும், அக்கவுன்டன்ட்-ஜெனரல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. காலத் தாழ்வு ஏற்பட்டால், அதற்கு என்ன காரணம் என்று அறிந்து, அவற்றை விரைவுபடுத்த முயற்சி எடுக்கலாம்.

### *Ambasamudram Panchayat*

* 202 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been received by the Government from local people of Ambasamudram for the prosecution of the President of the Ambasamudram Panchayat during 1971-72 ; and

(b) if so, the action taken thereon ?

### அம்பாசமுத்திரம் ஊராட்சி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சித் தலைவருக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கு குறித்து, அம்பாசமுத்திரம் உள்ளூர்



மக்களிடமிருந்து 1971-72-ல் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைகளைக் கைவிடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

* 203 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the irregularities in the election to co-opt a woman member to the Ambasamudram panchayat during 1970 ; and

(b) if so, the action taken in this connection ?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சியில், பெண் உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்துக் கொள்வதற்காக 1970 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளது பற்றி அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைகளைக் கைவிடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்ததில் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். எனவே அதற்கான காரணங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அம்பாசமுத்திரம் பேரூராட்சியின் பெண் உறுப்பினர் தேர்தலுக்கான பேரூராட்சியின் கூட்டம் 26—9—1970-ல் நடந்தது. திருமதிகள் சண்முகவடிவு அம்மாளும், மரகதம்மாளும் போட்டி போட்டார்கள். ஓட்டெடுத்ததில் திருமதி சண்முகவடிவு அம்மாள் 9 ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும், மற்றொருவரான திருமதி மரகதம்மாள் 7 ஓட்டுகள் பெற்றிருப்பதாகவும், ஆகவே திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் தலைவர் அறிவித்தார். ஓட்டுகள் எண்ணிக்கையில் ஊழல் நடந்திருப்பதாகவும், ஆகவே மரகதம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கும்படியும், மேற்படி பேரூராட்சியின் உப தலைவர் திரு. கே. வி. சுப்ரமணியம் மற்றும் 7 உறுப்பினர்கள் அம்பாசமுத்திரம் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்கை விசாரித்த மாவட்ட முன்சீப் அந்த ஓட்டுகளையெல்லாம் திரும்பவும் எண்ணி, திருமதி சண்முகவடிவு அம்மாள் 8 ஓட்டுகளும், திருமதி மரகதம்மாள் 8 ஓட்டுகளும் சமமாகப் பெற்றிருந்த காரணத்தால், திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது எனவும், திருமதி மரகதம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க முடியாது எனவும், மறுபடியும் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறினார். மறுபடியும் நடந்த தேர்தலில் திருமதி மரகதம்மாள் ஏகமனதாகப் பெண் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் ஓட்டு எண்ணிக்கையில் நடந்துள்ள தவறுதலுக்காகத் தலைவரின்மீது குற்ற வழக்குத் தொடர அனுமதி வேண்டுமென வந்துள்ள கோரிக்கைக்கு மாவட்ட ஆட்சியாளர் தமது கடிதத்தில் உப தலைவர், மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்த வழக்கில் மேற்படி பேரூராட்சித் தலைவரை அவர்கள் சம்பந்தப்படுத்தவில்லையென்றும், தலைவர் தன்னைக் காத்துக் கொள்ள அவருக்குத் தக்க வாய்ப்பு அளிக்கப்படாததாலும், மாவட்ட முன்சீப் தமது தீர்ப்பில் தலைவரின்மீது திட்டவட்டமாக எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தாததாலும் மேற்படி பேரூராட்சித் தலைவர் மீது குற்ற வழக்கு தொடரப் போதிய காரணமில்லை என்று தெரிவித்துள்ளார். மேற்சொன்ன மாவட்ட ஆட்சியாளரின் அறிக்கையை அரசு பரிசீலனை செய்தது. அம்பாசமுத்திரம் பேரூராட்சித் தலைவர் பெண் உறுப்பினர் ஒருவரைச் சேர்த்துக் கொள்ள நடத்திய கூட்டத்தில், பெண் உறுப்பினர் நியமனம் குறித்துத் தவறுதலாக அறிவித்த அவருடைய நடத்தையானது





ஊராட்சிகள் சட்டம், 1958-ன் கீழே அல்லது இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழே நடவடிக்கை எடுக்கத் தக்க குற்றமாகக் கருத முடியாது என்று தெரிய வந்ததால், மாவட்ட ஆட்சியாளர் அறிக்கையை ஏற்றுக்கொண்டு, மேல் நடவடிக்கைகளைக் கைவிடத் தீர்மானிக்கப்பட்டது.

### *Physical Education Teachers*

* 204 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have issued recently any order restricting the number of Physical Education Teachers that can be appointed in an Aided Secondary School based on the strength of the School ;

(b) if so, the number of teachers that become supernumeraries consequent on retrospective effect being given to that order ; and

(c) the action the Government propose to take in the matter?

### உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானிய உதவி பெறும் இடைநிலைப் பள்ளி ஒன்றில் நியமிக்கப்படக் கூடிய உடற்பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் வரையறுக்கும் ஆணை எதுவும் அண்மையில் அரசினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அந்த ஆணைக்கு முன்னொரு நாளிலிருந்து செல்திறன் கொடுக்கப்பட்டதன் விளைவாக, தேவைக்கு அதிகமாகியுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

[1973 மார்ச் 8

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் இருக்கலாமென்ற நிலையை, 1968 டிசம்பரில், 850 மாணவர்களுக்கு அதிகமாக இருந்தால்தான் நான்கு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் இருக்கலாமென்று மாற்றியபடியால், ஒரு சில பள்ளிகளில் 4-வது உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர், அந்தப் பள்ளியினுடைய மாணவர்களின் எண்ணிக்கை 850-க்குக் கீழ் குறைந்து, 750-க்கு மேலே இருக்கிறபடியினால், super-numerary என்று கருதப்படுகிறார். அந்த மாதிரியான சம்பவங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முன்பு 13—4—1947-ல் உத்தரவிட்ட அதே விகிதாசார அடிப்படையில்தான் இருக்கிறது. அதை மறுபடியும் வலியுறுத்தி 13—12—1968-ல் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த வகையில் போதுமான விளையாட்டு வசதிகள் இல்லாத இடங்களில் 400 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரும், 400-லிருந்து 650 மாணவர்கள் வரை 2 ஆசிரியர்களும், 650-லிருந்து 900 மாணவர்கள் வரை 3 ஆசிரியர்களும் 900-லிருந்து 1,150 மாணவர்கள் வரை 4 ஆசிரியர்களும் 1,150-லிருந்து 1,400 மாணவர்கள் வரை 5 ஆசிரியர்களும், 1,400-லிருந்து 1,650 மாணவர்கள் வரை 6 ஆசிரியர்களும், 1,650-லிருந்து 1,900 மாணவர்கள் வரை 7 ஆசிரியர்களும், 1,900-லிருந்து 2,150 மாணவர்கள் வரை 8 ஆசிரியர்களும் இருப்பார்களென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இடவசதி இருக்கிற இடத்தில், 350 மாணவர்களுக்குக் கீழ் ஒரு ஆசிரியரும், 350-லிருந்து 600 மாணவர்கள் வரை 2 ஆசிரியர்களும், 600-லிருந்து 850 மாணவர்கள் வரை 3 ஆசிரியர்களும், 850-லிருந்து 1,100 மாணவர்கள் வரை 4 ஆசிரியர்களும் என்று இந்த விகிதாச்சாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆகவே அதற்கு எவ்வளவு குறையலாம், எவ்வளவு அதிகமாகலாம் என்ற விதி தனியாக அமைந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆகவே 850 மாணவர்களுக்கு ஒன்று குறைவு என்ற காரணத்திற்காக ஒரு ஆசிரியரை எடுக்கின்ற நிலை வராது. ஒரு 'மார்ஜின்' வைக்கலாம். அதுபற்றி எந்த அளவுக்கு விதி இருக்கிறதென்று தெரியவில்லை.

**திரு. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஆரம்ப உயர்நிலைப் பள்ளிகளில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியவண்ணம் மாணவர்களின் எண்ணிக்கை இருந்தும், அந்த



1973 மார்ச் 8]

ஆசிரியர்களை நியமிப்பதற்கான அனுமதியை கல்வி அதிகாரிகள் கொடுக்க மறுக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்ய, இவ்வளவு எண்ணிக்கை இருந்தால், அந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் அந்த ஆசிரியரை நியமித்துக்கொள்ளலாமென்று அரசு ஆணை யிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் படித்துக் காட்டியது உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்து இருக்கின்ற ஆணைகளாகும். ஆனால் ஒன்றிய உயர் துவக்கப் பள்ளியைப் பொறுத்து என்ன விதி முறைகள் இருக்கின்றன வென்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், அந்த விதி முறைகளை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, 250 மாணவர்களுக்கு ஒரு உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் என்ற விகிதம் இருக்குமென்று அரசு கூறுகிறது. ஆனால் இப்போது 850 மாணவர்கள் இருந்தால் தான், 4-வது உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியரை நியமிக்கலாம் என்ற புது நிலை இருக்கிறது. முன்பு 750 மாணவர்களுக்கு மேல் இருந்தாலே 4-வது ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். அப்படி நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியரை, 850 மாணவர்களுக்குக் குறைவாக இப்போது எண்ணிக்கை இருக்கிறதென்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு வீட்டுக்கு அனுப்பாதபடி அரசு பாதுகாக்குமா வென்று அறிய விரும்புகிறேன். 750 மாணவர்களுக்கு மேலே யிருந்து, ஆனால் 850-ஐ எட்டாமல் போனால் ஏற்கெனவே நியமிக்கப் பட்ட ஆசிரியர்கள் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பிலிகல் டைரக்டர் ஒருவர் போடுவது பற்றி மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது. இங்கே குறிப்பிட்டிருப்பது, 350 வரை 1, 350-லிருந்து 600 வரை 2,600-லிருந்து 850 வரை 3,850-க்கு மேல் போனால் 4 என்று இருக்கின்றது. அது குறைந்தாலும் அந்த 4 நிலைநாட்டப்பட வேண்டுமென்பது மாண்புமிகு அங்கத்தினருடைய கோரிக்கை. அது தனிப்பட்ட முறையிலே இருக்குமானால், தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமேயானால், தனியாக ஆராயலாம்.

## Nurses

*205 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Nurses working in Government Hospitals in this State have demanded reduction in working hours; and

(b) if so, the details thereof?

## செவிலியர்கள்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் செவிலியர்கள் தங்கள் வேலை நேரங்களைக் குறைக்கும்படி கோரியுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) அதற்கான விளக்கமான விடை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** இந்த விடையிலே அவர்களுக்கு வாரம் ஒரு நாள் கண்டிப்பாக விடுமுறை கொடுக்கப்படுகிறதா என்று தெளிவாக இல்லை. emphasising the need for the grant of weekly day off/night off for the nursing staff என்று இருக்கிறது. அதைப்பற்றித் தெளிவான விளக்கம் தெரிய விரும்புவதோடு, கண்டிப்பாக 8 மணி நேரத்திற்கு மேல் அவர்கள் வேலை செய்யக் கூடாது என்றும் விதி இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் மருத்துவ மனையிலேயே ஒருபொழுதும் சேர்ந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். சரியாக 8 மணி நேரம் என்று சொன்னால், ஏற்கெனவே ஒன்று இரண்டு நர்சுகள் பணியாற்றக் கூடிய மருத்துவ மனைகளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு மணி நேரம் அதிகம் இருந்து நோயாளிகளைக் கவனிக்க நேரிடலாம்.

@ 431 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





ஆனால் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் விகிதம் 6 நாட்களுக்கு 48 மணி நேரம் பணியாற்றுவது என்ற முறையை ஒழுங்குபடுத்தும் படியாக, அங்கங்கே உள்ள நிலைமைகளுக்கு ஏற்பவும் இருக்கின்ற நர்சுகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்பவும்—முறைகளை உருவாக்கிக் கொள்ளும்படியாக ஒவ்வொரு மருத்துவ மனையின் தலைவரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார். பெரும்பாலும் இது நடைமுறைக்கு வந்துவிடுகிறது. ஆனால் அவர்கள் சரியாக 8 மணி நேரமானதும், பள்ளிப் பிள்ளைகளைப் போல், மணி அடித்த உடனே வீட்டிற்குப் போக வேண்டுமென்று சொன்னால், நோயாளிகள் பிரச்சினையில் யாரும் அக்கறையாக இருக்கின்ற ஒரு நிலைமை வளராது. ஆனால் நர்சுகளுக்குச் சலுகைகள் காட்ட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

## Trainees of the Industrial Training Institute

*206 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any trainees of the Industrial Training Institute were held, about the 18th December 1972; and

(b) if so, the reasons therefor?

## தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுவோர்

**திரு. எஸ். வெள்ளபாண்டியன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972, டிசம்பர் 18-ம் நாள் அளவில் தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுவோர் எவராவது கைது செய்யப்பட்டனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) வடசென்னை தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் நான்கு மாணவர்களும், நாகப்பட்டினம் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் ஏழு மாணவர்களும் அரசின் சொத்துக்கு சேதம் விளைவித்தமைக்காக 18—12—1972 அன்று காவலில் வைக்கப்பட்டனர்.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மாணவர்கள் சொத்துக்குச் சேதம் விளைவித்ததற்குப் பின்னாலேதான் நடவடிக்கை எடுக்க முடியும். சொத்துக்குச் சேதம் விளைவிப்பார்கள் என்று முன்கூட்டியே தெரிய முடியாது. இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த அளவுக்கு, தமிழ் நாடு முழுவதும் நடந்த போராட்டத்தின் தொடர்ச்சியாக இங்கே இது நடைபெற்றது.

**திரு. எஸ் வெள்ளபாண்டியன் :** தலைவரவர்களே, மாணவர்கள் சொத்துக்கு இப்படிப்பட்ட சேதம் விளைவிப்பதற்கு முன்னால் நடவடிக்கை எடுத்தால், அரசுக்கும் மக்களுக்கும் நல்லது தானே என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** முன்னாலே எப்படித் தெரியும்? ஒரு குற்றம் செய்யப் போகிறார்கள் என்று எப்படி முன்கூட்டியே தெரியும்?

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** தலைவரவர்களே, தடுத்திருக்கக் கூடாதா என்றுதான் கேட்கின்றேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** குற்றம் செய்யும்போது தடுத்துத்தான் இருக்க வேண்டும். தடுத்துத்தான் இருப்பார்களே.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** தலைவரவர்களே, கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் என்கின்றேன். இப்படிப்பட்ட மாணவர்கள் அவர்களுடைய....(சிரிப்பு) சிரிக்காமல் கேட்டீர்களானால் சொல்வேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** குற்றம் செய்யாமலிருக்கும் போது, முன் கூட்டியே எப்படித் தெரிய முடியும்?

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, I think the hon. Member is asking about Question No. 207. It is a mistake.

MR. CHAIRMAN : No, no. He is thinking of the very Question No. 206.





THIRU G. VASANTHA PAI : I am very sorry.

MR. CHAIRMAN : Mr. Vasantha Pai, please leave him off. He is somewhat puzzled.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** இப்படிப்பட்ட மாணவர்கள், இப்படிப்பட்ட சம்பவங்களில்....

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்கள் பிரச்சினைகள் வருகின்றபோது, அரசியல் கட்சிகள் வேறுபாடின்றி வன்மையாக ஒருங்கிணைந்து எல்லாக கட்சித் தலைவர்களும் கண்டிப்பார்களானால், இந்த மாதிரி நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம், முன்கூட்டியே தவிர்க்கலாம்.

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் :** தலைவரவர்களே, On a point of order நான் பேசிக்கொண்டிருக்கும்போதே தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசியது சரியா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** யாரும் பேசாமல் நான் பார்த்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** சரி.

*Political Workers in Central Jail, Tirunelveli.*

* 207 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether political workers were on fast in Central Jail in Tirunelveli district, about 26th January 1973; and

(b) if so, the reasons therefor?

**திருநெல்வேலி மத்திய சிறைச்சாலையில் அரசியல் தொண்டர்கள்**

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மத்திய சிறைச் சாலையில் 26—1—1973-ல் அரசியல் தொண்டர்கள் உண்ணா நோன்பிருந்தனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

THE HON. THIRU S. MADHAVAN : (a) On 22nd January 1973 three persons claiming themselves to be members of the Anna D.M.K. party went on hunger strike in front of the Police Station, Kovilpatti, Tirunelveli district. They were arrested on a charge under section 309, Indian Penal Code, and remanded to custody. They were kept in the Sub-Jail, Koilpatti, and later transferred to the Central Jail, Palayamcottai. They refused to take food and declared that they would be on hunger strike until their demands were granted. They were transferred to the Tirunelveli Medical College Hospital on 29th January 1973 and released on bail on 1st February 1973.

(b) Government do not know what the reason was ; but according to the undertrial prisoners, their hunger strike was in protest against the activities of the D.M.K.

வினா எண் 207 : விடையளிக்கப்பட்டது (ஆங்கிலத்தில் விடை)

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கமே இங்கிலீஷில் போய்விட்டது. இருந்தாலும் சரி. தமிழிலேதான் நான் கேள்வி கேட்டிருக்கின்றேன். நீங்கள் தமிழிலேதான் பதில் சொல்லவேண்டும்....

(அமைச்சர் எழுந்தார்)

இல்லை. தேவையில்லை. அடுத்தாற்போல் வரும்போது பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : இல்லை, இல்லை. தமிழிலே தான் அவர் பதில் சொல்லவேண்டும்.

If the Hon. Minister does not mind, the answer may again be given in Tamil.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு பதில் தமிழிலே தயாரிக்கப்படவில்லை. 22—1—1973 அன்று அண்ணா தி.மு.க. என்று 3 பேர்கள் சொல்லிக் கொண்டு ஹங்கர் ஸ்டிரைக் செய்திருக்கின்றார்கள். கோவில்பட்டி போலீஸ் ஸ்டேஷன் முன்னால். அவர்கள் 309 ஐ.பி.ஸி. பிரிவின்படி கைது செய்யப்பட்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே அவர்கள் உணவு அருந்த மறுத்த காரணத்தாலே, மெடிகல் காலேஜ் அஸ்பிட்டலுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களை காரணம்





என்ன என்று கேட்டதற்கு, activities of the D.M.K. -க்கு எதிராக நாங்கள் இந்த உண்ணாவிரதம் செய்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட அரசியல் கைதிகளை.... (சிரிப்பு) பாரபட்சம் இல்லாமல் இந்த அரசு நடத்துமா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் சென்ற போராட்டத்தில் சில அரசியல் கைதிகளை நடத்தும் முறையை நான் நேரில் பார்த்தேன். அவர்கள் மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப்போல, அவர்கள் அங்கே நடத்தப்பட வில்லை. கிராமாந்திரங்களிலே ஆடு மாடுகளை அடைத்து வைப்பார்களே, அதுபோல 500 பேர் இருக்கக்கூடிய இடத்திலே 1,500 பேர்களைக் கொண்டுபோய் அடைக்கிறார்கள். அதிலேயே மூத்திரம் எல்லாம் போகவேண்டியிருக்கும். அப்படிப்பட்ட மோசமான நிலைமையுள்ளது. அரசியல் கைதிகளை அரசு சரியாக நடத்த வில்லை. இனிமேலாவது பாரபட்சம் இல்லாமல் நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்விக்கும், அதற்கும் சம்பந்தமே கிடையாது. யாரோ கைது செய்யப்பட்டு உடனே விடுதலை செய்யப்பட்டதைப்பற்றிக் கேள்வி. சிறையைப் பொறுத்தவரையில், இந்த அரசு வந்த பிறகு எப்படி நடத்து கிறது என்பது உலகம் அறிந்த விஷயம். பிற்காலத்தில் யாரோ சிறைக்கு வருவார்கள், அதற்கு இப்போது நாங்கள் தயாரிக்க வேண்டுமென்பது எங்களுடைய அரசுக்குப் பொருந்தாது. எங்களையெல்லாம் அடைத்து வைத்த காலத்திலே, 10 ஆயிரம், 20 ஆயிரம் பேர் என்று அடைத்து வைத்த காலத்திலேதான் இதை உணர்ந்திருக்க வேண்டும். அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, சிறைக்குள்ளே மனித மனப்பான்மையோடுதான் நடத்த வேண்டுமென்ற கொள்கையைத்தான் நாங்கள் பின்பற்றி வருகிறோம்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, அந்த மாதிரி அவர்கள் நல்ல முறையில் நடத்தப்படவில்லை என்பதற்காகத்தான் அவர்கள் உண்ணாவிரதம் இருந்ததாகக் கேள்வி. ஆனால் இனி மேலாவது அப்படிப்பட்ட ஒரு சம்பவம் ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளுமா ? இப்போது நாங்கள் 15 ஆம் தேதி

சிறைக்குப் போனாலும் போவோம். அதைப்பற்றி ஒன்றுமில்லை. யார் என்று பாராமல், பாரபட்சமின்றி நடத்தப்படுவோமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டப்படி குற்றம் என்று நீதி மன்றம் சொன்னால்தான் சிறைக்கு அனுப்பப்படுவார்கள். அப்படி இல்லாவிட்டால் சிறைக்கு அனுப்பப்படமாட்டார்கள். எதிர்க் கட்சிகள் சிறைக்கே செல்லக்கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் எங்கள் கொள்கை. இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த அளவுக்கு, அவர்கள் எங்கே உண்ணாவிரதம் ஆரம்பித்தார்கள் என்று தெரியவில்லை. சிறையிலே சரியாக நடத்தவில்லை என்று சொல்வது முற்றிலும் தவறு. யாரையுமே மனித மனோபாவத்தில் நடத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய கொள்கை.

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் :** தலைவரவர்களே, இப்படிப் பட்ட விளக்கம் தந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரி வித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நன்றியைச் சொல்லிக் கொள்ளலாமா என்று கேட்கலாம்.

### *Lac Industry.*

* 208 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any incentives are given to Lac Industry in this State ; and

(*b*) if so, the details of incentives given to (i) private and (ii) public sector ?

### அரக்குத் தொழில்.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இம்மாநிலத்தில் அரக்குத் தொழிலுக்கு **ஊக்க உதவி ஏதுவும் அளிக்கப்படுகிறதா ?**



(இ) ஆமெனில் (1) தனியார், (2) பொதுத் துறைகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்படும் ஊக்க உதவிகளின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) தமிழ் நாட்டில் அரக்கு உற்பத்தி அரசினரால் மட்டுமே செய்யப்படுகிறது. தனியார் யாரும் இத்தொழிலில் ஈடுபடவில்லை. ஆகையால் இத் தொழிலுக்கு எந்தவித ஊக்குவிப்பும் கொடுப்பதில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 209 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the places where Lac is produced in this State, District-wise ; and

(*b*) the quantity produced in these areas ?

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மாவட்ட வாரியாக அரக்கு உற்பத்தி செய்யப்படும் இடங்கள் யாவை ?

(இ) அப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் அளவு யாது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) அரக்கு வனத் துறை யால் மதுரை மாவட்டத்தில் உள்ள வண்ணாத்திப் பாறை அரசினர் அரக்குப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார் யாரும் இத்தொழிலில் ஈடுபடவில்லை.

(இ) 1970-71-ம் ஆண்டு 14,792 கிலோ அரக்கும், 1971-72 ஆம் ஆண்டு 14,769 கிலோ அரக்கும் உற்பத்தி செய்யப்பட்டது.

### *Interruption of Bus Service.*

* 210 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether Bus services in Madras were interrupted at Moolakadai, Madras, about the 30th November 1972 for a number of hours ; and

(*b*) if so, the reasons therefor ?

## பெருந்துப் பணிகள் தடைப்படுதல்

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள பெருந்துப் பணிகள், 30–11–1972-ம் நாள் அளவில், சென்னை, மூலக்கடையில் பல மணி நேரம் தடைப் பட்டனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) 30–11–1972-ஆம் நாள் அன்று, மூலக்கடை பெருந்து நிலையத்தில் 38-பி வழித்தடப் பெருந்தில் பணியில் இருந்த ஓட்டுநர் ஒருவரை, அன்று பணியில் இல்லாத போக்குவரத்து ஆய்வாளர் ஒருவர் தாக்கினர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்தப் பெருந்து நிலையத்தில் இருந்த பெருந்து ஓட்டுநர்களும் நடத்துநர்களும் சுமார் மூன்றரை மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட காலங்களில் பிரயாணிகள் கஷ்டப்படாமலிருக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இதைப்போன்ற அசம்பாவிதம் நடக்குமானால் அதை அரசாங்கம் கவனித்துக்கொள்ளும் என்ற வகையில் தொழிலாளர்கள் இத்தகைய திடீர் வேலை நிறுத்தங்களில் ஈடுபடத் தேவையில்லை என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :-** யாரைப் பார்த்தால் உங்களுக்குச் சிரிப்பு வருமோ அவரைப் பார்க்காமல் இருந்தால் நல்லது.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) டீசல் எண்ணெய் வினியோகம் நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள துயர் குறித்து.

MR. CHAIRMAN : I have received notice of an adjournment motion for adjourning the business of the House to discuss a definite matter of urgent public importance from Thiru A. R. Damodaran. The notice reads as follows :

" The stoppage of supplies of light and high speed diesel by the three private oil companies, namely, Caltex, Burmah Shell and Esso, to their dealers in Tamil Nadu and the consequent hardship caused to road transport, agriculturists and other consumers by reason of such non-supply and the need to take up the matter immediately with the Ministry of Petroleum, Government of India, so that these difficulties could be avoided. I would like to know from the hon. Member how the matter falls within the scope of rules governing adjournment motions.

THIRU A. R. DAMODARAN : Sir, I have given notice of this adjournment motion because, with the power-cut, there has been a considerable increase in demand for light diesel and high speed diesel oil. For the benefit of the knowledge of the Members, I would like to state that light diesel is used not only by agriculturists for pumping water for their crops but also by certain industries for firing their boilers and for generation of electricity. Therefore, the shortage of this produce has caused a great deal of dislocation in the districts of Tamil Nadu. For the first fifteen days, two of the oil companies have not been giving oil to their dealers and only day before yesterday, another private oil company has also joined in this and I have received more than 30 telegrams from Dealers' Association all over Tamil Nadu requesting that urgent arrangements should be made to supply them with this product. Sir, the movement of this product is controlled by the Government of India; and although I realise that the responsibility of this Government is limited, still I think that in view of the disastrous effects of oil shortage, of energy shortage, in addition to electric power shortage, it would create a great deal of complication in the economic activity. I have, therefore, given notice of this adjournment motion, because, I think, within a few days, the position will become so very critical that it will not be possible to run any bus service in Tamil Nadu, excepting possibly the Government Transport buses. I, therefore, request, that this motion may be

permitted to be moved, so that the Members of this House may have an opportunity to explain the various difficulties felt by the agriculturists and others because of the shortage in oil supply.

MR. CHAIRMAN : Now I would like to know the viewpoint of the Government in this regard.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தது போல, மின் வெட்டின் காரணமாக இப்போது டீசலுக்கு ஏராளமாக திடீர் தேவை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பெட்ரோலைப் பொறுத்த வரையில், அத்தகைய நிலைமை இல்லை இந்த டீசல் பெருவாரியாக விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கும் அதே போன்று தொழிற்சாலைகளில் ஜெனரேட்டர்களுக்கும் அதிகம் பயன்படுத்தப் படுவதனால், இந்தத் திடீர் தேவை அதிகமாக ஆகியிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில். இந்த டீசல் எண்ணெயை கால்டெக்ஸ் கம்பெனி, எஸ்ஸோ, பர்மா ஷெல், இந்தியன் ஆயில் கம்பெனி ஆகிய நிறுவனங்கள் ஆங்காங்கே தந்து வருகின்றன. இந்தியன் ஆயில் கம்பெனியைப் பொறுத்த வரையில். என்றும் இல்லாத அளவிற்கு இப்போது அதிகமாக நாங்கள் தந்து வருகிறோம் என்ற கணக்கினைத் தந்திருக்கிறார்கள். 18.371 கிலோ லிட்டர் தந்து வந்த இந்தியன் ஆயில் கம்பெனி 24.478 கிலோ லிட்டர் தந்து வருகிறார்கள். பர்மா ஷெல் கம்பெனியைப் பொறுத்த வரையில், அவர்கள் கடந்த இரண்டு மாத காலமாக அவர்களுக்கு இந்தியன் ஆயில் கம்பெனி கொடுக்க வேண்டிய எண்ணெய் தாராளமாகத் தரப்படவில்லை என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல எஸ்ஸோ, கால்டெக்ஸ் நிறுவனங்களும் எப்போதும் தருகின்ற அளவில் 50 சதவிகிதம் கூட இந்தியன் ஆயில் கம்பெனியிலிருந்து தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆக மொத்தம் தனியார் ஆயில் கம்பெனிகளும் இந்தியன் ஆயில் கம்பெனியிலிருந்து. தென் மாநிலங்களைப் பொறுத்த வரையில். பெற்றுக் கொள்கிறார்கள். பம்பாய் போன்ற இடங்களில் தனியார் கம்பெனிகளிடமிருந்து இந்தியன் ஆயில் கம்பெனி பெற்றுக்கொள்கிறது. ஆகவே பண்டமாற்று முறையிலே இது நடைபெற்று வருகிறது. இந்தியன் ஆயில் கம்பெனியை நாங்கள் கேட்டதில் எப்போதும் தனியார் ஆயில்





கம்பெனிகளுக்கு நாங்கள் எவ்வளவு தந்து வந்தோமோ அதைத் தந்து வருகிறோம் என்று கூறுகின்றார்கள். ஆனால் தனியார் கம்பெனிகளைக் கேட்கின்றபோது எங்களுக்குத் தரவில்லை என்று சொல்கிறார்கள். இந்தச் சிக்கலான நிலைமையைத் தீர்ப்பதற்காக நாளைய தினம் 9—3—1973 அன்று காலை 11 மணிக்கு இவர்களை நேரிலேயே வைத்து நாங்களே இதைப்பற்றிப் பேசி முடிவிற்கு வரலாம் என்று கருதுகின்றோம். ஏனென்றால் இது ஆயில் கம்பெனிகளுக்கு இடையே இருந்து வருகின்ற ஒரு கருத்து வேறுபாடு. அதோடு மட்டுமல்லாமல் எல்லா இடங்களுக்கும் போக்குவரத்து வசதிகளைக் கொண்டு இப்போது ஏற்பட்டிருக்கிற திடீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கேற்ற சூழ்நிலையும் இல்லை. ஒருவகையில் வாகனங்கள் நமக்குக் குறைவாக இருக்கின்றன. இன்னொரு வகையிலே எண்ணெய் லாரிகளுக்குக் கூட கிடைக்க வேண்டிய அளவிற்கு டீசல் கிடைக்கவில்லையானால், அவைகள் ஓடுமா என்பது ஐயத்திற்கு உரியதாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், எண்ணெயை நிரப்புகின்ற டாங்கு, பங்கு போன்றவைகளுக்குக்கூட மின்சாரம் தேவைப்படுகிறது. மின்சாரப் பற்றாக்குறை காரணமாக எந்த அளவிற்கு எண்ணெயை அவர்கள் வெளியேற்றுகிறார்களோ அதே வேகத்தில் அந்த பங்குகளை நிரப்புவது கூட கடினமாக இருக்கிறது. ஆகவே போக்குவரத்திலே இருக்கிற இந்தப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள இருக்கிறது. ஆகையினாலே பொதுவாக கால்டெக்ஸ் 4 ஆயிரம் கிலோ லிட்டரும், எஸ்ஸோ 6.300 கிலோ லிட்டரும். பர்மா ஷெல் 13 ஆயிரம் கிலோ லிட்டரும் தமிழ் நாட்டிலே விநியோகம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்தக் குறிப்பிட்ட அளவு கிடைக்கவில்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான் மாண்பமிகு உறுப்பினர் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இங்கே இத்தகைய சிக்கல்கள் நமக்கு நேர்ந்திருக்கின்றன. அவர்களை நேரில் அழைத்துப் பேச அரசாங்கம் முடிவு செய்திருப்பதனாலே இந்த அவையை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்கின்ற அவசியமில்லை என்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : In view of the statement made by the Hon. Minister, I withhold my consent to the raising of the matter.

The Call Attention notice given by the hon. Member Thiru A. R. Damodaran is on the same subject. Does the hon. Member want to raise it ?

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, though it is on the same subject, I would request the Hon. Minister to make his statement, because there are one or two questions which I would like to ask him. I would like to claim that privilege.

### (2) ஆசிரியர்கள் பிரச்சினை குறித்து.

MR CHAIRMAN : The matter raised in the adjournment motion given notice of by Thiru V. Isvarmurti has already been discussed on 6th March 1972. I, therefore, withhold my consent to the raising of the matter.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இம்மன்றம் இன்றுதான் கடைசியாக

MR. CHAIRMAN : After the decision has been given by the Chair, the hon. Member should not raise the same matter.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : ஆசிரியர்களுடைய பிரச்சினை பற்றி மீண்டும் பேசுவதற்கு இன்னும் 10 நாள் ஆகிவிடும். ஆகவே 10 நாள்வரை இந்தப் போராட்டம் நீடிப்பது எதற்கும் நல்லதல்ல என்ற காரணத்தினால், நான் இதைப்பற்றிப் பேசுவது மிகவும் அவசியமும், அவசரமானதும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : எதைக் கொண்டு வரக் கூடாது என்று சொல்கிறேனோ அதைக் கொண்டு வருகிறீர்கள்.

### 3. கவன ஈர்ப்பு.

### கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் அதி விரைவு டீசல் எண்ணெய்-பெட்ரோல் கிடைக்காததால், உழவர்கள், போக்குவரத்து மற்றும் ஏனைய பயன் துய்ப்போருக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து.

* THIRU A. R. DAMODARAN : Sir, I wish to call the attention of the Hon. the Minister for Transport to a matter of urgent public importance, namely, the non-availability of high speed



diesel oil and petrol in Coimbatore, Nilgiris, Salem, Tiruchirappalli and Madurai districts and the consequent hardship caused to agriculturists, transport and other consumers and the paralysation of economic life in those districts and the need to take appropriate and immediate remedial action to improve supply position to the distributors.

* THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, no representation has been received by the Government regarding shortage of high speed diesel oil and petrol, in the districts of Coimbatore, the Nilgiris, Salem, Madurai and Tiruchirappalli. Enquiries reveal that there is no serious shortage of petrol. However, shortage of high speed diesel oil is felt. The shortage is nearly 50 per cent and is due to the following reasons :—

(i) Stoppage of production by the Cochin Refineries due to annual over-hauling.

(ii) Owing to cut in power supply, pump-sets in agricultural field and electricity generators in industrial establishments are now being run with diesel oil on a large scale.

It is ascertained that there is no dearth of oil-tankers for transport of diesel oil. It is hoped that the supply position will improve considerably by 15th March 1973 when production in the Cochin Refineries is resumed.

* THIRU A. R. DAMODARAN : Sir, I want a clarification. The Hon. Minister mentioned that out of an approximate quantity of 48,000 kilo litres of high speed diesel oil distributed in Tamil Nadu, 24,000 kilo litres are distributed by the Indian Oil Corporation and the balance of 24,000 kilo litres, by the private Oil Companies. I would like to know, Sir, whether the Government think that if oil is available with one wholesaler, without the same reaching all the retail sources, it would be possible for us to maintain regular and uninterrupted supply all over the districts. As far as the complaints to the Government are concerned, I think the facts are well-known and many members of the Assembly have already asked me about this. I would like to point out that

under the Essential Commodities Act, the Tamil Nadu Govern-ment have the power to take over the wholesale distribution of these products and to direct proper supply to be made so that the products reach the consumers. I would like to know whether the Government would think on these lines, if the Oil Companies are not able to give a satisfactory solution to the problem.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, now that the representation has been received from the hon. Member, the Government are seized of the matter. But, the question of taking over the wholesale distribution is a policy matter which, I think, this is not the proper time to deal with. But anyhow, we entirely agree with the suggestion of the hon. Member that to ensure the smooth flow and equitable distribution to all points all over this State, it is absolutely necessary that high speed diesel oil should be made available to all the distributors, and then only they will be able to satisfy the needs of the people. That is why the Government are taking action on those lines.

## 4. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

MR. CHAIRMAN : Now, the general discussion on the Budget will resume for the last day. Thiru K. Rajaram will now speak.

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், நல்ல ஒரு சூழ்நிலை இருந்தது. துரதிர்ஷ்டவசமாக கடந்த இரண்டு, மூன்று தினங்களாக இங்கு தலைநகரில் நடந்து வரும்படியான விஷயங்கள் நம்மை மிகவும் வருந்தும்படியான நிலைமையில் வைத்திருக்கின்றன. எனக்கு மட்டுமல்ல. பெற்றோர்கள் என்று சொல்லிக்கொள்ளக் கூடியவர்கள் எல்லோருக்கும் மிகவும் மனக் கவலையைக் கொடுக்கக்கூடிய ஒரு விஷயம் மாநிலத்தில் இப்போது நடந்துகொண்டிருக்கின்றது. ஆசிரியர்கள் கிளர்ச்சி நடத்தி, சிறைக்குப் போகக் கூடிய அளவுக்கு ஒரு இயக்கம் நடத்துவது என்பது நமக்கு மிகவும் மனதை பாதிக்கின்றது. ஆகையினால், மேலும் சூழ்நிலை கெட்டுவிடாத அளவுக்கு, அமைச்சரவை இதில் தலையிட்டு நல்லதொரு சூழ்நிலையை உண்டுபண்ண வேண்டும்.





ஆசிரியர்களும் ஒரு கட்டுப்பாட்டோடு, தங்களுடைய பிரதிநிதிகளை யார், யார் போய்ப் பேசினாலும், அதற்கு தாங்கள் சம்மதம் தெரிவிப்பார்கள் என்று ஆதரைஸ்டு ரெப்ரசெண்டேடிவ்களை அனுப்பி, அரசாங்கத்தோடு பேசி முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தச் சபையில் நாமெல்லாம் மிகவும் பெருமையாக, மிகவும் மதிப்பிற்குரியவராக நினைக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்களைப் போன்றவர்கள், நான்கு பேர் கூடவிருந்து முதலமைச்சருடனும், கல்வி யமைச்சருடனும் பேசிய பேச்சுக்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு பேச்சாக இல்லாமல், அந்தப் பேச்சுக்கள் உதாசீனம் செய்யப்பட்டன. வெற்றிகரமாக அந்தப் பேச்சு முடிந்து விட்டது என்று நினைத்து, நாமெல்லாம் அவர்களைப் பாராட்டினோம். பேச்சு நடத்தியவர்களைப் பாராட்டினோம். அந்த நிலைமையில் பேச்சு முடிவடையாமல் இன்னும் பெரிய கிளர்ச்சி ஒன்றை உண்டுபண்ணும்படியான நிலைமையில் இந்தக் கிளர்ச்சி போகுமானால் அது எல்லோருக்குமே மிகவும் வருத்தத்தையும், கஷ்டத்தையும் உண்டுபண்ணும். நேற்று பத்திரிகைகளில் வந்திருக்கக்கூடிய செய்திகளைப் பார்த்தால், மீண்டும் கோவைப் பகுதியிலும், திண்டிவனம் பகுதியிலும் பலாத்காரம் கூட ஏற்பட்டிருப்பதாகவும், அரசாங்கத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்திருப்பதாகவும் கூடத் தெரிகிறது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இம்மாதிரிச் செய்வது நல்லதல்ல. இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். ஆகவே அரசாங்கம் இதைத் தன்னுடைய கட்சிப் பிரச்சினை அல்லது அரசாங்கத்தின் சொந்தப் பிரச்சினையாக ஆக்காமல், இது ஒரு பொதுப் பிரச்சினை என்று நினைத்து யார் அவர்களுடைய உண்மையான பிரதிநிதிகள் என்று தெரிந்து, அவர்களை அழைத்து, நமது சபையிலும் இருக்கக் கூடிய ஆசிரியர் பிரதிநிதிகளைக் கூட வைத்துக்கொண்டு, வெகு துரிதமாக இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால் நமது புதல்வர்கள்—பெற்றோர்களாகிய நாம் நம் புதல்வர்கள் என்று சொல்லுகிறேன்—இன்னும் ஒரு சில தினங்களில் பரீட்சை எழுத வேண்டிய நிலைமையிலிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்ன ஆவது? அவர்களுடைய எதிர்காலம் என்ன ஆவது? இதையெல்லாம்

நினைத்துப் பார்க்கும்போது, ஆசிரியர்கள் இம்மாதிரி ஒரு பெரிய இயக்கத்தில் ஈடுபட்டிருப்பது தர்மசங்கடமான விஷயம். கண்டிக்கவும் முடியவில்லை. என்னைப் போன்றவர்கள் கண்டிக்கவும் முடியவில்லை. எப்படியாவது அனைவரும் சேர்ந்து இதை ஒற்றுமையாக, சமாதானமாக முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. ஈஸ்வரமூர்த்தி அந்த நோக்கத்தோடு தான், இம்மாதிரி ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தான், ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுவதற்கு இடம் கிடைக்கும் என்று நினைத்தார். அதுபற்றி முதலிலேயே தலைவரவர்களைக் கலந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே இப்போது எனது முதல் வேண்டுகோளாக அரசாங்கத்திற்கு நான் சொல்லுகின்றேன். கூடிய சீக்கிரம் தாமதமாக்காமல், 2, 3 தினங்களுக்குள்ளாக, பொறுப்புள்ளவர்களை அழைத்துப் பேசி இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் இல்லை என்று பேசப்பட்டது. நான் ஆச்சரியப்படவில்லை. புதிய வரிகள் போடாமலிருப்பதோடு, இருக்கும் வரிகளில் சில வரிகளையாவது ரத்துச் செய்யாமலிருப்பதைப் பார்த்துத்தான் நான் ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால் ஒரு 'windfall' (விண்டபால்) மாதிரி எதிர்பாராதவிதமாக ஒரு 2 வருஷத்திற்குள் திடீரென 35 கோடி ரூபாய் ஒரு வருஷ வருமானம் நமக்குக் கிடைத்திருக்கிறது. கள், சாராயக் கடைகளை வைப்பதின் மூலம் உபரி வருமானமாக ரூ. 30, 35 கோடி வந்திருக்கும்போது, இன்னும் வரி போட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும், வரி போடவில்லை, ஆகையினால் பாராட்டுகிறோம் என்று சொல்லுவதும் சரியில்லை. ஏதேனும் வரியை ரத்துச் செய்திருந்தால் நான் உள்ளபடியே பாராட்டியிருப்பேன். கவர்னர் பெருமானின் உரையின் மீது பேசும்போது கூட அதை நான் சொன்னேன். ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காகப் போடப்பட்ட வரியின் மூலம் நடப்பு வருஷத்தில் கூட 1.96 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. பங்களாதேஷ் அகதிகள் நிவாரணத்திற்காகப் போடப்பட்ட வரிகள். அவற்றை வசூலித்து மத்திய சர்க்காருக்கு





அனுப்புகிறோம். அனுப்புவதாக நமது நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வரிகளை ரத்துச் செய்ய வேண்டும். மத்திய சர்க்காரே ரத்துச் செய்திருக்கும்போது, அம்மாதிரி வரிகளை ஸ்டாம்புக்கு கூட போட்டதை ரத்துச் பி.ப.
செய்யும்போது, நாம் ஏன் ரத்துச் செய்யக் கூடாது? அதை 4-40
வசூலித்து மத்திய சர்க்காருக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். இனிமேல் அனுப்பப் போவதில்லை. அதை ஏன் நாம் ரத்துச் செய்யக் கூடாது என்று நான் சொல்லியிருந்தேன். அதையாவது முதலமைச்சர் அவர்கள் தன் உரையில் சொல்லியிருக்கலாம், ரத்துச் செய்திருக்கலாம். ஆகவே முடிவு உரையிலாவது இதைச் சற்றுச் சிந்தித்து, நாமும் மத்திய சர்க்கார் செய்தது மாதிரி அந்த வரிகளை ரத்துச் செய்யலாம் என்ற என் யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்கார் அண்மையில் வெளியிட்டிருக்கும் வருமான வரி வசூலிக்கும் முறையில் புதிதாக ஏற்படுத்தப் போகும் ஒரு மாறுதல் நம்மை மிகவும் பாதிக்கும். நம்மை என்று நான் சொல்லுவது, மாநில அரசாங்கத்தையும் பாதிக்கும். ஏனெனில் விவசாய வருமான வரியை நமது மாநிலத்திற்கு வருவாயைத் தருவதற்காக நாம் போட்டிருக்கின்றோம். மத்திய அரசாங்கம் மேலும் மற்ற வருமானங்கட்கு வரி போட்டு வந்தார்கள். இப்போது, வரியை நிர்ணயிப்பதற்காக விவசாய வருமானத்தையும் சேர்த்துக் கணக்கிடுவதாக அவர்கள் சொல்லுவதால் இனிமேல் மற்ற வருமானத்தை மறைப்பதைப் போல இந்த வருமானத்தையும் மறைக்க ஆரம்பித்து விடுவார்கள். அது இயற்கை தான். தவிர நமது மாநில அரசு இதற்குச் சம்மதம் அளிக்கப் போகிறதா என்று நான் அறிய விரும்புகின்றேன். ஏற்கெனவே விவசாயத்தை அதிகமாகப் பாதிக்கும் விவசாய வருமான வரியை மாநில அரசு வசூலிக்கின்றது. மத்திய அரசும் இந்த வருமானத்தையும் சேர்த்து வரி வசூலிப்பதென்றால் அவர்களை மிகவும் பாதிக்கும். இப்போது விவசாய வருமானத்தில் முதல் ரூ. 5,000-க்கு நமக்கு வரி கிடையாது. அதே மாதிரி தொழிலின் மூலம் கிடைக்கக் கூடிய வருமானத்திலும் ரூ. 5,000 வரை வரி கிடையாது. இந்தப் புதிய திட்டத்தை அவர்கள் செய்யும்போது, மாநில அரசு வரி எப்போதும் போல அப்படியே இருந்தாலும் கூட, மத்திய அரசும் இந்த விவசாய வருமானத்தைச் சேர்த்துக்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 மார்ச் 8

வைத்து வாங்கிக்கொண்டு, மறுபடியும் அவர்களே வேறு இடத்தில் பேசி அவர்களே விற்கவும் செய்கிறார்கள். அந்த பில் எங்கு போட்டுக் கொடுக்கிறார்கள்? நடைமுறையில் இடைத் தரகர்கள் மாதிரிதானே செய்கின்றார்கள். அவர்களை எப்படி "சேல்ஸ் டாக்ஸ்" பாதிக்க முடியும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரிதான். அவர்கள் பில் போடுவதில்லை. மதுரைக்கு தெற்கே தான். (திரு. அய்யணன் அம்பலத்தைப் பார்த்து) நம்முடைய ஊர்களிலே தான்.

**திரு. அய்யணன் அம்பலம்:** தலைவரவர்களே, எல்லோருடைய மனதிலும் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னால், நல்லதாகவிருக்கும் என்று நம்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, அதைக் கேட்கின்ற நண்பருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். அதைச் சொல்ல வேண்டியதில்லை.

வருமான வரியில் நமது பங்கு ரூ. 50.9 கோடி கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது அடுத்த வருஷத்திற்கு. ஆனால் புதிய திட்டத்தின்படி இன்னும் அதிகமாகக் கிடைக்குமென்று எதிர் பார்க்கிறேன். எப்படியோ தெரியவில்லை. மேலும் எக்சைஸ் டூடி, புகையிலை வரி ஆகியவற்றை அதிகமாக்கியிருக்கிறார்கள். அதிலும் ரூ. 36.42 கோடி கிடைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் அதிகமாகுமென்று நினைக்கிறேன். அப்படி அதிகமாக வருவாய் வருமென்று இருப்பதால், பல வரிகளைக் குறைப்பதற்கு இடம் இருக்கிறது. அதை முதலமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நிவாரண வேலைகளுக்காகவென்று, வருஷத்திற்கு ரூ. 753 லட்சம் என்று போட்டிருப்பதை, அடுத்த வருஷத்திற்கு திடீ ரென்று ரூ. 1,274 லட்சமாகக் கூட்டியிருப்பதைப் பார்க்கிறேன். எவ்வளவு நிவாரண வேலைகள் இந்த வருஷத்தில் நடக்கின்றன? அடுத்த வருஷத்திற்கும் தொடர்ந்து நடத்த வேண்டியதற்காக



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். திடீரென்று அடுத்த வருஷத்திற்கு ரூ. 500 லட்சம், அதாவது 5 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷமும் அந்த வேலை நிறைவேறாதென்று நினைக்கிறேன். அவை துரிதமாகச் செய்து முடிக்கப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை நிலங்களில் எக்கல் எடுத்திருப்பதும், பவானி போன்ற இடங்களில் கரை உடைந்திருப்பதும் இன்னும் சீர்செய்து முடிக்கப்படவில்லை. உடனடியாக நிவாரணம் செய்யப்பட வேண்டும். அடுத்த வருஷத்திற்குப் போகாமல் இந்த வருஷத்திலேயே செய்தால் நன்றாகவிருக்கும். இதை ஒரு இரண்டு கட்டத்தில் எடுத்துச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரவர்களே. போக்குவரத்துத் துறையில் 1972-73-ல் லாங் டிஸ்டன்ஸ் (long distance) சர்வீஸில் ரூ. 680 லட்சம் வருமானம் மதிப்பிடப்பட்டு ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் ரூ. 462 லட்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. வரும் வருஷ மதிப்பீட்டில் ரூ. 485 லட்சம் என்று கண்டிருக்கிறது. லாங் டிஸ்டன்ஸ் பஸ்கள்தான் வருமானம் கொடுத்துக்கொண்டு வருகின்றன என்று நாம் நினைக்கிறோம் இதுவரையிலும் அப்படித் தான் இருந்தது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவரம் என்னிடம் இல்லை. பொதுவாக, அரசாங்கப் போக்கு வரத்துத் துறையில், அந்தப் போக்குவரத்துப் பேருந்துகளைப் பிரித்துப் பல நிறுவனங்களுக்கு ஒப்படைத்ததிலே, அந்த வரவு குறைந்திருக்கலாம். ஆனால் வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டு எதிர்பார்த்த லாபம் ரூ. 60 லட்சம் என்று ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் போடப்பட்டிருக்கிறது. மொத்த வரவு-செலவை வைத்துப் பார்க்கின்றபோது, கிட்டத்தட்ட ரூ. 90 லட்சம் வரை எதிர்பார்க்கப்படுகின்றது என்று போடப்பட்டுள்ள தென்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, இதிலே எனக்கு எந்த விதமான சந்தேகமுமில்லை. அதையெல்லாம் தருவிப் பார்த்து விட்டேன். லாங் டிஸ்டன்ஸ் பஸ் என்பதை மட்டும் நான் சொல் கிறேன். சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் குறைவாகக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 8

களேயானால், அந்தச் சந்தேகம் அவர்களுக்கு வந்திருக்காது.
லாங் டிஸ்டன்ஸ் பஸ், டிஸ்டிரிக்ட் சர்வீஸஸ் ஆக இரண்டுக்கும்
1972-73 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 680 லட்சம் வருவாய்
வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திருத்த மதிப்பீட்டில்
இவற்றை இரண்டாகப் பிரித்து இப்போது நாம் போட்டிருக்
கின்றோம். அவர்கள் அதிலே பார்த்தத் தவறியதாக நான்
எண்ணுகிறேன். லாங் டிஸ்டன்ஸ் சர்விசஸில் ரூ. 680 லட்சம்
போட்டிருக்கிறது. பட்ஜெட் எஸ்டிமேட்டில் ரிவைஸ்ட் எஸ்டி
மேட்டில் அதைப் பிரித்து லாங் டிஸ்டன்ஸ் சர்விசஸ் ரூ. 462.45
லட்சம், டிஸ்டிரிக்ட் சர்விசஸ் ரூ. 362.55 லட்சம் என்று போட்டு
ரூ. 825 லட்சமாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பக்கம்
71-ல் அது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே 1973-74
பட்ஜெட் எஸ்டிமேட்டில் அது ரூ. 10 கோடியாக உயருமே
யல்லாமல் குறையாது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக்
கொள்வேன். 1972-73 எஸ்டிமேட்டில் ரூ. 680ஐ எடுக்காமல்
அப்படியே போட்டிருப்பதால் அதற்கு நேராக இருக்கிற 462
குறைந்துவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எண்ணிவிட்
டார்களென்று நான் கருதுகின்றேன். இன்னொன்றைச் சொன்
ஞர்கள். "பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்
களுக்கு கல்வியில் நான் சென்ற ஆண்டு அவ்வளவு எடுத்துச்
சொன்ன பிறகும் ரூ. 117 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். பல
கோடி ரூபாய் செலவு செய்யும் இந்த இலாகாவில் ரூ. 117 லட்சம்
ஒதுக்கியிருக்கிறீர்களே, இது நியாயமா" என்று அவர்கள் கேட்
டார்கள். அதுவும் ஒரு தவறான அடிப்படையிலேதான் அவர்கள்
கேட்டதாக நான் விளக்க விரும்புகின்றேன். ஊராட்சி ஒன்றியங்
களுக்கு இந்த ரூ. 117 லட்சம் கொடுத்திருப்பது புதிய பள்ளிக்
கூடங்கள் கட்டுவதற்கு மாத்திரம்தான். ஊராட்சி ஒன்றியங்கள்
பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு இணை மானியங்கள் தருவதற்காகத்
தான் இந்த ரூ. 117 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள்
ஊதியங்களுக்குத் தரப்படும் தொகை பக்கம் 101-லே குறிப்பிடப்
பட்டிருக்கிறது. ரூ. 35 கோடிக்கு மேல் கல்வி மானியத்தின்கீழ்
ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரப்படுகிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்வேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அந்தத்
தவறான கருத்துக்கு தன்னை ஆட்படுத்திக்கொள்ள வேண்டாம்
என்பதற்காக இந்த விளக்கங்களை நான் அளித்தேன்.



1973 மார்ச் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். 1962-ல் ரூ. 5.84 கோடி போலீஸ் துறைக்குச் செலவழிக்கப்பட்டது. 1966-67-ல் ரூ. 8.45 கோடி ரூபாயாகச் செலவழிந்து, இன்றைக்கு ரூ. 22.75 கோடி செலவழிக்கப்படுகிறது. போலீஸ்காரர்களுக்கு இந்த நாட்டில் ஏன் இவ்வளவு ஏற்றமென்று அவர்கள் கேட்டார்கள். இந்த ஏற்றம் படிப்படியாக வந்த ஏற்றமே தவிர, வேறு அல்ல என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1959-60-ல் ரூ. 5 கோடி அளவிலே ஒதுக்கப்பட்டது. அவர்கள் தவறாகச் சொன்னார்கள் ரூ. 8 கோடி என்று. அல்ல, 1966-67-ல் ரூ. 10 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆக 7 ஆண்டுகளில் ரூ. 5 கோடி என்பது ரூ. 10 கோடியாக இரண்டு பங்கு உயர்ந்திருக்கிறது. அடுத்த 7 ஆண்டுகளில் அந்த ரூ. 10 கோடி—அவர்கள் சொன்ன ரூ. 22 கோடி அல்ல—ரூ. 20 கோடியாக மீண்டும் இரண்டு பங்கு தான் உயர்ந்திருக்கிறதே அல்லாமல் அதிகமல்ல. அவர்கள் ரூ. 22 கோடி என்று, தீயணைப்புப் படைகளுக்குச் செலவழிக்கப்படுகின்ற ரூ. 2 கோடியைச் சேர்த்து, தவறாகச் சொன்னார்கள். இன்னும் தீயணைப்புப் படைகள் தேவை என்று நாட்டிலேயிருந்து முறையிட்டு வந்துகொண்டிருக்கிற நேரத்தில், அவைகளை நாம் நிச்சயமாகக் குறைப்பதற்கில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மாமன்றத்திலும் பேரவையிலும், ஏன் பொதுவாக நாட்டிலே, இன்றைக்குப் பேசப்படுகின்ற பெரிய பிரச்சினை விலைவாசிப் பிரச்சினையாகும். இந்த விலைவாசியைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் மாநில அரசு தன்னுடைய பொறுப்பையும் உணர்ந்து அதே நேரத்திலே மத்திய அரசுக்குள்ள பொறுப்பையும் உணர்த்துகின்றது. தன்னுடைய கடமையை நிறைவேற்றிக்கொள்ள ஏதோ தட்டிக்கழிக்கின்ற தன்மையிலே, தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகச் சொல்லுகின்றது என்பது ஒரு தவறான வாதம் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மத்திய அரசின்மீது ஒரு பழியைப் போட்டுவிடவேண்டும் என்பதற்காக அல்ல இது. இங்கே கூட நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர் திரு. அப்துல் வகாப் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துச்சொன்னார்கள். பணப் புழக்கத்தின் காரணமாக விலைவாசிகள் அளவுக்கு மீறி ஏறிக்

கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதை எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொரு நாட்டிலும் தேசிய வருமான வளர்ச்சியும் நாணயப் புழக்கமும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். அப்படி ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் "கவர்மெண்ட் ஆப் இந்தியா" என்கிற தலைப்பில் "பொருளாதார சர்வே" என்ற புத்தகத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலே இருக்கிற குறிப்புகளை நான் எடுத்துச் சொல்லுவேன். ஆனால், 1967-68-ம் ஆண்டைவிட 1968-69-ல் தேசிய வருமான வளர்ச்சி .7 சதவிகிதம் என்று உயருகிறது. தேசிய வருமான வளர்ச்சி 1967-68-ஐ விட 1968-69-ல் .7 சதவிகிதம் என்று உயருகிறது. அதே நேரம் நாணயப் புழக்கம் 8.1 சதவிகிதம் என்று உயருகிறது. 1969-70-ல் 1968-69-ஐ விட தேசிய வருமான வளர்ச்சி 7.3 சதவிகிதம் என்று உயருகிறது. நாணயப் புழக்கமோ 10.8 சதவிகிதம் என்று உயருகிறது. 1970-71-ல் தேசிய வருமான வளர்ச்சி முன் ஆண்டை விட 4.6 சதவிகிதம் அதிகமாகிறது. அதே சமயம் நாணயப் புழக்கம் முன் ஆண்டை விட 11.1 சதவிகிதம் அதிகமாகிறது. ஆனால் திடீரென்று 1971-72-ல் தேசிய வருமான வளர்ச்சி 1.5 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதம் வரையில் தான் உயருகிறது. 1971-72-ல் நாணயப் புழக்கம் 12.9 சதவிகிதம் என்று உயருகிறது. இந்த நிலைதான் ஏறத்தாழ 1972-73-லும் நடக்கிறது. தேசிய வருமான வளர்ச்சியில் நாட்டிலே நாணயம் அளவுக்கு மிஞ்சி புழங்க அனுமதிக்கப்பட்டுவிட்டால், அதனுடைய விளைவாக விலைவாசிகள் பாதிக்கப்படுகின்றன. இந்த நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு யாரிடத்திலே இருக்கிறது? இதைச் சொன்னால் மத்திய சர்க்காரின் மீது குற்றம் சாட்டுவதாக யாரும் கருதிவிடக்கூடாது. ரிசர்வ் பேங்கினை, மற்ற பேங்குகளைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு யாரிடத்திலே இருக்கிறது? திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்களே, மக்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்று. இதைச் சொன்னால் மத்திய சர்க்காரைக் குற்றம் சாட்டுவது என்று பொருள்? அல்ல. அல்லவே அல்ல. நாம் மக்களுக்கு இதைச் சொல்லவேண்டிய கடமைக்கு ஆளாகிறோம். "விலைவாசிப் போராட்டம் நீங்கள் நடத்தவில்லையா? நீங்கள் இப்போது விலைவாசி உயர்வதைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறீர்கள்," என்று நம்முடைய நிறுவன காங்கிரஸ் கட்சியினுடைய மெம்பர்கள் கேட்கிற நேரத்திலே கூட



அதற்காக அவர்கள் கிளர்ச்சிகளிலே ஆர்ப்பாட்டங்களிலே ஈடுபடுவோம் என்று அறிவித்திருக்கிற நிலையிலே நான் சொல்லிக் கொள்வேன். விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று தி.மு. கழகம் அல்லது அன்றைக்கு இருந்த தோழமைக் கட்சிகள் போராட்ட வடிவம் எடுத்த நேரத்தில் சொல்லப்பட்ட பதில் என்ன? மக்களோ அல்லது எதிர்க் கட்சிகளோ கூட பயிற்றுவிக்கப்பட வில்லை. அவர்களுக்குச் சொன்ன காரணங்கள் எதிர்க்கட்சிகளையும் மக்களையும் இன்னும் ஆத்திரமூட்டக் கூடிய வகையில்தான் அன்றைக்குச் சொல்லப்பட்டன. விலைவாசி அப்படித்தான் ஏறும் என்று [illegible]சொல்லப்பட்டது. "அரிசிக்கு 'க்யூ' நிற்கவில்லையா? சினிமாவுக்கு நிற்கவில்லையா?" என்கின்ற நம்முடைய உள்ளத்தைப் புண்படுத்துகின்ற கேள்விகள் மூலம் அன்றைக்கு ஏறிய விலைவாசி பற்றிய விளக்கங்கள் கிடைத்தனவே தவிர, இதனுடைய உண்மை நிலைமை என்ன என்பதை ஆராய்வதற்கு வழிவகைகள் வகுக்கப்படவில்லை. ஆகவே பொறுப்பு எங்கே 5-50 பி.ப.
யிருக்கிறதென்பதை நாம் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதுபோலவே அந்நியச் செலாவணி போன்ற விஷயத்தை உருவாக்கக்கூடிய பெரிய ஏற்றுமதி இறக்குமதிகளெல்லாம்கூட நம்முடைய மாநிலங்களின் அடிப்படையில் நடைபெறுவதில்லை. மத்திய சர்க்கார்தான் முழுப் பொறுப்பு ஏற்றிருக்கிறதென்பதை மறந்துவிடக் கூடாது. அதைவிட இன்னொன்று, வரி ஏய்ப்பு போன்றவை நடந்து கொண்டிருக்கின்றன. அன் அக்கவுண்டட் மணி (unaccounted money) கறுப்புப் பணம் ஏராளமாகப் பதுக்கப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் வெளியே கொண்டு வரவேண்டுமானால், மாநில அரசுக்கு அதிகாரமில்லை. மத்திய அரசுக்குத்தான் அதிகாரமிருக்கிறதென்பதை அனைவரும் அறிவர். அதை நாம் அறிவதோடு மட்டுமல்ல, மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பெரும் பொறுப்பிலும் இருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மத்திய அரசா, மாநில அரசா என்கின்ற கவலை யில்லை, மக்களுக்கு வேண்டியது விலைவாசிக் குறைவுதான் என்று சொன்னார்கள். இது ஒரு உண்மை, பேருண்மை; அதை நாங்கள் மறுக்கவில்லை. அதே நேரத்தில் நம்மைப் போன்றவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய இடத்தில் எடுத்துச் சொல்லி, அதற்கான வழி வகைகளைக் காண வேண்டிய நிலைமையிலிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பொருள் அரிசி. அரிசியைப் பொறுத்த

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 8

வரையில், நாம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு, திருப்திப்படுகின்ற அளவுக்குச் செய்ய முடியாவிட்டாலும்—ஓரளவுக்கு விலைகளைக் கட்டுப்படுத்தித்தான் வைத்திருக்கிறோம். ஆனால் இந்தியா முழுவதற்கும் உணவுத் துறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற மற்றப் பொருள்களின் விலையைக் குறைக்கவோ, அல்லது கட்டுப்படுத்தவோ அல்லது ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குச் செல்லக்கூடாது என்று சொல்லவோ, அதிகாரங்களை அந்தத்தையும் மாநிலங்கள் பெற்றிருக்கவில்லை என்பதும், இது இந்தியா முழுவதும் நிலவி வருகின்ற நேரத்தில் அந்த அளவுக்கு இயலாது என்பதை நாம் யாரும் அறியாதவர்களல்ல. ஆகவேதான் விலைவாசி ஏற்றத்திற்கு அந்தந்த மாநில அரசுகள் பொறுப்பு என்பதைவிட மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொல்லப்படுகிறது. பொறுப்பு என்பதற்கும் மத்திய அரசின் மீது குற்றம் என்பதற்கும் இருக்கின்ற வேறுபாட்டை உணர்ந்து கொள்ள வேண்டும். யாருக்குப் பொறுப்பு என்பதைக்கூடச் சொல்லக்கூடாதா ? ஒருவன் தெருவில் தவறு செய்கிறான் என்றால் அவன் தவறு செய்கிறான் என்று சொல்கின்ற பொறுப்பு தெருவிலே போகின்ற பொதுமக்களுக்கு இருக்கிறது. அவனைப் பிடித்துச் சிறையில் அடைக்கின்ற பொறுப்பு போலீஸ்காரனுக்கு இருக்கின்றது. இந்த இரண்டு பொறுப்புகளையும் எடுத்துச் சொல்கின்றபோது, போலீஸ்காரனைக் குற்றம் சாட்டுகிறார்கள் என்று யாரும் தவறாகக் கருதிக் கொள்ளக்கூடாது. யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு இருக்கிறது என்பதைச் சொல்வதில் தவறில்லை. மத்திய அரசுக்கு இந்தியா முழுவதுமிருக்கின்ற விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென்று சுட்டிக் காட்டுகிறோமேயல்லாமல், குற்றம் சாட்டுவதற்கில்லை என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்களும் மற்றவர்களும் இங்கே பேசும்போதும், பேரவையிலேயும் மின்சாரத்திலே இன்றைய தினம் ஏற்பட்டிருக்கின்ற சங்கடமான நிலைமைகளை விவரித்தார்கள். மின்சாரத்தில் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கோளாறை, ஒரு போர்க்கால நடவடிக்கைபோல், அனைவரும் சேர்ந்து, கட்சி மாச்சரியங்களுக்கு இடமில்லாமல், நாம் சமாளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்திலும், பேரவையிலும் நான் பலமுறை விடுத்திருக்கிறேன். ஆனாலும் இப்பொழுதும் அந்தச்



1973 மார்ச் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

சங்கடத்தை நிவர்த்திப்பதற்கான மார்க்கங்களைத் தேடாமல் அதற்கான வழி வகைகளைச் சொல்லாமல், மாநில அரசைக் குற்றஞ் சாட்டுவது என்கின்ற நிலையில் சில பேர் ஈடுபடுவது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகவிருக்கிறது. மாநில அரசு இந்த ஐந்தாண்டுகளில் மின்சார உற்பத்தியே செய்யவில்லை என்பது ஒரு பெரிய குற்றச்சாட்டு. மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழகத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 110 மெகாவாட் உற்பத்தியும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 315 மெகாவாட் உற்பத்தியும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 510 மெகாவாட் உற்பத்தியும், ஆக 1951 முதல் 1967 வரை, கிட்டத்தட்ட 15 வருஷ காலத்தில் 935 மெகாவாட் உற்பத்தியும் செய்யப்பட்டது. நாம் வந்த பிறகு இந்த ஐந்தாண்டுக் காலத்தில், 1967 முதல் 1972 வரையில், 625 மெகாவாட் உற்பத்தி. 15 ஆண்டுகளில் 935 மெகாவாட் உற்பத்தியும் 5 ஆண்டுக் காலத்தில் 625 மெகாவாட் உற்பத்தியும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மின் உற்பத்திக்கான முயற்சிகள் எதையுமே மாநில அரசு எடுக்கவில்லை என்பது தவறான வாதமாகும். இன்னொன்றையும் நினைவுகூர வேண்டும். நம்முடைய மாநிலத்திற்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரத்தினுடைய அளவு எவ்வளவு என்பதைக் கவனித்தால், முதலில் கேரளத்திற்குத் தேவையானது, நான் சொன்னதுபோல், ஒரு நாளைக்கு 60 லட்சம் யூனிட், மைசூருக்கு 130 லட்சம் யூனிட் ஒரு நாளைக்கு, ஆந்திராவுக்கு 90 லட்சம் யூனிட் ஒரு நாளைக்கு. மூன்று மாநிலங்களையும் சேர்த்தால், ஒரு நாளைக்கு 280 லட்சம் யூனிட். ஆனால் தமிழ் நாட்டுக்கு மட்டும் ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 225 யூனிட். கிட்டத்தட்ட இந்த மூன்று மாநிலங்களுக்கும் சேர்த்துத் தேவையான மின்சாரம் எவ்வளவோ அவ்வளவு தேவை நம்முடைய தமிழ் நாட்டுக்கிருக்கிறது. அதற்குக் காரணம் பெருமையோடு சொல்ல வேண்டுமானால், இரண்டு லட்சம் பம்புசெட்டுகளாகவிருந்ததை, தமிழ்நாட்டில் இந்த நான்கு ஐந்து ஆண்டுக் காலத்தில் ஆறு லட்சம் பம்ப் செட்டுகளாக விவசாயத்திற்கு மாற்றிய பெருமை நம்முடைய இன்றைய தமிழக அரசுக்கு உண்டு.

இவ்வளவு மின்சாரம் செலவாவதற்குக் காரணம் தொழில்களும் வளர்ந்திருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிடலாகாது. திட்டங்கள் தீட்டி அனுப்பவில்லையே என்றால், அனுப்பியிருக்கி

றோம். பத்து திட்டங்களுக்கு மேல். சேர்வலாறு திட்டம் என்கின்ற திட்டம்; நெல்லித்துறை திட்டம், சோலாற்று புறா திட்டம், மேல் அமராவதி திட்டம், பாலையாறு திட்டம், தென்றாவதித் திட்டம், கூனூர்—கல்லாறு திட்டம், கிழ்போயார் திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம், ஆக இந்தப் பத்துத் திட்டங்கள் மூலம் 1035 மெகாவாட் அதிகரிக்கும். திட்டங்களை மத்திய திட்டக் கமிஷன் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறோம். அதுவுமன்னியில் கல்பாக்கம் விரிவுத் திட்டம், நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையம், தூத்துக்குடி இரண்டாவது அனல் நிலையம் ஆகிய மத்திய அரசினுடைய திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

சில பேர் சொல்கிறார்கள். நான் நேற்றைய தினம் கூட பேரவையில் குறிப்பிட்டேன். மக்களிடம் சென்று தவறான விதத்தில் நம்முடைய திரு. ஆறுமுகசாமி அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வதுதான் எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் நம்முடைய திட்டங்களை அனுமதித்து விட்டால், அதற்குப் பிறகு மாநிலங்கள், மத்திய அரசு தொகை கொண்டதாகக் கருதி நிறைவேற்றிக் கொள்ளலாமே என்று சொல்கிறார்கள். வெகு சுலபமாகச் சொல்கிறார்கள். நிறைவேற்றிவிட்டு மத்திய அரசிடம் சொல்லிவிடலாமே என்று. அதை மக்களிடம் சொல்லும்போது சாதாரண மக்களுக்கு நாம் தவறிவிட்டதாகத் தோன்றும் ஒரு நிலை ஏற்படுகிறது. மக்களிடம் இப்படியெல்லாம் கூறுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டங்களை அனுமதித்து விட்டால் இங்கே அவைகளை நிறைவேற்ற எங்களிடமான அனுமதியும் எதிர்பார்க்காமல். அவற்றை நிறைவேற்றிவிட்டு மத்திய அரசுக்குச் சொல்லிக்கொள்ளலாமே. அதை இந்த அரசு செய்யத் தவறிவிட்டது என்று அவைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசி வருகிறார்கள். எங்கே என்று கேட்கலாம். பேரவையிலேயே பேசியிருக்கிறார்கள் அப்படிப் பேசுகின்றது மக்களைத் திசை திருப்பி விடுகின்ற நிலைமையில் கொண்டுபோய் விடுகிறது. அந்த அனுமதி கிடைக்கும் இந்த அரசு நிறைவேற்றாமல் தூக்கம் காட்டிவிட்டது என்ற குற்றச்சாட்டிற்கு இந்த அரசு ஆளாகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு திட்டம் அனுமதிக்கப்



பட்டுவிட்டால், அதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டாக வேண்டும். அப்படித் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை மத்திய நீர் மின் குழு ஆராய்ந்து, மத்திய மின்சாரத் துறை ஒப்புதல் பெற்று பின் திட்டக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். திட்டக் குழுவில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு மறுபடியும் ஆராய்ந்து பார்த்த பிறகு, ஒப்புதல் அளிக்கும். இவ்வளவு வழிமுறைகள், வகை தொகைகள் பார்க்கப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன், நெல்லித்துறை, சோலாற்றுப் புறா திட்டம், பாலியாறு திட்டம், இவைகள் 1970-71-ல் அனுப்பப்பட்டன. இன்னும் அந்தத் திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. திட்டக் கமிஷனின் அனுமதி பெறாமல் திட்டங்களைச் செயல்படுத்த முயற்சித்தால், அவைகளுக்குரிய சாதனங்கள் பாய்லர், ஜெனரேட்டர் போன்றவைகளை இங்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மத்திய அரசு அனுமதியில்லாமல் உற்பத்தி செய்ய முன்வரமாட்டா என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். தொழிற்சாலைகள் இங்கே உற்பத்தி செய்யாமல், வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டுமானால், அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். இவ்வளவு அனுமதியையும் அந்த மத்திய அரசின் குழு பெற்றிருக்கின்றபோது. இங்கே நாம் ஒரு சிறிய திட்டத்தைக்கூட அவர்கள் அனுமதியின்றி செய்ய முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஏதோ மின்சாரம் அதிகமாகச் சேதம் செய்யப்படுகிறது என்பது ஒரு புகார். இது உண்மைக்குகந்ததா என்பதை டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசுகிற நோக்கில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை டெல்லியிலிருந்தும் பம்பாயிலிருந்தும் வெளிவந்த பத்திரிகைகளெல்லாம் வெளியிட்டிருக்கின்றன.

"He complimented Tamil Nadu for making the best use of power without wastage".

மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல மின் திட்டங்கள் மத்திய அரசில் சரியாகச் செயல்படவில்லை என்பதையும் டாக்டர் கே. எல். ராவ் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"The power planning so far had been totally wrong. It should never have been linked to the general five-year plans.

6-00 பி.ப. "Power planning should be a continuous process." என்கின்ற ஒரு பேருண்மையையும், நல்ல நிறைந்த கருத்தையும் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நான் மத்திய அரசினுடைய பொறுப்பு, மாநில அரசினுடைய பொறுப்பு—அது விலைவாசியாக இருந்தாலும், இப்படிப்பட்ட மத்தியத் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதாக இருந்தாலும், யார் யாருக்கு என்ன பொறுப்புகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொல்கிற நேரத்தில், நம்முடைய அரசும் பொறுப்புக்களை மறந்துவிடுவதில்லை. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துக் காட்டியதுபோல், கைத்தறியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடத்தைத் தீர்ப்பதற்கு தொழில் அமைச்சரவர்களும், கைத்தறித் துறையினுடைய அதிகாரிகளும், தொழிலதிபர்களும் 2 நாளைக்கு முன்பு சென்னையில் ஆலோசித்து, கூடுமானவரையில் நாம் நூல்களைப் பெற்றிடவும், கைத்தறியாளர்களின் துயரங்களைத் துடைத்திடவும் வழி வகைகளைக் கண்டு, அது ஏடுகளில் நேற்றையதினம் வெளியிடப்பட்டுள்ளது. இதையும் இந்த அவையிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதைப் போலவே, தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களுடைய சங்கடங்களைக் கூடுமானவரையில் தீர்ப்பதற்காக பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்த வரையிலே, தமிழ் நாடு மாநிலத்தில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுடைய பிரதிநிதிகள் எல்லாம் என்னையும், மற்ற அமைச்சர்களையும் சந்தித்து 2 நாட்களுக்கு முன்பு உரையாற்றினார்கள். அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்படுமென்று அறிவித்தேன். அவைகளுக்கேற்ப நேற்றையதினம் பேரவையிலே அறிவித்த சலுகைகளையெல்லாம் மீண்டும் ஒருமுறை இங்கே எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். அவைகள் நல்ல முறையில் ஏடுகளில் வெளிவந்துள்ளன. அந்த அளவுக்குச் சலுகைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் நிலைமைகள் சீராகச் சீராக விவசாயிகளும் தொழிலாளர்களும், கைத்தறியாளர்களும் பேணிப் பாதுகாக்கப்பட என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளை உறுதியாகவும், நிச்சயமாகவும் செய்வோமென்பதையும் நான் தெரிவித்துக் கொள்வேன். இந்த நேரத்தில் மக்களை நம்பிக்கையோடும், நீதிக்கும் அஞ்சாமல் வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு எதிர்க் கட்சிகளுக்கும் இருக்க வேண்டு





மென்று சொல்கிறீர்களே, ஆளும் கட்சிகளுக்கே இருக்கிறதா வென்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்—பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் கேட்கக்கூடும்; சுதந்திரா கட்சியின் தலைவர் கேட்கக்கூடும்; முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் கேட்கக்கூடும்; திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. ராஜா அய்யா அவர்களும் கேட்கக்கூடும். ஆனால் நான் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்வேன். மத்தியிலுள்ள அமைச்சர்கள் திடீர் திடீரென்று இங்கு நிலைமைகள் சீர்பட்டு வருகிற நேரத்தில் மக்களுடைய உள்ளத்தைக் குழப்புவதைப்போல ஏதாவதொன்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் இங்கே வந்தார்கள். வந்தவர் நிலக்கரி கேட்டார்கள், அனுப்பி வைத்திருக்கிறேன் என்று சொல்கிறார். கேட்டார்கள், அனுப்பி வைத்தேன் என்பது அவருக்கும் பெருமைதான். அத்தோடு முடித்திருக்கலாம். "தமிழ் நாட்டில் நிலக்கரி தேவை என்று பத்திரிகையில் பார்த்தேன். உடனே அனுப்பச் சொன்னேன்" என்று அவர் செய்தி தந்துவிட்டுப் போகிறார். மக்கள் என்ன கருதுகிறார்கள்? "இந்த அரசாங்கம் எந்தவிதமான பொறுப்பையும் எடுத்துக்கொள்ளவில்லை, பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்துவிட்டு நம்முடைய திரு. மோகன் குமாரமங்கலம் எவ்வளவு தாராள மனதோடு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்", என்று மக்கள் எண்ணுகிறார்கள். திரு. மோகன் குமாரமங்கலத்திற்குப் பெருமை வருகிறது, நமக்குச் சிறுமை வருகிறதென்றுகூட நான் கவலைப்படவில்லை. ஆனால் ஒரு பெரிய பிரச்சினையைப்பற்றி இந்த அரசு எந்தவிதமான கவனமும் செலுத்தாமல், பத்திரிகையைப் பார்த்து ஒரு மத்திய அமைச்சர் தெரிந்துகொள்கிற அளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டதே என்கிற அளவுக்கு ஒரு தவறான எண்ணம் மக்களிடத்தில் வந்தால், அதைக் கொண்டு அரசியல் லாபம் தேட முனைவோர், மக்களைக் கிளப்பி விட்டால் நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி கெடுவதற்கான சூழ்நிலை தன்னால் பிறந்து விடுகிறது. நான் சட்ட மன்றத்திலும், பேரவையிலும் அதுபற்றி மறுத்து அறிக்கை வெளியிட்ட பிறகும் கூட, அதுபற்றிய எந்தத் திருத்தமோ அல்லது விளக்கமோ இதுவரை மத்தியிலிருந்து வரவில்லை. திடீரென்று ஒருநாள் மத்திய அமைச்சர் திரு. சட்டோபாத்தியாயா அவர்கள் தமிழ் நாட்டிற்காக ஒதுக்கிய கைத்தறி நூலை இன்னும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லையென்று சொல்லிவிட்டார்கள். நம்முடைய கோயில்

அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் 'அப்படி எதுவுமில்லை, அவர்களை ஒதுக்கவுமில்லை, நாம எடுத்துக்கொள்ள மறுக்கவுமில்லை' என்று பேரவையில் பதில் அளித்தார்கள். நான் இங்கேயும் அது பற்றி விளக்கம் அளித்திருக்கிறேன். அதற்குப் பிறகும் அவர்கள் அதற்கு ஒரு திருத்தம் சொன்னார்களா, விளக்கம் அளித்தார்களா என்றால் கிடையாது. இன்று காலையிலே பத்திரிகையில் பார்த்தால், எதிர்க் கட்சித் தலைவர்கள்கூட குறிப்பிட்டார்கள், முழுமையாகக் குறிப்பிடவில்லையென்று நினைக்கிறேன். அவர்கள் கூடச் சொன்னார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசுகிறார். என்ன பேசுகிறார்? சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை எடுக்காமல் இருந்திருந்தால், இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காதென்று சொல்கிறார். எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்கு விவரங்கள் தெரியாமல் இருக்கக்கூடிய நிலைமைகள் உண்டு. ஆளும் கட்சியில் இருப்பவர், அதுவும் அமைச்சராக இருப்பவர், தமிழ் நாட்டில் அமைச்சராக இருந்தவர் நாடாளுமன்றத்தில் ஒன்றைச் சொல்கிறார் என்றால், வேண்டுமென்றே சொல்கிறாரோ, இங்கே கட்சிக்கு அரசியல் லாபத்தோடு ஆதரவு தேடச் சொல்கிறாரோ என்று நான் சந்தேகப்பட்டால, அது என்னுடைய குற்றமல்ல; அவருடைய குற்றமே தவிர வேறு யாருடைய குற்றமுமல்ல. சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை விற்றுவிட்டார்கள். இதை எதிர்பார்த்திருக்கவேண்டுமென்று சொல்கிறார். சமயநல்லூரில் டெண்டர்கள் எல்லாம் விடப்பட்டு, அந்த அனல் மின் நிலையத்திற்கு கடைசியாக டெண்டர்களை முடிவுக்கு விட்டது 1972 பிப்ரவரி மாதம். இப்பொழுது 1973, மார்ச் மாதத்திலே நாம் இருக்கிறோம். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக் காலம் பரிபூரணமாக முடிந்துவிட்டது. 1972 பிப்ரவரியில் இப்படி மழைத் தட்டுப்பாடு வரும், தென் மேற்குப் பருவக் காற்று மோசம் செய்யும்; ஆகவே குந்தா போன்ற நீர் மின் நிலையங்களில் நமக்குத் தண்ணீர் கிடைக்காது; பல்லாயிரக் கணக்கான லட்சம் கன அடி தண்ணீர் இருக்க வேண்டிய குந்தாவில் 1,000, 1,500 லட்சம் கன அடி தண்ணீர்தான் கிடைக்கும் என்றெல்லாம் ஆருடம் தெரியுமா, ஜோசியம் பார்க்க முடியுமா, அப்படியானால் சொல்வதெல்லாம் உண்மையா, அப்படி ஆருடத்தில் சொன்னாலும் நம்பிக் கொண்டிருக்க முடியுமா? எதிர்பாராத வகையில் ஒன்று ஏற்பட்டது. 55 லட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு சமயநல்லூர் அனல் மின் நிலையத்தில் [illegible]





பட்டது. 1968-ம் ஆண்டு அதை என்ன செய்யலாமென்று ஆராய ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபுணர் குழு அதை மூடிவிடலாமென்று யோசனை கூறியது. 55 லட்சம் ரூபாய் அனாவசியமாகச் செலவாகிறது; 14 மெகாவாட் அதிகபட்சம் அங்கே கிடைக்கிறது; அந்த 14 மெகாவாட் மின்சாரம் என்பது ஒரு நாளைக்கு 1 லட்சம் யூனிட்தான். 225 யூனிட் தேவைப்படுகிற தமிழகத்திற்கு ஒரு நாளைக்கு அந்த ஒரு லட்சம் யூனிட்டைப் பற்றிக் கருதிக்கூடப் பார்க்க முடியாது. ஒரு ஆண்டுக்கு முன் நடைபெற்ற காரியம் அது. வேறு எந்தத் தவறும் நடைபெறவில்லை. இன்னும் சொல்லப்போனால், தனியாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆசைகூட அல்ல. 1970-ம் ஆண்டிலே கூட, பஞ்சாப் மாநிலத்தினுடைய மின் வாரியத்திற்கு அதை நாம் தந்துவிட சம்மதித்தோம். அவர்களும் பெற்றுக்கொள்ள சம்மதித்தார்கள். முதலில் 40 லட்சம் ரூபாய் என்று பேசி முடித்து, 42 லட்சம் ரூபாய்க்கு எடுத்துக்கொள்ளுங்களென்று கேட்டோம். பஞ்சாப் மாநில மின் வாரியத்திலிருந்து 9—7—1970-ல் சொன்னார்கள்.

'The offer of Rs. 40 lakhs was made on behalf of the Board. However as a matter of compromise, an agreed figure of Rs. 42 lakhs had been adopted subject to confirmation by the Boards on either side.'

என்று 9—9—1970-ல் பஞ்சாப் மின் வாரியம் கடிதம் எழுதியது. பிறகு அவர்களே 6—8—1971-ல் இன்னொரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில்

'I regret to say that the Board gave a second look to your offer and decided not to proceed with it further.'

என்பதாக அவர்கள் எழுதிவிட்டார்கள். தனியார் யாருக்கும் தர வேண்டுமென்ற எண்ணம் நமக்குக் கிடையாது. அதற்குப் பிறகு டெண்டர்கள் விடப்பட்டன. டெண்டர்கள் விட்டதில் நாம் அதற்குப் போட்ட 'புக் வேல்யூ' இருக்கிறதே, அதை எடுக்கின்ற அளவுக்கு டெண்டர்கள் வரவில்லை. மறுபடியும் டெண்டர்கள் விடப்பட்டு, 59 லட்சம் ரூபாய் டெண்டர்—அதுதான் உயர்ந்த டெண்டர்—கொடுத்தவருக்குத் தரப்பட்டது. திரு. சி. சுப்பிரமணியம் என்ன சொல்கிறார்? 14 மெகாவாட் அதிகபட்சம் தரக்கூடிய அந்த அனல் மின் நிலையம் 30 மெகாவாட் தரக்கூடியது; பல லட்சம் யூனிட்டுகளைத் தரக்கூடியதென்று அவர் சொல்லியிருக்

கிறார். இப்படிச் சொல்வதன் மூலமாக பிரச்சினையை அணுகு வதற்கு அக்கறை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, மக்களைத் திசை திருப்பி விடுவதற்கு அக்கறை எடுத்துக்கொள்கிறாரோ என்பதற்காகத்தான் நான் வருத்தப்படுகிறேன். மத்தியிலிருந்து இப்படி அமைச்சர்கள் இங்கு வந்தாலும், வர நேரம் இல்லாவிட் டால் அங்கேயே உட்கார்ந்து கொண்டு, தமிழ் நாட்டில் தங்கள் பேச்சின் மூலமாக ஒரு கலவரச் சூழ்நிலையை, மக்களுக்கு இந்த அரசின்மீது அதிருப்தியை ஏற்படுத்த வேண்டுமென்று முனைவது உள்ளபடியே வருந்தத்தக்கதென்று இதுவரை சொன்னோம். இப் போது சொல்கிறேன், அவைகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை யென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையில் கடைசியாகப் பேசிய நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்களும், நேற்றைய தினம் பேசிய சிலம்புச் செல்வர், தமிழரசுக் கழகத்தின் தலைவர், இந்த மேலவையினுடைய துணைத் தலைவர், திரு. ம.பொ.சி. அவர்களும், நண்பர் திரு. ஈஸ்வர மூர்த்தி அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் விசாரணைக் குழுபற்றி இங்கே பேசினார்கள். விசாரணைக் குழு பற்றி எதிர்க் கட்சித் தலைவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். திரு. சுவாமிநாதன் அவர்களும் சொன்னார்கள். நான் முதலில் அவர் களைக் கேட்க விரும்புவதெல்லாம், இந்தக் கருத்துக்களையெல்லாம் திரு. மாதவன் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கிற அந்தப் பொறுக்குக் குழுவில் போய்ச் சொன்னீர்களா? அது என்னுடைய முதல் கேள்வி. (குறுக்கீடு). இப்போது பதில் சொல்ல வேண்டாம். நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள் என்ப தற்காகச் சொல்கிறேன். அந்த மசோதா வேண்டாமென்று அவர்கள் சொல்லவில்லை. குற்றம் நிரூபிக்கப்படாவிட்டால், 3 ஆண்டுக்காலம் தண்டனையொன்று இருக்கிறதே, அதற்காகத்தான் அந்த மசோதா வேண்டாமென்று அவர்கள் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். பொறுக்குக் குழுவிலே அமர்ந்து எதை எதை வைத்துக் கொள்ளலாம், எதை எதை விலக்கிவிடலாமென்று அங்கே சொல்கிற உரிமை அனைவருக்கும் இருக்கிறது. பொறுக்குக் குழுவில் வெளிநடப்புச் செய்வதைவிட, அவர்கள் சொன்னவைகள் அதில் எடுபடாவிட்டால், பிறகு மறுப்பு உரைக்கின்ற உரிமையும் எதிர்க் கட்சித் தலைவருக்கும், உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அதை நிறைவேற்றாமல் இதுவே கறுப்பு மசோதா, ரௌலட்





சட்டம் என்றெல்லாம் மக்களுக்குச் சொல்லி, 'ஓஹோ, ரௌலட் பி.ப. 6-10
சட்டம் என்றால் இதுதான் போலும்,' என்று அவர்கள் அப்படி
எண்ணிக்கொள்வார். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுக
சாமி அவர்கள் சொன்னதைப்போல, நாம் மக்களைப் பயிற்றுவிக்க
வேண்டும். இந்த மசோதாவை ரௌலட் சட்டம் என்று சொல்லி
விட்டால், ரௌலட் சட்டம் என்றால் என்ன என்று மக்கள்
எண்ணும்போது, இதுவரையில் ரௌலட் சட்டத்தைப் பற்றிப்
படிக்காத மக்கள், 'இப்படி ஒரு நீதி விசாரணை குழு போடுவது
தான் ரௌலட் சட்டம் போலும்' என்றுதான் நினைப்பார்கள்.
அந்தக் காலத்திலே அப்படித்தான் ஒரு சட்டம் போட்டான்
போலும் என்று மக்கள் தவறாகப் புரிந்து கொள்வார்கள். ஆகவே
பயிற்றுவிக்க வேண்டும். நான் ஏன் இதைச் சொல்லிக்கொள்
கிறேன் என்றால், இந்த மசோதாவை மறுத்து வெளியேறியவர்
களில் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆளும்
காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தான் ராஜஸ்தானத்திலும் ஆளுகின்
றார்கள், மராட்டியத்திலும் ஆளுகின்றார்கள். இங்கே நம்முடைய
தமிழ் நாட்டிலே போடப்பட்டிருக்கின்ற மசோதாவில் அவர்கள்
சொன்னதுபோல 'குற்றம் நிரூபிக்கப்பட்டுவிட்டால்' என்றெல்
லாம் கூட இல்லை

'punishment for false, frivolous, fictitious complaint'

என்ற தலைப்பில்

'notwithstanding anything contained in this Act, every person who makes a false, frivolous or fictious complaint against public men under this Act shall on conviction be punished with imprisonment for a term which may extend to three years and shall also be liable to fine. No Court shall take cognisance of the offence, except with the previous sanction of the Commissioner.'

என்று நம்முடைய செலக்ட் கமிட்டியிலே இருக்கின்ற இந்த சட்ட
வரைவில் நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். ராஜஸ்தானத்தில்
ஆளும் காங்கிரஸினுடைய அவசரச் சட்டம், 'லோக் அயுத்' என்
கின்ற தலைப்பில் இப்போது first published in 'ராஜ்பத்ரா'—
'ராஜ் பத்ரா' என்றால் கெஜட் என்று சொல்லப்படுகிறது—
எக்ஸ்ட்ரா ஆர்டினரி பார்ட் 4, டேட்டட் 25—1—1973-ல் இதுதான்
இருக்கின்றது, 13வது பிரிவில் :

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 8

"Prosecution for false complaint. Notwithstanding any thing contained in section 10 or any other provision of this ordinance, every person who wilfully or maliciously, makes any false complaint under this ordinance shall on conviction be punished with imprisonment for a term which may extend to three years and shall also be liable to fine."

இப்படி இருக்கின்றது, ராஜஸ்தானத்திலே உள்ள சட்டத்தில். மராட்டியத்திலே உள்ள சட்டத்திலும் இந்த பிரிவு இடம் பெற்றிருக்கின்றது. இதிலே வேடிக்கை என்னவென்றால், மராட்டியத்திலும் ராஜஸ்தானத்திலும் உள்ள சட்டத்தில் அமைச்சர்களும், இதுபோன்ற புகார்களுக்கு ஆட்படுத்தப்படுவார்கள் என்று இருக்கின்றது. அவர்கள்மீது விசாரணை நடத்தலாம் குற்றம் சுமத்தலாம் என்று இருக்கிறது. ஆனால்

'Minister means, A Member (other than the Chief Minister) of the Council of Ministers by whatever name called for State of Maharastra; that is to say, a Minister of State or Deputy Minister.'

"Minister means, a Member other than the Chief Minister of the Council of Ministers". என்று இருக்கிறது. ராஜஸ்தானத்திலே, மராட்டியத்திலே அப்படித்தான் இருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டிலே முதலமைச்சரையும் சேர்த்து குற்றம் சாட்டலாம் என்று நாம் சட்டம் கொண்டு வந்திருக்கின்றோம். ஆனால் ஆளும் காங்கிரசைச் சேர்ந்தவர்களும், அவர்களோடு ராஜஸ்தானத்திலே, மராட்டியத்திலே இணைந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் நண்பர்களும் இதைக் கறுப்பு மசோதா என்று சொல்வது எனக்குப் புரியவில்லை. பழைய காங்கிரஸ்காரர்கள், "நாங்கள் அங்கெல்லாம் ஆளவில்லை. ஆகவே நாங்கள் இந்தக் குற்றம் சாட்டுகிறோம்" என்று தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் ஆளுகின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இதற்கு என்ன சொல்லுகின்றார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நான் இன்னொன்றும் சொல்வேன். அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், "விசாரணைக் குழு ஏன்? அவர்கள் வைத்த குழுவிற்குள்ளே நீங்கள் புகுந்துகொள்ளக்கூடாதா" என்று சொன்னார்கள். இது ஒரு வாதம். அதிலே பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் கொஞ்சம் பரவாயில்லை. "அவர்கள் வைக்கின்ற குழு என்ன? நீங்களே ஒரு குழு போட்டு அதற்குள்ளே



1973 மார்ச் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

புகுந்து கொள்ளுங்களேன்", என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். ஆனால் மற்றவர்கள், மத்தியிலே வைக்கின்ற விசாரணைக் குழுவிலே ஏன் நுழைந்துகொள்ளக் கூடாது என்று கேட்கிறார்கள். இன்று நேற்று அல்ல, 1968-ம் ஆண்டிலேயே, உள்துறை அமைச்சராக திரு. சவான் அவர்கள் இருந்த காலத்திலேயே, அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில அவர்கள் ஒரு 'லோக் பால்' என்கின்ற அமைப்பை அங்கே நிறுவ வேண்டுமென்றும், அந்த அமைப்புக்கு எல்லா மாநிலங்களும் ஆதரவு தர வேண்டுமென்றும், அந்த 'லோக் பால்' அமைப்பு மாநிலங்களில் உள்ள அமைச்சர்கள் மீது புகார் கூறப்பட்டால், அந்த மத்திய அமைப்பு விசாரிக்க உரிமை பெற்றதாக இருக்கும் என்றும் சொல்லி நம்முடைய முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும், மற்ற மாநில முதல் அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினார்கள். அந்த நேரத்தில் அண்ணா அவர்கள்

'Constitutionally, the Central Ministers are under the control of the Prime Minister and the State Ministers are under the control of the Chief Minister. The Chief Minister is independent of the Prime Minister and the whole Ministers. So, the Chief Minister will be the authority of the State Ministers.'

என்று அழுத்தம் திருத்தமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போது திரு. சவான் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். அது மாத்திரம் அல்ல, இன்றைக்கு சுதந்திரா கட்சிக்காரர்கள் எல்லாம் கூட சேர்ந்துகொண்டு மத்திய சர்க்கார் வைக்கின்ற விசாரணைக் குழுவிலே நீங்கள் உங்களை நுழைத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். அப்படிச் சொன்னால்கூடப் பரவாயில்லை. "மத்திய சர்க்காரே, இவர்கள் மீது விசாரணைக் குழு போடு" என்று சொல்லுகின்றார்களே, அவர்களுக்குச் சொல்வேன் : சுதந்திர கட்சியினுடைய முதலமைச்சராக ஒரிசாவிலே இருந்த திரு. சிங் தேவ் அவர்கள் சவானுக்கு இந்த 'லோக் பால்' பற்றி என்ன எழுதினார்கள் தெரியுமா ?

'It may not be in keeping with the demands of constitutional propriety that the observance of the code of conduct by the Chief Minister should be entrusted to the Prime Minister and the Union Home Minister. In order to develop proper democratic practices, the State Legislature should be the authority for enforcing their observance of the code of conduct by the Chief

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 8]

Minister in the same way as the Parliament is the authority for ensuring the observance of the code of conduct by the Prime Minister.'

அதாவது ஒரு அரசினுடைய முதலமைச்சர் நெறி முறைகளைப் பின்பற்றுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை நாட்டின் பிரதமரோ அல்லது உள்துறை அமைச்சரோ ஏற்றுக்கொள்வதென்பது அரசியல் அமைப்பின் அடிப்படைக்கு உகந்தது ஆகாது என்றும், அரசியல் நெறி வழுவாமல நாட்டின் பிரதமர் செயல்படுகின்றாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு நாடாளுமன்றத்திற்கு எப்படி இருக்கின்றதோ அதுபோலவே ஒரு மாநிலத்தில் முதலமைச்சர் நெறிமுறை வழுவாமல நடக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அதிகாரமும் படைத்தது அந்த மாநிலச் சட்ட மன்றம்தான் என்றும் இதுதான் சிறந்த ஜனநாயகப் பண்புகளை வளர்க்க ஏதுவாக இருக்குமென்றும் ஒரிசாவின் முன்னாள் முதலமைச்சர் திரு. சிங் தேவ் அவர்கள் சவானுக்குக் கடிதம் எழுதினார்கள். அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் மாநில அமைச்சரவை கூட்டத்தைக் கூட்டி, அதிலே ஒரு முடிவினை எடுத்து, அதையும் சவானுக்கு அறிவித்தார்கள்.

'The Council have examined the suggestion in detail and have decided not to agree to it on various grounds including the ground that the institution of the Lok Pal as contemplated will infringe on the State autonomy guaranteed by the Constitution.'

அதாவது உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்ற மாநில சுய ஆட்சித் தன்மைக்கு முற்றிலும் பொருத்தமற்றது, ஆகவே இதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று 2—6—1968-ல் திரு. சவான் அவர்களுக்கு அண்ணா அவர்கள் கடிதம் எழுதினார்கள். அவர்கள்

'We feel that the setting up of a Lok Pal as contemplated by the A.R.C. would infringe on State autonomy envisaged in the Constitution and as such we would advise against it.'

என்று கடிதம் எழுதினார்கள். அதே நிலையைத்தான் 1968 லிருந்து இதுவரையில் இந்த அரசு பின்பற்றி வருகிறதே அல்லாமல், ஏதோ விசாரணைக்குப் பயந்து நடக்கிறோம் என்று, என் மீதோ அல்லது மற்ற அமைச்சர்கள் மீதோ புகார்களை எடுத்துச் சொல்லி உடனே மத்திய சர்க்கார் விசாரணைக் குழு வைப்பது என்றால், நான் உள்ளபடியே வேதனைப்படுகின்றேன்.



1973 மார்ச் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

இன்றைக்கு இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு கொண்டிருக்கின்றது. நாளை இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் இல்லாமல், வேறு ஒரு கட்சி ஆண்டு அதேபோல் மத்தியிலே வேறு ஒரு கட்சி ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற நேரத்தில், மத்தியிலே இருக்கின்ற கட்சி மாநிலத்திலே ஆளுகின்ற கட்சியை வீழ்த்த வேண்டுமென்றால், மிகச் சுலபமான ஆயுதம் ஒன்று கிடைத்துவிடுகின்றது. என்ன அவர்கள் செய்ய வேண்டும்? ஒரு நாலு பேரைப் பிடிக்க வேண்டும். யாராவது கட்சியிலே காழ்ப்புணர்ச்சியால் வெளியேறியவர்கள் இருக்கின்றார்களா என்று பார்த்து அல்லது அப்படி இல்லாவிட்டால்கூட, நாலு பேரைத் தேடிப் பிடித்து, அவரிடத்திலே ஒரு புகார் ஒன்று தயாரித்துக் கொடுத்து அதைக் கொண்டுவந்து, "என்னிடத்திலே கொடு, நான் விசாரணைக் குழு வைக்கிறேன். வைத்தவுடன் மந்திரிகள் ராஜினாமா செய்வார்கள். மந்திரிகள் ராஜினாமா செய்துவிட்டால், அங்கு இருக்கின்ற எம்.எல்.ஏ.க்கள் சிதறிப் போவார்கள். பிறகு ஒரிசாவைப் போல ஆகும். அல்லது வேறு மாநிலம் போல ஆகும். பிறகு அங்கு ஜனாதிபதி ஆட்சி வரும்" என்று சொல்லலாம். ஆகவே எனக்குப் பிடிக்காத ஆட்சி எந்த மாநிலத்திலே இருந்தாலும். அதைக் கவிழ்த்துவிட, குலைத்துவிட, சீரழித்துவிட மத்திய சர்க்கார் கையிலே இந்த அதிகாரத்தைக் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்ல. நாளைக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தாலும்—நல்ல காலம், வராது, வந்தாலும், வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும். மத்திய சர்க்காருக்கு விரோதமான ஒரு கட்சியினுடைய ஆட்சி மாநிலத்திலே இருக்கின்ற நேரத்தில். அதைக் கவிழ்க்க வேண்டுமென்று சர்வாதிகார எண்ணம் கொண்டு. மத்தியிலே ஜனநாயகப் போர்வையில் இருக்கின்ற பிரதமரும் மற்றவர்களும் எண்ணுவார்களானால். அந்த மாநிலத்திலே 4 பேரைப் பிடித்துப் புகார் கொடுக்கச் சொல்லி, அதன் பேரிலே விசாரணை வைத்து. அதன் காரணமாக அந்த அமைச்சர்களைப் பதவி விலகச் செய்து. அங்கே ஒரு கிளர்ச்சி ஏற்ப
டுத்தி. அந்த அரசைக் கவிழ்த்துவிட நேரலாம். நம்முடைய 6-20
சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இங்கே ஒரு முறை பேசுகிற நேரத்தில் எடுத்துக் காட்டினார்கள். அதைத்தான் அப்போது சுதந்திரக் கட்சியினுடைய அமைச்சர் ஒரிசாவினுடைய முதல்வர் திரு. சிங் தேவ் அவர்கள் அப்போதே சுட்டிக்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 8

காட்டினார்கள். அன்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். "என் மீது விசாரணை என்றால் சட்டமன்றம் இருக்கிறது. பிரதமர் மீது விசாரணை என்றால் நாடாளுமன்றம் இருக்கிறது. பிரதமர் மீது விசாரிக்கத் தனியாக ஒரு விசாரணைக் குழு போட முடியாது என்பது எப்படிச் சரியோ அதே போல ஒரு விசாரணைக் குழுவை மத்திய சர்க்கார் இங்கே அமைக்க முடியாது என்பதும் சரியானதாகும்". ஆகவேதான் இன்னும் மெத்த வேதனையோடு திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இங்கே, "இப்படி ஒரு விசாரணைக் குழு போடவேண்டிய நிலைமையை பொது வாழ்வில் சில பேர் ஏற்படுத்தி விட்டார்களே; அப்படிப்பட்ட புகார்ப் புழுதி கிளப்பப் பட்டு விட்டதே; இருந்தாலும் இந்த அரசு துணிச்சலோடும், நேர்மையோடும், நிதானத்தோடும் இப்படிப்பட்ட விசாரணைக் குழு போட முன் வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்" என்று சொன்னார்கள். இப்படித்தான் இன்றைக்கு அந்த விசாரணைக் குழு போடுவதற்கான சட்டத்தை, அந்த வரைவினை நாம் கொண்டு வந்திருக்கிறோம். நான் இன்னும் கூடச் சொல்வேன். எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதுபோல, திருத்தங்கள் இன்னின்னது தேவை என்பதை எடுத்துச் சொல்லி, அவைகளைப் பற்றி கலந்து ஆலோசிப்பதற்கு நல்ல வாய்ப்பினை அளித்து சட்ட அமைச்சருக்கு உதவியாக இருப்பதுதான் இங்கே இருக்கிற ஸ்தாபன காங்கிரசாலும், சுதந்திராக் கட்சியாலும், நம்முடைய ஆளுங் காங்கிரசாலும், கம்யூனிஸ்ட் கட்சியாலும், மற்ற கட்சிகளாலும், அவர்களுடைய பொறுப்பாக இருக்கவேண்டுமென்று இங்கே எடுத்துக் காட்டிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாய வருமான வரியைப்பற்றி இங்கே சர்ச்சை எழுந்தது. திரு. சுவாமிநாதன் அவர்களும், திரு. நாராயணசாமி அவர்களும் இப்போது பேசிய நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் விவசாய வருமான வரி தமிழ் நாட்டில் இருக்கிற விவசாயிகளைப் பாதிக்கக்கூடும் என்கிற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும்கூட விவசாய வருமான வரியை அவர்கள் சேர்த்துக் கொள்வதற்கு, மாநில சார்பாக, மறுப்புத் தெரிவித்திருக்கின்றேன். அதற்குப் பிறகும் விவசாய வருமான வரி இப்பொழுது அறிமுகப் படுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். விவசாயிகளுடைய நலத்தை இது எங்கே பாதித்து விடுமோ என்ற அச்சம்



1973 மார்ச் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

இருக்கிற காரணத்தினால், ஒருவேளை மத்திய அரசு இந்தக்
லைவிடக் கூடும். அப்படிக் கை விட்டுவிட்டால் நாம் மத்திய
அரசிடத்திலே உரிமையோடு கேட்கலாம். இங்கே இருக்கிற
விவசாய வருமான வரியை வைத்துத்தான் நீங்கள் உங்களுடைய
வரியைப் பெருக்கிக்கொள்கிறீர்கள், வருமானத்தைப் பெருக்கிக்
கொள்கிறீர்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்,
இப்போதுள்ள நிலை விவசாயம் அல்லாத வருமானம் 5 ஆயிரம்
ரூபாய் உள்ளவர்களுக்கு விவசாயத்தில் எவ்வளவு வருமானம்
வந்தாலும் வரி கிடையாது. மத்திய சர்க்காருக்கு வரி கிடையாது.
விவசாயிகளுக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும், மாநில
சர்க்காருக்கு வரி இருக்கிறது. ஆனால் 5 ஆயிரம் ரூபாய்தான்
விவசாயம் அல்லாத வருமானம் என்றால், அவர்களுக்கு விவசாயத்
துறையிலிருந்து வரி கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால்
6 ஆயிரம் ரூபாய் என்றால், மத்திய அரசிற்கு வரி தர வேண்டும்.
விவசாயம் இல்லாத வருமானம் 6 ஆயிரம் ரூபாய் என்றால், வரி
தர வேண்டும். 6 ஆயிரம் ரூபாய்க்கு 110 ரூபாய் வரி தர
வேண்டும், வருமான வரி. அந்த 6 ஆயிரம் ரூபாயோடு விவசாய
வருமானம் 5 ஆயிரம் சேர்ந்தால் 11 ஆயிரம் ரூபாயானால் அதிலே
சிலாப் சிஸ்டம் அமைந்து 187 ரூபாய் வரி தர வேண்டும். ஆறு
ஆயிரம் ரூபாய் விவசாயம் அல்லாத வருமானம் உள்ளவர்கள் 110
ரூபாய் வரி கொடுத்தார்கள். இப்பொழுது விவசாயத்திலே அவர்
களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வருமானம் வருமானால் 110 கொடுத்த
வர்கள் 187 ரூபாய் கொடுக்கவேண்டும். ஆக 77 ரூபாய் அதிக
மாக வரி கொடுக்கவேண்டும். "இது இங்கே விவசாய அடிப்
படையில் போடப்படுகிற வரி என்ற காரணத்தினால், இதைக்
கணக்கிலே எடுத்து, அந்த 77 ரூபாயை தமிழ் நாட்டிற்குக்
கொடுத்து விடுங்கள்" என்று நாம் தமிழ்நாடு சர்க்கார் சார்பாக
மத்திய அரசை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மத்திய
அரசும் இது வருகிற காரணத்தினாலேதான் ரூ. 110, ரூ. 187 ஆக
ஆகிறது என்பதை மனதிலே வைத்து ஆவன செய்யுமென்று நான்
நிச்சயமாக நம்புகிறேன்.

திரு. வசந்த பாய் அவர்கள் பேசுகிற நேரத்தில் தியாகராய நகர்
சொசைடியைப்பற்றிச் சொன்னார்கள். அந்த சொசைடி ஏற்
கெனவே வைத்துக்கொண்டிருந்த 296 ஏக்கரா நிலத்தில் 106
ஏக்கரா நிலத்தை தென் சென்னை வீட்டு வசதி வாரியம் எடுத்து
வீடுகள் கட்டலாம் என்று 1971 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாநில

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

குறைகள் ஏற்பட்டால், அது இந்த அரசாங்கத்தை
நடத்துகிறவர்களைப் பாதிக்கும். எனவே, கண்டிப்பாக
அக்கவுன்டன்ட்-ஜெனரலின் பரிசிலனைக்கு அனுப்பி வைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனல் மின் நிலையங்கள் நிலக்கரியை மட்டும் நம்பியிராமல்,
இரண்டொரு அனல் நிலையங்கள் எண்ணெயை எரிபொருளாகக்
கொண்டு எரிக்கும்படியான நிலைமைகளை ஏற்படுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி தக்க
நடவடிக்கைகளை எடுக்கும்படியாக மின்சார அமைச்சரவர்
களையும், முதலமைச்சரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.
ஏனென்றால் ஒரே பொருளை நம்பியிருப்பதால், பல சங்கடங்கள்
ஏற்படுகின்றன. கஷ்டப்பட்டால் எப்படியாவது வழி
கண்டுபிடிக்க முடியும். அனல் மின் நிலையங்கள் எண்ணெயை
எரிபொருளாக உபயோகிப்பதற்கு முற்படவேண்டும். அதற்கு
வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும். இரண்
டொரு அனல் மின் நிலையங்கள் அம்மாதிரி இருக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தூத்துக்குடியிலும், மேட்டூரிலும் இரண்டு
அனல் மின் நிலையங்கள் ஏற்படவேண்டுமென்று, இன்றல்ல,
நேற்றல்ல, 1965-லிருந்து வற்புறுத்தி வருகிறோம். இரண்டு
சபைகளிலும் வற்புறுத்தி வருகிறோம். அரசாங்கமும் எழுதிக்
கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் பத்திரிகையில் பார்த்தேன்.
தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வழி பிறந்துவிட்டது.
மத்திய அரசாங்கம் அதற்கு 'கிளியரன்ஸ்' கொடுத்து
விட்டார்களென்று பார்த்தேன். நமது அரசாங்கத்திற்கு
அதுபற்றித் தகவல் வரவில்லையென்று முதலமைச்சரவர்கள்
சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதில் தாமதம் கூடாது.
இம்மாதிரி விஷயங்களை அரசியலுக்கு அப்பாற்பட்டதாகக்
கொள்ளவேண்டும். ஏனெனில், நாடு நல்லபடியாகயிருந்தால்
தான் அரசியல் பண்ண முடியும். நாடு கெட்டுப்போன பிறகு,
அரசியல் எங்கே பண்ணுவது? தூத்துக்குடியில் அனல் மின்
நிலையத்தை என் வைக்கவேண்டுமென்று சொன்னோம் என்பதைப்
பார்க்க வேண்டும். தூத்துக்குடி கடற்கரை ஓரமாக இருக்கிறது.
எனவே திடீரென்று நிலக்கரியோ அல்லது மற்ற எரி பொருள்
களையோ கொண்டு வருவதற்கு, கடற்கரை அருகில் இருப்பதால்



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

சௌகரியமாக இருக்குமென்று காங்கிரஸ் அரசாங்கம் தூத்துக்
குடியைத் தேர்ந்தெடுத்தது. அதைத் தொடர்ந்து இந்த அர
சாங்கமும் தூத்துக்குடியில் அனல் மின் நிலையத்தை வைக்க
வேண்டுமென்று வற்புறுத்துவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடை
கிறேன். அதற்கு 'கிளியரன்ஸ்' வாங்கி, வேலையைத் துவங்க
வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு ஒரு சந்தேகமிருக்கிறது.
கோதையாறு 'பவர் ஹவுஸ்' 'First and Second Stages'
100 மெகா வாட் மின்சாரம் கொடுக்கக்கூடியது.
8 வருஷங்களாக அதில் வேலை நடந்தது. இப்போது வேலையும்
முடிந்து விட்டது. ஆனால் வேலை முடிந்து 2 வருஷங்கள் ஆகியும்
நமக்கு பவர் கிடைக்கவில்லை. ஏனென்று என்னால் புரிந்துகொள்ள
முடியவில்லை. வேலை முடிந்துவிட்டதென்று சொல்லப்
பட்டிருக்கிறது. ஏதோ சிறிய சாமான்கள் இல்லையென்ற
காரணத்தால், செயல்படவில்லையென்று கூறுகிறார்கள். அது
சீக்கிரத்தில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இந்தக் கஷ்ட காலத்தில் கோதையாற்றிலிருந்து வரும் 100 மெகா
வாட் என்பது சிறிய விஷயமல்ல.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, கோதை
யாறின் 2 மின் நிலையங்களும் முழுமையாக ஓடிக் கொண்டிருக்
கின்றன. ஒரு நாளைக்கு 10 லட்சம் யூனிட்டுகளென்று, 120 நாட்
களுக்குத் தயார் செய்யக்கூடிய தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: ரிசர்வாயரில் நிறையத் தண்ணீர்
இருக்கிறது, அந்த இயந்திரங்கள் ஓடுகின்றனவென்று அமைச்சர
வர்கள் சொன்னதற்கு சந்தோஷம். அடுத்தபடியாக,
நெய்வேலியில் கோடிக் கணக்கான பணத்தைப் போட்டிருக்
கிறோம். அந்தத் திட்டத்தை நாமே நடத்துவதாக இருந்தது.
நாங்கள் எல்லாம் பேரவை உறுப்பினர்களாக இருந்தபோது,
முதலமைச்சரோடு சேர்ந்து, பண்டித ஜவஹர்லால் நேரு
அவர்கள் இருந்தபோது, அங்கெல்லாம் சென்று பார்த்தோம்.
பின்னர் மத்திய அரசாங்கமே அதை எடுத்துச் செய்ய
வேண்டுமென்று மாற்றி விட்டார்கள். முதலில் மாநில
அரசாங்கம் தான் ஆரம்பித்தது. அந்தத் திட்டத்தில் ஏன்
இம்மாதிரி மின்சாரம் உற்பத்தி செய்வதன் அளவு குறைய

அரசை அணுகியது. அந்த நிலத்தை தியாசாபிகல் சொசைடி
யினர் கொடுக்க மறுப்புத் தெரிவித்தார்கள். மறுப்புத் தெரிவித்த
வுடன், அதைப்பற்றி மாநில அரசு பரிசிலனை தொடங்கியவுடன்
என்ன செய்தார்கள்? அப்பாலே நடந்த வேலைதான் மிகவும்
சங்கடமானது. வீட்டு வசதி வாரியத்திற்கு அதைக் கொடுக்கக்
கூடாது என்று மறுப்புத் தெரிவித்துவிட்டு, இடையிலே 56-1,
56-2 என்கிற சர்வேயிலே ஒவ்வொன்றும் 1½ கிரவுண்டிலிருந்து
3½ கிரவுண்டு வரையுள்ள 191 கிரவுண்டுகளை மனை ஒன்றுக்கு 8
ஆயிரம் ரூபாய் விதம் சென்னையிலே உள்ள தனிப்பட்ட ஒரு நிறு
வனத்திற்கு, சென்னை ரியல் எஸ்டேட் என்ற நிறுவனத்திற்கு,
விற்று பத்திரம் ஒன்றினை எழுதிக் கொடுத்துவிட்டார்கள். வீட்டு
வசதி வாரியம் அதைக் கையகப்படுத்துகிற நடவடிக்கையிலிருந்து
தப்பித்துக்கொள்ள 4—6—1971 முதல் 8—6—1971-க்குள் தனிப்
பட்ட நிறுவனமான ரியல் எஸ்டேட்டுக்கு அவசர அவசரமாகப்
பத்திரம் ஒன்றினை எழுதிக் கொடுத்ததுபற்றி கலெக்டர் மூலம்
நமக்குத் தகவல் வந்தது. இது உண்மை என்பதற்கு உதாரணம்
சொல்ல வேண்டுமானால், அந்த ரியல் எஸ்டேட் என்ற
நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு ஜூலை 1972-லே ஒரு
முறையீடு செய்துகொண்டார்கள், "வீட்டு வசதி வாரியம் அந்த
சொசைடியினுடைய நிலத்தைக் கையகப்படுத்த உத்தேசித்திருக்
கிறதாம், அதிலே நாங்கள் 191 கிரவுண்ட் நிலத்தை வாங்கியிருக்
கிறோம். அதை விட்டு விட்டு கையகப்படுத்திக் கொள்ளுங்கள்",
என்று அவர்கள் அரசுக்கு ஒரு முறையீட்டைச் செய்துகொண்டி
ருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு இருக்கிற சங்க
டத்தை, தயக்கத்தை மறுப்பைத் தெரிவிக்கிற நேரத்தில் அரசு
அதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிற நேரத்தில் இடையில்
191 கிரவுண்டுகளை விற்று விட முயற்சிப்பது என்பது சரியான
தல்ல. ஒரு பெரிய புனிதமான சொசைடி என்று சொல்கிற
இந்த சொசைடி சார்பாக இந்தத் தவறு நடைபெற்றிருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : அவர்கள் வாங்கினதா இந்த நிலம்?
அல்லது சர்க்கார் 'அசைன்' பண்ணினதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பழைய நிலம்.
அந்த விவரங்கள் அவ்வளவாக எனக்குத் தெரியாது.





திண்டுக்கல்லைப் பற்றிச் சொன்னார்கள்.
கடைசியாக, திண்டுக்கல் தேர்தலுக்குத் தேதி நிர்ணயிக்கவில்லை. முதலிலேயே
திண்டுக்கல் தேர்தலுக்குத் தேதி நிர்ணயிக்கவில்லை. முதலிலேயே
திண்டுக்கல்லில் திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்துவிடும்,
தோற்றுவிடும், கவிழ்ந்துவிடும் என்று எல்லாக் கட்சிகளும்
சொன்னார்கள். ஆளும் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ்,
அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி, எல்லாக் கட்சிக்காரர்களும் சொன்
னார்கள். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன்
தன்னைச் சொல்லவில்லை என்று வருத்தப்படுகிறார். தோற்றுவிடும்,
தோற்றுவிடுமென்கிறார்கள். பிறகு கொஞ்ச நாளைக்குப் பிறகு 10
நாள் பரபரப்பு அடங்கிய பிறகு, திண்டுக்கல்லிலே தவறான வாக்
காளர்கள் பதிவாகியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 1 லட்சம்
வாக்குகள் தவறான வாக்குகள் என்று சொன்னார்கள். நான்
சட்டப் பேரவையிலே சொன்னேன். ஒரு லட்சம் வாக்குகள்
இல்லை. மொத்தம் 11 ஆயிரம் வாக்குகள். அந்த வாக்குகள் பரி
சீலிக்கப்படுகின்றன. நாகர்கோவில் தேர்தலிலே கிட்டத்தட்ட
50 ஆயிரம் வாக்குகள் சேர்க்கப்பட்டன. உப தேர்தலுக்காகச்
சேர்க்கப்பட்டன. அதைப்பற்றியெல்லாம் பிரச்சினை எழவில்லை.
யாரும் எழுப்பவில்லை. ஆனால் இங்கே 11 ஆயிரம் வாக்காளர்கள்
சேர்க்கப்பட்ட நேரத்தில், அதை இவ்வளவு பெரிய பிரச்சினை
யாக்கியிருக்கிறார்கள் என்று நான் சட்டசபையிலே கூட எடுத்துச்
சொன்னேன். இதற்காக அங்கிருந்து ஒரு அதிகாரிகூட வந்தார்.
யாரும் எதிர்க்கவில்லை வந்ததை. தாராளமாக வரட்டும், வந்து
பரிசீலிக்கட்டும் என்று விட்டோம். அவர்களும் வந்தார்கள்.
ஒரு லட்சம் வாக்காளர்கள் தவறுதலாகச் சேர்க்கப்
பட்டிருக்கிறார்களாவென்று நிருபர்கள் கேட்டார்கள். கேட்டதற்கு
அந்த அதிகாரி சொல்லியிருக்கிறார் ஒரு லட்சம் வாக்
காளர்கள் சேர்க்கப்பட்டிருந்தால், அவர்களுடைய பெயர்கள்,
முகவரிகள் இருக்கவேண்டுமே, அவைகளெல்லாம் எதுவும்
இல்லையே என்று அவர்கள் சொன்னார்கள். அதற்கு மேல் அவர்
சொன்னால் அரசியலாகிவிடும் என்பதற்காக, ஒரு அதிகாரி எந்த
முறையில் சொல்லவேண்டுமோ அந்த முறையிலே, அதிகாரி,
ஒரு லட்சம் வாக்காளர்களுக்கு முகவரி கிடையாது, பெயர்
கிடையாது என்று சொன்னார். அதற்குப் பிறகும், நம்முடைய
எதிர்க்கட்சித் தலைவரவர்கள் திண்டுக்கல்லில் ஒரு கூட்டத்தில்
அவருடைய கட்சித் தலைவர்களோடு சேர்ந்துகொண்டு பேசுகிற
நேரத்தில், ஏதோ வாக்காளர் பட்டியலில் தவறு நடந்துவிட்ட
தாகச் சொல்கிறார்கள் என்றால் உள்ளபடியே நான் வேதனைப்படு

கிறேன். கேட்டால் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது போல் சொல்லக்கூடும். என்னுடைய சூழ்நிலை காரணமாக அப்படி நான் சொன்னேன் என்று அவர்கள் சொல்லக்கூடும். 11 ஆயிரம் பேர். நான்கு பேர், 5 பேர், 10 பேர் ஏதோ தவறு செய்திருப்பார்களானால், அதற்காக அவர்களுடைய நாளை நீட்டித்துக் கொடுத்திருக்கிறார்கள். நாளும் நீட்டிக்கப்பட்டு அதுவும் அறிவிக்கப்பட்டது. தவறு இருந்தால் திருத்திக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்த பிறகும், இப்படித் தேவையில்லாத ஒரு பிரசாரம் செய்வது முறைதானா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு தேர்தலுக்கும் இதைச் சொல்கிறோம். ஆட்சேபணை மனுக்கள் வந்திருப்பது சட்ட அமைச்சர் சொல்கிறபடி 300 மனுக்கள்தான். இப்படி 11 ஆயிரம் என்பதில் 300 மனுக்கள்தான் வந்திருக்கின்றன. இன்னும் தேதி நீட்டிக்கப்பட்டது. ஆட்சேபணை மனுக்கள் இருந்தால், கொடுங்கள் என்று நாள் நீட்டிக்கப்பட்டது.

**திரு. கே. ராஜாராம் :** ஆட்சேபணை மனுக்கள் கொடுத்தவர்கள் நேரில் வந்து சொன்னதைத்தான் நான் சொல்கிறேனே தவிர, நானாக இட்டுக்கட்டிச் சொல்லவில்லை. நேரில் வந்து அவர்கள் பொறுப்போடு சொன்னதைத்தான் நான் எடுத்துச் சொன்னேனே தவிர, சொல்லாததை நாங்களாகச் சொல்வதாக அர்த்தமில்லை. அந்த ஆட்சேபணை மனுக்கள்—இப்போது தொழில் அமைச்சர், சட்ட அமைச்சர்கூட வந்து விட்டார்—300 ஆட்சேபணை மனுக்கள் வந்திருக்கின்றன என்று சட்ட அமைச்சர் சொல்கிறார்கள். என்னிடம் நேரில் வந்து 4, 5 பேர் சொன்னார்கள் இன்னின்ன குறைகள் ஏற்பட்டிருப்பதாக. அதைத்தான் நான் எடுத்துச் சொன்னேனே ஒழிய வேறு இல்லை.

6-30 பி.ப.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பிறகு சொன்னார்கள். அதிகாரிகளையெல்லாம் மாற்றிவிட்டார்கள் என்று சொன்னார்கள். திருச்சியிலேகூட அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார் ஒரு வாரத்திற்கு முன்பு. சென்னையிலே போலீஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் ஒரு வாரத்திற்குள்ளாக. ஆகவே அதிகாரிகளை மாற்றுவது இயல்பாக எப்போதும் நடைபெறுகிற காரியம். இன்னும் தேர்தலுக்கு தேதியே வைக்கவில்லை, எந்தவிதமான காரியமும் நடைபெறவில்லை. அதற்குள்ளாக திண்டுக்கல், கள்ள ஓட்டு, கள்ள வாக்கு, லட்சம் வாக்கு, தவறான வாக்கு என்றெல்லாம்



சொல்லுவது பொறுப்பான அரசியல் கட்சிகளுக்கு உகந்ததல்ல. இதில் இன்னொரு வேடிக்கை. நம்முடைய திரு. பொன்னப்ப நாடார்கூட பேரவையிலே சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களெல்லாம்கூடச் சொல்லுகிறார்கள். அவர்களுடைய ஏடுகளெல்லாம் எழுதுகின்றன. "மத்திய சர்க்காரிலிருந்து போலீஸ் வரவேண்டும் தேர்தலை நடத்த. மத்திய சர்க்கார் அதிகாரிகள் வந்து தேர்தல் நடத்த வேண்டும்" என்று. திடீரென்று இவர்களுக்கு அந்த மத்திய சர்க்கார் பற்று எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அதே மத்திய சர்க்கார் நடத்திய தேர்தல்தான் 1971-ம் ஆண்டிற்கான தேர்தல். இப்போதிருக்கின்ற ஸ்தாபன காங்கிரஸ்காரர்களெல்லாம் சேர்ந்துகொண்டு பேசினார்கள். "அதிலே ஒரு ரசாயன மையை வைத்து விட்டார்கள். ரஷ்யாவிலிருந்து அந்த மை வந்தது. ஆகவே தான் ஜெயித்து விட்டார்கள்", என்று சொன்னார்கள். இப்போது அவர்களை அழைப்பதற்கு என்ன காரணம்? அவர்கள் வந்தால், அந்த மையோடு வர மாட்டார்களா? (சிரிப்பு). என்ன காரணம்? எனக்குப் புரியவில்லை. இப்படி எதற்கெடுத்தாலும், மாநிலத்தினுடைய உரிமைகளைக் கொண்டுபோய் நாமே வலுவிலே மத்திய சர்க்காருடைய கையிலே கொடுப்பது முறையானது அல்ல. மத்திய சர்க்காருக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. அந்தப் பொறுப்புக்களை நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். நாம் கேட்கின்ற மாநில சுயாட்சியில் இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு, இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கு, இந்தியாவினுடைய பலத்திற்கு ஊறு தேடாத வகையில் பொறுப்புக்கள், அதிகாரங்கள், உரிமைகள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிற அதே நேரத்தில், இன்றைக்கு இருக்கின்ற நிலைமைகளை நாம் உணர்ந்து கொள்ளவும், அந்த நிலைமைகளுக்கேற்ப நடக்கவும் தயாராக இருக்கும்போது, வேண்டுமென்றே எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் வர வேண்டும், மத்திய சர்க்கார் அதிகாரி வர வேண்டுமென்று சொல்லிக் கொண்டேயிருந்தால், அது மாநில உரிமைகளை நாமே குழி தோண்டிப் புதைப்பதற்கு சமமாகிவிடும். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகமே இந்த உலகம் உள்ளளவும் ஆண்டு கொண்டு போகப் போகிறது, வேறு கட்சி இங்கே வரவே வர முடியாது என்ற எண்ணத்திலே, தவறாகக் கருதிக் கொண்டு மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டாம் என்று நான்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 8

மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய தலைவரையும் கேட்டுக் கொள்வேன். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரவர்களையும் நான் கேட்டுக்கொள்வேன். ஆகவே மாநிலத்தினுடைய உரிமைகள் முக்கியமாக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான, நான் இங்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே நம் உரிமைகள் நிதி நிலையிலே, மற்ற விவரங்களிலே எந்தெந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன, என்பதை விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்பதை எடுத்துக் காட்டி, இந்த அறிக்கையின் மீது, இந்த மன்றத்தினுடைய நல்லறிவு வாய்ந்த பெரியவர்கள், சான்றோர்கள், தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இந்த அரசினுடைய காரியத்திற்காக ஊக்க உணர்ச்சி தருகின்ற வகையிலே உதவியதற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அடிகளார் அவர்கள் ஆலயப் பணியாளர்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய திரு. பாங்குசம் அவர்கள் காங்கு மஸ்தூர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதனுடைய அமைச்சர்கள் இருவரும் விரைவிலேயே அவைகளைப்பற்றி யோசித்து முடிவெடுத்து, பேரவையிலும், மேலவையிலும் நல்ல முடிவுகளை அறிவிப்பார்கள் என்று அவர்கள் இருவருக்கும் சொல்லி இந்த அளவிலே முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் 20-ந் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பி.ப.
6-35

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.



## இணைப்பு

(262-ஆம் பக்கத்தில் 205-ம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.)

In January 1971, the Tamil Nadu Government Nursing Association requested the Government to grant them (i) compulsory weekly off ; (ii) eight hours duty ; and (iii) three shift system.

2. At present, the Heads of Institutions are free to arrange the duty hours of Nursing personnel to suit the hospital working conditions, either by shift system or by broken periods according to the availability of the Nurses and the needs of Hospitals, keeping in view that the working hours of Nurses should be limited as far as possible to 48 hours a week. Weekly day off, is granted to most of the Nurses in the Hospitals. However, necessary instructions have been issued to all subordinate officers by the Director of Health Services and Family Planning, Madras and the Director of Medical Education, emphasising the need for the grant of weekly day off/night off for the nursing staff.

A—*cont.*

ANBAZHAGAN, THE HON. THIRU K.—
Budget for 1973 74, general discussion on .. 300, 302, 305, 312, 381
Statement under rule 82 of Council Rules *re* B. Pharmacy students, Government's action on representations from .. .. .. .. .. 94—98

ANTI-DEFECTION LAW—
Question *re* State Government's suggestion sent to Central Government *re* .. .. .. 88—90

ARIVAZHAGAN, THIRU K.—
Budget for 1973-74, general discussion on .. 268

ARIVUDAINAMBI, PULAVAR O.—
Budget for 1973-74, general discussion on .. 129, 298, 314—326

ARUMUGASWAMI, THIRU M.—
Budget for 1973-74, general discussion on .. 228, 335—351

AYYANAN AMBALAM, THIRU—
Budget for 1973-74, general discussion on .. 260—271, 383, 384

B

BAKKER, THIRU M.—
Budget for 1973-74, general discussion on .. 72—80

BALARAMAN, THIRU L.—
Budget for 1973-74, general discussion on .. 42, 143—149

BOOKS AND PUBLICATIONS—
Question *re* 'Agara Mudali' Research Book by Devaneyappavanar (Dictionary), financial assistance by Tamil Development Department for publication of 83—85



B—*cont.*

B. PHARMACY STUDENTS—
Statement under rule 82 *re* Government's action on representations from .. .. .. .. 94—98

BUDGET FOR 1973-74—
General discussion on .. .. .. .. 31—80, 104—160, 213—271, 295—351, 376—430

BUILDINGS—
Question *re* Government (Board) High School—in Kanyakumari district, appointment of separate Junior Engineer for maintenance of .. .. 7—9

BUSINESS ADVISORY COMMITTEE—
*See* Committees.

BUSINESS OF THE HOUSE—
Suspension of—under rule 205 .. .. .. 17, 18

C

CENTRAL COLLEGE OF KARNATAK MUSIC—
*See* Colleges

CHAIRMAN, MR.—
Adjournment motion *re*—
Graduate Teachers' agitation before Secretariat and consequent distress caused .. .. .. 191—192, 199, 374
Stoppage of supply of diesel oil and consequent distress to consumers .. .. .. .. 371, 372, 373—374
Announcement *re*—
Business Advisory Committee's decision .. 200
Questions (Unstarred) Nos. 23 to 26, answers to 290

PAGES

C—*cont.*

CHAIRMAN, Mr.—*cont.*

Budget for 1973-74, general discussion on .. .. 35, 37, 61, 62, 220, 224, 228, 305, 309, 311, 321, 324, 325, 326, 344, 348, 376, 396, 400, 430

Point of order *re* Question-hour .. .. .. 12, 13, 14

Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. .. 22, 23

COLLEGE(S)—

Question *re*—

Central College of Karnatak Music, number of persons trained in Nadaswaram Training School attached to—during last three years .. .. 181—182

Government College for Women, Mint, Madras, sitting of P.U.C. students on floor during class hours .. .. .. .. 86

Law College, reasons for Students' Hunger Strike in September 1972 .. .. .. .. 171—172

Muthurangam Arts College, North Arcot district, introduction of M.A. Degree course in .. 6, 7

Rajah Serfoji Government College, Thanjavur, fast by students on 31st August 1972 .. .. 281—283

Rajah Serfoji Government College, Thanjavur, provision of more accommodation in hostel .. 283—286

Tamil Colleges, financial assistance for construction of buildings for .. .. .. .. 85—86

COMMITTEE(S)—

Business Advisory Committee, decision of .. 200

Public Accounts Committee's Fifth Report on Audit Report of Accounts of Electricity Board for 1966-67 to 1968-69, laid on the table .. .. .. 162



PAGES

C—*cont.*

COOKING GAS—

Supply of—for domestic consumption, Minister's attention called to difficulties experienced by public on account of non-availability of cylinders for .. 291—292

COUNCIL RULES—

Suspension of rule 42 (5) .. .. .. 201

COUNTERFEITING—

Question *re* number of cases registered by Police from 1967, year-war .. .. .. .. .. 1—5

D

DAMODARAN, Thiru A. R.—

Adjournment motion *re* stoppage of supply of diesel oil and consequent distress to consumers .. .. 371—372, 374

Non-availability of high speed diesel oil and petrol in Coimbatore, the Nilgiris, Salem, Tiruchirappalli and Madurai districts and consequent hardship to agriculturists, transport and other consumers, calling Minister's attention to .. .. .. 374, 375—376

DEPUTY CHAIRMAN—

Budget for 1973-74, general discussion on .. 43, 252, 253, 301, 304

DIESEL OIL—

Adjournment motion *re* stoppage of supply of—and consequent distress to consumers .. .. 371—374

Non-availability of high speed diesel oil and petrol in Coimbatore, the Nilgiris, Salem, Tiruchirappalli and Madurai districts and consequent hardship caused to agriculturists, transport and other consumers, Minister's attention called to .. .. .. 374—376

PAGES

D—*cont.*

DRINKS—

Question *re* dead ants in soft— complaint to Health Officer, Madras Corporation, during August 1972 .. 92—94

DRUGS—

Question *re* drugs used for preparing sub-standard drinks in Madras City, drive by Police to locate source .. .. .. .. .. 289

E

ENTERTAINMENTS TAX—

Exemption of benefit film shows conducted in Madras City and in districts in connection with "Chief Minister Eye Camp Fund" from—, notification laid on the table .. .. .. .. .. 161

Exemption of benefit film shows conducted in Madras City and in districts in connection with Flag Day Celebrations from—, notification laid on the table 160—161

Exemption of film show at Devi Theatre organised by Ceylon Students' Association for establishing Recreation Centre from—, notification laid on the table 160

Exemption of film show organised by Muslim Women's Association Matriculation School at Devi Theatre, Madras, from—, notification laid on the table .. 161

F

FACTORIES RULES, 1950—

Amendment to—, notification laid on the table .. 162

FINGER PRINT BUREAU, VELLORE—

Question *re* opening of .. .. .. .. 289

FOOD—

Rise in prices of essential commodities and consequent distress to the public, Minister's attention called to 292—295



PAGES

F—*cont.*

FREEDOM FIGHTERS—

Question *re* sanction of pension to—, applications during 1967-1971 .. .. .. .. 163—168

G

GANAPATHI, THIRU K. S.—

Adjournment motion *re* Graduate Teachers' agitation before Secretariat and consequent distress caused 194

Budget for 1973-74, general discussion on .. .. 264

GEORGE KOMAGAN, THIRU—

Budget for 1973-74, general discussion on .. .. 149—157

GOVERNMENT SERVANTS—

Question *re*—

Relaxation of recruitment procedure in case of sons and daughters of—dying in harness .. .. 274

Retired Officers' Association, Madras, details of representation from—, about May 1972 .. 168—171

H

HANIFA, NAGORE, E. M.—

Budget for 1973-74, general discussion on .. .. 38—42

HOSTEL(S)—

Question *re* Raja Serfoji Government College, Thanjavur, provision of more accommodation in hostel 283—286

I

INDUSTRIAL TRAINING INSTITUTE—

Question *re* trainees of—held about 18th December 1972 .. .. .. .. .. 363—365

INDUSTRIES—

Question *re* Lac Industry, details of incentives given to private and public sectors .. .. .. 368—369

PAGES

I—*cont.*

ISVARMURTI, THIRU V.—
Adjournment motion *re* Graduate Teachers' agitation before Secretariat and consequent distress caused .. 193—194, 374

Polytechnic students, calling Minister's attention to strike of .. .. .. .. .. 203, 208

J

JAILS—
Question *re* Central Jail in Tirunelveli district, fast by political workers about 26th January 1973 .. 365—368

JAYARAMA REDDIAR, THIRU S.—
Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. 23

K

KARUNANIDHI, THE HON. DR. M.—
Adjournment motion *re* Graduate Teachers' agitation before Secretariat and consequent distress caused 194—199

Budget for 1973-74, general discussion on .. .. 62, 113—114, 115, 116, 147, 216—217, 220, 343—344, 350, 401—430

Council Rules, suspension of rule 42 (5) .. .. 201

Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. .. 26—28

Statement under rule 82 of Council Rules *re* regularisation of encroachment on lands in Gudalur .. 14—16

KATTOOR GOPAL, THIRU—
Budget for 1973-74, general discussion on .. .. 31—33

Workers affected by power cut, calling Minister's attention to necessity for advances from Provident Fund 208—209



PAGES

K—*cont.*

KEROSENE—
Shortage of—, Minister's attention called to consequent hardship to consumers .. .. .. 210—213

KHADI AND VILLAGE INDUSTRIES BOARD ACT, 1959—
Extension of term of office of Members of—for one month from 3rd February 1973, notification laid on the table .. .. .. .. .. 161

KOLAPPA, THIRU C. R.—
Budget for 1973-74, general discussion on .. .. 305—308

KRISHNASWAMY NAIDU, THIRU R.—
Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. 28—29

KUNDRAKKUDI ADIGALAR, THAVATHIRU—
Budget for 1973-74, general discussion on .. .. 129—139, 140—143, 300

L

LAC—
Question *re* places and quantity of production .. 369

LAC INDUSTRY—
*See* Industries.

LANDS—
Statement under rule 82 *re* assignment of—in Kanyakumari, Tirunelveli and Shencottah taluks .. 201—203

Statement under rule 82 *re* regularisation of encroachments on—in Gudalur .. .. .. 14—16

LIBRARIES—
Question *re* Saraswathi Mahal Library, Thanjavur, upgrading of .. .. .. .. .. 172—176

PAGES

## M

MADHAVAN, THE HON. THIRU S.—
Business of the House—
Suspension of—under rule 205 .. .. .. 17, 18
Cooking gas for domestic consumption, statement *re* difficulties experienced by public on account of non-availability of cylinders for supply of .. .. 292
Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. .. 18—22, 29—30

MADRAS INSTITUTE OF TECHNOLOGY—
Question *re* representation of employees of—to Government regarding grievances during September 1972 .. .. .. .. .. 286—288

MANI, THIRU K. S.—
Budget for 1973-74, general discussion on .. 120, 251—257

MASILAMANI, THIRU M.—
Budget for 1973-74, general discussion on .. .. 257—260

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—
Cooking gas for domestic consumption, calling attention to difficulties experienced by public on account of non-availability of cylinders for supply of .. 291—292
Hindu Nadar Primary School, Agaippaikulam, Tirunelveli district, calling attention to withdrawal of recognition .. .. .. .. 290—291
Kerosene, calling attention to shortage of—and consequent hardship to consumers .. .. .. 210—213
Non-availability of high speed diesel oil and petrol in Coimbatore, the Nilgiris, Salem, Tiruchirappalli and Madurai districts and consequent hardship to agriculturists, transport and other consumers, calling attention to .. .. .. .. 374—376



PAGES

M—*cont.*

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*
Polytechnic students, calling attention to strike by 203—208
Rise in prices of essential commodities and consequent distress to the public, calling attention to .. 292—295
Workers affected by power cut, calling attention to necessity for advances from Provident Fund .. 208—209

MODEL HIGH SCHOOL—
*See* Schools.

MUNICIPALITIES—
Question *re* employees of Kancheepuram Municipality, representation for refixation of pay in new pay scales .. .. .. .. .. 11, 12

MUTHURANGAM ARTS COLLEGE—
*See* Colleges.

MUTHUSWAMY, THIRU S.—
Adjournment motion *re* Graduate Teachers' agitation before Secretariat and consequent distress caused 192, 199
Budget for 1973-74, general discussion on .. .. 70, 71, 128, 213—228, 320, 322, 325, 326

## N

NADASWARAM TRAINING SCHOOL—
Question *re* number of persons trained in—attached to Central College of Karnatak Music during last 3 years .. .. .. .. .. 181—182

NARAYANASAMI, THE HON. THIRU MANNAI P.—
Budget for 1973-74, general discussion on .. .. 219, 298, 309
Kerosene, statement *re* shortage of—and consequent hardship to consumers .. .. .. .. 210—213
Rise in prices of essential commodities and consequent distress to the public, statement *re* .. .. 293—295

PAGES

N—*cont.*

NARAYANASWAMY, THIRU D. V.—
Budget for 1973-74, general discussion on .. .. 49—54

NATARAJAN, THE HON. THIRU N. V.—
Workers affected by power cut, statement *re* necessity for advances from Provident Fund .. .. 209

NEDUNCHEZHIYAN, THE HON. DR. V. R.—
Polytechnic students, statement *re* strike by .. 203—208
Statement *re* withdrawal of recognition to Hindu Nadar Primary School, Agaippaikulam, Tirunelveli district 290—291
Statement under rule 82 of the Council Rules *re*—
Correction of information *re* scale of pay of Graduate Teachers of Pondicherry .. .. .. 295
Decision on demands of Graduate Teachers .. 16—17

NURSES—
Question *re* demand for reduction in working hours of—in Government Hospitals .. .. .. 362—363

P

PANCHAYAT UNION—
Question *re* teachers in Palladam—, non-declaration of probation .. .. .. .. .. 275—277

PANCHAYAT(S)—
Question *re*—
Ambasamudram Panchayat, irregularities in election to co-opt woman member to—during 1970 .. 357—359
Ambasamudram Panchayat, representation for prosecution of President during 1971-72 .. .. 356—357

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—
Agricultural Land Record of Tenancy Rights Act, 1969, amendments to Revenue Department Notification II-1 No. 3987 (b) of 1971, dated 7th September 1971 (G.O. Ms. No. 2967, Revenue, dated 15th November 1972) .. .. .. .. 161



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*
Committee on Public Accounts—
Committee's Fifth Report on Audit Report of Accounts of Electricity Board for 1966-67 to 1968-69 .. .. .. .. 162

Entertainments Tax—
Exemption of benefit film shows conducted in Madras City and in districts in connection with "Chief Minister Eye Camp Fund" from—(G.O. R. No. 2219, Revenue, dated 3rd October 1972) .. 161

Exemption of benefit film shows conducted in Madras City and in districts in connection with Flag Day Celebrations from—(G.O. R. No. 2492, Revenue, dated 16th November 1972) .. .. 160—161

Exemption of film show at Devi Theatre organised by Ceylon Students' Association for establishing Recreation Centre from—(G.O. R. No. 213, Revenue, dated 1st February 1973) .. 160

Exemption of film show organised by Muslim Women's Association Matriculation School at Devi Theatre, Madras, on 21st January 1973, from—(G.O. R. No. 109, Revenue, dated 17th January 1973) .. .. .. .. .. 161

Factories Rules, 1950, amendment to—(G.O. Ms. No. 1333, Labour and Employment, dated 7th November 1972) .. .. .. .. 162

Khadi and Village Industries Board Act, 1959, extension of term of office of Members of—for one month from 3rd February 1973 (G.O. Ms. No. 191, Rural Development and Local Administration, dated 1st February 1973) .. .. .. .. 161

Questions (unstarred) Nos. 23 to 26, answers to .. 351

State Housing Board, statement of guarantees given by Government to .. .. .. .. 161

PAGES

P—*cont.*

PARAMBIKULAM-ALIYAR PROJECT—
Statement under rule 82 *re* representations against levy of penal water cess, for removal of crop restrictions, etc. .. .. .. .. .. 98—104

PARAMBU HILLS—
Question *re* development of—as a tourist resort .. 183—184

PARANGUSAM, THIRU G.—
Budget for 1973-74, general discussion on .. .. 122—127, 128, 129

PENSION—
Question *re*—
Liberalised Pension Scheme, extension to Aided College teachers .. .. .. .. 180—181
Sanction of—to Freedom Fighters, applications during 1967-71 .. .. .. .. 163—168

PHYSICAL EDUCATION TEACHERS—
*See* Teachers.

POINT OF ORDER *re*—
Question-hour .. .. .. .. .. 12—14

POLICE—
Question *re*—
Attack on Tiruchendur Temple staff by policemen about 30th May 1972 .. .. .. 5, 6
Finger Print Bureau, Vellore, opening of .. 289
Number of counter-feiting cases registered by—from 1967 year-war .. .. .. .. 1—5
Police custody, taking of persons into—in June 1972 by mistake for Thiru Narayanaswamy Nayudu of Agriculturists Association .. .. .. 289
Porters at Central Station, Madras, nuisance caused by drunken .. .. .. .. 90—92



PAGES

P—*cont.*

POLYTECHNIC—
Strike of Polytechnic students, Minister's attention called to .. .. .. .. .. 203—208

PUBLIC ACCOUNTS COMMITTEE—
*See* Committees.

PUBLIC SERVICES—
Question *re* Government servants dying in harness, relaxation of recruitment procedure in case of sons and daughters of .. .. .. .. 274

Q

QUESTIONS AND ANSWERS—
Balaraman, Thiru L.—
Question *re*—
Hunger strike by Madras Law College students in September 1972, reason for .. .. 171—172
Muthurangam Arts College, North Arcot district, introduction of M.A. Degree course in .. 6, 7

Isvarmurti, Thiru V.—
Question *re*—
Ambasamudram Panchayat, irregularities in election to co-opt. woman member to—during 1970 357—359
Ambasamudram Panchayat, representation for prosecution of President during 1971-72 .. 356—357
Attack on Tiruchendur Temple staff by policemen about 30th May 1972 .. .. .. 5—6
Defence Raffle tickets worth about Rs. 3,000, loss by officers during 1972 .. .. .. 288
Drugs used for preparing sub-standard drinks in Madras City, drive by Police to locate source 289
Finger Print Bureau, Vellore, opening of .. 289

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

வேண்டுமென்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது
மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் நடந்து வருகிறது.
அவர்களுக்குப் பணம் இல்லையா, வசதிக் குறைவா, என்ன
குறைவு அவர்களுக்கு இருக்கிறதென்று புரியவில்லை. ஏன்
அதைப் புறக்கணிக்க வேண்டுமென்று தெரியவில்லை.
லிக்னைட்டைத் தோண்டி எடுக்கக்கூடிய இயந்திர சாதனங்கள்
இரண்டொன்று வேண்டுமென்று சொல்கிறார்கள்.
கோடிக்கணக்கான ரூபாயாகுமென்று அதற்கு
அதைத் தருவித்துக் கொடுப்பதில் சொல்லப்படுகிறது.
தெரியவில்லை. அதைக் கவனிக்காமல் கஷ்டமிருப்பதாகத்
600 மெகாவாட் வரவேண்டிய இடத்திலிருந்து 50 மெகாவாட்தான் விட்டுவிட்டதால்
வந்துகொண்டிருந்தது. நாம் அதிகமாகக் கூச்சல் போட
ஆரம்பித்த பிறகு, திடீரென்று 10 தினங்களுக்கு முன்னால் 300
மெகாவாட் வருகிறதென்று சொல்லப்படுகிறது.
அது தாமதமாக வர வேண்டும்? ஏன் அப்படி.
ஓடிக்கொண்டிருந்ததில், எப்படி 300 மெகா வாட்டை உற்பத்தி 50 மெகாவாட்
பண்ணினார்களென்பதை அறிய விரும்புகிறேன்.
குறைத்து உற்பத்தி பண்ணியதற்கு என்ன காரணம்? திடீரென்று அவர்கள்
ஏன் அப்படிச் செய்தார்களென்பதற்கான காரணத்தை என்றால்
புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே மத்திய அரசாங்கத்தைச்
சேர்ந்தவர்கள் தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்க
முடியாது. நெய்வேலியைப் பொறுத்த வரையில்,
திறனுகிய 600 மெகா வாட்டை அது நமக்குக் கொடுத்துக் அதன்
கொண்டிருந்தால், இந்த மின் வெட்டு வந்திருக்காது.
நெய்வேலி விஷயத்தில் பெரிய மனது வைத்து, இன்னும் இரண்டு அவர்கள்
கோடி ரூபாயானாலும் பரவாயில்லை, அதிக சாதனங்களை
வாங்கிக் கொடுத்து நமக்கு பவர் சப்ளையைக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்தைச்
சேர்ந்தவர்கள் மாநில அரசைக் குறை சொல்வதும், மாநில
அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசாங்கத்தைக் குறை
சொல்வதுமாக இருக்க, கடைசியில் விவசாயிகள், நாட்டு மக்கள்
கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே யார்
பொறுப்பாகயிருந்தாலும், எங்களுக்கு வேண்டியது மின்சக்தி. அதற்குப்
அது இல்லாததால் தொழில்கள் நலிகின்றன. தமிழ் நாட்டில்
தொழில்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. இன்று நமது மாநிலத்
தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள்



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

இன்று காலை பார்லிமெண்டில் பதில் சொன்னதாக பத்திரிகையும்
ரேடியோவில் கேட்டேன். இந்த மின்வெட்டினால் தொழிலில் பி.ப. 5–10
மிகவும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.
அவர்கள் தொழில் அபிவிருத்தி மந்திரியானதாலே அதைச்
சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய மாநிலத்தை அது
எவ்வளவு பாதிக்கிறது என்று தெரிந்து, பிரத்யேகமாக இந்த
நெய்வேலிக்கு வேண்டிய பணத்தை அவர்கள் கொடுத்து,
இயந்திரங்கள் வாங்கிக் கொடுத்து, அதிகமாக லிக்னைட் வெட்டி
எடுப்பதற்கு ஏற்பாடு செய்து, இந்த 600 மெகாவாட் கிடைக்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு
வருஷங்களுக்கு முன்பு ஆரம்பித்த எண்ணூர் எக்ஸ்டென்ஷன்,
சேர்வலாறு மின் விசைத் திட்டம், சுருளியாறு, குந்தா 4-வது
கட்டம், நடுவட்டம் டைவர்ஸன் ஸ்கீம், காடம்பாறை பம்பட்
ஸ்டோரேஜ் ஸ்கீம் இவைகள் எல்லாம்
இதற்குள் முடிந்திருக்க வேண்டும். வேலை தாமதத்தால்
இவைகளில் எல்லாம் வேலையே நடைபெறவில்லை. அது ஏன்
நடைபெறவில்லை என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, மற்றவைகளுக்கெல்லாம் 'கிளியரன்ஸ்' கிடைக்கவில்லை. சுருளியாறு, காடம்பாறை திட்டத்திற்கு சென்ற மாதம் 'கிளியரன்ஸ்' கிடைத்திருக்கின்றது.

**திரு. கே. ராஜாராம்:** சுருளியாறைப் பொறுத்த வரையில், எனது மாவட்டத்தைச் சேர்ந்த இடம் ஆனதால், எனக்குக் கொஞ்சம் தெரியும். அங்கு உத்தியோகஸ்தர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டு வருஷம் இரண்டுக்கு மேல் ஆகின்றது. அங்கே பக்கத்து ஊரில் அவர்கள் குடியிருக்கின்றார்கள். வேலை ஒன்றும் நடக்காமல் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்போதாவது 'கிளியரன்ஸ்' கிடைத்திருக்கின்றது. இனிமேலாவது தாமதமில்லாமல் அந்த வேலையைச் செய்யும்படியாக அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். வெறும் 'கிளியரன்ஸ்' கிடைக்காத காரணத்தாலே, இதெல்லாம் தாமதமாகின்றது. காலாகாலத்தில் 'கிளியரன்ஸ்' கிடைத்திருந்தால், நமக்கு 504 மெகாவாட் கிடைத்திருக்கும். ஒன்று அல்ல, இரண்டு அல்ல, 504 மெகாவாட். இந்தத் திட்டம், எண்ணூர் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் 110, சேர்வலாறு ஹைட்ரோ எலக்டிரிக் ஸ்கீம் 30, சுருளியாறு 35, குந்தா 4-வது கட்டம் 110, நடுவட்டம் டைவர்ஸன் ஸ்கீம் 69,

PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*


Isvarmurti, Thiru V.—*cont.*

Question *re*—*cont.*

Government servants dying in harness, relaxation of recruitment procedure in case of sons and daughters of .. .. .. .. 274

Lac industry, incentives given to private and public sectors .. .. .. .. 368—369

Nurses in Government Hospitals, demand for reduction in working hours .. .. 362—363

Police custody, taking of persons into—in June 1972 by mistake for Thiru Narayanaswamy Nayudu of Agriculturists Association .. 289

Retired Officers' Association, Madras, details of representation from—about May 1972 .. 168—171

Roads, maintenance of more—by Government in Madras City .. .. .. .. 273—274

Krishnaswamy Naidu, Thiru R.—

Question *re*—

Car accidents in 1970, number of vehicles involved, and persons injured and dead in .. 184—191

Freedom fighters, applications for sanction of pension to—during 1967-1971 .. .. 163—168

Kundrakkudi Adigalar, Thavathiru—

Question *re*—

Central College of Karnatak Music, number of persons trained in Nadaswaram Training School attached to—during last three years .. 181—182

Parambu Hills, development as a tourist resort .. 183—184

Tamil Colleges, financial assistance for construction of buildings for .. .. .. 85—86

Young Men's Christian Association, grant sanctioned to .. .. .. .. 10—11




PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*


Muthuswamy, Thiru S.—

Question *re*—

'Agara Mudala' Research Book (Dictionary) by Devaneyappavanar, financial assistance by Tamil Development Department for publication of .. .. .. .. .. 83—85

Teachers in Palladam Panchayat Union, non-declaration of probation .. .. .. 275—277

Point of order *re* question-hour .. .. .. 12—14

Rajagopal, Thiru C. V.—

Question *re* employees of Kancheepuram Municipality, representation for refixation of pay in new pay scales .. .. .. .. 11—12

Rajah Iyer, Thiru M.—

Question *re*—

Boys High Schools, admission of girl students into 85—86

Model High School, running of a—in each district 277—281

Physical Education Teachers in aided schools, restriction on number of—based on strength of school .. .. .. .. 359—361

Tamil Pandits, Grade I, eligibility for revised scales of salary for Graduate Assistants in High Schools recommended by One Man Commission .. .. .. .. .. 9, 10

Teachers' Organisations recognised by Government, names of .. .. .. .. 176—180

Teachers in Municipal Schools retiring before 26th February 1970 and after, retirement benefits to .. .. .. .. 355—356

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Government (Board) High School buildings in Kanyakumari district, appointment of separate Junior Engineer for maintenance of .. 7—9

Graduate Teachers appointed to I Grade, delay in payment of arrears of pay to .. .. 87—88

PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Santosham, Thiru D.—

Question *re* Liberalised Pension Scheme, extension to Aided College Teachers .. .. .. 180—181

Swaminathan, Thiru G.—

Question *re*—

Counter-feiting cases registered by Police from 1967, year-war number of .. .. .. 1—5

Dead ants in soft drinks, complaint to Health Officer, Madras Corporation, during August 1972 .. .. .. 92—94

Government College for Women, Mint, Madras, sitting of P.U.C. students on floor during class hours .. .. .. .. 86

Madras Institute of Technology, representation of employees to Government regarding grievances during September 1972 .. .. 286—288

Rajah Serfoji Government College, Thanjavur, fast by students on 31st August 1972 .. 281—283

Rajah Serfoji Government College, Thanjavur, provision of more accommodation in hostel 283—286

Saraswathi Mahal Library, Thanjavur, upgrading of .. .. .. .. .. 172—176

Vellapandian, Thiru S.—

Question *re*—

Anti-Defection Law, State Government's suggestion to Central Government .. .. 88—90

Bus services in Madras, interruption at Moolakadai on 30th November 1972 .. .. 369—370



PAGES

Q—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Vellapandian, Thiru S.—*cont.*

Question *re*—*cont.*

Central Jail in Tirunelveli district, fast by political workers about 26th January 1973 .. 365—368

Dead ants in soft drinks, complaint to Health Officer, Madras Corporation, during August 1972 .. .. .. .. 92—94

Industrial Training Institute, trainees held about 18th December 1972 .. .. .. 363—365

Lac, places and quantity of production .. 369

Porters at Central Station, Madras, nuisance caused by drunken .. .. .. 90—92

Questions (unstarred) Nos. 23 to 26, answers to—, laid on the table .. .. .. .. 290, 351

R

RAFFLES—

Question *re* Defence Raffle tickets worth about Rs. 3,000, loss by officers during 1972 .. 288

RAILWAYS—

Question *re* porters at Central Station, Madras, nuisance caused by drunken .. .. 90—92

RAJAGOPAL, THIRU C. V.—

Budget for 1973-74, general discussion on .. .. 62—72, 300, 301, 302

RAJAH IYER, THIRU M.—

Budget for 1973-74, general discussion on .. .. 218

Hindu Nadar Primary School, Agaippaikulam, Tirunelveli district, calling Minister's attention to withdrawal of recognition .. .. .. 290, 291

Statement under rule 82 *re* Graduate Teachers' demands .. .. .. .. .. 17

PAGES

R—*cont.*

RAJAH SERFOJI GOVERNMENT COLLEGE, THANJAVUR—

*See* Colleges.

RAJARAM, THE HON. THIRU K.—

Budget for 1973-74, general discussion on .. .. 42—43

RAJARAM, THIRU K.—

Budget for 1973-74, general discussion on .. .. 42—43, 62, 252, 253, 376—400, 401, 426, 428

Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. 24—26

RAMA SUBBAIAH, THIRU—

Budget for 1973-74, general discussion on .. .. 157—160

RAMACHANDRAN, THE HON. THIRU S.—

Adjournment motion *re* stoppage of supply of diesel oil and consequent distress to consumers .. 372—373

Budget for 1973-74, general discussion on .. .. 385

Diesel oil, statement *re* non-availability of high speed diesel oil and petrol in Coimbatore, the Nilgiris, Salem, Tiruchirappalli and Madurai districts and consequent hardship to agriculturists, transport and other consumers .. .. .. .. 375—376

RAMAN, THE HON. THIRU O. P.—

Budget for 1973-74, general discussion on .. .. 389—391

RAMANATHAN, THIRU M.—

Budget for 1973-74, general discussion on .. .. 245—251



PAGES

R—*cont.*

RAMASAMY PADAYATCHI, THIRU S. S.—

Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. 23

RESOLUTION *re*—

Supply of yarn to weavers by Central Government .. 18—22

RETIRED OFFICERS' ASSOCIATION, MADRAS—

Question *re* details of representation to Government about May 1972 from .. .. .. .. 168—171

ROADS—

Question *re* maintenance of more—by Government in Madras City .. .. .. .. 273—274

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

*Adjournment Motion* re—

Agitation of Graduate teachers before the Secretariat and their arrest—Consent to raising of the matter withheld after the statement of the Chief Minister 191, 199, 374

Stoppage of supplies of light and high speed diesel by private oil companies and consequent hardship of road transport, agriculturists and other consumers—Consent to raising of the matter withheld after the statement of the Transport Minister .. 371, 373

*Debate*—

Reference to the other House may be avoided .. 311

*Decorum*—

Newspapers should not be read or exhibited in the House .. .. .. .. .. 396

Regarding a point raised about a Member speaking in the form of a song in the House, the Deputy Chairman observed—

"பேசலாம் என்று தான் விதி இருக்கிறது. சபையில் கொஞ்சம் சுவையாக இருக்கக்கூடும் என்பதற்காக பாட அனுமதித்தேன்" .. .. .. 42-43

PAGES

R—*cont.*

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

*Questions and Answers*—

Supplementaries : A Member who gave notice of the main question would have first preference in putting supplementaries .. .. .. 88, 177

When a Member raised the issue about the small number of questions included in the list of questions, the Chairman said that the Ministry was awaiting elaborate answers from the Departments, that he would try to get the answers to the questions as early as possible, and that the Ministers might do the needful to make the Secretariat Departments send the answers quickly .. 13—14

S

SADIQ PASHA, THE HON. THIRU S. J.—

Budget for 1973-74, general discussion on .. .. 48, 120, 122, 127

Statement under rule 82 of Council Rules *re* Parambikulam-Aliyar Project area, representations against levy of penal water cess, for removal of crop restrictions, etc. .. .. .. .. 98—104

SAKTHI MOHAN, THIRU R.—

Budget for 1973-74, general discussion .. .. 54—62

Resolution *re* supply of yarn to weavers by Central Government .... .. .. .. 23

SARASWATHI MAHAL LIBRARY, THANJAVUR—
*See* Libraries.

SAW GANESAN, THIRU—

Budget for 1973-74, general discussion on .. .. 129

SCHOOLS—

Hindu Nadar Primary School, Agaippaikulam, Tirunelveli district, Minister's attention called to withdrawal of recognition .. .. .. .. 290—291



PAGES

S—*cont.*

SCHOOLS—*cont.*

Question *re*—

Boys' High Schools, admission of girl students into 85—86

Government (Board) High School buildings in Kanyakumari district, appointment of separate Junior Engineer for maintenance of .. .. 7—9

Model High School, running of a—in each district 277—281

SENGOTTUVELAPPA GOUNDER, THIRU S. C.—

Budget for 1973-74, general discussion on .. .. 43—49, 118

SHANMUGAM, THE HON. THIRU P. U.—

Budget for 1973-74, general discussion on .. .. 106, 107, 109, 110, 119, 139, 140, 219, 227

Statement under rule 82 of Council Rules *re* assignment of lands in Kanyakumari, Tirunelveli and Shencottah taluks .. .. .. .. 201—203

SIVAGNANAM, THIRU M. P.—

Budget for 1973-74, general discussion on .. .. 229—245

Resolution *re* supply of yarn to weavers by Central Government .. .. .. .. 23—24

STATE HOUSING BOARD—

Statement of guarantees given by Government to—, laid on the table .. .. .. .. 161

STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *Re*—

Assignment of lands in Kanyakumari, Tirunelveli and Shencottah taluks .. .. .. .. 201—203

PAGES

S—*cont.*

STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *re*—*cont.*

B. Pharmacy students, Government's action on representations from .. .. .. .. 94—98

Correction of information *re* scale of pay of Graduate Teachers of Pondicherry .. .. .. 295

Decision on demands of Graduate Teachers .. 16—17

Parambikulam-Aliyar Project area, representations against levy of penal water cess, for removal of crop restrictions, etc. .. .. .. 98—104

Regularisation of encroachment on lands in Gudalur 14—16

STRIKE(S)—

Polytechnic Students'—, Minister's attention called to 203—208

Question *re* Hunger—by Madras Law College students in September 1972, reasons for .. .. 171—172

SWAMINATHAN, THIRU G.—

Budget for 1973-74, general discussion on .. .. 104—122, 251, 256, 264, 269, 270, 310, 312, 317, 342, 383—384, 396

Kerosene, calling Minister's attention to shortage of—and consequent hardship to consumers .. 210

Point of order *re* question-hour .. .. .. 12,13

Rise in prices of essential commodities and consequent distress to public, calling Minister's attention to 292, 295



PAGES

T

TAMIL PANDITS—

*See* Teachers.

TEACHERS—

Adjournment motion *re* Graduate teachers' agitation before Secretariat and consequent distress caused 191—199, 374

Question *re*—

Aided College—, extension of Liberalised Pension Scheme to .. .. .. .. .. 180—181

Graduate teachers appointed to I Grade, delay in payment of arrears of pay to .. .. .. 87—88

Names of—organisations recognised by Government .. .. .. .. .. 176—180

Palladam Panchayat Union—, non-declaration of probation .. .. .. .. 275—277

Physical Education Teachers in aided schools, restriction on number of—based on strength of school .. .. .. .. .. 359—361

Retirement benefits to—in Municipal Schools retiring before 26th January 1970 and after .. 355—356

Tamil Pandits, Grade I, eligibility for revised scales of salary for Graduate Assistants in High Schools recommended by One Man Commission .. 9—10

Statement under rule 82 *re*—

Correction of information *re* scale of pay of Graduate—in Pondicherry .. .. .. 295

Decision on demands of Graduate teachers .. 16—17

TEMPLE(S)—

Question *re* Tiruchendur Temple staff, attack by policemen about 30th May 1972 .. .. 5—6

PAGES

T—*cont.*

THIRUGNANASAMBANDAM, THIRU P.—

Budget for 1973-74, general discussion on .. .. 326—328

TOURISM—

Question *re* Parambu Hills, development as a tourist resort .. .. .. .. .. 183—184

TRANSPORT—

Question *re* Bus services in Madras, interruption at Moolakadai, on 30th November 1972 .. .. 369—370

V

VASANTHA PAI, THIRU G.—

Budget for 1973-74, general discussion on .. .. 33—38

Cooking gas for domestic consumption, calling Minister's attention to difficulties experienced by public on account of non-availability of cylinders for supply of .. .. .. .. 291—292

VENGA, THIRU V.—

Budget for 1973-74, general discussion on .. .. 328—335

VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.—

Budget for 1973-74, general discussion on .. .. 296—305

W

WORKERS—

Affected by power cut, Minister's attention called to necessity for advances from Provident Fund .. 208—209



PAGES

Y

YARN—

Resolution *re* supply of—to weavers by Central Government .. .. .. .. .. 18—22

YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION—

Question *re* grant sanctioned to .. .. .. 10—11

63088

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

Messrs. Account Test Institute Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs Higginbothams (Private) Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons. Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah. Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co. Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot. Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co. Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 1[illegible], Thana [illegible] Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs Vasantham Stores, Book-sellers Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan. Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons. Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil Kanyakumari district.
Messrs. Baby Stores Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam Publishers and Book-sellers, 1-B Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.

தற்காலிகமாக மின்சாரப் பற்றாக்குறையினாலே ஏற்பட்ட ஒரு துரதிருஷ்டம். தொழிலாளர்களுக்கு வேலையில்லாத நிலைமை வந்துவிட்டது. ஏதோ நிரந்தரமாக வேலை பார்ப்பவர்களுக்கு, 'லே ஆப்' என்று சொன்னால் அரைச் சம்பளமாவது கிடைக்கிறது. ஒரு 5 வருஷமாகவே தொழிலாளர்களை எந்தத் தொழிற்சாலையிலும் 'பர்மனன்ட்' ஆக்குவதில்லை. டெம்பரரியாக வைத்துக் கொண்டு டெம்பரரி சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 'லே ஆப்' என்றால், லே ஆப் செய்தபோது கிடைக்கிற சம்பளம் கிடைப்பதில்லை. இதையும் அரசு பரிசீலிக்க வேண்டும். இதற்குப் பரிகாரமாக தொழிலதிபர்களைக் கொண்ட ஒரு குழு நியமித்திருக்கிறார்கள். தற்காலிகமாக 3, 4 வருஷமாக தொழிற்சாலைகளிலே வேலை செய்யக்கூடியவர்கள் ஒரு ஊதியமும் இல்லாமல், வேலையும் இல்லாமல் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இதற்கு ஒரு வழி கண்டுபிடித்து ஏதேனும் அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்று தொழிலாளர் அமைச்சரையும் தொழிலமைச்சரவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். விலைவாசி உயர்வும் அதே மாதிரித்தான். எந்தப் பொருளின் விலையும் ஏறியது ஒரு தம்பிடி இறங்குவது கிடையாது. சைஸ் மில்லை எடுத்துக் கொண்டால், 75 சதவீதம் மின்சார கட் என்று சொன்னவுடன், ஒரு மூட்டை ஒரு ரூபாய்க் கூலிக்கு அரைத்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று ஐந்து ரூபாய் வரை கூட்டி விட்டார்கள். இப்போது 25 சதவீதம் தான் குறைவு. 75 சதவீதம் கொடுத்துவிடுவோம் என்று அரசாங்கம் உத்தரவு போட்ட பிற்பாடு கூட, அதைக் குறைக்கவில்லை. இம்மாதிரி எந்தப் பொருள் விலை ஏறினாலும், பிறகு எவ்வளவு தான் பொருள் உற்பத்தியானாலும், விலை இறங்குவதில்லை. நாம் விற்பனை வரியில் இந்த வருஷம் ரூ. 7 கோடி அதிகம் எதிர்பார்ப்பதற்கு இது ஒரு காரணம். சாதாரணமாக ஒரு குடும்பத்திற்கு ரூ. 100-க்கு பலசரக்கு சாமான்கள் வாங்கினால், ரூ. 100-க்கு உள்ள விற்பனை வரியைத்தான் அவன் கொடுப்பான். இந்த வருஷம், அதே
பி.ப. 4 50
சாமான்கள், அதே நல்லெண்ணெய், அதே தேங்காய் எண்ணெய், உப்பு புளி, மிளகாய், போன வருஷம் வாங்கிய அளவு வாங்கினாலும், சென்ற வருஷம் வாங்கிய அதே சாமான்கள் விலை இன்று ரூ. 135, ரூ. 140 ஆகிறது. ஆகவே விற்பனை வரி முன்பு ஒருவன் ரூபாய் 100-க்குச் செலுத்தினான் என்றால், இப்பொழுது ரூபாய் 135-க்குச் செலுத்துகிறான். வரியை 3½ பைசாவிலிருந்து



4 பைசாவாகப் போடவில்லையானாலும், ரூ. 100-க்கு விற்பனை வரி செலுத்தியவன், இப்பொழுது அதே சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 135 செலவழிப்பதால், விற்பனை வரி அதிகமாகியிருக்கிறது. இன்னும் சொல்கிறேன். பல பேர் விற்பனை வரியைக் கட்டாமல் ஏமாற்றுகிறார்கள். கடை வைத்து, விளக்கு போட்டு, கணக்குப் பிள்ளை வைத்து கடையில் வியாபாரம் செய்கின்றவர்கள் விற்பனை வரியை ஏமாற்ற முடியாது. சில பேருக்கு தன்னுடைய பாக்கெட் தான். தன்னுடைய மடி தான் கடை. இரண்டு நாட்களில் ஒரு இடத்திலிருந்து சரக்கை வாங்கி மற்றொரு இடத்தில் விற்று விடுவார்கள். கடை, விளக்கு, கணக்குப் பிள்ளை ஒன்றும் கிடையாது. இப்படி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பழைய முதலமைச்சர் அண்ணா அவர்கள் இருந்தபோதுகூட சொன்னேன். அதற்கு அவர் உத்தரவு போட்டார். இடத்தையும் ஊரையும் சொன்னேன். லாபம் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். ஏனென்றால் விற்பனை வரி செலுத்துவதில்லை. விற்பனை வரி கட்டாமல் ஏமாற்றுகிறவர்களை நெருக்கிப் பிடித்தால், இன்னும் வரியை ரொம்பக் குறைக்கலாம். உண்மையாக, நேர்மையாக நடந்து கொள்கின்றவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதில் விற்பனை வரி இலாகா அதிகாரிகளும் தவறு செய்கிறார்கள், இந்தத் தவறுக்கு உடந்தையாக இருக்கிறார்கள், என்ற குற்றத்தையும் சாட்டுகிறேன். அதைக் கவனிக்க வேண்டும். 'விஜிலன்ஸ் செக்ஷன்' வைத்திருக்கிறோம். அவர்கள் சரியாக வேலையைச் செய்தால், இதைக் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எந்த ஊரில் இப்படி நடக்கிறதென்று தெரிவித்தால், அரசாங்கத்திற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கேட்டால் சொல்கிறேன். அதை இப்பொழுது சொன்னால் மறந்துவிடுவார்கள். எந்தெந்த ஊரில் இல்லையென்று வேண்டுமானால் சொல்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இந்த மாதிரி வியாபாரிகள் ஏதாவது பில் போடுகிறார்களா? ஒரு சிலர் வாங்க வேண்டும் என்று சொல்லி

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FORTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

3RD, 5TH, 6TH, 7TH AND 8TH MARCH 1973.

*VOLUME CVI* (*Nos.* 1 *to* 5.)

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. .. | vii—viii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. | ix—xi |
| *Saturday, 3rd March* 1973. | |
| I. Questions and Answers .. .. .. | 1—12 |
| II. Point of order *re* Question-hour .. .. | 12—14 |
| III. Statement under Rule 82 of the Council Rules *re*— | |
| (i) Regularisation of encroachment on lands in Gudalur .. .. .. .. | 14—16 |
| (ii) Decision of the Government on the demands of Graduate Teachers .. .. .. | 16—17 |
| IV. Government motion *re* suspension of business of the House under rule 205 .. .. .. | 17—18 |
| V. Government Resolution—Supply of yarn to weavers by Central Government .. .. .. | 18—31 |
| VI. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. .. | 31—80 |

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

நெல்லித்துறை 50, காடம்பாறை 100, ஆக 504 மெகாவாட் கிடைக்கிற திட்டங்களை நடத்துவதற்குத் தயாராக இருந்தது. 'கிளியரன்ஸ்' வராததினால் வேலை நடக்கவில்லை. இம்மாதிரிப் பல சுணக்கங்கள். நான் என்ன சொல்லுகின்றேன் என்றால், என்னைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரா என்பதல்ல, ஜனங்கள் கஷ்டப்படும்படியாக விட்டு விடக்கூடாது. இரண்டு பேர்களும் சேர்ந்து மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறையை ஏற்படுத்தி விட்டார்கள். மக்கள் கஷ்டப்படுகிறார்கள், விவசாயம் நசித்துவிட்டது. தொழிலும் நசித்துவிட்டது. மூன்று மாதங்களுக்கு முன்னால் இருந்த தொழில் வளம் இப்போது மூன்றில் ஒரு பங்கு, நான்கில் ஒரு பங்குகூட இல்லை. இனிமேலாவது மத்திய சர்க்காரை எந்த வகையில் அணுக முடியுமோ அந்த வகையில் அணுகி, எப்படி அவர்களை நெருக்க வேண்டுமோ அப்படி நெருக்கிப் பிடித்து, நமது காரியங்களைச் சாதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மத்திய சர்க்காரின் அமைச்சர்களையும், தமிழ் நாட்டு அமைச்சர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அவர்கள் சிரத்தை எடுக்க வேண்டும். நம் மாநிலத்திற்கு வேண்டிய காரியங்களை முதல் உரிமையாகப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, நூல் பற்றாக்குறையைப் பற்றி இரண்டு தினங்களுக்கு முன்பு நமது தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கம் தெரிவித்தார்கள். தீர்மானம் இரண்டு சபைகளிலும் போட்டு அத்தனை பேரும் கடுமையாகப் பேசினோம். நமது சபையின் துணைத் தலைவர் அவர்கள்கூட ஒரு உருக்கமாக நெசவுத் தொழிலாளர்கள் பற்றிப் பேசினார்கள். ஆனால் கடைசியில் பார்க்கப்போனால் காரியம் ஏதாவது நடைபெறாத நிலைதான் இதுவரையில் உளது. தீர்மானம் போட்டு அனுப்பினோம். இதிலே என்ன தேவையென்றால், நமக்குப் போதிய நூல் கிடைக்க வேண்டும். நம் முக்கிய தொழிலாகிய நெசவுத் தொழிலைப் பாதிக்கும்படியாக விடக்கூடாது. நூலைப் பெற்றுக் கொடுத்து, அவர்கள் தொழில் நன்றாக நடக்க வேண்டும், அவர்கள் பசியில்லாமல் வாழ வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகின்றேன்.



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

பொதுப் பணியில் ஈடுபடுகின்றவர்கள் பேரில் விசாரிப்பதற்கு மசோதா வந்திருக்கின்றது. அந்த மசோதாவை ஆய்வதற்கான கூட்டுப் பொறுக்குக் குழுவில் நான் கலந்துகொள்ளாமல் இருப்பதைப்பற்றி ஒரு விளக்கம் மட்டும் சொல்லி, அந்த விஷயத்தை நிறுத்திக்கொள்ள விரும்புகின்றேன். அதன் மெரிட், டி-மெரிட் பற்றி நான் பேச விரும்பவில்லை. பொதுவாக மத்திய சர்க்காரில் ஏற்கெனவே ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆகவே இது வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. நமது மாநில அரசாங்கம் ஒரு தனிச் சட்டம் கொண்டுவருவதை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஏனென்றால் எங்கள் தலைவர் பலமுறை சொல்லியிருக்கின்றார். அவர்களே ஏன் மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டும், நீங்களே அந்தச் சட்டம் கொண்டு வாருங்கள் என்று சொல்லியிருக்கும் போது, அதை வேண்டாமென்று சொல்லுவது சரியல்ல. ஆனால் பொதுவாக குற்றம் சாட்டுபவர்களில் நல்லவர்களும் இருப்பார்கள், வேண்டுமென்றே குற்றம் சாட்டுபவர்களும் இருப்பார்கள். நல்லவர்களுக்கு, நல்ல எண்ணத்தோடு குற்றம் சாட்டுபவர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். இப்போது குற்றம் சாட்டுபவர்கள் நிரூபிக்கத் தவறிவிட்டால், அவர்களை மூன்று ஆண்டு வரை தண்டிக்கலாம் என்று இருக்கிறது. 'நிரூபிக்கத் தவறி விட்டால' என்ற அந்த வார்த்தைகளை நான் அழுத்திச் சொல்லுகின்றேன். அவர்கள் அமைச்சர் பேரிலே அல்லது அதிகாரத்தில் இருப்பவர் பேரிலே குற்றம் சாட்டி நிரூபிப்பது என்பது மிகவும் கஷ்டம். இந்த நிலைமையில் பொய்க் குற்றம் சாட்டினால் தண்டனை என்று சொன்னாலும் பரவாயில்லை. நிரூபிக்கத் தவறினால் என்று இருக்கும்போது, நிரூபிப்பது ரொம்பக் கஷ்டம், மிகவும் சிரமம். அம்மாதிரி இரண்டொரு ஷரத்துக்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் விலக்கி வேறு ஒரு மசோதா கொண்டுவரும் பட்சத்தில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை, நாங்கள் பரிசீலிக்கத் தயார் என்று சொல்லி விட்டுத்தான் நாங்கள் வெளியேறினோம். ஏனென்றால் இதை விளக்கமாகச் சொல்லிவிட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். இந்த மசோதாவைக் கைவிட்டுவிட்டு இந்த முக்கிய ஷரத்துக்களை விட்டுவிட்டு, குற்றம் சாட்டுபவர்கள் நல்ல எண்ணத்தோடு குற்றம் சாட்டுபவர்களாக இருந்தால், நிரூபிக்கத் தவறினால் அவர்களுக்குத் தண்டனை என்ற வார்த்தை இருப்பது

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

கொண்டு வருகிறதை ஜெட்டைப் படித்து வருகிறவர்கள் பார்க்கிறார்கள். பெரும்பாலும் தஞ்சை, தென்னாற்காடு— இரண்டு ஜில்லாக்களிலும் அதிகமான பெரும்பாலான உபரி நிலம் வந்துகொண்டிருக்கிறது. அவர்கள் கேட்கிறார்கள்—இப்படி 15 ஏக்கரா வைத்துக்கொண்டு வாழவிடாமல், இதையும் பிடுங்கி டெனென்ட்டுக்குக் கொடுத்து விட வேண்டுமென்று சட்டம் கொண்டு வருவதாகச் சொல்கிறீர்களே. "சொல்கிறீர்களே" என்று கேட்கிறார்கள். எங்களையும் சேர்த்துச் சொல்வது, அரசு சொல்கிறது மட்டுமல்லாமல், சட்டசபையில் நாங்கள் அங்கத்தினர்களாக இருப்பதனாலே எல்லோருமே சேர்ந்து சட்டம் கொண்டு வருகிறீர்கள் என்று சொல்கிறார்கள். அதையும் பிடுங்கி விவசாயம் செய்கிறவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்களே. அனால் அதே மாதிரி நகரத்தில் 10 வீடு, 20 வீடு என்று வைத்துக்கொண்டு வாடகைக்கு விடுகிறார்களே, அந்த வீடுகளை எடுத்து வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்குக் கொடுத்து விடுவீர்களா என்று . . .

THIRU G. SWAMINATHAN: Sir, on a point of order. I want to know whether newspapers can be read within the House.

[The Finance Secretary was perusing a paper in the Officers' Gallery.]

MR. CHAIRMAN: Newspapers should not be read or exhibited in the House.

திரு. கே. ராஜாராம்: ஆகவே உச்ச வரம்புக்கட்டு இருக்கும் நிலங்களைக் கூட டெனென்டுக்கு விவசாயம் செய்கிறவர்களுக்கு வாங்கிக் கொடுத்து விட வேண்டுமென்று ஏற்பாடு செய்யும்போது, நகரங்களில் இவ்வளவு சொத்துக்களை, எவ்வளவு லட்சம் வைத்திருப்பவர்களின் லட்சம் பெறுமானாலும் சரி, எவ்வளவு கோடி பெறுமானாலும் சரி, எத்தனை தொடுவதில்லை என்று இருப்பது சரியில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமையில் மேலும், மேலும் கிராமங்களில் விவசாயிகளைப் பாதிக்கும் வகையில் ஒன் வே டிராபிக் (one way traffic) ஆக ஒரு பக்கமாகவே சாய்ந்துகொண்டு, அரசாங்கம் சீர்திருத்தம் செய்துகொண்டு போவது உண்மையான சீர்திருத்தமாகாது. இருபுறமும்



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

சீர்திருத்தம் செய்ய வேண்டும். நகரத்தில் இருக்கும் சொத்துக்களுக்கும் உச்ச வரம்பு கட்டி அதற்கும் இத்தகைய ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமங்களில் சீர்திருத்தம் செய்வது ஒரே பக்கமாகப் போகாமல், மாற்று வழிப் பாதையாக, இரண்டு வழிப் பாதையாக, இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் அமைச்சரவர்கள் வந்து விட்டார்கள்—காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. இன்று பத்திரிகையிலே பார்த்தேன், மகாராஷ்டிரத்திலே, மத்தியப் பிரதேசத்திலே பஞ்சை அவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். நமது மாநிலத்திற்கும் வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போய் விடுகிறார்கள். நமது அமைச்சர்கள் நம்பும்படியாக, நாங்கள் இன்ன விதமாக இன்ன விலைக்கு வாங்குகிறோம், இப்படிச் செய்கிறோம் என்று சொல்லி விட்டுப் போகிறார்களேயொழிய இதுவரை இந்த வருஷத்தில் பஞ்சு வாங்க அவர்கள் முற்படவில்லை. பங்குனி மாதம் பிறக்க இருக்கிறது. இந்த நிலைமையில் முன் 350 ரூபாய் ஒரு குவின்டால் விற்றுக் கொண்டிருந்த பருத்தி இன்று ரூ. 200-க்கும் கீழே வந்து விட்டது. விவசாயிகளின் இடுப்பு ஒடிந்து விட்டது ஏனென்றால், பருத்தி விவசாயம் ஆகும் பகுதியிலிருந்து, திருமங்கலம் தாலுக்காவிலிருந்து, வருகிறவன். ஆதலால் விபரம் தெரியும். நேரில் பார்க்கிறேன் ஏன் என்றால் முற்றிலும் பிளாக் காட்டன் Black cotton) என்று சொல்லக்கூடிய பகுதியிலிருந்து வருகிறவன். நம்முடைய விவசாயிகள் அவர்கள் கூலிக்கும் பயிர் உண்டு பண்ணுவதற்கும் செய்த செலவு கூட கிடைக்க முடியாத நிலைமை இப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ரூ. 200-க்கும் குறைந்து விட்டது. இந்த நிலைமையில் போய்க் கொண்டிருந்தால் இந்த காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா மற்ற மாநிலங்களுக்குத் தானா? நமது மாநிலத்திற்கு இந்த காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா என்பது செயல்படுவது இல்லையா? இந்த அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது என்று நான் கேட்கிறேன். அவர்கள் உடனே கவனிக்க வேண்டும். நமது ஊர் விவசாயிகளை முற்றிலும் இங்கே உள்ள மில் முதலாளிகள் கையில் ஒப்படைத்து விட்டார்கள். அவர்கள் வைத்தது தான் சட்டம். பருத்தி விலை கீழே இறங்கும்போது,

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

அதை வாங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா உடனே சென்னைக்கு வந்து தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய விலை குறைந்திருக்கும்படியான பிரதேசங்களுக்குச் சென்று—குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், கோவை, திருநெல்வேலி ஜில்லாக்களில் பருத்தி கேட்பாரற்றுக் கிடக்கிறது—இதை வாங்க வேண்டும். மில் முதலாளிகள் கூட வேண்டாமென்று சொல்கிறார்கள். எலக்ட்ரிக் பவர் இல்லை, அதனால் பருத்தியை வாங்க மாட்டோமென்று விலையைக் குறைக்கிறார்கள். விலையைக் குறைக்க முற்படுகிறார்கள், வாங்குகிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இதைக் கவனிக்காமலிருப்பது அரசின் குறை என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

அடுத்தபடியாக, சலவைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக மிகவும் கஷ்டமான ஒரு பிரச்சினை. நமது மாநில முழுவதுமாக ஒரே சர்வீஸ் கமிஷன் இருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் பிறந்துவிட்டால் அவர்களுக்கு எல்லா உரிமையும் கிடைக்கிறது. அவர்களை ஷெட்யூல்ட் வகுப்பினராக எடுத்துக்கொண்டு, நமது பகுதியில் இருக்கக் கூடிய ஹரிஜனங்கள் எவ்வளவு உரிமைகளை பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலிருந்து பெறுகிறார்களோ, அவ்வளவும் அந்த கன்னியாகுமரி ஜில்லாவில் இருந்து வருகிறவர்களுக்கும் கிடைக்கிறது. ஆனால் மற்ற ஜில்லாக்களில், திருநெல்வேலியில், செங்கற்பட்டு ஜில்லாவில் அந்தச் சலவைத் தொழிலாளி பிறந்திருந்தால், அவருக்கு எந்த உரிமையும் கிடையாது. இப்படி ஒரு கஷ்டமான நிலைமை. அவர்கள் வயிற்றெரிச்சலை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டாம். அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி ஹரிஜனங்களுடைய ரிசர்வ் தொகுதியைப்பற்றி ஒரு சில நண்பர்கள் தெரிவித்தார்கள். நான் ஒன்றும் செய்வதற்கில்லை என்று நான் விளக்கம் சொன்னேன். நாம் நேரடியாக நாம் டிலிமிடேஷன் கமிஷனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். எப்போதும் ஒரே பகுதி ரிசர்வ் தொகுதியாக இருப்பதைக் காட்டிலும் ஒரு ஜில்லாவில் இரண்டு தொகுதிகளை எடுத்துக்கொள்ளலாம். 26 சதவீதம் ஹரிஜனங்கள் உள்ள தொகுதியை முதலில் எடுத்துக்கொண்டு, 19 சதவீதம் ஹரிஜனங்கள் உள்ள தொகுதியையும் பிரித்துவைத்துக்கொள்ளலாம். முதல்



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

தேர்தலில் ஒரு தொகுதியில் தேர்தல் நடந்தால், இரண்டாவது தேர்தலில் 19 சதவீதம் இருக்கும் தொகுதிக்கு மாற்றி விட்டால், கொஞ்சம் ஜனங்களுக்கு சங்கடமில்லாமல் இருக்கும். அதையும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நமது அரசாங்கம் முடிவு பண்ணக் கூடிய காரியமல்ல இது. ஆட்சிப் பொறுப்பிலே உள்ள கட்சி இதை எடுத்துக் கொண்டு டிலிமிடேஷன் கமிஷனுக்குச் சொல்லலாம். நாங்களும் சொல்கிறோம். இதில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை தனி மாவட்டமாவது ஒரு நல்ல காரியம். ஒரு 'எவல்யூஷன்', காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலிருந்து வாக்குறுதி கொடுக்கப்பட்ட விஷயம் என்று சொன்னால்கூட, அது சரியானது என்று சொல்வேன். வெகு நாள் கழித்து 1973-74-ல் அமுலுக்கு வரப்போகிறது. அது ஒரு சந்தோஷமான காரியம். இது அதோடு நின்றுவிடக் கூடாது. எதற்காக இதைச் சொல்ல வந்தேன் என்றால், அகில இந்திய ரீதியில் தமிழ் நாட்டிற்குப் பல பாதகங்கள் விளைகின்றன. அதிலே இது ஒன்று. பீஹாரை எடுத்துக் கொள்வோமானால், ஒவ்வொரு ஜில்லாவிலும், மாவட்டத்திலும், 5 லட்சத்திற்கு மேல் ஜனத்தொகை இல்லை. வட இந்தியாவில் வெகு கெட்டிக்காரத்தனமாக 5, 6 ஜில்லாக்களைச் சிறிதாக ஒவ்வொரு மாநிலத்தையும் பிரித்து விட்டார்கள். நாம் மட்டும் சேலம் ஒன்றைத்தான் பிரித்தோம். வேறு எந்த ஜில்லாவையும் பிரிக்கவில்லை. இன்னும் மதுரையில் 35 லட்சம், திருநெல்வேலியில் 30 லட்சம், இராமநாதபுரம் சின்ன ஜில்லா என்று பேர், அங்கே 23 லட்சம் இதையெல்லாம் அரசாங்கம் குறைந்தது மூன்று மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டும். இப்படிப் பிரித்தால் நிர்வாகச் செலவு கூடும், அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அகில இந்திய ரீதியில் நமக்குக் கிடைக்க வேண்டிய பல சலுகைகள், ஜில்லா வாரியாக, மாவட்ட வாரியாகக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் போகின்றன. இது அரசாங்கத்திற்குத் தெரியும். இதை அவர்கள் தெரிந்து இதற்கு ஏதேனும் வேண்டியதைச் செய்ய வேண்டும். உடனடியாக இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

கொள்ளும்போது, அதிக வருமானம் மத்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கும். நான் கேட்கின்றேன் அந்த அதிகப்படி வருமானத்தை அப்படியே மாநிலத்திற்குக் கொடுத்து விடுவார்களா? ஏனெனில், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய வருமானம் கூடும்போது அந்தக் கூடுதல் தொகை மாநிலத்திற்குத்தான் சொந்தமாக வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு நமது 'கான்ஸ்டிடியூஷன்' படி சொந்தமாகக் கூடாது.

அடுத்தபடியாக நமது மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அளவுக்கு மீறிப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கென்று ரூ. 10 கோடி இந்த நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைக் கண்டேன். வரவேற்கத் தகுந்தது தான். எந்தவிதமாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட விருக்கிறது, உண்மையிலேயே வேலையில்லாத் திண்டாட்டத்தை இது ஒழிக்குமா, அல்லது கடைசியில் இந்த ரூபாய் மிச்சப்படுத்தப் படுமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எந்த விதமாக இந்தத் திட்டம் போட்டிருக்கிறார்கள் என்பதை விளக்கி நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருக்கலாம். போன வருடம் ஒரு திட்டம்போட்டு இன்னின்ன வகையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு நாங்கள் அவர்களுக்கு வேலை கொடுக்கப்போகிறோம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த வருஷம் அந்தவித அறிவிப்பு சொல்லப்படவில்லை. இன்று படித்த வர்கள் தெருத்தெருவாக அலைகிறார்கள். கிராமங்களிலே எந்தவித வேலை செய்யவும் அவர்களால் முடியவில்லை. படித்த வாலிபன், பி எஸ்ஸி., பி.ஏ. படித்து விட்டு, ஒரு வேலையும் இல்லாமல் வீட்டிலே சொந்த மாட்டைப் பிடித்துக் கட்டுவதற்குக் கூட அவனால் முடியவில்லை. மாடு வந்தால்கூட வைக்கோல் எடுத்துப் போடுவதற்கு புதிதாகப் பழக வேண்டியிருக்கிறது. அந்தப் பழக்கமே இல்லாமல் வளர்த்துவிட்டார்கள். இந்தமாதிரி அவர் களுக்கு மிகவும் கஷ்டமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஏராளமானவர்கள் தெருவில் நடந்து சென்றால், கேட்கும்பொழுது சண்டையாக இருக்கிறது. பி.ஏ., பி.எஸ்.ஸி. படித்தவர்களை என்ன வேலை பார்க்கிறாய் என்று கேட்டால், வேலைக்காகத்தான் அலை கிறேன் என்று சொல்லுகிறார்கள். பெற்றோர்கள் அவர்களைப்



1973 மார்ச் 8] [திரு. கே. ராஜாராம்]

படிக்க வைத்தது போதாதென்று, அவர்களை வேலைக்கு அலைய வைத்து விட்டார்கள். படித்துவிட்டு ஒரு வேலையும் இல்லாமல் வீட்டிலிருந்து கொண்டிருப்பதைப் பார்க்கச் சகிக்காமல், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கராவை விற்று அவர்களைப் பட்டணத்தில் போய் வேலை தேட அனுப்பிவிட்டார்கள். இங்கு அவர்கள் சுற்றித் திரிந்துகொண்டிருக்கிறார்கள். சமுதாயம் சீர்கேடு அடைந்திருக் கிறது. எல்லோரும் சேர்ந்து இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். மத்திய சர்க்காரும் சரி, மாநில சர்க்காரும் சரி, மற்ற அரசியல் கட்சிகளும் இந்த வேலையில்லாத் திண்டாட் டத்தை எப்படி நாம் சமாளிக்க முடியும் என்பதை யோசித்து ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, படித்து முடித்தபின் 1½ ஆண்டு, 2 ஆண்டுக் காலம் ட்ரெயினிங் போக வேண்டிய பார்மசி படிப்பிலே உள்ளவர்கள் அந்த ட்ரெயினிங் பெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தாலும், இப்போது படிக்கும்போதே அந்த இரண்டு ஆண்டு ட்ரெயினிங்கை பெறாமலே அனைவருக்கும் வேலை என்று கோரி வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப் படிக்கிறபோதே வேலைநிறுத்தத் தில் ஈடுபட்டு தேர்வு எழுதாத அளவுக்கு அந்த நிலைமையை உருவாக்குகிறார்கள். அப்படிப்பட்ட மனப்போக்கு இருக்கிற பொழுது, அந்த மனப்போக்கை மாற்ற அனைத்துக் கட்சித் தலைவர் களும் எதிர் கட்சித் தலைவரவர்களும் யோசனை சொல்லலா மல்லவா?

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு சுகாதார அமைச்சரவர்கள் ஊர்ஜிதம் செய்கிறார்கள். 'பிரஸ்ட்ரேஷன்' ஏற்பட்டுவிட்டது. மாணவர்களுக்கு எதிர்காலம் இருண்டு, நாம் படித்து என்ன செய்வது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. இம்மாதிரி ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையில் அவர்கள் தவறான வழியில் தான் செல்லப்போகிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். அவர்களுடைய எதிர்காலம் வெளிச்சத்துடன் நல்ல நிலைமையில் இருக்கும்படி, ஒரு நம்பிக்கையை உண்டுபண்ணு வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அதோடு எந்தத் தொழிலிலும் வேலையில்லாத் திண்டாட்டம் வர ஆரம்பித்துவிட்டது. இது

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 8

அடுத்தபடியாக, ஒரு புகார் அடுத்த சபையிலும் எழுப்பிய தாகச் சொன்னார்கள். நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திண்டுக்கல் தேர்தல் வர இருக்கிறது. அந்தத் தேர்தல் நடப்ப தற்கு முன்னாலே—எவ்வளவு சீக்கிரம் வருமோ தெரியாது அவ்வளவு நடைத்து—சில அதிகாரிகள் கடந்த இரண்டொரு மாதங்களாக திடீரென்று, 7 உத்தியோகஸ்தர்கள் மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய புகாருக்கு இடம் கொடுக்கத் தேவையில்லை. உத்தியோகஸ்தர்கள் தேர்தலில் யாருக்கும் உதவி செய்யப் போவதில்லை. அதனாலே அவர்களை மாற்றுவது பலரிடையே பலவிதமான கெட்ட அபிப்பிராயத்தை உண்டு பண்ணுகிறது. இனிமேலும் இம்மாதிரிப் புகாருக்கு இடம் கொடுக் காமல் இருக்க வேண்டும்.

சோழவந்தான் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மாற்றப்பட்டு விட்டார். நிலக்கோட்டை டி.எஸ்.பி. திண்டுக்கல் டி.எஸ்.பி. மாற்றப்பட்டிருக் கிறார்கள். நிலக்கோட்டை சப்-இன்ஸ்பெக்டர், வத்தலக்குண்டு, திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய நான்கு பகுதிகளில் உள்ள சப்- இன்ஸ்பெக்டர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இது புகாருக்கு இடம் கொடுக்கிறது. திண்டுக்கல்லுக்கு ஞாயிற்றுக்கிழமை போயி ருந்தேன். பலரும் இதைப்பற்றிச் சொன்னார்கள். நீங்கள் எடுத்து அரசாங்கத்திற்குச் சொல்லவேண்டும் என்றார்கள். இது அமைச்சர் களுக்குத் தெரிந்து நடக்கிறதா, தெரியாமல் நடக்கிறதா என்பது பிரச்சினை அல்ல.

பொதுவாக பொதுத் தேர்தல் என்றால் விதிகளே இருக்கின்றன. தேர்தல் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னால் யாரையும் மாற்றக் கூடாது என்று விதிகள் இருக்கின்றன. இது உப தேர்தல். நிர்வாகச் சௌகர்யத்திற்காக மாறுதல் செய்தோம் என்று சொல்லலாம். சட்டப்படி சொல்லலாம். ஆனால் நிர்வாக சம்பந்த மாக ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டிய இடத்தில் 5, 6 பேர்களைத் திடீரென்று மாற்றுவது நல்லதல்ல. ஆதலால் அதையும் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு நான் சொன்ன வற்றில் நல்ல விஷயங்களை எடுத்துக் கொண்டு, நான் எழுப்பிய பிரச்சினைகளுக்குத் தக்க பதில் சொல்லுவார்கள் என்று நம்பி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN: The Hon. the Chief Minister will now reply to the debate.



1973 மார்ச் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 42 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கி யிருக்கிறார்கள். இந்த அவையிலே மொத்தமுள்ள 62 உறுப்பினர் களில் 42 உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கி, இறுதியாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பல யோசனைகளையும், நாட்டிலே இருக்கிற நிலைமைகளைப் பற்றிய இனிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுடைய உரையைத் தொடங்கும் போது, இந்த நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்ட நேரத்தில் தமிழகத்திலே ஒரு அமைதியான சூழ்நிலை இருந்தது என்று குறிப்பிட்டு, ஆனால் அடுத்த இரண்டொரு நாளில் ஆசிரியர்களுடைய கிளர்ச்சியின் காரணமாக அமைதியற்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுக்கு இந்த ஆசிரியர்கள் கிளர்ச்சிபற்றிய எல்லா உண்மைகளும் நிச்சய மாகத் தெரியும். நேற்று நம்முடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசும்போது, ஒன்றைச் சொன்னார்கள். எதிர்க் கட்சி களானாலும், ஆளும் கட்சிகளானாலும் மக்களைப் பாதிக்கின்ற முறையிலே, மக்களுக்கு நல்ல விஷயங்களை விளக்குகின்ற முறை யிலே பாடுபட வேண்டுமென்று சொன்னார்கள். அவருடைய பேச்சைப் பொறுத்த வரையிலே, நேற்றைய தினம் அவர்கள் இந்தி யாவை ஆளுகின்ற கட்சியின் சார்பிலும் இல்லாமல், அல்லது இங்கே எதிர்க் கட்சியினுடைய சார்பிலும் இல்லாமல் கிட்டத் தட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் நிலைமையில் இருந்து (பலத்த கைதட்டல்) சில பிரச்சினைகளை ஆராய்ந்தார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆசிரியர்கள் கிளர்ச்சியினுடைய உண்மை விவரங்கள் அனைத்தும் தெரிந்துகொண்டிருந்தும் கூட, ஆசிரியர் களுடைய உண்மையான பிரதிநிதிகளோடு முதலமைச்சரும், கல்வியமைச்சரும் பேச வேண்டுமென்று சொன்னது கிளர்ச்சி செய்கின்ற . . .

திரு. கே. ராஜாராம்: தவறான அர்த்தத்திற்குப் போய்விடக் கூடாது அவர்கள். அவர்களுடைய பிரதிநிதி என்று ஒப்புக்கொள் கிறவர்களை அவர்கள் அனுப்ப வேண்டுமென்று சொன்னேன். அதைத்தான் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ....அப்படிச் சொன்னது ஒரு வேளை நாங்கள், நானும், கல்வியமைச்சரும் உண்மையான பிரதிநிதிகளோடு பேசவில்லையோ என்கின்ற ஒரு தவறான பொருளைக் கொடுத்து விடக்கூடாது என்பதற்காகத் தான் குறிப்பிடுகின்றேன். 5-ந் தேதியன்று என்னையும், கல்வியமைச்சரையும் சந்தித்தவர்கள் பட்டதாரி ஆசிரியர்களுடைய சங்கத்தின் தலைவரும், பொதுச் செயலாளரும், அவர்களோடு கூட ஒரு சில நிர்வாகிகளும்தான். இதைவிட உண்மையான பிரதிநிதிகள் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது ஏற்பட்டிருக்கின்ற வேடிக்கை: கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் கிளர்ச்சிகள் நடைபெறுவது என்பது ஒரு முறை. ஆனால் நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், இருக்கின்ற துர்ப்பாக்கியமான சூழ்நிலை, கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும், நம் பெருமைக்குரிய இது போன்ற மாமன்றத்தில் அறிவித்து விட்ட பிறகும், அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று இந்த மாமன்றத்திலே உள்ள மிகத் தகுதி வாய்ந்த பெரியவர்களை எதிரில் வைத்துக் கொண்டு உறுதியாகச் சொன்ன பிறகும், எங்கள் ஆறு கோரிக்கைகள் தீர்க்கப்படவில்லை, தீர்க்கப்படவில்லை என்று ஆசிரியர்களுடைய சங்கத்தினர் செய்திகளை வெளியிடுவதும், அவைகளைப்பற்றி நாட்டிலே இருக்கின்ற நல்லவர்கள் எந்த விதமான கருத்தையும் அறிவிக்காமல், ஒரு வேளை இந்தக் கிளர்ச்சி நடந்தால் இது ஒரு வகையிலே அரசியல் லாபமாக இருக்கட்டும் என்கின்ற எண்ணத்திலே மௌனமாகயிருப்பதும், நம் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன நாட்டின் எதிர்கால நன்மைகளுக்கு உகந்ததல்ல என்பதை நான் மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன். சில நல்ல காரியங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும் கிளர்ச்சி நடத்துகிறார்கள் என்றால், அந்த ஆசிரியர்களைத் தூண்டிவிடுகின்றவர்கள் அல்லது ஆசிரியர்கள் சங்கத்திலே எப்படியோ வந்து புகுந்து விட்டவர்கள், அதன் மூலமாக விளம்பரம் தேடவிரும்புகிறார்கள் அல்லது மேற்படி ஆசிரியர்களை அவர்கள்பால் கவர்ந்துகொள்ள, இழுத்துக்கொள்ள நினைக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், நேற்றைய தினம் நம்முடைய அவையிலே இருந்து மறைந்த கலைஞர் டி. கே. சண்முகம் எழுதிய "எனது நாடக வாழ்க்கை" என்ற புத்தகத்தை நான் படித்துக் கொண்டிருந்தேன். அதிலே ஒரு இடத்திலே அவர்கள் குறிப்பிட்





டிருக்கிறார்கள். சுமார் 40 ஆண்டு காலத்திற்கு முன்பு விருதுநகர் அருகிலுள்ள மல்லாங்கிணறு என்ற இடத்திற்கு அவர் மிகச் சிறியவராக இருந்தபோது நாடகம் ஆடுவதற்கு அந்த நாடகக் குழுவோடு சென்றாராம். அவர் மிகச் சிறியவராக இருந்து நாரதர் வேடம் போடக் கூடிய நிலைமை அப்போது. அந்த ஊரிலே மின்சார விளக்குகள் கிடையாது. ஹரிக்கேன் விளக்குகள், பெட்ரோமேக்ஸ் விளக்குகள், இவைகளை வைத்துக்கொண்டு நாடகம் நடத்தியிருக்கிறார்கள். ஏராளமான கூட்டம். கூட்டம் எப்படி வந்தது என்பதை அறிவித்திருக்கிறார்கள். சுவரொட்டிகள் அச்சிட்டோ, துண்டு விளம்பரங்கள் செய்தோ அல்லாமல், இரவு 8 மணிக்கு அந்த ஊரிலே பொது இடத்திலே ஒரு வெடிகுண்டு வைத்து வெடிப்பார்களாம். பக்கத்து ஊரிலே உள்ளவர்களெல்லாம் அங்கே நாடகம் நடப்பதாக அறிந்து அவர்கள் குழுமி விடுவார்களாம். நாடகம் ஆரம்பமாகி நீண்ட நேரம் ஆகியும் மக்களிடமிருந்து எந்த ரசனையும் வரவில்லையாம். கைதட்டலும் இல்லையாம். நாடகத்தினுடைய அதிபர் டி. கே. சண்முகம் அவர்களை அழைத்து நீ சீனுக்குப் போனால் வழக்கமாக கைதட்டு வரும். அதைப் போல நீ சீனுக்குப் போ என்று சொல்லி நாரதரை வேடிக்கைக் காட்சிக்கு அனுப்பினாராம். இது கைதட்டலை எதிர்பார்த்துத் தான். நல்ல பாட்டு பாடிக்கொண்டு வந்தார். கைதட்டல் எதுவும் இல்லை. அயர்ந்து கொஞ்ச நேரத்திற்கெல்லாம் திரும்பி விட்டார். அடுத்த காட்சி எமதர்மன் காட்சி. எமதர்மன் வழக்கத்திற்கு மாறாக நடனம் ஆடிக்கொண்டு காட்சியிலே பிரவேசித்தாராம். உடனே நாடக ரசிகர்கள் எல்லாம் கைதட்டி ஆரவாரத்தோடு வரவேற்றார்களாம். அது ஏன் என்பதை டி. கே. சண்முகம் விளக்கியிருக்கிறார்கள். என்றைக்கும் நடனம் ஆடாத எமதர்மன் திடீரென நடனம் ஆரம்பித்தவுடன் எல்லோரும் ரசித்தார்கள் என்று அந்த வாழ்க்கைக் குறிப்பிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் போல நல்ல பாட்டுப் பாடுகிற நாரதர் வந்தால், ரசிக்கின்ற காலமாக இல்லாமல், ஆட்டம் ஆடுகிற எமதர்மன் வந்தால் சில பேர் ரசிப்பார்கள் என்ற நிலைமையை எண்ணி, இன்றைக்கு ஆசிரியப் பெருமக்கள் இது போன்று கிளர்ச்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும், ஆசிரியர்கள் கிளர்ச்சியைப் பற்றித் தவறான கருத்துக்களை யாராவது கொண்டிருப்பார்களானால், அவர்களுக்கும் சொல்லு மெத்தவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது வரியில்லாத பட்ஜெட் தயாரித்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைய முடியாது என்று குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதே தான் சொன்னார்கள். ஆளும் கட்சியின் சார்பிலோ, அல்லது தோழமைக் கட்சிகளின் சார்பிலோ வரியில்லாமல் இந்த வரவு-செலவுத் திட்டம் அளிக்கப்பட்டிருப்பதை வரவேற்பது தவறல்ல. அதே நேரத்தில் இந்த ஆண்டு வரியில்லாத நிதி நிலை அறிக்கை ஒன்று கொடுத்து விட்ட காரணத்தினாலேயே, என்றைக்குமே வரி போடாமல், இருந்து விடுவோம் என்பதும் சரியல்ல. வரி போடுவதற்கு இடமே இல்லை என்று திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். கொஞ்சம் நிதி இலாக்காவையும், மற்ற இலாக்காக்களையும் ஆழ்ந்து கவனித்து, தேட ஆரம்பித்தால் இடம் கிடைக்காமல் போய் விடாது. ஆனால் அப்படிக் கிடைக்கின்ற இடங்கள் தாங்கக் கூடிய இடங்களாக இருக்கிறதா என்று பார்த்துத்தான் இந்த அரசு வரியைப் போடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன். அவர்கள் ஒரு கணக்கைச் சொன்னார்கள். தனி நபர் வருமானம் 397 ரூபாய் முன்பு ரூ. 370 ஆக இருந்தது. அப்போது தனி நபர் வரி செலுத்தவேண்டியது ரூ. 39 ஆக இருந்தது. இப்போது ரூ. 70 அல்லது ரூ. 75 ஆகிவிட்டது என்று சொன்னார்கள் இதெல்லாம் ஒரு பெருக்கல் வகுத்தல் கணக்கேயல்லாமல், தனி நபர் வருமானம் ரூ. 397 என்று சொல்லுகின்ற நேரத்தில் நாட்டிலேயிருக்கின்ற 4 கோடி மக்களும், ஒவ்வொருவரும் 397 ரூபாய் சம்பாதிக்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. நானோ, திரு. சுவாமிநாதனோ அல்லது இன்னொரு சாதாரணமாக இருக்கக்கூடியவரையோ எடுத்துக்கொண்டு என்னுடைய வருமானம் 20 ரூபாய், திரு. சுவாமிநாதன் வருமானம் 10 ரூபாய், இன்னொருவருடைய வருமானம் 3 ரூபாய் என்று கணக்கிட்டு, 20 10 3 33, ஆக 3 பேருக்கும் சராசரி வருமானம் 11 ரூபாய் என்றால் எனக்கு 9 ரூபாய் குறையலாம், திரு. சுவாமிநாதனுக்கு 1 ரூபாய் குறையலாம், ஆனால் அந்த 3 ரூபாய் சம்பாதிப்பவனுக்கு 8 ரூபாய் அதிகமாகி விட்டது என்று பொருளல்ல. அதைப் போலவே தான் 75 ரூபாய் தலைக்கு இப்போது வரி ஏறிவிட்டது என்று சொன்னாலும், எப்படி தனி நபர் வருமானத்தில் ரூ. 397 என்பது ஒரு அளவாக 4 கோடி மக்களிலே ஒவ்வொருவருக்கும் இல்லையோ, அதைப் போல வரி 4





கோடி மக்களில் ஒவ்வொருவருக்கும் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். வரியில்லாத வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்த நீங்கள் ஏன் பங்களா தேஷ் வரியை நீக்கியிருக்கக் கூடாது என்று நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்களும், பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களும் கேட்டார்கள். பங்களாதேஷ் வரியைப் பொறுத்தவரையில், போடுகிற நேரத்திலே கூட இதை பங்களா தேஷ் வரி என்று குறிப்பிட்டுச் சொல்லாமல் இப்படி ஒரு நேரம் வருமென்று முன்கூட்டியே தெரிந்து பாதுகாப்புக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் என்று பொதுவாகத்தான் இந்த வரியை நாம் போட்டோம். ஆகவே பாதுகாப்பும் இப்போது தேவை, வளர்ச்சிப் பணிகளும் தேவை. இந்த மாநிலத்திலும், மைசூர் மாநிலத்திலும், பஞ்சாப் மாநிலத்திலும் இந்த வரி தொடர்ந்து இருந்து வருகிறது. பஞ்சாபில் இதை எஜுகேஷனல் செஸ், கல்வி செஸ் என்று மாற்றியமைத்திருக்கிறார்கள். ராஜஸ்தானத்தில் வறட்சி வரி என்று மாற்றியமைக்கிருக்கின்றார்கள். பங்களா தேஷ் வரியை மத்திய அரசில் எடுத்துவிட்டார்களே, இங்கே ஏன் எடுக்கவில்லை என்று சில பேர் கேட்டார்கள். மத்திய அரசிலே எடுத்த முறைப்படி எடுப்பதானால், இங்கே எடுப்பதற்கு 5 40
நான் தயாராக இருக்கிறேன். அங்கே ரூ 290 கோடிக்கு மேல் பி.ப
வரியைப் போட்டுவிட்டு பங்களா தேஷ் வரியை எடுத்தார்கள். இங்கேயும் இந்த அவை அனுமதிக்குமேயானால், அப்படி வேறொரு வரியை அறிமுகப்படுத்திவிட்டு, பங்களா தேஷ் வரியை எடுக்க இயலும். இப்போதைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். அதிலே மத்திய அரசுக்கு ஒரு பங்கைக் கொடுக்க வேண்டியிருக்கிறது, அதையே எடுக்காவிட்டால் என்ன என்று கேட்டார்கள். நான் அவர்கள் கேட்டுக்கொள்வதற்கிணங்க, மத்திய அரசுக்கு இந்தப் பங்கைக் கொடுக்காமல் நாமே அதைச் சேர்த்து அடுத்த ஆண்டிலிருந்து எடுத்துக்கொள்வது என்கின்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது என்பதை மாத்திரம் நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இரண்டொரு வேறுபாடுகள் பட்ஜெட் மெமோராண்டத்திலே இருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அதைச் சரியாகக் கூர்ந்து கவனித்திருப்பார்